உ

சிவமயம்.

# மடவார் வளாகம் என்னும்

# புதுவைத் தலபுராணம்.

இஃது

பெருமாள பட்டி

வயித்தியலிங்கம் பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்

மு. ரா. அருணாசலக் கவிராயரால்

செய்த சுருக்க வசனத்துடன்

ஸ்ரீவில்லிபுத்தூர் முனிஸிபல் வைஸ் சேர்மனும்

திருநெல்வேலி டிஸ்திரிக்டுக் கோர்ட்டுப்

பிளீடருமாகிய

ம-ள-ள-ஸ்ரீ ம. தையல்பாகம்பிள்ளையவர்கள்

பொருளுதவிகொண்டு

மேற்குறித்த மு. ரா. அருணாசலக் கவிராயரால்

பரிசோதித்து

சென்னை:

அல்பினியன் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1902.

இதன் விலை ரூபா. 1-4-0.

உ

# முகவுரை.

நவகண்டங்களுள்ளுஞ் சிறந்த தருமபூமியாகிய இப்பரத கண்டத்திற் றோன்றிய சருவான்மாக்களுள்ளும் உயர்ந்தமனிதர்களுக்கு உடலெடுத்ததனாலாகிய உறுதிப்பொருள்கள்-மோக்ஷநெறியை இலேசாகக் காண்பிக்கும் ஞானநூல்களேயாம். அந்நூல்கள் பண்டிதருக்குமாத்திரமே பயன்படுவதாய்ச் சமஸ்கிருத பாஷையிலமைந்துள்ளன. தமிழ்ப் பாஷையிலோ பண்டிதர் பாமரர் என்னும் இருதிறத்தாருக்கும் பயன்படுவதாய் அமைந்துள்ளன. சமஸ்கிருத பாஷையிலுள்ள நூல்கள் வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் என ஒருமுறைப்பட்டு விளங்காநிற்கும். தமிழ்ப் பாஷையிலுள்ள நூல்கள் *தேவாரமுதலிய வேதம் † திருவுந்தியார் முதலிய சித்தாந்தமாகிய ஆகமம் கந்தபுராணமுதலிய புராணம் சிவரகசியம் முதலிய இதிகாசம் என நான்கு பிரதான வகுப்பினவாய்ச் சமஸ்கிருதநூல்களோடு ஒப்புமைபெற்று விளங்காநிற்கும். வேறு நூல்கள் இவற்றின்வழியே இவற்றைவிளக்குதற்குவந்தனவுஞ் சிலவுள்ளன.

---

* தேவாரமுதலிய வேதம் - திருஞானசம்பந்தசுவாமிகள் திருமுறை 3. திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 3. சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறை 1. திருவாசகம் திருக்கோவையார் 1. திருவிசைப்பா திருப்பல்லாண்டு 1. திருமந்திரம் 1. பதினொராந்திருமுறை 1. பெரியபுராணம் 1. ஆக 12-ம்.

† திருவுந்தியார் முதலிய ஆகமம் - திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாஇருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் பதினான்குமாம்.

இனி சமஸ்கிருத வேதம் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்குவகைப்படும். வேதம் என்னும் பதம் வித் என்னுந் தாதுவினின்று மெழுந்ததனுல் அறிவு என்னும் பொருள்படும். படவே அறிவையுணர்த்து நூல் வேதமென்னும் பெயரையுடைத்தாயிற்று. அவ்வேதங்கள் கருமகாண்டம் ஞானகாண்டம் என இரண்டு பிரிவுபட்டு வேதோக்தமான தெய்வங்களைநோக்கி யெழுந்த துதிபாகமாகிய மந்திரங்களும் விதிபாகமாகிய பிராமணங்களும் என்பனவற்றை யுணர்த்தாநிற்கும்.

அன்றியும் சிக்ஷை வியாகரணம் சந்தம் நிருத்தம் சோதிடம் கற்பம் என்னும் ஆறு அங்கங்களுடையனவாம். இவ்வேதங்களின் முடிவுப்பொருளாய் நின்று உண்மை ஞானத்தை விளக்குவனவே உபநிடதங்களாம். இவையன்றி ஆயுள்வேதம் அர்த்தவேதம் தநுர்வேதம் காந்தருவவேதம் என உபவேதங்கள் நான்குவகைப்பட்டுள்ளன. அவற்றுள் ஆயுள்வேதம் சரீரத்திலுண்டாகும் வியாதியைப்போக்கும் ஔஷத முதலியவற்றி னியல்புகளையும் அர்த்தவேதம் திரவியம் ஈட்டுமுறைமையினையும் தநுர்வேதம் பகைவரை யொறுத்தற்காகும் விற்றொழில் வகையினையும் காந்தருவவேதம் இராகபேதங்களையும் பற்றிக் கூறுகின்ற நூல்களாம். இவ்விருவகை வேதங்களையும் விளக்கவந்த நூல்கள் ஸ்மிருதிகளென்று சொல்லப்படுகின்றன. அந்த ஸ்மிருதிகள் பதினெட்டு வகைப்படும். அவைகளை அறிவுடையோர் தருமநூலென்று சொல்லாநிற்பர். ஒவ்வொரு யுகத்துக்கும் ஒவ்வொரு ஸ்மிருதியே சிறந்து விளங்காநிற்கும். இக்கலியுகத்துக்குப் பராசர ஸ்மிருதியே மிகச்சிறந்ததாமென்று கூறுகின்றனர். இவையெல்லாந் தனித்தனி விரித்துரைப்பிற் பெருகுமென்க.

ஆகமங்கள் சைவாகமங்களென்றும் வைணவாகமங்களென்றும் இருவகைப்படும். அவற்றுள் சைவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் இறுதியாகவுள்ள இருபத்தெட்டுமாம். வைண

வாகமங்கள் பாஞ்சராத்திரம் வைகானசம் என்னுமிரண்டுமேயாம். சைவாகமங்களுள் ஒவ்வொன்றும் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்குபாதங்களையும் அறிவுறுத்திப் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்த லக்ஷணங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாக விளக்கிக்காட்டுவதாம். இவ்வளவு தெளிவாகச் சிவபரத்துவங் கூறுதல்பற்றி ஆகமங்களைச் சிறப்பு நூலென்றும் வேதங்களைப் பொதுநூலென்றுஞ் சைவருட் பெரும்பாலார் கூறுகின்றனர். இவ்வாகமங்கள் வேதங்களுக்குப் பின்னே யெழுந்தன என்பதே எனக்குங்கருத்தாகலின் வேதங்களுள் இடையிடையே காணப்படும் அசம்பாவிதங்கள் ஆகமத்துள் இல்லையென்பதே துணியப்படுகின்றது.

இவ்வாகமங்களுள் ஞானபாதங்களைத் தெள்ளிதினுணர்ந்து சிவானந்தப் பெரும்பேறெய்தும் பாக்கியம்பெற்ற பண்டைக்காலத்துச் சைவம்பழுத்த பெரியோர் அவற்றை மாந்திரமெனவுஞ் சித்தாந்தமெனவும் வழங்கி மகிழ்ச்சியுற்றனர். ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும் க என்பது பசு எனவும் ம என்பது பதி எனவும் பொருள்படுதலால், ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த லக்ஷணங்களை யுணர்த்தும் நூலென்பதே சிறந்த பொருளென்க. ஆ என்பது சிவஞானமும் க என்பது மோக்ஷமும் ம என்பது மலநாசமும் ஆதலால், ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தல்பற்றி ஆகமம் எனப் பெயராயிற்றென்று கூறுதலும் ஒன்று. இச் சைவாகமங்களின் வழித்தோன்றிய உபாகமங்கள் நாரசிங்கம் முதல் விசுவான்மகம் ஈறாகிய இருநூற்றேழாம். இவ்வாகமங்களின் விதி விலக்குகளைப் பிரயோகிக்கும் வழிகாட்டு நூல்களே பத்ததிகளென்று வழங்கப்படும். அவை சோமசம்பு அகோர சிவாசாரியர் திரிலோசனசிவாசாரியர் முதலிய பெரியோர்கள் பெயரால் நடைபெற்று வருகின்றன.

புராணங்கள் மச்சம் முதலாகப் பிரமாண்டம் இறுதியாகவுள்ள *பதினெட்டுமாம். புராணம் என்பதற்குப் பழமையென்பது பொருள். அஃது இவ்விடத்து நூல்களுட்கூறும் பழைய வரலாற்றைப்பற்றி நின்றது. உலகத்தோற்றம் ஒடுக்கம் மன்வந்தரம் முனிவர் அரசர்மரபு அவ்விருவர்சரிதங்கள் கூறலும் புராணத்துளடங்கும். இப்புராணங்கள் வேதங்களுள்ளும் ஆகமங்களுள்ளும் விதிவிலக்குகளாகச் சொல்லப்பட்டனவற்றைத் திருஷ்டாந்தமூலமாக விளக்கிக்காட்டுதற்கெழுந்த நூல்களாம். அவ்விதி விலக்குகளைக் காட்டினும் பெரும்பான்மை சரிதங்களாகவே யிருக்கும், புராணங்கள் இலேசான நடையிலே யெழுதப்பட்டுள்ளன. ஏனெனில் சாமானியமாந்தரை வசப்படுத்தி நல்வழிப் படுத்துதற்கென்க. அதுபற்றியே பலவித தந்திரங்களும் பிரயோகித்தல் ஆவசியகமாகவின் நவரசங்களும் அமையும்படி பாடப்பெற்றுள்ளன புராணங்கள் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததே. புராணங்களிற்கூறும் பாவச் செயல்களில் ஒருவர்க்குப் பயத்தொடு வெறுப்பு நிகழுமாயின் அவைகளாலுண்டாகுந் துன்பஞ் சிறிதும் அடையமாட்டாது. புண்ணியச் செயல்களில் உள்ளக் கிளர்ச்சியோடு உவகை நிகழுமாயின் அவைகளாலுண்டாகும் எல்லா இன்பங்களும் எளிதிலேவந்து கைகூடும். இன்னோரன்ன பல ஏதுக்களாலும் புராணங்கள் இன்றியமையாத் சிறந்த நூல்களென்பது விளங்குகின்றது.

மேற்கூறிய புராணம் பதினெட்டினுள் பத்துப் புராணங்கள் சிவபுராணங்களாம், நான்கு புராணங்கள் வைணவ புராணங்களாம். இரண்டு புராணங்கள் பிரம புராணங்களாம். சூரியனுக்கும் அக்கினிக்கும் தனித்தனி ஒவ்வொரு புராண

---

* பதினெட்டாவன - மச்சம் கூர்மம் சைவம் வைணவம் வராகம் இலிங்கம் பற்பம் வாமனம் காந்தம் பௌடியம் ஆக்கினேயம் பிரமம் பிரமகைவர்த்தம் மாற்கண்டேயம் பாகவதம் காருடம் பிரமாண்டம் நாரதீயம் என்பனவாம்.

மாம். இவையன்றி நாரசிங்கம் முதல் பிரமாண்டம் இறுதியாக உப புராணங்களும் பதினெட்டுள்ளன. அவைநிற்க. மேற்கூறிய சூரிய புராணமாகிய பிரமகைவர்த்த புராணத்தில் கதாரூபமாக விளங்கும் பற்பலவற்றுள்ளே மடவார்வளாகம் என்னும் புதுவைத்தல மான்மியத்தை நாரதமுனிவர் பிரகச்சேனனென்னும் அரசனுக்குக் கூறியவாறு சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதி முனிவர்களுக்குச் சுருக்கமாகச் சமஸ்கிருத வாக்கியங்களாற் கூறியருளினர். அதனைத் தமிழ்மொழிவல்லார்க்கு வெளிப்படுமாறு தமிழ் விருத்தப்பாக்களால் விரித்துச் சொல் நயம் பொருள் நயம் கற்பனை அலங்கார முதலியன கேட்பவர்களுக்குப் பத்திரசத்தை விளைவிக்கும் வண்ணம் புதுவைத்தலத்துக்கு வடபக்கத்திலுள்ள பெருமாள்பட்டியில் சுத்த சைவவேளாளர் பெரும் புண்ணியமாகத் தோன்றிய வயித்தியலிங்கம் பிள்ளையென்பவர் புதுவைத்தலத்தி லெழுந்தருளியிருக்கிற சிவகாமியம்மையாரது திருவருட் பிரசாதத்தாலே பாடி முடித்தனர். அங்ஙனம் பாடி முடித்தனரென்பது அவர் இந்நூலுட்கூறிய பாயிரத்துள்ளே,

இருவகை யெண்ண முற்றே யிடும்பையு ணெஞ்ச மூழ்கும்
பருவர லொழித்துப் போதப் பரைசிவ காமி யம்மை
யருடரக் கனவில் வந்தென் னருகெழுந் தருளி நீயும்
வெருவுத றவிர்ந்திக் காதை விளம்பென விளம்ப லோடும்.

பூவரு மயனு மாலு மறைகளும் புரந்த ராதி
தேவரு மளத்த லென்று மரிதரி தென்று செப்ப
யாவரே புகழா தெய்த்தா ரெம்மிறை புகழை யாமூ
நாவரு சொல்லா லெம்மா லுணர்ந்தவை நவில லுற்றும்.

எனக்கூறிய செய்யுட்களானுணர்க. இனி இப்புராணம்பாடிய காலம் இன்னதென ஒருவாற்றானுந் தோன்றாதேனும் இப்புராணத்துள்ளே இந்நூலாசிரியர் கூறிய குருவணக்கமாகிய

ஆண்டர்புகழ் திருக்கயிலை புரக்கு நந்தி
யடியருட்சத் தியஞான தரிசனர்களாதி
தண்டமிழ்தே ராவடுதண் டுறைநமச்சி வாயர்
தாள்பரவும் பலவாணர் தமையருணற் றவத்தோர்
தொண்டரெலாம் பித்தனிவ னெனவென் மீது
சொல்லரிய கருணைசெய்து துணைப்பொற் பாத
புண்டரிக மென்றலைமேற் சூட்டி யாண்ட
புகழ்த்திருச்சிற் றம்பலவர் பொன்னடிகள் பணிவாம்.

என்னுஞ் செய்யுளாலே இந்நூலாசிரியரது ஞானாசாரியர் இறுதியிற்கூறிய திருச்சிற்றம்பலதேசிகரென்பது தெரியவருகின்றது. அவர்காலம் சற்றேறக்குறைய இற்றைக்கு இருநூறுவருடங்களுக்கு முந்தியதாதலால் அந்தக்காலந்தானென்று சொல்லுதற்குச் சந்தேகமில்லை. இப்புராணத்துட்கூறிய மடவார்வளாகமென்னுந் திவ்யக்ஷேத்திரம் அகத்தியமுனிவர் துருவாசமுனிவர் பரத்துவாச முனிவர் முதலிய மகத்துக்கள் பலராலும் பூசிக்கப்பெற்றது. இத்தகைய தலமான்மியம் ஓலையேட்டுப்பிரதி யிரண்டுமூன்றின்மட்டு மெழுதப்பட்டுப் படிப்போரின்றி யிருந்த இடத்திலே சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இதை "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும், வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு, நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்" கல்வியறிவும் பரோபகார தருமமு முடைய கார்காத்த வேளாள குலத்தினராகிய வடக்கு ஸ்ரீவில்லிபுத்தூர்க் கணக்கு ம-ா-ா-ஸ்ரீ, டி-முத்துசாமிபிள்ளை யென்பவர்கள் கண்டெடுத்துப்பார்த்து வயித்திய நாதேசுரர் இருபத்துநான்கு அற்புதத் திருவிளையாடல்களையுமகிழ்ந்து "தாமின் புறுவ துலகின் புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்" என்னுந் திருக்குறளுக்கிணங்கத் தமிழ்நாட்டுள்ளாரெல்லாருக்கும் பிரயோசனம் ஆகுமாறு தமிழ்வழங்குநாடெல்லாஞ் சென்று உலாவிவரும்படி அச்சிற்பதிப்பித்துப் பற்பல பிரதிகளாக்கி வெளியிடவேண்டுமென்று நினைத்திருக்குஞ் சமயத்திலே மூன்று வருடத்துக்கு மு

ன்னர் அவர்களை நெடுநாட் சிநேகம்பற்றி யான்கண்டு கலந்து பேசிக்கொண்டிருக்கும்போது "சிவரகசியம் பாவநாசத் தல புராணம் திருச்செந்தூர்ப் புராணம் திருப்பரங்கிரிப் புராணம் முதலிய நூல்களைத் தாங்கள் பரிசோதித்து அச்சிற்பதிப்பித் துக்கொடுத்ததுபோலப் புதுவைத் தலபுராணத்தையும் நன்கு பரிசோதித்துத் திருத்தஞ்செய்து பதிப்பித்துத் தரல்வேண் டும்" என வேண்டிக்கொண்டார்கள்.

இப்படிப்பட்ட கைங்கரியமே பொருளெனக்கொண்ட யான் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி உடனே ஒரு அறி விப்புப் பத்திரம் அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்திவிட்டு இரா மாயணம் ஆரணியகாண்டவுரை பதிப்பிக்கும்பொருட்டுச் செ ன்னைக்குச்சென்றுவிட்டேன். இவையெல்லாங் கேள்வியுற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் முனிசிபல்வைஸ்சேர்மனுஞ்சில்லாக்கோர்ட் டுவக்கீலும்,வேளாளர் குலதிலகருமாகிய, ம-ா-ா-ஸ்ரீ,ம- ஊதய ல்பாகம்பிள்ளையவர்கள் ஆண்டிலிளைஞராயும் அறிவின்முதிஞ ராயும் கல்வி அறிவு ஒழுக்கம் வாய்மை உபகாரம் உதாரம் முத லிய எல்லா நற்குணங்களிலுஞ் சிறந்து சிவ புண்ணியசீல ராயும் இருத்தலால் இந்தப் புதுவைப்புராணத்தை ஆவசியகம் வெளிப்படுத்தல்சிறந்த பெருந்தருமமெனக்கருதியான் வந்தவு டனேயென்னுடன்கலந்துகூறிப்புராணத்தின் அத்தியாயமுடி விலே அதன் சுருக்கவசனமு மெழுதினால் எல்லாருக்கும் பிர யோசனமாகுமென்று சொன்னதோடு திருஞானசம்பந்தசுவா மிகள் "வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக் குந் தாளாளர்" என்றருளிச்செய்ததற்கும் ஒளவையார் "சீல த்தளவே யாகுங் குணம்" என்று அருளிச்செய்ததற்கும் இலக் கியமாக வேண்டிய திரவியசகாயமுஞ்செய்தார்கள் இவர்களது சிவபத்தி குருபத்தி அடியார்பத்தி முதிர்ச்சியைக்கண்டு பேரா னந்தமுற்று உடனே புராணத்தைப் பரிசோதிக்கத்தொடங்கி எழுதுவோரால் நேர்ந்த எழுத்துப்பிழை சொற்பிழைகளைக் களைந்து என் சிற்றறிவிற் கெட்டியமட்டுந் திருத்தஞ்செய்து

அத்தியாயத்தின் முடிவிலே சுருக்கவசனமுமெழுதி விரைந்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தினேன். இங்ஙனம் அச்சிற் பதிப்பிக்கும்போது கூட இருந்து ஆராய்ச்சிக்குவேண்டு முதவிகள் பலவுஞ்செய்தவர்கள் தற்காலஞ் சென்னைவாசிகளா யிருக்கும் பண்டைநூல் பலவற்றிலு மிகப்பயின்றுள்ள யம். ஏ. யல். டீ. ம-ா-ா-ஸ்ரீ, அனவரதவிநாயகம் பிள்ளையவர்களும், பி. ஏ. ம-ா-ா-ஸ்ரீ, கல்குளம்-குப்புசாமி முதலியாரவர்களுமே. இவ்விரு நண்பர்களுக்கும் நன்றியறிதலுள்ளவனாக யான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரறிவுடைய பெரியோர் இதிலே சீர்திருத்தஞ் செய்ய வேண்டியவைகளிருந்தால் அவைகளை எனக்கு வெளிப்படுத்துவாராயின் அவர்களுக்கு வந்தனமளித்து அவைகளை இரண்டாம் பதிப்பிலேசேர்த்துப் பதிப்பித்து விடுகிறேன். பொருளுதவிசெய்வாரில்லாமலே இதுகாறும் இலைமறை காய்போல் மறைந்துகிடந்த இந்தப் புராணத்தை வெள்ளிடைமலை போல வெளிப்படுத்தி யாவருக்கும் பயன்பெறுமாறு செய்தற்கு முக்கிய காரணராயிருந்து வேண்டியாங்கும் பொருளுதவி செய்த மேற்குறித்த நண்பராகிய தையல்பாகம் பிள்ளையவர்களுக்கு நாமெல்லாம் நன்றியறிதல் செலுத்தக்கடவோம். அவர்கள் நீடூழிவாழ்ந்திருக்க வயித்தியநாதேசுரர் திருவருள் புரிவாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக் கவிராயன்,

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சிவபெருமான் றிருவாக்கா லருளியசெந் தமிழனைத்து
ஞ் செவிவா யேற்குந், தவமுனிவ னரசிருக்கும் பொதிகையு
மம் முனிவர்பிரான் றன்கை தாங்கு, முவமையிலாக் கமண்ட
லத்தி னின்றுவரு பொருனையுமே யுயர்வொப் பில்லா, நவமுறு
சீர் பெருமலையு நதியுமெனத் திகழ்பாண்டி நாட்டின் மாதோ.

பிருதிவியா தியதலங்க ளைந்தினுளா காயமெனப் பிறங்
கு ஞான, வுருவமையுந் தென்சேறைத் தலத்தின்வட கிழக்
காக வோங்கு மன்பு, மருவுதுரு வாசமுனி வராதி மாமுனி
வர் வணங்கி யேத்து, மொருதலம்பா தெனின்மடவூர் வளா
கமென்றும் புதுவையென்று முரைப்பர் மன்னோ. (உ)

அத்தலத்தி னிறைவர்வயித் தியநாதர் சிவகாமி யம்மை
காணச், சித்தமகி ழிருவருக்காப் பஞ்சகிருத் தியநடனஞ் செய்
ததன்றி, யெத்தலத்தி லுள்ளாருங் கேட்டவுடன் பத்திசெய
வெண்மூ வாட, லுய்த்தருட்செங் கோல்செலுத்தி யுறைந்த
னர்யா ரவர்பெருமை யுணர்த்தற் பாலார். (ங)

இனையசிவ புராணம்வட மொழியின்றுந் தென்மொழியி
லெய்தக் கண்டு, நினைவினிதை யுலகோப காரமாக் கிடநினை
த்து நிலைநின் றோங்கும், புனைபுகழே விரும்புகார் காத்தவே
ளாளர்குலப் புனித னென்றுந், தனைநிகர்சீர் மருவுவில்லி யீத்
தூர்வாழ் தருமுத்து சாமி வள்ளல். (௪)

அச்சியற்ற முயன்றதனை யுடலெடுத்த பயனிதுவே யாகு
மென்று, மெச்சியற்பாப் பலவுணர்ந்த வில்லிவே ளாளர்குல
விவேக மேலோன், கச்சியற்பூங் களபமுலைச் சிவகாமி வயித்
தீசர் கமல பாத, முச்சியிற்கை குவித்திறைஞ்சும் பத்தியினு
லுயர்ந்தவன்சொல் லுறுதி யுள்ளோன், (ரு)

செவிச்செல்வஞ் செல்வமெனச் சிவசரிதங் கேட்குமு யர் செவியா னென்றும் புவிச்சம்பத் துள்ளவெலாம் பிறை போல வளர்ந்துவரு புகழான் மிக்கோன், கவிச்சங்க வாணரு க்குக் கற்பகம்போற் கொடுத்தருள்செங் கையா னென்னூர், குவிச்சங்கை தலையேற்றப் புயவலியால் வாய்வழக்காற்பொரு து வெல்வோன். (௬)

தாயினுந்தண் ணருள்பொழியு நெல்லைநக ரனவரத தான நாதர், கோயிலினிற் சிலகாலந் தருமகருத் தாவாகக் குறிக்கப் பெற்றோன், வாயினுஞ்செய் கையினும்வேற் றுமைகுறியாச் செய்கையே மதித்துச் செய்வோன், காயினுஞ்செந் தாமரை போன் மலர்முகத்தோன் வக்கிலதிகாரஞ் செய்வோன். (௭)

பொருந்துதையல் பாகனெனும் பெயர்பூண்டோன் ம ணிமுத்தாம் பூமன் செய்யும், பெருந்தவமா மைந்தனென வுதித்தவன்மெள வனமிகுந்த பேதை மார்க டிருந்துமடல் வரைதருசண் முகவேளைத் தமையனுச் செப்பு மன்ப னரு ந்துணிவுடையவர்முன் னமுதமிகச் சொரிந்தருந்த வளித்த ல் போல. (௮)

இத்தகைய புதுவைமான் மியத்தைமுறை தவறுமதெல் லாம் பார்த்துப், புத்தகமா யிரமாக வச்சிலிட்டுத் தருகவெனப் போதுஞ் செம்பொன், னத்தனையோ வத்தனையுந் தந்துமுக மன்கூறி யின்பஞ் செய்தா, னத்தனையும் புதுவையமித் திசர் திரு வருளென்ன வன்பிற் கொண்டு. (௯)

எழுதுவோ ரானேர்ந்த வெழுத்துச்சொற் பொருட்பி ழைக ளெல்லா நீக்கி, முழுவதுமென் சிற்றறிவிற் கெட்டிய மட் டேமூன்று முறைசோ தித்துத், தழுவியா வரும்படிக்கச் சுருக்கவச னமுமெளிய தமிழிற் றீட்டிப், பழுதறுசென் னையி ற்சென்று வேண்டுகோட் படியச்சிற் பதிப்பித் தேனால். (௧௦)

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

# பொருளடக்க அகராதி.


| பக்கம். | அத்தியாயப் பெயர். | பாடற் றொகை. |
|---|---|---|
| ௧௬௯ | அகத்தியர் பூசித்த அத்தியாயம் ... ... | ௨௮ |
| ௧௭௫ | அகத்தியர் மேன்மைபெற்ற அத்தியாயம் .. | ௩௨ |
| ௧௨௧ | அக்கினிசன்மன் பூசித்த அத்தியாயம்... ... | ௧0௬ |
| ௨௨0 | ஆறுமுகந் தீர்த்த அத்தியாயம் ... .. | ௨௪ |
| ௨௧௪ | ஆறுமுகமான அத்தியாயம் ... ... ... | ௩௪ |
| ௧௮௭ | காசுவாசி வாங்கிக்கொடுத்த அத்தியாயம் ... | ௯௭ |
| ௨௧௭ | காயக்குடி நதி மான்மியம் ... ... ... | ௨௬ |
| ௧௯௯ | சந்திரன் கயநோய்தீர்த்த அத்தியாயம் ... | ௮௭ |
| ௪௯ | சூரியன் பூசித்த அத்தியாயம் ... ... | ௪௮ |
| ௭௨ | ஞானோபதேச அத்தியாயம் ... ... | ௩௬ |
| ௯௬ | தலவிசேட அத்தியாயம் ... ... ... | ௪௮ |
| ௨௫0 | தாதன் கண்பறித்த அத்தியாயம் ... ... | ௨0 |
| ௮௮ | திருநடனம்புரிந்த அத்தியாயம் ... ... | ௧௫௯ |
| ௩௭ | தீர்த்த விசேட அத்தியாயம் ... .. | ௨௧ |
| ௫௮ | துருவாசர் பூசித்த அத்தியாயம் ... ... | ௮௮ |
| ௧௫௯ | தேவமித்திரன் வெண்குட்டந் தீர்த்த அத்தியாயம்.. | ௮௫ |
| ௧௭ | நகரச்சிறப்பு ... ... ... ... | ௮௮ |
| ௮ | நாட்டுச்சிறப்பு ... ... ... .. | ௯௮ |
| ௩0 | நைமிசாரணியச்சிறப்பு ... ... .. | ௨௩ |
| ௧௮0 | படிக்காசு வைத்த அத்தியாயம் ... ... | ௩௫ |
| ௨௩௧ | பயறு மிளகான அத்தியாயம் ... ... | ௨௭ |
| ௧௩௭ | பராசரன் முத்திபெற்ற அத்தியாயம் ... ... | ௩௫ |
|  | பாயிரம் ... ... ... ... | ௧௧௨ |
| ௨௬௫ | பாவைமாருக்குத் திரவியங்கொடுத்த அத்தியாயம்... | ௫௯ |
| ௨௮௪ | பிரகச்சேனன் முத்திபெற்ற அத்தியாயம் ... | ௬௬ |
| ௧௧௩ | பிரமதேவர் பூசித்த அத்தியாயம் ... ... | ௩௬ |
| ௨௩௭ | மட்குடம் பொற்குடமான அத்தியாயம் ... | ௧௮ |
| ௨௨௪ | மிளகு பயறான அத்தியாயம் ... ... | ௩௯ |
| ௭௬ | முனிவர் இருவர் பூசித்த அத்தியாயம் ... | ௫௯ |
| ௪௨ | மூர்த்தி விசேட அத்தியாயம் ... ... | ௩௩ |
| ௨௫௪ | வணிகன் பொன்மடிப்பைவந்த அத்தியாயம் ... | ௬௫ |
| ௨௭௫ | வலையனுக்குக் கண்கொடுத்த அத்தியாயம் ... | ௪௮ |
| ௨௪0 | வாணன் தலை வெடித்த அத்தியாயம் ... .. | ௫௨ |

உ

சிவமயம்.

## மடவார் வளாகமென்னும்

# புதுவைத் தலபுராணம்.

### விநாயகர் வணக்கம்.

அங்கை யானை யருத்திகொ ணேமிசேர்
செங்கை யானை யுதைத்த செழுங்கிரி
மங்கை யானை வழுத்த வுயர்சிவ
கங்கை யானை கழறொழு தேத்துவாம்.

### வாழ்த்து.

வேறு.

திருவளர் புதுவை யீசன் சேவடி சிறந்து வாழ்க
வுருவள ருலக மீன்ற வுமைசிவ காமி வாழ்க
குருவளர் திருவெண் ணீறு குலவியெக் காலும் வாழ்க
கருவளர் பிறவி நீத்த கருணைமெய் யடியார் வாழ்க. (௨)

### நூற்பயன்.

வேறு.

தென்புதுவை வாசர்வயித் தீசர் நேசத் திருவிளையாட் டியர்சரிதஞ் சிந்தை கூர்ந்தே, யன்புபுரிந் தருத்தியுடன் படிப்போர் கேட்போ ரருள்பெருகி வறுமைபிணி யகன்று பாரிற், பொன்புகழ்நன் மனைவிமைந்தர்ப் பேறு பெற்றுப் பொருவரிய செல்வமல்கு போகந் துய்த்தே, யின்புதவு சாம்பசிவ னடிநி ழற்கீ ழெந்நாளு மினிதுவாழ்ந் திருப்பர் மாதோ. (௩)

### சிவபெருமான்.

வேறு.

பாவிய லாய்ந்தவர் பண்பு நாடியே
பாவிய வுயிர்களைப் பகுத்து வைத்திடு
மூவகைக் கியலருண் முந்து றுத்திட
மூவகை யாகியு முதலைப் போற்றுவாம். (௪)

## சிவசத்தி.

### வேறு.

மருமலியுஞ் சூழிகையுஞ் சடையும் போற்றி மதிவதனம் போற்றிவிழி வடிவேல் போற்றி, திருமலியுந் தீர்க்கசுமங் கல நாண் போற்றி திகழ்தாள வடதனத்தின் செவ்வி போற்றி, தருமலியும் வரதமல ரபயம் போற்றி சாத்தியபட் டுடை யிடையின் றளர்வு போற்றி, கருமலியு மெனையுடகிழ்ந் தாண்டு கொண்ட கன்னிசிவ காமிபத கமலம் போற்றி. (ரு)

## பரசிவம்.

ஆதிநடு வந்தமில நாதி யாகி யசஞ்சலமா யகண்டிதமா யமர்மெய்ஞ் ஞானச், சோதிநிக ழானந்த வுருவ மாகித் தொழின்மூன்றுஞ் சந்நிதியிற் றொன்மை யாணை, நீதிவழி நடக்க வவை யொன்றுந் தாக்கா நிட்கிரியைப் பொருளாகி நேர்சி வானு, பூதியதாய்ப் பூரணமாய் நிறைந்து நின்ற புதுவைநா யகர்பாதம் போற்றல் செய்வாம். (சு)

## சிற்சத்தி.

### வேறு.

சொல்லியபே ரண்டமொரு வணுவாகப் பெருமைசெறி தொன்மை யானும், புல்லியவோ ரணுப்பெரிய வண்டமெ னச் சிறுமைசெறி புன்மை யானும், பல்லியல்பா முயிர்க்குயி ரா யாவை யுமா யன்றிநின்ற பான்மை யானும், வல்லியல்பாங் கொங்கைபங்கன் வளர்புதுவை யீசனென்பர் மதியு ளோரே.

## வயித்தீசர்.

### வேறு.

பூமி நாயகன் பொன்னடி தேடவும்
பூமி னாயகன் பொன்முடி நாடவுங்
காமி னாயகன் கைதொழ நீள்சிவ
காமி நாயகன் காண்மலர் போற்றுவாம். (அ)

## சிவகாமியம்மை.

### வேறு.

சுத்தமறை தினம்பரவு சாமளையை யாமளையைத் துய ர்க ணீங்க, முத்தர்பணி முக்கனிநூய முப்புரையை மூவுலக

மூழுதும் போற்று, மத்தர்வலப் பாகமுறை யம்பிகையை யெனையாண்ட வம்மை தன்னைச், சித்தர்பணி தென்புதுவைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். (கூ)

## சபாநாயகர்.

பொருதிருவர் செருக்கினொடு மடிமுடிதே டியசோதிச் புழுக்க மாறக், கருதிவரு மாத்தியந்தன் றியானகாட் டன்மனமுட் களிகூர்ந் தோங்கப், பரிதிபல வுதயமெனத் திருமேனி திகழவுமை பரிந்து காணச், சுருதிபகர் நடம்புரியும் புதுவைநட ராசரடி தொழுதல் செய்வாம். (க0)

## தக்ஷிணாமூர்த்தி.

வேறு.

சுருதிபல வங்கமுப் நிடத மியாவுஞ் சோதித்து முளத்திலிரு டொலைத லின்றிக், கருதிவரு சிறுமுனிவர் சங்கையெல்லாங் கடிதேகச் சிவபோகங் கருத்து ளாகப், பொருவரிய வுரையுணர்வு தவிர்மெய்ஞ் ஞான போகமருண் மௌனநிலை பொருந்தி நீடு, மொருபசிய வடதருவி னிழலின் மேய வுத்தமனை நித்தியமு முளத்தில் வைப்பாம். (கக)

## சிவகங்கை விநாயகர்.

வேறு.

ஐந்தொழிலு மியற்றுபெருங் கடவுளரு மன்புபுரிந் தருச்சித் தேத்தித், தந்தொழிலை முயல்வரெனச் சதுமறைகள் சாற்றுபெருந் தகையை நாளு, மூந்தவுல குயிரெவைக்கு மூலகாரணஞான முதலை வேதச், செந்தமிழ்தேர் புதுவைவளர் சிவகங்கைக் கரிமுகனைச் சிந்தை செய்வாம். (கஉ)

## முருகக்கடவுள்.

வேறு.

அறமருவு செங்கையுமை யம்மை பாகத் தண்ணறிரு வுள்ளமகிழ்ந் தன்பாக் கேட்கத், திறமருவு பிரணவத்தின் பொருளினோடுஞ் செங்கனிவாய் முத்தமருள் செய்து கோர, மறமருவு சூரனுரம் வகிர்ந்து காய்ந்து வானவரைச் சிறைவிடுத்து வாழ வைத்துக், குறமகளை யடிபணிந்த குமரன் பாதகோகனகந் தினம்புனைந்து குலவி வாழ்வாம். (கங)

## சரசுவதி.

வேறு.

ஏணியைப் பொருகண் ணுளை யெழில்வடம் வீணை தாங்கும்
பாணியை யுலக மூன்றும் படைத்தவ னவிற் சேர்ந்த
வாணியைக் கலைகட் கெல்லா மாதிகா ரணமா ஞான [வாம்.
வாணியைப் பவக்க டற்கோர் தோணியை வணக்கஞ் செய்

## திருநந்திதேவர்.

வேறு.

பொருவில்பதி னொருவரொண்மர் பன்னிருவ ரிருவரிவர் புகழ்சேர் மானத், திருநெடுமால் பிரமரிவ ரிவர்தேவா சுரரெ ட்டுத் திசையோ ரென்று, பெருமைசெறி கயிலையிறை திருமுன்னும் பேரோலக் கத்து ணின்றே, யருமைசெறி கட்டியஞ்சொ னந்தியெந்தை யடிமுடிமே லணிதல் செய்வாம். ()

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கதித்தெழுந்த பரசமயக் கங்குலிருள் பனிகுளிர்வேர் களைய வேதம், விதித்தெழுந்த சிவசமய முனிவர்முகத் தாமரைகள் விரியச் செல்வம், பதித்தெழுந்த சீகாழிக் கவுணியர்கோத் திரமென்னும் பரவை தன்னு, ளுதித்தெழுந்த திருஞான சம்பந்த பானுவையெம் முளத்தில் வைப்பாம். (கசு)

## திருநாவுக்கரசு நாயனார்.

வாகீசன் மாவீசன் வழுத்தரிய சிவனும மனத்துள் வைத்து
நாகீச கங்கணனார் கோயிலல கிடக்கூடு நயமெய்ஞ் ஞான
யோகீச ருலகமெலா முய்யவருட் டிருப்பாட லுதவா னந்த
போகீசர் வாகீசர் பொற்றுளே பற்றுகப் போற்றல் செய்வாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

வடிவகன்ற பேரொளியாய் மனவாக்குக் களப்பரிதாய் மறைக ளோது, முடிவகன்ற பூரணமா யானந்த மாறுத முதல்வன் றன்னைக், குடிமையுடன் மாயவனைப் பங்கயனை விண்ணவர்தங் கோனை யென்று, மடிமையெனக் கொண்டவனைத் தோழமையாக் கொண்டவனை யகத்துள் வைப்பாம். (கஅ)

## திருவாதவூரடிகள்.

வேறு.

பெருவா சகமா மறைக்கரிய பெம்மான் குருந்தி னிழலிருந்த, குருவா சகத்தாற் பேரின்பங் கூடப் பொசித்தெஞ் சிய

வாழ்வை, யொருவா சகமா யின்புருவா யுலகி னுயிர்க ளுள முருக்குஞ், திருவா சகமாப் பகர்ந்தமுனி செம்பொற் பாதஞ் சிந்தைசெய்வாம். (௧௯)

## தண்டியடிகள்.

### வேறு.

எந்தைமுடிக் காட்டுதலு மிகமுசுத்தம் விட்டுதலு மித னைந்தென்றே, சிந்தையுண்மெய் யன்புவைத்து நிரைமேய்த் தே யதன்பாலைத் தினங்க றந்து, முந்தன்முடிக் காட்டவதற் கிடையூறு புரிந்துமிக முனிந்த பெற்ற, தந்தைதா ளெறிந்தீ சன் றுளடைந்த தண்டீசர் தாளைச் சேர்வாம். (௨௦)

## அறுபத்துமூன்று நாயன்மார்.

### வேறு.

உரியமனை வியர்மைந்தர் புவியி னேடு முடல்பொரு ளா திகளைமிக வுகப்பி னேடுங், கரியமிடற் றண்ணலுக்கு மடி யார் கட்குங் கசிவில்பொது வடியார்க்குங் கருதா தீந்து, பெ ரியவிரு டியர்க்குமுனி வரர்க்கும் வீடு பெற்றோர்க்கு மரிய செயல் பேணிச் செய்தே, யரியசிவ னடியிணைக்கீ ழடைந்து வாழ்ந்த வறுபத்து மூவரடிக் கன்பு செய்வாம். (௨௧)

## குரு தோத்திரம்.

அண்டர்புகழ் திருக்கயிலை புரக்கு நந்தி யடியருட்சந் தியஞான தரிசனர்க ளாதி, தண்டமிழா வடுதுறைவாழ் நமச் சி வாயர் தாள்பரவும் பலவாணர் தனையருணற் றவத்தோர், தொண்டரெலாம் பித்தனிவ னெனவென் மீது சொல்லரிய கருணைசெய்து துணைப்பொற் பாத, புண்டரிக மென்றலை மேற் சூட்டி யாண்ட புகழ்த்திருச்சிற் றம்பலவர் பொன்னடி கள் போற்றி. (௨௨)

## புதுவைச் சிவபூசை செய்பவர் முதலியோர்.

செந்தமிழ்சேர் தென்புதுவை யீசர் பூசை செய்பவரோ டகம்படிமை செய்யு மன்பர், சந்தஞ்சூழ் திருவலகி டுன மே லாந் தீவப்பணிசெய் தலத்தார்க்குந் தானீ கர்க்கும, பந்தம றச் சரியைமுதன் ஞான மீறும் பணிவிடைசெய் துணிவுடை ய பரிவி னேர்க்கு, மந்தநகர் தன்னிலவ தரித்த வெண்ணி லகிலசரா சரவுயிர்க்கு மடிமை செய்வாம். (௨௩)

## முதனூல்வழி.

### வேறு.

கருணையங் கடலா முக்கட் கடவுள்பா லுணர்ந்து நந்தி
தருணமார் சனற்கு மாரன் றன்வயிற் சாற்ற வன்னோ
னருணயக் துரைத்தான் வியாதற் கம்முனி சூதன் வேட்பப்
பொருணயம் பெறச்சொன் மூவா றெண்ணிய புராண மாமால்.

## நூல்செய்தற்குக்காரணம்.

வண்மைசே ரவற்றுள் வாய்ந்த பிரமகை வர்த்தந் தன்
னு, ளுண்மையாம் புதுவை நாத னுறும்புகழ்ச் சரித மென்னு,
நுண்மையாம் வடநூ லைச்செந் தமிழினு னுவலு கென்னத், தி
ண்மைசேர் பதியி லுள்ள முதியவர் சிறப்பிற் கூற. (௨௫)

தாயினு மினிய வன்பன் வயித்தீசன் சரிதஞ் சொல்ல,
வாயினு மனத்துங் கொள்ளா வாஞ்சையுண் ணிறைந்தே யோ
ங்கு, மாயினு மறைகட் கெட்டா வண்ணன்மான் மியத்தைப்
பேதைப், பேயினு மறிவி லாதேன் பேசுவ தெவனென் றேங்
கும். (௨௬)

இருவகை யெண்ண முற்றே யிடும்பையு ணெஞ்ச மூழ்
கும், பருவர லொழித்துப் போதப் பரைசிவ காமி யும்மை,
யருடரக் கனவி லென்ற னருகெழுந் தருளி நீயும், வெருவுத
றவிர்ந்திக் காதை விளம்பென வருள லோடும். (௨௭)

வெறுமையு ளடைந்து செம்பொன் விருப்பறப் பெற்
றோர் போலச், சிறுமையு ணீங்கி யுள்ளந் தெளிதர மகிழ்வி
னோங்கி, மறுமையிற் பெறும்பே றெல்லா மிம்மையே வாய்ந்த
வென்னப், பொறுமைசேர் கருணைத் தாயை யஞ்சலி புரிதல்
செய்தே. (௨௮)

பூவரு மயனு மாலு மறைகளும் புரந்த ராதி, தேவரு
மளத்த லென்று மரிதரி தென்று செப்ப, யாவரே புகழா தெ
ய்த்தா ரெம்மிறை புகழை யாமு, நாவரு சொல்லா லெம்மா
லுணர்ந்தவை நவில லுற்றும். (௨௯)

## அவையடக்கம்.

### வேறு.

விரவிய பொருணயம் விளம்பு சொன்னயம்
பரவியபாவுரைப் பாவ லார்முன்

னுரைசெயு மெனதுசொல் லுயர்ந்த பேரொளி
யிரவிமுன் *சுடரொளி யிலங்கல் போலுமால். (௩௰)

அந்தமி லிலக்கண மனைத்து மாய்ந்துயர்
செந்தமிழ்க் கவிஞர்கள் பகருஞ் செய்யுண்முன்
புந்தியி லறிவிலேன் புன்சொ லாவதிங்
கிந்துமுன் றாரகை யிலங்கல் போலுமால். (௩௧)

வேறு.

நீதமி லுடலின் குற்ற நினைவுரை செயலின் குற்றம்
பூதசுத் திகளாற் போக்கிப் புனிதனை யருச்சிப் பார்போல்
வேதமா ரெனது புன்சொ லிழிவினை நீக்கி யார்க்கு
காதனுர்க் கினிமைசெய்த நாவலோர் கடனா தாமே. (௩௨)

விரவிய வன்பா லீட்டும் விழுப்புறு பொருளை யெல்லாந்
திரவிய சுத்தி செய்து சிவனடிச் செலுத்து வார்போற்
கரவிய வுளத்தென் சொல்லின் கசடறக் கடிந்து நல்லோர்
பரவிய புதுவை யீசன் றிருச்செவி பகர்வ ரன்றே. (௩௩)

வேறு.

செங்நெலி னுமிதவி டகற்றித் தீஞ்சுவைக்
கன்னலி னமுதுசெய் கருத்தி னொரெனப்
புன்னல மாயினும் பெறுவென் புன்சொலை
நன்னல மாக்குப நாவ லோர்களே. (௩௪)

## நூலாசிரியராவார்.

வேறு.

தெலுங்குநா கரங்கிரந்தந் தமிழிவைநால் வகைத்திறத்தாற் சிவபு ராணஞ், சொலுங்கவிநால் வகைப்போதாத் தொடுத்தணிந்தா னிசைக்கவிஞர் துதிக்குஞ் சிங்கம், கலுங்குழையும் வசனவயித் தியலிங்கம் பரசமயக் கங்கு லியாவும், வெலுங் கதிர்வை திகப்புதுவை விரும்புமவயித் தியநாத விமல னூர்க்கே. (௩௫)

பாயிரம் முற்றிற்று.

---

* சுடர் - விளக்கு.

# நாட்டுச்சிறப்பு.

வைய மெங்கணு மாலயன் றுதித்திட வளர்ந்த
மெய்ய னைந்தொழில் சந்ததம் புரிதிரு விளையாட்
டைய னின்புறச் செழியர்கோ னுவெழுந் தருளிச்
செய்ய கோல்புரி பாண்டிநாட் டெழிலுரை செய்வாம். (௧)

சூல பாணிமெய்ந் நீறென வேகியத் தூய
பால லோசனன் மடைப்பள்ளியமுதுறப் பருகி
ஞால மூய்பவே யாலமுண் டருளுமந் நம்ப
னீல கந்தரத் துருக்கொடு வந்தன நெடுங்கார். (௨)

சண்ட வேகமாச் சிறையுடைச் சயிலங்கள் போன்றே
யண்ட மெண்டிசா முகங்களை யடர்ந்தடைத் தருக்கன்
மண்ட லஞ்சசி மண்டலத் தொளிகெட வையங்
கொண்ட பேரிருண் மிடைந்துற வடைந்தன குமிறி. (௩)

வேறு.

திருவளர் புதுவை தன்னுட் சிதம்பர நடன மன்போ [யன்
டிருவருக் கருள்வோன் செங்கைத் துடியென விடித்தெம்மை
பொருவறு சடையின் மின்னிப் போற்றுபல் லுயிர்க ளுய்ய
வருள்சொரி சரண மென்ன வணிமழை பொழிந்தவன்றே. ()

வேறு.

புடவி யெங்கணு மொழிவறப் பொழிந்தன புவியு
ளடவி யெங்கணு மசலங்க ளெங்கணு மணிகார்
தடவி யெங்கணும் பொழிந்தன குளிர்ந்தவேழ் தரையுங்
கடவி யெங்கணும் வெப்புறு கோடையைக் கடிந்து. (௫)

வேறு.

களிதரு முழக்கஞ் செய்து கார்வரை மறையச் சூழ்ந்து
தெளிதரு புனலைக் கூடித் திரண்முகில் பொழிந்த தோற்றம்
களிர்வெயில் வளியி வற்று னலிவுறு வசல மாகி [ம்.
யொளிர்தவம் புரிவோர்க் கண்ண லுதவுகா மியங்கள் போலு

தவழ்மதி வதனங் கொங்கைத் தடஞ்சிக ரங்க ளாரந்
துவண்மணி யருவித் தூசு சோர்தர வசல மின்னை
யுவமையின் முந்நீர் மன்ன னுவந்துகா ரூர்ந்து வந்து
நவமுறப் புல்லல் போலு மாகமேன் மேக மெய்தல். (௭)

கைவரு கோடை வெப்பா னலிவுறு வரையைச் சூழ்ந்து
மைவரு கொண்மூப் பெய்ய வளமுறக் குளிர்ந்த வண்மை
கைவரு ஞான பானுக் காழியர் காம தேனு
தைவரு நீற்றான் மாறன் றன்னுடல் குளிர்தல் போலும். (அ)

மும்மலக் குழுக்கள் கூடி முயல்வினைக் குவைக ணீங்கிச்
செம்மன்மெய்ஞ் ஞானஞ் சேரத் தெளிவுறு சிந்தை போல
வம்மவித் தரணி யெங்குஞ் செழித்திட வடைந்து பெய்து
வெம்மை தீர் கார்க ணீங்க விளங்கின வான மெங்கும். (௯)

சந்திரன் வதன மாகத் *தரணிபொற் குழைய தாக
விந்திர தனுப்பு ரூர மிலங்குமின் பூண்க ளாக
வந்தர மாதா மன்னே பயோதரத் தமுத தாரை
சிந்திட நிலப்பெண் பிள்ளை தெவிட்டவே பருகிற் றன்றே. ( )

கருமுகிற் றருணக் காளை தாரையாங் கரங்கள் கொண்டே
யிருநில மசடன் ஞாக மெங்கணு மிறுகப் புல்ல [னப்
வுருகியுண் ணெகிழ்ந்து தேகத் துரோமங்கள் பொடித்த தென்
பருவமார் பலபைங் கூழ்க ளங்குரம் பயந்த வன்றே. (௧௧)

மந்தர மத்தாய் முன்னம் வலிகெட வளங்க வர்ந்தே
யந்தரஞ் செய்த தாலிவ் வரைகளவ் வினமென் றாய்ந்து
கந்தர மூர்ந்து முந்நீர் தாரையாங் கரங்கள் கொண்டு
சுந்தர வளங்க வர்ந்த தோற்றம்போல் வெள்ளந் தோன்ற. ( )

வேறு.

கருமுகில்க ளொருங்கெய்திக் கடிப்புதுவை நகர்மேய
தருமகிரி மற்றுமுள சயிலமெலா மழைபெய்யக்
குருமணிக ளெறிகாயக் குடியாறு புவிகூற்று
நாலையுறு மண்டூக நதிபெருகிப் பரந்தனவால். (௧௩)

வேறு.

அலகில்பல் சிகரத் தம்ப ராயிர முகமாய்த் தோன்றி
மலைவளங் கொண்டு நீத்த மறிகட லேனக்கிச் சேற
லுலைவில்பல் பரிசு தந்தை யுதவநெஞ் சுவந்து கொண்டு
தலைவீனார் செல்லு மன்றற் றையலார் போலு மாதோ. (௧௪)

---

*தரணி - சூரியன்.

பொருப்பினி லுதித்த நீத்தப் பூவைதங் தாவ ளத்தின்
மருப்பெனுங் கொங்கை தாங்கி மணங்கொள்சாந் தகிற்சேறாடி
யருப்புறு மலர்கள் சூடி யவிர்மணி யாரம் பூண்டு
விருப்புமீக் கூர வோடி விரைவுட னடந்த தன்றே. (௧௫)

திண்டிறற் குறவர் சேரித் தினைமாவுந் தேனுந் துய்த்தே
யண்டர்தம் மிருக்கை யெய்தி யளைநறும் பால ருந்தித்
தண்டலை மருதம் வைகி வழிநடைத் தளர்வ கற்றிக்
கண்டல்சூழ் நெய்த றள்ளிக் கடற்பதி கலந்த தன்றே. (௧௬)

அணிதிகழ் செயபொ னென்றே யாயிரம் பேத மூற்ற
பணிபல வாகி வேறு பெயர்பெறு பண்பு போல
மணிகொழித் திரைத ரங்க மெறிபெரு வாரி யொன்றே
திணிகரை யேரி யாதிப் பேர்பல சிறந்த தன்றே. (௧௭)

தேங்கமழ் நறவும் பூவின் றேறலுங் கனியின் சாறும்
பாங்குற வருவி யாறு புறப்படப் படருந் தன்மை
தாங்கிய யமுனை யோடு சரசோதி கங்கை கூடி
யோங்கிவ ருதிரி வேணி சங்கம மொத்த தன்றே. (௧௮)

உரையுணர் வகன்மெய்ஞ் ஞான மொழிவற நிறைந்தே போற்
கரைபொரு வெள்ள மோடிக் கடலென வேரி யெல்லாம்
புரையற நிரம்பி வாவி கூவல்பொற் பழனந் தேக்கி
நிரைபெறு சாலை சோலை யெங்கணு நிரம்பிற் றன்றே. (௧௯)

போதித்த வாசா னன்பாற் புகன்றரு ணிலையை விட்டுப்
பேதித்த சலன நெஞ்சப் பேதையிற் கலங்கி மீட்டும்
வாதித்த மனத்தை நோக்கி மறித்தரு ணிலையி னின்று
சாதித்த வன்னோன் போலத் தெளிந்தது தகைசேர்வெள்ளம்.

திரம்பெறு பரிச வேதிச் செய்கையாற் செம்பு செம்பொன்
றரம்பெறுந் தகைமை யென்னச் சலதிநீர் மேகஞ் சால
வுரம்பெற வருந்த லாலே யுலகும்ப ரெவரு முய்ய
வரம்பெறு மமுத மாகி வந்தது நதியின் மாதோ. (௨௧)

தண்டலை கனியும் போதும் பூந்துகட் சாருந் தேனுங்
கொண்டலிற் பொழியச் சேர்ந்து குதிகொளு நதியிற் பாய்ந்து
வண்டலு மெருவும் போடுந் தழையுமாய் மன்னித் தேக்குங்
கண்டலார் நெய்தல் சூழுங் கடலெனப் பழனக் காடு. (௨௨)

### வேறு.

மன்னிய வேறுடன் மணியொ ருத்தலும்
பொன்னிய னுகத்திடைப் புணர்த்து வீக்கியே
யுன்னிய பங்குனி யுத்தி ரத்தினி
லின்னியன் மள்ளர்பொன் னேர்கள் பூட்டினர். (உரு)

### வேறு.

அரியவஞ் செழுத்தை நெஞ்சி லழுந்தவுச் சரிக்க நீங்காக்
கரியகா மாதி யற்றுக் கசிந்துள நெகிழ்ந்த தேபோ
லுரியவாள் வினையின் மள்ள ருழுபடை யூடே செல்லப்
பெரியவன் களைக ணீங்கப் பெருந்தெளி சிலர்கள் செய்வார்.

பத்திசேர் தெய்வம் போற்றிப் பரிவுடன் பலர்செஞ் சாலி
வித்தினை வீசி நாற்றுப் பாவுவார் விரைந்து சில்லோர்
நத்தியல் சேற்றி னுற்றை நடவுசெய் வினைஞர் சில்லோர்
கொத்தியல் பைங்கூழ் பேணல் கொடுசில வளங்கள்செய்வார்.

மருந்தினு மினிய வேனும் வருவிருந் தெதிர்போய்க் கூவி
யருந்தல்செய் வித்துச் செல்வ மறம்புகழ் வளர்ப்பார் போலுந்
திருந்திய பழனச் சேற்றிற் செந்நெல்வித் திட்டு மேன்மை
பெருந்திரு வருவாய்ப் பைங்கூழ் விளைவுறப் பேணல்சில்லோர்.

மேவிய வாசான் மாணன் மேவினை வேறாக் காட்டி
யாவினை யருளி னட்டே யயலற வளர்க்கு மாபோற்
பாவிய நாறு பேர்த்தோர் பழனத்து ணடவு செய்து
வாவிபோ னன்னீ ரார்த்து வளம்படுக் குநர்கள் சில்லோர். ()

சிலைநுதற் பழன மின்னார் திறமிகு மள்ளர் கூடித்
தொலைவினன் னறவ ருந்திச் சொற்றடு மாறி யாண்பெண்
டலைதலை மயங்கி மானஞ் சதுர்மதி தமையி ழந்து
கலைகளு மிழந்து சாலக் கருத்தழி களிப்பை யுற்றார். (உஅ)

திருக்கடர் கருவி நீக்கிச் சிற்பர மாக்கி யின்பம்
பெருக்கிடப் புசிக்கப் பாசம் பின்னுய்வந் தணுகல் போலு
நெருக்கடர் களைக ளியாவு நீங்கமுன் னுழுத சேற்றிற்
றருக்கடர் பயிரின் மீளத் தழைந்தன களைகள் சார்ந்து. (உகூ)

மிடைந்தெழு களிப்பி னோடும் விரைந்தெழு முழுநர் மாத
ரடைந்தெழு களைகூ ரேவூ ரறச்செறுத் தகல்வர் மள்ளர்

கடைந்தெழு செப்பாங் கொங்கைக் கடைசிய ரவய வங்கள்
படர்ந்தெழு நிழலை நீரிற் பண்பற மருண்டு பார்த்து. (௩0)

சைவலஞ் சலச நீலஞ் சலஞ்சலம் பவளம் வள்ளை
மொய்வரு மாம்பலாக மோதிய களைக ளென்றே
கைவரு திறஞ்செ லுத்திக் கையரிக் கொண்டு நீரிற்
றைவர வின்மை கண்டு தனித்தனி முறுவல் செய்வார். (௩க)

சரியையர் ஞானம் போலத் தன்னுளே யடங்கி யாற்றுங்
கிரியையர் ஞானம் போலக் கிளர்குறி தோன்றி யோகம்
புரிபவர் ஞானம் போலப் பூரண மாய லர்ந்தே
யுரியபே ரின்பம் பெற்றோர்க் கொப்பெனக் குழைத லுற்று.

சடையுடை விடையன் பாத தாமரைக் கன்பு பூண்ட
நடையுடை நாயன் மார்க ளசையுட னடைந்த போழ்தே
யடைவுடைப் பொருளை யன்போ டகமுக மலர்ந்து நல்குங்
கொடையுறு திருவி னென்று கோடியாய் விளைந்த செந்நெல்.

திரமுறு நிலத்தின் பேதச் செவ்வியை யுழுந ராய்ந்து
காமுறு முயற்சி செய்யக் கருணையங் குருமா ணாக்கர்
தரமுறு தன்மை நோக்கிச் சரியையா திகளை நல்க
வுரமுறு மின்ப மொப்ப விளைந்தன வோங்கிப் பைங்கூழ். ()

பிறைவடி வரிவாள் கொண்டு பின்னலார் கதிரை மள்ளர்
முறைபடக் குறைப்பர் சில்லோர் மொய்யரிசேர்ப்பர்சில்லோர்
பொறைபடச் சும்மை யார்த்துப் போர்பல செய்வர் சில்லோர்
நிறைபடுபோரைச்சாய்த்தேயொருத்தலாற்றெளிப்பர்சில்லோர்.

வேறு.

செற்ற நீங்கின ரெப்பொருட் டன்மையுந் தெரிந்து
குற்ற நீக்கியே குணங்களைக் கொள்வது மானக்
கற்றை வைகளை யகற்றிச்செஞ் சாலிகைக் கொண்டு
மற்ற டப்புயத் துழுநர்கள் வளம்படுக் குநரால். (௩சு)

வெள்ளியங் கிரிகள் செம்பொன் மேருமால் வரைகண் மானத்
தெள்ளிய வெண்ணெல் செந்நெ றிரள்படக் குவைக ளாற்றி
யொள்ளிய தெய்வம் போற்றி யுற்றவர் வறுமை தீர
வள்ளியோ ரீகை போலு மளங்களிற் படைய நல்கி. (௩எ)

ஆறிலொன் றரசர் கொள்ள வைக்துடைத் தமது பாக
மீறில்பண் டிகளிற் சேர்த்தித் தத்தமில் லிடத்திற் போக்கி
வேறிலேம் புலத்தா ரோம்பி விரும்புமைம் புலத்தா ரூர
வீறினற் போகந் துய்த்தே யிந்திரன் போல வாழ்வார். (கூஅ)

புல்லொடு வரகு சாமை புகல்பல விறுங்கு சோள
மல்லொடு பொருவு மெள்ளுக் கொள்ளுட னவரை தோரை
மல்லடு பயறோ டேனல் வரைவில்புன் னிலவ னங்க
ளில்லொடு பொருந்தப் பண்டி யேற்றியின் படைவர் மாதோ.

பாரெலா மூர்க ளன்றிப் பகரிடம் பனிப்பூஞ் சோலை
யூரெலாம் வாவி கூவ லூறுகே ணிக டடாக
நீரெலாங் கமல நீலோற் பலமலர் நிறைந்து மன்னு
மேரெலா முழுத பைங்கூ ழிடமன்றி வெளியின் றுமால்.(சo)

கோயிலி லாடல் பாடல் குலவுவ புரிக ளெங்கும்
வாயிலார் ஞாயி லேய்ந்த மன்னர்வாழ் புலங்க ளெங்குந்
தாயில்போ னல்லூண் சாலை நீர்ச்சாலை சரிக ளெங்கு
மீயிலா தடர்ந்த தாரு மேவுபூம் பொழில்க ளெங்கும். (சக).

திரைபொரு பரவை சூழ்ந்த செகதல வரைப்பின் மல்லல்
வரைமுல்லை பழன நெய்தல் வளத்திணை நான்கு மென்றும்
புரையற வுள்ள தம்மிற் பொருந்திடா தொன்றோ டொன்று
யுரையற மரபு மாறி மயங்கிய திறமு ரைப்பாம். (சஉ)

வேறு திணைமயக்கம்.

முல்லை யங்கொடி படர்ந்துயர் வேங்கையின் மொய்க்கு
மல்ல லங்கறிக் கொடிவளர் குருந்திடை மன்னுங்
கொல்லை யாய்ச்சிய ரில்லிடைக் கொழுந்தயிர் மோர்க்குச்
சொல்லெ யிற்றியர் சமம்பெற வளப்பன சொரிதேன். (சங)

வேறு.

துன்னிய குடுமிக் குன்றத் திகிரிவாள் சொரியு முத்துங்
கன்னலிற் றெறித்த முத்தும் வரம்பிடை மயங்கிக் காட்டுஞ்
செந்நெல் மேய்ந் தயர்ந்து மேதி சந்தன வனத்திற் சேரு
மன்னிய திணைமேய்ந் தியானை நந்தன வனத்தின் வைகும். ()

உந்திய வருவி நீராற் கல்லிடை யுருண்டு தேய்ந்த
சந்தனச் சேறு பாய்ந்து கழிப்புலா னாற்றந் தன்னும்

வங்தெயிற் றியர்கள் சங்கு மணியுடன் சேர்க்க முன்றிற்
சிந்தும்வெண் டாளம் வீசுந் திரைக்கரங் களிஞற் சிந்து. (சரு)

வேறு.

மல்ல லானிரை பசியபுன் மேய்ந்துயர் மருதி
னெல்லை தூஞ்சுவ புனிற்றிளங் கன்றுகட் கிரங்கி
யொல்லை யுள்கலு மடித்தலத் தொழுகுபா லருவி
பல்ல செங்நெலின் கன்னலின் பழனமும் பாயும். (சசு)

வேறு.

வள்ளைகண் மேய்ந்து மேதி மடித்தலச் சுமைபொ றுத்தே
யொள்ளிய குருந்தி னீழ லுறங்குவ நால்வா யென்ன
வுள்ளிய கன்றை யுள்க மடித்தலத் தோடு தீம்பால்
வெள்ளமே பாய்ந்து முல்லைக் கான்றொறுஞ்செழுமைமேவும்.

அளம்படு நெய்தல் சூழு மலைகடன் முழக்கங் கேட்டு
விளம்புவல் வியங்க ளென்னக் கொல்லையான் வெருவியோடுந்
தளம்படு முல்லை மாதர் தயிர்கடைந் திடுபே ரோதை
வளம்பெறு களியர் மாதர் துயிலெழ மருவு மாதோ. (சஅ)

வேறு.

அளமர்க ணித்தில மளக்கும் பேரொலி
களமர்நெல் லளவையி னொலியைக் காய்ந்திடுங்
குளமடை மதகிடைக் குதிக்கு நீரொலி
வளமடை கடலொலி யடங்க மாற்றுமால். (சகூ)

வேறு.

விரிகம லங்க டோறுங் கேதகை மலர்வெண் டாது
சொரிவன புதுவை யீசன் றுணையடி யருச்சிப் போர்க
டெரிசனஞ் செய்ய வந்த வன்பர்கள் செங்கை தோறும்
பரிவுட னீறு நல்கும் பான்மையைப் பொருவு மாதோ. (டு0)

குன்றுறு மயூர மின்னார் சாயலைக் குறித்துக் காட்டு
மன்றினை நெய்த லன்ன மவர்நடை யணியைக் கூட்டு
நன்றென மருதிற் கிள்ளை யவர்மொழி நயத்தை நாட்டு
மின்றிவை மூன்று நேரன் றெனமுல்லை நகைத்து வாட்டுடி.

வேறு.

முட்ப லாக்கனி வானர மூழ்வெண முழக்கத்
தட்ப மார்சுனை யருவிகைத் தாளங்க ளொலிக்கக்

கட்பு லங்களி கூர்தர வெயிற்றியர் காணக்
கொட்பு லாவிய மஞ்ஞைகள் களிநடங் குலவும். (௫௨)

வேறு.

விரிந்தசெந் தாமரை தோறு மென்மலர்
சொரிந்தன புன்னைக ணறவு சோர்தரப்
பொரிந்தசெந் தழலிடைப் பொரியை நெய்யுடன்
பரிந்தவ ராகுதி பண்ணல் போலுமால். (௫௩)

வேறு.

யாகமார் சாலைதோறு மெழுந்துயர் புகையை நோக்கி
மாகமார் மேக மாக மயில்கடஞ் சிறைவி ரித்துப்
பாகமார் கொடிக ளேய்ந்த பூகமே னடனம் பண்ணல்
*கோகமார் கொங்கை மூங்கிற் கூத்தியர் போலு மன்றே. ()

வேறு.

ஆத்தியுங் கொன்றையு மலர்சொ ரிந்திடப்
பார்த்திடப் புலியொடு பாம்பு காற்றினாற்
பூத்திள வசோகுகின் றசைதல் பொற்சபைக்
கூத்தன தாடலைக் குறித்துக் காட்டுமால். (௫௫)

வீண்டொடர் சண்பகம் வீசொ ரிந்திட
வண்டணி பூவைகிழ் மலர்ந்து நிற்பன
தண்டலை யூடுபொன் னுடை சாத்திய
கொண்டலி னிறத்தினன் கோலம் போலுமால். (௫௬)

வேறு.

உம்பர்க ளுலக மெங்கு முலவிவந் துடல யர்ந்தே
வம்பலர் கமலத் தன்னம் வாட்டமுற் றிருக்கை யங்கா
ணம்பனீண் முடியைப் பன்னா ளுடிய நலிவு நீங்கத்
தம்பது மாச னஞ்சேர் சதுமுக வெகினம் போலும். (௫௭)

ஆலைவாய்க் கரும்பம் பாகி னடுபெரும் புகையுங் காலை
மாலைவாய் மனைக டோறு மடைப்பள்ளிப் புகையும் வட்ட
வேலைவாய் முகிற்கு மூரங்கண் மொய்த்தென மிடைந்துகூடிச்
சோலைவாய் மேவி யெல்லி விரவெனத் தோன்று மாதோ. ()

---

* கோகம் - சக்கரவாகப்புள்.

வேறு.

மாவிளங் குயின்முற் கூவ மகிழ்வுடன் கிள்ளை பேச
வோவிலம் புயங்கண் மீதி லனக்குழாங் கேட்டு வத்த
ரேவிசற் புகழ்வா சிப்பத் தெரிவுற வறிஞர் கூறத்
தாவில்சீ ரடியார் கேட்டு மிகவுளந் தழைத்தல் போலும். ()

வேறு.

அண்டர்கள் வேயிசை யாக்கள் கேட்டுள
மண்டிய களிப்புட னிரைம றுத்திட
றொண்டின ரிசைத்திரு வாச கஞ்சொல
வுண்டிக ணீங்கியின் புறுவர் போலுமால். (சு0)

வேறு.

மறமுஞ் சோரமும் வஞ்சமு மணுகிடா வகைசே
ரறமு ஞானமுந் தவங்களு மவயவ மாகிப்
புறமு முள்ளினு மொருதன்மைப் புனிதமூர்த் திகளாந்
திறமு மேவியந் நாட்டினின் மானிடர் சிறப்பார். (சுக)

வேறு.

நல்லறந் துறவற மென்று நான்மறை
சொல்லற மொழிவழி துறந்து ளோர்சிலர்
பல்லற மியற்றியும் பற்றி லார்களா
யில்லறந் துறவென விருந்து ளோர்சிலர். (சுஉ)

சத்திய வாய்மையுந் தரும சிந்தையு
நித்திய வநித்திய நிச்ச யஞ்செயும்
புத்தியு மீகையும் பொருந்து போகமும்
பத்தியு முடையவர் பாண்டி நாட்டுளோர். (சுங)

வேறு.

அம்பிகை யேமுன் னரசியல் புரிய வவதரித் தருளிய நாடு, நம்பனே செழிய னெனவெழுந் தருளிச் செய்யகோ னடாத்திய நாடு, வம்பலர் கடம்ப னம்முறை யுதித்து வழுதி யாய் மரபுசெய் நாடு, கும்பனு மகிழ்ந்து சந்தனு சலமேற் கொள்கையாக் குடிபுகு நாடு. (சுச)

வேறு.

வாக்கரசர் வன்றொண்டர் மணிவசனர் சம்பந்தர் மற்று ளோர்க்கு, மேர்க்கரிய கன்மிதப்பு விகன்முதலை மதலைதா

வேடிபேசப், போக்கரிய வென்புபெண்ணு விவைபலவாஞ் செயன்முடித்துப் புனிதன் ருளின், மோக்கமிலை தந்ததுசெந் தமிழாமத் தமிழுதித்த முதிய நாடு. (சுகூ)

வேறு.

வித்தமுங் கல்வியும் விமல ஞானமு
நித்தமு நாடெலா நிறைந்து மன்னலா
லத்திமின் வாணிமின் னசல மீன்றமின்
சத்திய மேயவர் சாரும் வைப்பரோ. (சுசு)

திங்களு மிரவியு மாறிச் செல்லினுந்
துங்கமா மேருவுந் துளக்க மெய்தினுஞ்
சங்கரன் பத்தியுந் தயவு மீகையும்
பங்கமின் றீட்டுநர் பாண்டி நாட்டுளோர். (சுஎ)

வேறு.

அளந்திடற் கரிய மேன்மை யகணிதச் சிறப்பு வாய்ந்து
வளந்திகழ் பாண்டி நாட்டின் வண்மைக ளெம்மாற் றேர்ந்தே
யுளந்திகழ்ந் துரைக்கப்போமோவுணர்ந்தவைசிறிதுரைத்தேம்
விளங்குதென் புதுவை நாம நகரணி விளம்ப லுற்றாம். (சுஅ)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬0அ.

# நகரச்சிறப்பு.

திங்களுந் தமமாந் தாரகா கணத்துட் டிரையெறி நதிக ளிற் சிறப்பாங், கங்கையே பூத ரங்களின் மேன்மை கதிர் விடுங் கனகமால் வரைபோற், சங்கெறி தரங்கச் சலதிசூழ் தரணி தன்னிடைப் பாண்டிநா டதிகம், புங்கவர் புகழுங் நாட் டுள நகர்க்குச் சிகரமாம் புதுவைமா நகரம். (க)

திருவினிற் கல்வி கல்வியா ராய்ந்து தெளிதலிற் சிறப்பு நல் லறிவு, குருவினி லுயர்வு தெக்ஷிணு மூர்த்தி கூறிய மனு விலஞ்செழுத்தே, தருவினிற் கற்ப தருபல சமயந் தனிற்சிவ சமயமே மேன்மை, பொருவிலா வழுதி நாட்டுள நகரி லதிக் மாம் புதுவைமா நகரம். (உ)

கொண்டல்கண் படுக்குங் குளிருமா ராமக் குயில்கிளி யோசைக டேசு, மண்டிய நீல மரகத மணியிற் குயில்கிளி யோசைபோன் மயக்கு, மண்டமீ தளாவு மாடமா ளிகைக ளணிமணி மேடையுப் பரிகை, கண்டபேர் விழியு மனத்தையுங் கவருங் கவின்பெறு புதுவைமா நகரம். (௩)

**வேறு.**

நீண்ட நாகமு மாசையுங்கிழன் மதி போலப்
பாண்டு ரக்கதிர் பரப்பிய மாளிகை பலமே
லீண்டு செம்மணிச் செங்கதிர் மேடைக ளிலங்கன்
மாண்ட வெள்ளியங் கிரிமிசை யீசனை மானும். (௪)

**வேறு.**

எண்டிசை வான மெங்கும்வெண் கதிர்க ளிலங்குமா டங்களி னடுவெட், கண்டிசை நீல மேனிலை மாட மொழுங்குறக் கவின்பெறு காட்சி, தெண்டிரை தாளஞ் சீகரம் வீசும் பாற்கட லுப்பணிற் சிறந்து, வண்டிரை துளவு மாலைமால் பள்ளி வ்ளர்தலைக் கிளர்தலை மானும். (௫)

செங்கதி ரொழுகுங் கொம்மைகள் சூழ்ந்த செம்மணி மேடையின் மீதிற், பைங்கன கத்தான் மணிக்குட நிறுவி வாயினுன் குடைப்பணியாங்குக், கொங்கிதழ் விரிந்து திகழ்ந்தசெங் கமலக் கோமளப் பொகுட்டின்மீதிற் றிருக்குந், தங்கிய முடியும் வாயுநான் குளவச் சதுமுகத் தேவையொப் பாகும்.

**வேறு.**

கலித்த கன்னலுங் கதலியுங் கமுகிலாங் கலியும்
பலித்த சூதமும் பனசமு முறையின்வான் பரத்த
லொலித்த கான்மறைப் புதுவையைத் தொழவரு மும்பர்
கலித்தி டாவழிக் காவணப் பந்தர்போற் சாரும். (எ)

புண்ணிய விரீகி கன்னல் வாகைழபைம் பூகந் தாழை
திண்ணிய தழைமி டைந்து திரல்பட வான்மேற் சேறன்
மண்ணினர் விண்ணி னோர்கள் போக்குடன் வரவுக் கேயப்
புண்ணிய பசிய சோதி மரகதப் படியைப் போலும். (அ)

மருங்குறு நாக வல்லி படர்குலை வளர்பூ கங்க
ளொருங்குறு கனிகொ டெங்கு பலவுமீ திற்றல் கண்ணுற்

ரொருங்குறுங் கணங்கொ டேவ ரும்பர்செல் லுலவு நீர
விருங்கனி புசித்து நீருண் டிலைபிள வருந்திச் செல்வார்.

பெ[illegible]கொலைச் சும்மை தாங்கிப் பேணிநீண் டளவில் கோடி
செ[illegible] நாளி கேர மேகமண் டலம்போய் நிற்ற
றரும்[illegible]ருங் கொண்மூ வுண்ணக் கைம்மாறு தாணி மின்னு
ளிருங்கரத் தமுத குமப மேந்திநின் றிடுதல் போலும். (௧0)

செண்பக வனங்கள் சூழ்ந்த திகழ்மணி மாட மெங்குஞ்
செண்பக வனங்கள் சூழ்ந்த செழும்பொய்கைத் தீர மெங்குஞ்
செண்பக வனங்கள் சூழ்ந்த தேமலாப் புறவ மெங்குஞ்
செண்பக வனங்கள் சூழ்ந்த திணிமலைச் சார லெங்கும். (௧௧)

வேறு.

அடுத்த செண்பக மலர்களு மைந்தரு மலருந்
தொடுத்த லங்கலைப் பூமினா் வான்மினா் சுடரைத்
தடுத்த மேடைக டமதிடைத் தாமிருந் தெட்டிக்
கொடுத்து மாற்றிநல் விருப்பொடு சூடுவர் குழற்கே.

வேறு.

வாவிக டோறு நீறில் வனசமா மலர்க டோறு
மோவிலா தொழிவின் றாகி யுறையுமோ திமக்கு ழாங்கள்
பாவியல் பனுவ லாய்ந்த பாவல ருள்ள நீங்கா
தாவிபோ லிருக்கும் வாணி யன்னையைப் பொருவு மாதோ.

துறைபடு வாவி நீரிற் றோப்ந்தெழு மெகினச் சேவல்
சிறைபடு மரிச னத்தைக் கண்டுளஞ் சினந்து பேடை
கறைபடு மூடல் செய்தல் கருதிநன் னீரின் மூழ்கி
முறைபடு மன்பிற் கூடி முயங்கியின் பலையின் மூழ்கும். (௧௪)

மின்னனார் மொழிக்கொப் பாக விளம்புவர் கரும்பைப் பாகைச், சொன்னயம் பெறுமோ வென்னே சோர்வென வெகுண்டு மைந்தர், கன்னலை யாலை வாயிற் கோதைவெங் கனல் வா யிட்டு, நன்னலப் பாகை யட்டு நலிவுசெய் குவர்கா டோறும். (௧௫)

மாசக விரவி தேரின் வாம்பரி பசிய மேனித்
தேசுள வென்னே யென்னிற் றிரடமை மிடைந்த காவுட்

கூசிப்பக் கதிரோன் பொற்றேர் குலவியே செல்லுந் தோறும்
பாசிலை யுரிஞ்ச லாலென் றெதிர்ந்தவர் பகர்வர் மாதோ.(கரு)

விண்படும் பரிகை மீது விண்மதி தவழும் போதிற்
புண்பட வுரிஞ்சு தோறுள் ளழுதெலாம் புரண்டு பாய்ந்தே
யொண்படு மனைகள் யாவு மொழிவற வழிந்து ழூழ்கும்
வெண்படு சுதையின் வெண்மை யன்றியிவ் வெண்மையாதே.

வேறு.

அண்ட மீதுய ரணிமதிட் கோபுர மந்நாட்
சண்ட வாயுவுஞ் சேடனுந் தங்களில் வாது
கொண்ட செய்கையான் மேருநற் புதுவையெங் கோமான்
முண்ட கச்சர ணடைந்துமுன் னிற்பது போலும். (கஅ)

வேறு.

மன்னிய செண்பக மலரு மாலையுந்
துன்னிய மாந்தர்கள் சூடி நீத்தவை
யின்னியத் தெருமனை யெங்கு மெய்தலாற்
பொன்னிய னகரெனப் பொலிந்து தோன்றுமால். (கசு)

வேறு.

நதிகொள் செஞ்சடைப் புதுவைநா யகர்நகர் வளங்கள்
துதிசெ யுந்தர மோசில பொதுப்படச் சொன்னோ
நிதியி லங்குபொன் மாடமா ளிகைக்குல நிரையாற்
றிதியி லங்கிய வீதியைச் சிறிதுரை செய்வாம். (உ0)

வேறு.

மன்னிய மரகத மாளி கைக்குலந்
பொன்னியன் மாடங்கள் பொலிந்தொ ழுங்குறச்
சந்நிதி யிருபுறஞ் சார்ந்து தோன்றுதல்
பன்னிய மாலயன் பணிதல் போலுமால். (உக)

வேறு.

மரகத மணிசெம் மணிகுயின் மேடை வழங்குபைங் கதிர்கள்செங் கதிர்கள், விரவிய விருபான் முழுவது மேவன் முடியின்மேல் வெண்பிறை தவழ்தல், பரவிய கொண்மூக் கந்தா மடைதற் பண்பொடு முயர்ந்தகோ புரங்கள், சரமச ரங்க டொழவெதிர் நின்ற தையலோர் பாகனைப் பொருவும், (உஉ)

வேறு.

சசிமணி மேடை தோறுஞ் சந்திர கிரணம் பாய்ந்து
கசிவுட னூறி முன்றி னிறைதருங் கடிகொ ணீர்மேற்
சுசிபெறு பச்சை மாட மாளிகைத் தொகுதி நல்கும்
பசியபைங் கதிர்கள் பாய்தல் படர்செழும் பாசி போலும்.

தொடுத்துயர் பளிக்கு மாடத் தூணிரை காப்ப ணிற்கப்
படுத்தபன் மணித்தூண் சோதிப் பத்திபாய்ந் தவைபாய்த்
றடுத்தகா மாதி யென்னுந் தத்துவக் குழுக்கட் கூடி [தோன்ற
யடுத்தவை தாமாய்த் தோன்று மாருயிர் வர்க்கம் போலும்.

வேறு.

மிடிக ளின்றிய மாளிகை முடிகண்மீ தாடுங்
கொடிகள் வானுல கூடுசென் றசைவுறல் கூறிற்
பொடிகொண்மேனியெம்புதுவையெம்பிரான்றனைப்போற்றி
யடிக ளைத்தொழ வமரரை யழைப்பது போலும் (உரு)

வேறு.

அணிதிகழ் பூகந் தெங்கோ டரம்பையொண் டாறு நாற்றித்
தணிவில்பூம பந்தர் தோறுந் தேன்றொடை நிரைகள் சார
மணியிலைக் கும்ப மாதி யட்டமங் கலங்கள் வைத்த
திணிதலை வாயி றோறுஞ் செந்திரு நடிக்கு மாதோ. (உசு)

தலைவியர் தலைவ ரூடித் தங்களில் வெறுத்து நீத்த
விலையில்பூண் மாலை வீதி தொறுமிடை குப்பை யாவுந்
தொலைவில்பொன் மேடை தோறுந் தேர்கையர் நானஞ்செய்ந்
மலையரு விகள்போ லோடி வாரிவா ரிதியிற் சேர்க்கும். [நீர்

வேறு.

பாவுமறை வயித்திசர் திருவிழாக் கொண்டருளும் பாட லாட, லருமறையுந் திருமுறையு மலைகடலி னொலிக்கவெழுந் தருளு மாண்புஞ், சுருதிபக ருபாயன வதுவைசோ பனம்புரி வோர் சூழு மார்ப்பு, மிரவுபகன் முழுவதுமே திருவீதி யொழிவின்றி யியங்கு மாதோ. (உஅ)

வேறு.

தாறுமஞ் சரியுந் தாங்குஞ் சினையன்றித் தளர்வோ ரில்லை
நீறுசேர் மேனி மோனர் நெஞ்சன்றி வறுமை யில்லை
யாறுபா யேரி யன்றி யரற்றுவோர் துன்பா லில்லை
வீறுசேர் கொங்கை மின்னார் விழியன்றிக் கூற்ற மில்லை. ()

விருந்திடு மறையோ ரன்றி வேண்டுநர் வினைஞ ரில்லைப்
புரிந்திடு பவங்க ளன்றிக் கெடுதலப் புரியி லில்லைப்
பரிந்திடுங் காம நோயே யன்றிநோய் பகரி லில்லை
யெரிந்திடு வினைக ளன்றி னைபவ ரெங்கு மில்லை. (கூ0)

நெறியிலார் நேச மில்லார் நெஞ்சிலெள் ளளவு மன்புக்
குறியிலார் குணங்க ளில்லார் கொள்கையொன் றில்லாரல்லார்
வெறியிலார் கூந்த லின்ப விலைமினா ரெவரை யேனு
முறியிலா தடிமை கொள்வோர் வீதியை மொழிய லுற்றாம்.

தென்றலார் சாள ரஞ்சூழ் திகழ்மணி மேடை யின்கண்
மன்றலா ரணையின் மீதி லாடவர் மருங்கில் வைகி
யென்றலார் குழைபூங் கூந்த லசையவின் னிசைகள் பாடித்
துன்றலார் நயங்கள் கேட்டு முனிவரர் சூழ்ந்து செல்வார்.

போதுகொ ளணையின் மீது பொருவிலா மணியிற் செய்த
சூதுக ளாடி யுந்தேர் சதுரங்கத் தொழில்பு ரிந்துங்
கோதுக ளகன்ற வீணை கின்னரங் கொடுபெ டித்தும்
போதுகள் போக்கி வந்தோர்பொருள்களைக்கவர் தல்செய்வார்.

பத்திரந் திகழும் பஞ்ச பாணனூற் பயனின் பான்மை
சித்திர முறவே மாடச் சுவர்த்தலத் தினிது தீட்டி
மித்திர ரோடுங் கூடி வேட்கையா நோக்கி நோக்கிச்
சத்திர விழியி னார்கள் சரசசல் லாபஞ் செய்வார். (கூச)

கடல்விழி வலையை வீசிக் காளையர் குழுவை யீர்த்து
மடலணை மீதி ருத்தி வாயித ழுருத்திக் கையா
லடன்முலை மீத ணைத்துப் பரவச மாகச் செய்தே
யுடல்பொரு ளாவி கொள்வார் விலைமின்னா ருறுதி யீதால்.

ஆடலி னானுந் தோற்று மயிலியப் பதங்க ளானும்
பாடலி னானுஞ் செந்தேன் பவளவாய் மொழியி னானுங்
கூடலி னானு மஃந்தக் கூடலைப் புதுமை செய்யு
மூடலி னானு மைந்தர் பொருள்களை யுதவச் செய்வார். (கூசு)

சேல்படு விழிகொ டன்று செப்பிள முலைகொ டன்று
மால்படு குழல்கொ டன்று மதுரவா யிதழ்கொ டன்று
பால்படு மொழியொன் றாலே புவிபர வசமாச் செய்வார்
நால்படு முடிக ளன்றோ காமுகர் முடிகள் யாவும். (கூஎ)

பங்கயம் போன்று மூரல் பழுகெழில் வதனங் காட்டிச்
செங்கையை வீசிக் காட்டித் தேன்மொழி பேசிக் காட்டிக்
கொங்கையை யசைத்துக் காட்டிக் குவலய மயங்கக் காட்டு
மங்கையர் வடிவ மானார் வஞ்சமே வடிவ மானார். (௩௮)

வேறு

எழுவானும் பொழியமக மியற்றியவிப் பிரரரசர்க் கேவ
ல் பூண்டு, தொழுவாரு மவர்கருமந் தங்கருமம் போன்முய
லுந் துணிவு ளோருஞ், செழுவானும் பூவுலகு மறம்வளரத்
திருவளர்த்தித் திதிசேர்ந் துய்யு, வுழுவாரும் * வேளாள ரவர்
குலத்தோ ரிருக்கைசிறி துரைக்க லுற்றும். (௩௯)

வேறு.

திருந்திய சமைய லோவா மடைப்பள்ளி சேர்வி ருந்து
பொருந்திட வுண்ண லோவாப் போசன சாலை நீங்கா
திருந்துசெந் தமிழ்பா ராட்டுங் கழகங்க ளெங்கு மோவா
விருந்தினர் வரவு நோக்கும் விருப்புடை யவர்க ளம்ம. (௪0)

அடியவர்க் கருளே போலுங் காமுகர்க் கரிவை போலு
மிடியவர்க் கேமம் போலும் விருந்தெதிர் கண்ட போழ்தே
பிடிநடை மனைவி யோடும் பெருங்களி யெய்தி நித்தம்
வடிசுவை யமுதை யூட்டி மிச்சிலை யருந்தி வாழ்வார். (௪௧)

வேறு.

நீரமுந் தெளிவுறு திறமுஞ் சிந்தையு
வீரமு மிரக்கமு மீகை யுந்தமிழ்ச்
சாரமு மஃதுரை தகவுஞ் சாந்தமும்
வாரமு முயிரினும் பேணி வாழ்வரால். (௪௨)

வஞ்சமு மடிமையு மயக்கு மாண்பகல்
கொஞ்சமுங் கொடுமையுங் கொலையுங் கூறிவை
நஞ்சமு நமனுமா மெனந டுக்குறு
நெஞ்சமுங் கலக்கமி னெறியும் பூண்டுளோர். (௪௩)

இரவலர் தம்மிடை யாது கேட்பினுந்
தரவலர் சிந்தையர் தமிழ்வ லோர்வரிற்
புரவல ரிவரெனப் புரியு மாண்புளோர்
இரவலர் வறுமையை மேழிச் செல்வத்தார். (௪௪)

* வேளாளரைச் சூத்திரரென்று இந்நூலாசிரியரும் பிறருங் கூறியதை வருணசிந்தாமணி மறுத்துரைப்பது காண்க.

வேறு.

*அசியுடைக் கணக்கி ளோடு மூந்திரி யளவுந் தேடிக்
கசிவுடை யன்பாற் செம்பொன் கோடியுங் கருதா தீந்து
சசிபதி திருவின் வாழ்ந்து தனதன்போ னிதிய மேய
வசியர்கள் வைகும் நீதி வீதியின் வளமு ரைப்பாம். (சரு)

திகழ்மணி மாடப் பந்தி செறிதரு தெருக்க ளென்றும்
புகழ்பெறு மாவ ணங்கள் பொலியுமவ் வாவ ணத்தி
னிகழில்பல் பொருள்க ளியாவுங் குறைவற விருந்து மல்குந்
துகளறுபொருள்கொள்வோர்தந்தொகுதியார்சொல்லவல்லார்

மலைபடு திரவி யங்கள் வனம்படு திரவி யங்க
ளலைபடு திரவி யங்க ளறைபல தீவி லுள்ள
நிலைபடு திரவி யங்க ணிறைதரு நிசியு மெல்லும்
விலைபடு திரவி யங்கண் மேவுமங் காடி கோடி. (சஎ)

பட்டுள வருக்கம் பட்டுப் பருத்தியின் வருக்க மாடை
கட்டுள வருக்கம் வங்கங் கனகத்தின் சரிகைத் தந்தா
லட்டுள வருக்க மைம்பத் தாறெண வறையுந் தேய
மட்டுள வருக்கத் தாடை வைகுமா வணம னந்தம். (சஅ)

வேறு.

அணிமணிக் குவைகளு மழுத்து நன்மணிப்
பணிமணிக் குவைகளும் பைம்பொற் குப்பையுந்
திணிபெறு மிரசதஞ் செறிந்த குப்பையுங்
கணிதமி னிறையுமா வணங்க ணக்கில. (சகூ)

பற்பல பொருள்களைப் பகலு மெல்லியும்
விற்பவர் கொள்பவர் தொகைவி ளம்பிடிற்
கற்பம லையையரன் கைப்பி டித்தநாட்
பொற்பிம யத்துறு கூட்டம் போலுமால். (ருo)

இத்திறத் தாவணத் திருந்து வாணிகர்
பொய்த்திறந் தவிர்த்துள பொருள்கள் யாவையுங்
கைத்திறத் தறமுற விற்குங் காரண
மெய்த்திறத் தானிதி விளைந்து பல்குமால். (ருக)

சாலவு மறத்தினுற் றனங்க டேடியே
யாலய மண்டப மதிதி யோர்களுண்

---

* வைசியர் - எதுகைநோக்கி வசியரென்றுயிற்று.

சாலைகள் சோலைக டாமி யற்றியே
வேலைசூழ் புவிபுகழ் விளங்க வாழ்வரால். (ருஉ)

நதிபுனை புதுவைநா யகர்க்கு நாடொறும்
விதியபி டேகவி வேத னம்புரி
துதிதிர வியர்தினஞ் சோர்வி லீதலான்
மதிநிதி பதியென வைசியர் வாழ்வரால். (ருங)

நீதியு நேசமு நெறியு நீடிய
பூதியும் பொறுமையும் புகழுஞ் சற்குணத்
தாதியு மிவையுடை யரசர் வைகிய
வீதியுஞ் செய்கையும் விளம்பு வாமரோ. (ருச)

சுற்றிய சூரையிற் சுழலு நெஞ்சினைப்
பெற்றியன் ஞானத்திற் பிணிக்கு மன்பர்போல்
வெற்றிய மானத வேக மாக்களைப்
பற்றுபு பிணிக்குமந் துரைகள் பற்பல. (ருரு)

மும்மதம் பொழிதர முழங்கிச் சாலையுட்
கைம்மலை நிரைகளாய்க் கடிகொள் காட்சிகள்
பொய்ம்மலை வகற்றிய புந்தி மாறன்முன்
பெய்ம்முகி லனைத்தையும் பிணித்தல் போலுமால். ()

பல்படை பலபயில் கூடம் பற்பல
கலைபயில் குமரர்கள் கழகம் பற்பல
சலமினன் மகப்புரி சாலை பற்பல
நிலையுடை யசலத்தேர் நிரைகள் பற்பல. (ருஎ)

சித்திர நவமணித் தெற்றி பற்பல
மித்திர னொளிதிகழ் மேடை பற்பல
பத்திரச் செம்பொனுப் பரிகை பற்பல
சத்திர மடையடு சாலை பற்பல. (ருஅ)

ஆடகக் கொடியனார் நடன மாடுறு
நாடக சாலைக ணண்ணி லெண்ணில
பாடகக் காலினார் பந்தொ டம்மனை
மாடக யாழ்பயின் மாடம் பற்பல. ருகூ

வேறு.

பண்ணுடைப் பரிகண் மேற்கொண் டரசிளங் குமரர் பாவு
மண்ணிடைத் தோய்ந்துந் தோயா வண்குரந் துகளு ருமல்

விண்ணிடைத் தாவி மேக மண்டலம் வாவி மீட்டு
மெண்ணுடை நடனத் தைந்து கதியையு மியற்று விப்பார்.

முறிபடு சயிலங் தாரு மூரண்மருப் புடைத்தாய்ச் செந்தீப்
பொறிபடு கடைக்கண் டானம் பொங்குதந் தாவ ளங்கள்
குறியவங் குசத்தாற் பாகர் குறிப்பினு ணடக்குஞ் செய்கை
பிறிவினுண் ணறிவுக் குள்ளா மாணவப் பெற்றி போலும்.

பவனமு மனமுந் தோற்றுச் சுழல்படு பான்மை நல்குங்
கவனவாம் பரிகள் பூண்ட கதிர்மணித் திண்டே ரூர்ந்து
சிவநவ சித்தர் தேகஞ் செலல்போற் றிசைகள் செல்ல
யவனபூ பால பால ரியல்வுறப் பயிற்சி செய்வார். (௯௨)

வேறு.

வீமனும் விசயனு மெலியும் வீரத்தார்
பூமனுங் காமனும் பொருவில் பொற்பினார்
காமனும் விருப்புறு விபவக் காட்சியார்
நாமனும் புதுவைமா நகரின் வேந்தரே. (௯௩)

கண்டொடு சருக்கரை கலந்த பாலனை
முண்டிடச் சாரிகை கிள்ளைக் கூட்டியே
பண்டரு மிசைமொழி பயில்வித் தம்மொழி
கொண்டுள மகிழுவர் கொம்ப னார்களே. (௯௪)

ஊடிய மாதர்பா லுற்ற மைந்தர்கள்
கூடிய செம்பஞ்சுக் குழம்புக் கால்பட
நீடிய தோளொடு சென்னி நெஞ்சினிற்
சூடிய கலனெனச் சோக நீங்குவார். (௯௫)

வரம்பெறு மேழுவகைத் தோற்ற மாரியாற்
றிரம்பெற முகில்வளஞ் செயும கங்களாற்
றரம்பெறு மகஞ்செயல் சாற்றும் வேதத்தா
லுரம்பெறு மம்மறை யுறையு ளந்தணர். (௯௬)

அந்தண ரேபுவிக் காதி காரண
ரந்தண ரருமறை வடிவ மாயினோ
ரந்தணர் மூர்த்திய தெய்வ மாகுமவ்
வந்தணர் தெருச்சிறி தறைய லுற்றனம். (௯௭)

யாகசா லைகடொகைக் கெண்ணி லாதன
மேகசா லைகளென மிடையு மென்புகைப்

பாகசா லைகள்பல பகர்கி வேதனம்
போகசா லைகள்பல பொருவி லாதன. (சுஅ)

வேறு.

கதிர்விடு மணியின் மாடங் கனகமா ளிகைவெண் சோதி
மதிமணி மனைக ணீல மாமணி நிலைய மின்னும்
புதியவாட் பதும ராகம் புனைகிரு கங்க டோறும்
விதிவழி யோமச் செந்தீ வேட்டிடா வகமு மின்றே. (சுகூ)

வேறு.

தருக்கநூன் முறைவழிச் சாதிப் போர்சிலர்
சுருக்கமார் சொற்பொருள் சோதிப் போர்சிலர்
வருக்கநால் விதத்தினால் வாதிப் போர்சிலர்
பெருக்கமார் புறமதம் பேதிப் போர்சிலர். (எ0)

வேறு.

தொடையல்சந் தனந்தாம் பூல மாதர்தா யெனத்து றந்தே
யுடையர்முன் னில்லார் போலு முயர்குரு வடிவ ணங்கி
யடையவே தாக மங்கள் பயிலுவோ ரளப்பி லாமன்
மிடைதரு பிரம சாரி விரதத்தோர் வீதி யெங்கும். (எக)

உதிக்குமுன் கடிகையைந்திற் றுயிலெழுந் துரைக்கும் வேதம்
விதிக்குமுன் னறுவ கைத்தா விதிவழி சிவனைப் போற்றிப்
பதிக்குமுன் னிற்க வொல்குங் கற்புடைப் பாவை யோட
திதிக்குமுன் னூட்டி யுண்ணுங் கிருகத்தர் திறமீ தாமால், ()

சுத்தமார் துறவு கூடக் கிருகத்த நிலைது றந்து
சித்தசுத் திகட்கா வாறு சுவையுடன் சீதம் வெப்ப
மொத்துற வபக்கு வான்ன முண்டித மகித மற்றப்
பித்தர்போற் றிரியும் வானப் பிரத்தர்க ளெண்ணி லாதார். ()

இவ்வயி ராக்கி யத்தா லிதமகி தாதி மாறிச்
செவ்வையே தோன்றி நின்ற தெரிசன மெய்ஞ்ஞா னத்தாற்
கவ்வையா னெனதா மூறிக் கறையழிந் திடவா னந்தப்
பௌவமே லிடவாழ் சந்நி யாசியர் பகரிற் பல்லோர். (எச)

நாதமூர் பிரண வத்தின் பயனைய னவில வொண்ணு
தேதமாச் செவ்வேள் கையாற் குட்டுண்டா னெனநகைப்பார்
வேதவே தாந்த சைவ சித்தாந்த விரிவை யாய்ந்த
போதமெய்ஞ் ஞான நீதர் புதுவைவே தியர்க ளம்ம. (எரு)

அஞ்செழுத் துளத்தில் வைத்தே யலகிடு மன்பர் சில்லோ
ரஞ்செழுத் துளத்தில் வைத்தே யணிமெழுக் கிடுவர் சில்லோ
ரஞ்செழுத் துளத்தில் வைத்தே யருள்விளக் கிடுவர் சில்லோ
ரஞ்செழுத்துளத்தில்வைத்தேயலர்த்தொடை புனைவர்சில்லோர்.

பத்தியாற் சிவபு ராணம் படித்துள மகிழ்வர் சில்லோர்
புத்தியாற் காதை கேட்டுப் புகழ்ந்துள மகிழ்வர் சில்லோர்
சுத்தியா மன்பர் பூசை சிவபூசைத் தொழிலர் சில்லோர்
முத்தியார் கால மாறுந் தொழுமுனி வரர்கள் சில்லோர். ()

வேறு.

கருப்பணி பிறவிப் பெருங்கடல் கடக்கக் கண்ணுதல் கழல்கருத் திருத்தித், திருப்பணி கருப்பக் கிருகவி மானந் திணி கொடட் டோடுமண் டபங்கள், பெருப்பணிக் கதவங் கொடி மரந் திருத்தேர் பிறங்குபூண் டிருப்பரி வட்டம், விருப்பணி மிகவும் புரிந்தமைத் தின்ப மேவிட வாழ்வர்சின் மேலோர்.

வேறு.

முந்திய பவத்திற் செய்த புண்ணிய முதிர்ச்சி யாலே
சந்ததந் தாழுந் தோறு மாலயஞ் சாருந் தோறுஞ்
சிந்தையுண் ணினையுந்தோறுஞ்சென்னியால்வணங்குந்தோறும்
புந்தியு ளன்பு பொங்கி யின்பமே புசிப்பர் சில்லோர்." (எகூ)

கோத்திரந் தனுவாக் கொண்டோர் கோவிலிற் சாருந்தோறுந்
தோத்திரம் புரியுந் தோறுந் தொழுந்தொறுங் காணுந் தோறு
நேத்திரஞ் சொரிநீ ரோட நினைவுண்மெய் யன்பு நீடக்
காத்திரம் புளக மோங்கக் களிநடம் புரிவர் சில்லோர். (அ0)

வேறு.

விருத்திக ளைவையுங் கருவிசெய் தொழிலாம் வேற்றுமை யுணர்ந்தறிந் துளத்தைத், திருத்திய வுடனே தோன்று மெய்ஞ் ஞான தெரிசனந் திரம்பெற நின்றே, யருத்தியின் முன்னை விருத்திக டம்மை யணுகிடா வகைசெய்து சோற்றுத், துருத்தியை நீங்கி யருள்வடி வாகி யின்பமே விடச்சிலர் சுகிப்பார். (அக)

வாசவ னெமோன் மலரயன் வாழ்வை மதித்தொரு பொருளெனக் கொள்ளார், நேசவன் படியார்க் கடிமைபூண் டொழுகி நித்திய நியமமாப் புரிவர், தேசவிர் பொன்னு மோடு

மொப் பாகச் சிந்தைசெய் திருவருட் செல்வ, ராசையே யொ
ழிக்கு மாசையே யல்லான் மற்றுவே றாசைக ளில்லார். (அஉ)

வேறு.

சொல்லிய மறையு மோதுந் திருமுறைத் தொண்ட ரார்ப்பும்
பல்லியக் கருவி யூதும் பகர்துளைக் கருவி யீட்ட
மெல்லிய ராடல் பாடல் வீணைதம் புருவி ராக
மெல்லியும் பகலு மென்று மிடையறா விறைவன் கோயில்.

வேறு.

மாதர்க ளுடலுயிர் பிரிக்கும் வன்சமன்
றூதர்க ளிவரெனத் துறந்து மெய்த்தவப்
போதர்க ளேவலைப் பூண்ட பத்திசேர்
நீதர்க ளீசர்மே னேச ரெண்ணிலார். (அச)

அழுக்குறு செய்பினிற் களிம்ப கற்றியே
விழுக்குளிர் பொன்செயும் விதத்தி னுரெண
வழுக்குறு வோர்மலம் வாட்டி யன்பர்தங்
குழுக்குறச் செயுமருட் குரவ ரெண்ணிலார். (அரு)

வேறு.

துன்னிய மலர்கள் சொரிந்திடு நறவந் துய்த்தளி மொய்த்திசை பயிலும், வன்னியந் தருகன் னிழற்சிவ காம வல்லியோ டினிதுவீற் றிருந்தே, யன்னிய மின்றிச் சிற்சடந் தோறு மகிலபூ ரணவடி வாகி, மன்னிய புதுவை வயித்திய நாதர் வதிந்திடத் தவம்புரிந் ததுவால். (அசு)

வேறு.

இவ்வகை நகரின் கண்ணே யிருந்துளோ ரெவரு மென்று
மெய்வகை யறம்பு ரிந்து புண்ணியம் புகழ்கள் மேவி
யைவகைப் புலன்க ளின்ப மிச்சையா றறப்பு சித்துஞ்
சைவநன் னெறிசேர்ந் தீசர் சரணமே சாரு நீரார். (அஎ)

வேறு.

பகர்பெறு மறைநடேறுப் பசுபதி பரிந்து வைகும்
புகாறு தலத்தின் மேலாம் புனிதமார் புதுவை யென்னு
நகர்வள முழுது மெம்மா னவின்றிடற் பாற்றோ நாளு
நிகரறு நைமி சச்சீர் தெரிந்தவா நிகழ்த்து வோமால். (அஅ)

## நகரச் சிறப்பு முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கககூ.

# நைமிசாரணியச்சிறப்பு.

கண்டவர் விழியுங் கருத்தையுங் கவருங் காட்சியாற் சார்ந்துளோர் வினைகள், விண்டொழிந் தரிய கருணையும் பொறையுந் தவங்களும் விளைதலாற் றருக்க, ணெண்டிசா முகமு மண்டகோ ளகையுங் குறைவற நிறைந்திசை தனினு, லண்டர்கா முறலா லரனடி நீழ லனையது நைமிசா ரணியம். (க)

இருந்தவம் புரிந்தோ ரடையுமே துவினு வினையவ ரிந்திர னயன்மா, றிருந்திய வசிக்காத் தினமுமே வுதலாற் சிவஞ் சத்தி வீற்றிருப் பதனுற், பொருந்திய வெவரு மன்புசே ரின்பம் புசித்தலா லுளமது நீங்கா, வருந்தவர் நேயத் திருக்கயிலாய மனையது நைமிசா ரணியம். (உ)

பறவையும் விலங்குந் தத்தமி லுள்ள பகைதவிர்த் தன்புடன் மேவி, யிறைவனை வழிபா டியற்றியின் புறலா லிருந்தவர் விரும்புமவ் வனத்திற், றுறவுசேர் முனிவ ரன்பறி வளந்து சொல்லுதற் கெளியவோ மற்று, முறையிவை வனத்தின் மகிமையீ தென்று மொழிந்திடும் பாலதோ மொழியீர். (௩)

புராணவரலாறு.

இப்பெருந் தகைமை நைமிசா ரணியச் சவுனக விருடியரோர்நாட், செப்பருங் கேத சேதனை நீதச் சூதனை யருச்சனை செய்தே, யொப்பிலா வுலகி லுயிரெலா மோம்ப வுதகமுதவுமொண் முகில்போ, லெய்ப்பிலெம் வாட்ட மகலநின் வசனத் திசையருள் பொழியெழிற் புயலே. (ச)

அகத்துறு துய்மை யன்புளோ ரகற்று மாறுபோ லியனே யுன்றன், முகத்துறு மீசர் காதைகள் பலவு மொழிந்தனை கேட்டுள மகிழ்ந்தேஞ், செகத்துள வசத்தர் செலச்செய லற்றோர் தெரிசனம் போற்சிவ தலத்தின், மகத்துவங் கேட்க விகத்திலே முத்தி வழங்குமோர் தலம்வழங் கென்ன. (ரு)

வேறு.

அம்மொழி கேட்டுச் சூத னகத்துண்மெய் யன்பு பொங்க
மெய்ம்மயிர்ப் புளக மோங்க விழிகணீ ரருவி சோரக்
கைம்மல ருச்சி யேறக் கரையழி களிப்பி னூடுந்
தன்னையு மறந்தா னந்தத் தனிப்பெரு வடிவ மாகி. (சு)

எழுந்துதென் றிசையை நோக்கி யின்புற நிலத்திற்றாழ்ந்து
விழுந்துதென் புதுவை யீசர் விமலையை யுளத்தி ருத்தி
யழுந்துற நினையுந் தோறு மன்புற வாடிப் பாடிச்
செழுந்தனிப் புலித்தோன் மீது சிறப்புட னினிதி ருந்து. (௭)

குருடிய லாண வத்தின் குணமுமா யுணர்வை முற்றுந்
திருடிய கொடிய காம நீத்துயர் சிவன்பொற் றாளை
வருடிய சிந்தை பெற்று வாழ்வுறு சவுன காதி
யிருடியர் வதனை நோக்கி யின்னன வியம்ப லுற்றான். (௮)

மதுவைய மலர்மென் கூந்தற் சிவகாம வல்லி பாதி
விதுவையஞ் சடையில் வைத்த வயித்திய நாதர் மேய
புதுவையம் பதிதன் னாமம் புகலகத் தீச்சு ரந்தா
னதுவையா நினையுந் தோறு மானந்த மெமக்கா மன்றே. (௯)

அத்தல மகிமை கேட்டோர்க் காயுவுந் திருவு மூண்டா
மத்தல மகிமை கேட்டோர்க் கரியசந் ததிக ளுண்டா
மத்தல மகிமை கேட்டோர் முத்தியு மடைந்து வாழ்வ
ரத்தல மகிமை யாசா னறைந்த வாற றைய லுற்றாம் (௧௦)

சுரர்களுஞ் சுரர்கள் கோவுந் துகளறு முனிக்கு ழாமு
நரகரந் நான்மு கத்தோ னவிலுமெண் டிசையி லுள்ளோ
ரரகர வென்று போற்றி யனுதின மகலா மேன்மை
வரகரு ணாக ரன்வாழ் கயிலைமால் வரையின் மாதோ. (௧௧)

உலகெலா நடுந டுங்க வுததியி னுற்ப வித்த
வலகிலா விடம யின்றே யகிலமும் புரந்த வண்ண
றிலகவா ணுதலி யோடுஞ் சிங்கவா தனத்தி ருந்து
கலைபயி னந்தி வேண்டக் கருணைசெய் சிவபு ராணம். (௧௨)

நாதனூ லுணர்ந்து நந்தி சனற்குமா ரனுக்கு நல்க
வாதர வோடு மன்னோன் வியாதனுக் கருள லோடும்
வேதவி யாத னென்பால் விருப்புறு கருணை கூர்ந்தே
யோதிய புராண மூவா றவைகளு ளுண்மை யாய. (௧௩)

பிரமகை வர்த்த மென்றோர் பெருஞ்சிவ காதை யாமா
லுரைதரு மதனுண் மேலா முயர்சிவ விபவ காண்டம்
பரமரு ளதனு ளுண்மைப் புதுவையம் பதியின் மேன்மை
திரமுடன் கேட்போர்க் கிட்ட சித்திகண் முத்தி நல்கும். ()

கோதக னீவிர் கேட்ட கொள்கைபோற் குறிப்புள் வைத்து
மாதவ னனைய மேன்மை மாபல சேனன் கேட்ப
வாதர நார தன்று னறைந்தன னிப்பு ராண
மேதமி லவ்வா றாக வியம்புவன் கேண்மி னென்று. (கரு)

சேண்டகு தலத்தின் மாண்புந் தீர்த்தநீள் சிறப்பு மூர்த்தி
காண்டகு சிறப்பு மாதிக் கதிரவன் பூசைச் சால்பு
மாண்டகு வழிபா டாற்றித் துருவாசன் மகிழ்ந்த பண்பு
மீண்டவன் சாந்த மூற்று மெய்ஞ்ஞான மடைந்த பேறும்.

மன்னிய மார்த்தி யந்தன் வரம்பெறு தியான காட்டன்
சென்னியால் வணங்கிப் பூசை செய்தது மங்கு வைகித்
துன்னிய வன்றோ ரண்ண றுண்டவுந் தொழுத பேறு
முன்னிய பிரமன் போற்றிச் சிருட்டியை முயன்ற வாறும்.

அக்கினி சன்மன் மாது மங்கல வணியைப் பெற்ற
தக்கதன் மையுமோர் பாச தான்முத்தி பெற்ற பண்பு
மிக்கவெண் குட்டந் தேவ மித்திரன் றவிர்ந்த வாறு
மிக்கதை யகத்தி யன்கேட் டிருந்தவம் புரிந்த வாறும். (கஅ)

அறிவுற மீண்டும் பூசித் தகத்தியன் சிறந்த வாறும்
பறைதரு பூச கர்க்குப் படிக்காசு வைத்த வாறுந்
திறமொடக் காசு வாசி தீர்த்தருள் செய்த வாறுங்
குறைவில்சந் திரனை யுற்ற கொடுஞ்சயந் தீர்த்த வாறும். (கக)

ஆழுக மறையோ னுன வாறும தகன்ற வாறுங்
காமுறு மிளகு மீடப் பயறெனக் கண்ட வாறுஞ்
சேமமார் பயறு மீண்டு மிளகெனச் செய்த வாறும்
பூமலி மண்ணின் கும்பம் பொற்குட மான வாறும். (உ0)

தாணுவுக் கன்பில் வாணன் றலைதகர்ந் ததுவுங் கோயில்
காணொணு தென்ற தாதன் கண்ணினைப் பறித்த வாறும்
வாணிப வணிகன் றன்பான் மடிப்பையை வழங்கு மாறும்
பூணுலாங் கொங்கை யார்க்குப் பொற்குவை யளித்த வாறும்.

உலைவுறு வலைபற் குக்கண் ணுதவிய வாறு மென்னு
நிலையுறு மூவெண் காதை நிகழுநா ரதன் பாற்கேட்டுச்
சிலைபயில் பிரகச் சேனற் கன்புறச் செப்ப வன்றோன்
றொலைவிலா வின்ப முத்தி யடைந்ததுந் தொன்மை யாக.

தகைபெறு புதுவை யீசர் சரிதமா மகிமை யாவுந்
தொகைபெற விளம்பச் சூதன் சவுனகர் மகிழ்ந்து சொல்வார்
வகைபெறக் கேட்குங் காத லுற்றனம் வழுத்து கென்ன
நகைமுக மலர்ந்து சூத னன்குற நவில லுற்றான். (உ௩)

நைமிசாரணியச்சிறப்பு முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் உ௧௪.

# தலவிசேட அத்தியாயம்.

அஞ்சலி புரிந்து சூத னடியிணை பரவி யென்றுந்
துஞ்சலி லாத போதச் சௌனகர் துதித்துக் கேட்ப
நெஞ்சக மன்பு பொங்க நிருமலன் றலவி சேடம்
வஞ்சக மகன்ற சூதன் வந்தவா றுரைக்க லுற்றான். (௧)

பைத்தலத் தரவின் மேவும் பள்ளியான் பணிந்து போற்று
மெய்த்தலம் புதுவை நாளும் விண்ணவர் பணியுந் தானங்
கைத்தலத் திசைந்த நெல்லிக் கனியெனக் கதிக ணல்கும்
பொய்த்தலத் தாசை யற்றோர் புகழ்மட வார்வ ளாகம். (உ)

முதுமைசேர் விருத்தர் பாலர் மிடியுளோர் முழுநோ யாளர்
பதுமைசேர் பதியின் மேவப் புரிபெரும் பாவ நீங்கிக்
கதுமென வேட்கு மிட்ட காமிய மெளிதா நல்கும்
புதுமையை விளைத்த லானும் புதுவையென் றியம்ப லாமே.

தெரியுமைம் புலன்க டம்மி னயனமே சிறந்த தாகு
முரியவித் தேகந் தன்னி லுத்தமாங் கம்வி சேடம்
பிரிவினற் கருவிக் கெல்லா பான்மாவே பேசின்மேலாம்
பரிவுண பதிக டம்மிற் புதுவையே யதிகம் பார்மேல். (௪)

இரவியுஞ் சசியுந் தங்க ளிருங்கதி ருலக மெங்கும்
விரவினு முண்மை தத்தங் கல்வினில் விளக்கு மாபோ
னிரல்படு முலக மெங்கு நிறைதரு மிறைவன் றன்னைக்
காவகல் புதுவை தன்னில் விளக்குவன் காண லாமே. (௫)

வேறு.

இந்திர னிமையவ ரிறைஞ்சு நான்முகன்
சந்திர சூரியர் தவந்த கத்தி யன்

மூர்த்தன்மா நடந்தொழு முனிவ ரேத்தலா
லெந்தையார் பதிநல மிபம்பற் பாலதோ. (௬)

வேறு.

சருவாதி காரனிட மயன்பணிந்து சிருட்டிபெறுந் தன்
மை யானுந், துருவாசர் குறுமுனிவர் தவப்புரிந்து மேன்மை
பெறு தொன்மை யானு, மொருவாதங் குறைந்தோர்க ளெவரு
மின்ப வீடுபெறு முண்மை யானு, நிருவாணக் கடவுளுறை பு
துவையே கயிலையென நிகழ்த்த லாமே. (௭)

வேறு.

புண்ணிய நதிக டோறும் புகுந்துநீ ராடும் பேறும்
புண்ணிய தலங்க டோறும் போய்த்தரி சனஞ்செய் பேறும்
புண்ணிய வசலந் தோறும் பரவிமேற் போற்றும் பேறும் [வால்.
புண்ணியப் புதுவை யோர்நாட் பெற்றிருந்தோர் பேறெவ்வா

மன்னருள் புதுவை யாரும் வயித்தீசன் பேரா னந்தம்
பின்னுமுப் பதியின் வைகு முயிரெலாம் பெருங்க ணங்க
ணன்னயந் தருமிவ் வார்த்தை நம்பினோர் பெறுவர் வீடா
மின்னது பொய்யென் றோர்க ணரகிடை யெய்து வாரே. (௯)

பண்ணிய தவங்க ளாலப் பதியினுற் பவிப்பர் பின்னு
நண்ணிய தவங்க ளந்தப் பதிவாச நல்கு மன்னோர்
புண்ணியஞ்செய்தலொன்று கோடியாப்பொருந்துநெஞ்சத்
தெண்ணிலார் தீமை யென்று மிவரிடத் தெய்தி டாதே. (௧௦)

வேறு.

திலக மென்னுதற் றேவியுஞ் சிவனும்வீற் றிருந்தே
யிலகு மிப்பதி யிசைந்திடு மருந்தவர்க் கினிய
வலகில் புண்ணிய மன்னமோர் கவளம தளித்தா
லுலகி லுள்ளபல் லுயிர்களும் புசித்தன வொப்பாம். (௧௧)

வேறு.

அறைதரும் வேறி டத்தி லச்சுவ மேத யாக
நிறைதரப் புரிந்தே வர்க்கு மவிதர நிகழ்ந்த பேறு
மறைபகர் புதுவை தன்னுள் வைகுந ரியாவ ரேனுங்
குறைவில்விப்பிரனுக்கோர்நாட் கொடுத்திடுமுண்டிபோலும்.

வேறொரு தலத்திற் செய்த விப்பிர கத்தி செம்பொன்
மாறுசெய் களவு காம மத்திய பானஞ் செய்தல்

கூறிய குருவி னிங்கை கொடியனை வம் பாத கங்க
டேறுநற் புதுவை தன்னிற் சேர்ந்திடத் தீரு மன்றே. (௧௩)

சருகுநீர் வாயுக் கொண்டு தண்பனி வெயில்கா றள்ளிப்
பெருகுறு புலனொ டுக்கி மானதம் பேணித் தேக
மருகுற வேறி டத்தி லருந்தவம் பண்ணு வாற்ற
லுருகுமிப் பதியி லோர்நாட் சிவநிசி னோன்பொவ் வாதால்.

எப்பதி யதனி லேனுந் துறவறத் திசைந்து ளோர்க
ளொப்பிலிப் பதியில் வைகு மில்லறத் தவரை யொவ்வார்
செப்புமிப் பதியின் மேவுந் திறமுடைத் துறவி னோரைத்
துப்புறழ் செய்ய மேனிச் சிவனெனச் சொல்ல லாமே. ()

பழிதொழி லுடைய ரேனும் பகரிழி குலத்த ரேனும்
விழிசெவி வாயி னூய வியன்குண மற்று ரேனுங்
கழிதுயர் வஞ்ச நோய்பேய் கடிமிடி மடிய ரேனு
பழிவிலிப் பழியைச் சார்ந்தா ரத்துய ரகன்று வாழ்வார். (௧௬)

வளர்த்திடு மறிவி னானும் வழிச்செலுஞ் சளர்வி னானுந்
துளக்கிடு மழையி னானும் விலைமின்னார் தொடர்ச்சி யானுஞ்
சளக்கிடு கூத்தி னானுஞ் சாற்றுமற் றெவற்றி னானு
மளப்பிலிப் பதியி லோர்நாட் டங்கினு மடைவர் முத்தி. (௧௭)

வேறு.

பொற்புதவு தலமகிமை யிவ்வாறு சூதமுனி புகலக்கேட்டே, யற்புதமா முனிவரர்க ளன்புபொங்கி யின்பநலத் தாழ்ந்து மூழ்கிப், பற்பலவாந் துயர்கடிந்தோந் தீர்த்தநலங் கருணையுடன் பகர்வா யென்னச், சொற்பாவு கலைகளுணர் நீதமுறு சூதமுனி சொல்ல லுற்றான். (௧௮)

## தலவிசேட அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௯௨.

---

### தலவிசேட அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் தமது பாதங்களைக் கும்பிட்டுத் துதித்த அறிவான் மிக்க சௌனகாதி முனிவர் கேட்கப் புதுவைத் தலவிசேட மான்மியத்தைச் சொல்லத் தொடங்கினர். விஷ்ணு மூர்த்தியுந்

தேவர்களும் கிராஸையுடைய முனிவர்களும் வணங்க உள்ளங்கை நெல்லிக்கனிபோல மோக்ஷத்தை யளிக்குந் தானம் மடவார் வளாகமாம். விருத்தர் பாலர் தரித்திரர் வியாதியாளர் தன்னிடத்தில் வந்தால் அவர்கள் செய்த பாவத்தை நீக்கி இட்ட சித்திகளை இலேசாகக் கொடுக்கும் புதுமையை விளைத்தலால் அந்தத்தலம் புதுவையென்னும் நாமம்பெறும். அன்றியும் அது எல்லாத் தலங்களிலு முயர்ந்தது. சூரியசந்திரர்களெங்கும் வியாபகராயிருந்தாலும் அவர்கள் தங்கள் தங்கள் மலையிலே முக்கியமாக வாசஞ்செய்தல் போலச் சிவபிரானெங்கும் வியாபகராயிருந்தாலும் அப்புதுவைத் தலத்திலே விசேடமாக வெழுந்தருளியிருப்பர். பிரமன் இந்திரன் தேவர்கள் சூரியன் சந்திரன் துருவாசர் அகத்தியர் முதலியோரும் பூசித்தலானுந் தன்னிடத்தில் வாசஞ்செய்தவரெவர்க்கு மோக்ஷத்தைத் தருதலானுங் கயிலாசத்துக்குச் சமமாகும் புதுவைத்தலத்தில் ஒருநாள்வசித்தவர் பெறும்பயனுக்கு எல்லாநதிகளிலுந் தீர்த்தமாடியபயனும் எல்லாத்தலங்களிலும் போய்த் தரிசித்தவர் பெறும்பேறும் நிகராகமாட்டா.

அந்தத்தலத்திலே வசித்தவர்களெல்லாருஞ் சிவகணங்களே. இந்த வார்த்தையை நம்பினோர் மோக்ஷவீட்டை யடைவர். நம்பாதவர் நரகத்தையடைவர். புண்ணியவசத்தாலேதான் அந்தத்தலத்திலே பிறப்பதும் வசிப்பதுங் கிடைக்கும். அதிலே செய்தபுண்ணியம் ஒன்று கோடியாகப் பெருகும். வேறு தீமைகள் அங்கே வசிப்பவர்களுக்குக் கிடையாது. அந்தத் தலத்திலே வந்த தவசிகளுக்கு ஒரு கவளமன்னங்கொடுத்தால் எண்ணில்லாத புண்ணியமுண்டாகும். வேறு தலங்களில் அசுவமேதஞ் செய்த புண்ணியம், அந்தத் தலத்திலே ஒரு பிராமணருக்கு ஒருநாட்கொடுத்த அன்னதானத்தாலே கிடைக்கும். அன்னிய தலத்திலே பஞ்சபாதகங்களைச்செய்தவர் புதுவைத் தலத்தை யடைந்தாராகில் அவைகள் உடனே நீங்கப்பெறுவர். சருகு, நீர், வாயுவைப்புசித்து பனி வெயில்களால் வருந்தி வேறு தலத்திலே பலநாளுஞ் செய்யுந்தவம் புதுவையிலே செய்யும் ஒரு சிவநிசி விரதத்துக்கு நிகராகாது. பிறதலத்திலே துறவறமூற்றிருந்தோர் அந்தத் தலத்திலிருக்கிற இல்லறத்தோரை யொப்பாகார். அந்தத் தலத்திலே வசிக்குந் துறவறத்தோரைச் சிவபிரானாகவே சொல்லல்வேண்டும். இழிகுலத்தினரேனும் இழிதொழிலினரேனும் கூன், குருடு முதலிய அங்கவீனரேனும், நோய், பேய் பிடிக்கப்பட்டவரேனும்; வழிநடைத்தளர்ச்சியாலாவது மழையினு

லாவது பாத்தைய ராக்ஷசயினுலாவது இன்னும் எந்தக் காரணத்தி னுலாவது வந்தவரேனும் புதவைத்தலத்திலே ஒருநாள் தங்கியிருந் தால் முத்தியடைவாரென்று சொல்லக்கேட்டு அற்புதமெய்திச் சௌனகாதி முனிவரர் அன்பு மிகுதியாக இன்பத்திலே யழுந்திச் சூதமுனிவரை வணங்கி இனி அத்தலத்திலே தீர்த்தவிசேடத்தை யருளிச்செய்யவேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்வாராயி னர்.

## தீர்த்தவிசேட அத்தியாயம்.

நாதனுர் கருணை கூர்ந்து சந்நிதி வடகீழ் ஞாங்க
ரோதமி திருக்கண் சாத்தெழுந்துபா தாள கங்கை
யோதநீ ரென்னப் பொங்கி யோங்கிடக் கரத்தாற் பேணி
யாதரம் பெருகு தீர்த்த மதுசிவ கங்கை யாமால். (க)

வேறு.

விண்டமல ரயனோர்நாள் விமலனடி பூசிக்கக்
குண்டிகையிற் பவித்திரநீர் கொள்கைபெற வதிற்பெய்து
தண்டுறைதா மரைசிறந்த சிவகங்கை தனின்மூழ்கித்
தெண்டிரையார்த் தெழும்பிரம தீர்த்தமெனப் பேரீந்தான்.

வேறு.

நிலைசி றந்திடுங் குறுமுனி திருமலர் பணியக்
கலைசி றந்திடுங் கமண்டல நீரதிற் கலந்து
தலைசி றந்திடுஞ் சிவகங்கைத் தடத்தினுண் மூழ்கி
யலைசி றந்திடு மகத்திய தீர்த்தமென் றறைந்தான். (௩)

வேறு.

தெளிதரு மாத்தி யந்தன் றிகழ்தரு தியான காட்டன்
களிதரு பதியில் வந்து கண்ணுதல் பாதம் போற்றி
யொளிருமின் முடியி லாட்ட வொருவரு மூழ்காத் தீர்த்தம்
வெளிபடத் தருதி வேறு வெமக்கென வேண்டிக் கூற. (௪)

அண்ணலுங் கருணை கூர்ந்தே யசரீரி வாக்க தாகப்
புண்ணிய விடைக்க டுத்த வடக்கினிற் பொருவி றண்டா
ணண்ணிநீர் தொட்ட போழ்தி னல்குமோர் தீர்த்தமென்றான்
பண்ணவர் கேட்டு நெஞ்சம் பரிவினற் புதமெய்தி. (௫)

அத்திறந் தொட்ட போழ்தி லானந்தத் தீர்த்த மோங்கி
மூத்திற மலங்க ணீங்க மூண்டெழு மின்பம போல
வெத்திறத் தெவரும் போற்ற வெழீஇமே பம தீர்த்த மென்னக்
குத்திர மகற்று மின்ப கூபமா நிறைந்த தன்றே. (௬)

கண்டனர் தீர்த்த மேன்மை முனிவரர் கருத்தி லின்பங்
கொண்டனர் நாதன் கீர்த்தி கூறினர் திருமு னின்று
விண்டன ரங்கீ ராட்டி விமலனை யருச்சித் தின்ப
'மூண்டன ரடியிற் றாழ்ந்தே யொருமொழி பகர லுற்றார். (௭)

வேறு.

சந்நிதியா லைந்தொழிலுந் தனிநடத்துந் தற்பரனே
யின்னலற் திகழ்தீர்த்த மின்பவடி வதனுனுஞ்
சின்னமகல் சிவகங்கை திகழ்ஞான வடிவானு
'மன்னியவி விரண்டையுமொன் றும்படியா வருள்புரிந்து. (௮)

அருத்தியுடன் சிவகங்கை யாடினோர்க் கானந்த
வுருத்தீர்த்த முயரேம தீர்த்தத்தின் மூழ்குபலன்
விருத்திபெற நல்கெனலும் விமலனுமங் கருள்செய்தான்
வருத்தமக லிவ்வேம தீர்த்தமகந் தரவிதுவாம். (௯)

வேறு.

தெரிசித்த வக்க ணத்திற் சேர்தரு மறங்கள் யாவும்
பரிசித்த வக்க ணத்திற் பயன்படும் பொருள்க ளியாவு
முருசித்தந் நீரை யுண்டா லின்பங்க ளியாவு முண்டாங்
குருசித்த மிரங்கும் வீடெங் கூடலா மூழ்கி னோர்க்கே. (௧௦)

கங்குலும் பகலு நீற்றக் கண்ணுநற் கடவுட்காணப்
பொங்குநற் றவங்கள் சாருஞ் சிவகங்கைப் புனித தீர்த்தந்
தங்குற வோர்கான் மூழ்கிற் றரணியிற் புகலு கின்ற
வெங்குள தீர்த்த மியாவு மாடிய பலனு மெய்தும். (௧௧)

சயித்தியப் பண்பு மேய சிவகங்கைத் தடத்துண் மூழ்கி
வயித்திய நாத னேடுஞ் சிவகாமி பதம்வ ழுத்த
வுயிர்த்துணை நீங்கா ஞான மோங்கியே யொழியாப் பாசப்
பயித்திய மகல்வ ரின்பம் பருகுவர் பெருகு வாரே. (௧௨)

வேறிடத் திருந்து செய்யும் விரதங்கள் பூசை தான
மாறிலாச் செபந்தி யானம் வழங்கிட வருமப் பேற்றிற்

கூறகன் றுண்மை நல்கு முயர்சிவ கங்கை மூழ்கிக்
கூறிய கரைமேல் வைகிச் செய்திடிற் கோடி யாமே. (௧௩)

வேறு.

விளம்புதுலாம் விருச்சிகம்பின் வினவுதனு மகரகும்பம்
விளங்கு திங்கள், களங்கமறு நாண்முழுதும் பிறதீர்த்தம் விதி
வழியாக் கருதி மூழ்கி, வளம்படுமப் பயனிர்தச் சிவகங்கைத்
தடத்தொருநாண் மகிழ்ந்து மூழ்கி, யுளம்படுமப் புனிதமதற்
கொவ்வாதென் றுல்வேறிங் குரைத்த லென்னே. (௧௪)

வேறு.

மண்ணிடைப் பிறந்த நாளு மாதங்கள் பிறந்த நாளுங்
கண்ணிய வம்மா வாசை கதிர்களி ரிரண்டு கோள்க
ணண்ணியே பரிசித் தேகு நன்னய நாளு மிந்தப்
புண்ணிய தீர்த்த மூழ்கிற் புகலொணுத் தவங்க ளெய்தும். ()

விருப்பநீர் மூழ்கி யன்பின் விபன்கரை யேறு வாரே
னெருப்புறு நரகின் மூழ்கார் நீள்கரை யேறி நிற்பர்
தருப்பணஞ் செயுமு னன்னோர் தவறுபோம் பிண்ட மீந்தாற்
சுருக்கமி லமுத முண்டு துறக்கத்தில் வாழ்வ ரன்றே. (௧௬)

தவஞ்செய்தோர்க்கெய்துமிந்தச்சிவகங்கைத்தடத்துண்மூழ்கி
நவஞ்செயு மந்நீர் கொண்டு நாதனீண் முடியி லாட்டி
யவந்தவிர் பூசை செய்வோ ரவர்சிவன் முத்த ராவர்
சிவம்பெறு மவரைக் கண்டோர் பிறவியுந் தீரு மன்றே. (௧௭)

ஆய்ந்தருந் தவத்தோர் போற்று மரியவித் தீர்த்த மாடி
வேய்ந்தபூங் கொன்றை வேணி விமலனை யருச்சிப் போர்க்கே
யீந்திடும் பொருள்க ளொன்று கோடியா மீந்தோர் பாவ
மாய்ந்துயர் போகந் துய்த்து மறுமையு மடைவ ரன்றே. (௧௮)

வேறு.

பொன்னி யாறு பொருநைநல் வைகைநீள்
கன்னி யாறு யமுனைமுற் கங்கைநீர்
துன்னு மற்றுள தூய்நதி கட்கெலாஞ்
சென்னி யாவ துயர்சிவ கங்கையே. (௧௯)

வேறு.

நிலைபெறு தருமநல்கு நீதியாற் றரும தீர்த்த
மலைவறு மருத்த தீர்த்த மகமகிழ் காம தீர்த்தங்

தொலைவறு மோக்க தீர்த்த மென்றித னுமஞ் சொல்வ
ருலைவிலித் தீர்த்த மேன்மை யாவரே யுரைப்ப ரென்றான். ()

வேறு.

சேர்த்த வையக முடனுயி ரனைத்தையுஞ் சேரப்
போர்த்த வேடத்தன் கண்டதென் புதுவையுட் புனித
தீர்த்த மேன்மையை யுரைத்தனை சிந்தனை குளிர்ந்தோ
மூர்த்தி தன்மையு முரையெனச் சூதனு மொழிவான். (௨௧)

## தீர்த்தவிசேட அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௬.

### தீர்த்தவிசேட அத்தியாயச் சுருக்கவசனம்.

மேற்கூறிய புதுவைத்தலத்தில் வயித்தியநாதேசுரர் தமது சந்நிதிக்கு வடகீழ்ப்பக்கத்திலே திருக்கண் சாத்துதலும் பாதாளத்திலேயிருந்து கங்கை சமுத்திரம்போலப்பொங்கி மேலே யெழுந்தது. உடனே வயித்தியநாதர் திருக்கரத்தாலமைத்து அடங்கும்படிசெய்தலால் அந்தத் தீர்த்தஞ் சிவகங்கையென்னுந் திருப்பெயர்பெற்றது. பின்னர் ஒருநாள் பிரமதேவன் வயித்தியப்பரைப்பூசிக்க ஆங்குவந்து அச்சிவகங்கையிலே மூழ்கித் தனது கமண்டலநீரை யதிலே பெய்து பிரமதீர்த்தமென்னும் ஒரு நாமம் அதற்குச் சூட்டித்தனன். அதன்மேல் அகத்தியமுனிவர் புதுவை ஈசரைப்பூசிக்கவந்து அதிலே மூழ்கித் தமது கமண்டலநீரைச் சிறிதுபெய்து அகத்திய தீர்த்தமென்றொரு பெயரை அதற்குத் தந்தனர்.

மற்றொருகாலத்திலே மாத்தியந்தன், தியானகாட்டன் என்னு முனிவர் வயித்தீசரைவந்து வணங்கிச் "சுவாமீ! உம்முடைய திருமுடியிலே யபிடேகஞ்செய்தற்கு இதன் முன்னொருவரு மூழ்காத புதிய தீர்த்தமொன்று வேண்டும்" என்றுகேட்டு அவரது திருவருளாலே தருமரிஷபத்துக்கு அடுத்த வடபக்கத்திலே யொருதண்டினாலே தோண்டியபொழுது இன்பத்தைக்கொடுக்கத்தக்க ஒரு தீர்த்தமுண்டாகியது. ஆதலாலே அது எமதீர்த்தமெனப் பெயர்பெற்றுக் கிணற்றுவடிவாகி நிறைந்திருந்தது. அம்முனிவர் உடனே ஆனந்தபரவசராய்ப் புதுவையீசர் சீர்த்தியைவியந்து புகழ்ந்து அந்த நீராலே அவரை யபிடேகித்துப் பூசித்துத் தாழ்ந்து வணங்கிச் "சுவாமீ! இந்தத் தீர்த்தம் இன்பவடிவாயிருப்பதனாலும் சிவகங்கைத்தீர்த்தம் ஞானவடிவாயிருப்பதனாலும் இவ்விரண்டு தீர்த்தத்தையும் அபேதமாகச்செய்து

ஏமதீர்த்தத்திலே மூழ்குவார் பெறும்பயனைச் சிவகங்கைத் தீர்த்தத்திலே மூழ்குவார் அடையும்படி கருணைசெய்க" என்று வரம்பெற்றுச் சென்றனர். (இவ்வரம் பெற்றதன்காரணம் வயித்தியநாதருக்கபிடேகஞ் செய்யுந் தீர்த்தத்திலே யெனையோர் மூழ்கலாகாதென்னுங் கருத்தென்க.) ஆதலாலே சிவகங்கையைத் தரிசித்தவர்க்குப் புண்ணியமும் தொட்டவர்க்குப்பொருளும், அத்தீர்த்தநீர் உண்டவருக்கு ஆனந்தமும் மூழ்கினோருக்கு மோக்ஷமுங் கைகூடும். ஒருதரம் சிவகங்கையிலே மூழ்கினோற் சிவபிரானைக் காணுதற்குச் செய்யுந்தவஞ் சித்திக்கும். அன்றியும் ஏனைய தீர்த்தங்களாடிய பிரயோசனமுங் கிடைக்கும். அத்தீர்த்தத்திலே மூழ்கி வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையுந் தரிசித்தால் ஞானமுண்டாகும். பேரின்பமும் பெறுவர்.

வேறு தீர்த்தங்களிலே செய்யுந் தானம், விரதம், பூசை அந்தத் தீர்த்தக்கரையிலே செய்தால் ஒன்று கோடியாகப் பெருகி வளரும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களிலே முப்பதுநாளும் பிறதீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்தால் வரும்பலன் சிவகங்கையிலே ஒருநாள் மூழ்கினோற் கிடைக்கும்பலனுக்கு ஒப்பாகாது. மாதப்பிறப்பு, பருவங்கள், கிரகணங்கள் முதலிய புண்ணிய தினங்களில் அதிலே மூழ்கினோரெய்துந் தவப்பயன் சொல்லமுடியாது. அந்தத் தீர்த்தத்திலே விருப்புடன் மூழ்கிக் கரையேறுபவர் நரகத்திலழுந்தாது மோக்ஷமாகிய கரையேறியிருப்பர். தருப்பணஞ்செய்து பிண்டமிட்டவர் சுவர்க்கபதவி யடைவர். தவஞ்செய்தவருக்கே அந்தத்தீர்த்தங்கிடைக்கும். அத்தீர்த்தத்தினாலே வயித்தியநாதரை யபிடேகஞ்செய்து பூசிப்பவர் சிவன்முத்தியடைவர். அவரைத்தரிசித்தவரது சனனமும்மொழிந்துவிடும். சிவகங்கையிலே மூழ்கிப் புதமைவீசரைப் பூசிப்பவர்க்குக் கொடுக்கும்பொருள் ஒன்று கோடியாகும். பாவமும் நீங்கும். மறுமைப்பலனையும் அங்ஙனந் தானங்கொடுத்தவரடைவர். காவிரி, கங்கையாதி நதிகளுக்கெல்லாம் முதன்மையாவது சிவகங்கையே, அது தருமதீர்த்தம் அர்த்ததீர்த்தம் காமதீர்த்தம் மோக்ஷதீர்த்தமென்னும் பெயர்களையும்பெறும். அதன் மகிமையை யாவராலே சொல்லமுடியும் என்ற சூதமுனிவரைச் சௌனகர் "மனமகிழ்ச்சியுற்றேம். இனி மூர்த்திமான்மியமருளிச் செய்க"வென்று வணங்குதலுஞ் சூதமுனிவர் சொல்லுவாராயினர்,

# மூர்த்திவிசேட அத்தியாயம்.

பெருவிளை யாடன் மேய பிரானிரு பத்து நான்கு
திருவிளை யாடல் செய்யச் சிவலிங்க மாயு றைந்தா
னொரு விளையாடற் கேனு மவன்பெய ருரைத்துளோர்கள்
ருவிளை பிறவிப் பௌவங் கடந்துயர் கதியைச் சார்வார். (க)

எப்பதி யீசன் மேன்மை யெவரியம் பிடினு மன்பா
லப்பதி யீசன் றனே யதிகமென் றறைத லாமே
யொப்பகல் புதுவை யீசன் மேன்மையா முரைப்ப தேயத்
திப்பிய லிலிங்கங் கண்டோர் சித்தமே செப்பு மன்றே. (உ)

திருவினிற் சிறந்த செல்வங் கல்வியே தெரிந்த கல்வி
மருவதி லறிவு மேன்மை யறிவினுள் வறுமை யோர்க்குத்
தருவதுங் கருணை யீசன் றன்னடிக் கன்பு மேன்மை
கருவறு தேவின் மேலோன் வயித்திய நாதன் காணீர். (ங)

நதியினு ளுயர்ச்சி கங்கை நவிறலில் வாய்மை நன்மை
நிதியினுட் கொடைக்கு நேரு நிதியமே யதிகம் பெற்ற
மதியினுட் சிவன்பா லன்பு வைத்திடன் மிகவுந் தூய்து
கதியருந் தேவின் மேலோன வயித்திய நாதன் காணீர். (ச)

மன்னிய புதுவை மேய வயித்திய நாதன் பாதஞ்
சென்னியின் வணங்கி நின்று தெரிசனஞ் செய்தோர் பாவந்
துன்னிய நெருப்பி னுப்பண் டோயுநுண் பஞ்சு போலும்
பன்னிய கதிர்முன் னில்லா விருளெனப் பாறு மன்றே. (ரு)

தவர்பணி யின்ப மேவிச் சயம்புசந் நிதியின் மேவி
யிவர்தரு பத்தி யன்போ டிறைஞ்சிநின் றெதிர்கண் டோர்க
ளவரவர் வேட்ட யாவு மடைந்தன போலு நெஞ்சங்
கவர்தரு மின்பங் கூடிக் கழிந்திடக் களிப்பு நல்கும். (சு)

கொழுந்துசெய்முகில்சேர்மாடப்புதுவையுட்குழகன்சேவைக்
கெழுந்திடமருள்போமுன்சென் றெய்தியெண்ணகையான்முன்
விழுந்திட வன்பு மேலாம் விமலனேர் மேவி நின்று னோர்
தொழுந்தொறும்பெருகுமின்பஞ்சொல்லுதற்கெட்டாதன்றே

ஆவிக்குந் துணையா யன்புக் கன்னையா யடியார் பாவங்
கோவிக்குங் கருணை மேனிப் புதுவையுட் குழகன் றன்னைப்

பாவிக்குந் தோறு நெஞ்சம் பரிவுறுந் திருமுன் னின்று
சேவிக்குந் தோறு மின்பந் தித்திக்குந் தெவிட்டா தன்றே. ()

செறிதரு திருமுன் னின்று தெரிசிக்கும் போதின் முன்னர்க்
குறியெனத் தோன்றும் பின்னர்க் குலவுபேரொளியாய்த்தோ
பொறிபுலன் பெருகி யப்பாற் பூரணா னந்த மாகும் [ன்றும்
மறிவுளோர்க் கலந்து ளோர்க்கு மப்பதி யமல னம்மா (௯)

அண்டர்கா யகன்மூன் ஞோர்கா லட்டாங்க மைந்து மேய
தெண்டனிட் டோர்க ளிந்தத் தெண்டிரை சூழ்பு விக்க
கண்டராய்ச் செங்கோ லோச்சிக் கதிர்முடி யரசர் வந்து
தொண்டராய்த் தெண்ட னிட்டுத் தோத்திரம் புரிய வாழ்வார்.

வேறு.

கதிருதயந் தனிற்றொழுதோர் கடல்சூழ்பூ தானபலன் கையிற் சேர்வீர், துதிகழுச் சியிற்பணிந்தோ ராயிரங்கோ தானபலன் றேய்வர் வைகன், முதிரிளமா லையிற்றொழுதோர் கோடிகோ தானபலன் முழுதுஞ் சேர்வ, ரதிகபல னரையிர விற் றெரிசிப்போர் பரிமகப்பே றடைவ ரன்றே. (௧௧)

வேறு.

சுக்கிர வாரமுஞ் சோம வாரமு
முக்கிர னடிதொழு துவக்கு மன்புளோர்
வக்கிர மின்றியவ் வேழு வாரமு
மிக்கவன் பொடுதொழு மேன்மை யெய்துவார். (௧௨)

வேறு.

பருவா லொழிக்கு மற்றைப் பதியிலோர் மாத மெய்தி
யிரவொடு பகலு மீச னிணையடி தொழுத பேறு
குருமணி மாட நீடு புதுவையுட் குழகன் றன்னை
யொருபிர தோட காலம் பணிபல னுதவு மன்றே. (௧௩)

திதிலா ..யங்க டோறுஞ் சென்றுசென் றுறு காலங்
கோதில்பன் னாளும் வைகிக் குப்பிடும் பலனெ வர்க்கு
நாதனைப் பதியுணின்று நடஞ்செயு நயத்தை யோர்கா
லாதிரை நாளிற் கண்டோ ரடைந்திடு பலனைப் பாமால். ()

வேறு.

பேசிய மாதங்கள் பிறந்த நாளிடை
யீசனை யன்புடனெவர்கள் போற்றினு

நாசமின் மூப்பது நாளு மேபணி
மாசக னற்றவம் வந்து சேருமால். (கரு)

வேறு.

குருவளரு நீலமணி கண்டனுறை கோயிற்
றிருவலகு டன்றிரு மெழுக்கிடு திறத்தோர்
பரிவொடுமின் மாவிய மகற்றுபணி செய்வோ
ரருள்பெருகு செல்வம தடைந்துநல மார்வார். (கசு)

வேறு.

பார்விளக்குந் தென்புதுவைப் பரமருறை கோயிலெய்திப் பகரு நெய்யா, ரோர்விளக்கு வைத்தோரும் பவமகன்று கயிலையினி லுறைவ ரென்றாற், சீர்விளக்கும் பலவிளக்குந் தூபதீ பாதிமற்றுஞ் செய்வித்தோர்தம் பேர்விளக்கும் பெரும்பேற்றை யெவ்வண்ண மென்றுரைத்தோர் வேசு மாறே. (கஎ)

சாத்திரங்கள் புகழ்ந்துரைக்கு முபர்மாக மாதசதுர்த் தசியிராவி, னேத்திரங்க ளிலாது நிருமலனை யருச்சனைசெய் நேச மேலோர், தோத்திரங்கள் புரியும்வட கயிலைமலை யடைந்திருப்பர் தொன்மை யன்னோர், கோத்திரங்க ளெழுமூன்று நீங்காது துறக்கமதிற் குடியா வாழ்வர். (கஅ)

அரியவருட் சிவநிசியி னெண்ணெய்நறு நெய்நறும்பாலளோதே ஞதி, புரியவிள நீர்கன்னல் பற்பலவாங் கனிச்சாறோ டமிர்த பஞ்ச, முரிபபஞ்ச கௌவியங்கண் மான்மதஞ் சந் தனமாட்ட வுதவி னோர்க, டெரியவிளம் புதுமொன்றுக் களவில்கற்பங் கயிலையினிற் சிறந்து வாழ்வார். (கக)

அல்லமரு மணிகண்டத் தண்ணன்மகிழ் சிவநிசியி லன்பினோடோர், வில்லவிதழ் புனைவித்தோர் தீவினைக ணன்றுநல மேவி வாழ்வர், சொல்லுமலர் பலவில்ல மருச்சனைகட் கீந்தோர்க்குத் தோற்றும் பேறு, வல்லவனே யானுரைக்கக் கயிலையுறை நந்தியெங்கோன் வழுத்தல் வேண்டும். (உ0)

வேறு.

அருமறைப் புதுவையுள் வசித்தி யப்பனை
யொருசிவ நிசியிடை யுவந்து போற்றியே
யிருவிழி துயில்வுறு தெவரி ருக்கினுங்
கருவறு மூவிழிக் கடவு ளாவரே. (உக)

வேறு.

தென்புதுவை நகரீசர் திருக்கோயி லுட்பெருகு சிறப்பி னோடு
மின்புதவுமாரிடங்கைதவதமகா மானிடமாவிலிங்கஞ்செய்தோர்
துன்புதவு தீவினைக ளெந்துபிறந் திறந்துபடுந் துயர நீங்கி[மே.
யன்புதவுமெய்ஞ்ஞானமடைந்துமலந்தவிர்ந்தின்பமடைவர்தா

வேறு.

மருவலர் புரமடு வள்ள லீசனை
யொருவலம் வரவடி யொன்று வைத்திடிற்
றிருவலம் வந்தவ ருறையுள் சேர்தருங்
கருவல மகன்றுயர் கதியு மெய்துவார். (உங)

ஆவலோ டோர்வல மாய்ந்து டன்வரப்
பூவலம் வருபயன் பொருந்தி வாழ்வரான்
மூவலஞ் சூழ்தர மும்ம லங்கெடு
மோவிலாப் பேரருட் கடலு ளுய்வரே. (உச)

குருமணி மாடநீள் கோயி றூழ்ந்தெழ
மருவிய புழுதியின் மன்னு தேகத்தா
லொருபிர தக்கண முவந்து செய்தவர்க்
*கிருவகைப் பிணியொடு வறுமை யேகுமே. (உரு)

வேறு.

எங்கணு நிறைந்தபுது வேசருறை கோயி
லங்கபிர தக்கணம தன்பினிய லன்பர்
சங்கைதவிர் வேறொரு தவங்கள்செய வேண்டா
மங்கையொரு பங்கனடி மன்னுவது முண்மை. (உசா)

வேறு.

வில்லாக மாமேரு வளைத்தபிரா னாலயத்தின் விளங்கு வாயிற், கல்லாகப் புதுவையுளோர் மனைவாயி லிசைந்தபடிக் கல்லா வவ்வூர்ப், புல்லாகப் புழுவாகப் பொருந்துவா மீசர்ப தர் புகழ்ந்து கேட்பர், நல்லாக மங்களெலா முணர்ந்தோர்க ளென்னிலியா நவில லென்னே. (உஎ)

குறைவிலுருத் திராக்க முரைத்திறைஞ்சு வோர்க்கெ ளிதிற் கூடு ஞான, முறையுடனஞ் செழுத்துரைத்துத் தொ ழுவோர்க்குப் போகமுடன் முத்தி சாரு, மறையுமவன் பெயர்

---

*இருவகைப்பிணி-உடற்பிணி, உயிர்ப்பிணி. உடற்பிணி வாத பித்த சிலேட்மெத்தால் வருவன. உயிர்ப்பிணி ஆணவமாயை கன்மம்,

கேட்போ ரலேகடல்சூழ் நீளவனிக் காச ராகிப், பிறைமுடி
சேர் புதுவையரன் பிரசமல ரடிநீழல் பேணி வாழ்வார்.(உஅ)

## வேறு.

சிறந்திடுங் கருணை யீசர் தெரிசன மிறைஞ்சு மன்பர்
துறந்திடு மின்பம் வேண்டார் துகளறு கயிலை வேண்டார்.
பிறந்திட லுண்டே லந்தப் புதுவையிற் பிறந்து வாச
முறைந்திடு மடியார்க் கேவ லுவந்துசெய் பணியை வேட்பார்.

கூறியுறு சமிவ னத்திற் குடியிருந் தருளே நாளுஞ்
செறியிரு பத்து நாலு திருவிளை யாடல் செய்த
பொறியிறை புதுவை நாதன் புதுமைசேர் மகிமை யாரே
யறிவரெம் மாசான் கூற வறைந்தன மென்றான் சூதன். (௩௦)

## வேறு.

தலவி சேடமுந் தீர்த்தவி சேடமுந் தகைசேர்
பலவி சேடமா மூர்த்திவி சேடமும் பகர்ந்தாய்
நலவி சேடமா நினைதொறு நயமுறுஞ் சொல்லச்
சொலவி சேடமா முளப்பரி சுத்தமு முற்றோம். (௩க)

என்று கூறியச் சௌனக விருடிய ரிறைஞ்சி
நன்று நீமுன்னர் நவின்றரு ளிருபத்து நான்காந்
தொன்று தொட்டுயர் திருவிளை யாடலைத் தெரிகையா
வின்று ரைத்தனை யிவையெலாம் விரிவுரை யாக. (௩உ)

இந்த நாளிவ ரேதுவாத் திருவுள மிரங்கி
வந்த வாடலென் றருளென வினவலு மகிழ்ந்து
சிந்தை வாகுகந் தேகமச் சிவனிடஞ் செலுத்திப்
பந்த நீக்கிய சூதனும் வகைபெறப் பகர்வான். (௩௩)

## மூர்த்திவிசேட அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் உஅசு.

—————

### மூர்த்திவிசேட அத்தியாயச் சுருக்கவசனம்.

சூதமுனிவர் நைமிசாரணிய முனிவரை நோக்கிக் கூறுவார். பஞ்சகிருத்தியமாகிய பெரிய விளையாடல்செய்யுஞ் சிவபிரான் புதுவை நகரத்திலே இருபத்துநான்கு திருவிளையாடல்களை அடியார் பொருட்டுச் செய்யச் சிவலிங்கவடிவமாகி யெழுந்தருளியிருந்தனர்,

அவருடைய திருப்பெயரை விளையாட்டுக்காவது சொன்னவர்கள் பிறவிக்கடலைக்கடந்து முத்திக் கரையைச்சேருவர். எந்தத்தலத்திலுள்ள சிவபிரான் மகிமையைச் சொன்னாலும அதிகமாகவே யாருஞ்சொல்லுவார். புதவையிலுள்ள வயித்தியநாதர் மேன்மையை நாமப்படி யுரைக்க வேண்டுவதில்லை. அவரைத் தரிசித்தவருடைய மனமே சான்றாக எடுத்துச்சொல்லும். செல்வத்துள்ளே கல்விச்செல்வமும் நதியினுள்ளே கங்காநதியும் உயர்ந்தனபோலத் தெய்வங்களுக்குள்ளே உயர்ந்த கடவுள் வயித்தியநாதர். முனிவரே! தெரிந்துகொள்ளுங்கள். அவருடைய பாதங்களை வணங்கித் தரிசித்து நின்றோருடைய பாவம் நெருப்பினுள்ளே யகப்பட்ட பஞ்சைப்போலும், சூரியன் முன்னே தோன்றும் இருளைப்போலுங் கெட்டு நீங்கும். அவ்வயித்தியநாதருடைய தரிசனத்துக்குப்புறப்பட்டால் பயமெல்லாமகலும். நேரேசென்று அட்டாங்க வணக்கஞ்செய்தால் அன்பு மேன்மேல்வளரும். பலதரந்தொழுதால் எய்தும் ஆனந்தஞ் சொல்லுதற்கடங்காது. சிவலிங்கமூர்த்தியாகிய புதவைநாயகரை நேரேநின்று தரிசிக்கும்போது அவர் முதலாவது சிவலிங்கமாகத்தோன்றுவர். அதன்மேல் ஜோதிமயமாகத்தோன்றுவர். அதன்மேல் சச்சிதானந்தரூபமாகத் தோன்றுவர். இன்னும் அம்மூர்த்தியை அட்டாங்க பஞ்சாங்க வணக்கஞ்செய்தவர் ஒருவராலுங் கண்டிக்கப்படாதவராய் ஏனைய அரசர்வந்து தம்மை வணங்க அரசாட்சிசெய்து வாழ்வார். சூரியோதயத்திலே அவரைத் தொழுதவர்கள் பூதானபலனடைவார்கள். உச்சிக்காலத்திலே பணிந்தோர்கள் ஆயிரங் கோதான பலனைப்பெறுவார்கள். மாலைக்காலத்திலே தரிசித்தவர்கள் அசுவமேதஞ்செய்த பலனையடைவார்கள். சுக்கிரவாரமுஞ் சோமவாரமுஞ்சென்று வணங்கினவர்கள் எல்லாவாரமுஞ் சென்று தொழுத பிரயோசனத்தைப் பெறுவார்கள்.

மற்றைய தலங்களிலே யொருமாத மிரவும்பகலுஞ் சிவபிரான் திருவடிகளைத்தொழுத பலனைப் புதவைநாயகரை யொரு பிரதோடகாலத்திலே வணங்கினபலன் கொடுத்துவிடும். பிறதலங்களிலே பல்நாளும்போய் ஆறுகாலமுஞ் சிவலிங்கப்பெருமானைக் கும்பிடும் பலன் புதவையிலே நடராசருடைய திருவடிகளைத் திருவாதிரையிலே தரிசிக்கும் பலனுக்குச் சமமாகும். மாதப்பிறப்புத்தோறும் வயித்தியநாதரை வணங்குவாராகில் மாத முப்பதுநாளும வணங்குந் தவப்பயன் கைகூடும். அவருடைய ஆலயத்திலே திருவலகு

திருமெழுக்குப்பணியும் நின்மாலியத்தைப் புறத்தே யொதுக்கும் பணியுஞ் செய்பவர்கள் செல்வப்பொருளடைந்து நன்மையனுபவிப்பார்கள். அவ்வாறு கோயிலிலே யொரு நெய்விளக்கேற்றிவைத்தவர் கைலாசத்திலே போயிருப்பாரானால் பல நெய்விளக்கும் தூபதீபம் பணிமாறலுஞ் செய்வித்தவர் பெறும் பேற்றை யென்போலிகளெவ்வண்ண மெடுத்துக்கூறுவது. மாசிமாதச் சிவராத்திரியிலே நித்திரையின்றி வயித்தீசரை யருச்சனைசெய்து தோத்திரஞ் செய்தவர் கயிலாயத்தையடைந்து வசிப்பர். அவரது இருபத்தொரு தலைமுறையிலுள்ளாருஞ் சுவர்க்கபதவி யடைந்து வாழ்ந்திருப்பர். அவ்விராத்திரியில் சிவலிங்கப்பெருமானுக்கு அபிடேகஞ்செய்ய எண்ணெய், நெய், பால், தயிர், தேன், இளநீர், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், பஞ்சகௌவிய முதலியவை கொடுப்போர் அளவிறந்தகாலங் கயிலாசமலையில் வீற்றிருப்பர். ஒரு வில்வமெடுத்து அவ்விராத்திரியிலே சிவார்ச்சனைக்குக் கொடுத்தவர் தீவினைகளை நீங்கி யின்பமடைந்திருப்பர். பல வில்வங்கள் கொடுப்பவர்பெறும்பேற்றை நந்திதேவர்தாஞ் சொல்லவேண்டும் என்றாலே கூறமுடியாது அவ்விராத்திரி முழுதும் நித்திரையின்றிப் புதுவையீசர் ஆலயத்திலே யெவரிருந்தாலுஞ் சிவ சாரூபபதவி யடைவர்.

அவ்வாலயத்திலே பலவிதமாகிய இலிங்கந் தாபித்துப்பூசித்தவர் சனன மரணத்தினீங்கி மெய்ஞ்ஞான வாழ்வடைந்திருப்பர். அவ்வயித்தியநாதரைப் பிரதக்ஷணம்வர அடியெடுத்துவைத்தால் அடியெடுத்துவைத்தவர் வீட்டிலே இலக்குமி குடியிருப்பள். உயர்ந்த கதியும்பெறுவர். ஒரு பிரதக்ஷணம் வந்தாராகில் இந்தப்பூமண்டலத்தைப் பிரதக்ஷணஞ்செய்த பிரயோசனத்தைப் பெறுவார். மூன்று பிரதக்ஷணம் வந்தவர்கள் மும்மலங்கெட்டுத் திருவருட்கடலுள்ளே யமுந்திப்பிழைப்பார்கள். புதுவைநாயகரது கோயிலிலே கீழே விழுந்து புழுதிபடியக் கும்பிட்டெழுந்து ஒரு பிரதக்ஷணஞ் செய்தவர் உயிர்ப்பிணியாகிய மும்மலமும் உடற்பிணியாகிய வாத பித்த சிலேட்டும வியாதிகளும் வறுமையு நீங்கப்பெறுவர். அங்கப்பிரதக்ஷணஞ்செய்தவர் வேறே தவஞ்செய்ய வேண்டுவதில்லை. வயித்தீசர் திருவடியையடைவது சத்தியம். ஆகய வுணர்ச்சியுடையவர் புதுவைநாயகர் ஆலயத்தின் திருவாயிற் கல்லாகவாவது அவ்வூரிலுள்ளார் வீட்டு வாயிற் கல்லாகவாவது, புல்லாகவாவது, புழுவாகவாவது பிறக்கும் வரத்தையே அவரிடம் வேண்டுவர். அன்றியும் அ

வாது தொண்டர்களுக் கேவல்செய்யும் வரத்தையும் வேண்டுவர். புதுவைநாயகனை உருத்திராக்க மந்திரஞ்சொல்லி வழிபடுவோர்க்கு ஞானங்கிடைக்கும். பஞ்சாக்கரமுச்சரித்து வணங்குவோர்க்குப் போகமு முத்தியுங்கிடைக்கும். அவரது திருநாமங்களைக்கேட்பவர் அரசராய்ப்பிறந்து திருவடி நீழலைப்பின்னரடைவர். சமிவனமாகிய புதுவையிலே யெழுந்தருளியிருந்து இருபத்துநான்கு திருவிளையாடல்செய்த வயித்தியநாதமூர்த்தி மான்மியத்தை யாவரளந்துரைப்பர். வியாசமுனிவ ரருளிச்செய்தபடி யுங்களுக்குச் சொன்னேம்" என்று சூதரிஷி சொல்லச் சௌனகாதியர்கள்கேட்டு அவரைத்தொழுது "புதுவைநாயகர் செய்தருளிய இருபத்துநான்கு திருவிளையாடல்களையுந் தொகுத்து அருளிச்செய்தீர். அத்திருவிளையாடல்கள் இன்னகாலத்து இன்னாருக்காகச் செய்தனவென்று இனி விரித்துச்சொல்லி யருள்வேண்டும்" என்றுகேட்க அவ்வாறே சூதமுனிவர் சொல்லுவாராயினர்.

முதலாவது

# சூரியன் பூசித்த அத்தியாயம்.

விதுவை நாளு மிலைந்தவன் பூங்குழன்
மதுவை நாற்றிய மங்கையொர் பங்கினை
னிதுவை நாடயி லென்னும் விழியினார்
புதுவை நாயகன் பொற்பதம் போற்றுவாம். (௧)

வேறு.

சூரிய ஞான மோனர் குலவுதென் புதுவை மேய
சீரிய னருள்வி நோத வயித்திய நாத தேவ
னீரியல் வனச பாத ரித்தலும் போற்றிச் சூழ்ந்து
சூரியன் பேறு பெற்ற காதையைச் சொல்ல லுற்றாம். (௨)

செங்கதிர் முன்னை நாளிற் றிருக்கயி லாய வெற்பைப்
பங்கமி லன்பு பொங்கப் பற்பல வைகல் சூழ்ந்து
மங்கையோர் பாகம் வைத்த வரதனை வழுத்திப் போற்ற
வங்கண னுளமி ரங்கி யாதுநின் வேட்கை யென்ன. (௩)

*மித்திர னிறும்பூ தெய்தி விரைந்துபொன் னடியில்வீழ்ந்து
பத்திர முடனெ ழுந்து பரிவுற விருகை கூப்பி
வத்திர முகம லர்ந்து முடியுடல் வணங்கி நின்று
புத்தியுட் பத்தி யோடி மின்னன புகல லுற்றான். (௪)

வேறு.

பனகா பரணு சரணஞ் சரணம் பரிபூ ரணனே சரணஞ் சரணஞ், சனகா சரணந் தாயே சரணஞ் சகலா சரணந் தனியே சரண, மனகா சரண மமலா சரண மபயா சரண மதுலா சரணங், கனகா சலகோ தண்டா சரணங் கயிலைக் கிரிவாழ் கண்டா சரணம். (௫)

வேறு.

சங்கு சக்கரன் றேடிய தாமரைத் தாளா
பங்க யாசன னேடிய பகர்முடி நீளா
செங்கை யங்கன லச்சிலை சேர்ந்ததிண் டோளா
கங்கை யஞ்சடைக் கண்ணுதற் கந்தர காளா. (௬)

புத்தி முத்திக ளுயிர்க்கெலா மருளிய புனிதா
நித்தி யாவுன தேவலா னீணிலந் தினஞ்சூழ்ந்
தெய்த்த லுத்தன னினியுன திணையடிக் கன்பு
முத்தி யின்பமு நல்கெனக் கதிரவன் மொழிந்தான். (௭)

வேறு.

அண்ணலவ் வுரையெ லாங்கேட் டன்புசெய் தலரி யஞ்சேல்
கண்ணகன் ஞாலம் போற்றுங் கயிலைபோற் புதுவைப் பாக
வெண்ணிய புதுவைதன்னுட் †சயப்புவாய் முளைத்திருப்போ
நண்ணியப் பதியி லேகி நமையருச் சனைசெ யென்றான். (அ)

முக்கணெம் பெருமான் கூறு மொழிகளா லுளம கிழ்ந்தே
யக்கணம் விடைகொண் டேகி யாதித்த னமல மேய
தெக்கிண கயிலை யொப்பாந் தென்புது வையினைச் சார்ந்து
முக்கியப் பதியி லுள்ள மகிமைகண் முழுதுங் காண்பான். ()

அத்தலங் கண்ட போழ்தி லகங்குளிர் மகிழ்ச்சி பொங்க
மெய்த்தவ மடைந்தோர் போல மெய்ப்புள கங்க ளோங்கு
மத்தகை விலங்கு புட்கள் கொடும்பகை யகன்று கூடித்
தத்தமின் முயங்கு மாங்கோர் தாய்பெற்ற தனையர் போலும்.

---

*மித்திரன் - சூரியன். †சயம்பு - சுயம்பு.

### வேறு.

சிங்கமு மியானையுஞ் செறியு மோரிடம்
பங்கமில் புலியொடு பசுக்க ளூட்புறீஇத்
தங்களிற் கூடியோர் துறையிற் சார்தரும்
பொங்கா வுடன்மயில் களிபொ ருந்திடும். (கக)

அரிமுலை போதக மருந்து மன்புடன்
கரிமுலை யருந்தும்வெவ் வரியின் கன்றுகள்
வரியுழு வையின்முலை வளரு மான்முலை
யுரியவக் கன்றுக ளுண்ணு மாறியே. (கஉ)

### வேறு.

அரவின் முட்டைமேற் கிளிக ளடைகிடந் தகலுங்
காவில் கிளியின் பழங்களை யரவுகள் காக்கு
முரக வண்டமுங் கலுழனு லுதவுமுட் டைகளும்
விரவி மாறியே பொறித்திடு மீதடை கிடந்து. (கங)

### வேறு.

அலகிடுந் தென்றல் வந்தே யகற்றிடுஞ் செம்மல் யாவுஞ்
சிலபசு நிரைகள் வந்தம் முன்றிலைச் சுத்தி செய்யு
மிலகிடூந் திருமெ ழுக்கா விறைத்திடுங் கோற்றேன் ஞுரு
பலமல ருருப ராகங் கோலமார் பணிகள் செய்யும். (கச)

வானரம் வாவி மூழ்கி வனசபத் திரமெ டுத்துத்
தூநறு நீரும் பூவுந் தூகளின்மாக் கதலி தந்த
கானறுங் கனியுங் கொண்டு கதிர்மணி யிலிங்கம் வைத்தே
யூணமில் பூசை யாற்றி யுச்சிமேற் கரங்கள் கூப்பும். (கரு)

அரவுக ளங்க ணெய்தி யணிமணி விளக்க மிட்டுப்
பரவிய விலிங்க மேனி நிழல்பட மறைக்கும் பையாற்
கரமிலார் புகழ்ந்து போற்றிக் கைம்மலர் தூவல் போலும்
விரவுபூந் தருக்கள் வண்டு மிழற்றவீ சொரியு மன்றே. (கசு)

தித்திக்கு மொழிச்சு கங்கள் செயுஞ்சிவ கீர்த்த னங்கள்
பத்திக்கு முதன்மை போலுங் குயிறிரு முறைப்பண் ணோது
மெத்திக்குங் கவரி மான்கள் சாமரை யிரட்டும் வாலாற்
புத்திக்கு ளன்பா மந்தி பூசனை யிடங்க டோறும். (கஎ)

வேறு.

அடுத்திடுங் கவிக்குல மங்கை யாரவே
யெடுத்திடு மணிகளை யிலிங்க மென்னவே
படுத்திடுஞ் சிங்கமா சனங்கள் பண்பொடு
கொடுத்திட முதுகின்மேற் குறித்து வைக்குமால். (௧௮)

வேறு.

தந்திக டடத்துண் மூழ்கித் தாற்றுமாங் கனிம ருப்பி
னந்தவில் வைத்து வாச நறுமலர் சென்னி சேர்த்து
முந்தநீ டுதிக்கை யானீர் முகந்துகொண் டன்பி னோடு
மந்தமா விலிங்கம் போற்றி யருச்சனை புரியு மாதோ. (௧௯)

வேறு.

கோசல கோமயங் கொடுத்துப் பின்னரு
மாசக லானின மடியுட் பாலையவ்
வீசனார் திருமுடிக் காட்டு மேறுகண்
மூசவில் சந்நிதி முன்ப டுக்குமால். (௨௦)

அறச்செயல் புரிந்திடுஞ் சரியை யாளர்போன்
முறச்செவிக் கரிதிரு முன்ன ரெய்திநற்
றிறச்சிவ லிங்கமீ தென்று தேறியே
விறற்செவி வளிவர விசிறி வீசுமால். (௨௧)

அத்திரி மிசைச்சுனை யருவி தாழுறத்
தத்திமுன் குதித்திடுந் தரங்கப் பேரொலி
மத்தள வொலியெனத் திருமுன் மாதர்போற்
சுத்தமா நடமயில் சுற்றி யாடுமால். (௨௨)

வேறு:

இத்தகை யாய மேன்மை யெண்ணில பலவுங் கண்டு
கொத்தழற் பஞ்சு போலுங் கொடியதீ வினைக ணீங்கிச்
சித்தமின் புறக்கண் டப்பாற் சென்றிடப் பானு கோடி
யொத்தொளிர் முளைத்தி ருந்த வுத்தம விலிங்கங் கண்டான்.

ஈசான திசையின்மேய வெழிற்சிவ கங்கை கண்டான்
மாசாறு மலங்க ணீங்க வின்பவா ரிதியி லாழ்ந்து
தேசாரு மனத்த னாகிப் பற்பல தெண்ட னிட்டே
யாசான்போற் கூறு மண்ண லருச்சனைக் கன்பு வைத்தான்.

அகம்புறஞ் சுத்தி செய்தே யருத்தியிற் றனது தேசு
முகம்பெறு கிரணத் தாலே மூண்டெழு மமுத வித்தாற்
செகம்புகழ் புதுவை யீசன் றிருமுடிக் கபிடே கித்துச்
சுகம்பெறு மன்பு நாராற் சிந்தனைத் தொடையல் சாத்தி. ()

வண்மைசேர் புலன்க ளாந்தான் மணிவிளக் கங்க ளேற்றித்
தண்மையி லாசை யென்னுந் தனிப்பரி வட்டஞ் சாத்தி
யண்மைசேர் கருவி யென்னு மாபர ணங்கள் பூட்டி
யொண்மைசேர் தன்னை யுண்ணத் திருவமு தாகவூட்டி. (௨௬)

பகர்தரு மன்பு நீரா லருக்கியம் பாத்தி யாதி
முகமனன் கியம்பி நல்கி மோகமென் சாந்தம் பூசி
நகைமுகக் களிப்பி னோடு நான்மறை மனுக்க ளாய
துகளறு மலர்க ளிட்டுத் தூயவர்ச் சனைகள் செய்து. (௨௭)

யானறும் போது தோற்று மெழிற்புகைத் தூப நல்கி
யூனினை நீக்கி யோங்கு மொளியருட் டீப மேந்தி
மானமில் கீழு மேலு மற்றுமுள் ளொடபு றப்பு
மேனிமிர் ஞான மென்னுங் கருப்புர விளக்க மேந்தி. (௨௮)

மீண்டுமர்ச் சனைகள் செய்து வேததோத் திரம்பு ரிந்தே
யாண்டவ னினி லிங்க மதுநவ நீதம் போலும்
பூண்டவன் புளமு ருக்கும் போதினிற் புவன மெங்கு
நீண்டபே ரொளியா னந்த நிறைதரு நேயம் போலும். ௨௯)

இந்தவா றுளமுங் கண்ணுங் கவர்தர வெய்தி முன்னே
செந்தமிழ்ப் புதுவை மேய சிவக்கொழுந் தரிய சேவை
புந்தியு ளன்பு பொங்கத் தரிசனஞ் செய்து போற்றிப்
பந்தபா சங்க ணீக்குந் தோத்திரம் பகர லுற்றான். (௩௦)

வேறு.

பதியே சரணம் பரமா சரணம் பரிபூ ரணனே சரணஞ் சரண
நிதியேசரணந்தினைவேசரணந் நெறியேசரணந்நிறைவேசரணம்
மதியேசரணம்மனுவேசரணம்மறையேசரணம்வாழ்வேசரணங்
கதியேசரணம்புதுவைப்பதிவாழ்கருணாகரனேசரணஞ்சரணம்.

வேறு.

அங்கசன் வேவ நோக்கு மழல்சொரி நயன பாலா
சங்கையி லுயிரி னைப்புத் தவிர்த்திடத் தடியுஞ் சூலா

பங்கமி லால காலம் பருகிய கண்ட நீலா
புங்கமார் புதுவை மேய புகழ்க்கரு *ஞால வாலா. (௫௨)

இரைத்திடு கங்கை மேய சடையில்வா ழிந்து கண்டா
வுரைத்திடு மமர ருய்ய வுயர்விட முண்ட கண்டா
நிரைத்திடு முலக மெங்கு நிறைந்துறை நீள கண்டா
திரைப்புனற் புதுவை மேய சிவகாம வல்லி †கண்டா.

இந்தவா றேத்தி னானைத் திருவுள மிரங்கி நோக்கி
முந்தனு மடியார் வாஞ்சை முடிப்பவ னாத லாலுன்
சிந்தையின்வேண்டுகோளென் செப்பெனத்திருமுன்றாழ்ந்து
புந்தியற் புதத்தோ டச்சம் பொருந்திட வணங்கி நின்று. (௫௪)

இருகரஞ் சிரமேற் கூப்பிப் பரிதியு மின்ன வேண்டும்
பெருகுநின் பாதத் தன்பு பிரிவற வருளி யென்றும்
பொருவரு நின்னை நித்தம் போற்றிடும் போக மீந்து
கருணையங் கடலே யுன்ற னேவல்செய் கருத்து நல்கி. (௫௫)

காத்தருள் செய்ய வேண்டு மென்றுசெங் கதிரோன் கூறி
யேத்திடப் புதுவை யீச னினிமைசேர் கிருபை யோடு
போர்த்தபேரொளிமார்த் தாண்டாபுகல்வதுகேளுன்னெஞ்சி
லார்த்தியை யொழிநீ வேட்ட தருளுவ மொழியக் கேட்டி. ()

முந்திய வுலக மியாவு மொழிசரா சரங்க ளெல்லா
நந்தம தாணை யாற்று னடப்பதற் கைய மின்று
லந்தமில் கால மியாவு மளந்திட வேண்டும் பாரிற்
சந்திவந் தனைக ளாதி தவங்கணன் மகங்கண் மற்றும். (௫௭)

உதயத்திற் சிருட்டி வெப்பா முச்சியிற் றிதியுன் றேசு
புதைவுற்ற மாலை தன்னி லொடுக்கமாம் புகலு கின்ற
சிதைவற்றதொழில்கண்மூன் றுந்தினந்தொறுநடாத்தவென்றங்
கதியுற்ற நீயெ வைக்கு முன்னிலைக் கருவி யாவை. (௫௮)

ஆதலான் முறைமை யோடு மவனியின் முயல வேண்டித்
தீதறு புதுவை யோடு மேருவைத் தினமுஞ் சூழ்தி
சாதநம் மருளான் மேரு வலஞ்செயு மிளைப்புந் தாக்கா
கோதிலா னந்த வாழ்வு மிம்மையே கொடுத்தோ மின்னும்.

---

*ஆலவாலம் - பாத்தி. †கண்டா - நாயகனே.

எத்தொழி னீசெய் தாலு மிதயத்தி லுண்மை யாக
வத்தொழி லேவ லென்றே யாற்றிநம் மருளைச் சார்தி
பொய்த்தொழி னீங்கி யின்பம் பெருந்துதி பின்னர் ஞான
முத்தியுமடைவையென்று முன்னவன்மொழிந்தான்மன்னோ.

வேறு.

அண்ண லன்புட னியம்பிய மொழியெலா மகத்து
ளெண்ணி யின்பமே லோங்கிட விருகணீர் சொரிய
மண்ணின் வீழ்ந்துற வணங்கிமுன் னெழுந்துள மகிழ்ந்து
தண்ண ளிப்பெருங் கருணையைப் போற்றினன் றாழ்ந்து. ()

வேறு.

அந்த வேலையிற் சமிவன மெண்டிசை யடர்ந்து
வந்து வானுற வோங்கிய வளமலை நோக்கிப்
பந்த நீங்கிய பரிதிகண் டுள்ளமும் பரிவுற்
றிந்து சேகரன் சேவடி யிறைஞ்சிநின் றியம்பும். (௪௨)

என்ன காரண மெங்கணுஞ் சமிவன மெய்த
லன்ன தின்னதென் றுரையென வங்கண னருள்வான்
மின்னு நின்கிர ணங்களி னல்விளை விந்து
துன்னி மேவவிச் சமிவனந் தோன்றிய தின்று. (௪௩)

ஆன தன்மையா லித்தரு நிழலெமக் காகு
ஞான பூமியா மிதுவென நாதனு நவிலப்
பானு நெஞ்சகம் பரிவுறப் பரவச மடைந்தே
யூன மின்றிய வமலனோ டொருமொழி யுரைப்பான். (௪௪)

தேவ தேவவிச் செழும்பதி செப்பினோர் நினைவோர்
தாவி வந்துளோர் தடத்தினுட் படிந்தவர் சார்ந்து
மேவி நின்பதம் பணிபவர் வாசஞ்செய் விமல்
ரேவ ராயினுங் கதிபெற வருளென விரந்தான். (௪௫)

பன்ன காபர ணன்றிரு வுளமிகப் பரிந்து
முன்ன ரிப்பதி மகத்துவ முள்ளதான் முயன்று
பின்னு மிவ்வரங் கேட்டனை தந்தனம் பெருக
வின்னு நின்பணிக் கேகென வியம்பினா னிறைவன். (௪௬)

அத்த னேவலைப் பத்தியோ டகத்தினுட் கொண்டு
நித்தன் சேவடி யன்புட னிலமுறப் பணிந்து

சித்த மின்புற விடைகொடு போந்துசெங் கதிரோன்
சுத்த மார்தரு புதுவையோ லெகெலாஞ் சூழ்ந்து. .. (௬௭)

வேறு.

உலகுள வுயிர்கள் யாவு முறுஞ்செயன் முயலும் வண்ண
மிலகுபே ரொளிப ரப்பி யிறையடி மறவா தேத்தி
யலகிலா நாள்கள் வைகி யருள்வழி யேவல் செய்து
திலகவா ணுதலி பங்கன் சேவடி நீழல் சேர்ந்தான். (௬அ)

## சூரியன் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௩௪.

—

### சூரியன் பூசித்த அத்தியாயச் சுருக்கவசனம்.

நைமிசாரணிய முனிவருக்குச் சூதமுனிவர் சொல்லுவார். திருக்கயிலாயமலையைச் சிவந்த கிரணங்களையுடைய சூரியன் பூருவமொருகாலத்துப் பலநாள் பிரதக்ஷணஞ்செய்து உமாதேவி சமேதராகிய சிவபெருமானை யன்பினாலே அவரது நாமங்கள் பலவற்றையுங் கூறித் தோத்திரஞ்செய்து வணங்கி நின்றான். அந்தத் தோத்திரத்தைக் கேள்வியுற்றத் திருவுளமிரங்கிச் சூரியனைப்பார்த்துக் கயிலாசபதி "உன்னுடைய விருப்பமென்ன" என்று கேட்டருளினர். உடனே சூரியன் வணங்கி நின்று "சுவாமீ! உம்முடைய ஆஞ்ஞையினாலே நிலவுலகத்தை நித்தியமுஞ் சூழ்ந்துவந்து எய்த்துவிட்டேன். இனியும்முடைய திருவடிக்குத் தொண்டுசெய்யுமன்பும் மோக்ஷமுங் கொடுத்தருளும்" என்னலும், அதுகேட்டசிவபிரான் "சூரியனே! இந்தத் திருக்கயிலாசமலையைப்போலும் புதுவையென்னுந் திவ்வியக்ஷேத்திரத்திலே சுயம்பு மூர்த்தியாக யாம் திருவுருக்கொண்டிருப்போம். அங்குச் சென்று நம்மைப் பூசனை செய்வாயாக" என்றருளிச்செய்தனர். உடனே சூரியன் விடைபெற்றுக்கொண்டு புதுவையென்னு மடவார் வளாகத்திலே சென்று ஆங்குள்ள பற்பல வளங்களையும்பார்த்துச் சந்தோஷமுற்றுப் பின்னர் கோடிசூரியப்பிரகாசம்போல் முளைத்திருக்குஞ் சிவலிங்கத்தைத் தரிசித்துச் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து தன்னுடைய கிரணத்தாலுண்டாகிய அமுத தீர்த்தவினாலே சிவலிங்கப்பெருமானை யபிடேகஞ்செய்து அருக்கியபாத்தியாதி கொடுத்து விதிப்படி மந்திரங்களாலே பூசித்துத் தோத்திரஞ்செய்

து நின்றான். சிவலிங்கப்பெருமான் அவனது பூசைக்குத் திருவுளமிரங்கிப்பார்த்து "உன்னுடைய வேண்டுகோள் யாது?" என்றுகேட்கச்சூரியன் "சுவாமீ!உம்மைத் தினந்தோறும் பூசிக்கும் பெரும்பேறு நல்கிக் காத்தருளவேண்டும்" என்றலும் சுவாமி சூரியனைப்பார்த்து "எல்லா வுலகத்திலுங் காலத்தை யளப்பதற்குஞ் சந்தியாதி தவங்கண்முடிப்பதற்கும் நீயே கருவியாயிருக்கின்றாய்! உன்னுடைய உதயகாலமே சிருட்டி; உச்சிக்காலமே திதி; மாலைக்காலமே சங்காரமாம். ஆதலால் இம்முத்தொழிலுக்கும் நீயே கருவியாயுமிருக்கின்றாய். இந்தப் புதுவைத்தலத்தோடு மகாமேருவையுந் தினந்தோறும் வலஞ்சுற்றி வருவாயாக. உனக்கு யாதொரு வருத்தமுஞ்சேராது. சிவானந்த வாழ்க்கையையும் இம்மையிலே தந்தோம். நீ எந்தத்தொழிலைச்செய்தாலும் நம்முடைய ஆஞ்ஞையென்றே யெண்ணிச்செய்து நம்முடைய கருணையைச் சார்வாய். இறுதியிலே மோக்ஷமுமடைவாய்" என்று கூறியருளினர்.

அதுகேட்டுச் சூரியன் ஆனந்தக்கண்ணீர்சோரக் கீழேவிழுந்து வணங்கி யெழுந்து துதித்து நிற்கும்போது எட்டுத்திக்கும் ஆகாயத்தை யளாவி வன்னி விருக்ஷங்களோங்கி வளர்ந்து வனமாகத் தோன்றுதலும் சூரியன் கண்டு பேராச்சரிய மெய்தி இதற்கு? யாதுகாரணமென்று பணிவுடன் கேட்டான். சிவலிங்க வடிவாகிய வயித்தியநாதேசுரர் "உன்னுடைய கிரணங்களினால் விளைந்த வித்துவானது எங்கும்படர்ந்து இந்த விருக்ஷங்களாயிற்று. இந்த விருக்ஷத்து நிழலிலே நாமெப்போதும் வசித்திருப்போம். இந்தத்தலமும் ஞானதலமாகும்" என்றருளிச்செய்தனர். அதுகேட்டுச் சூரியன் களிகூர்ந்து "சுவாமீ! இந்தப்புதுவைத் தலத்தை நினைத்தவர்கள், துதித்தவர்கள், இங்கே வந்திருந்தவர்கள், சிவகங்கையிலே தீர்த்தமாடினவர்கள், உம்முடைய திருவடியை வணங்கினவர்கள் ஆகிய எல்லாருக்கு மோக்ஷந் தந்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து வேண்டிக்கொண்டனன். சிவபிரானும் கேட்ட வரமெல்லாங்கொடுத்து "உன்னுடைய பணிவிடைக்கேகுவாய்" என்று திருவருள்சுரந்தனர். உடனே சூரியனுந் தோத்திரஞ்செய்து வணங்கிச்சென்று போய்க் கட்டளைப்படி நடந்து அளவற்றநாள்கள் செல்லப் பின்னர்ச் சிவபிரான்றிருவடி நீழலைக்கலந்திருந்தான்.

இரண்டாவது

# துருவாசர் பூசித்த அத்தியாயம்.

வானாகி வளியாகி வளர்கனலாய் வனமாகி மண்ணு மாகி, யூனாகி யுயிராகி யுயிர்க்குயிரா யொளியுணர்வா யோங்கி யாவுந், தானாகித் தனையடைந்தோர் மலமகற்றிப் பேரின்பந் தருமானந்தத், தேனாகி நிறைந்தருளும் புதுவைவயித் தீசர்பதஞ் சிந்தை செய்வாம். (க)

வேறு.

பகலவன் புதுவை யீசன் பதமல ரருச்சித் தேத்திப்
புகலரும் பேறுபெற்ற மேன்மையைப் புகன்றே மிப்பாற்
றுகளறு தவத்து நேசத் துருவாச ரூனிவன் போற்றி
யிகலறு பூசைசெய்த காதையை யியம்ப லுற்றாம். (உ)

வேறு.

பயிலு மேழ்புவி யேழ்கடல் பகர்ந்திடு மேழு
சயில மற்றுள தீவுக ளவையுடன் றாணி
வெயிலு லாமிட னெங்கணுந் தன்னொளி விளக்குங்
கயிலை யங்கிரி யானந்த லகரியாக் காணும். (௩)

அந்த மாமலை யுச்சிமீ தகன்சுனை நீரா
விந்த வாவொடு தவழ்தலா லிரசத வொளிகள்
வெந்த நீறணி மேனிபோற் கவின்விளங் குதலான்
மந்த மென்னிடை யுமையவள் கணவனே மானும். (௪)

பெரிது பற்பல முயற்சியின் வருபயன் பேணி
யரிதின் வந்துதம மகத்திருந் தருந்துநர் மானச்
சரியை யாதிகள் புவியிடை யியற்றுநற் றவர்கள்
கருதி வந்திருந் தருந்துவர் கயிலையிற் பயனே, (௫)

வேறு.

அளந்திடற் கரிய மேன்மை யக்கயி லாய நாப்பண்
வளர்திகழ் செம்பொன் மேய நவமணி மண்ட பத்தில்
விளங்கதிர் கோடி யொன்றா யுதித்தெழுந் திருந்த தென்னக்
களந்திக ழால கால கருணையங் கடலி ருந்தான். (௬)

இரும்புயன் முன்னர்த் தோன்று மிந்திர தனுமின் போலுஞ்
சுரும்புறு குழல்பு ரூரத் துலங்குபொற் பட்டந் தோன்ற
விரும்பிய மதியைப் பைய விழுங்கிடப் பழகி ராகுக்
கரும்பணிக் குருளை போலுங் கதிர்முகஞ் சுட்டி காண. (எ)

சூரசங் கார வேலுந் தூயமா யவனு மீனு
மீரமார் கருணை மேய விணைவிலோ சனங்க ளென்ன
வாரமின் னிரைபொற் றேசு மரியசெம் பவளத் தேசும்
வீரமாய் விரவி மேவும் வெண்ணகை யதரம் போலும். (அ)

செங்கதி ரிரண்டு போலுந் திகழ்தரு பதும ராகம்
பொங்கொளிக்குழைகள்வள்ளைச்செவியிடைப்பொலிந்துமல்க
வங்குபி னிசைவெண் சங்க மன்னகந் தரத்தி சைந்த
மங்கல நாணும் பூணு மணிவடம் புரண்டு மின்ன. (௯)

பன்னரு முயிர்க ளியாவும் படரிடர்த் துயர்க ணீங்க
வின்னருள் சுரந்து போக மீந்தருள் கொங்கை வெற்பை
மின்னென நுடங்கித் தேய்ந்து சுமந்திட மெலிந்து வாடுஞ்
சின்ன நுண் ணிடையும் பட்டும் பணைத்தெழுதிகிரித்தோளும்.

சுந்தரக் கடலின் மேய வாலமேற் றுயு மால்போ
லந்தவா ரிதியிற் றென்று மலையுமஞ் சுழியு மென்ன
முந்தெழி லொழுகு மேனி யுகரமு முரோம பந்தி
வந்தமென் னிரன்ம டிப்பு முந்தியும் வயங்க மாதோ. (கக)

தொடியணி நாள மேந்துந் துகளிலம் போரு கப்போற்
படிபுக ழறங்க ளியாவும் பாலனம் புரியுங் கையு
மடிமையில் புத்தி முத்தி வழங்குதும் வருதி றென்ன
மிடியகல் சிலம்ப லம்பும் விரைமல ரடியு மின்ன. (கஉ)

வேறு.

கோமள மாகதக் கொடியை யொத்திடுஞ்
சாமளை மகிழ்வொடு மருங்கிற் சாரவே
வேமழல் விழிக்கரி வதன வித்தக
ஞமவே லவனிரு மருங்கு நண்ணவே. (கங)

மண்டல மருந்திய மாயன் பங்கயன்
விண்டலம் புரப்பவன் விண்ணு ளோர்தின

மெண்டிசை காப்பவ ரியக்கர் சாரணர்
பண்டரு கின்னரர் பகர்விச் சாதரர். (௧௪)

சித்தர்கிம் புருடர்கள் சிறந்த நாகரோ
டொத்தணை கருடர்கந் திருவ ரொப்பிலா
நித்திய ரிருடியர் முனிவர் நித்தலும்
பத்திசெய் கிரியையர் சரியைப் பண்புளார். (௧௫)

பொருவரு மியோகிகள் புனித ஞானிகள்
கருவறு முத்தர்கள் கணங்கண் மற்றுளோர்
சுருதிகண் மிருதிக டௌ்ளி லங்கமோ
டொருபதி னெட்டென வுரைபு ராணநூல். (௧௬)

மருத்துவ ரிருவர்கள் வசுக்க ளெண்மர்க
ளுருத்திர தொகைபதி னொருவர் சூழ்கரு
விருத்திகொள் கதிர்கள்பன் னிருவர் மின்னொளி
குருத்திகழ் முப்பத்து மூன்று கோடிபேர். (௧௭)

மற்றுளோ ரேவரும் வந்து சந்நிதி
முற்றவு மிடந்தகை முடியின் வைத்தடி
யற்றபன் மரமென வவனி தாழ்ந்தெழுந்
திற்றது துயரெனத் திருமு னெய்தியே. (௧௮)

வேறு.

சந்நிதி நேரே நின்று தாடொழு தேத்திப் போற்றி
நன்னிதி யடைந்தோ ரென்ன நவையறு களிப்பி ளாழ்ந்து
பின்னரு மிடைதல் கண்டு நந்திகைப் பிரம்பாற் றூக்கப்
பொன்னெடு மகுட கோடி யுடைந்தும்பின் போகா ராகி. ()

வேறு.

இலவின்கனி சூழுங்கிளி யென்னப்பய னின்றுஞ்
சொலவின்கனி மொழிமங்கையர் துன்பங்கடு றந்தே
பலவின்கனி யீமொய்த்திடு பான்மைத்தென மொய்த்துக்
குலவின்கனி மொழிபங்குறை கோனைத்தரி சித்தார். (௨0)

வேறு.

இவ்வணந் தொழுது தத்த முறைமையிற் சிலரி ருப்பக்
கைவளஞ் சென்னி கூப்பிச் சிலரெதிர் கண்டுநிற்பப்
பொய்வணந் தவிர்ந்த வேத மாகமந் தரமே போற்ற
வுய்வன முகில்க ளென்னத் தேவதுந் துபியொ லிக்க. (௨௧)

வேறு.

மேனகை யுருப்பசி யரம்பை மெல்லியர்
கானமு நடனமுங் களித்தி யற்றவே
நானவி றும்புரு நார தாதிக
ஞானமில் செவிக்கிசை யமுத மூட்டவே. (௨௨)

மாமக ளுமைகள் வாழ்த்த மங்கலங்
காமுறு மிருடியர் முனிவர் கற்பினர்
சேமமா ராசிபல் லாண்டு செப்பவே
சாமர மடவியர் தாமி ரட்டவே. (௨௩)

வேறு.

பிந்தாது பணிகண் மற்றும் வேறுளோர் பேணி யாற்ற
மந்தாரம் பாரி சாதங் கற்பக மரம்வி ளங்குஞ்
சந்தான முத்த மாரி சந்தனந் தருக்க ளோங்குஞ்
சிந்தாநன் மணியுங் காம தேனுவு மணியொன் பானும். (௨௪)

வேறு.

இவையெலா மருள்வழி யேவ லாற்றிடச்
சவையவர் சூழ்ந்திடத் தார கைக்குளே
நவைதவிர் கதிரென நாடு சுந்தரக்
குவையெனுஞ் சிவையொடுங் கோனி ருந்தனன். (௨௫)

வேறு.

நித்த மீசனை நேசமா நினைதரு நியமன்
சித்த சுத்தியும் பத்தியு நிறையருட் செல்வன்
முத்தன் மும்மலம் வேரொடுங் களைந்திடு முனிவன்
மத்த மாவென வெங்கணூர் திரியருண் மனத்தன். (௨௬)

அலைகடல் சுவறி மாசி லம்பரந் துளங்கி மேரு
மலைதலை கீழாய் நீரில் வானமீ னுதிர்ந்து தேசார்
கலைமதி கதிர்கண் மாறிச் சென்றகா லத்து நின்ற
நிலைகலங் காத நேசத் துருவாச னீத முற்றோன். (௨௭)

யாதுகா ரணமோ வெம்மா வியம்புதற் கரிதி ராகு
கேதுவால் விழுங்க வுள்ளாங் கிளரிரு சுடர்கள் போலு
மோதும்வா தனைகண் மேலிட் டுள்ளொளி யருள்ப துங்கத்
தீதக விரவி யேகச் சேரிருட் படலம் போலும். (௨௮)

தூயதன் னொருவெஞ் சத்தைச் சுமேகங் காரந் தோன்ற
நேயமார் முகமுங் கோடா நெஞ்சமும் புலர்ந்து வாடி
மாயவல் விடத்தா லஞ்சி வந்தடை மால்விண் ணோர்போ
னாயகன் சவையி னங்க ணெய்தினா னமோ வெங்கி. (உகூ)

அடைந்தடி வீழ்ந்தெ ழுந்து சென்னிமீ தங்கை கூப்பிக்
குடைந்தளி முரலுங் கூந்தற் கோமளப் பச்சைப் பாலோ
டென்படு கயிலை யென்னு முயர்மலை மருந்தை நோக்கி
யிடைந்தெழு துயர நீங்க வின்னன விளம்ப லுற்றான். (௩0)

வேறு.

பரிபுர பங்கய பாதா சரணம் பகர்சது மறைபணி நீதா
சரண, மரிபிர மற்கறி வரியாய் சரண மகிலமு நிறைதரு பெரி
யாய் சரணந், திரிபுர மெரிதரு நகையாய் சரணந் திருவடி
நினையார் பகையாய் சரணங், கரியுரி திகழ்தரு காயா சரணங்
கயிலைக் கிரிவாழ் நேயா சரணம். (௩க)

விடையாய் சரணம் விமலா சரணம் விபவா சரணம் விகி
ர்தா சரணஞ், சடையாய் சரணந் தலைவா சரணந் தந்தாய்
சரணந் தாயே சரண, முடையாய் சரணம் முறவே சரணம்
முணர்வே சரணம் முரியாய் சரணங், கடையா மெனையாள்
கதியே சரணங் கயிலைக் கிரிவாழ் பதியே சரணம். (௩உ)

வேறு.

அத்த னேயெம தையனே யன்பனே யருள்சேர்
பித்த னேசடைப் பிறையனே பெரியபி ரானே
சித்த னேயுயர் தேவனே தேசனே சிவனே
முத்த னேபிழை பொறுத்தரு ளெனமுனி மொழிவான். ()

வெள்ள நள்ளினி லுறைபவ னுவுலர் விதிபோற்
றெள்ளு முள்ளொளி நின்னரு ளடைந்துமித் தியேன்
கள்ள மாரகங் காரத்தி னூற்கருத் தழிந்தேன்
வள்ள லேயெனைத் தாங்குதல் வண்புக ழென்றான். (௩௪)

வேறு.

இத்திற மேத்தி னானை யிறைவனுங் கருணை கூர்ந்து
முத்தென வொளிரு மூர லுமையவண் முகத்தை நோக்க
வுத்தமி கருணை மெய்த்தா யாதலா லுளத்தி லன்போ
டத்தனை யிறைஞ்சிப் போற்றி யாதரத் தியம்ப லுற்றாள். (௩௫)

வேறு.

சந்தத் தின்பதஞ் சாரு நீதிய
னந்தமி லன்புள னடியர் தங்களின்
முந்துறு பத்திசேர் முதன்மை யெய்தினேன்
பந்தமின் முனிக்கருள் பாலி யென்றனன். (௫௬)

பரைபகர் மொழிகளைப் பரிந்து கேட்டுளங்
கரையறு கருணையங் கடலுங் கூறுவான்
றரைபுகழ் முனிவர சாற்றக் கேளினித்
திரைகடல் சூழ்புவித் தெக்கி ணத்தினில். (௫௭)

வேறு.

பொன்புவி மடவா ரேதுப் பொருந்திய வாசை நீத்த
வன்புடை யோர்க ளென்று மாசைசேர் சமிவ னஞ்சூழ்
தென்புது வைத்த லத்திற் சிந்தையு ளுவந்தெக் காலு
மின்புரு வாய சோதி யிலிங்கமா முளைத்தி ருப்போம். (௫௮)

அப்பதிக் கேகி நம்மை யருச்சனை விதிவ ழாது
மெய்ப்பரி வொடுபு ரிந்தால் வெந்துய ரகலு மென்று
செப்பியே யண்ண லேகென் றருளினன் றிகழ்த வத்தோ
னொப்பிலா விடைகொண் டாறு வுறுதியோடுவந்துசெல்வான்.

கயிலைகே தாரங் காசி காஞ்சியூர் திருக்கா ளத்தி
யெயின்முது குன்ற மாரூ ரியம்புமா யூரங் கீரங்
குயிலிசை பொழில்சூழ் தில்லை சீகாழி கும்ப கோணம்
பயின்மறைத் திருவை யாறு பகர்திரு வாலங் காடு. (௬௰)

திருவிடை மருதூர் காரூர் திருவண்ணா மலையா னைக்கா
பொருவறு தாயு மானேன் றிரிசிரா மலைபுத் தூரு
வெருவறு திருவி ராமீச் சுரமுடன் வியன்*பூ வண்ணங்
கருவறு திருவா டானை கமழ்புனல் வாயில் கண்டு. (௬௧)

பரங்கிரி சுழிய லேட கம்பகர் மதுரை வேட்ட
வரந்தரு மாப்ப னல்லூர் மல்லல்சேர் திருக்குற் றாலந்
திரம்பெறு திருநெல் வேலித் திருப்பதி யுள்ள வெல்லாந்
தாம்பெறு பத்தி யோடுந் துருவாச முனிவன் றாழ்ந்து. (௬௨)

---

*பூவண்ணம் - விரித்தல் விகாரம்.

### வேறு.

அண்ணல் கூறிய வருள்வழிப் புதுவையை யடைந்து
கண்ண கன்பதி மகிமையக் களிப்பொடுங் கண்டு
பண்ணி னேர்மொழி பாகனை யருச்சனை பண்ண
நண்ணி யெங்கணுந் தேடினன் கண்டில னலிந்தான். (௪௩)

இந்த னத்தினு ளெரியெனப் பாலுணெய் யெனவுங்
கந்த னத்தனு மறைந்தன னியாதுளக் கருத்தோ
வந்த னத்துமை பங்கினன் றிருவிளை யாடன்
முந்த னத்தனு மறிவொணு வுரைமுடி வன்றோ. (௪௪)

அண்ட கோடிக ளனைத்தையு மோர்கணத் தாக்கி
மண்டு மக்கணத் தொடுக்கிய வல்லவன் றனக்குக்
கொண்ட தன்குறி யென்பொருட் டான்மறை குறிப்பைக்
கண்டு ளத்தினி லற்புத மெய்துதல் கருத்தோ. (௪௫)

ஆத லாலரன் கருணையின் செயலையா ரறிவார்
ஓத வாரிறை சிந்தையேன் றீமைக ளியாவோ
கோதி லிந்தனங் கடைந்தெரி கொள்பவர் குணம்போ
லேத மற்றிடுந் தவம்புரி வேனென வெழுந்தான். (௪௬)

### வேறு.

சிதைவறு சமிவனத் திசை திக்கினிற்
சதுரமா விரைவினிற் பன்ன சாலையொன்
றதுலமா வமைத்துளத் தருத்தி யெய்தியே
முதுசிவ கங்கையின் மூழ்கித் தூய்துடன். (௪௭)

### வேறு.

சாலையு ளுப்ப ணெய்திப் பங்கயா சனத்தி ருந்து
சீலமா ரஞ்செ ழுத்தை விதிப்படி செபித்துத் தோன்று
மோலமா ரருளைக் கூடி யுறவொடு பகையைக் கண்டு
தூலமார் சகல கேவ லங்களைத் தூரந்து தள்ளி. (௪௮)

அகம்பரி சுத்தி செய்தவ் வகத்தினு ளன்பு பொங்கச்
செகம்புகழ் கயிலை மேய தேவர்க டேவை யன்று
முகந்திகழ் விழியாற் கண்ட முறையொடுங் கருதிப் பாவித்
திகம்பர மருளு மென்ன விடையறு துளத்தி ருத்தி. (௪௯)

வேறு.

காம மாதியா மறுவகைக் களைகளுங் கடிந்து
தூம மாரெரி யெனச்சுடும் புலப்பிணி தூர்ந்தே
யேம மேவிட வுளக்கணாற் கண்டுகொண் டிருந்தான்
வாம மேகலை பாகனை யேகனை வழுத்தி. (ருo)

பத்தி யன்பொடு சிவகங்கைத் தடத்தினுட் படிந்து
நித்தி யம்புரி சந்திவந் தனைத்தொழி னிறுவிப்
புத்தி நீர்வளி யொவ்வொரு காற்புசித் திருந்தே
யித்தி றம்பல நாட்டவஞ் செய்தினி திருந்தான். (ருக)

வேறு

இருளொளி யெனவிரு ளியல்பிற் றோன்றிய
மருடெரு ளெனமருள் வழங்கு மம்மலந்
தெருண்மரு ளெனத்தெளி தெருளின் றன்மையா
மருளையு மறைத்திடு மளத்தற் பாலதோ. (ருஉ)

வேறு.

வித்துக ளாயெ ஸவக்கு மிருவகை விருத்தி யெய்துஞ்
சித்துகண் மருளும் வண்ண முடலுறச் சேர்த்துக் கட்டு
முத்துக ளிடைய றாத முழுமலத் தன்மை தன்னைச்
சத்துக ளறிவா ரென்னே யவரையுந் தாக்கு மன்றே. (ருங)

இத்தகு மலத்தின் றன்மை யித்திற மாத லாலே
மெய்த்தவம் பண்ணு ளாற்றத் துருவாச மேலோன் றன்னை
மொய்த்தது முழுது நீங்க முன்னவன் கருணை பூப்பக்
கொத்துறு மிரவி யென்னப் பரவொளிக் குறியைக்கண்டான்.

வேறு.

தாயனி நிகர்சிவ கங்கை தன்னுளே
நாயக னருளினு னவையி றிப்பிய
வாயிர விதழ்க்கம லத்தி னன்பொடு
மேயதோ ரிலிங்கமொன் றெய்தக் கண்டனன். (ருரு)

வேறு.

மாதம் பத்துஞ் சுமந்து மகப்பெறும்
பேதை யானென வத்துயர் பேர்தல்போல்
வேத மாதவன் செய்தவ வெந்துயர்
போத னைக்கண்ட வக்கணம் போனதே. (ருசு)

கனவு கண்ட கடேந்து யரக்குழு
கனவு வந்திட நாச மடைதல்போன்
முனித வத்தின் வருந்த முழுவது
மனக லைக்கண்ட வக்கணஞ் சென்றதே. (௫௭)

## வேறு.

இந்தவா றுடவின் றுன்ப மிதயமார் துன்ப மியாவு
முந்தனைக் கண்ட போழ்தே முடிந்திட முனியெ ழுந்தே
யெந்தையே யீசா வென்று நிலமுறத் தாழ்ந்தெ ழுந்து
சிந்தனை யணைந்து புல்லச் சென்னிமேற் செங்கை யேற, ()

வரக்கணுற் கண்ட காட்சி யனல்விழி வழியா கச்சென்
றாக்கென வுளமு ருக்கக் கசிந்துநைந் தன்பு பொங்கத்
திரக்கரு ணையனைப் பின்னர்க் கண்டநற் காட்சி சென்றுள்
ளிரக்கமாரமுதம்போலு மினிமையைவிளைத்ததன்றே. (௫௯)

இருவிழி யருவி சோர விதயத்து ளின்ப மோங்க
வுருவுரோ மம்பொ டிப்ப வுவந்திரு கான டிப்பப்
பொங்கிய வுயிரன் னுரைப் பிரிந்துபின் பெற்றோர் போலு
மருகலி லன்பால் வாய்விட் டலறியீ தறைய லுற்றான். (௬௦)

## வேறு.

நாரணற் கரியாய் போற்றி நான்முக னறியாய் போற்றி
யாரணப் பொருளே போற்றி யதினுறை மறையே போற்றி
காரணத் தருளே போற்றி காரணங் கடந்தோய் போற்றி
பூரணத் தனியே போற்றி புதுவைநா யகனே போற்றி. (௬௧)

இறைவனே போற்றி போற்றி யீசனே போற்றி போற்றி
யறவனே போற்றி போற்றி யநகனே போற்றி போற்றி
துறவனே போற்றி போற்றி சுத்தனே போற்றி போற்றி
மறைதுதி நீதா போற்றி வயித்திய நாதா போற்றி. (௬௨)

நாதனே போற்றி யென்று நவின்றேத்து முனிவன் றன்னை
வேதனு மறியா வெந்தை விளம்புமம் பரவாக் காக
யாதனை யொழிநீ யஞ்சே லெமதிடத் துனது பத்தி
சோதனையெவர்க்குக் தோன்றமறைந்துபின்றோன்றினேமால்.

இச்சமி வனத்தி னள்ளி னென்றுநா மிலிங்க மாக
நிச்சய மாவி ருப்போங் கண்டனை யிப்பா னியும்

பொச்சமி லன்பி னேடு மருச்சனை புரிதி யென்றே
யச்சமின் முனிவன் காண விலிங்கத்து ளடைந்தா னன்றே.

இவ்வகை கண்டு மீண்டு மிறைஞ்சிவீழ்ந் தெழுந்து சென்றே
யவ்வகை யருகு போந்து வள்ளலா ரருளைப் பெற்றுச்
செய்வையி னருச்ச னைக்குச் சிந்தனை விரைவு கூரக்
கவ்வையார் தரங்க மேய கங்கையுட் கடிதின் மூழ்கி. (சூ௫)

வேறு.

சந்தி வந்தனை செபதவஞ் சதுர்பெற முடித்துக்
கொந்து சேர்தரு பன்மலர் கோதிலா தெடுத்துச்
சிந்தை யன்பொடு மரவிந்த மாமலர் தேட
வந்து தோன்றின சிவகங்கைத் தடத்தினுண் மன்னி. ()

அண்ண லார்திரு வருளினு லாயிர மிதழ்க
ணண்ணி யெங்கணுந் திப்பிய வாசமா கயந்து
கண்ணு நெஞ்சமுங் கவர்தரு கவினுடைக் கமலம்
புண்ணி யத்தவன் கண்டனன் கொண்டனன் புகழ்ந்து.

வேறு.

ஆண்டவன் பாத மன்போ டருச்சனை வழிபா டாற்ற
வேண்டிய திரவி யங்கள் விப்பிர ரேந்தி நல்க
மாண்டபே ருவகை யோடு வரதன்முன் னெய்திப் பார்மே
னீண்டகை குவித்தட் டாங்க தண்டமா நெடிதின் வீழ்ந்து.

எழுந்துநின் றுனை யாய வின்னருள் பெற்றி ருந்தே
யழுந்திடு மபிடே காதி திரவிய மமுது மற்றுந்
தொழுந்தகைப் பாத்தி யாதி சோர்வற வமைத்துப் போற்றிச்
செழுந்தவமுனிவன்பூசைசெயுஞ்செயன்முறையைச்சேர்ந்தான்.

மூந்துறு திருத்து வார மூர்த்திகட் கருச்ச னுதி
வந்தனை யியற்றிப் பஞ்ச சுத்திகண் மரபி னுற்றி
நிந்தையி லிதயமாகு நளினமார் நேசந் தன்னைப்
புந்தியுள் வியந்து போற்றிப் புனிதனை மகிழ்ந்து வாழ்த்தி.(எ0)

தேகியா யிசைந்த தன்னைத் திகழ்சிவ மாகப் பாவித்
தேகமா யிரவி கோடி யெனவொளிர் சிவனை நெஞ்சத்
தோகையா வாக னுதி யுதவியே தாப னுதி
போகமார் சன்னி தானஞ் சன்னிரோ தனம் புரிந்து. (எக)

முன்னிய வாச னாதி மூர்த்திமூ லங்க ளோதி
வன்னமென் மலர்கள் சாத்தி மரபுளி யாவி னைந்துந்
துன்னிய வெண்ணெய் நெய்மா தூயமென் மஞ்சணெல்லி
பன்னிய வான றும்பா றயிர்நறு நெய்ப சுந்தேன். (எ௨)

சருக்கரை கனிகொள் சாறு தண்ணிள நீர்கண் மற்றும்
விருப்புட னாட்டி நன்னீ ரிடையிடை மேவ வாட்டிக்
கருப்புரச் சந்த னாதி குழம்பவை கமழச் சாத்திச்
சுருக்கமி லமுத ளித்துத் தூபதீ யங்கொ டுத்து. (எ௩)

அனகவி சேட மாய வருக்கிய மபிடே கித்தே
யினியவொண் டிருவொற் றாடை யிசையவீ ரம்பு லர்த்திப்
புனிதபட் டாடை சாத்திப் பூதிநீ றணிந்து போற்றிப்
பனிவிரைக் கலவை சாந்தம் பரிவிலே பனம்பு னைந்து. (எ௪)

பற்பல மலரால் வேய்ந்த பற்பல தொடையல் சாத்தி
யற்புத மனுக்க ளோதி மலர்களா லருச்சித் தேத்திப்
பொற்புறு மிலய போக வங்கமா வரணம் போற்றி
வெற்புமின் பூசை யாற்றி வியங்கிவே தனங்க ணல்கி. (எ௫)

வேறு.

தாம்பூ லாதி முகவாசந் தகையோ டருளிச் சந்தவிரைக்
காம்பார் தூப தீபமணங் கமழா லத்தி மற்றுளவு
மேம்பா டாகப் பணிமாறி விளங்கும் பாத்தி யாதி நல்கித்
தேம்பாடலுடன்மறைமொழியாற்றிருமுன்னேதோத்திரம்புரிந்து.

வேறு.

சோடச வுபசா ரத்தாற் றாயனை யருச்சித் தேத்திப்
பாடுறப் புரிந்த பூசா பலனொடு தனையு மீந்து
தேடிய வன்பி னோடு மரகர சிவாய வென்றே
வீடுற நிலத்தட் டாங்க விதமுறப் பணிந்தெ ழுந்து. (எ௭)

இயம்பிடுந் தேகச் செக்கி லிசைந்த திண் மலக்க ரும்பை
நயம்படப் புரிந்த பூசை முசலமா நனிநெ ருக்கப்
பயம்படு சாறு போலு மிருகணீ ரருவி பாய
வியம்பட வலங்கள் செய்து சுருதியாற் புகழ்வி ளம்பி. (எ௮)

தொழுதுதி யானஞ் செய்து சொன்மனச் செயலாற் சுட்டி
யெழுதிட வரிய சோதி யீசனைச் சிறும கார்போ

வழுதழு திரங்கி யன்போ டம்மையே யப்பா வென்றன்
பழுதறு துயர்தீர்த் தாள்வா யென்றென்றே பகருங் காலை.

வேறு.

பஞ்சா னனமு நீள்சடையுஞ் சடைமே னீள்பா கீரதியுந்
துஞ்சா வியல்பா முகந்தோறுந் தோன்று மூன்று சுடர்விழியு
நஞ்சார் மிடறு முமைகூறு நாகா பரண நகைவனப்பு
மஞ்சே லென்னு மபயமொடு வரத காமு மடியிணையும். (௮௦)

வேறு.

தெரிவுற முனிவன்முன் செம்ம றோன்றினு
னரிதரி தெனமுனி யற்பு தத்தொடும்
பரிபுர மலரடி பணிந்து வீழ்ந்தெழுந்
துரியவன் புடன்மகிழ்ந் துரைக்க லுற்றனன். (௮௧)

அரவணைக் கடவுளு மம்பு யத்தனுஞ்
சிரமுறு பற்பல காலந் தேடியுங்
கரவக லடிமுடி காணொ ணுதவப்
புரகர வரகர போற்றி போற்றியே. (௮௨)

வேறு.

தற்பரா பரனே போற்றி தாணுவே யரனே போற்றி
சிற்பரை பங்கா போற்றி திகழ்சடைக் கங்காய் போற்றி
யற்புதத் தேசா போற்றி யம்பர கேசா போற்றி
பொற்பமை நீதா போற்றி புதுவையா ளுதா போற்றி. (௮௩)

உலகெலாம்படைப்பாய்போற்றி யுலகெலாம்புரப்பாய்போற்றி
யுலகெலாந் துடைப்பாய் போற்றி யுலகெலா மானாய்போற்றி
யுலகம்வே றானாய் போற்றி யுலகெலாம் புகழ்வோய் போற்றி
யுலகெலாம் பணிந்து போற்று முயர்புது வையனே போற்றி.

தூயனே போற்றி யென்று தோத்திரம் புரிந்து நின்று
நாயனே யென்னை யாண்ட நாதனே நின்னை யென்று
சேயமோ டருச்சித் தேத்து நினைவருள் செய்து தீய
மாயமா லணுகா வண்ணம் வரமெனக் கருளு கென்றான். ()

வேறு.

அண்டர் நாயகன் முனிவரன் பணிக்கக மகிழ்ந்து
மூண்ட கப்பதத் தருச்சனை முயல்வரந் தந்தோங்

தொண்டி னுலெலமைப் பூசைசெய் திவணிரு தூயோய்
பண்டை யாணவ முலைத்தொட ராவகை பகர்வோம். (அசு)

என்று கூறியெம் மிறைவது மிலிங்கத்து ளெய்தி
யொன்றி னுனெனச் சூதனுஞ் சவுனகர்க் குரைத்தா
னன்று நன்றென வம்முனி வரருள நயந்து
துன்று மன்பொடு சூதமா முனியடி தொழுது. (அஎ)

பேத மின்றியே பூவினு னர்மணம் பெறல்போன்
மாத வம்புரிந் தயர்துரு வாசமா முனிவன்
காதை நீசொலுஞ் சொலுந்தொறுங் கருத்துநைந் துருகி
யேத நீங்கின மேன்முயன் றதுவிளம் பென்றார். (அஅ)

## துருவாசர் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௬௨௨.

### துருவாசமுனிவர் பூசித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதியர் கேட்கச் சூதபுராணிகர் சொல்லுவார்:—எல்லாவுலகங்களினும் தன்னுடைய பிரகாசத்தை விளக்கிக்காட்டுகின்ற அளப்பதற்கரிதாகிய மான்மியமுள்ள திருக்கைலாயமலையின் மத்தியில் நவரத்தினங்களாலே செய்யப்பட்ட ஒரு மண்டபத்திலே சருவாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு எல்லா அவயங்களும் பிரகாசிக்க உமாதேவியாரொருபக்கத்திலும் யானைமுக விநாயகக்கடவுளும் வேலாயுதத்தைத் தாங்கிய முருகக்கடவுளு மிரண்டுபக்கத்திலுமிருக்கக் கோடிசூரிய ரொருங்கு திரண்டு உதயஞ் செய்ததுபோலக் கருணையங்கடலாகிய சிவபிரானெழுந்தருளியிருந்தனர்.

இவ்வாறாகப் பிரமன், விஷ்ணு, இந்திரன், திக்குப்பாலகர், இயக்கர், சாரணர், கின்னரர், வித்தியாதரர், சித்தர், கிம்புருடர், நாகர், கருடர், கந்திருவர், இருடியர், முனிவர், சரியை கிரியை யோகஞானமார்க்கத்தார், சீவன்முத்தர், சிவகணங்கள், வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், மருத்துவர், அட்டவசுக்கள், பதினொரு ருத்திரர், பன்னிருசூரியர் முதலியோர்கள் வந்து அடியற்ற மரம்போலே கீழேவிழுந்து பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து மகிழ்ச்சியடைந்து, மகுடகோடிக ளுடைபடும்படி நிருத்திதேவர் பிரம்பாலடிக்கவும் போகாதவராய்ச் சூழ்ந்து நிற்கவுந் தேவதுந்துபி முழங்கவும் மேனகை, யுருப்பசியாதிய தேவப்பெண்கள் நடனஞ்செய்யவுந்,

தும்புருநாரதர் இசைப்பாட்டுப் பாடவும், இலக்குமியுஞ் சரசுவதியும் மங்கலவாழ்த்துப்பாடவும், ருஷி பத்தினிகள் பல்லாண்டு கூறவும், தேவப்பெண்கள் சாமரை வீசவும், பஞ்சதருக்களுஞ் சிந்தாமணியுங் காமதேனுவும் பரமேசுரனுடைய திருவுளக்குறிப்பின்படி யேவல்கள் செய்யவுமிருந்த சமயத்திலே ஆணவம், மாயை, கன்மம் என்னு மும்மலங்களையும் வேரோடறுத்தெறியு நிலைகலங்காத துருவாசமுனிவர் வந்து சிவபிரானை நமஸ்காரஞ்செய்து தோத்திரம்புரிந்து "சுவாமீ! உம்முடைய திருவருளைப்பெற்றிருந்தும் அடியேனுடைய என்ணத்திலே அகங்காரமானது அதிகரிக்க மிக வருத்தமுற்றேன். அதனை யொழித்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தலும், பக்கத்தில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் கேட்டுச் சுவாமியை நோக்கி, "இம்முனிவன் பத்தர்களுக்குள் சிறந்தவன், இவனுக்குத்" திருவருள்புரியுமென்று பிரார்த்தித்தனள். உடனே சிவபிரானும் முனிவரை நோக்கித் "தெக்கிணதேசத்திலே சமிவனமாகிய புதுவைத்தலமென வொன்றிருக்கின்றது. அத்தலத்திலே யெக்காலமுஞ் சோதிலிங்கமாக மூலைத் திருப்போம். அங்கே சென்று நம்மை விதிப்படி பூசனை புரிவையாகி லுன்னுடைய மனக்கவலை யொழியும்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

உடனே துருவாசமுனிவர் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுக் கேதாரம், காசி, காஞ்சி, முதலிய திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் புதுவைத்தலத்திலே வந்து சேர்ந்து சோதிலிங்கத்தைத்தேடிக் காணுமல் மதிமயங்கி "அடியேன்செய்தகுற்றங்கள் எவையோ? இனித் தவஞ்செய்தாயினும் எம்பிரானைக் காண்பேன்" என்று ஈசானதிக்கிலே பன்னசாலைசெய்து பதுமாசனத்திலிருந்து மனம் பரிசுத்தராய்ப் பஞ்சாக்கர செபஞ்செய்து சிவபிரானை யிருதயத்திலேயிருத்தி விதிப்படி நிட்டைகூடிப் பலநாளிருந்தனர். பின்னர் அவரது இருதயத்திலே சோதிலிங்க தரிசனங்கிடைக்கத் தரிசிக்கும்போது சிவகங்கைத் தீர்த்தத்தினுள்ளே திருவருளாலே ஆயிரமிதழோடுகூடிய தாமரைப்பூமலர, அதனடுவே சிவலிங்கப்பெருமான் வீற்றிருந்தனர். அவரை முனிவர் நேரிலேபார்த்து நெடுநாளாகத் தவமுயன்ற வருத்தமுந் தரிசனங்கிடையாத கவலையு நீங்கப்பெற்று நிலத்திலேவிழுந்து கும்பிட்டுப் பலவாறு துதிசெய்து நின்றனர்.

அப்போது சிவபிரான் திருவருளாலே யசரீரிவாக்காக "முனிவனே! உன்னுடைய பத்தித்தன்மையை யெல்லாருக்குந்தெரியும்

படி வெளிப்படுத்தும்பொருட்டு இதுகாறு மறைந்திருந்தோம். இச் சமிவனத்தின் மத்தியிலே இலிங்கரூபமாக இருக்கின்றோம். நீ நம்மையே யருச்சனை செய்வாயாக" என்று அருளிச்செய்து இலிங்கத்துள்ளே சென்றிருந்தனர். அதுகேட்ட துருவாசமுனிவர் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனை முடித்து ஆங்குள்ள ஆயிரவிதழ்த்தாமரை மலர்களெடுத்துப் பின்னும் பூசைக்குவேண்டிய திரவியங்களெல்லாம் வரவழைத்துக்கொண்டு சிவலிங்கப்பெருமானையபிடேக மலங்கார தூப தீப நைவேத்தியங்களால் விதிப்படி பூசித்து வணங்கித் தோத்திரம்பண்ணிப் பூசாபலனைச் சிவபிரானுக்கேயர்ப்பணஞ்செய்து நிற்கும்போது திருவருள் சுரந்து சிவபெருமான் ஐந்துமுகங்களும் அபயவரத கரங்களும் உமதேவியாரொருபாகமுந் தோன்றத் திருவுருக்கொண்டு காட்சி கொடுத்தனர். அப்போது துருவாசமுனிவரானந்த பரவசராய் வணங்கிச் " சுவாமீ! உமைப்பூசைசெய்யுமெண்ணத்தை யளித்து ஆணவமலமாகிய அகங்காரந் தொடராவகையருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சுவாமி அதுகேட்டு "முனிவனே! நம்மைப் பூசித்திருக்கும் வரந்தந்தோம். இத்தலத்திலே யஞ்ஞனஞ் செய்திருக்கக்கடவாய். ஆணவமுன்னைத் தொடராவண்ணம் நாமுனக்குச் சிலகாலஞ்சென்றபின்பு உபதேசஞ்செய்வோம்" என்றருளி இலிங்கத்துள்ளே மறைந்தனர்.

மூன்றாவது.

# ஞானோபதேச அத்தியாயம்.

ஓவாது கணமேனு மறத்தலின்றி யுணர்வோர்க ளுள்ள
நீங்கா, மூவாத முழுமுதலை யெனையுமெடுத் தாளவட்ட மூர்
த்த மாகி, மாவாது புரிமனத்தைத் திருத்தியரு ளீந்தருளும்
வரதன் றன்னைத், தேவாதி தேவர்தொழும் புதுவைவயித் தீச
னையெஞ் சிந்தை சேர்ப்பாம். (௧)

வேறு.

நீரத னீல வண்ண னிநமல பாதந் தேடச்
சாரத மாது காதன் சடைமுடி நெடுநா ணேட
வீரத யாவி னன்பர்க் கேவல்செ யீசன் கீர்த்தி
காரத னாசற் கோது முறைமையி னவில்வன் சூதன்.

வேறு.

மங்கை பங்கனைத் தொழுந்தரு வாசமா முனிவன்
பங்க யஞ்செறி சிவ கங்கைத் தடத்தினுட் படிந்து
பொங்கு பத்திசேர் நித்திய நியமங்கள் புரிந்து
செங்கை யாரவோர் பழுதிலாச் செழுமல ரெடுத்து. (௩)

வேறு.

திருமுடிக் காட்ட வேண்டுந் திரவியம் பலவு மீட்டிப்
பொருவரு மமுது வர்க்கம் புகலுப கரண மியாவு
மருமறை யவர்க ளேந்த வாகமந் தனைவி னன்பு
மருவுப சார நேசம் வண்மைக ளிடைய றாது. (௪)

மந்திர கிரியை யோடு பாவனை மயங்கா வண்ணஞ்
சிந்தையுட் கவர்ச்சி யின்றிச் செப்பிய முறையி னொன்று
நந்திடி லுளத்தி லச்ச நணுகிட வுடறு ளங்க
விந்தவா றடைந்து தேவ தேவனை யருச்சித் தேத்தி. (௫)

சிதைவறு சாம கான வமுதிரு செவியி னூற்றி
யிதயமார் வேண்டு கோளை யிரந்திரந் தடுத்து வேட்டு
நிதிபெறு வறிஞ னென்னத் திருமுன்னர் நின்று நோக்கிப்
பதியெழுந் தருளு மென்னத் திசையெலா மருண்டு பார்ப்பன்.

இப்பரி சோர்ப கற்போ லெண்ணில்பல் காலம் பூசித்
தப்பனே யைய னேயெம் மண்ணலே யெனவ ணங்கக்
கப்புடை விறகைக் கையால் வருந்திடக் கடையச் செந்தீ
யொப்பென வருச்ச னத்தான் மெய்யுணர் வுதித்த தன்றே.

கண்ணிய தருண கோடி சூரிய காந்தி மல்க
மண்ணிய மோன ஞான முத்திரைக் கரம்வ யங்க
வெண்ணிரண் டாண்டி னீண்ட வாயுளி னிள்மை மேனிக்
கண்ணிரண் டுடனே கண்டோர் கருத்தையுங் கவர்வ தாகி.

முக்கணன் றிகழி லிங்க மூர்த்தியு ணின்று தேசார்
தெக்கிண மூர்த்த மாகத் திருவரு ளுருவங் கொண்டே
யெக்கணத் தேவரும் போற்ற வெழுந்தரு ளியல்பு நோக்கி
யக்கணத் தடியிற் றாழ்ந்தான் றுருவாச வருந்த வத்தோன். (௯)

விரைமல ரடியிற் பல்கால் வீழ்ந்துவீழ்ந் தெழுந்தெ ழுந்து
கரையறு சோதி யின்பக் கடலைநேர் காணுந் தோறு

மூரையறு கேசம் பொங்க வுடலெலாம் புளக மோங்கத்
திரையறு முத்தி போலுந் திகழ்சி வானந்த மெய்த. (கο)

அதிசய மடைந்து தூய விகமுக மலர்ந்து வேதந்
துதிசெயமதிக்கவொண்ணுச்சொற்பொருள்கடந்துமுன்னுள்
விதியொடு மாலுந் தேட வெளிப்படா துயர்ந்த தேவை
மதிசய மடைந்து சோர்ந்து மொழிதடு மாறிக் கூறும். (கக)

சோமனைத் தரித்தாய் போற்றி சுரநதி தரித்தாய் போற்றி
காமனை யெரித்தாய் போற்றி கரியுரி பரித்தாய் போற்றி
மாமனை வதைத்தாய் போற்றி வஞ்சனை யுதைத்தாய் போற்றி
பூமனைப்புரந்தாய் போற்றி புதுவையு ளிருந்தாய் போற்றி. ()

சிந்தனைக் கரிய தேவ தேவனே நின்னைப் போற்றி
வந்தனை புரிய யானோ வல்லனுண் மகிழ்ச்சி கூர
வென்றனை யென்று கொண்டிங் கெழுந்தரு ளியல்பு நூக்கின்
முந்தநின்கருணைத்தன்மையன்றியோர்மொழியுமுண்டோ. ()

செம்மனின் கருணை மேனித் தெரிசனஞ் செய்த போழ்தே
மும்மலக் குழுக்க ணீங்கி முழுவது மின்பத் தாழ்ந்தேன்
வெம்மைசேர் காம மாதி வேரறப் பறிந்து போன
வம்மவிவ் வதிச யப்பே றார்பெறு வார்க ளையா. (கச)

இவ்வழி னிகழ்ந்த வின்ப மிடையறா தென்னை மேவிச்
செவ்வைவழி னிற்க வேந்தாய் திருவுள மிரங்கி முன்னைக்
கௌவைசேர் தேக வாத ஞதிகள் கலந்து கேதப்
பௌவவெம் பிறவிசாரா வருளையும் பரிவி னல்கி. (கரு)

கருணையங் கடலே முன்னுட் காரண மொன்று மின்றிச்
சரணிணை முடிமேல் வைத்துத் தந்தரு ணெறிகள் யாவு
மருணனி மிகுதி யாலே களித்தவை மறந்தே னந்தேன்
றெருணய மன்பா வின்னுந் திருவருள் புரிய வேண்டும். (கசு)

இத்திற முனிவன் கூற விறைவனு மன்பு கூர்ந்து
பத்தியும் பயமு முள்ளப் பாகமும் பரிவு நோக்கிச்
சித்தமுண் மகிழ்ந்து நல்குந் திருவடி பிழைத்தல் காத்துச்
சத்திய ஞான பாதத் தகைமையைச் சாற்ற லுற்றான். (கஎ)

வேறு.

வேத வாதனத் திருந்தருர் தவன்முடி மீதிற்
பாதஞ் சூட்டிநற் றிருவரு ளூக்கினுற் பார்த்தே
யோது மம்முனி யுயிருட லொளிவடி வாக்கி
நீத மார்திரு வாய்மலர்ந் தருளுவா னிமலன். (கஅ)

வேறு.

பூத மேமுத னதமீ ருப்புகல் கருவி
பேத மாமுனக் கன்னிய மாமெனப் பேணி
நீத மார்தர நின்றுணர்ந் தறிவது நீயே
கோதி னின்னறி வேதிரு வருளெனக் கொள்வாய். (கக)

வேறு.

அம்மொழிக் கைய முண்டே லாருயி ரறியா தொன்றுஞ்
செம்மையில் கருவி யாவுஞ் சடக்கூழுத் தெரிவா யென்றும்
வெம்மைதீ ரருளே நின்னை விட்டுநீங் காது நின்றே
யிம்மையு மறுமைப் பேறு மருந்திட வியற்று மென்றும். (உ0)

கேவல முயிரி னுண்மை யெனுமுரை கேட்டு ணர்ந்து
மாவலா யென்று நீங்கா வருளுயிர்க் கறிவாக் கண்டுங்
காவல்சே ரருளைத் தேடுங் கண்ணிலார் தம்மைத் தேடிப்
பூவலஞ் செய்துங் காணுப் பொறியிலார் போலு மன்றே. ()

அருப்புறு கருவிக் கெல்லா மதன்செயல் விருத்தி நல்கி
விருப்புறு முயிரைக் கூட்டி வினைகளைப் புசிப்பித் தேயுந்
திருப்பெரு கறிவை யன்றி யொன்றேனுஞ் செயற்ப டாதால்
விருப்புறு விழிக்குப் பானு வியற்றிடு மியல்பிற் றாமே. (உஉ)

பொன்னறி வாகி யெங்கும் பொருந்துமப் புனித ஞானந்
தன்னறி வாகி வேறற் றிருக்குமத் தன்மை காணு
நன்னெறி யாதோ வென்னிற் சொல்லுகே நயந்து கேணீ
சென்னெறிப் புலனைக் காண்ட றன்னறி வன்றோ தேர்க. ()

அருளிய வுரையை யுள்ளத் தமைத்துற வாய்ந்து பார்த்தே
யிருளிறன் னறிவைக் கண்டு கேவலமுயிர்க்கென் றெண்ணின்
மருளகன் றருளாய் நின்று மன்னுநின் னறிவு கண்டாய்
பொருளிது வென்று தேறு சஞ்சலம் போக்கி நின்றே. (உச)

செப்பிய வுயிர்க்குக் காணுஞ் செயலிது வென்று தேறிக்
கப்பக லருளே யென்றுங் காட்டிடக் கண்டோ மென்றுங்

துப்புறு சிந்தையென்றுஞ் சுவறிடாத் தூய பாலுண்
டப்பரி சன்னை பாலார் குழவிபோ லருணி னின்று. (உ௫)

நிலைபெறப் பெறவெ வர்க்கு நேர்படாச் சிவஞா னந்தா
னலைவற விறகிற் றீப்போ லாருயி ரதனுட் டோன்றுந்
தொலைவறு மலத்தின் மூலந் தொலைவுறக் கோடி கோடி
யலரிமின் னொளிகள் போலு மச்சிவந் தோன்று மன்றே. ()

வேறு.

துயர்தரு மகந்தை யானீ சோர்வுகள் பலவு மெய்தி
யயர்வுற மயங்கி யெய்மை யண்டந்தனின் பிழைபொ றுத்து
மயர்வுறு தருச்சித் தேத்து மதிநலந் தந்தவ் வாற்றாற்
பயனில்வெம் பாச நீக்கி யின்பமும் பாலித் தேமால். (உஎ)

இனியொரு வசனங் கேணீ யிடையறா வின்பம் வேண்டி
னனிதரு மன்பி னீங்கா நமையருச் சனைகள் செய்து
முனிவக லறிவி னிற்றி மும்மலத் துயரஞ் சாராத்
தனியரே ரின்ப மெய்திச் சாந்தமு மெய்து மென்று. (உஅ)

வேறு.

புரந்தனன் வள்ளலும் பொருவி லாமுனி
நிரந்தர வன்பினு னிலத்திற் றாழ்ந்தெழுந்
துரந்தரு மானந்த வுததி தோய்ந்துதோய்ந்
தரந்தைக டவிர்ந்துபொன் னடியை வாழ்த்துவான். ()

வேறு.

சிவகிரி வேடன் பூசைச் செயற்குள மகிழுந் தேவே
தவமிலி சிலந்தி பந்தர்க் கரசிய றந்த கோவே
யவமுறு மெலிசெ யற்கு மூவுல கருளுங் காவே
கவலைசே ரெனையு மாண்ட கருணையங் கடவு ளாவே. (௩௦)

என்னென வுரைக்கே னுன்றன் கருணையி னியல்ப ளந்து
முன்னெனை யாண்ட தன்மை மறந்திடு மூட னேனைப்
பன்னரும் பிழைக ணீக்கிப் பின்னுமாண் டருளும்பாசா
வின்னுமென் பிழைபொ றுத்தே யாள்வதுன் கடனுமென்றும்.

ஐயநின் றரிச னத்தா லருட்டிரு வாய்ம லர்ந்து
செய்யுமென் மொழிக ளாலென் சிந்தையுட் குறைவுதீர்ந்தேன்
றுய்யபொன் னம்ப லத்திற் சோதிநின் னடன மீண்டு
மெய்யனே யருள வேண்டு மென்றுவீழ்ந் தெழுந்துநின்றான்.

இறைவனவ் வுரையைக் கேட்டுக் கருணையி னினிதுநோக்கித்
துறவனே கேளாய் தில்லைத் தொன்னக ரிடத்தி ருந்து
திறமுடை நடனங் காண்பான் மாத்யந்தன் தியான காட்டன்
முறைமையின் வருவ ரீண்டே யவருடன் முயங்கி மேவி. ()

இருத்திநீ நடனங் காண்டி யென்றிறை மொழிந்தி லிங்கத்
தருத்தியுட் புகுந்தான் சான்றோ னமலனை யருச்சித் தேத்திக்
கருத்துறு நேச மெய்த முனிவரர் வரவு காண்பான்
றிருத்தகு தேட்டத் தோடு மத்தல வாசஞ் செய்து. (௩௪)

மூவிரு காலந் தோறு முதல்வனை யருச்சித் தேத்தி
யோவிலா துயர்பொற் பாத மன்புட னுள்கி ஞான
கேவலா தீத வின்பக் கிளர்சுக வெள்ளத் தாழ்ந்து
தாவில்சீர்ச் சாந்த முற்றுத் துருவாசன் றனித்தி ருந்தான். ()

அன்புரு வாய மேனித் துருவாச வருந்த வத்தோ
னின்புரு வாய ஞான மெய்தியே சாந்தம் பெற்றுத்
தென்புது வையுளி ருந்தா னென்றுயர் சூதன் செப்ப
முன்புள சவுன காதி யிருடியர் மொழிய லுற்றார். (௩௬)

## ஞானோபதேச அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪௫௮.

---

### ஞானோபதேச அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்லுவார்:—துருவாசமாமுனிவர் தினந்தோறுஞ் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து நித்திய கருமங்கள் முடித்து ஆயிரவிதழ்த்தாமரை மலரெடுத்து, அபிடேக திரவியங்கள் பலவுமீட்டி வயித்தியநாத லிங்கத்தை மந்திரங் கிரியை பாவனை வழுவாது விதிப்படி யருச்சனைசெய்து சாமவேதகானஞ்செய்து பூசித்துச் சிவபிரானெப்போதெழுந்தருளுவரென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்தப்படி யநேககாலஞ்செல்லச் சிவபிரான் றிருவுளமிரங்கிக் கோடிசூரியப் பிரகாசம் விளங்கச் சின்முத்திரைக்கையும் பதினாறு வயசுமுடைய திருவுருவெடுத்துத் தெக்ஷிணாமூர்த்தியாகக் கண்டோர்கண்களையு மனங்களையுங் கவர்வதாகிய பொழுதுடனே வெ

ழுந்தருளினர். துருவாசமுனிவ ரதுகண்டு திருவடிக்கீழ் வீழ்ந்து வணங்கிக் காணுந்தோறும் அளவிலாத மகிழ்ச்சி பொங்க உள்ளங்குளிர உரோமஞ்சிலிர்ப்ப நாத்தழுதழுப்பத் தோத்திரஞ்செய்து "சுவாமீ! உம்முடைய தரிசனங்கிடைத்தபோதே மும்மலக்கட்டுக்கள் நீங்கச் சிவானந்தத்தி லழுந்தினேன். காமமாதி குற்றங்கள் வேரறப் பறிந்துபோயின. அடியேன்பெற்ற இப்பெரும்பேறு யாவர்பெறுபவர். முன்னொரு காலத்திலே நீர் அடியேனுக் குபதேசித்தருளிய ஞானபாகத்தை மயக்க மிகுதியினாலே மறந்துவிட்டேன். இந்தக்குற்றத்தைப்பொறுத்து இன்னுமொருதரம் உபதேசித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

அதுகேட்டு தெக்ஷிணாமூர்த்தியாகிய பெருமான் துருவாசமுனிவர் முடிமேலே தமது திருவடியைச்சூட்டி அவரைச் சிவவடிவாக்கிப் பிருதுவிமுதல் சிவமீறாகிய தத்துவ பேதங்களினியல்பும் தேகாதி முதலிய கருவிகளி னியல்பும் ஆன்மாவினியல்புங் கேவல சகலாவத்தைகளி னியல்புந் திருவருளுணர்த்த உணரும் ஆன்மாவின் சுதந்திர இன்மையும் ஆணவமாயைகன்மமாகிய மும்மலங்கெடு மார்க்கமும் அவை கெட்டவழிச் சிவந்தோன்றுமுறைமையும் மற்றவைகளு முபதேசித்தருளினார்; அவ்வுபதேசத்தை ஐயந்திரிபறக் கேட்ட துருவாசமுனிவர் வணங்கி யஞ்சலிசெய்து தோத்திரம்புரிந்து "ஐயனே! உம்முடைய வுபதேசத்தால் மிகவும் பரிசுத்தமுடையவனானேன். இனிச் சிதம்பரத்திலே நீர் செய்தருளிய திரு நடனமிந்தத்தலத்திலே தரிசிக்கும் விருப்பமுடையேன் கருணைகூர்ந்து செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். தெக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரானு மகிழ்ந்து "அன்பனே! அந்த நடன தரிசனஞ்செய்வதற்கு மாத்தியந்தன் தியானகாட்டன் என்னும் ருஷிகள் இவ்விடத்துக்கு வருவார்கள் அதுவரை யிங்கே யிரு" என்றருளிச்செய்து இலிங்கத்துள்ளேசென்று மறைந்திருந்தனர். துருவாசமுனிவரும் அம்முனிவர ரிருவர் வரும்வரை தினந்தோறும் ஆறுகாலமும் வயித்தியலிங்க மூர்த்தியைப் பூசித்துத் தரிசித்துக்கொண்டு நித்தியானந்த சுகவாழ்விலே யழுந்திச் சாந்தத்துடனே தங்கியிருந்தனர்.

நான்காவது

# முனிவர் இருவர் பூசித்த அத்தியாயம்.

கங்கைநதி மதிபுனையுஞ் சடையு மென்றுங் கருணைசெறி திருமுகமுங் கண்மூன்றுஞ், சங்கநவ வெண்குழையு நீல கண்டக் தவழுரகப் பூணுமணி தரக்கின் றோலுஞ், செங்கைவர தாபயமு மழுவு மானுந் திருமார்பும் வெண்ணீறுந் திகழ்முந் நூலு, மங்கைசிவ காமிபங்கும் புதுவை யீசர் மலரடியு மெம்முயிரா மகிழ்ந்து வாழ்வாம். (க)

வேறு.

வாடிய பயிர்க்குப் பெய்யு மழையென மதியஞ் சென்னி
சூடியன் சரிதத் துள்ளே துருவாசர் ஞானம் பெற்ற
நீடிய காதை மேன்மை யையநீ நிகழ்த்தக் கேட்டு
வீடிய பாச நீங்கிப் பேரின்ப வெள்ளத் தாழ்ந்தேம். (உ)

தனக்கொரு நிகரி லாத தனிமுதற் சரிதங் கூறு
நினக்கியா மிடைய றாதே யஞ்சலி புரிவோ நித்தஞ்
சினப்பகை தவிர்மாத் யந்தன் தியானகாட் டனுமாங் கெய்தி
முனைப்பதி தனிலி ருந்த துருவாச முனியைச் சார்ந்து. (ங)

கடல்விட முண்ட கண்டன் கழலிணை யருச்சித் தேத்தி
நடையக் தொழுத மேன்மை யிருடியர் நவிலென் றோத
மடிமையி னோ தன்றூன் மாபல சேனற் கன்பின்
படிபுகழ் தரவு ரைத்த பான்மையிற் பகருஞ் சூதன். (ச)

வேதங்க ளவையு மாய்ந்து சாரவே தாந்தந் தேர்ந்து
போதங்கள் பொருந்துஞ்சைவசித்தாந்தப்பொருளையோர்ந்தே
யேதங்க ளகலு மீசன் பணிகள்பே ரின்ப மென்று
சிதங்கொண் மனத்தாற் றொண்டு செய்யுமூ வாயி ரம்பேர். ()

அந்தணர் நிலைய மியாவு மருமறை பயிலு மோசை
செந்தமி லோய்பு மோசை சிவனடி யருச்சித் தேத்தி
வந்தனை புரியு மோசை யதிதியா வரவன் ஞர்க்குச்
சிந்தையன் புடனா ருந்தச் செயுமொலி தெருக்க ளெங்கும். ()

முரசுகண் மூன்று நீங்கா தனுதின முழங்கு முன்றி
லரசர்க ளிருக்கை மேய வணிமணி மாடங் கோடி
பரசியற் றனதன் வந்து நிதிகொளும் பண்பிற் றூய
வுரைசெறி வைசிய ரில்ல மாவண முளவ னந்தம். (எ)

செல்வமுங் கல்வி மேய சிறப்பெலா மடைந்து மன்னும்
பல்வள நிறைந்து பண்பு மீகையும் பரிவு மென்று
நல்வினைச் செயலு நாவின் வாய்மையி னலமு நீங்கா
வில்வளஞ் செறிவே ளாள ரிருக்கைக ளெண்ணி லாத. (அ)

சரியைகள் புரிந்தவ் வின்பஞ் சார்பவ ரெண்ணி லாதார்
கிரியைகள் புரிந்து நேசங் கிளர்பவ ரளவி லாதார்
புரியும்யோ காதி மார்க்கம் புனைபவர் கணக்கி லாதார்
தெரியவிம் மூன்றியற்றி யருளடை பவர்கள் சில்லோர். (கூ)

வேறு.

செந்நெல்கள் பற்பல செழித்து மல்கிய
நன்னலப் பழனங்க ணவிற்றி லெண்ணில
கன்னல்கள் கழமெனுங் காட்சி பல்கிய
செந்நலஞ் சிறந்துயர் செய்கள் பற்பல. (க0)

காருறு சோலைகள் கணக்கி லாதன
சேருறு நந்தன வனத்தின் சீர்பல
நீருறு வாவிக ணிரையும் பற்பல
வேர்புலி யூர்வளமியம்பற் பாலதோ. (கக)

வரமரு டில்லையுண் மன்னி யண்ணலார்
சுரருடன் மால்யன் றொழுது போற்றவே
பரதமா நடநயம் பயில்வர் நித்தமும்
விரவர வொடுபுலி முனிகள் வேண்டவே. (கஉ)

வேறு.

இம்மகத் துவங்கண் மேய சிதம்பர நகரு ளெய்திக்
கைம்மழு வாளி நட்டந் தொழவெழுங் கருத்த ராகிச்
செம்மைசேர் மாத்தி யந்தன் றியானகாட் டன்ற வத்தோர்
கொய்ம்மலர்த்தடங்கள்சூழுங்கோயின்முன்குறுகிச்சார்ந்து. ()

சந்நிதி யடைந்து பல்காற் றாழ்ந்துவீழ்ந் தெழுந்து நின்று
சென்னியிற் கரங்கள் கூப்பிச் சிதம்பர நடன தேவை

நன்னய மெய்தக் கண்டு தொழுதரு ணலம்பெ றற்குப்
பன்னுமா மறைக ளோதி யின்னன பகர லுற்றார். (கசு)

மங்கையோர் பாகா போற்றி மழவிடைப் பாகா போற்றி
பங்கயப் பாதா போற்றி பகர்சதுர் வேதா போற்றி
சங்கையில் விபவா போற்றி தவர்துதி யபவா போற்றி
செங்கைசேர் மானு போற்றி திகழ்சிவ ஞானு போற்றி. (கரு)

வேறு.

வேதாவுணராவிமலாசரணம் விண்ணோர்புகழுமண்ணுசரண
நாதா சரண நம்பா சரண நக்கா சரண நடனு சரணம்
போதாசரணம்பூதாசரணம்பொடிசேர்மேனிப்புனிதாசரணந்
தீதாரெமையாடேவேசரணஞ்சிவனேசரணஞ்சிவனேசரணம்.

வேறு.

வேதவே தாந்த ஞான வேதியா விளங்கு விந்து
நாதவா தீத போத நான்மறை யதனுட் சாம
கீதமோ தவர்கள் வெய்ய கேதமோ தியவ பேதா
நீதநின் னடனங் காண நேசமோ டருத்தி யானேம். (கஎ)

பதஞ்சலி புலிக்கான் மேலோர் பத்திமைக் குளமி ரங்கி
யிதம்பெறு நடனஞ் செய்த வியல்பதா வெம்ம னோர்கண்
மதம்பர வுளத்தி னேமியா நடனங்காண் வாஞ்சை யுற்றேஞ்
சிதம்பர தேவா சற்றே திருவுள மிரங்கு கென்றார். (கஅ)

நம்பனு முனிவ ரன்பா நவின்றிடு முரைகள் கேட்டே
யம்பல வடிவ மாய வசரீரி மொழிக ணல்கு
நும்பரி வுணர்ந்தோ நீவிர் புதுவையை நோக்கிச் சென்றே
யெம்பதம் பூசித் தேத்த வேண்டுகோ ளெய்து மென்றான். ()

வேறு.

கருத்த னன்புடன் மொழிபெருங் கருணையைக் கண்டு
நிருத்த மெய்தின ரென்னவு நெஞ்சினுண் மகிழ்ந்து
திருத்து பொன்னடி தொழுதகல் விடைகொடு சென்றே
யருத்தி யாய்வழிக் கொண்டனர் தில்லையை யகன்று. (உ0)

வேறு.

காரூரு மாளிகைசூ ழாரூருந் தொழுதுநெஞ்சங் களித்
தேக் காலுஞ், சீரூரு மிடைமருதூர் பணிந்துகும்ப கோண

நகர் சேவித் தென்று, நீரூருங் காவிரிசே ரிருகரையி னலயங் க ணெடிது போற்றிப், பேரூரோ டவிநாசி தந்திவனஞ் சிர முன்றோன் பிறங்கல் பேணி. (உக)

அஞ்சாரைக் கூட்டோடே யெரித்தருளி யேழைபழி யஞ்சி யன்பார், நெஞ்சாரை நீங்காத தென்கூடற் கருணை வள்ள னேசம் போற்றி, மஞ்சாரு மலர்ப்பொழில்சூழ் மடவா ர்வ ளாகமுற வழிக்கொண் டார்க, ளஞ்சாதே யங்கிருந்த துரு வாசர்க் கவர்வரவு தோன்றிற் றன்றே. (உஉ)

வேறு.

அல்லிசை களத்தெம் மண்ண லானந்த நடனங் காண்பா
னெல்லியும் பகலு மார்வ மெழுந்துரு வாச ணண்ணல்
சொல்லிய முனிவ ராங்கே வழியிடை வருத றேன்ற
வெல்லையின் மகிழ்ச்சி யோடு மெதிருற வெழுந்து சென்றான்.

இருமுனி வரருஞ் சென்று புதுவையென் றடைவோ மென்று
கருதியவ் வழிக்கொண் டேக விருவர்தங் கருத்தி னுள்ளு
மொருதுரு வாச னங்கே யுறைந்துதம் வரவு ணர்ந்து
வருதலுந் தோன்ற மாறு வுவகையி னணுக வந்தார். (உ௩)

இத்தகை முனிவர் கூடி யெதிரெதிர் கண்டு தம்மிற்
கைத்தலங் கூப்பி யுள்ளக் கலப்புட னிறுகப் புல்லிச்
சித்தமுள் ளார்வம் பொங்கச் சேமங்கள் பலவி னவி
முத்தவ முனிவர் தம்முட் டுருவாச முனிமுன் செல்ல. (உ௫)

பின்னிரு முனிவ ரேகிப் பிரானுறை புதுவை நண்ணித்
துன்னிய வளங்க ளியாவுந் துருவாச முனிவன் கூற
முன்னிய வதிச யித்துண் மூழ்கியின் படைந்த போழ்திற்
பின்னுகன் கருணை யாவுந் துருவாசன் பேச லுற்றான். (உ௬)

செகந்தனை யொறுக்கக் காற்றுத் தீயுடன் கலந்த தென்ன
வகந்தையும் வடவை போலு மகங்கார மதுவுஞ் சேர்ந்து
சுகந்திக ழறிவு மற்றுச் சோர்வுக ளுற்ற வாறு
நகந்தரு மங்கை பங்கன் கயிலையை நணிய வாறும். (உ௭)

இறைவனுங் கருணை கூர்ந்து புதுவையு ளெய்தி யாங்கே
முறையுட னருச்ச னுதி முயலென மொழிந்த வாறு

நிறைபடு மன்பின் வந்து நிருமலன் பூசை யாற்றப்
பிறைபடு சடையெம் மண்ணல் பொருள் பெய்த வாறும். ()

விரிவுட னுரைத்துப் பின்னுந் துருவாச மேலோன் கூறும்
பரிவுட னிறையைப் போற்றிப் பரதமா நடனம் வேட்ப
வரியப னறியா வண்ண லடியன்மீ தன்பாக் கூறு
மெரிமலி மாட நீடு சிதம்பரத் தெய்தி நீவிர். (உகூ)

வேறு.

தாண்டவம் வேட்டலுந் தவள நீறணி
யாண்டவ னிங்குமக் கருளு வோமென
நீண்டவன் புடனுரை நிகழ்த்த நீவிர்கண்
மாண்டகு மிவணுற வருதல் கூறியே. (௩0)

நீவிர்கள் வந்தபின் னடமி கழ்த்துவோ
மேவிநீ யவருடன் விரவி யன்புடன்
றூவிலெங் நடம்பணி யென்று சாற்றினு
னேவறு பொரு ளுடைய வண்ணலே. (௩க)

வேறு.

சோம சேகர னருளிய சொற்படி நீவி
ரேம மார்தரு மிப்பதி யெய்திய வியல்பு
நாமி யற்றிய நற்றவப் பயனன்று நமர்காள்
காம நாசனன் கருணையின் பெருமையே காணீர். (௩உ)

வேறு.

எனத்துரு வாசன் கூற விருமுனி வாரு மெய்து
மனத்துய ரகன்று நீங்கா மகிழ்ச்சியு ளடைந்து வாசப்
புனத்துள வத்தோ னென மாய்ப்புக லனமாய்ப் பன்னு
ளனத்துவ சத்தோன் றேடு மமலன தருள்பு கழ்ந்து. (௩௩)

முனிவகல் சாந்தம் பெற்ற துருவாச முனியை நோக்கி
யினியநின் மொழிக ளியாவுஞ் செய்கையு மெந்தா யுண்மை
பனிமதி சூடி நீயே யெமக்கெனப் பரிவ டைந்தோந்
தனியுயிர்த் துணையு நீயே யென்றுகைத் தலங்கு வித்தார். ()

வேறு.

மூவனன் முச்சுடர் முக்கண் முக்குணந்
தேவரின் மூவர்க ளெனவுஞ் சேர்ந்துதோய்ந்

தாவலின் மூவரு மகக்க ளிப்புடன்
மாவுறை புதுவையுள் வள்ள லைத்தொழ. (௩௫)

வேறு.

சென்றனர் செல்லும் போது துருவாசன் முன்னர்ச் சென்று
தன்றனித் துணையாய் நின்றான் சந்நிதி யடைந்து தாழ்ந்து
நின்றனர் வரவு கூற நிமலனு மாஞ்ஞை நல்க
வென்றவைம்புலத்தோர்க்கூவியவருடன்றிருமுன் வீழ்ந்தான்.

பன்முறை வீழ்ந்தெ ழுந்து பரமனைக் காணுந் தோறுங்
கன்முறை நெஞ்சம் வாழைப்பழமெனக் கசியப் பெற்றுச்
சொன்முறைபிறழச்செய்கைசோர்வுறவெயர்ப்புத்தோன்றப்
பொன்முறைப் பாதம் போற்றி யேத்தினர் புகழ்ந்து நின்று.

அப்புறம் போந்து வந்து வந்தனை யாவ லோடுஞ்
செப்புறு ஞான வாவி படிந்துள செயன் முடித்து
மெய்ப்புற முள்ளஞ் சுத்தி விதிப்படி புனிதஞ் செய்தே
யொப்பறு தியான காட்டன் மாத்பந்த னுளங்களித்து. (௩அ)

பாதாதி முடிகண் மட்டும் பண்புட னீற ணிந்து
நீதாதி யுருத்தி ராக்க மாயிர நிறையப் பூட்டி
யோதாதி யேம கூபத் தொண்ணீர்பொற் குடத்தி னேந்தி
வேதாதி யாக பத்தின் பத்தநி விளம்பு மாற்றால். (௩௯)

வேறு.

நறுமலர்த் தொடையலு நான மார்தரச்
செறிதரு மஞ்சனத் திரவி யங்களு
முறுசுவை யமுதுமற் றுளவு மந்நெறி
யறிபரி சாரர்க ளருகி லேந்தவே. (௪0)

வேறு.

கண்ணுத றிருமுன் னெய்திக் கரமலர் சென்னி கூப்பி
மண்ணுறத் தாழ்ந்தெ ழுந்து நேசந்தா வென்று வாழ்த்தி
யெண்ணுறு பத்தி யோடு மருச்சனை யியற்ற லுற்றார்
தண்ணுறு மானைந் தாதி மஞ்சனஞ் சார வாட்டி. (௪௧)

ஏமகூ பாதி தீர்த்த மியல்புற வாட்டி வாசத்
தாமமென் றுடையன் மாலை தனிமுடி தழுவச் சாத்தித்
தேமள வமுது வர்க்கத் திருநிவே தனங்க ணல்கித்
தூமமார் தூப தீபஞ் சோடசந் துகளின் றூற்றி. (௪௨)

வேறு:

காயிர விகள்பல கோடி காட்சிபோன்
மாயிர விருணடம் புரியும் வள்ளலைப்
பாயிர முகமறை மனுப்ப கர்ந்தபே
ராயிர நாமத்தா லருச்சித் தேத்திமே. (சுங)

வேறு.

பார்க்கண்ட முழுதுங் காணப் பாசம்வீ சியமன் றன்னைச்
சீர்க்கண்ட பதத்தா னெஞ்சஞ் சிதைவுற வுதைத்துப்போற்று
மார்க்கண்ட முனிவற் கென்றும் பதினறு வயது நல்குங்
கார்க்கண்ட தேவா போற்றி கருணையங் கடலே போற்றி. ()

எரிந்திடு மால கால மெங்கணும் பரந்தெல் லோருங்
கரிந்திடச் சுடுதற் கஞ்சிக் கயிலையின் வாயி னின்று
சரிந்திடுஞ் சடையாய் காத்தி யெனச்சர ணடைந்து ளோரைப்
பரிந்துடன் கருணை செய்து விடமுணும் பரமா போற்றி. (சரு)

தத்துவ ரூபா போற்றி தத்துவ வறிவே போற்றி
தத்துவ வுயிரே போற்றி தத்துவ முணர்வாய் போற்றி
தத்துவங் கடந்தாய் போற்றி தத்துவா தீதா போற்றி
தத்துவ மசிப தத்திற் சார்ந்ததத் துவனே போற்றி. (சசா)

வேறு.

முனிவர ரிவ்வண மூதிர்ந்த வன்பொடு
பணிமலை மருந்தொரு பாக முற்றவுங்
கனியுள வயித்திய நாத தேவனைக்
கனிவுள வரம்பையின் கனியிற் போற்றினர். (சஎ)

வேறு.

அங்கையி னிறைநீ ராட்டிப் பச்சிலை யருச்சித் தேத்திச்
சங்கரா வென்று கூவத் தரியாது தோன்றுந் தாணு
பொங்குளக் கருணை யாலே முனிவரர் போற்றிப் பண்ணுட்
டங்கியங் கருச்சித் தேத்தத் தலத்தினில் வாசஞ் செய்ய.

வேறு.

ஆசையத் திருவுளத் தமைத்தெ மையனு
மோசைசே ரம்பரத் துண்ம றைந்தநும்
பூசனை மகிழ்ந்தனம் புகல்வங் கேண்மினோ
வாசம தாகவிப் பதியுண் மன்னியே. (சகூ)

சிதைவறு மன்பி னோடு மருச்சனை சின்னா ளாற்றச்
சதயுக நிகழ்கி ரேதா யுகத்தினிற் றகைசே ராண்டி
லதுலமார் தனுமா தத்தி ஸ்ரீதிரை நாளி ராவிற்
புதுவைசேர் நடன மன்றுட் புரிகுவம் பணிதி ரென்றான். ()

வேறு.

அலந்துறு மடியவர்க் கலந்த வண்ணலார்
கலந்தவன் புளவிளங் கன்று மானும்போற்
சலந்தவி ரன்பர்பின் சஞ்ச ரித்திடு
நலந்தருங் கருணையா நவிலற் பாலதோ. (௫௧)

வேறு.

அங்கணன் புகன்ற வார்த்தை யருந்தவ ரினிது கேட்டுச்
செங்கரங் கூப்பி வீழ்ந்து நிலனுறச் சேர்ந்தெ ழுந்து
தங்களி னுவகை கூர்ந்து தானுவு மினிந மக்குப்
பங்கமி னடன நல்கு மையமின் றெனப்ப ரிந்து. (௫௨)

சிவனடி சிந்தித் தேத்திச் சிந்தையுட் பத்தி யோடு
தவநெறி வழாமற் போற்றி வழிபட வருந்த வத்தோர்
பவனனு டிக்கி லோர்பாற் பன்னசா லைகள மைத்தே
யவமகல் பூசை யாற்றி யங்குறைந் தார்க ளன்றே. (௫௩)

## முனிவர் இருவர் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக்கதிருவிருத்தம் ௫௧௧.

### முனிவர் இருவர் பூசித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

மூன்றாம்பிறைச் சந்திரனைத்தரித்த சிவபிரான் சரித்திரத்தினுள்ளே துருவாசமுனிவர் ஞானோபதேசம்பெற்ற கதையைக்கேட்டுப் பேரின்பவெள்ளத்தினுள்ளே யழுந்தினோம் இனி மாத்தியந்தன், தியானகாட்டன் என்னு மிருமுனிவருந் துருவாசமுனிவரைப் புதுவைத் தலத்திலே வந்து சேர்ந்து நீலகண்டராகிய வயித்தியநாதரது திருநடனந் தெரிசித்த கதையை யருளிச்செய்யவேண்டுமென்று சௌனகாதிமுனிவர் வினவச், சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.—வேதாந்த சித்தாந்தப் பொருள்களை யறிந்து நடராசப்பெருமான் பணிவிடையே மோக்ஷமென்று செய்யாநின்ற மூவாயிரம்

பிராமணராதி நான்குசாதியாரும் சரியை கிரியை யோகஞானங்களிலே பழகுகின்ற மாடங்களும் செந்நெல், கன்னல், கமுகுகளையுடைய சோலை வளங்களும் தடாகங்களு நிறைந்துள்ள சிதம்பர க்ஷேத்திரத்தில் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களுக்காகச்செய்தருளிய நடராசப்பெருமானைத் தரிசனஞ்செய்யும் பேராசையுடையராகிய மாத்தியந்தன் தியானகாட்டனென்னு மிரண்டு தவசிரேட்ட முனிவர்கள் சந்நிதி முன்புவந்து கீழேவிழுந்து கும்பிட்டு வேதமந்திரங்களாலே துதித்துப் பலவாறாகப் புகழ்ந்து "சுவாமீ! உம்முடைய திருநடனந் தரிசிக்கும் வாஞ்சையுற்றனம் திருவுளஞ் சிறிது இரங்கிக் கட்டளையிட்டருளுக" என்று பிரார்த்தித்தனர்.

அது கேட்டு நடராசமூர்த்தி அசரீரிவாக்காக முனிவரைநோக்கி "உங்களுடைய மெய்யன்பைத் தெரிந்தனம் நீங்கள் புதுவைத் தலத்திலேசென்று நம்மைப்பூசனைசெய்தால் உங்களுடைய கருத்து நிறைவேறும்" என்று கட்டளையிட்டனர். அவ்வெம்பெருமானுடைய ஆஞ்ஞையைச் சிரத்தின்மேலேதாங்கி நெஞ்சநெகிழ்ந்து அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சிதம்பரத்தை விட்டு நீங்கித் திருவாரூர் முதலிய திவ்யக்ஷேத்திரங்கள் பலவற்றையுந்தொழுது துவாதசாந்தமாகிய மதுரைமா நகரத்துக்குவந்து சோமசுந்தரக்கடவுளைத் துதித்து மீண்டு புதுவையென்னு மடவார்வளாகத்தை நோக்கி வந்தனர். இவ்விரு முனிவரது வரவும் அவ்விடத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த துருவாச முனிவ ரிருதயத்திலே தோன்றத்தெரிந்து உடனே யெதிர்கொண்டுசென்று அவ்விருவரோடுங் கலந்து ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய மரியாதை யுபசாரங்களெல்லாங் கிரமமாகச்செய்து மகிழ்ச்சியுற்றவராய்த் துருவாச முனிவர் முன்னேசெல்ல மற்றையிருமுனிவரும் பின்னே நடந்துசென்று புதுவையையடைந்து ஆங்குள்ளவளங்களை யெல்லாஞ் சொல்லக்கேட்டு மகிழ்ந்திருக்கும்போது துருவாசமுனிவர் தமக்கு அகங்காரமுண்டாயினது. திருக்கயிலாச மலைக்குச்சென்றதுஞ் சிவபிரான் புதுவைக்குச்சென்று பூசைசெய்யக் கட்டளையிட்டருளியதும் அவ்வாறு வந்து வயித்திய நாதேசுரரைப் பூசித்துத் திருநடன தரிசனத்தைத் தாம் இச்சித்து வேண்டியதும் முறையேகூறிப் பின்னர் வயித்திய நாதர் முனிசிரேட்டர்களே உங்களுக்காக இத்தலத்திலே நடனமொருகாலத்திலே செய்வோமென்றும் நீங்களிங்கு வருவீர்களென்றும் கட்டளையிட்டருளினார். அந்தத் திருவருளின்படி நீவிர் இத்தலத்

தையடைந்தது நல்ல தவப்பயனென்று கூறலும், அவ்விரு முனிவரு ங் கேள்வியுற்றுச் சிவபிரானுடைய திருவருளைப் புகழ்ந்து துருவாச முனிவரை வணங்கிச்சென்று வயித்தியநாத மூர்த்தியை வணங்கித் துதித்து ஸ்நானஞ்செய்து விதிப்படி புனிதமுற்றுப்பூசைக்குவேண் டிய திருமஞ்சனம் திருப்பள்ளித்தாம முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டு சிவலிங்கப் பெருமானை யாராதித்தனர்.

அந்த ஆராதனையைத் திருவம்பலத்துள்ளே மறைந்து நின்று மகிழ்ந்த எம்பிரான் அம்முனிவர்களைக் கடைக்கணித்து "நீங்கள் சிலகால மிந்தவிதமே பூசைசெய்து இத்தலத்திலிருந்தால் திரேதா யுகத்தில் மார்கழி மாதத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே யிங்கே திருநடனஞ்செய்வோம் அப்போது நீங்கள் தரிசிக்கலாம்" என்று கட்டளையிட்டருளுதலும், அவ்விருமுனிவருங் களிகூர்ந்து இனி நமக்கு நடனதரிசனங் கிடைக்குமென்று வாயு திக்கிலே தனிதனி பன்னசாலைசெய்து அங்கிருந்து பூசை தவறாது செய்துகொண்டிருந் தனர்.

ஐந்தாவது

# திருநடனம்புரிந்த அத்தியாயம்.

இலங்கு சந்திர சேகர னெம்பிரான்
கலங்கு மூவினைக் கட்டறக் காய்ந்தவர்
குலங்கு லாவும் புதுவையிற் கூடிபு
துலங்கு சோதி பதந்தொழு துய்குவாம். (க)

வேறு.

வாணிமா நீல வேணி வளரயி ராணி மற்றோர்
நாணிழ வாது நஞ்ச நசையுட னயின்ற சூல
பாணிபொற் கிரிக்கோ தண்ட பாணியொண் புகழைப் பல்காற்
பேணிய சூதன் கூற விருடியர் மகிழ்ந்து பின்னும். (உ)

சூதனைப் புகழ்ந்து போற்றி முனிவரர் துகளில் பூசை
நாதனைப் புரிந்த காதை நவின்றனை யுணர்ந்தோ மன்றோர்
போதனை வழிபா டாற்றிப் புரிநடம் போற்று மேன்மை
வாதனை யகல வெம்பால் வாய்மலர்ந் தருளு கென்றார். (ந)

அருந்தவர் மொழிக ளியாவு மறிந்தக மகிழ்ந்து சூத
னிருந்தவர் வதன நோக்கி யியம்புவா னிருசெ விக்கூண்
விருந்தது விமலன் மன்றி னடம்புரி விபவ மூவா
மருந்தது கேண்மி னின்பம் வழங்குமென் றுரைக்க லுற்றான்.

திரந்திகழ் தியான காட்டன் மாத்யந்தன் றினங்க டோறு
முரந்திக ழீச னேசத் துருவாச முனியி னோடும்
வரந்திகழ் நியமம் பூண்டு சிவகங்கை வாவி மூழ்கி
நிரந்தர நெறிவி டாது நித்தியஞ் செயன்மு டித்து. (ரு)

பன்மலர் தெரிந்தெ டுத்துப் புதுவையுட் பரமன் றன்னை
மன்மலர் செறியுங் கூந்தற் சிவகாம வல்லி யோடு
மென்மலர்ப் பாதம் போற்றி வியனபி டேக மாட்டிப்
பொன்மலர் முகத்துக் கேயப் புகனிவே தனங்க ணல்கி. (சு)

வரைவறு நறும்பூ மாலை திருமுடி வளரச் சாத்தி
விரைநறுந் தூப தீபங் கருப்புர விளக்க மேந்திக்
கரையறு மன்பி னோடு மிருவிழி குளிரக் கண்டு
தரையுறத் தாழ்ந்தெ ழுந்து தோத்திரந் தகப்பு ரிந்து: (எ)

மன்னுமா லயநூற் றெட்டு வலஞ்செய்து தாழ்ந்தெ ழுந்து
சந்நிதி யருளைப் பெற்றுப் பன்னசா லையினுட் சார்ந்தே
யன்னிய சிந்தை நீங்கி யம்புயா சனத்தி ருந்து
மின்னிய சடையெம் மண்ண றிருநாமம் விதியி னோதி. (அ)

குறைவற நிறைந்து நின்ற சரணினைக் குறித்து நின்று
முறைமைசேர் கருவி யாவும் வேறென முயன்று போக்கி
நிறையுரை யுணர்வ கன்ற நிர்க்குண ஞான வாவித்
துறையுறப் படிந்து நெஞ்சந் துகளறச் சுத்தி செய்து. (கூ)

சோர்வறு சமித்துத் தீயி னெய்விடுந் தோறுஞ் செந்தீ
யார்வமோ டெழுந்து பொங்கு மாறுபோ லஞ்செ ழுத்தை
நேர்பெற வுரைக்குந் தோறு முள்ளொளி நிறைந்தான் மாவின்
சார்பற நீக்கி யுள்ளந் தனிப்பரி சுத்த மாக. (கo)

## வேறு.

ஐந்துமா முகமு முகந்தொறுஞ் சோதி யடர்ந்தெழு விழி
களோர் மூன்று, மிந்துவாழ் சடையுஞ் சங்கவார் குழையு
மெரிவிட நீலகந் தரமுந், தந்துநூன் மார்புந் தவளநீற் றொளியு

மான்மழுத் தாங்கிய கரமும், பந்துசேர் விரலாள் பாகமுஞ்
சிவந்த பங்கயப் பாதமுந் தோன்ற. (கக)

வேறு.

உளக்கணு மூனக் கண்ணு மிரண்டற வொன்று நோக்கித்
துளக்கறு சிந்தை யோடுஞ் சுகமகந் தோயத் தோய
வளப்படு கருவி யொன்று மவந்தனு காத வண்ணங்
களக்கறுப் படைந்த தேவை மறைப்பறக் கண்டி ருந்தார். (௰உ)

இக்கிர மத்தாற் பன்னு ளிறைவனை வழிபா டாற்றி
யுக்கிர கருணை நீங்கா வுத்தம வுரியோர் பாச
நிக்கிர கங்கள் செய்யு நிருமல ஞானு னந்த
விக்கிர காதி தேவ வெனமுனி வரர்வி ளம்பி. (கங)

வேறு.

இத்தல வாசமு மிறைநின் பூசையுஞ்
சுத்தநின் சேவையுஞ் சொல்ல வொப்பிலை
தித்தியான் பாலுஞ்செந் தேனுங் கன்னலுங்
கைத்திடுஞ் சுவையெனக் கருத்து ருக்குமால். (கச)

வேறு.

ஆயினு நடன வேட்கை கருத்திலோ ரளவை யின்று
நாயினு மிழிந்தோ மெம்பாற் புதுவைநா யகனே யீன்ற
தாயினு மன்பா யாங்க டள்ளினு மொழமை நீங்கா
தேயினுங் கருணை யீசா திருவுள மிரங்கு கென்றார். (கரு)

முனிவரர் மொழியு ணர்ந்து முன்னவ னபய மீந்து
கனிதரு முளமி ரங்கி நெடுங்காலங் கடந்த தாமா
யினிவிரைந் தருள வேண்டு மென்னநந் தீசற் கூவ
நனிபெருங் கணங்க ளோடு நந்திவந் தடியிற் றாழ. (கசு)

திடந்தரு தியான காட்டன் மாத்யந்தன் சிந்தை நேச
முடன்படு தூய மேலோன் றுருவாச முனிவன் வந்து
நடந்தொழ வேண்டிப் பன்னு ணமையருச் சனைபு ரிந்தா
ரிடம்பட மணிகொண் மன்ற மியற்றென விறைவன் கூற. ()

வேறு.

நந்தியெம் பெருமான் மயன்றனைக் கூவி நடம்புரி மன்ற
மா திகளைப், புந்தியுட் டிறமா விசுற்றுதி யென்னப் புவிபுகழ்

மயனுமவ் வுரைகேட், டந்தமி லொளிசேர் நவமணி யழுத்து
மணிமணிச் சினகர மாதி, முந்துமண் டபங்க டிருமதிள் சிகர
கோபுர முறைமையா முடித்து. (கஅ)

வேறு.

பகலொளிப் பதும ராகக் குறடுபெண் புடன மைத்துப்
புகழ்பெறு பவளக் கான்மேற் போதிகை வயிரத் தாற்றி
யிகழ்வறு முத்தி ரங்க ளிந்திர நீலத் தேற்றி
மகிழ்வுறு பாவு கல்லு மரகத மணியாற் சேர்த்து. (ககூ)

கோமே தகத்தாற் சாந்தகமும் வயிடூரியத்தாற்கொடுங்கைகளுந்
தாமேவிகாரவொளிர்செய்பொற் றகடவ்விடையிற்றகவழுத்திப்
பூமே சகமா மணிக்குடங்க ளும்பர் நிறுவிப் பொற்பொதுவீ
தாமேயெனவும்வியப்பெய்து மணியம்பலமொன் றாற்றியற்றி. (உ0)

அந்தர மானம் போலு மணிதிகழ் செம்பொற் றேர்கள்
வந்தடை துறக்கம போலு மாளிகைத் தெருக்க ளாற்றி
நந்தலில் வாவி கூவந் தடாகவை யகலப் பேணிச்
சிந்தையு ளார்வம் பொங்க மயன்விடை கொண்டு சென்றான்.

வேறு.

நடன வம்பல முடிந்தமை நந்திமுன் னணுகி
விடம யின்றருள் கருணைய னடிமிசை வீழ்ந்தே
யுடனெ ழுந்திரு செங்கைகள் கூப்பிநின் றுளத்திற்
படரு மன்பொடு முகமலர்ந் தினிதுடன் பகர்ந்தான். (உஉ)

இன்ன நந்திதாழ்ந் தியம்புசொற் கிறைவனுண் மகிழ்ந்து
பன்ன ருந்திரு நடஞ்செயத் திருவுளம் பரிந்து
முன்னி லிங்கத்து ணின்றுயர் நடம்புரி மூர்த்த
நன்ன லந்தரத் தோன்றினன் றிருவுள நயந்து. (உங)

அந்த வேலையிற் றிருநடம் புரிசெய லறிந்து
முந்து மாலய னிந்திரன் வானவர் முதலோர்
வந்த வெண்டிசை காவலர் மற்றுளோ ரெவருந்
தந்த நெஞ்சகங் களித்திடப் புதுவையுட் சார்ந்தார். (உச)

சாற்றிய சிவக ணங்கள் சாதகக் கணங்கள் வந்தா
ராற்றிய முனிவ ரோடு மிருடிய ரங்குச் சார்ந்தார்

நீற்றொளி மேனி யன்ப ரளவிலர் நெருங்கிப் போந்தார்
போற்றிய மறைவ லோர்க ளெங்கணு நிறைந்து புக்கார். (உரு)

கூடிய வுலக மூன்றி லேவருங் குழுமிச் சென்று
தேடிய புதுவை சேர்ந்து தில்லையு ளிருவர் காண
வாடிய நடன மிங்குத் தொழவருத் தியினி ருந்தார்
வாடிய பயிர்கண் மாரி நோக்கிய வண்மை போலும். (உசா)

வேறு.

முன்ன ருந்தவம் புரிதரு வாசமா முனியும்
பின்ன ரெய்திநற் றவம்புரி யிருபெருந் தவரு
மன்ன மூவரு நடம்புரி மன்றமுன் னணைந்தார்
பன்ன காபர ணன்பெருங் கருணையே பகர்ந்து. (உஎ)

அன்ன காலையி லரியயற் கறியொணு வமலன்
மின்னி நின்றசெம் பவளமா மலையென விளங்கி
மன்னு பேரொளி யம்பலத் தெய்தினன் மாறு
நன்ன லந்தரு முமையவ ளருகுற நயந்து. (உஅ)

வேறு.

உதயா சலமீ தொருகோடி யொளியோ னென்று யுதித்
ததெனச், சிதையா ஞானம் பெற்றதுவாய்த் திகழ்ந்து மகிழ்
ந்து தெளிந்தோர்க, ளிதயா சனஞ்சேர்ந் திலகுபரஞ் சுட
ரோன் மன்றி லெய்தநறுஞ், சுதையா ரமுத மெனவுவந்து
சூழ்ந்தா ரடைந்தார் சுரர்முதலோர். (உகூ)

வேறு.

மதிய ணிந்தவன் விளங்கொளி யம்பல மன்னப்
புதிய நீர்வர வெதிர்செலப் புகுதமீ னினம்போற்
றதிய ருந்துமான் முதலுள சகலரு மணைந்து
துதிபு ரிந்தனர் வீழ்ந்தன ரெழுந்தனர் தொழுதார். ()

வேறு.

கிளர்பெரு நதியுட் கேளரா விரவுங் கீற்றிளம் பிறைதவ
ழ்ந் திலகித், தளர்சடை முடியுந் தயங்குமூ விழியுந் தவள
வெண் ணூறுஞ் சாந்தம், வளர்பெருங் கருணை வதனமண்
டலமும் வரிவளை மகரகுண் டலமு, முளர்மணிப் பூணும் பவ
ளமே னியுநீற் றொளியுமம் புயப்பதயுகமும். (நக)

ஒளிர்தர நின்று தன்வலப் பதத்தை முயலகன் முதுகிற
லூன்றிக், களிதரு மருள்சே ரிடப்பதந் தூக்கிக் கரத்தினிற்
றுடியொலி கலிப்ப, வளிதரவீசு கரமனற் கரமும் வரதமோ
டபயசெங் கரமுந், தெளிதர விலங்கச் சச்சிதா னந்தத் திரு
நடஞ் செயவுளஞ் செய்தான். (௩௨)

*மலைமக டாள மொற்ற மாதவன் முழவொ லிக்கக்
கலைமகள் பதுமை வீணை கானமோ டிசைந விற்றத்
தொலைவறத் தாமே பஞ்ச துந்துபி தொனித்துப் பேண
நிலைபெறு நார தாதி தும்புரு விசைநி கழ்த்த. (௩௩)

வேறு.

ஓரா யிரஞ்செங் கைவாணன் குடமென் முழவத் தொலி
முழக்க, வீரா யிரங்கைச் சங்கொலிகள் பானு கம்ப னெடுத்
தூதப், பேரா யிரமும் புகழ்ந்துசின்னம் பெரும்பூ தங்கண்
முன்னொலிப்பச், சீரா யிரஞ்சேர் பல்லாண்டு தெய்வ மடவா
ரிசைசெலுத்த. (௩௪)

வேறு.

இந்திரன் முதலி னோர்கள் சாமரை யிரட்டத் தென்றல்
வந்தெழத் தூய வால வட்டங்க ளிசைப்பச் சில்லோர்
பந்திசேர் பஞ்ச வன்னப் பாவாடைப் பணிகள் சில்லோர்
சுந்தர நறும்பூ மாரி யந்தரர் தரணி தூர்ப்ப. (௩௫)

சிந்தையு ளன்பு பொங்கத் திருவாசன் றியான காட்ட
னந்தமி றவமாத் யந்த ஞருமம் மூவர் மன்றின்
முந்துற நின்று செங்கை முடிமிசைக் கூப்பி யீசா
வெந்தையே யென்று போற்றி யிருவிழி குளிரக் காண. (௩௬)

மூவுல கோரும் வந்து மொய்த்தடி தொழுது நிற்பத்
தேவர்க டேவ தேவன் றிருநடம் புரியா நின்றான்
பூவலர் கங்கை யாடப் புரிசடை திவலை யாட
வோவிலா மதியும் பாம்பும் பகைதவிர்த் தொருங்கி யாட. ()

திருமுகச் சோதி யாடச் செவ்விதழ்த் தரள பந்திப்
பொருவறு மெயிறு சற்றே தோன்றப்பொன் மூர லாடக்

---

*மலைமகள் தாளமொற்றியது திருஞான சம்பந்தசுவாமிக ளருளிச்செய்த திருவாய்மூர்ப்பதிகம் தளரிளவளரென்னுந் திருப்பாசுரத்திற் காண்க.

கருவறு விழிகண் மூன்றுங் கருணையே குடிகொண் டாட
விருபுரு வங்க ளாட விமையெழி லெய்தி யாட. (கூஅ)

சங்கவொண் குழைக ளுக குண்டலந் தயங்கி யாடப்
பொங்கொளி காள கண்ட நாகபூ டணமோ டாடத்
துங்கவெண் புயங்க ளாடத் துவளுமுந் நூலு மாடத்
தங்குவெண் ணீற்றின் சோதி தவழ்திரு மார்பு மாட. (கூகூ)

தரைசெறி யுதர மாடத் தளர்மடி யுந்தி யாட
வரைபுலி யதளு மாடக் கோவணக் கீழு மாடப்
பரைநிலை பாதத் தோடுந் தூக்கிய பாத மாட
விரைமலர்ப் பதச்சி லம்பு விரலொலி முழங்கி யாட. (சு0)

வேறு.

நிலைபெறு பதத்தா னிறையிரு ணீக்கி நேசமொ டெடுத்
தபொற் பதத்தாற், கலைபயி லருள்சேர் பாகதி காட்டி வினை
கெடக் கையன லேந்தித், தொலைவிலா மாயை சோர்தரச்
செங்கைத் தமருகந் தொனிபெற முழக்கி, யலகில்வீ டளித்
துப் புரப்பதற் கண்ண லாடுவா னருளுநா டகமே. (சுக)

வேறு.

நிருத்தனிவ் வண்ணமா நிகழ்த்து மாடலை
யருத்தியிற் கண்டவ ரனைத்து ளோர்களுங்
கருத்தொடு கண்கவர் காட்சித் தாதலின்
வருத்தமா ருடலுயிர் மறந்து வைகினார். (சுஉ

வேறு.

அவ்வயத் தொன்று கண்டா ரதன்றி வேறு காணார்
சிவைதிகழ் வதன நோக்கி யிறைநடஞ் செய்த வினபச்
சுவையமு திருக ளாரத் துய்த்துளச் சோர்வு நீக்கிக்
கவையறு சிந்தை யாரக் களியின்பக் கடலு ளாழ்ந்தார். (சுங)

திடனுற நாமஞ் செப்பச் சிந்தையு னினைக்கச் சிந்தை
யிடனுறப் பாவ கத்தா லெய்திய வின்பம் போல
விடமுறை கண்டன் மன்றின் வெளியிடை யெதிரே நின்று
நடமரு ளின்ப மெய்மா னவின்றிட முடியா தன்றே. (சுச)

கரமலர் முடியி னேறக் கண்கணீ ரருவி பாய
விரவுளத் தின்ப மெய்த மெய்ம்மயிர்ப் புளக மோங்கப்

பரவச மடைந்து மாயன் பங்கயன் முதலா வுள்ளோ
ரரகர வென்று போற்றி யின்னன வறைய லுற்றார். (சரு)

கடல்படு காள முண்ட கருணையங் கடலே போற்றி
யுடல்பொரு ளாவி யாகி யுறைதரு முணர்வே போற்றி
யடல்விடைப் பாகா போற்றி யடியவர் மோகா போற்றி
யிடலுறு புரங்க ளட்டு விண்ணவர்ப் புரந்தாய் போற்றி. (சசு)

மெய்யனே போற்றி போற்றி யிலையென விளம்பும் பொய்யர்
பொய்யனே போற்றி போற்றி புகன்மறைப் பொருளே போற்றி
மையனே போற்றி போற்றி யமலனே போற்றி சூலக்
கையனே போற்றி போற்றி காலனைக் காய்ந்தாய் போற்றி. ()

அரியயன் முதலி னோர்க ளிவ்வண மடுத்து நின்றே
யுரியவன் புகழைப் போற்றி யுளமகிழ் வோடு நிற்பத்
தெரிதரு வாசு னோடு மாத்யந்தன் றியான காட்டன்
பரிபுர பாதம் போற்றி யின்னன பகர லுற்றார். (சஅ)

வேறு

அண்டமோ ரிரத மருமறை துரக மம்புயன் சாரதி யனில, முண்டநாண் மேரு வரைசிலை யுலக முண்டவெம் பகழியாற் கோரங், கொண்டமுப் புரங்கள் வென்றுமூ வுலகுங் கொண்டவெந் துயர்களை கோவே, வண்டமர் கூந்த லுமை சிவ காம வல்லியோர் பங்குறை தேவே. (சகூ)

வாரிதி தாழி வாசுகி கயிறு மந்தர மத்துமா யவனே, நீரு று மாமை யாச்சுர ரரக்க ரமுதெழும் வேட்கைநெஞ் சுறவே, போருறு திண்டோள் வலியினாற் கடையக் கடைந்தவர் பொ ன்றிடத் தோன்றுங், காருறு மால முண்டவ ருய்யக் காத்த ருள் கருணையங் கடலே. (ருo)

வேறு.

தேவர்க டேவ வாம தேவமா தேவ ராேனார்
மூவர்கண் முதல்வா மூவா மூக்கணு முப்பு ராரி
யேவரு மேத்து மீசா விறைவவெம பெருமா னீங்காப்
பூவரும் புதுவை மேய புகழ்நட ராசா போற்றி. (ருக)

சார்ந்தவர்க் குறவே போற்றி சார்கலார் பகையே போற்றி
தேர்ந்தவர்க் கமுதே போற்றி தேர்கலார் விடமே போற்றி

யாய்ந்தவர்க் கவரே போற்றி யாய்கலார்க் கயலே போற்றி
சேர்ந்தவர்க் கருளே போற்றி சேர்கலார்க் கிருளே போற்றி. ()

தாணொரு முதலாய்த் தேடு மவரிடஞ் சாராய் போற்றி
யூனுயிர் நினைவெண் டீங்தோ ரூனுயி ராமுய் போற்றி
யானென லகல்வோ ருள்ளத் தின்பமாய் நிறைந்தாய் போற்றி
வானொடைம் பூத மாகி மன்னிநின் றருள்வாய் போற்றி. ()

மருள்பவர் நெஞ்சத் துள்ளே மருளென நிற்பாய் போற்றி
தெருள்பவ ரகத்தி னுள்ளே தெருளதாய் நின்றாய் போற்றி
யருளிய விரண்டின் வேறா யறிந்ததி லுறைவாய் போற்றி
யிருளொளி யிரண்டு மாகி யவையுண ரிறைவா போற்றி.(ருச)

உலகெலாம் படைக்குந் தூய னுலகெலாம் புரக்கு மாய
னலகிலாக் காலந் தேடி யளந்திடற் கரிய சோதி
குலவியம் பலத்து ணின்று கூடினு ரெவருங் காண
விலகிய நடஞ்செய் வார மென்னென வுரைத்து மெந்தாய்.()

சடைமுடி யதனி னீங்காப் பிரளய சலந்த ரித்தே
யடைவுறு மெரியா யுள்ள தியாவையு மமுது செய்து
திடனுறு சுடர்கண் மூன்றுந் திகழ்விழி யாகக் கொண்டே
யுடனுல குயிர்க ளியாவும வேடமா யுவந்த நிற்கு. (ருசா)

எம்மனோர் செங்கை நீர்பச் சிலைகளா லேத்தல் கண்டு
செம்மணி யுவந்தெக் காலுந் திருவுளப் பாங்கா வெண்ணி
யம்மினென் றருளி மாறா மாசுக ணீக்கி யாண்ட
தம்மநின் கருணைத் தன்மை யாரளந் துரைக்க வல்லார்.(ருஎ)

வேறு.

என்று கூறியம் முனிவர ரடியில்வீழ்ந் தெழுந்து
நின்று சென்னிமேற் செங்கரங் கூப்பிமுன் னெஞ்சத்
தொன்று மன்பொடு மிருகணீ ரருவிக ளோட
நன்று சேர்தரு பேரின்ப மடைந்தமுன் னனுகி. (ருஅ)

வேறு.

புனிதனைப் போற்றி மீளப் பொன்னடி வணங்கி நிற்பக்
கனிமொழி பங்கன் கூறுந் திருவுளக் கருணை கூர்ந்து
தனிநட வின்பங் கண்டோ ரேவரு மூத்தி சார்வ
ரினியொரு காலும் பாச மிலையெனத் தவரை நோக்கி. (ருகூ)

திகழ்தரு வாச னேமாத் தியந்தனே தியான காட்டா
புகழும தருச்ச னைக்கே புந்தியுள் வியந்து நீவிர்
மகிழுமிப் பதியுட் பன்னாள் வைகிட லிவண்டித் தாழ்த்தோர்
துகளிலெந் நடனங் கண்டி ரினியிலைத் துயரு மக்கே. (௯௦)

எனவிறை யவனி யம்பி யேனைமா லயன்மற் றுள்ளோ
ரனைவரு மகிழ்வி னெய்த வின்னரு ளளித்துத் தேசார்
சினகர மடைந்தான் பின்னர்த் திகழ்தவ முனிவ ரோடும்
புனைதுளாய் முடியோன் வேதன் புரந்தரன் முதலி னோரும்.

சிலபக லங்கு வைகிச் செம்பலை யருச்ச னாதி
பலபணி புரிதற் கான பகர்மறை யாக மங்க
ளலகற வுணர்ந்த சைவ விப்பி ராதி யோரை
நிலைபெறப் பதியில் வைகிப் பணிவிடை நிகழ்த்தச் செய்து.

தினந்தொறு மாறு காலப் பூசையுந் திங்க டோறுங்
கனந்தரு மாட்டை தோறு மெழுந்தருள் காட்சி யாவு
நினைந்தவா முயலு வித்து நிருமல னுஞ்ஞை பெற்றுப்
பினந்தவி ருயர்தி ருத்தேர் மணவணி பேணிப் போற்ற. (௯௩)

பொருந்திய விடபத் திங்கட் பொருவறு புணர்த நாளிற்
றிருந்திய கொடியு மேற்றித் தினந்தரு வாக னாதி
யிருந்தெழுந் தருளுங் காட்சி யேவரும் போற்றக் கண்கள்
விருந்தெனப்புசித்தார்பின்னர் மணவிழாவேட்கைசெய்வார்.

வேறு.

முனிவர ராதியோர் மொழியும் வண்ணமே
புனிதவப் பதியுள வன்பர் புந்தியுட்
கனிவுறு திருக்கலி யாணம் போற்றவே
புனைபுவி யெங்கணு மோலை போக்கினர். (௯௫)

வேறு.

நகர மெங்கணு முரசறை வித்தனர் நயந்து
பகரு நன்மண முரசொலி பரிவுடன் கேட்டுத்
தகர வார்குழன் மாதரு மைந்தருந் தம்மு
ணிகரி லாப்பெரு மகிழ்ச்சியோ ரளவின்றி நேர்ந்து. (௯௬)

அம்மை யப்பர்தம் பெருந்திரு மணவணி யதனைச்
செம்மை யாவினித் தெரிசனஞ் [illegible]

தம்மு டல்புள கித்திடத் துதிசெய்து தாழ்ந்து
கொம்மை வெம்முலை மாதரு மைந்தருங் குழுமி. (கூஎ)

மாட மாளிகை யரங்குக ளேடற்றிகண் மன்ற
நீடு பித்திகைத் தலமெலா நிருமலஞ் செய்து
பீடு வெண்சுதை தீற்றின ரொள்ளொளி பெருகத்
தேடி யைவனச் சித்திர மெழுதினர் சிறப்ப. (கூஅ)

வேறு.

ஓங்கிய காவண நிரையி னுய்த்தனர்
பூங்கத லித்திரள் பூகந் தெங்குகள்
பாங்குறை குலையொடு பரிவி னட்டினர்
மாங்குழைத் தோரண வரிசை வீக்கினர். (கூகூ)

வேறு.

பந்தரின் முழுதுஞ் செம்பொ னுடைகள் பரிவிற் சேர்ப்பார்
சிந்தலர்ச் சரங்க ளோடு நவமணிச் சரங்கள் செய்வார்
வந்தவே திகையி னூடி யணிமணிக் கும்பம் வைப்பார்
நந்தலி லெண்ணி லாநெய் விளக்கிடு வார்க ணண்ணி. (எ0)

சந்தனக் குழம்பு விட்டுத் தரைமெழுக் கிடுவர் சில்லோர்
சிந்துபூம் பனிநீ ரோடத் தெருக்களிற் றெளிப்பர் சில்லோர்
புந்தியுண் மகிழ்ந்து சுண்ணப் பொடிக்கோல மிடுவர் சில்லோ
ரிந்தவா நகர மெங்குந் துறக்கமா டென்னச் செய்வார். (எக)

மஞ்சன மாடு வோரு மாமலர் சூடு வோரு
மஞ்சனந் தீட்டு வோரு மருப்பணி பூட்டு வோருங்
குஞ்சர நடையி னாருங் கோளரி யேறன் னாருந்
தஞ்செய லணிகள் கண்டு தத்தமின் மயங்கு வோரும். (எஉ)

தம்புரு வீணை யேந்தித் தந்தியை மீட்டு வோரும்
பம்பிய விசைக்கு நேராப் பாடலைக் காட்டு வோருங்
கும்பமென் முலையார் பாடுங் குயிலிசை வேட்டு ளோரு
மும்பரும் வியந்து கேட்கு முயர்தமிழ்ப் பாட்டு ளோரும். ()

வேறு.

இன்னவா றிலையர் மைந்த ரெங்கணு
மன்னிய நகரிடை மகிழ்ச்சி யெய்தியே
பொன்னெடுந் திருக்கலி யாணம் போற்றவே
யுன்னுவ ருருகுவ ருளக்க ளிப்பொடும். (எச

வேறு.

இருக்குமந் நகரி னுள்ளோ ரேவருந் தத்த மில்லிற்
சுருக்கமின் மணங்க ளென்னச் சேர்ர் வொரு சிறிது மின்றிப்
பெருக்கமார் நகர மெங்கு மணிவளம் பேணிச் செய்தார்
திருக்கலி யாண மண்ட பச்செய றெரிந்து ரைப்பாம். (எரு)

வேறு.

வச்சிரப் பட்டிகை மரக தத்தினு
னிச்சயத் தூண்மணி நிலவு போதிகை
வைச்சசெம் மணிகளான் மறுவி லுத்திரம்
பொச்சமி னீலமே புகறு லாத்தது. (எசு)

நவமணி யவைகொடு நவையி னூற்றிய
வுவமையி லொளிகொளு முருக்கு செம்பொனுத்
தவழ்தர வமைத்தனர் சால்பு பொங்கவே
சிவழ்பெயர் பரைமணந் திகழு மண்டபம். (எஎ)

வேறு.

சூரிய காந்தச் சுழிகையு நீலச் சுழிகையும் பொருந்சரி கைகளாற், பாரிய படமேற் கட்டிகள் வனைந்து பகர்நவ மணிச்சர நாற்றிப், பேரியல் பாரி சாதமந் தாரம் பிரசமார் பலவகை மலராற், சீரிய நறும்பூங் கொட்டகை வேய்ந்து செறிமண மெண்டிசை சேர. (எஅ)

வேறு.

மரகதப் பாசிலை வயங்கு முத்தினூற்
பாவிய பாளைசெம் பவளத் தேசுகள்
விரவிய பழுக்குலை வெள்ளித் தம்பமூ
கிரல்படப் பூகங்க ணிறுத்திப் பின்னரும். (எகூ)

இடைபழம் பழுத்துயர் கதலி யின்குலை
மிடைபசும் பொன்னின்வித் துரும மேயபூப்
படரடை மரகதப் பசும்பொற் றண்டமென்
றடையுடை யரம்பைக டகநி ரைத்தனர். (அ0)

வேறு.

நாரங்க ளுஞ் சம்பீ ரத்தோ டேற்றநற் கனிவ ருக்கஞ்
சாரங்கள் பொசியுங் கோவை யெண்ணில தகவி னூற்றி
நீரங்கொள் கெவுளி பாத்தி ராதிசெவ் விளநீர் கோத்துப்
பாரங்கொள் கயிற்றாலு வீக்கிப் பற்பல விடனிற் றூக்கி. ()

குறைதவிர் வேள்விச் சாலை குண்டவே திகையு மாற்றி
யறைதரு மாடி யாதி யட்டமங் கலங்கள் வைத்துத்
தறைபடச் சந்தச் சேற்றாற் றிருமெழுக் கிட்டுத் தாழ்வி
னிறைபடு பல்பூந் தாதாற் கோலமு நிகழச் செய்து. (அ௨)

வேறு.

இரும ருங்குபொற் பாவைகண் மணிவிளக் கிருகையினே
டுத்தேந்தப், பொருவ ருந்திருக் கோயிலின் வாய்தலின் வானு
றப் பொலிந்தோங்குந், திருவி ளங்கிய பந்தரு முபன்றுள
தெருவெலாம் பரந்தெய்தக், குருமணிச்சுடர்ப் பாலிகை
தொறுமுளை தெளித்தனர் குறைதீர. (அ௩)

மகர தோரண மளப்பில நிறுத்தினர் மறுகுக டொருந்தோறுஞ்
சிகர மாமலை யிவையென வுயர்நிலைத் தேர்பல சமைவித்தார்
புகரில்கோபுரத்திருமதிண்மண்டபம் புதுச்சுதையணிவித்தார்
பகருமாலயந்தொறுஞ்சிவலோகமேயெனும்படிபணிசெய்தார்.

வேறு.

நகைம ணிப்பணித் திருமண மண்டப நாப்பண்
டிகமு நாற்றிசை வயிரச்சிங் காசனப் பீடரி
னிகழ்வி லாப்பசும் பொற்றகட் டாற்குற டேத்தித்
தருகு றட்டின்மேற் பளிக்குயர் தம்பங்க ணிறுவி. ()

வேறு.

பருமணிப் பேர்திகை பவள வுத்திரங்
குருமா கதத்தினாற் கொடுங்கை வைகவே
யெரிமணி மேனிலை மூன்றி சைந்திடத்
திருமணி விமானமுஞ் செய்துள் ளாகவே. (அ௬)

வேறு.

பிரணவம் பீட மாகப் பிறங்குகா லங்க மாறாய்ச்
சுருதிநூல் கயிறாய்த் தேசா ராசனச் சொரூப மெய்தி
வருதல்போற்றிகழ்செம்பொன்னின்மணிகளாற்குயிற்றிச்செய்த
தருமமே வடிவ மாய வாசனஞ் சமைத்தா ரன்றே. (அ௭)

சிந்தா மணியும் வளர்காம தேனு வுடனே யைந்தருவு
நந்தா நிதிய மொன்பானு நவையி லமுத மறுசுவைசேர்
பிந்தா வுண்டி யையவகையும் பேணுந் துகிலு மணிப்பூணுங்
கொந்தார் மலருங் கந்தமிவை வேட்ட யாவுங் கொடுத்தருள,

சிறந்திடு மண்ண லாரைத் திருமணக் கோலஞ் செய்ப
வறந்திகழ் முனிவ ராதி யருச்சகர் பலரும் கூடி
நிறந்தரு சந்த னுதி தயிலங்க ணிறைய வாட்டிக்
கறந்தபா லாதி மஞ்ச னங்களுங் கவினப் போற்றி. (அ௧)

திருவமு துதவித் தூப தீபமுஞ் சிறப்ப வேந்திச்
சுருதியாற் போற்றி மேன்மை யலங்காரந் தொடங்கு கின்றார்
பெருகொளிப் பூம்பட் டாடைதிருவரை பிறங்கப் பெய்து
குருமணி யிரட்டை ஞாண்பொன் பட்டிகை குலவச் சாத்தி.

வேறு.

வண்டி ரைத்திடுங் கற்பகத் தொடையல்கள் வளர்மணி முடிவேய்ந்து, பண்டை நீறணி மேனியின் மான்மதச் சாந்தமும் பரிந்தப்பிக், குண்ட லத்தொடு நவமணிக் குழைகளை யிருசெவி யுறப்பேணிக், கண்டி கைப்பணி பற்பல விடந்திகழ் நீலகந் தரஞ்சாத்தி. (௯௧)

முத்து மாலிகை யளப்பில விலங்குமுந் நூலொடு தகப் பூட்டிக், கொத்து லாவிய சரப்பணி பதக்கமுங் குலவுசெங் கதிர்போலு, மொய்த்த திண்புயத் தங்கதம் பட்டிகை முழுதெழில் பெறச்சேர்த்து, மத்த வாரணத் துரிதவிர்த் துயர்ந்தபீதாம்பரம் வனைவித்து. (௯௨)

வேறு.

பகர்மணி விரல்க டோறும் பவித்திர மீதி யாழி
திகழ்தரப் புனைந்து வீரக் கழலடி சிறப்ப வீக்கிப்
புகரறு மணிக்கி ரீடம் பொங்கொளி பொருந்தச் சூட்டி
யகமகிழ்ந் தலங்க ரித்தா ரறிவினை யலங்க ரித்தார். (௯௩)

வேதகோ டணங்க ளார்ப்பத் திருமுறை விளம்பல் வாய்ப்ப
வோதநீ ரரவ மான வாச்சிய வொலிகண் மொய்ப்ப
நாதனை யன்பு பொங்க நவமணிச் சிவிகை மீதி
லாதவ ரொளிகள் கோடி யெனவெழுந் தருளச் செய்தார். ()

வேறு.

சங்க நாதமுந் தூரிய வொலிகளுந் தழைப்ப
மங்க லந்திகழ் பூமழை யமரர்கள் வழங்கத்
துங்க வன்பர்க ளரகர வெனுமொலி தொனிப்ப
வெங்க ளையருமெழுந்தன ரேழுல குய்ய. (௯௫)

வேறு.

இடக்கயங் கொடிகுடை யெடுக்கின் றோர்சிலர்
படைக்கலச் சூலமும் பரித்து ளோர்சில
ரடைப்பைக ளாசிக ளமைத்து ளோர்சிலர்
சுடர்ப்பல விளக்கணி தொழிலி னோர்சிலர். (௯௬)

படிபுகழ் முழவொலி தாளம் பல்கவே
பிடிநடை பிறைநுதல் பிறங்கு வாள்விழி
துடியிடை நுடங்கிடச் சுடர்பொற் கொம்பென
வடிவுடை யவர்நடம் வயங்க மாடெலாம். (௯௭)

வேறு.

மாலயற் கரியான் வந்தான் வானவர் தேவன் வந்தான்
காலனைக் காய்ந்தான் வந்தான் கருணையங் கடவுள் வந்தா
னாலமா ரிறைவன் வந்தா னடியவர்க் கெளியன் வந்தான்
சீலவு மேசன் வந்தா னென்றுபொற் சின்ன மார்ப்ப. (௯௮)

வரிசைசேர் கருவி யைந்தும் வாச்சிய மிகமு ழங்கத்
தெரிவையர் பல்லோர் செங்கை திகழ்மணித் தீப மேந்த
வரிவையர் சில்லோர் கும்ப மாலத்தி யமைய வேந்த
வுரியமென் முறைமை யோடு மும்முறை வலங்கள் சூழ. ()

அரியயன் முதலி னோர்க ளமரர்கண் முனிவர் மேலோர்
புரிவுடைப் பதியி னுள்ளோ ரயற்பதி யிருந்து போந்தோர்
பரிவுட னினிது சூழ்ப் புதுவைவாழ் பரமன் றேசா
ரருமண மண்ட பத்தில் வந்தெழுந் தருளி னானே. (௧00)

முரகர னாதி யோர்கண் முறையுடன் வதிந்தி ருந்தார்
சிரகரங் கொண்டு போற்றி மற்றுளோர் தெரிசித் தேத்தி
யரகர வென்று போற்றி யன்பர்க ளருகு நிற்பப்
புரகர னிருந்தான் கண்டோர்க் கானந்த போகம் பெய்து ()

மங்கல முகூர்த்த வோரை வந்துறு மளவு மங்கட்
பங்கய வதனி மார்கள் பாடலா டலின்வி யந்து
கங்கையஞ் சடையான் வைகுங் காலையிற் கருணை ஞான
நங்கைநன் மணக்கோ லங்கள் புனைதிற நவில லுற்றாம். (௧0௨)

இமயமா வசல மீன்ற வெழிற்சிவ காமித் தாயா
முமையவள் சரணம் போற்றி யொண்டொடி மடமி னார்க

ணமையுறு மணிப்பொற் பீடத் தெழுந்தரு ளன்பு செய்து
சமையுறு மரிச னாதி குங்குமச் சாந்தஞ் சாத்தி. (கoங)

மறையொடு மனுக்க ளோதச் சங்கவாச் சியமு ழங்க
வறைதரு வாச மென்னீ ரபிடேக முறையி னாட்டிச்
சிறைபடு செம்பட் டாடை சிற்றிடை திகழச் சாத்திப்
பொறைபடு மிருடி புன்னி மார்மறைப் பூவை மாரும். (கoச)

இருங்கம லால யத்தி னேந்திழை யாரு முன்னாட்
பெருந்தவ மியற்ற வின்றே யெய்திடப் பெற்றோ மென்று
திருந்துமை கரங்கள் பாதஞ் செம்பஞ்சுக் குழம்பு தோய்த்துச்
சுரும்பவிழ் மலர்மென் கூந்தற் சூழிகைச் சடையுங் கண்டு. ()

பாடகம் பரிபு ரங்கள் கிண்கிணி பாத சால
மேடக மலர்ப்ப தத்தி னெழில்பெற வணிந்து வாய்ந்த
வாடகப் பொருப்புக் கொங்கைக் கரியகுங் குமச்சே றப்பித்
தேடிய காஞ்சி யாதி மேகலை யிடையிற் சேர்த்து (கoசு)

பொன்னொடு பவளக் குண்டுக் கோவைமுன் கையிற்பொருத்தி
மின்னிய வயிரப் பச்சைக் கடகமென் றொடிகள் பூண்டு
மன்னிய வேறுவேறு பணிகவ மணிவ டங்க
டுன்னிய கொங்கை யூடு பதக்கமோ டிலங்கச் சூட்டி. (கoஎ)

இருமதி மருங்கு சாரு மிணைக்கதி ரிரண்டு போன்ற
குருமணிக் குழைக ளோடு மகரகுண் டலங்கு லாவ
வருமணிச் சுட்டி சோதி நுதலிடை யலங்க வாச
விரைமலர்ச் சுகந்தங் கூந்தல் விம்முறச் செருகிப் போற்றி. ()

வேறு.

அலைமாதுங் கலைமாது மற்றுள்ள வரிவையரு
மலைமாது சிவகாம வல்லிதிரு மணக்கோலந்
தொலையாவி னெழில்வாய்ப்ப வலங்கரித்துச் சுடர்சோமன்
கலையாருந் திருமுடியார் கருத்துருகக் கவின்செய்து. (கoகூ)

படப்பாய லரியயனும் போற்றரிய பரஞ்சுடரு
மிடப்பாகந் தரவாய்ந்த வெழிலுடைத்தா மிமயமலை
மடப்பாவை சுந்தரமா மணக்கோல வளநோக்கி
கடற்பாவை கலைப்பாவை களிப்பரவை தனிலாழ்ந்தார். (ககo)

வேறு.

கதிர்விடு மணிகு யின்ற கனகமென் சிவிகை மீதே
யுதிமதி வதன தேச வுமையெழுந் தருளச் செய்து
சதிதரு மேள தாள நடனமுஞ் சங்கு மார்ப்ப
முதுமறை யவர்க டொண்டர் மறைதிரு முறையொ லிப்ப. ()

அந்தரத் தமர ரோவா தலர்மழை யவனி தூர்ப்பச்
செந்திரு வாணி தேவ ரிருடியர் செல்வி மாருஞ்
சிந்தைதபி னுவந்து பல்லாண் டிசைகண்மங் கலங்கள் செப்ப
வந்தனண் மேரு வில்லி மனைசிவ காம வல்லி. (ககஉ)

அடைப்பைகண் ணடி யேந்தி மேனகை யருரு சாரக்
குடப்பயோ தரத்த ரம்பை யாலவட் டங்கு லாவ
வடப்பணிக் கொங்லகத் தேவ மாதர்சா மரைவ ழுங்கப்
படப்பணி யல்குல் விந்தை நெருக்குபர் பரிவி னீக்க. (ககங)

பூவையர்சிலர்கள் வாசப் பூவொடு பனிநீர் சிந்தச்
சேர்வகன் மின்னார் சில்லோர் பரிமளத் தூப மேந்தக்
கோவையா மணிவி ளக்கங் கொம்பனார் பலர்க ளேந்த
நாவுறை மகள்ப ராவ வுலகமீன் றருளு நங்கை. (ககச)

வேறு.

இவ்வாறு கலியாண மண்டபத்தி லெழுந்தருளிச்
செவ்வான வண்ணர்திரு வலப்பாகத் தினிதிருந்தாண்
மெய்வாழ்வுங் கொடுத்தடியார் வேட்டவிக போகமருள்
செய்வாண்மற் றெமையாண்ட சிவகாம சுந்தரியும். (ககரு)

வேறு.

இரவியு மொளியுங் கன்ன விரதமு மலரு நீங்கா
விரவிய மணமும் போலும் வேறற விசைந்து ளோர்கள்
பரவிய வுலகோ ருய்ய வேறுடைப் படிவா யன்பு
தரவருந் தந்தை தாய்போன் றிருந்தன ரிருவர் தாமே. (ககசு)

வேறு.

எக்கால மணக்கோல மிசைந்தருளு முமையீச
ரக்கால முண்மைபெறு மணக்கோலத் தணிபுகல
முக்காலு மியம்புகின்றேன் மொழிமனத்துக் கெட்டாதாற்
றற்கால மணக்கோலந் தரிசித்தோர் முனஞ்சான்று. (ககஎ)

வேறு.

அன்ன காலையிற் றிருநெடு மாலய னேனோர்
சொன்ன பாத்திர பவுத்திரத் தூயநீர் சொரிந்து
பன்ன காபர ணத்திறை பாதங்கள் விளக்கி
மன்னு தீர்த்தநீர் புறம்பினு முள்ளினும் வரித்தார். ()

வேறு.

மாதவ னன்பி னோடு சிவகாம வல்லி செங்கைப்
போதுயர் புனிதன் செங்கைப் போதுற வைத்து மேலோர்
வேதமந் திரங்க ளாதி கரகநீர் விளங்க நல்கி
யாதரம் பெருகப் போற்று மரியபா வகங்கள் செய்தார். ()

தேவதுந் துபிக ளார்ப்பத் தேவர்பூ மாரி சிந்தப்
பூவலர் கொம்பர் மின்னார் பாடல்க ளாடல் பொங்கச்
சோர்வகன் முனிவர் வாழ்த்த மற்றுளோர் களிது ளங்க
வார்வமேலீ டனைத்து ளோருந் திருமணத் தின்பத் தாழ்ந்தார்.

கரளமார் கண்டத் தெந்தை கமலபொற் பதங்கள் போற்றிப்
புரையறு முனிவர் மேலோர் மறையவர் புனைந்த சொல்லா
னிரல்படக் குவையாய் வேய்ந்தே யரிசன நீரிற் றோய்த்த
தரளவா ளரிசி வீசித் தணிவகன் மகிழ்வ டைந்தார். (கஉக)

மேவியீ கடவு ளான்பால் விரைநறு நெய்க லந்தே
யோவிறீஞ் சுவையார் கன்னல் கற்பகக் கனியொண் டேனு
நாவருஞ் சுவையி னின்ன நறுமதுப் பருக்க மாற்றித்
தேவர்க டேவன் செங்கைத் திருநிவே தனஞ்செய் வித்தார்.

தாமரைத் தவிசி னோனுந் தனையர்கண் மருங்கு சார
வாமழ லோமத் தீயி னறுநெயா குதிக ணல்கத்
தோமிலா குதிய ருந்தி வலஞ்சுழித் துயர்ந்து பொங்கிச்
சேமமா ருலகின் போங்க வளர்ந்தது வேள்விச் செந்தீ. (கஉங)

மறையொலி முழங்க மோன முனிவர்வாய் மனுவி ளங்க
நிறைகொள்பல் லியமொ லிப்ப நேரிழை யார்கள் வாழ்த்த
முறைமையி னிமய வல்லிக் கத்தநாண் முகூர்த்தந் தன்னி
னிறைவர்மங் கலநாண் சாத்தி யேழ்புவிக் கின்ப மீந்தார். ()

வேறு.

பந்த முத்திக ளுயிர்க்கெலா மருளிய பரம
னந்த மில்லவைக் காசைசி ராசையை யருள

மூர்த்து மம்பிகை யிலகுகைப் பிடித்தனன் முழுது
மிந்த வேழுல கிவ்வணு மிகபர மெய்த. (கஉ௫)

வாம தேவனு மலைமக ளோடுமலர்க் கையாற்
சேம மார்பொரி யெரியிடைப் பெய்துபின் செய்கை
நேம மாவருந் தவமுனி வர்க்குயர் நெறியா
லேம தானங்க டுகுப்படி நல்குமா றிசைத்து. (கஉசா)

வேறு.

செந்தழல் வலமா வந்தே யுமையவ டிருப்பா தார
விந்தம தெடுத்து நாதன் கையினு லம்மி மீதின்
வந்துற வைத்துத் தூய வருந்ததி வரவு நோக்கி
யிந்தவா றுய பாவ கங்களை யிசையச் செய்தான். (கஉஎ)

இத்திறம் வதுவைக் குள்ள செயலெலா மியற்றிப் பின்ன
ரத்தனும் விமலை யோடு மணவறைக் கடையும் பான்மை
மெய்த்திறஞ் செய்தா ரங்கண் டிருமண வினையு மன்னுர்
சுத்தமெய் வனப்புங் கண்டோ ரேவரு மின்பந் தோய்ந்தார்.

வேறு.

திருநாம முரைத்தோர்க்குச் சிந்தைநிறை யின்போங்கு
மொருநாம மோரூரு மொன்றுமிலா வொண்பொருளோ
பெருநாம வயித்தீசர் சிவகாமி யெனும்பெயரால்
வருநாம மாவந்து மணந்தநலம் வழுத்துவதோ. (கஉகூ)

கயிலாயம் போலிசையுங் கலியாண மண்டபமு
மயிலாரு மெழிற்சாயுற் சிவகாமி வயித்தீசர்
பயிலாரு மணக்கோலம் விழிகுளிரப் பலரிந்தோர்கள்
குயிலாரு மொழிபங்க னருள்பெறுவர் குறைவின்றே. (கநூO)

வேறு.

நிரைமணி குயின்மண வறையை நீங்கியே
தரைபுகழ் வதுவைமண் டபத்தைச் சார்ந்தன
னுரையுணர் வகலொளி யுணர்வி னுத்தமன்
வரைவக லருச்சகர் பணிகண் மன்னவே. (கநூக)

வேறு.

வர்க்கவகைப் பணியார வகையிரதக் கனிவகைகண்
முக்கணனு முமையவளு மமுதுசெயு முறையருளி

மிக்கநெடு மாலாதி யும்பர்விய னுலகோரும்
பொக்கமிலன் பொடுபோற்றத் தீபாரா தனைபுரிந்து. (கங௨)

வேறு.

விருப்புட னெவரு மேத்தி யாகர வெனவி ளம்பி
யருப்புறு மன்பு பொங்கி யகங்கனைக் குருகத் தேசார்
கருப்புரத் தீப மேந்திக் கண்ணுளங் கவருங் காட்சி
தரப்பெரி துவந்தார் பின்னர்ச் சதுமறை மனுக்க ளோதி. ()

புரையக லட்டி னோடுஞ் சோடச பூசை யாற்றி
யுரைசெயு மும்ப ரானோர்க் குளமகிழ் சிறப்பு நல்கித்
திரைகடற் புவியு ளோர்க்குத் தரும்படி யன்பு செய்து
வரைவிசை யுமையோ டீசர் நகர்வலம் வரமு யன்றார்.(கஙச)

திருமணக் கோலத் தோடுந் தேவிதன் டிகையின் மீதும்
வரவயித் தீசர் செம்பொன் மணிதிக ழியானை மீது
மிருமைசெய் கதிர்கள் கோடி யிரண்டுரு விசைந்த தென்ன
வருமைசேர் வீதி நான்கு முலாவெழுந் தருளி னாரே. (கஙரு)

சிரியோர் மறையி னார்ப்புந் திருமுறை யன்ப ரார்ப்பும்
பூரிகை தாரை யோடு பல்லியம் பொங்கு மார்ப்பும்
வாரிசை கொங்கை மின்னார் மங்கலப் பாட லார்ப்பு
மாரியன் றுடியை மானு மதிர்வெடி யார்ப்பு மல்க. (கஙசு)

ஆதவன் செந்தீ சோம னளப்பிலா வுருவாய்த் தோன்றி
நாதனோ டுமையாள் கோல நன்மணம் போற்று மாபோ
லேதமி லெண்ணி லாத வெரிசுடர்ப் பந்தந் தீபங்
கோதகல் கோடி கோடி குலவிய நிலவு மல்க. (கஙஎ)

அரம்பைய ராடல் பாட லற்புதம் விளைப்ப தோர்பா
னரம்பியல் வீணை யாதி தும்புரு நாத மோர்பாற்
பரம்பெறு சுருதி யோடு திருமுறைப் பாட லோர்பாற்
றிரம்பெறு கவிதை வாணர் துதிபுரி செய்யு ளோர்பால். ()

வீதிக டோறு நேசர் வியன்மணி மனைக டோறுஞ்
சோதிசேர் திருவெண்ணீற்றுத் தொண்டர்தம்மடங்கடோறும்
வேதிகை தொறும மைத்த விரைத்தொடைக் கனிதாம் பூலங்
காதலோ டன்பு செய்து தரும்படி திருக்கண் சாத்தி. (கஙகூ)

நவமட மாதர் காண நவமதன் வடிவு போன்று
ரவமக லடியர் நேசர்க் காண்டவன் போவி சைந்தார்

பவமகல் யோகர் நோக்கிற் பரஞ்சோதி வடிவ மானார்
தவமிகு ஞானத் தோர்க்குச் சச்சிதா னந்த மொத்தார். ()

அலகிலா வுயிர்கட் கெல்லா மம்மையோ டப்ப ரானார்
சிலசம யத்தோர்க் கெல்லாந் தேவர்கள் சிங்க மானா
ருலகில்வன் மனத்தோர்க் கெல்லாந் தெரிதிரு வுருவ மானார்
நலமருள் பாத நீத வயித்திய நாதர் மாதோ. (கசுக)

வேறு.

இன்ன வாறு யுமையவளோ டீசர் நகரி வலம்வந்து,பொ
ன்னின் கோயில் வாய்தலிடைப் போந்தார் புகலு மறைபொ
லிப்ப,வன்ன கொடியொண் முரசாடி வழங்கு கும்ப மணிவிள
க்கு வன்ன வங்கு சங்கவரி யென்னு மட்ட மங்கலங்கள். ()

திருமு னமைப்ப விப்பிரர்கள் செம்பொற் கலச நீர்சொ
ரிய, வருகு மறையின் னார்பலர்க ணீரா சனங்க ளணியேந்தப்,
பெருகு மொலிப்பல் லியந்துவைப்பப் பேணி வஞ்சிக் கொடி
யிடையார், முருகா லத்தி குடந்தீபம் வலமா மூன்று முறை
சுற்ற. (கசுரு)

வேறு.

திருமணக் கோலங் கண்டோர் சிந்தையும் விழியு நீங்கா
வொருபெருங் கருணை நகி யிம்பரோ டும்பர் போற்றி
யிருமைசேர் மகிழ்ச்சி யோடு மானத வின்ப மெய்தக்
குருமணி கண்ட தெந்தை யுமையொடு கோயில் புக்கார். ()

இத்திற மணவி ழாவு மெழில்பெற முடிந்த பின்ன
ருத்தம வொன்பா னுளி லொன்பது மணிகள் வேய்ந்த
பத்திபா யொளிகண் மின்னும் பசியசெம் பொற்றே ரைந்துங்
குத்தர மென்ன வூர்ந்து கொண்டருள் வகையு ரைப்பாம்.

வேறு.

கமல நான்முகன் முனிவா ரேவலிற் கருதிச்
சிமைய மால்வரை யிவையெனச் செழுமணி குயிற்றி
விமல மேவிய செம்மனுற் றிசையொளி விளங்க
வமரர் தச்சனு மணிபெற வைந்துதே ரமைத்தான். (கசுசு)

வேறு.

கண்டதே ரணிகளைக் கண்டு வானவர்
பண்டுமுப் புரமட நமது பண்ணவன்
கொண்டதே ரிவையென மகிழ்ச்சி கொண்டன
ரெண்டிசை யோர்கண்மற் றெவரும் போற்றவே. (கருஎ)

வேறு.

அந்தணர்கண் மறைமுழக்க வடியர்திரு முறையொலிப்பப்
பைந்தொடியார் சூழ்ந்தினிய மங்கலம்பல் லாண்டிசைப்பச்
செந்திருவுங் கலைமாதும் புகழ்சிவ காமித்தாய
ரெந்தைவயித் தீசர்மணித் தேரிலெழுந் தருளினார். (௧௯அ)

பிள்ளையார் குமரனுயர் சண்டேசர் பெருமூவ
ருள்ளமார் தரவேறு தனிமணித்தே ருவந்தெழுந்தார்
தெள்ளமுத மொழிமடவா ராடலுமின் னியஞ்செறிய
விள்ளரிய களிப்பெய்தி யெல்லாரும் விழிகுளிர. (௧௯௯)

வேறு.

இலகிய சோதி நாளி லிறைவயித் தீசர் பொற்றேர்
திலகவா ணுதலெம் மன்னை சிவகாமித் தாய்மணித்தேர்
சலமிலா விநாயகன்றேர் குமரன்றேர் சண்டே சன்றே
ரலகில்பொற் றேர்க ளைந்து மகிழ்ந்துகொண் டருளக்கண்டு.()

அற்புத மடைந்து போற்றி யமரரு மனைத்து ளோரும்
பொற்பம ரின்பத் தாழ்ந்து புகழ்ந்தனர் மற்றை நாளாஞ்
சொற்பெறு விசாகந் தன்னிற் றீர்த்தமுஞ் சுரந்து நல்க
மெய்ப்பரி வுற்று மற்றுந் திருவிழா வணிய னைத்தும். (௧௫௧)

தொலைவக லன்பி னோடு நித்தியந் தொழுது ஞான
நிலைபெறு முனிவர் மூவர் வயித்தீசர் நேச மெய்தி
யலைவக லன்பி னோடு முமையம்மை யருளும் பெற்றுச்
சிலபகல் வாசஞ் செய்து விடைகொடு நிலையஞ் சேர்ந்தார். ()

மாலயன் புரந்த ராதி வானவர் மற்று ளோரு
நீலகந் தரனோ டம்மை நிகரறு நேசம் பெற்றுச்
சாலவு மகிழ்ச்சி யெய்தித் தம்பதி சென்று சார்ந்தா
ரேலவார் குழலி யோடும் வயித்தீச ரினிதி ருந்தார். (௧௫௩)

திருநடனஞ்செய்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௬௪.

## திருநடனம்புரிந்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர், மலையை வில்லாகவுடைய பரமேசுரனது கீர்த்தியைப் பலதரமுமெடுத்துச் சொல்லக்கேட்ட சௌனகாதிமுனிவர் மனமகிழ்ந்து அம்முனிவரைவணங்கி மாத்தியந்தன் தியானகாட்டனென்னுமுனிவர்கள் பூசித்த காதையைக்கேட்டுச் சந்தோஷித்தோம். இனி அம்முனிவர் திருநடனந் தரிசித்தகாதை யினையருளிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதுகேட்டுக் களிகூர்ந்து சூதமுனிவர் அவரைநோக்கிச்சொல்லுவார்:—சிவபிரானது திருநடன வைபவம் தேவாமிர்தத்தினு மினியது. ஆனந்தத்தையளிக்கும். கேளுங்கள், மேற்கூறிய அம்முனிவரர் துருவாசமுனிவருடனே தினந்தோறும் நித்திய கருமானுஷ்டான செபதவமுடித்து வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையு மபிடேகமாதியாலே யருச்சித்துக் கண்கள்குளிரத் தரிசித்துத் தோத்திரஞ்செய்து நூற்றெட்டுப் பிரதக்கணம்வந்து பணிந்து பன்னசாலையுட் புகுந்திருந்து அகமும்புறமு மொன்றாக ஒத்த அன்புமேலீட்டாற் சிவபிரானுடைய பஞ்சமுகங்களாதியவயங்களை ஞானக் கண்ணாலே தரிசித்து அசத்தாயுள்ளவைகள் வந்து தம்மைச் சேராதவிதம் கிரமமாகப் பலநாள் புதுவைத்தலத்திலிருந்து "சுவாமீ உம்முடைய சேவையும் பூசையு மெங்களுடைய மனத்தை யுருகச்செய்கின்றன. ஆயினும் உம்முடைய திருநடனந் தரிசிக்குமாசைக்கு ஒரு அளவுமில்லை; திருவுளமிரங்கி யருளுக" என்று பிரார்த்தித்தனர்.

அவரது பிரார்த்தனையைச் சிவபிரானுணர்ந்து நெடுங்காலங்கள் கடந்தன; இனித்தாழாது இவருக்கு நடனசேவை கட்டளையிட வேண்டுமென்று திருவுளங்கொண்டு நந்திதேவரை வரவழைத்துத் "துருவாசர் முதலிய மூன்று இருடிகளுக்கு நாம் நடனஞ் செய்தற்காக ஒரு மண்டபம் செய்க" என்று கட்டளையிட்டருளுதலும் நந்திதேவர் தேவகம்மியனை வரவழைத்து அந்தப்படியே மண்டபஞ் செய்யும்படி யுத்தரவுசெய்தனர்; அவ்வுத்தரவைச் சிரமேற்றாங்கி அந்தத் தேவகம்மியன்வந்து நவமணிகளாலே மண்டபந் திருமதிலாதி திருந்த ஆலயஞ்செய்து சொர்ணத்தினாலும் நவரத்னங்களாலுந் திருவம்பலமொன்று செய்தனன். உடனே நந்திதேவர்சென்று சுவாமி திருச்செவியிலே ஆலயமும், நடனசபையும் அமைத்தமையைத் தெரிவித்தனர். அதுகேட்டுச் சுவாமி திருவுளமகிழ்ந்து வயித்தியநாத லிங்கத்துள்ளே நின்று நடராச மூர்த்தங்கொண்டு சகலகணங்களுந் தேவர்

களு முனிவரும் தம்மைச் சூழ்ந்துவரத் திருவம்பலத்தைச் சார்ந்து கோடிசூரியப் பிரகாசம்போலே பிரகாசித்து எல்லா அவயவங்களிலும் இரத்னாபரணங்கள் விளங்க முயலகன் முதுகிலே வலப்பக்கத்துத் திருவடியை யூன்றிநின்று, உமாதேவியார் முதலியவர் நடனத்துக்கு வேண்டிய தாளமடித்தல் முதலிய பலபணிவிடைகளுஞ் செய்யத் தம்முடைய திருமேனியிலுள்ள எல்லா ஆபரணங்களு மசைந்தாடாநிற்பத் தமது திருக்கரத்திலுள்ள உடுக்கைத்தொனியை முழக்கிக்கொண்டு திருநடனஞ் செய்தருளினர்.

அந்த அற்புதத் திருநடனத்தைத் துருவாசர் முதலிய மூன்று முனிவரும் அரிபிரமேந்திராதிகளும் ஏனையோர்களுந் தரிசித்துப் பேரானந்தப்பெரும் பரவையுள்ளே யமிழ்ந்து எம்பெருமானுடைய புகழைப் பற்பலவாறு புகழ்ந்து அடியேங்களை யிரக்ஷிக்கும்பொருட்டுப் பற்பலகோலமும் வேண்டுங் கிருபைசெய்த உமது பெருங்கருணைப் பிரபாவத்தை யாவரளந்துரைக்க வல்லவர்களென்று பின்னும் வணங்கினார்கள். இங்ஙனம்வணங்கிநின்ற துருவாசர்முதலிய மும்முனிவரையும் நடராசப்பெருமான் பார்த்து "உம்முடைய பூசனையிலே பிரீதிவைத்து, இதுவரை நடனதரிசனந் தராமலே காலந்தாழ்த்துவிட்டோம். இப்போது நடனசேவை நீங்கள் செய்தபடியினாலே யினிமே லுங்களுக்கு யாதொரு துன்பமும் சேரமாட்டாது" என்று திருவருள்சுரந்து தமது கோயிலுட்சென்று வீற்றிருந்தனர்.

பின்னர் பிரமா விஷ்ணுமுதலிய தேவர்களு முனிவர்களுஞ் சில நாளங்கிருந்து வயித்தியநாத லிங்கத்தைச் சைவாகமவிதிப்படி பூசனைசெய்யும் ஆதிசைவப்பிராமணர்களைக் கொணர்ந்து புதுவைத்தலத்திலேவைத்துத் தினந்தோறும் ஆறுகாலப் பூசையும் ஆண்டுதோறு மாதந்தோறுஞ்செய்யு நைமித்திக பூசையுங் காமியபூசையுஞ் செய்துவரும்படி நியமனஞ்செய்வித்து மலரகிதராகிய சிவபிரான் ஆஞ்ஞையாலே வைகாசிமாதத்திலே புனர்பூச நக்ஷத்திரத்திலே துசாரோகணஞ் செய்வித்து உற்சவ சேவைசெய்து சிவபிரானுடைய திருமணக்கோலக்காட்சி தரிசிக்குங் கருத்தினராய்த் திருமணப் பாசுரம் வரைந்து எவ்விடத்துக்கும் விடுத்து முரசறைவித்தனர். அது கேட்டு நகரத்திலுள்ளவர்க ளெல்லாருந் தங்கள்தங்கள் வீடுகளை வாழைதோரணம் புட்பம் சந்தன முதலியவைகளால் அலங்காரஞ் செய்து பாடுவோரும் ஆடுவோரும் இவைகளைக்கண்டு மகிழ்வோருங்

திருக்கலியாணக்காட்சி யென்றுகாண்போமென்று மகிழ்வோரும் இன்னும் பற்பல தொழிலராய் வந்து நெருங்கினார்கள்.

அதன்மேல் நவமணிகளாலும் பொன்னாலுஞ் செய்யப்பட்ட திருக்கலியாண மண்டபத்தைப் பற்பலவிதமாகக் கண்டவர் கண்களைக்கவரும்படி சிவலோகமேயென்ன அலங்காரஞ் செய்வித்து அம்மண்டபத்தினடுவிலே வயிரச்சிங்காதனத்தி னுச்சியிலே பிரமன்முதலியயாவரும் தம்மைச்சூழ்ந்துநின் றேவல்செய்து மகிழ்ந்துநிற்கச் சகலவாத்தியங்களு முழங்க எம்பெருமானை யலங்காரஞ்செய் தெழுந்தருளப் பண்ணுவித்தனர். பின்னர் சிவகாமியம்மையையுஞ் சிவபிரானுள்ள மகிழும்வண்ணம் பற்பல ஆபரண முதலியவற்றாலுஞ் சந்தனம்புட்பங் குங்கும முதலியவற்றாலு மணக்கோலஞ் செய்வித்து ருஷிபத்தினிகளும் இலக்குமி சரசுவதியுங் களிப்பென்னுங் கடலிலாழ்ந்து மங்கலவாத்திய மொலிக்கச் சிவிகையி லெழுந்தருளச்செய்து தேவர்கள் புட்பமாரி பொழியவுந் தேவப்பெண்கள் மங்கலவாழ்த்துக்கூறவு மின்னும் பலவித சிறப்புடனே திருக்கலியாண மண்டபத்தி லெழுந்தருளியிருக்கும் மணமகனாகிய சிவபிரானுடைய வலப்பக்கத்தி லிருக்கும்படி செய்தனர்.

இங்ஙனம் சூரியனும் ஒளியும் கன்னலும் இரசமும் மலரும்வாசமும் ஒன்றைவிட்டொன்று பிரியாம லிருப்பதுபோல இருந்த அவ்விருவரது மணக்கோலச்சிறப்பை யென்னாலே சொல்லமுடியாது. அந்தச்சமயத்திலே பிரமனும் விஷ்ணுவும் சுவர்ணப் பாத்திரத்திலுள்ள பரிசுத்தமாகிய நீரைச் சுவாமி அம்மை பாதங்களிற்சொரிந்து விளக்கி அந்தநீரைப்புறத்தினு மகத்தினுங்கொண்டு பரிசுத்தமடைந்தவராய்ப் பின்னர்ச் சிவகாமியம்மை திருக்கரத்தை வயித்தியநாதேசுரர் திருக்கரத்தி லெடுத்துவைத்து வேதமந்திரங்களாலே கமண்டலத்திலுள்ள சலத்தைவார்த்துத் தத்தஞ்செய்தனர். அப்போது தேவதுந்துபிமுழங்க எனையோர் பல்லாண்டு வாழ்த்துக்கூறக் கலியாணக்கோலந் தரிசித்த யாவரும் ஆனந்த பரவசமடைந்தனர். அதன்பின் பிரமதேவர் அக்கினிகாரியத்தை விதிப்படி முடித்துத் தம்பதி சமேதர்களை அக்கினியை வலம்வந்து அம்மிமிதித்து அருந்ததியைப்பார்க்கும்படி செய்வித்து அதன்மேல் அவ்விருவரையும் யானைமேலும் சிவிகைமேலும் பவனியெழுந்தருளி வரச்செய்தனர். அளவற்ற சிறப்புடனே யெழுந்தருளிவருந் திருவுலாப்பவனியை வீதிதோறும் அடியார்கள் முதலாகிய எல்லாரும் ஒருவரோடொருவர் நெ

ருங்கிவந்து தரிசித்துநிற்கச் சிற்சிலமாதர்கள் சுவாமியினுடைய சுந்தரத் திருமேனியைக்கண்டு மோகித்து வளைகலை சோர்வனவற்றை யறியாது பரவசமாயினர். இங்ஙனம் எல்லாவுயிர்க்கும் அம்மையும் அப்பனுமாகிய வயித்தியநாதேசர் தம்மைத்தரிசிக்கும் அன்பர்கட்கு அவரவர் பத்திக்குத் தக்கவாறு திருவருள் சுரந்துவந்து பிராமணப் பெண்கள் நீராசனங்களேந்த ஆலயத்துள்ளே புகுந்தனர். அதன்மேல் ஒன்பதாவது தினத்திலே சிவகாமியம்மை விநாயகமூர்த்தி முருகக்கடவுள் சண்டேசர் ஆகிய நால்வரும் ரதாரோகணஞ்செய்து தமது பின்னேவரத் தாமும் இரதத்தின்மே லெழுந்தருளித் திருவீதி வலமாகப் பவனிவந்து தரிசனஞ்செய்யும் அடியார்கள்மேலே திருவருட்கண் சாத்தினர். துருவாசமுனிவர் முதலிய மூன்று ருஷிகளும் இந்தத் திருவிழாத்தரிசனந் தினந்தோறு மிடையறாதுசெய்து பேரானந்தமயமாய்ச் சிலநாளங்கிருந்து விடைபெற்றுத் தங்கள் தங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர். அரிபிரமேந்திராதி தேவர்களுந் திருவருள்பெற்று அவரவ ரிருக்கையைநாடிச் சென்றனர். வயித்தியநாதருஞ் சிவகாமியம்மையுடனே யினிமையாக எழுந்தருளி யிருந்தனர்.

ஆறாவது

# பிரமதேவர் பூசித்த அத்தியாயம்.

பூசுர நிகரஞ் சூழும் புதுவையம் பலத்தின் ஞான
பாசுர பரமா னந்த பரனரு ளுருவங் கொண்டு
கேசர ரயன்மான் மற்றோர் கிளர்பெரு முனிவர் காணக்
கோசர நடஞ்செய் மேன்மை கும்பிடல் புரிவா மன்றே. (௧)

வேறு.

அண்ட னுடலைச் சூதனு மறைந்திட வாங்குக்
கண்ட பேரினு மக்கதை கேட்டுளங் களித்து
முண்ட காசனன் பூசனை முயன்றதன் முடிவைத்
தொண்டர் கூறெனச் சூதனு முரைத்திடத் துணிந்தான். (௨)

பதும நாபனும் பங்கயத் தவனுமுற் பகவின்
முதுமை யாவரு தந்தையே யெனுமுறை முடித்துப்
புதுமை யீதெனத் தத்தமிற் றம்மையே புகழ்ந்தே
யதுல மோதினோம் பெரியரென் றிருவரு மறைய. (௩)

வேறு.

அந்தவே லையினு ளெல்லா மறிந்தருள் கடவு ணம்மைச்
சிந்தையு ளுணரா தன்றே யிருவருஞ் செருக்க டைந்தார்
தந்தா மறியுந் தன்மை யுணர்த்துது மென்னத் தானே
யந்தா மின்றி யெங்கு மழலுரு வாய்நி றைந்தான். (ரு)

வேறு.

பொருவரு மனலுருப் பொருப்பை மாலய
னிருவருங் கண்டிட ரெய்தி நீண்முடி
பெருவடி கண்டவர் பெரிய ராமென
வொருவரி லொருவர்முன் றேட வுன்னியே. (சு)

புயவலி யேனமாய்ப் புவியைக் கீண்டுமால்
வியனடி கண்டிலே னென்ன மீண்டன
னயனன மாய்விசும் படையத் தேடியே
பயன்முடி கண்டதாப் பொய்ப கர்ந்தனன். (எ)

பொய்யுரை பங்கயன் புகலக் கேட்டெம
தையனும் வெகுண்டனைக் கருச்ச னுதியும்
வையகக் கோயிலு மாய்க வென்றனன்
செய்யல ரவனடி தொழுது சென்றனன். (அ)

சென்றுதன் னுலகிடைச் சேர்ந்து போதனும்
வென்றிசேர் சிருட்டிகள் விதிக்கச் சிந்தையு
ளொன்றிய போதவை யுதித்த வில்லையாற்
கன்றிய மனத்தொடு கருத்த ழிந்துபின். (கூ)

பொய்யுரை பகர்ந்தவர் புண்ணி யம்புகழ்
மையுமற் றிழிவெலா நணுகு முண்மையே
மெய்யன்முன் பொய்யுரை விளம்பி னேற்கினி
யுய்யுமா றெவ்வண முறுமென் றேங்கியே. (க)

புந்தியி னறிவிலாப் புதல்வர் செய்பிழை
தந்தைதாய் பொறுத்தவர்த் தாங்குந் தன்மைபோ
லந்தமில் பல்லுயி ராற்றுந் தீமைக
ளெந்தையே யன்றிமற் றெவர்பொ றுப்பரே. (க0)

வேறு.

என்ன வம்புயன் முன்னவ னடியிணை நினைந்து
பன்ன ரும்புல னறுவகைப் பகைகளைப் பாற்றி

ந்ன்ன லந்தரு மஞ்செழுத் தன்பொடு நவின்று
மன்னு மானதம் போக்கொடு வரவுகண் மாற்றி. (கக)

துவளு மின்னிடை யசலகு மாரியைச் சுடரும்
பவள மாமலை பழுத்தன மேனியம் பரனை
யவல நீங்கிய வுளத்தமைத் தடிமுடி யளவுந்
திவள நோக்கியே மறைப்பறத் தியானஞ்செய் திருப்ப. (கஉ)

வேறு.

பொருப்பருள் புதல்வி யோடும் புனிதன்வெள் விடைமேற் றோன்றத், திருக்கறு சிந்தை வேதன் சென்னியிற் செங்கை கூப்பிப், பெருக்குமென் பிழைபொ றுத்துப் பிஞ்ஞகா காத்தி யென்றான், சுருக்கமி லன்பி னோடு மிறையவ னருள்சு ரந்து. (கங)

வேறு.

அம்பு யாசன வெம்பெரு மகிமையா மறியோ
நம்பு நம்முடி கண்டதாப் பொய்யுரை நவின்றாய்
வெம்பு சிந்தைசே ரப்பிழை தவிர்ந்திட விண்ணோ
ரிம்பர் போற்றிடுஞ் சமிவனப் புதுவையு ளெய்தி. (கச)

இகப ரந்தரு மத்தலத் திடையெமை வேட்டு
மகம்பு ரிந்துமெய் வழிபடி னப்பிழை மாயுஞ்
செகம்பு கழ்ந்திடுஞ் சிருட்டியு முறுமெனச் செப்பி
நகம்ப யந்தருண் மின்னொடு மறைந்தன னுதன். (கரு)

வேறு.

இறையவன் றிருவுள மிரங்கிக் கூறிய
மறைகளைக் கேட்டுள மகிழ்ந்து பங்கயன்
முறையறு பிழைக்கடன் மூழ்கி னேனொரு
துறைகரை கண்டனன் சோர்வு நீங்கினேன் (கசா)

வேறு.

அல்லு றுந்திரட் சமிவனப் புதுவையம் பதிக்குச்
செல்லவேண்டுமென் றெழுந்தன னப்புயன் றிசையாள்
வல்ல விந்திர னுதியோ ரெண்மரும் வந்தார்
செல்ல வின்றிய சனகர்க ளுல்வருஞ் சேர்ந்தார். (கஎ)

**வேறு.**

அளவறு பிரம விருடியர் தேவ வருந்தவ விருடிய ரென்று
முளமகி ழரச விருடியர் மற்று முள்ளகன் முனிவரெவரும்
வளமலிபழனப்புதுவையம்பதியின்மலரயனோடும்வந்தடைந்து
களமலிவிடஞ்சேர்வயித்தியநாதக்கடவுளைப்பணிந்துளங்களித்து.

**வேறு.**

சதுர்முகன் முதலி னோர்க டாணுவி னருளைப் பெற்று
விதிவழி யாக மாற்ற வேண்டுபெ வெவையு மீட்டி
மதுமலர் வளங்கண் மேய சிவகங்கை வடபா லாகப்
புதுமைசே ரியாக சாலை புரிவித்தா ருலகம் போற்ற. (கக)

சமிதைகள் வருக்க மியாவுஞ் சயிலங்க ளளவு மல்க
வமுதனை பானெய் மற்று மலைகடல் போலும் பல்கக்
கமையுறு நிதிபொன் பானுங் கற்பக மணியு மானுஞ்
சமைவுற வேட்ட டியச் சார்ந்திரு மருங்கு நிற்ப. (உ0)

காக்கைவெண் குரண்ட நாரை கலித்திடக் கமலத் தாய
சேக்கையை நீங்கா வன்னஞ் செறிசிவ கங்கை மூழ்கி
யாக்கையைப் புனித மாக்கி யம்புயன் வேள்வி யாற்றத்
தீக்கையை வகித்தி ருந்தா னியாகவே திகையைச் சேர்ந்து.()

அண்டத்தி னுயிர்க ளியாவு மழிந்திடா துய்ய வால
முண்டத்தி கிரிமால் போற்ற வுதரத்தவ் விடமே காது
கண்டத்தின் வைத்த கோவைக் கருத்தினு ளிருத்தி யாக
குண்டத்தினருகிருந்துகொழுங்கனல்வினைமேற்கொண்டான்.

மந்திரங் கிரியை யோடு பாவனை வழுவா வாறு
தந்திர முனிவ ரோடு மிருடியர் சாற்றும் வண்ண
மிந்திரன் முதலி னோர்க ளெண்மரும் பானு வோடு
சந்திரன் மற்று ளோரு முவந்திடத் தகைமை யாற்றி. (உஙு)

பழியருள் காமத் தாலே பரந்தெழு கோபம் போலுங்
கழியுமு லோபத் தாலே கதிர்த்தெழு மோகம் போலு
முழுதெழு மதத்தா னீண்டு மூளுமாச் சரியம் போலு
மிழுதுற வாக்குந் தோறு மெழுந்தது யாகச் செந்தீ. (உச)

சலந்தவி ரமரா ரியார்க்குந் தத்தமந் திரங்கள் கூறி
வலஞ்சுழித் தெழுநாத் தம்பால் வழங்கிய வவியூ ணேற்று

நலந்தர வவ்வவர்க்கு நசையுட னூட்டிற் றன்றே
புலன்களைப்பொறிகளேற்றுப்புந்தியுட்பொருத்தல்போலும்.

சுருதிகள் பகர்ந்த வாறு சோர்வறச் சுடரை யோம்பிக்
கருதிய வெவர்க்குஞ் செய்கைக் கடன்முறை கழிய வாற்றிப்
பரியுரை மலரோ னன்பாப் பசுபதி யன்றோ யார்க்குந்
தருபவ னேற்போ னென்னத் தற்பல னவற்கே யீந்து. (உசு)

வேறு.

பின்ன ராற்றுாற் செயல்களி யாவையும் பேணிச்
சொன்ன மாதவ ரிருடிய ரமரர்கள் சூழச்
சென்னி தாழ்வுற முன்னவன் கோயிலுட் சென்று
சந்நி திக்கணே நிலனுறத் தாழ்ந்துதாழ்ந் தெழுந்து. ()

நின்று வேதனு மகமியற் றியவண்ண நிகழ்த்தி
யொன்று சிந்தையி னருச்சனைக் கருளென வுரைக்க
வென்றி சேர்விடை யவனரு டரவயன் மீண்டு
முன்றி லார்தரு முயர்சிவ கங்கையின் மூழ்கி. (உஅ)

வேறு.

தினப்புரி நியம மாற்றித் தேனுவு மணியுந் தாருங்
கனந்தரு நிதியும் பூசைக் கேய்வன கருத்து ணர்ந்து
நினைந்தவா நல்க வேற்று முனிவரர் நேரேநின்று
மனந்திக ழன்பி னேந்த மலரயன் வழிபா டாற்றி. (உக)

பத்தியோ டோங்க னிந்து பரமன தருகி னின்று
தத்திய வபிடே காதி சுவைநிவே தனங்க ணல்கிச்
சித்திசேர் தூப தீபஞ் சோடசஞ் சிறப்பா லாற்றி
நித்தியன் பாதம் போற்றித் தரையின்வீழ்ந் தெழுந்து நிற்ப.

வேறு.

திருமுக மைந்துந் திகழ்விலோ சனமுஞ் செஞ்சடைக் கங்கையு மதியும், பொருவரு வெண்ணீற் றொளியுமுந் நூலும் புலியத ளுடைத்திரு வரையு, நிருமல பதமுந் தோன்றிட வெழுந்தா னேயமோ டம்புயன் கண்டு, தரையின்வீழ்ந் தெழுந்து நின்றனன் போற்றித் தகைமையோ டின்னனசாற்றும்.

வேறு.

ஆரண வுருவே போற்றி யாரணு தீதா போற்றி
நாரண வடிவே போற்றி நாரணற் கரியாய் போற்றி
காரணக் கருவே போற்றி காரணங் கடந்தாய் போற்றி
பூரணு போற்றி போற்றி புதுவைநா யகனே போற்றி.()

வேறு.

நாதா நம்பா நக்கா சரணந் நடனு நமனுர் நாசா சரணம்
வேதாவிமலாவிகிர்தாசரணாவிழியேயொளியேவெளியேசரணந்
நீதா நெறியே நினைவே சரண நிகமா நிமலா நேசா சரணம்
போதாபுகழ்சேர்பூதாசரணம்புதுவைப்பதிவாழ்புனிதாசரணம்.

வேறு.

உறவொடு பகையு மாகி யுண்மையோ டின்மை யாகித்
துறவொடு பந்த மாகிச் சுத்தமோ டசுத்த மாகி
மறமொடு கருணை யாகி யிவையெலாம் வேறாய் மன்னித்
திறமொடு வெளியே நின்று திகழ்சிவக் கொழுந்தே போற்றி.

நின்செய லினது நீயே யாவுமாய் நிகழ்த லுண்மை
யென்செய லெனதி யானென் றெண்ணுதல் புன்மையீதென்
புன்செயன் மறையும் வண்ணம் புனிதமா மெண்ண நல்க
லுன்செயன் மறவா தீதை யுணர்த்திநீ யுய்யக் கொள்வாய்.

கருப்பத்தி லுறையி ளஞ்சேய் காலினு லுதைத்தல் கண்டு
விருப்பற்றுத் தாயர் சேயை வெதுண்டிட லுண்டோ வெய்ய
சருப்பத்துப் பணியா யீன்ற தாயினு மினிய வன்பா
வுருப்பத்தை யுடையோ ளுதி யோர்கணின் னுதாத் துள்ளார்.

ஆதலா லெவ்வாற் றானு மனைத்துநின் செயலே யாகும்
பேதையாருயிர்கள்செய்யும்பிழையெலாம்பொறுத்தல்வேண்டுந்
தீதுள வெனையுங் காவாய் திருவுள மிரங்கி யென்று
ஞுதனுங் கருணை கூர்ந்து நான்முகற் குரைக்க லுற்றான். ()

ஆதரத் தோடு நம்பான் மகம்புரிந் தருச்சித் தேத்திக்
காதலாற் புகழ்ந்த யாவு முண்மையாங் கமலத் தோனே
தீதுறு பிழைபொ றுத்தேஞ் சென்றுநீ சிருட்டி யாற்று
போதென விறைவன் கூறி யிலிங்கத்துட் புகுந்தா னன்றே.

இறையவ னடியிற் றாழ்ந்தே யிருகரஞ் சென்னி கூப்பி
முறையுடன் வலஞ்செய்தேத்திமொழிவழிவிடைகொண்டேகிக்

குறைவிறன் னுலகி லெய்தி யானருள் கருத்துட் கொண்டு
பொறையொடுசிருட்டிசெய்தேயிருந்தனன்கமலப்போதன், ()

## பிரமதேவர் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம், எ௰க.

## ஆறவது பிரமதேவர் பூசித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சிவபிரானுடைய திருநடனத்தைச் சூதமுனிவ ரருளிச்செய்ய அத்திருநடனந் தரிசித்தவர்களைப் பார்க்கினு மகமகிழ்ச்சியுற்றுக்கேட்ட சௌனகாதி முனிவர்கள் பிரமதேவன் வயித்தியநாதரைப் பூசித்த கதையினை யருளிச்செய்ய வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:—பிரமனும் விஷ்ணுவும் முன்னொருதினத்திலே பிதாபுத்திரன் என்னுந் தங்கள் முறையினை மறந்துவிட்டு ஒருவருக்கொருவர் பெரியவரென்று கலகஞ்செய்து கொண்டனர். அப்போது அதுதெரிந்த சிவபிரானிவ்விருவரும் நம்மையுணராமலன்றோ இங்ஙனஞ் செருக்கடைந்தனர். அவருக்கு நாம் உணர்த்தவேண்டுமென்று அவரெதிரே அக்கினிசொரூபராகி நின்றனர். இதையறிந்த பிரமனும் விஷ்ணுவுந் தன்பமுற்று, இவ்வக்கினிசொரூபத்தின் முடியையும் அடியையுங் கண்டவரே பெரியவரென்று சபதங்கூறி விஷ்ணுமூர்த்தி வலிமைதங்கிய பன்றியுருவெடுத்துப் பூமியைக்கிழித்துக் கீழேசென்று திருவடியைத்தேடிக் காணாமல் திரும்பிவந்துவிட்டனர். பிரமதேவன் அன்னப்பக்ஷி ரூபங்கொண்டு மேலேபறந்துசென்று திருமுடியைக்காணாம லிடருற்றுக் கீழேவந்து கண்டதாகப்பொய்சொல்லினான். அதுகேட்ட எம்பிரான் பிரமனைநோக்கி "நீ பொய்வார்த்தை பேசியபடியா லுனக்குப் பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற் போக" வென்று சபித்தனர். அச்சாபமேற்றுத் தன்னுலகத்திற்சென்று பிரமன் சிருட்டித் தொழிலொழிந்து மதிமயங்கி ஈசுரனுக்குமுன்னே பொய்சொன்ன நானினி யுய்வதெவ்வாறென்று பரமேசுரனுடைய திருவடியை நினைந்து பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துச் சதாதியானஞ் செய்திருந்தனன்.

அதுதெரிந்து உமாதேவியாருடன் சிவபிரான் இடபாரூடராயெழுந்தருளி முன்னே நிற்றலும், பிரமன்கண்டு தரிசித்து வணங்கி அடியேனுடைய பெரும்பிழையைப் பொறுத்தருளி யிரக்ஷிக்கவேண்டுமென்று பலமுறை தாழ்ந்து நின்றான். உடனே சிவபிரான் கேட்டுப்

"பிரமனே! நம்முடைய பெருமையை நாமுமறியோம்; அங்ஙனமிருப்பக் கருவங்கொண்டு நம்மைக்கண்டதாகப் பொய்வசனங்கூறினாய்; இந்தக் குற்றம் நீங்குதற்குத் தேவர்முதலிய யாவருந்துதிசெய்யுஞ் சமிவனமாகிய புதுவைத் தலத்திலேபோய் யாகஞ்செய்து நம்மைப் பூசனைசெய்வாயேல் பொய்கூறிய குற்றமாறுதலுடனே முன்போலச் சிருட்டிசெய்யுந்தொழிலையு முணர்வாய்" என்றருளிச்செய்து மறைந்தனர்.

அதுகேட்டு மனமகிழ்ந்து பிரமதேவன் இந்திரன் முதலியதிக்குப்பாலகரெண்மரும் சனகாதியர் நால்வரும் அளவற்ற பிரமருஷிகளுந் தேவருஷிகளும் இராசருஷிகளும் மற்றுள்ளருஷிகளுந் தன்னைச்சூழ்ந்துவரப் புதுவைத் தலத்தைச்சேர்ந்து வயித்தியநாதரது திருவருளைப் பெற்றுச் சிவகங்கைக்கு வடபக்கமாக யாகசாலைசெய்து யாகத்துக்குச் சமித்து முதலிய உபகரணங்கள் பலவற்றையுமீட்டிச் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து யாககுண்டத்தினருகேவந்திருந்து அக்கினி காரியத்தை விதிப்படிசெய்யு முயற்சியிலே மூண்டுமந்திரம் கிரியை பாவனையாகிய மூன்றுந்தவறாதவண்ணம் அக்கினி வலஞ்சுழித்து உயரவளர்வித்து எல்லாத் தேவர்களுக்குஞ் செய்யவேண்டிய கடப்பாட்டின்படி யுபசாரமாக அவிப்பாகங்கொடுத்து யாகத்தைமுடித்து யாகத்தின் பலனைச் சருவேசுரனாகிய சிவபிரானுக்குக்கொடுத்துவிட்டு மேற்கூறிய ருஷிகளுந் தேவர்களுஞ் சூழ்ந்துவரக்கோயிலினுள்ளே சென்று சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துச் "சுவாமீ! உமது திருவருளால் யாகஞ்செய்து முடித்தனன். இனித் திருவருள்புரியும்" என்று பிரார்த்தித்துத் திருவருள்பெற்று மீண்டுவந்து சிவகங்கையிலே மூழ்கிச் சிவலிங்கார்ச்சனைக்குவேண்டிய திருப்பள்ளித்தாம முதலியவற்றைக் காமதேனுவுஞ் சிந்தாமணியும் பக்கத்திலேநின்று கொடுக்கவாங்கிவந்து அபிடேகம் அலங்காராதிதூபதீபங்களாலருச்சனைசெய்து கீழேதாழ்ந்தெழுந்து நிற்றலும், சிவலிங்கப்பெருமான் ஐந்து திருமுகங்களு மவைகளுக்குரிய சின்னங்களுந்தாங்கி யெதிரெழுந்தருளிக் காட்சிதந்தருளினர். அக்காட்சியைப்பிரமதேவன் தரிசித்துத்தோத்திரஞ்செய்து "எல்லாமுமது திருவருட்செயல்; அடியேனுக்கொரு சுதந்திரமுமில்லையென்றுணராது அகங்காரங்கொண்டேன்; இக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து நின்றனன். உடனே பக்தவற்சலராகிய சிவபிரான் திருவருள்சுரந்து அப்படியே யாகுகவென்று

கடைக்கணித்துப் "பிரமனே! உன்னுடைய சத்தியவுலகத்திலே போய் முன்போலச்சிருட்டிசெய்திருக்கக்கடவாய்" என்று கட்டளையிட்டருளி யிலிங்கத்துள்ளே மறைந்தருளினர். பிரமதேவனும் திருவடியிலே தாழ்ந்துவணங்கி வலஞ்செய்து விடைபெற்றுத் தனதிருப்பிடஞ்சென்று சிவபிரான்றிருவருளாலே சிருட்டிசெய்திருந்தனன்.

ஏழாவது

# அக்கினிசன்மன் பூசித்த அத்தியாயம்.

அருவநுண் ணிடைமின் னார்க ளணிதிகழ் புருவ வில்லா
லிருவிழிக் கணைக ளேவி யிளைஞரை வசியஞ் செய்யும்
பொருவறு புதுவை மேய புனிதர்பொற் பாத நீங்காக்
கருவுறு பிறவி மாயக் கருத்தினு ளிருத்தல் செய்வாம். (க)

சங்கவெண் குழைசே ரெந்தை சரணிணை யருச்சித் தேத்திப்
பங்கயன் சிருட்டி பெற்ற பான்மையைப் பகர்ந்தோ மிப்பா
லங்கணன் பாதம் போற்று மக்கினி சன்மன்* மாது
மங்கல மிழந்து பெற்ற காதையை வழுத்தல் செய்வாம். (உ)

ஒருமத நால்வாய் கூவ வோடிமுன் வந்து நின்று
தருமத யாவிற் காத்தோன் றாரணி புரத்தல் போலுங்
கருமத ராத லத்தை யன்னைபோற் காத்துப் பேணு
நருமதை யெனப்பேர் பெற்ற நன்னதித் தீரந் தன்னில். (ங)

நிகளங்க ணேருந் தந்தி மருப்பென நிமிர்ந்த கொங்கை
புகழுங்க மேமங் கூந்தல் புயல்விழி மீனெக் காலு
முகளங்க மலம்போற் சோதி வதனவொண் டொடியார் மேய
வகளங்கத் தன்மை பெற்ற வகளங்க நகர மாமால். (ச)

மனைதொறுஞ் செந்தீ யோம்பு மகிமையு மறைக ளோதிப்
புனைதரு மொலியும் வந்து பொருந்திய வதிதி யோர்க

* மாது-புத்திரி.

ணிணைதரு வண்ண மீகை நேசமு மீசன் பாதம்
வனைதரு சிந்தை யுள்ளோ ரந்தகர் மறைவல் லாளர். (ரு)

வேறு.

அந்தக ருறைதரு மந்த ணாளர்கள்
பன்னரு மறைப்பொருள் பார்த்துத் தேர்ந்துயர்
நன்னலந் தருமுமை நாத னேயெனத்
துன்னிய வருச்சனைத் தொழில்கள் பூண்டுளோர். (சு)

முக்கிய மறையவர் முதுகு லத்திலிற்
சக்கிய முதவுநல் லறத்தைச் சார்ந்துளோன்
விக்கின மின்றிநல் வினைக ளாற்றிய
வக்கினி சன்மனென் றநக வந்தணன். (எ)

திரிவித கரணமு மீசன் சேவடிப்
பரிவொடு செலுத்திய பண்பு ளோனுயிர்க்
குரிமையு நேசமு முறவு மென்றுநங்
கரியுரி யோனெனக் கருது முண்மையான். (அ)

அத்ததி யிடையுற வாழ்ந்து ளோசுழன்
மத்ததின் வேகமா மறுகு மானதஞ்
சுத்தம தெய்தியச் சுகம்பு சிக்கவே
பத்ததிப் படியருச் சனைசெய் பண்புளான். (கூ)

விழுப்பமு மேன்மையு மிகவு நல்கலா
மொழுக்கமவ் வுயிரினு மோம்பு வண்மையான்
வழுக்கலி லறனடை மனத்த னீசன் மேற்
பழுத்தாம் பைக்கனிப் பான்மைச் சிந்தையான். (க0)

வைத்தவ மறையவன் மனைவி சாலவு
முத்தமி யருந்ததி யுவந்த கற்பினு
ளத்திரு மகளினு மணிகொள் பொற்பினு
டத்தைமென் மொழியள்பேர் தரும மாவதி. (கக)

இருவரு முயிருட லென்னப் பாரமா
ருருளிரண் டெனமனத் துடன்ப டில்லறக்
கருமநன் காற்றிமுக் கண்ணான் சேவடிக்
குரியநற் பணிகள்செய் துளங்க ளித்துளார். (கஉ)

தாரியல் கூந்தலா டலைவ னேவலிற்
சீரிய வில்லறஞ் செலுத்தி வூழநா
ணாரியன் முற்செயு நற்ற வத்தினாற்
காரிகை வயிற்றினிற் கருப்ப முற்றதே. (௧௩)

வேறு.

வள்ளலஞ் செழுத்தை யோதி வழிபடுந் தோறுந் தோறு
முள்ளொளி யுளத்தி னுள்ளே யோங்கியே நிறைதல் போலுந்
தெள்ளிய திங்க டோறுஞ் செய்கடன் முறையி னாற்றக்
கள்ளவிழ் கூந்தன் மின்னாள் பூரண கருப்ப மானாள். (௧௪)

அடைவுறு முளத்திற் றோன்று பருண்முளை யெனவுஞ்
செவ்வான், குடதிசை மாலைத் தோன்றுங் கூன்பிறைக் கொ
ழுந்து போலு, நடைபெறு வறிஞர்க் கீந்த நற்புகழ் போனன்
னாளிற், பெடையன நடையள் வாய்ந்த பெண்மகப் பெற்றா
ளன்றே. (௧௫)

பிறந்திளங் குழவி கண்ணுற் றிருநிதி பெற்றா லென்னச்
சிறந்ததாய் தந்தை மற்றோர் சிந்தையுண் மகிழ்ச்சி யெய்தி
யறந்தரு செய்கை யாற்றித் திங்கடோ றணிகள் செய்து
நிறந்தரு பொன்போற் பேணி வளர்த்தனர் நேய மோங்க. ()

அரிசன நீரி னாட்டி யணிநுதற் றிருநீ றிட்டுப்
பரிசநன் மணிகொள் பிள்ளைப் பணிகள்பற் பலவும் பூட்டி
யுரைசெறி நாமம் வேத வதியென வுவந்து கூவிக்
கரிசன முறவச் சேயைப் போற்றினர் கருத்து வந்து. (௧௭)

தளர்நடை யிடுதல் கண்டுந் தனியமு தனைய திஞ்சொல்
வளர்சுவை மழலை கேட்டும் வரவணைத் துச்சி மோந்துங்
கிளர்துகி ரிதழார் முத்தின் கேழ்நகை முத்த முண்டு
மளவறு களிப்பிற் றூய வைம்புலப் புசிப்பு மார்ந்தார். (௧௮)

ஓராட்டை முதலே ழாண்டின் முறைமையி னுள்ள தாற்றிச்
சீராட்டித் தந்தை தாயர் சிற்றிடைப் பேதை தன்னை
யோராட்டிப் போற்றிப் பேணி யிருவிழி குளிர நோக்கிப்
பாராட்டிப் புரந்தார் பன்னாள் வதுவையின் பருவ மெய்த.

வேறு.

மதுரமென் மொழிகளு மலர்மென் கூந்தலுங்
கதிர்மதி வதனமுங் கயலுண் கண்களு

மதுலமார் செங்கையு மருப்பு கொங்கையுந்
துதிமிகழ் பெண்மையுந் தோகை கிலமும். (உ0)

தந்தையுந் தாயருங் கண்டு தத்தமின்
முந்தநாஞ் செய்தவ முயற்சி சேர்பயன்
வந்தது மகவென மகிழ்ச்சி கூர்ந்தினி
நந்தமா குலத்திலிந் நங்கைக் கேயவன். (உக)

உண்டென விலையென வுணர்ந்து சஞ்சலங்
கொண்டுளம் வருந்துறுங் காலை கொள்கைசேர்
பண்டுள விதியுநேர் படுத்தி விட்டதாற்
றண்டலி லையமார் பிரம சாரியை. (உஉ)

வேறு.

வந்தநற் பிரம சாரி மாடநீண் முன்றி னின்று
முந்துறு மைய மென்று மொழிந்திடும் வார்த்தை கேட்டுச்
சந்தத நியமம் பூண்ட வக்கினி சன்மன் வந்து
சிந்தையுண் மகிழ்ச்சி யெய்த மனையினுட் கொண்டு சென்று.

இருக்கையு நல்கி யுற்ற விளைப்பையு மாற்றிப் போற்றிச்
சுருக்கமி லன்பி னோடு சுருதிகண் மிருதி யங்கம்
பெருக்கநூ லவையு மாய்தல் சோதித்துப் பிரிய மூற்றுக்
கருத்தினு ளுவகை பொங்கக் கன்னியை யளிக்க வெண்ணி.

எந்தவூ ரெவருன் றந்தை யாதுகோத் திரமென் றோதத்
தந்தவூர் தந்தை பேருந் தன்னுமஞ் சாற்றித் தொன்மை
முந்துகோத் திரமுஞ் செப்ப முழுதுளம் வியந்து நேர்ந்து
வந்தவக் கினிசன் மன்றான் மனைவிபால் விளம்ப லுற்றான். ()

தருணகு ரியர்போற் றேசு மிளமையுந் தகைசேர் வேதப்
பொருணயம் பெறவே யோதும் புனிதவிப் பிரகு மாரன்
கருணையுஞ் சாந்த மேய கருத்தின னிவனுக் கன்போ
டருளுத னன்று வேத வதியெனு மமுதை யென்றான். (உரு)

வேறு.

கணவன் கூறிய மொழிகளைக் கருத்தினு ளுவந்து
தணவி லன்புடைத் தருமமா வதியங்குச் சார்ந்து
குணமொ டந்தணன் வடிவுகண் டுளங்களி கூர்ந்து
மணமென் கூந்தலைக் கொடுத்திட விசைந்துசம் மதித்தாள். ()

**வேறு.**

காந்தனுங் காந்தையுங் களித்து விப்பிரா
சாந்தவெங் கன்னியைத் தான மேற்றுநீ
வாய்ந்தநன் மணமுடி யெனவ ழுத்தலும்
பேர்ந்திட றவிர்ந்தநற் பிரம சாரியும். (௨௮)

**வேறு.**

இருவரு மியம்பும் வார்த்தை யிதயத்து ளிருத்தி யாய்ந்து
கருதிய தனைய னின்றேற் கதியிலை கதியை நாடி
யொருமகப் பயத்தல் வேண்டி யுயர்விருந் தோம்பற் காகப்
பொருவரு கன்னி வேட்ட லறமெனப் புகலும் வேதம். (௨௯)

ஆதலான் முயற்சி யானு முயற்சியை யன்றி யேனு
நீதமா வருப்பு சிப்பு நிருமலன் கூட்ட லன்றோ
வேதமி லைய மேற்க வணைதரு மிவ்வி டத்தே [ன்றோ.
பேதையைத் தருவோ மென்னல் பெரும்பிரான் செயலே ய

என்றுளந் தேறி மாதை வேட்டிட விசைந்து கூறி
நன்றிசேர் தந்தை தாயை வரவழைத் தனன யந்து
தன்றனித் துணைவி யோடு மக்கினி சன்மனேச
மொன்றிய கிளைகட் கோத வனைவரு முவந்து வந்தார். (௩௧)

முதியவந் தணர்கள் கூடி முதுமறை மொழிந்த வாற்றாற்
றிதிவார நாளி யோகங் கரணஞ்சேர் சுபதி னத்திற்
றுதிபெறு கோள்கள் பார்வை தோன்றிய சுபங்க ணோக்கி
மதியுளோ ரதிச யிக்க வைத்தனர் முகூர்த்த மாதோ. (௩௨)

மாடமா டரங்கி யாவும் வளம்பெற வலங்க ரித்தார்
நீடிய முன்றில் வீதி நிரல்படு பந்த லிட்டார்
தேடிய கதலி பூகஞ் சேர்த்தனர் தோர ணங்கள்
பீடியன் மணமார் மன்றல் வேதிகை பிறங்கச் செய்தார். ()

அனைவரு நான மாடி யணிகள்பட் டாடை பூண்கள்
புனைநறுஞ் சாந்தந் தொங்கல் பொருந்திட வணிந்து பின்னர்
வனைதரு முந்நூன் மார்ப மணமகன் றனைநீ ராட்டி
நினைவுறச் சந்தியாதி நியமங்க ணெறியி னாற்றி. (௩௪)

கன்னிகை தானஞ் செய்து கன்னிகைப் பிடித்து நல்கு
முன்னர்ச்செய் கிரியை யாவு முறையுடன் முயலு வித்து

மன்னுவே திகையி னூலோன் வாலசூ ரியன்போல் வைக
மின்னிடைப் பேதை வேத வதியெழின் மேவச் செய்தார்.

மறையவர் மடவார் சில்லோர் மஞ்சன மாட்டு வித்துச்
சிறைகொள்பட் டாடை மீது மேகலை சிறப்பச் சேர்த்து
நறியமென் கலவைச் சாந்த மப்பிநன் மாலை சூட்டி
முறைதர விளங்கு பைம்பொன் முழுமணிப் பணிகள் பூட்டி.

அரிவையர் காப்பண் வேத வதியனம் போன டந்து
வருவது புயலிற் றோன்றி வந்தமின் கொடியைப் போலுந்
திரைகட னடுவட் டோன்று மிந்திரா தேவி போலுஞ்
சுரர்களுக் கமுத மூட்டத் தோன்றுமோ கினியைப் போலும்.

கண்கவர் வனப்பு வாய்ந்த கன்னியை மடவார் பேணி
மண்கனிந் தெழில்சி றந்த மன்றல்வே திகையின் மீது
திண்புய நூலோன் பக்க மிருத்தினர் சுருதிச் செம்ம
லண்படு மருங்கு மேய வருங்கலை வாணி போலும். (௬௮)

கன்னியைப் பயந்து ளோர்கண் மருங்கினிற் களித்தி ருப்ப
மன்னிய வரனை யீன்றோர் பக்கத்தின் வந்தி ருப்பத்
துன்னிய சுற்றத் தார்கள் சூழ்ந்தினி திருப்ப வெவ்வே
றின்னிய வொலிக ளோடு மருமறை யொலியி சைப்ப. (௬௯)

மங்கையர் பல்லாண் டோதை யிவைபலே பொலியை மாற்றச்
செங்கன லோம்பி நேயந் தாகுதி செய்கு வோருஞ்
சங்கையின் மனுக்க ளோதிச் சடங்குகண் முடித்து ளோரு
மிங்கிவை புரியா நிற்ப முகூர்த்தம்வந் தெய்திற் றன்றே. (௭௦)

வேறு.

அப்பொழு தவ்விடை யக்கினி சன்ம
னொப்பகல் பாரிதன் னோடு மெழுந்து
கற்பினள் கரமிசை கரகம தேந்தத்
துப்பழல் சான்றாத் தூநீ ரோடும். (௭௧)

தையலை விப்பிரர் தனையற் கெனவே
வையக மறிய வழங்கின னன்போ
டையமி லந்தண ராசிகள் கூறச்
செய்யமி னார்கள்ப லாண்டிசை செப்ப. (௭௨)

ஒண்ணிய மம்பெறு செந்தழ லோம்பித்
திண்ணிய மறைமொழி திரையின் முழங்க
வண்ணமொ டேமணமக னல்வனி தைக்குப்
புண்ணிய மங்கல நாண்புனை வித்தார். (சுங)

அந்தணர் மங்கைய ருருகுற மேவச்
செந்தழல் சூழ்ந்து வலஞ்செய்து பின்னர்ப்
புந்தியு வந்துறை பொற்றொடி யிற்பக்
கந்தனை நேர்பகர் காளையவ் வேளை. (சுச)

வேறு.

நோயிலை நோவு மில்லை நுண்ணிய மயக்க மில்லை
பேயிலை பிதற்ற லில்லை பித்திலை யாதோ பேச
வாயிலைக் கூறு தற்கு மணமகன் வீந்தா னந்தோ
தாயொடு தந்தை யின்னுந் தனிமுதற் செயலி யாதோ. (சுரு)

மெய்விட்ட வுலகி னோரை வெறுத்தரு வருத்து நோக்கிப்
பொய்விட்டவடியார்போற்றும் புனிதனார்விளையாட்டியாதோ
வெய்விட்டவிடையாட்கென்னே போம்போழ்துமின்பமின்றிக்
கைவிட்ட சூத்தி ரம்போல் வீழ்ந்தனன் மணமா காளை. ()

மணமக னிறத்தல் கண்டு மனைவியுஞ் சுற்றத் தாரும், பிணமென வடித்து வீழ்ந்தார் மற்றுளார பிரமைகொண் டோர், குணமெனச் சோர்ந்தார் சில்லோர் கூடவே பின்னர்ச் செல்லுங், கணமென மூர்ச்சித் தார்க ளேனையோர் கருத்த ழிந்தார். (சுஎ)

வேறு.

சொன்ன வாற்றா லெல்லோருந் தமையே யுற்ற துய ரமென, வின்ன லுழந்து மதியுமிழந் தேங்கி யிரங்கி யழுதிரு ப்ப, மின்னை யீன்ற தாய்தந்தை சோகம் விளம்புந் தரத்த தோ, யென்னே யென்னே யெனக்கரத்தால் வயிற்றின் மு கத்தி விடித்தறைந்து. (சுஅ)

வேறு.

மருகனே மருக னேயோ மருகநீ யிறந்த தன்மை
திருகுறு சிந்தை மேய தீமையோஞ் செய்த தீங்கோ
முருகுறு குழலெம் பன்னி முயன்றதீ வினைக ளேயோ
வருகுறு மன்பி லாத வந்தகன் கொடுமை யேயோ. (சுகூ)

மருகவெம் மாது நீயு மாறிருப் போலும் வாழ
விருவிழி குளிரக் காண்பே மெனமகிழ்ந் திருந்து ளோர்க்கே
யருகுநீ பிணமாப் பேதை யமங்கலி யாகக் கண்ட
பெருவிழி பறித்தெ றிந்தாற் பேர்ந்திடுந் துயரு மாதோ. ()

இன்னவா றலறி யேங்கி யிருவரு மிடரு ளாழ்ந்து
பன்னகப் பணிபோன் பாதம் பரையுமை சரண முன்னி
முன்னவா முதல்வா வீசா முக்கணா வறம்வ ளர்த்த
வன்னையே நீவி ரன்றி யார்துணை யபய மென்றார். (ருக)

மங்கல மிழந்த பேதை வண்மைசேர் பெண்மை நீங்கிப்
பொங்கிய துயரின் மூழ்கி நிலத்திடைப் புரண்டு வீழ்ந்தே
யங்கயல் விழிநீ ரோட வழுதய ரணங்கு நெஞ்சு
ளிங்குமங் கலம ளிப்ப வுமையெனத் தோற்ற மெய்த. (ருஉ)

இருவகைத் தந்தை தாய ரிவ்வண மிரங்கி யேங்கப்
பெருகிய சுற்றத் தார்க ளவரினும் பிதற்றி நோவத்
திருவுளச் செயல்போ லாங்கே நாரத முனிவன் சேர்ந்தான்
விரைவுட னெழுந்தெல் லோரும் விரைமல ரடியைப்போற்றி.

அவ்வயி னிகழ்ந்த செய்கை யனைத்தையு மன்னோர் கூறச்
செவ்வைசேர் முனிவன் கேட்டுச் சிந்தையுட் டுயர மெய்திப்
பௌவமார் காள முண்ட பண்ணவன் பாதஞ் சிந்தித்
தெவ்வமி லொருமு கூர்த்தமிருந்திடத் தோன்றிச்சொல்வான்.

முற்பவந் தனிலிப் பேதை முறையுடன் கௌரி நோன்பு
பொற்புறப் புரியா நின்றாள் குறைவறப் புரியு முன்னர்க்
கற்பின டணந்து விட்டாண் முறைபடு கார ணத்தா
லிப்பவங் கைமைத் தன்மை யெய்திய திப்பாற் கேண்மின். ()

இளமையார் பேதை பன்னு ளித்துய ரடைந்தி டைந்தே
யுளமிக நைத லாற்று னுமையவள் பாதம் போற்றிக்
கிளருமவ் விரத மாற்றிற் கேடகல் கருணை யன்னை
தளர்வுறு துயர நீக்கி மங்கலந் தருவ ளென்றான். (ருசு)

ஆதர முனிவன் கூறு மவ்வுரை கேட்ட லோடும்
பேதையுந் தந்தை தாயும் பின்னுள சுற்றத் தாருங்
காதரக் கடலு ளாழ்ந்தோர் தோணியைக் கண்டா ரென்னத்
தீதகன் முனியைத் தாழ்ந்து மீளவுஞ் செப்ப லுற்றார். (ருஎ)

வனத்தினிற் கதிரோ னீங்க மையிருண் மிடைந்து கூடச்
சினத்திடி முழக்கிக் கொண்மூப் பொழிதரத் தேக மெங்கு
நனைத்திட வழிதோன் றாது நைந்திடுங் காலை வெய்யோன்
றனைத்தனிக்கண்டோரென்னத் தந்தையேநின்னைக்கண்டோம்.

மங்கைமங் கலிய மீக லுமையன்று வழுத்தி னீயே
நங்கைமங் கலியம் பெற்றா லன்றியே நாங்க ளுய்யே
மிங்கிது வுண்மை யாகு மெந்தையே யிறைவி நோன்பு
பங்கமின் றூற்று மாறு மிடனுநீ பகர்தி யென்றார். (௫௯)

முனிவனம் மொழிகள் கேட்டு முழுதுள மிரங்கி யன்பாக்
கனிமொழி யுமையாள் பூசைக் கற்பமு வழாது கூறிப்
புனிதமார் தலங்க டம்மின் முனிவரர் போற்றுந் தான
மினியவச் சமிவ னஞ்சூழ் புதுவையாங் கெய்தி நீவிர். (௬௦)

இருண்மிடை களத்த னீத வயித்திய நாத னெந்தை
யருள்சிவ காமி யம்மை யப்புயப் பதங்கள் போற்ற
மருளின்மங் கலம ளிக்கு மணமகன் றன்னை யின்றே
தெருடரு தயிலத் தோணி சேருமின் விரைவிற் சென்மின்.

வேறு.

என்ன நாரத னன்புட னிவைமொழிந் தேக
வன்ன வன்றனைப் பணிந்துயர் விடைகொடக் கணத்தே
சொன்ன வாறுபி ரேதத்தைத் தோணியுட் டோய்வித்
தின்ன லார்தரு மின்னுடன் வழிக்கொள வெழுந்தார். (௬௨)

தந்தை தாயரு முரிமையார் தங்கிளை சிலருங்
கொந்து சேர்குழன் மின்னொடு செல்வழி குறுகி
நந்த வின்றிய நகங்களு நதிகளு நகரும்
பிந்த வங்குள தலங்களைப் பணிந்துளம் பேணி. (௬௩)

பாட வல்லசொற் பாவலன் பின்பரிந் தேகுங்
கூட லம்பிகை சோமசுந் தரனுறை கோயி
லீடு சந்நிதி யன்பொடு நிலனுறப் பணிந்து
கூடு நேயமார் புதுவையைத் தொழவந்தற் கூடி. (௬௪)

சென்று கண்டனர் திருமதில் கோபுர சிகர
நன்று நன்றெனக் காண்டலுந் தாழ்ந்துட னயந்து

வென்றி சேர்பதி யடைந்துயர் மகிமையை விளம்பித்
துன்று நன்மலர்ச் சிவகங்கை வாவியுட் டோய்ந்து. (சுரு)

சந்தி வந்தனை முடித்தபின் சந்நிதி சார்ந்தே
யெந்தை யேயெனத் தரையுறத் தாழ்ந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை யன்புட னுமைசிவ காமியைத் தேசார்
சுந்த ரக்குறி வயித்திய நாதனைத் தொழுது. (சுசு)

வேறு.

பூசனை புரிந்திடு மருத்தி பொங்கவே
நேசனைப் பணிந்தருள் பெற்று நேசமா
மீசனை மஞ்சன மாட்டி யேத்திநல்
வாசனை வேதன வருக்க நல்கியே. (சுஎ)

வேறு.

சொல்லிய தூப தீபஞ் சோர்வற வேந்தி ஞான
வல்லியை யிவ்வா றுய வந்தனை புரிந்து வேதம்
புல்லிய முறையி னும மாயிரம் புகன்று நீங்கா
தெல்லியும் பகலும் போற்றி யிருந்தனர் திருமு னெய்தி. ()

அக்கினி சன்ம னிவ்வா றருச்சனை புரிந்து கூறுந்
தொக்கியல் வாக்குச் சிந்தை தூயனுக் கேயச் செய்து
திக்குவே றில்லை யென்றன் செல்வியைக் காத்தி யென்னச்
சக்கிய மனைகு மாரி கிளையுடன் சார்ந்து போற்ற. (சுகூ)

அந்தரத் தெழுந்த வார்த்தை யமலையை யருச்சி யென்று
சிந்தையு ளுருகக் கேட்டுச் செவியுற வுணர்ந்து தேறி
முந்தநா ரதனூர் கூறு மொழிவழி யந்த ணாளன்
சந்தமா ரிடபத் திங்கட் பூரனை மதிநாட் சார. (எ௦)

அன்புட னுல யத்தோர் மண்டப மலங்க ரித்துப்
பொன்புரை கதலி பூகம் பொருந்தபூம் பந்தர் வேய்ந்து
தென்புரை மலயச் சாந்தச் சேற்றினு மெழுக்க லிட்டுத்
தன்பெரு நியம மோங்கத் தருப்பைதண் டலம்ப ரப்பி. (எக)

பூரணத் தூநீர் பெய்த பொற்குட மிருத்தித் தேசா
ரோரணி கும்ப வாயின் மாங்குழை யிசையப் பேணித்
தாரணிந் தருச்ச னுதி சந்தனக் குழம்பு சாத்தி
யாரண நன்னீ ராட்டிக் கன்னியை யவணி ருத்தி. (எஉ)

குற்றமி லுமையை யேம கும்பத்தி லாவா கித்தே
யுற்றசெம் மலர்சொ ரிந்து கருணையாள் வடிவை யுன்னிக்
கற்றைபங் குழலுந் தோன்றுங் கதிர்மதி முகமுங் கூர்மை
பெற்றவேல் விழியுஞ் சோதிபிறங்குசெம் மணிபொற்றோடும்.

மன்னிய வொளிமுத் தார மங்கல நாண்க ழுத்தும்
பின்னிய சடையு முச்சி பிறங்குசூ ழியமுந் தேம
முன்னிய தனமும் வேயார் தோளுநுண் ணிடையும் பட்டுங்
கன்னிபொற் கருணைத் தாளுந் தோன்றிடத் தோகை கண்டு.

நவையறத் தொழுது போற்றி நவிலிரு நான்கு சாமங்
கவையறு சிந்தை யன்பாக் கௌரியை யருச்சித் தேத்திச்
சிவைதிரு நாமந் தன்னு ளாயிர நாமஞ் செப்பிச்
சுவைபழு தனைய ஞானத் தோகையைப் பூசை செய்து. ()

அந்தணர் பன்னி மார்கள் பதினறு பேரைக் கூவிப்
பந்தமி லீசன் பாகத் துமையவ ளெனப் பாவித்துச்
சந்தவா சனத்தி ருத்திக் தகுதியார் பூசை யாற்றி
முந்துமிப் பூசை யாவும் பேதையாள் முடிக்கப் பின்னர். ()

விப்பிர மாதர் பூசை விபன்பெறப் புரிந்த வர்க்குத்
திப்பிய வுடை பூண்க டேமலர் மாலை சாந்த
மொப்பறு செம்பொ னல்கி யுளங்களி புரிந்து தாழ்ந்து
மெய்ப்பரி வோடு மாது விமலையை மனத்து ளுன்னி. (எஎ)

பாதாதி கேச மட்டு மவயவ மனைத்தும் பார்த்தே
யோதாதி பாதத் தோடு மொவ்வொன்றுந் திகழ நோக்கி
யேதாதி நீங்கி நெஞ்ச மிநவிழி குளிரக் கண்டு
பூதாதி புளக மோங்க விணைவிழி புனல்கள் வார. (எஅ)

அகம்புற மிரண்டு நோக்கு மொருநோக்க மாகக் காண
விகம்பர முதவு மர்மை யெதி முநத் தோன்றி நிற்க
மகம்புரி மறையோன் பேதை மங்கல மருளென் றோதி
யகம்பெறு மடியிற் றாழ வுமைதிரு வுளமு வந்து. (எகூ)

அண்ணலார் பாதம் போற்றிச் சிவகாமி யம்மை கூறும்
பெண்ணணி யின்னஞ் சின்னப் பேதைமங் கலமி ழந்தா
ளுண்ணெகி ழன்பி னோடு மெனைபூசைக் குறைமு டித்தா
டிண்ணமங் கலநா னைப்பதத் திருவுளம் புரிதி யென்றாள். (அ0)

### வேறு.

அம்பிகை மொழிகளுக் ககம கிழ்ந்துட
னம்பனு முமையொடு விடையி னண்ணினுன்
றம்பெருங் கிளையொடுந் தந்தை தாயொடுங்
கொம்பனை யாளடி குறுகித் தாழ்ந்தனர். (அக)

சதுமறை யக்கினி சன்ம னுந்தொழு
திதயமா ரன்புட னேத்த லுற்றனன்
பதுமனு முகுந்தனும் பரிந்து தேடிய
வதுலநின் பொன்னடிக் 'கபய மென்றுபின். (அஉ)

### வேறு.

அப்பு ரந்தா னமரர்க ளபயமென் றடைய
முப்பு ரங்களைப் பொடிபட வெரித்தருண் முதல்வா
செப்பு மார்க்கண்டன் சிரம்பெற வரந்தரு டேவா
தப்பி லாதவென் பேதையுந் தளர்ந்திட றகுமோ. (அங)

### வேறு.

அருவரை யெடுத்தமை யரக்கன் றீமையைத்
திருவுளம் பொறுத்தருள் செய்த தேவனே
பொருவரு நின்னடி புகழ்ந்து போற்றவென்
மருமலி குழலிவண் மயங்கி வாடுமோ. (அச)

இந்தணி வானுதற் பரவை யில்லிடைச்
சுந்தரன் மொழிவழி தூது சென்றவா
சந்தத முனைத்தொழுந் தைய லாதலா
லெந்தையே யிவண்மெலி வெய்த லேயுமோ. (அரு)

தனையர்சொற் றுயர் கேட்டுத் தாமுள மகிழ்தல் போலும்
புனையுமந் நூலோன் சொல்லைப் புனிதனு முவக்குன் பூசை
யனையினும் வியந்தா டேவி யந்தணு வுன்றன் செல்வி
வனையுமங் கலநா ணீங்கோ மருகனு முய்யு மென்முன். (அசு)

இம்மையி னீங்காத் தன்மைப்பெரும்போகமெவையுந்துய்த்தே
யமமையி னெமது பாத மனைவரு மடைதி ரென்று
செம்மைசேர் திருவெண் ணீறுந் தாமமு மருளிச் செய்து
நம்மையா ளுடையான் கோயி னண்ணின னெவருங் காண.

வேறு.

பண்ணவன் மகிமையைப் பதியு ளோர்களும்
விண்ணவ ரனைவரும் வியந்து போற்றினர்
கண்ணருள் பரைசிவ காமி யன்பருக்
கெண்ணரு ளிறைவயித் தீசர் கோயிலில். (அஅ)

தாழ்ந்தெழுக் தக்கினி சன்மன் செல்வியோ
டாழ்ந்தெழுந் துடனா னடியைப் போற்றியே
வாழ்ந்தன மெனவிடை கொண்டு வந்துளோர்
சூழ்ந்துட னேகினன் விரைவு தோன்றவே. (அக)

வேறு.

புதுவையை யகன்று சென்று பொருக்கென நடந்து போந்தே
யிதுபக லிரவென் றுதியாவரும் விரைந்து கூடி
மதுமலர்க் காடுநாடு கோடுகள் வழிந டந்து
நதிவளம் பெருகுந் தம்மூ ரகளங்க நகரைச் சார்ந்தார். (கூo)

சார்தலு மூரி லுள்ள சதுமறை யந்த ணாள
ரோர்பெறு மடவார் பாலர் குழுவிக ளெவருங் கூடி
நார்பெற வெதிரே சென்று முறையுட னயந்து கண்டு
பார்புகழ் புதுவை யீசன் கருணையைப் பரிந்து கேட்டு. (கூக)

சகலருங் களிப்பி னெய்தி யக்கினி சன்ம னில்லிற்
புகவளர் தயிலத் தோணி பொருந்திய மருகன் றன்னை
யகல்வுற வெடுத்துச் சுத்தி யமைந்தமுன் றினிலி ருத்திப்
பகர்சிவ கங்கை நீரான் மஞ்சனம் பரிவி னூட்டி. (கூஉ)

தென்புது வையினு ளீசர் சிவகாமி யம்மை நல்கு
மின்புரு வருள்சேர் தூய திருவெண்ணீ றெடுத்துக் கையா
லன்புள வந்த ணாள ரருமறை யொலிக ளார்ப்ப
மன்பெறச் சாத்த லோடு மணமக னெழுந்தான் மாதோ.(கூங)

இருவிழி துயின்று நீங்கி யெழுந்தவ னென்னத் தூய
பரிதியின் விளங்க வேத வதியெனும் பாவை பெற்ற
மருமலர் மாலை சூடி மகிழ்ந்தனன் மற்று ளோர்கள்
பெருமகிழ் வடைந்து நின்றார் பிஞ்ஞக னருளைப் பேணி. ()

பேதையைப் பயந்த தாயுந் தந்தையும் பெருங்க ளிப்பி
னேதமின் மருகன் றன்னை யிருவிழி குளிரக் கண்டா

ரோதவன் றந்தை தாய ருச்சிமோந் தணைத்தின் புற்று
ராதலா லங்கு ளார்க ளற்புத மளவை யின்றே. (௯௫)

இந்தவா றடைந்து ளோர்க ளேவரும் வந்து சூழ்ந்து
முந்நூல் வதுவை யாற்றுங் குறைகளை முடித்து மற்றோர்
தந்தம தில்லிற் சென்றார் தையலு மருக னுந்தஞ்
சிந்தையுண் மகிழ்ச்சி யெய்தி யிருந்தன ரெழில்சி றந்து. (௯௬)

இத்திற மிருக்கு நாளின் மருகனுந் தன்னூர்க் கெய்தச்
சித்தம துவந்து காதன் மாதுல னுணரச் செப்ப
வுத்தம மறையோன் பின்னுந் தாழ்த்தன னுரிய வன்பா
லத்திறஞ் சின்னாட் செல்ல மருகனக் குறிப்ப றிந்து. (௯௭)

மருகனூர் செலவி டுக்க மாதுல னுளமி சைந்து
பெருகுபூ ணுடை செம்பொ னிரைமேதி பெருக நல்கிப்
பொருவரு திருவெண் ணீறு சிவனடி புகழ்ந்து சாத்தித்
திருவளர் மருக னோடு புதல்வியைச் செலவி டுத்தான். (௯௮)

தந்தைதாய் முன்னர்ச் செல்லத் தையலுந் தானு மன்பாற்
பிந்தவே சென்று தம்மூர் பேணிய மனையின் வைகி
யிந்துசே கரனைப் போற்றி யுமையவ ளிருதா ளேத்தி
நந்தலில் புதல்வர்ப் பெற்று நவையற வாழ்வின் மூழ்கி. (௯௯)

மாதுலன் மாமிக் கேய முறைமைகண் மரபிற் போற்றி
யாதுலர் பூசை யாற்றி யகமகிழ்ந் தன்பின் மீண்டு
நாதனூர் புதுவை யெய்தி நாற்பது நாள்கள் போற்றி
யேதமி றம்மூ ரெய்தி யிருவரு மகிழ்ந்தி ருந்தார். (௧00)

தருமமா தேவி யோடு மக்கினி சன்மன் பன்னா
ளருமறை விதிவ ழாது விமலனை யருச்சித் தேத்தி
வருமறை யதிதி யோரை மகிழ்வுட னூட்டிப் பேணிப்
பருவமார் கெடுநாள் வைகி யண்ணலார் பதம டைந்தான். ()

## அக்கினிசன்மன் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௮௱௪.

# அக்கினிசன்மன் பூசித்த அத்தியாயம்-௧௫

## அக்கினிசன்மன் பூசித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் சவுனகாதி முனிவரைநோக்கிச் சங்கக் குழைதரித்த சிவபிரானைப் பூசித்துப் பிரமதேவன் சிருட்டித்தொழிலைப் பெற்ற கதையைச் சொன்னோம். இனி அக்கினிசன்மன் புத்திரி மங்கலத்தை யிழந்து மீளப்பெற்ற கதையைச் சொல்லுவோம் என்று சொல்லத்தொடங்கினர்.—விஷ்ணுமூர்த்தி யுலகத்தை யிரக்ஷிப்பது போல எல்லாவான்மாக்களையும் நீர்வளத்தாற் காக்கும் தருமதாநதிக் கரையிலிருக்கிற அகளங்க நகரத்திலே அக்கினி காரியஞ்செய்து வேதங்களோதி வேதப்பொருளை யூராய்ந்து சிவபூசைசெய்யும் பிராமணர் குலத்திலுதித்த அக்கினிசன்மன் என்பவன் திரிகரண சுத்தியாகத் தன்னுயிர்க்குரிமையு மன்புஞ் சிவபிரானேயெனத் தெளிந்து பூசிப்பவன். நல்லொழுக்கத்தை யுயிர்போலக் காப்பாற்றுபவன். அவனுடைய மனைவி தருமமாவதியென்பவள். இவ்விருவரும் உடலுமுயிரும்போல இல்லற தருமத்தை வழுவாது நடாத்திவருநாளிலே அவ்விருவர் தவப்பேற்றினாலும் தருமமாவதி யொரு பெண்மகவைப் பெற்றனள். சாதகன்ம முதலிய சடங்குகள்செய்து பருவத்துக்குத் தக்கவாறு சீராட்டி யன்புற்று வளர்த்துத் தாய் தந்தையர் மகிழ்ச்சியுற்றிருக்குங்காலத்திலே புத்திரிக்குக் கலியாணப் பருவம் வந்தது. இப்பெண்ணுக்குப் பொருத்தமான நாயகனெப்போது வருவானென்று பார்த்திருக்கும்போது ஒருதினம் பிக்ஷைக்குவந்த ஒரு பிரமசாரியை நோக்கி யுபசரித்து ஊர், பெயர், குடி, கோத்திரம், சூத்திர முதலியவற்றை வினவித் தன்மனைவியினிடஞ்சொல்லி நமது புத்திரியாகிய வேதவதியை இப்பிரமசாரிக்குக் கொடுத்துவிடலாமென்று ஆலோசித்து வெளியேவந்து அவனிடத்தில் எனது புத்திரியை மணமுடித்துக்கொள்கவென்றுதன்மனைவியுந் தானுஞ்சொல்லுதலும் பிரமசாரி கேட்டு இதுவு மெம்பிரான் செயலென்று மகிழ்ந்து தன்னுடைய தாய் தந்தையை வரவழைத்தனன். அக்கினிசன்மனும் விவாகமுகூர்த்தங் குறித்துச் சுற்றத்தாரையு மேனையோரையும் வரவழைத்து வைத்து முகூர்த்த வோரையில் கன்னிகாதானஞ் செய்யுமுன் செய்யவேண்டிய கிரியைகளெல்லாஞ்செய்வித்துச் சகலவாத்தியமு மங்கலவாழ்த்து மாடல்பாடலு முழங்க, அக்கினிசன்மனு மவன்மனைவியும் தங்கள் புத்திரியைப் பிரமசாரியாகிய மணமகனுக்குத் தாராதத்தஞ்செய்து திருமங்கலதாரணஞ் செய்வித்தனர். உடனே யாதொரு காரணமுமின்றி மணக்கோலமாகிய பிரமசாரி கீழே விழுந்து பிணக்கோலமாக இறந்தனன்.

அது கண்டு அக்கினிசன்மனு மனைவியுஞ் சுற்றத்தாரு மேனையோரு மிகப் பரிதாபமடைந்து மூர்ச்சித்து இதென்ன ஆச்சரியமென்று பெருந்துன்பமுற்றார்கள். மங்கலமிழக்க நின்ற வேதவதியும் விழி நீரோட அழுது கலங்கும்போது அவளுள்ளத்திலே யுமாதேவி மங்கல மிழவாவகை யருள்புரிவளென்பது பூருவ வினைவசத்தாற் றோன்றிற்று. அந்தச்சமயம் நாரதமுனிவரங்கேவந்து நிகழ்ந்த செய்திகளனைத்துங்கேட்டுக் கவலையடைந்து, நீலகண்டராகிய பரமேசுரனைத் தியானித்து "முற்சனனத்திலே யிந்தப்பெண் கௌரிவிரதத்தை யநுட்டித்து அது முடித்தற்குமுன் றீவினைவசத்தாலிறந்துவிட்டாள். ஆதலாலந்தவிரதத்தை யிப்போது முடித்தாளாயின் உமாதேவியாரருளால் மங்கலம் பெறுவள்" என்று சொல்லினர். அங்குள்ளாரனைவருங்கேட்டுச் சந்தோஷித்து அவ்விரத முடிக்குமுறையு மிடமுஞ் சொல்லுமென்று வேண்டினர். நாரதமுனிவர் சமீவனமாகிய புதுவைத்தலத்திலே சென்று சிவகாமியம்மையைப் பூசித்து விதிப்படி கௌரிவிரதத்தை முடியுங்கள். பிரேதத்தை அதுவரை எண்ணெய்ப் பாத்திரத்திலேபோட்டு வைத்திருக்கவேண்டுமென்று கூறினர். சுற்றத்தாரும் தாய் தந்தையரும் அவ்வாறுசெய்து நாரதரிடம் விடைபெற்று வேதவதியுடன் புதுவையிற் வந்துசேர்ந்தனர். அக்கினிசன்மன் எல்லாருடனுஞ் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து வயித்தியநாதரைச் சோடசோபசாரத்துடன் பூசித்துச் சிவகாமியம்மையையும் வணங்கி யென்புத்திரியின் மங்கலத்தைக் காத்தருளுகவென்று பிரார்த்தித்தனன். அப்போது கௌரிநோன்பு செய்கவென்று அசரீரிவாக்கு ஒன்றெழுந்தது. அதுகேட்டு நாரதமுனிவர் கூறியபடி வைகாசிமாதம் பௌர்ணமியிலே ஆலயத்திலே மண்டப மலங்காரஞ்செய்து பூரணகும்பம் வைத்துக் கௌரியை யாவாகனஞ்செய்து நான்கு சாமமும் சகஸ்திரநாமஞ் சொல்லிப் பூசித்து அதன்மேல் பதினாறு பிராமணப்பெண்களை வரவழைத்து வஸ்திராபரணம், மாலை, சந்தனங், குங்குமம், திரவியங்கொடுத்து வணங்கிப் பின்னர்ச் சிவகாமியம்மையை யுள்ளத்திலே தியானித்திருக்கும்போது வேதவதிக்கெதிரே சிவகாமியம்மை யெழுந்தருளி நின்றனள்.

உடனே பரவசமாகி வேதவதியுந் தரிசித்துத் "தாயே நீ எனக்கு மங்கலியத்தந்து இரக்ஷிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனள். அம்மை திருவுளமகிழ்ந்து சிவபிரானைச் சிந்தித்தலும், அவர் அவ்வுமாதே

வியுடனே இடபாரூடராயெழுந்தருளி எதிரே தோன்றினர். அது கண்டு அக்கினிசன்மன் முதலிய வெல்லாருடனும் வேதவதி வணங்கி நின்றனன். அக்கினிசன்மன் பணிந்து தன்குறையை நீக்கியருளுக வென்று விண்ணப்பஞ்செய்தனன். அதுகேட்டுச் சிவபிரான், "இம்மையிலே பெரும்போகமெல்லாம் அநுபவித்து மறுமையிலே நீங்களெல்லாரு மெமது பாதத்தை யடையுங்கள்" என்று அருளிச்செய்து மகதைசுவரியமாகிய விபூதியையளித்துத் தமதாலயத்துட்புகுந்தனர்.

அந்தக்ஷணமே யக்கினிசன்மன் சுற்றத்தாருடனே வயித்திய நாதப்பெருமானையுஞ் சிவகாமியம்மையாரையும் பணிந்து விடைபெற்றுக்கொண்டுவந்து புறப்பட்டுத் தனது அகளங்க நகரைச்சார்ந்து தயிலத்தோணியிலே கிடந்த தனது மருமகனையெடுத்துச் சிவகங்கை நீராலே ஸ்நானஞ்செய்வித்துச் சிவபிரானருளிய விபூதியை யெல்லாருங்கண்டு களிகூர அவனெற்றியிலே தரித்தலும், அவன் நித்திரைவிட்டெழுந்தவனைப்போல உயிர்பெற்றெழுந்து நின்றான். அதுகண்டு வேதவல்லி தன்கையிலிருக்கிற பூமாலையை நாயகனுக்குச் சூட்டி மகிழ்ச்சியடைந்தனள். அங்குள்ளாரனைவருமிந்த அற்புதத்தைக்கேட்டும் பார்த்துங் களிகூர்ந்தனர். அதன்பின் விவாகக்கிரியை யெஞ்சிநின்றவை யனைத்து முடித்து நாயகனும் நாயகியுங் கலந்து வாழ்ந்தனராய்ச்சின்னாட்சென்று மணமகன் மாதுலனிடத்தில் விடைபெற்றுத் தன்னுடைய நகரத்துக்குப்போய்ச் சிவசிந்தனை மறவாது உமாதேவியாரை வணங்கிப் புத்திரர்களைப்பெற்றுச் சிறிதுகாலஞ்சென்றபின் புதுவைக்குச்சென்று நாற்பதுநாளிருந்து பூசித்து வணங்கி மீண்டு தன்னூர்வந்து மகிழ்ந்திருந்தனன். அகளங்கநகரத்தில் அக்கினிசன்மன் றன்மனைவியுட னில்லறம் வழுவாது நடாத்தி யிறுதியிலே சிவசாயுச்சியத்தை யடைந்தனன்.

எட்டாவது

# பாசதரன் முத்திபெற்ற அத்தியாயம்.

நேசனை யுள்ள நீங்கா நிருமல னிருவி காரத்
தேசனைச் சகங்க ளீன்ற திகழ்சிவ காமி யம்மை

பூசனை புரிந்து போற்றும் புதுவையம் பதியுண் மேய
வீசனைப் பாச நீங்க விடையறு திறைஞ்சல் செய்வாம். (க)

மறைமுறை யொழுகும் வண்மை யக்கினி சன்மன் மாது
குறைவற வுமையை யேத்த மங்கலங் கொடுத்த காதை
யறைதர மகிழ்ந்தீர் பாச தரனெனு மந்த ணாள
னிறைபதி வாசஞ் செய்தே யெய்திய பேறுஞ் சொல்வாம். ()

காவரி கனிகள் ஈர நாசியாற் கடிந்த தும்பாற்
றாவரிக் காக நீரிற் சொரிதரப் பரந்த சாறும்
பூவரி நறவும் பொங்கிப் புரண்டுடன் பெருகி நீள்கோ
தாவரி தீரந் தன்னில் வடகரைத் தரும சாலை. (ங)

அப்பதி யுறைந்து ளோர்க ளனுதின மறங்க ளோம்பி
யொப்பக றனதன் போலு முயர்நிதி பெற்று வாழ்வார்
செப்பரு மந்த ணாளர் திருவளர் மகங்க ளாற்றி
யெய்ப்பருள் கலியை நீக்கி யின்பமார் செல்வந் துய்ப்பார். (ச)

வேறு.

சொல்லிய மறையவர் குலத்திற் றோன்றினோன்
வல்லபேர் கன்மடன் மறையு ணர்ந்துளா
னில்லறந் துறவற மெனுமி ரண்டினு
ளொல்லிய சீலமுற் றுணருந் தன்மையான். (ரு)

பொருணயம் பெறுமறை புகன்ற வாறுள
வருணமாச் சிரமமார் வண்மை யாய்ந்துமுன்
சாதநோர் சீலவொண் பிரம சாரியாம்
விரதமு மாற்றியவ் விரத மூற்றவே. (சா)

அறைந்திடும் விதிவழி யரிவை வேட்டுரை
சிறந்திடுங் கிருகத்த கிலெசி றந்துளான்
மறந்துமக் கிலேச்செயல் வழாத செய்கையாற்
பறைந்தனர் கன்மடப் பதியி னுமமே. (எ)

துதிபெறுங் கன்மடன் சுருதி சொல்வழி
கதிரவ னெழுமுனங் கடிகை பைந்தெனா
விதியொடு சௌசமார் வினைக ளாதியாந்
திதிபெறு மறுவ ர திருந்தச் செய்துளான். (அ)

### வேறு.

உணர்வுடன் மூன்று போது மோமச்செந் தீவ ளர்ப்போன்
கணபதி கதிரோன் கண்ணன் கருணையம் பிகையைப் போற்றி
மணமலி கொன்றை சூடி மலர்ப்பதம் பற்றி யன்பு
தணவுதலின்றிமேன்மையருச்சனைத்தகைமைபூண்டோன். ()

தென்புலத் தவர்க டெய்வம் விருந்தொக்கல் செப்பு நான்கு
மன்புடன் புரக்குந் தன்னோ டைந்தெனு மரபி னோ
மன்பெரும் பரிவி னூற்றிச் சந்தத மகிழுந் தூயோ
னின்புறு விருந்தை யன்றி யருந்துத விலையெக் காலும். (க0)

மூவாத முதல்வன் றன்னை மூவித கரணத் தன்போ
டோவாது பணித லன்றி வீண்பொழு தொன்றும் போக்கான்
பாவார்ந்த சிவபு ராணம் பழிச்சுத லுமஞ் செப்ப
னுவார வழுத்த லன்றி வீணுரை நவிலல் செய்யான். (கக)

இயம்பிய மேன்மை நூலோ னிவன்மனை யாள்சு சீலை
பயன்படு புனிதை நாண மடமச்சம் பயிர்ப்பு நான்கும்
வியன்படும் வளங்க ணீங்கா மேம்படு கற்பின் மிக்கா
ணயம்படு மூலகந் தன்னைப் புகழ்ந்திடு நலத்தி னின்றாள். ()

### வேறு.

இறைப வன்றுயி லெழுமுனவ் விறைதொழு தெழுவா
ணிறைப நீர்குளித் தமலையா யவனெதிர் நிற்பாள்
பொறைகொண் ஞானிகட் கைம்புலன் பணிசெயல் போலு
மறையு மேவல்க ளாற்றுவா ளவன்குறிப் பறிந்து. (கங)

இரவு டன்பக லோர்கண மடிமைக ளின்றிக்
கரவ கன்றவன் மகிழ்வுறப் பணிசெயுங் கருத்தாள்
வரவு போக்குள வதிதியா மற்றவ ரெவர்க்கும்
விரவு மன்புடை யன்னைபோற் புரந்தருள் விமலை. (கசு)

### வேறு.

மணமகன் கோப முற்றான் மறுமொழி யின்றி வெப்பா
ரிணரென வணங்கி வாடி யெதிர்நிலாண் மறைய நின்று
குணமுறு தனது நேசங் குளிர்ந்தெழின் முகம லர்ந்து
தணவலின் வினைக ளாற்றுந் தன்மைசே ரின்ப மார்வாள்.

மூத்தவர் மூதியோர் பெண்ணுண் மூன்னுறக் காணிற்றன்னைக்
காத்தரு டக்தை தாய்போற் கருத்தினிற் பேணல் செய்வாள்
சீர்த்திக ழிளையோர்க் காணிற் றுணையொடுசேயென்றெண்ணி
வார்த்தைகண்முறையாற்பேசுமுன்னுறின்வதனநோக்காள். ()

அப்பன்மனை சாராள் பொய்கை யாடவா லயங்கள் போற்றச்
செயல்வழி கொழுநன் கூறுந் திணைவழி செல்வள் சென்றுற்
கயல்விழி யயலோர் தேகம் பரிசிக்கக் காட்டம் போலு
மயலறத் தோன்றுஞ் சிந்தை மாண்புடை மரபின் மிக்காள்.

வேறு.

காந்த னின்புட னருந்திய குறிப்புகள் கண்டு
சேர்ந்த வன்புட னுதவுவ ளருந்திய சேடம்
வாய்ந்த வின்சுவை யமுதென வுண்பண்மற் றவனும்
போந்து கண்வளர் முன்றுயி லாள்விழி பொருந்தாள். (கஅ)

வேறு.

துணைவரன் வேற்றூர்க் கேகத் தொங்கல்பூண் மிகவும் பூட்டி
யணிசெயா ளில்ல மன்றி யயலிடத் தணுகா ளேரிற்
பணிபுரி கற்பின் மின்னார் புகழ்ந்திடும் பான்மை யெய்தித்
தணிவில்சீர்க் கொழுந னோடு மனையறந் தழுவி வாழ்நாள். (கக)

மங்கையாள் கருப்ப முற்றாள் சூற்குறி வளர்ந்து மன்னக்
கொங்கைகள் கடினத் திண்மை பயப்பயக் குழைதல் கண்டு
பங்கமா ரிடைபூ ரித்து மகிழ்ந்தெனப் பருத்துத் தோன்ற
வங்கது கண்டு கொங்கை யழன்றென முகங்க றுக்க. (உo)

சொல்லிய விளமை வாவி நீர்சில சுவறிக் காணு
வல்லியம் மலரு மீனு மெலிவினு ளயர்தல் போலும்
வல்லிநுண்ணிடையாள்சோதிமலர்முகம்வெண்மைதோன்றி
வில்லிய னுதற்குச் சற்றே விழிகுழி வீழ்ந்த தன்றே. (உக)

தோகையிவ் வாறு தேகந் தளர்வுறச் சுமந்து நோவ
வோரகைசேர் திங்க டோறு முயர்செயன் முயலு வித்துப்
பாகமார் மாதம் பத்துஞ் செலப்பகர் சுபதி னத்தி
னுகிளங் குழவி பெற்று நங்கையு மின்ப முற்றாள். (உஉ)

தந்தையாங் கன்ம டன்றான் றனியுள மகிழ்ந்து வேத
வந்தணர்க் கூவி யன்று செயுமுறை யாற்றிப் பின்னர்

மூர்த்துமா சூச நீக்கி முதுமனை புனிதஞ் செய்து
நத்தலி னுமம் பாச தரனென நவிற்று வித்து. (உக)

விப்பிரர் மகிழத் தானம் விளம்பிய முறையி னல்கி
யொப்பினன் மகவுக் கேய வுயர்மணிப் பணிகள் பூட்டிச்
செப்பிய வாண்டு தோறுஞ் செயும்விதி பண்பிற் செய்து
தப்பிலாண்டைக்கின் மூர்நூல்சாத்தினர்முறையிற்சான்றோர்.

சுருதிக ளுனு மங்க மாறுடன் சொல்பு ராணங்
குருவழி யுணர்ந்து நூலின் பயனவை யுளத்திற் கொண்டு
பரிதிபோற் றேசுந் தூய பான்மையுஞ் சீலப் பண்புங்
கருதிய தந்தை தாயர் கண்டுளங் களித்தி ருந்தார். (உ௫)

தானமுங் காலந் தோறுஞ் சந்திவந் தனையு மென்று
மீனமில் கலைகள் சோதித் தெழுந்தித யத்துண் மன்னு
ஞானமு மொழுக்கா றெய்ந்த நடையுமென் மொழியு நோக்கி
யூனமின் முதியோ ருள்ள முவந்திட மகிமை யுற்றான். (உசா)

இத்திற மெய்துங் காலை வயசுமீ ரெட்டாண் டெய்திப்
புத்திசேர் நியமம் பாச தரனிலை பொருந்தி நிற்பச்
சுத்தவப் பிரம சாரிக் கெவ்வன காலந் தோன்றச்
சித்தச னடுத்துப் பைய மலர்க்கணை தெரிந்து விட்டான். ()

மிருபயோ ததியிற் றோன்றும் விடமென விமல ஞானம்
புகுநிலை கலங்கி னோர்க்கு வாசனை பொருந்தல் போலுந்
தொகுநிசேர் பைங்கூழ் தன்னிற் றுயர்புரி களைகள் போலுந்
தகுபாச தரனு ளத்திற் சார்ந்தது காமச் செந்தீ. (உஅ)

வேறு.

சார்தலுந் தூர்த்தர்க டமையி ணங்கியே
யோர்தரு விலைமினு ரில்லிற் சென்றுசென்
றூர்தரு பாடலு மவர்க யங்களுஞ்
சேர்தரச் சோர்தரச் சிந்தை நைந்தனன். (உகூ)

மடந்தரு கிளிமொழி மாத ராசையைக்
கடந்தவ ரியாவரே கழறிற் குற்றமாந்
திடந்தரு சூழ்வினை சேர்ந்து கூடலா
லடர்ந்தெழு கொங்கைய ரின்பத் தாழ்ந்தனன். (௩௦)

வேறு.

கண்டுகொ ளாது சின்னா ளருத்தினி னாணை மச்சங்
கொண்டுசின் னாள்ச ரித்தா னன்னடை குறைந்து சின்னாட்
பண்டுள தந்தை தாயர் பகர்மொழி யொன்றுங் கேளான்
மிண்டுகள் பேசி யேசி வெளிப்படை யாய்த்தி ரிந்தான். ()

அன்னையொடு தந்தை மற்றோ ரறியொணாக் களவு செய்து
மனையுள பொருளை யெல்லாம் வழங்கினன் வறுமை யெய்த
வினையமா வன்னோர் கண்டு வெகுண்டிட வீடு நீத்தான்
புனையிழைவலைப்பட்டோர்க்கோர்போதமுநெறியுமுண்டோ.

வேறு.

ஆலமும் வாளியும் போலு மங்கனார்
சாலமும் பொய்மையு முளத்திற் சார்தரச்
சீலமு மொழுக்கமுந் திகழு மந்தணக்
கோலமும் நியமமுங் குணமும் விட்டனன். (௬௬)

வேறு.

கயல்விழி விலைமின் னார்கள் கண்வலைப் பட்டு ளத்தின்
மயன்மிக வறுமை யெய்தக் கொடுத்திட வகையு மின்றி
யயன்மனைப் பொருள்க வர்ந்து கொடுத்திட வவர றிந்து
துயருற விழிவு செய்தே யூர்விடத் துரத்தி விட்டார். (௬௪)

பகர்பசி யுற்று ளோர்க்குப் பாகமாஞ் சுவையு மின்றாந்
துகளறு கல்வி வேட்டோர் சுகமொடு துயிலு மின்றா
நிகழ்பொரு ளிச்சை யோர்க்குக் குருவொடு நேச மின்றா
மிகழ்மின்னா ராசை யுற்றோர்க் கிலச்சையும் பயமு மின்றாம்.

ஆதலா னாணை மான மச்சமு மகன்றான் சாதி
நீதமு மிழந்தான் சென்றா னூர்தொறு நெடிது வைகி
யேதமார் களவு செய்தும வழிப்பறி பறித்து மீந்து
மாதரா ரின்பந் துய்த்து வருணமில் லாளை யொத்தான். ()

அஞ்சுபா தகங்க ளஞ்சா தாடல்போ லாற்றுந் தீய
னெஞ்சினு ளீர மின்றி நினைந்தவா முடிக்கு நீசன்
மென்சொலா ரின்பம் வேட்டு நரகிடை வீழ்தற் கேய்ந்த
வெஞ்சவில் கொடுமை யாவு மியற்றின னென்று மின்றி. ()

கதிரினை யரவு தீண்டுங் காலையி னறிஞ ரென்றுந்
துதிகுருக்கேத்திரத்துக்கெண்ணிலார்செலுஞ்சொற்கேட்டுச்

சதுமறை யிழந்த பாச தரனவ ரோடுஞ் சென்று
மதியுளோர் தான மீந்த பொருள்களை வாங்கிப் பேணி. (௩௮)

பொருளுடைச் செல்வ ராங்கே விழிதுயில் புரித னோக்கி
யிருளடை யமையத் தாடை பணிகளைக் கரவி னீட்டி
மருளடை மனத்து நூலோன் வந்துறு விலைமின் னாரிற்
றிரளுடை யேந்து கொங்கை மோகினிப் பேர்சி றந்தாள். ()

அன்னவண் முடித்த கூந்தற் சொருக்குமவ் விதண்மு ருக்கு
வன்னமென் முலைநெ ருக்கும் வசனவிங் கிதப்பெ ருக்கும்
பன்னரு முனிவ ருக்கும் பகர்மன முருக்கும் பான்மை
மின்னெழி னோக்கி யுள்ளம் வேட்டவ ளின்பந் துய்த்தான்.

கையுறு பொருள்கண் மின்னாள் கருத்துவப் படைய நல்கி
மெய்யுறக் கலந்தான் பின்னாள் வெறுங்கர மாகி யன்னோ
ணையுறு சிந்தை கண்டு நீத்தன ளவிய நூலோன்
மையுறு கண்ணி யாரே யேவரும் வறிஞர்க் கின்றால். (௪௧)

பொன்னாசை யுளத்தில் வைத்துக் கற்பினோர் போன்றுபேணு
மின்னாசை யற்று மீள வேகினன் விழியா னோக்காள்
பின்னாசை யற்றுப் பாச தரன்முன்னர்ப் பேணி நோற்ற
மன்னாசைத் தவமுன் னீர்ப்ப மதுரைமா நகர டைந்தான். ()

வரந்தருங் கூட னீங்கி மற்றுள வூரிற் சென்று
நிரந்தரம் பலிக ளேந்திப் பசிப்பிணி நிறுவி நோவா
லுரந்தரு மதியு நீங்கி யுடன்மெலிந் தயர்ந்து பையப்
புரந்தர னமரர் போற்றும் புதுவையம் பதியைச் சார்ந்தான்.

திருமதில் சிகரி கோயின் மண்டபச் சிறப்பு நோக்கி
யருமறை யோது மாற்றா லறுதொழில் புரிவோர் வீதி
தருமநன் னெறிவ ழாத மன்னவர் சாரும் வீதி
பெருமனை வசியர் மேய தெருவெழில் பிறங்க நோக்கி. (௪௪)

ஐவகை விடய நீக்கி யருளினி லுளத்தைச் சேர்த்துத்
தெய்வமுன் னெனவே நம்புஞ் சிந்தனை பெற்று வாழுஞ்
சைவர்வாழ் மடங்கள் கண்டான் சகலரு முய்யப் பொருட்டு
மெய்வகை யுழவி னேய்ந்த வேளாளர் தெருக்க டந்து. (௪௫)

அப்புறஞ் செல்லும் போதி லகத்தடி மைகளில் வாய்ந்த
செப்பரும் விலேயின் ஞர்கள் சேர்திரு வீதி நோக்கி
யொப்பகன் மாட கூட முபரிகை யொழுங்கு முன்றிற்
றுப்பிதழ் மடவார் துன்னிச் சூழவோர் மாதி ருந்தாள். (அசு)

அருணிலே யுணர்ந்து மான்மா வருளினி லுறைத லாய்ந்துந்
தெருணிலே யுள்ள நின்று சிவபோக மெய்த லின்றி
மருளுறு புலனு றேகு மதியிலார் போலாங் கெய்து
மிருளுறு குழலினுர்பா லேகினன் கோயி லெய்தான். (அஎ)

வேறு.

இந்து முகமு மயில்விழியு மிலங்கு நுதலு மிருங்குழலும்
பந்து முலேயு மணிவடமும் பசிய கமுகார் கந்தரமுந்
தந்துவிடையும் பட்டுடையுஞ் சதங்கையொலிசேர னநடையுங்
கந்து கதலி மென்றுடையுங் கமல வடியுங் கண்ணுற்ருன். ()

வேறு.

கண்டவ ளருகிற் பாச தரன்செலக் கடிதெ ழுந்து, தொ
ண்டைவாய் மடந்தை செங்கை தொழுதுநல் லிருக்கை யீந்
து, பண்டைநான் மறையோ யெவ்வூ ரியாவனீ பகர்தி யென்
ன, வண்டையி லிருந்து தன்னூர் நாமமோ டனைத்துங் கூறி.

அந்தணர் குலத்திற் றேன்றி யம்முறை யனைத்து நீத்து
முந்தையூழ் வினையா னெஞ்சுண் மூண்டெழு மாசை யாலே
செந்துவர் வாயா ரின்பந் திளேத்தவர்க் கேவ லாற்றி
யந்தமின் ஞரோ டன்ன மருந்தினன் மனமு வந்து. (ருo)

ஊர்தொறுந் திரிந்திவ் வாறு பொதுமின்ஞர் வலேக்குள் ளாகி
யேர்தரு மரபு நீங்கி யிந்நகர் வந்த டைந்தேன்
கார்தரு கூந்தன் மின்னே திருவென நின்னைக் கண்டேன்
சோர்தரு பசியை மாற்று சொல்லுகேன் வேட்கை பின்னர்.

வேறு.

பாசதான் றுயானைத்தும் பங்கயப்பொன் மாதனையா
ணேசமுடன் கேட்டிடைந்து நெஞ்சுணெடுந் துயரெய்தி
யாசையுட னருச்சனைசெ யன்புடைய ளாதலினு
லீசனருட் செயலாகு மிதுவென்றென் றுளந்தேறி. (ருஉ)

மேலான வருணத்தின் முதல்வருண மேன்மையனீ
காலான வருணத்திற் கடையான நங்கள்குல

ஞாலோனே யரிசிமுத னுணக்களிப்போங் கோடியென
வேலாதென் னாலடுத லின்னேசோ றிடுதியென்றான். (ருக)

வேறு.

கூறிய முறைமைகள் கூறக் கேட்டிலா
னேறிய பசிப்பிணிக் கன்ன மிட்டன
னாறகல் பசிகெட வுவப்பி னுண்டனன்
மாறகன் மகிழ்ச்சியின் மனையில் வைகினான். (ருச)

வேறு.

மற்றைநாண் மனையி னீங்கா திருத்தலு மங்கை கண்டே
யுற்றபே ரன்பி னோடு முரைத்தனண் மறையோய் கேணீ
துற்றிடு முண்டி வேண்டி லங்கிங்குச் சுழல வேண்டா
மற்றமின் மனையி னித்த மருந்திவ ணமர்தி யென்றும். (ருரு)

நாதனை யருச்சித் தேத்து நசையுளே னாத லாலே
யேதமின் மலர்கொ ணர்ந்து நித்தலு மெனக்கு நல்கு
நீதமின் மாத ராசை நெஞ்சனீ யாத லாலே
மாதமோர் தினந்தப் பாது மகிழ்ந்தனைக் கலப்ப லென்றாள்.

அந்தவா றுரைத்த லோடு மறையவ னகம கிழ்ந்து
சிந்தனை தெளிந்து சென்று தினமலர் கொணர்ந்து நல்கி
முந்தலு, மருந்தி யிவ்வா றுண்டுமூன் றிருந்தா னோர்நாட்
சந்தமா ரசலக் கொங்கைச் சௌந்தர வல்லி தன்னை. (ருஎ)

பார்வேந்த னொருவன் கண்டு வரத்தூது பகர்ந்து விட்டான்
றார்வேந்த னாத லாலே தையலுஞ் சம்ம தித்தாள்
சோர்வேய்ந்தமறையோற்கந்நாட்டோயுநாண்முறையாமந்நாட்
போர்வேந்தன் வரவு கூற மறையவன் புழுங்கிச் சென்றான்.

வேறு.

மன்னவன் சௌந்தர வல்லி வீட்டினி
னன்னய முடன்வரு நலங்க ணோக்கினான்
பன்னரு மறையவன் பதைத்துச் சோர்ந்துள
மின்னலி லாழ்ந்துவே றிடத்தி னெய்தினான். (ருகூ)

வேறு.

அவ்விடத் தடைந்து நெஞ்ச மயர்பெரு மூச்செ றிந்து
வெவ்விடந் தொடர்வாற் றுத விண்ணவர் போலுங் காம

வெவ்வழன் மூண்டு தேக மெலிந்திடக் கரிந்து நீந்தே
யுய்வகை யொன்று மின்றி யுளத்தொடு புலம்ப லுற்றான் ()

மறையவ னுய வென்னை மாபாவி யேவல் கொண்டு
முறையுடன் மொழிந்த வுண்மை நீத்தெனை மோசஞ் செய்தா
ணிறையிலார் நேச மில்லார் நெறியிலார் நெஞ்சு ளன்போ
டறிவிலார் விலைமி னாரென் றறைவதற் கைய மின்றே. (சுக)

மண்ணாசை செம்பொ னாசை மற்றுள வாசைக் கெல்லாம்
பெண்ணாசை கொடிது வீடு பெற்றோரும் பிரமை கொள்வார்
விண்ணாசை யோடு மாண்ட விபுதர்கோ னிருடி பன்னி
கண்ணாசை கொண்ட தாலே கண்களா யிரங்கொண் டானே.

ஆய்ந்தவ னாத லாலே யரிவையர் மயக்கத் தாழ்ந்து
வீழ்ந்தவர் பலரென் றெண்ணி வினைவிவெய் துயிர்த்துமின்னு
ளேந்திளங் கொங்கை யோடு முருவெளி யெய்தக் கண்டு
சேர்ந்தன ளென்னப் புல்லிக் கண்டிலன் றிகைக்கும் வேளை.

நடவிய தேர்முன் னெய்தி யரக்கர்க ணவிவு செய்ய
விடாற வருக்கி யங்க ளீயுமந் தணர்கு மாரற்
கடைவுற மொழிந்த வார்த்தை நீத்தன ளவளைக் காணக்
கடவதன் றென்றே செய்ய கதிரவன் கடலு ளாழ்ந்தான். ()

சொல்லுதற் கரிய மேலா மறையவர் குலத்துட் டோன்றி
யல்லியல் குழலார்க் கேவ லாற்றினன் மரப கன்றான்
செல்லுகோ மிவனைக் காண்ட றீமையென் றகறல் போலும்
வில்லுகும் வெய்யோன் மேய குடதிசைக் கடலுள் வீழ்ந்தான்.

இகழ்வுறுங் குணங்கள் சாந்த மீகையார் கருணை சீலந்
துகளில்த் தன்மை யாய விவைகளாற் சோர்வின் றேனு
நிகழ்கவி வலானைப் போற்று னிந்தனை புரிய வன்னோன்
புகழெனமறைந்துவெய்யோன்பொருதிரைக்கடலுளாழ்ந்தான்.

கூறிய வழுக்கா றாசை கோபமோ டின்னாச் சொற்க
ளேறிய வுளத்தோன் பக்க லெய்திய ஞானம் போலு
மூறுடைப் புறங்கள் கூறு மூரியவ னன்மை போலு
மாறடு பாரா வாரத் தாதித்த னாழ்ந்தா னன்றே. (சுஎ)

வென்றிசே ரொருவ னுற்ற வேளையில் வியந்து செய்த
நன்றியை மறந்தோ னெஞ்சை நலிவுசெய் பாவம் போலு
மொன்றிய வொருவ னுற்றுங் குற்றமே யுரைப்போ னுள்ளந்
துன்றிய துயரம் போலும் பேரிருடோன்றிற் றன்றே. (௬௮)

ஓகையர் பொருளி ருந்து முற்றவர்க் கொல்லு மாறு
மீகையி லாதா னெஞ்சு ளிசையுமு லோபம் போலு
மாகையாற் செல்லுஞ் சொல்லை யுதவியா வகையிற் கூறு
மூகைபோலிருந்தோனெஞ்ச மெனவிருண்மொய்த்ததன்றே.

அறத்துறு மார்க்கங் கேட்டு மறத்தையு மியற்றான் செய்யுந்
திறத்தரை யிகழ்வா னெஞ்சிற் றிணிபிரு ணிறைதல் போலு
முறைத்தரு ணிலையை நீங்க வுள்ளொளி பதுங்கி மேலா
மறைத்திடு மலங்கள் போலு மையிருண் மிடைந்த தன்றே.

பொருவரு கருவி தன்னைப் புகலுயிர் தன்னைத் தோற்று
தருகுறப் பொதிந்து தான்மே லாயகே வலமே போலும்
பெருகிய வுலகி லுள்ள பொருளெலாம் பேணித் தானுய்த்
திருகுற மிடைந்து கூடித் திணியிரு ளமர்ந்த தன்றே. (௭௧)

ஏமமா ரறிவி ழந்தோ ரெய்துவா தனையே போலு
நேமமா விரத பங்க மியற்றினோர் நெஞ்சம் போலுங்
காமமார் மாதர் காளை கருத்துறு மோகம் போலுஞ்
சாமமா விருளார்ந் தெல்லாச் செயலையுந் தடுத்த தன்றே. ()

தனையடு பகைஞன் றனே மெலிந்துதண் கடலு ளாழப்
புனையுடற் புளக மோங்கிப் பொடித்தல்போற் புகலு மோக
வனையிருட் படல நாப்பண் மிடைந்தொளி மன்னி நெஞ்சா
னினைதரு தன்மை யின்றி யுடுக்கள்வா னிறைந்த வன்றே. ()

நித்தலும் வேட்டு வந்த விருந்தெதிர் சென்று நேச
மொத்திட வழைத்து வந்தே யூட்டியின் புறுவோர் செய்யில்
வித்தினுட்டிறமாய்த்தோன்றிவிளையும்வெண்முளையேயென்ன
நத்தமார் வான முற்று முளைத்தன நகையு டுக்கள். (௭௪)

கார்க்கடல் வண்ணன் முன்னாட் பாற்கடல் கடைய வந்தப்
பாற்கடற் றிவலை மேனி யெங்கணும் பரத்தல் போலுஞ்
சேர்க்கருங் கங்குல் கூடித் திரண்டடை மிடைவான் முற்று
மீர்க்கிட மின்றி யெங்குந் தாரகை யெய்திற் றன்றே, (௭௫)

ஒள்ளிய விசும்பு முற்று மூறைதரு மிருளின் குப்பை
கள்ளினில் விளங்கித் தோன்று முடுக்கண நவிலும் பொழிற்
றெள்ளிய கிரியா மன்ன னுடலெலா மறைபச் சேர்த்த
வெள்ளிய புள்ளி நீலப் பட்டெனா விளங்கித் தோன்ற. (எசு)

மன்னவன் மனையின் வைகி வெள்ளிடை வரவு தாழ்ப்ப
முன்னடு மூன்றி லெங்கு மொய்த்திடு மாந்தர் போலுந்
துன்னுவெண் கதிர்கள் வீசி யுடுபதி தோன்று முன்னர்ப்
பன்னரு முடுக்க ணங்க ளம்பரம் பரவி மன்ன. (எஎ)

எரிதழல் விரகாற் பாச தரனிவ்வா றிடும்பை யெய்த
வரியளி முரலுங் கூந்தற் சௌந்தர வல்லி யுள்ளம்
பரிவொடு மவனை யெட்டிப் பார்ப்பது போற்கு ணக்கில்
விரிகதிர் நிலவு கால வெண்மதி தோன்றிற் றன்றே. (எஅ)

திரைகடல் கடையத் தோன்றுந் திரணவ நீதம் போலுங்
குரைகட லதனுட் டோன்றுங் குமிழியும் போலு நீங்காத்
திரைகடன் மதிக்கக் கண்ட சுதைத்திர ளனவும் வாளார்
கிரைகதிர் சொரிந்து நீத நிறைமதி தோன்றிற் றன்றே. (எகூ)

நுண்ணிய கலைக ளாய்ந்து நுட்பமார் பொருளைத் தேர்ந்து
திண்ணிய பாச நீங்கிக் குளிர்தரு சிந்தை யுள்ளே
புண்ணிய வறிவு தோன்றிப் பொலிதல்போற் பூரு வத்தி
னண்ணிய விருளை நீக்கி நகைமதி யுதித்த தன்றே. (அ0)

செப்பமா ருலகி லுள்ள வுயிர்களைச் சினந்து தீய
வெப்பமார் செயலோ னீங்க வெறிதிரைப் பரவை வேந்தன்
றட்பமார் செங்கோன் மன்னை முயலெனத் தருதல் போலு
மப்பமர் பாரா வாரத் தம்புலி யுதித்த தன்றே. (அக)

வேறு.

சண்ட பானுவெங் கதிர்களா லுயிர்களைத் தடியக்
கொண்டமூர்ச்சையாய்த் துயிலுறுகொள்கையைக்குறித்தே
யண்ட மன்னவன் வெள்ளியங் கரகத்தி னமுதை
மொண்டு வீசல்போல் வெண்கதிர் பொழிமதி முளைத்த. (அஉ)

வழுக்கி லாகிசி யன்னைதன் மனத்தினு ளன்போ
டிழுக்கில் பல்லுயிர் துயிலுதல் பசிப்பிணி யென்றே

யழுக்கி லாதவெண் சங்கினின் முகந்துகை யார
வொழுக்கு பாலென விலவொழு கிடமதி யுதித்த. (அஉ)

வேறு.

குணதிசை யென்னு மாது குடதிசைக் கன்னி யுண்ண
வுணவென வெள்ளி வள்ளத் தறுசுவை யமுது பெய்து
தணவரு மான மேற்றித் தான்செல விடுத்தல் போலு
மணமலர்ப் பந்து போலும் வான்வழி மதியஞ் சென்ற. (அங)

திடமுற வீசன் சென்னி தேடுவோ மின்னு மென்று
கடறுயில் கண்ண னுந்திக் கமலம தகன்று வேத
னடல்கெழு மெகின மாகி யம்பரஞ் சேறல் போலும்
படுகதிர் மதியந் தோன்றி விண்மிசைப் படர்ந்த தன்றே (அச)

திங்களிவ் வாறு தோன்றித் திசையெலா மொளிப ரப்பத்
தங்குல மீன்ற பாச தரனுளந் தளர்ந்து வெம்பி
யங்கசன் கணைக ளாலு மன்றில்சே ரினைக ளாலுங்
கங்குலின் முழுதுந் தூங்கான் புலம்பினன் கருத்தழிந்தான்.

செம்பவ ளத்து மேனிச் சிவனவ யவத்தை யெண்ணி
நம்பிநெஞ் சகத்துள் வைத்து நசையுறு மன்பு ளார்போற்
கொம்பனுள் வடிவை நெஞ்சுட் கொண்டது குறித்து நோக்கி
வெம்பியுள் ளயர்ந்து மீண்டு நினைந்தவா விளம்புங் காலை. ()

அப்பிர மனைய கூந்த லரிவையைப் பிரிந்த யர்ந்த
விப்பிரன் புலம்பும் வார்த்தை செவியுற வெருண்டு கேட்டுச்
சுப்பிர மதியு நெஞ்சுத் துயருழந் தேகல் போலுந்
திப்பியப் பரவை மூழ்கக் குடதிசை மலையிற் சேர்ந்தான். ()

அந்தணன் வியுங் காலை நமன்றமர் தமைய் கற்றி
நந்தியெம் பெருமா னன்பர் நண்ணல்போ லிருளின் கானம்
வெந்திட விண்ணு மண்ணுந் திசைகளும விளங்க வந்தான்
சந்தமார் தருண பானு வுதயநீள் சயில மீது. (அகூ)

தெரிகுண திசைமா நெற்றிச் சிந்தூர திலகம் போலுந்
தருகுட திசைமா நெற்றிச் சந்தன திலகம் போலு
மிருதிசை மாதர் சந்தித் தெதிரெதிர் நோக்கல் போலும்
பரிதியு மதியு நேர்பட் டிருதிசைப் பாலு மன்ன. (கூ0)

வலியுடை யொருவன் சிறித் தொடர்ந்துபின் வருத னேக்கி
மெலிவுடை யோனவெ ருண்டு கடலினுள் வீழ்தல் போலுங்
கலிகதிர்க் கற்றை வீசிக் கதிரவன் றேன்ற லோடு
மொலிகெழு பரவை யுள்ளே யுவாமதி யுறைந்தான் மன்னே.()

இருளுறு குணத்தி னேய செயல்களி னிடர்கள் யாவுந்
தெருளவர் சார்பா னீங்கித் தெளிவுறு சிந்தை போலு
மருளரு மிருளுங் கோளு நாள்களு மொளிகண் மாய
வெருளறத் தேசு வீசி வெய்யவ னுதித்தா னன்றே. (கூ௨)

மறஞ்செய மிடைந்து கூடும் வல்வினைக் குவைகள் யாவு
மறஞ்செய நீங்கி மேலா மறிவெழுந் தன்மை போலும்
புறஞ்செயு மிருளுந் தன்னுற் பொலியுறு தடையும் போக்கித்
திறஞ்செயுங் கதிர்கள் வீசிச் செங்கதி ரெழுந்த தன்றே.(கூங)

சஞ்சலந் தடைக ணல்கு மறியாமை சகல நீங்க
வஞ்சலென் றகத்தி னுள்ளே யருளொளி யுதிக்கு மாபோல்
வஞ்சக ருள்ள மன்ன மையிருட் பிழம்பு மாய
வெஞ்சலில் கிரணத் தோடுங் கதிரவ னெழுந்தா னன்றே. ()

கங்குலு மிருளு நீங்கக் கதிரவ னுதித்த காலைப்
பொங்கிய காமத் தீயும் புகல்பசித் தீயு மோங்கி
யங்கமுங் கருகி வேவ வாருயிர் சோர்ந்து தீந்து
தங்கிய பொதுவிற் பாச தானுயிர் வீந்தா னன்றே. (கூரு)

இறந்திடுமறையோன்றன்னைக்கொணர்கெனக்கயிலையெம்மான்
பறைந்திட நந்தி தேவன் கணங்களைப் பரிவி னேவ
மறந்தவிர் கணங்க ளோடிப் புதுவையுள் வரலு முன்ன
ரறைந்திடுங் கால தூத ரடுத்துறான் மறையோன் றன்னை. ()

பிடித்தன ருளாந டுங்கப் பேசினர் கைமயிற் றண்டா
லடித்தனர் கதறி வாய்விட் டலறிடக் கயிற்றுற் கட்டி
நடித்தன ருழுவை வாயி னலிவுறு பசுவைப் போலுந்
துடித்தனன் மறையோ னுள்ளந் துணுக்குற நடுங்குங் காலை.

சேயினை யயலார் கூடித் தீமைகள் புரியக் கண்ட
தாயென வோடி வந்து சிவகணத் தவர்கள் சார்ந்தே
யேபகட் டவிழ்த்து நாலோ யினியஞ்ச லஞ்ச லென்று
தூயவர் வெகுண்டு கால தூதரைப் பிடித்துக் கட்டி. (கூஅ)

தண்டத்தைப் பறித்துச் சென்னி தகர்ந்திட வடித்து வாயிற்
றுண்டத்தி லிரத்தஞ் சோரத் துணைவிழி சிதர மீண்டுங்
கண்டத்திற் கயிற்றை யிட்டுச் சுருக்கிடக் கதறித் தூதர்
முண்டத்திற் பாதந் தோய வீழ்ந்திவை மொழிய லுற்றார். ()

நந்தலி லன்பு மேய சிவகண நாதர் கேண்மி
னந்தண னெறிக ணீத்தா னைந்துபா தகமுஞ் செய்தான்
முந்துற நரகில் வீழ்த்தக் கொணர்கென மொழிந்து காலன்
சிந்தையுட் சினந்து கூற மொழிவழி யேவல் செய்தோம்.(௧௦௦)

ஈதலா லிவைகள் யாவு மெஞ்செய லல்ல நீவிர்
மேதியைப் புடைத்தல்போலுந் தடிந்திடன்மேன்மையன்று
நாதனிவ் வுலகுக் கெல்லா நாயக னேவல் செய்வீ
ரோதிய முறைமை செய்வோ முமக்கினி யபய மென்றார். ()

கூற்றுவன் றூத ரஞ்சிக் கூறிய மாற்றங் கேட்டு
நீற்றொளி வழங்கு மேனிச் சிவகண நிகழ்த்த லுற்றார்
போற்றிய மார்க்கண் டற்கா வந்தகன் போந்த முன்னா
ளாற்றலி னுதைத்த சீர்த்தி யுலகெலா மறியு மன்றே. (௧௦௨)

அத்திற முணர்ந்து மீண்டு மரனடி யவரைத் தீண்டி
யித்திற மியற்று நும்மைக் கொன் றிடா திரங்கி விட்டோ
மெய்த்திறமின்னுங்கேண்மின் வியன்புந்வையினைச்சார்ந்தே
யெத்திற விலங்கு புட்கள் வீயினு மவைவீ டெய்தும். ()

அன்னதா லினிமே னீவி ரகத்தினு ளன்பு வைத்துச்
சொன்னவா றிவ்வூர் மேவி யாருயிர் துறந்துளோரை
யின்னல்கள் புரிய வேண்டா மேகுதி ரென்னத் தூதர்
சென்னியிற் கரங்கள் கூப்பிச் சென்றனர் தென்றி சைக்கே.

அந்தகன் றூதர் செல்ல வருங்கண நாதர் நேய
முந்துற வருந்தி நின்ற மறையவன் முகத்தை நோக்கிச்
சிந்தையு ளயர்வு நீங்கச் செவிகுளிர் மொழிகள் கூறிச்
சுந்தர மேனி கையால் வருடிவெந் துயர கற்றி. (௧௦௫)

கருணையங் கடவு ளின்னைக் கயிலையிற் கொணர்தி ரென்றே
யருளினு மணைந்தோ மென்று விமானமீ தடையச் செய்து
வருகெனக் கூவப் பாச தரனுள மகிழ்ந்து சென்று
பொருவறு கயிலை யண்ணல் சந்நிதித் திருமுன் போந்து.(௧௦௬)

நந்தியை முன்னர்ப் போற்றி நாரியை நாரி பாகச்
சந்திர மௌலி யானைத் தாழ்ந்துதாழ்ந் தெழுந்து நின்று
சிந்தையுண் மகிழ்ச்சி பொங்கச் சென்னிமேற் செங்கை கூப்பி
யந்தமி லின்பத் தாழ்ந்து தொழுதுபின் னன்பிற் கூறும். ()

வேறு.

இந்தாருஞ் சடைமுடிமே லிசைவுபெற வரவணிந்த வி
றைவா போற்றி, மந்தார மலருடனே மிகமெருக்க மலரணிந்த
வரதா போற்றி, பிந்தாத மணிகளுட னேனவெயி றணிந்தரு
ளும் பெரியோய் போற்றி, நந்தாத வன்பருட னென்னையு
மாண் டருள்கருணை நம்பா போற்றி. (கoஅ)

மண்ணாசை பொன்னாசை மாதர்மீ தாசையுடன் மற்று
முள்ள, வெண்ணாசை தவிர்ந்தோரை யெடுத்தாளுந் தன்மை
யனீ யெனேநீங் காத, கண்ணுளர் பெருங்காமக் கடலழுந்தி
யாழ்ந்துகரை காணு தேனை, விண்ணுடர்க் கரியனை விழிகு
ளிரக் காணவைத்த மேன்மை யென்னே. (கoகூ)

வேறு.

பேரின்ப முறுமடியார் பெரும்பணியே பேணுதல்போ
லோரின்ப மில்லாத வொண்டொடியார்க் குள்ளாத
லாரின்ப மெனநினைந்து கொலைகளவே யாற்றுமெனக்
கேரின்ப நினைப்பணியும் பேறெவ்வா றெய்தியதே. (ககo)

வேறு.

எவ்வழி யானும் பார்க்கி லெள்ளள வேனு மன்பார்
செவ்வழி யின்றி வன்பா னரகமே சேர்வே னென்று
மைவிழி யார்மீ தன்பாற் றலவாசம் வதியச் செய்தே
யவ்வழி யூடே யெய்தி யாண்டனை யேகொ லெந்தாய். (ககக)

இன்னன பலவுங் கூறி வீழ்ந்துதாழ்ந் தெழுந்து நின்று
சென்னியிற் செங்கை யேறச் சிந்தையா னந்த மூற
முன்னிரு விழிநீர் பாய வுடலெலாம் புளக மொய்ப்ப
நன்னெறி பெற்று நாத னருளுட னலம்பெற் றுய்ந்தான். ()

பாசதான்முத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் ககக.

## பாசதரன் முத்திபெற்ற அத்தியாயச் சுருக்க வசனம்.

நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதி முனிவர்களை நோக்கிச் சூதமுனிவர் சொல்லுவார்:—கோதாவரி நதியின் வடகரையிலுள்ள தருமசாலையென்னு நகரத்திலேயிருக்கும் பிராமணர்கள் குபேரசம்பத்தைப்பெற்று யாகாதி கருமங்கள்செய்து கலிப்பகையை மாற்றி வாழ்கின்றவர். அந்தப் பிராமணகுலத்திலே கன்மடனென்னும் பெயரையுடையவன் இல்லறத் துறவறங்களினியல்பை யாராய்ந்து வருணாச்சிரம தருமமுறை தவறாது பிரமசரியமுற்றிக் கிருகத்த நிலையடைந்து நித்திய கன்மாநுட்டானந் தினந்தோறு முறைப்படிசெய்து திரிகாலமும் அக்கினி காரிய முடித்துக் கொன்றைச்சடையாராகிய சிவபிரானைப் பூசித்துச் சிவனடியார்களுடன் அன்னம் புசித்துச் சிவபுராண பாராயணஞ் செய்யுமன்பிற் சிறந்தவன். அவனுடைய பத்தினி சுசீலையென்பவள் கற்பிலக்கணங்கள் முழுதும் பொருந்தியவள் இவ்விருவருமின்பமுற்றுக் காமத்தை கெகோளனுபவித்துப் பாசதரனென்னு மொரு பிள்ளையைப் பெற்றார்கள். அப்பிள்ளைக்கு ஆண்டுதோறுஞ் செய்யுங் கன்மங்களெல்லாஞ்செய்து ஐந்தாம் வயசிலே உபவீதந்தரிப்பித்து வேதம் வேதாங்கம் புராண முதலிய நூல்களை முறையே கற்பித்து மகிழ்ச்சியுற்றிருந்தனர். பாசதரனுங் குருமுகமாக வெல்லா நூல்களுங்கற்றுச் சூரியனைப்போலப் பிரகாசமுங் குணமும் வாய்ந்து காலந்தோறுங் கற்ற முறைப்படி சந்தியாதிவந்தனைகள் புரியு நியமந் தவறாது நல்லொழுக்கத்திலே நடந்து பதினாறு வயசு பெற்றிருக்குங் காலத்தில் காமாக்கினியானது வந்து தன்னைப் பற்றுதலுந் தூர்த்தர்களோடு கூடி விலைமின்னார் சேரியிலேசென்று பழகி அவரோடனுபவித்துச் சிற்றின்பக்கடலிலே யழுந்தினான்.

இங்ஙனம் இரகசியமாகச் சிலநாள் திரிந்து தாய் தந்தை முதலிய பெரியவர்தடுக்கவுங் கேளாதவனாய் வெளிப்படையாகத் திரிந்து வீட்டிலுள்ள பொருளையெல்லாங் களவுசெய்து வேசையர்களுக்குக் கொடுத்து நல்லொழுக்க நற்செய்கைகளனைத்தையுங் கெடுத்து அயலார் வீட்டுப்பொருளையுந் திருடத்தலைப்பட்டு வருநாளில், ஊரிலுள்ளாரெல்லாருந் தெரிந்து அவனை யூரைவிட்டுப் போம்படி வெளியே துரத்திவிட்டார்கள். அங்ஙனந் துரத்தப்பட்ட பாசதரன் மானமச்சமென்பன சிறிதுமின்றிப் பஞ்சபாதகங்களுஞ் செய்யத்தொடங்கித் திருட்டினாற் கிடைக்கும் பொருளெல்லாம் மோகினியென்னும் வே

சைக்குக்கொடுத்து அவளுடைய காமநலத்தை நுகர்ந்து பின்னர் அவளுக்குக் கொடுப்பதற்குப் பொருளில்லாதகாலத்து அவள் வீட்டு வாயிலில் வரவொட்டாமல் முடுக்கியடித்துத் துரத்திவிடப்பட்டான். பாசதரன் அவளுடைய காம மயக்க மேலிட்டு, அங்கிருக்கச் சகியாமல் யாத்திரைவாசியாய்ப் பலவூர் சேறு மலைந்துவந்து மதுராநகரையடைந்து பிக்ஷையெடுத்துப் புசித்துக்கொண்டு புதுவை நகரத்தைப் போய்ச் சேர்ந்து அங்குள்ள திருமதில் கோபுரங் கோயில் பிராமணர் முதலிய நான்கு வருணத்தார் வீதிகளையெல்லாம் பார்த்துக் கடந்து பரத்தையர் வீதியிற்சென்று அந்தப் பரத்தையரிற் சிறந்த சௌந்தரவல்லி வீட்டுக்குப்போய்ச் சேர்ந்து அவளுடைய ஒவ்வொரு அவயவத்தழகையு நோக்கிக் கண்களிகூர்ந்து அவள் பக்கத்திலேசெல்ல அவள் இவனுக்கு ஒரு இருப்பிடங்கொடுத்து "நீரெந்தவூர் உமதுபெயரென்ன, இங்கேவந்த காரியமென்னை" என்று வினவுதலும், பாசதரன் தன்னுடைய வரலாறு முழுவதும் வரிசைக் கிரமமாகச்சொல்லிப் பசியால் வருந்தினேன் அதுநீங்கும்பொருட்டு அன்னங் கொடுக்கவேண்டுமென்று கேட்டான். அவளதுகேட்டு நீர் பிராமணரன்றோ அரிசி முதலியதருகிறேன். சமையல்செய்து போசனஞ் செய்யுமென்று சொல்லியுங் கேளாமல் அன்னத்தையே வாங்கிப் புசித்துப் பசிதீர்ந்து அற்றைநாளவள் வீட்டிலே தங்கினன். மறுநாட்காலையிலே வேசையானவள் பாசதரனைப்பார்த்துச் சோற்றுக்காகவேறிடம் போய் நீ யலையவேண்டா மென்வீட்டிலே போசனஞ்செய்து தினந்தோறு மென்னுடைய சிவபூசைக்குப் பத்திரபுட்ப மெடுத்துக்கொண்டுவந்து கொடுப்பாயாக நீ காமவேட்கை மிகுதியுடையவனாதலால் மாதமொருமுறை யென்னோடு காம நலத்தை யனுபவிக்கலாமென்றனள். அதுகேட்டு அளவில்லாத சந்தோஷமெய்தி மேற்கூறியபடி மூன்றுவருடஞ் செய்து காலங்கழித்தனன்.

பின்பு ஒரு தினத்திலே அந்த வேசையாகிய சௌந்தரவல்லியை யொரு அரசன் கண்டு இன்றைத்தினமுன் வீட்டுக்கு வருவோமென்று தூதனுப்பினன். அவளுமின்றைக்குப் பாசதரனுடைய முறை நாளென்பது தெரிந்திருந்தும் அரசனை மறுத்துச் சொல்லாது வரவழைத்து அவனுடன் போகந் துய்த்தனள். அது கண்டு பாசதரன் பதைத்துச் சோர்ந்து பெருமூச்செறிந்து பலவாறு புலம்பியிந்தப் பாவி யென்னை யேவல்கொண்டு மோசஞ்செய்து விட்டாளென்று வருந்துகையிலே யவளுடைய உரு வெளித்தோற்றத்தைத

க்கண்டு புணர்ந்து விழித்துத் திகைத்து நிற்கும் வேளையிலே சூரியனு மேற்றிசைக்கடலுளாழ்ந்தனன். உடனே யிருளுஞ் சந்திரனு நக்ஷத்திரங்களுந் தோன்றின. அப்போது பாசதரன் மன்மதன் புட்பபாணங்களினாலும் அன்றிலோசையாலும் இரவு முழுது நித்திரையின்றிக் கருத்தழிந்திருந்து புலம்புகையிலே பசி நோயுங் காமநோயு மிகுந்துச் சரீரங்கருகி வயித்தியநாதர் நடனஞ்செய்யும் அம்பலத்தின் முன்னேபோ யுயிரை விடுத்தனன். மறுநாட்காலை சூரியனுமுதயமானான். அப்போது யமதூதர்கள் வந்து பாசதரனைக் கட்டியடித்துத் துன்பஞ்செய்தனர். அங்ஙனஞ் செய்யும்போது சிவகணங்கள்வந்து அவர்களை விலக்கிக் கட்டி வருத்தப்படுத்தினர். அவ்வருத்தத்தை யமதூதர்கள் சகிக்கமுடியாமல் சிவகணங்களை நோக்கிச் "சுவாமிகளே! இந்தப் பாசதரன் பஞ்சமகாபாதகன் ஆதலினாலிவனை வந்து கட்டிக்கொண்டு போகவந்தோம் இதற்காக நீங்கள் எங்களையிப்படிக் கொடுந்தண்டனைசெய்தாற் பொறுக்கமாட்டோ மினியுத்தரவுப்படி செய்கிறோ முங்களுக் கபயம்" என்றனர். அதுகேட்டுச் சிவகணங்கள் எமதூதரைப்பார்த்து மார்க்கண்டருக்காக நீங்கள் பட்டபாடு மறந்தீர்களோ? இந்தப் புதுவைத்தலத்தைச் சார்ந்து விலங்கு பறவைக ளிறந்தாலு மவைகளெல்லா மோக்ஷமடையும். ஆதலாலிந்தத் தலத்திலிறந்துள்ள யாரிடத்தும் நீங்கள் வரவேண்டாமென்றுத்தரவு செய்தலும், அப்படி யாகுகவென்று விடைபெற்று எமதூதர்கள் தென்றிசைக்குச் சென்றனர். சிவகணங்கள் பாசதரனைநோக்கி யினியவார்த்தைகூறிக் கயிலாசபதியாகிய சிவபிரானுன்னை யழைத்து வரும்படி கட்டளையிட்டன ரென்று விமானத்திலேற்றிக் கயிலாசத்திலே கொண்டுவைத்துவிட்டனர். பாசதரன் விமானம் விட்டிறங்கித் திருநந்திதேவரையு முமாதேவியாரையுங் கும்பிட்டுச் சிவபிரான் முன்பு தாழ்ந்தெழுந்து அன்புமேலிடப் பற்பலவாறு தோத்திரஞ்செய்து திருவருள்பெற்று ஆனந்தக் கண்ணீர்சோரப் பரவசமடைந்து திருக்கயிலாச மலையிலே தங்கியிருந்தனன்.

ஒன்பதாவது

# தேவமித்திரன் வெண்குட்டந்தீர்த்த அத்தியாயம்.

---

சடையிளங் தழைக ளாமங் தாகினித் திவலை தண்பூ
விடையிசை குமுத நண்ப னிருங்கனி யியல்பிற் றுப
படைவிழிப் பசிய பச்சைக் கொடிபடர் தருவைப் பைந்தே
னடைசமி வனத்துட் கண்டு தொழுதடி யகத்துள் வைப்பாம்.

வேறு.

பூவ மித்திரன் போற்றிய புதுவையுள் வதிந்து
பாவ மித்திரன் றீவினைப் பாசத ரன்று
ணுவ மித்திரன் கயிலையை யடைகதை யறைந்தேந்
தேவ மித்திரன் பிணியகற் றியதுரை செய்வாம். (௨)

வேறு.

பொருநையும் வையையும பொருவி லன்னபோ
லிருநிலம புரந்தெழி லெய்தச் செய்யுமா
றிருவளர் தமிழ்மணத் தென்றல் சந்ததம்
வருபொதி யாசல வழுதி நாட்டிடை. (௩)

வேறு.

மறையொலி யன்றி யின்று மந்தணர் மனைக டோறு
முறையுண்மும் முரச மார்க்கு முடிமன்னர் முன்றி றோறுங்
குறைவறு நிதியும வைகும் வசியர்தங் கூட்டந் தோறு
நறைமல ராரா மஞ்சூழ் பாடிவி நகர மாதோ. (௪)

விளம்பிய நகராள் தேவ மித்திர னும வேந்தன்
களங்கமில் கருணை மேய கருத்தின னுருத்தி யோடு
மளந்திடற் கரிய சேனை நால்வகை யனைத்து முள்ளோன்
றுளங்குறு பகைஞர் கூட்டந் துணிபடத் துரக்குஞ் சூரன். ( )

ஈன்றரு ளன்னை போலு மிருநிலத் துயிரை யன்பு
தோன்றிடப் புரக்குந் தூயன் சொற்றவ றுத வாயன்
கான்றசே றென்ன வேற்றோர் காரிகை பொருள்வி ரும்பா
னென்றதன் சரண டைந்தோர்க் காருயி ரளித்துக் காப்போன்.

இந்தவா றிசைந்த வேந்தற் கென்னேயூழ் வினையி னுற்றாற்
சந்தன தருவிற் பாம்புஞ் சந்திர னடுவின் மாசுஞ்
சிந்துவி னிடத்தி னுப்புஞ் சேர்தல்போற் றேக முற்றும்
வெந்துய ருறவ கட்டில் வெண்குட்டந் தோன்றிற் றன்றே. ( )

சித்தமார் களிப்பு மாண்புஞ் சித்தசு வடிவுந் தூய
சுத்தமார் தருணத் தேசுந் துறந்து *துவாத்தோ டந்தா
னுத்தம வேந்தன் றேகத் துற்றிட வூன மெய்தி
நித்தலு நாணத் தோடு நினைவழிந் தயரும் வேலை. (அ)

வேறு.

பாரட்டாங் கத்துடனே பணிந்தானை யருச்சித்தே
யோரெட்டாந் திசையோடு மும்பரிம்ப ருவந்தேத்த
வீரெட்டாண் டெக்காலு மிளமைவய தெய்துமுனி
காரெட்டா வதுவெனுஞ்செங் கைவேந்த னருகணைந்தான். ( )

வேறு.

முன்னைநாட் புரித வத்தா லெய்திய முனியை நோக்கிப்
பொன்னடி தாழ்ந்தெ ழுந்து பூசனை புரிந்து வேந்தன்
பன்னரும் பரிவிற் றூய வருக்கிய பாத்தி யாதி
நன்னயம் புரிந்து நீத முகமனன் கியம்பிப் பின்னும். (௧௦)

முந்தையோர் நியமத் தோடு முன்புரி தவங்க ளாலே
யெந்தைநீ யெய்தப் பெற்றே னெய்தொணா வின்ப முற்றேன்
வந்தநீ வருத லானுஞ் சோபனம் வருத லன்றே
சிந்தையா றேவல் செய்கேன் செப்புநின் வேட்கை யென்ன.

மன்னவன் மொழிந்த மாற்ற மார்க்கண்ட முனியு ணர்ந்தே.
யன்னவ னன்பு நோக்கி யகமகிழ்ந் தியம்பு மிப்பார்
முன்னவ னாணை யானீ முறைவழி செங்கோ லோச்சு
நன்னெறி யதனால் வேறு குறைவிலோ காத வென்றும். (௧௨)

துறவறத் தோர்க்குஞ் சார்பு சொல்லுமில் லறத்தி னோர்க்கு
மிறையவன் றுணையா லன்றோ குறைவற முயற்சி யெய்து
மறவிநின் னின்ப துன்ப மாய்ந்திடி லெமதா மன்றே
முறைநினக் காசி கூற வந்தன னெனமொ ழிந்தான். (௧௩)

---

* துவாத்தோடம் - தாமரைத் தடாகக்கரையில் வஸ்திரந் திருடிய பாவம்.

அரசனம் மொழியைக் கேட்டு முனிவனுக் கறைய லுற்றான்
நிரைசெறி புவியில் யான்செய் தீவினைப் பயனோ வென்னோ
காசரா ணுதி யங்கத் தளர்வுறக் கடிக்க குட்ட
முறைசெயவொண்ணுதென்னையுறுதுயரொழித்தியென்றான்.

தவமுனி வேந்தை நோக்கித் தயாவுட னுய்ந்து கூறு
மவலநீ யடைய வேண்டா மரசநின் னெட்டாஞ் சன்ம
முவமையில் கமல வாவிக் கரையினெண் டுகில்க வர்ந்து
நவமிகு நீரி லிட்ட வினையினை நவிவு செய்து. (க௫)

அகட்டிடை வெண்மை யெய்தி யறைதுவாத்தோடமுற்றாய்
பகட்டிடை வருவோ னெஞ்சம் பதைத்திட வுதைத்த பாதன்
சகட்டிடை யுதைத்தோன் றேழுஞ் சதுமுகன் மேலா மண்ட
முகட்டிடைச் சென்றுங் காணு முதல்வனைப் போற்ற நீங்கும்.

எப்பதி யீசன் றன்னைப் போற்றுத லெனினீ கேண்மோ
வொப்பகல் புதுவை யென்னு முயர்தல மகிமை யெம்மாற்
செப்புதற் கரிதா மாங்கே சென்றடைந் தேவ னேனு
மெய்ப்பரி வின்றி யேனும் போற்றிட வினைக ணீங்கும். (கள)

தலமொடு தீர்த்த மூர்த்தி தருவிசே டங்கள் பெற்ற
நலனடை பதியை நண்ணி வாவியு ளானஞ் செய்து
சிலைநுதல் பங்கன் றேவர் தேவனைத் தொழுது போற்றிக்
கலைபயி லந்தணாளர் பன்னிரு கணக்கி னோரை. (கஅ)

அன்புடன் வரித்துக் கூவி யண்ணலென் றகத்து ளெண்ணி
யின்புற வருச்சித் தேத்த விப்பிணி நீங்கு மென்று
தன்பெருங் கருணை யோடு முனிவரன் சாற்றி யின்னே
தென்புது வைக்கே கென்று செப்பலுந் தேவ நேசன். (க௯)

இருடியைப்பணிந்துதாழ்ந்துவலங்கள்செய்திறைஞ்சியன்பைத்
திருடிய காம நீத்தோ னருந்திடச் செய்து சிந்தை
வருடியூ பத்தி யோடு முன்செல விடுத்து மன்னன்
குருடியன் மலங்க ணீக்கும் புதுவையைக் குறுகச் செல்வான்.

தம்பெருஞ் சேனை சூழத் தருமனை வியர்க ளோடுஞ்
செம்பொனு மணியுந் தூசுஞ் சிலர்சுமந் தருகின் மேவ
விம்பரோ டும்பர் போற்றும் புதுவையு ளெய்தி மன்ன
னம்புவி யுறப்பஞ் சாங்க மட்டாங்க முடன்ப ணிந்து. (உக)

பேசிய *வேம தீர்த்தம் பிரமதீர்த் தத்துண் மூழ்கி
மாசிவ காமித் தாயை வயித்திய நாதன் றன்னை
யீசனே யென்று போற்றி யிருவிழி குளிரநோக்கிப்
பூசனை சோட சத்தாற் புரிவித்துப் போற்ற லுற்றான். (உஉ)

தன்னையொப் புயர்ச்சி யற்ற தற்பரம் பொருளே போற்றி
மின்னையோர் பாகம் வைத்து வியந்தருள் விமலா போற்றி
யென்னையுங் காக்க வுள்ளத் திசைந்தரு ளிறைவா போற்றி
யன்னையி னன்பு மேய வயித்திய வப்பா போற்றி. (உங)

வேறு.

இன்ன வாறுரைத் தன்பொடு மேத்திமுன் னிருடி
சொன்ன வாறுபன் னிருவர்விப் பிராடி தொழுதே
யன்ன மாதர மீதுற வருந்தல்செய் வித்துச்
சொன்ன மாடைக ளாடைகள் பூண்பல சொரிந்து. (உச)

வேறு.

சந்தனந் தாம்பூ லாதி தாமங்கள் பெருக நல்கி
வந்தனை புரிந்து மீண்டு வெண்டுகில் வழங்கிப் போற்றி
முந்தனந் தமக்கு நீவி ரெனமொழி முகமன் கூறி
யந்தண ராசி கைக்கொண் டவர்தமைச் செலவி டுத்து. (உரு)

இறைவயித் தீச நேசன் சந்நிதிக் கெய்த லோடுங்
குறையுறு மகட்டி லார்தன் குட்டநோய் விட்டு நீங்க
நறைமக ழலங்கன் மார்ப னவையகல் கதிரோ னென்ன
முறையுடன் றாழ்ந்தெ ழுந்தே யின்னன மொழிய லுற்றான்.

பாலனை யழுகை யாற்றப் பாற்கட லருள்வாய் போற்றி
காலனைக் கடிந்து சார்மார்க் கண்டனைக் காத்தாய் போற்றி
வேலனை யருளிச் சூரை வேரொடுங் களைந்தாய் போற்றி
சீலமி லெனையு மாண்டு வெண்குட்டந் தீர்த்தாய் போற்றி. ()

இந்தவா றேத்திப் போற்றி யிருவிழி யருவி சோரப்
புந்தியு ளன்பு பொங்க வுடலெலாம் புளக மோங்க
வெந்தையை யுமையா ளோடு மிறைஞ்சியின் னருளு மெய்தி
வந்தபூ ரணைசேர் பூச மகரமாந் திங்க டன்னில். (உஅ)

---

* ஏமதீர்த்தம் - சிவகங்கை.

நேசத்தா லோர்செம் பொற்றேர் நெடுங்கிரி யெனவ மைத்துப்
பாசத்தாற் கொடியு மேற்றித் திருவிழாப் பண்பி னாற்றிப்
பூசத்தாற் றிருத்தே ரீசன் றிருவிழாப் பொலிவு செய்து
தேசத்தார் பூச நாளிற் றீர்த்தமுந் திகழச் செய்து. (உக)

ஆதிரை நாள்க டோறு நடராச னுடும் பான்மை
நீதிசே ரபிடே காதி நிவேதன நெறியிற் செய்து
தீதகல் சிந்தை யோடுந் தெரிசனம் புரிந்து வந்து
மாதொரு பாக நீத வயித்திய நாதர் கோயில். (௩0)

வேறு.

மண்டபம் பற்பல வகையி னாற்செய்து
கொண்டல்கண் டுயின்மதில் கோபு ரங்களு
மண்டரும் வியப்புறும் வண்ண மாற்றியே
தண்டலி லருந்துமுன் சாலை பேணியே. (௩க)

மடங்களு நந்தன வனமுஞ் சாலையுந்
தடங்களும் வாவியுங் கூவ ருழ்விலா
திடங்களி னியற்றியின் பெய்த விம்பரிற்
குடங்கெழு மாளிகைத் தெருவுங் கோலினன். (௩உ)

வேறு.

இறைவர்தென் புதுவை மேல்பாற் கன்னிமூ லேத்தா மெல்லே
யறையொரு காவ தத்தி னப்புற மலர்சே ரோடைத்
துறையள காபு ரிப்பூஞ் சோலையொன் றுளது முன்னர்க்
குறைபடு வளத்த தாகப் பதியுளோர் கூறக் கேட்டு. (௩௩)

சிந்தையு ளன்பு வைத்து வளம்புரி செயலோர்க் கூவி
யந்தமி றருக்க ளோடு நந்தன மாற்று மென்னச்
சந்துமா பனசஞ் சூதந் தகுநாளி கேரம் பூக
நந்தவி னாரந்த மாதி மற்றுள நசையிற் கண்டு. (௩௪)

வேறு.

மல்லிகை முல்லை செருந்தி குருந்தொடு மந்தாரம்
புல்லிய பாதிரி மாதவி தாதகி புகல்வில்லந்
கல்லியல் கோங்கொடு கொன்றை கரந்தைகள் கரவீரம்
பல்லிய னந்தி யிலஞ்சியொ டளிசண் பகமுற்றும். (௩ரு)

### வேறு.

தருவகை கொடிவகை பலவுஞ் சார்தரப்
பொருவறு செழுமைகள் பொருந்தி மல்கவு
மருவுற்ற காண்டவ வனத்துக் கொப்பென
வருவினை யாளர்க ளமைத்துக் கூறினர். (௩௬)

செப்புதல் கேட்டுயர் தேவ மித்திர
னப்பணி சடையவர்க் காடச் சூடவு
மிப்பெரும் பணியெமக் கெய்திற் றென்னவே
மெய்ப்பரி வோடுளம் வியந்தி ருக்குநாள். (௩௭)

### வேறு.

உரைபர சிவத்தி னோடு முயிர்களைக் கூட்டி யின்பந்
தருமரு ளென்ன மைந்தர் மாதரைச் சாரச் செய்து
பிரியமா வின்ப மூட்டு மதனவேள் பெரிய சீர்த்தி
மருவிய விளைய வேனில் வந்தது மதன னோடும். (௩௮)

சிறந்திடும் வசந்த கால மெனவுரை செய்த லன்றி
யறைந்திடு மலையு நீரா வுருக்கிய கோடை யன்றோ
வறந்திடும் பாலை போன்ற மற்றுள நிலங்கள் வெப்பா
லுறைந்திடு முயிர்கள் யாவு மஞ்சுத லுற்ற வன்றே. (௩௯)

கடலினுட் குளித்துத் தோன்றுங் கதிர்மதி தினங்க டோறும்
வடவையு மாலு மானு திருந்தனர் கடலுண் மன்னி
யிடனிது வென்று வேத னிசைந்தனன் மூலரின் மீதே
யடைவிது வெனவி யந்தா ரிருமின்னு ரம்பு யத்தே. (௪0)

இந்திரன் றருவி னீழ லெய்தின னென்னின் மற்றும்
பந்தமா ருயிர்க ளியாவும் படுந்துய ரறையற் பாற்றோ
செந்தழ லன்ன பானுச் செயிர்த்தெறி வெயிலுக் காற்று
தந்தமி னிழலு நீரு மடைந்தவ ணகலா வன்றே. (௪க)

இத்தனி வசந்த கால மெய்திட விதயம் வேட்டு
நித்திய விபவ தேவ மித்திர னகரை நீங்கி
நத்தமென் கூந்தன் மின்னார் கண்பர்க ளருகு சார
வுய்த்தளகா புரிப்பூஞ் சோலையை யுவந்து செல்வான். (௪௨)

கரிபரி மேற்செல் வோருங் கானடை வழிச்செல் வோரும்
பருமணி யழுத்து செம்பொற் சிவிகைகள் பலவு மேறி

யெரிமணிப் பூணூர் மாந்தர் பேதைய ரிவரோ டேகி
விரிமலர் சிதறி வம்மென் றழைக்குமென் பொழிலைச்சார்ந்தார்.

பயில்வுறு சரியை யாதி புரிந்துயர் பரிவு பெற்றோ
ரயலுளெம் புலனுக் கஞ்சி யறிவினுட் சார்தல் போலும்
வெயிலுற வெதுப்பாற் ருது வியன்சோலை மேவி மாந்த
ரியல்பெறு மடவா ரோடு மகங்குளிர்ந் தினிதி ருந்தார். (சச)

உடலுயி ரெனவி சைந்து மாந்தரொண் டொடியார் கூடி
மடலவிழ் கமல வாவிக் கரையிடை மன்னு வாரும்
படர்கொடி மிடைந்த தேமா நிழலிடைப் படுத்து ளோருஞ்
சடுதியி னெய்தித் தாழை நீழலிற் சார்ந்து ளோரும், (சரு)

மாதவிப் பந்தர் சேர்வோர் புன்னையின் வதிவோர் பின்னுங்
கேதகை நிழல்சேர் வோருங் கிளர்செருந் தியிற்சேர் வோரு
மாதவ னொளிபு காதே யடைதரு நீழன் மேய
தாதுறுண் மணங்கள் வேய்ந்த புளினங்கள் சார்ந்து ளோரும்.

மன்றலை மருவிச் சீத வனசமார் வாவி தோய்ந்து
துன்றுபன் மலர்கள் பூத்துச் சொரிந்திடுந் துடவை யெய்தி
நின்றசைந் துலவி மாந்தர் நெடுந்தளர் வகற்றப் பையத்
தென்றல்வந் துலவ வூடே யிசைதேமாங் குயில்கள் கூவ. ()

மருவிய சிகரி யுச்சி வளர்சுனை நிலைறந்தி ழிந்த
வருவிகள் குதிக்குந் தோறு மலையெறி துளிக்கு ழாமுந்
திரையெறி கமல வாவிச் சீகரக் குழுவும் வானோர்
தருமலர் மதுவுந் தேக நனைதரத் தளர்வ கற்ற. (சஅ)

தென்றலி னுனும் வீசுந் திவலைக ளானுங் கேள்வி
வென்றிசேர் பசிய தேமாங் குயிலிசை விளைவி னுனு
மொன்றிய தளர்வு நீங்கி யுளங்களித் துவந்து மாந்தர்
மன்றலங் குழலா ரோடு மலர்கொய்ய மகிழ்ந்தெ ழுந்தார். ()

மலர்தரு முல்லை சாதி மல்லிகை மலரைக் கொய்து
சிலைநுதன் மின்னார்மோந்து செவியிடைச்சேர்ப்பர்சில்லோர்
பலமலர் கொய்து கண்ணி லொற்றுவர் பரிவு கூரக்
குலமலர் கொய்து கூந்தற் சொருக்கிடைக் கூட வைப்பார்.

ஒருவர்முன் னொருவர் கூடி யுயர்சினை மலர்கள் கொய்வார்
கருதுபின் சென்றோர் கூடி யம்மலர் கவர்ந்து கொள்வார்
பொருவறு மலர்கள் கொய்து புனைநறுந் தொடைவ னைந்தே
யருவரை யருவி யென்ன முலையிடை யணிந்து பார்ப்பார்.()

ஆடவர் மலரைக் கொய்தே யரிவையர் கரத்தி னீவார்
பீடுயர் மலரை மின்னா ராடவர் கரத்திற் பெய்வார்
கூடிய விருவர் மாறி யிருகையாற் கொய்த பூவை
நீடிய மார்பு கொங்கை வீசுவர் நேச மோங்க. (ருஉ)

மாரவே ளன்னா னெட்டா மலர்க்கொம்பை வளைத்து நல்க
வாரமென் முலையார் பல்லோ ரணிமலர் விரைவிற் கொய்வார்
சாரமென் முலையா ளூட றணிந்துதன் னருகிற் சார
வாரமென் மலர்ப்பூங் கொம்பை வளைத்துநிற் பானோர்வள்ளல்.

அறத்துளோ ரிரப்பார்க் கீய நிதியின்றி யயலார் தம்மைத்
திறத்தினல் வணக்கி யீயுஞ் செய்கைபோற் சீறுங் கூர்வாண்
மறத்தயில் விழியார் கோட்டு மலர்களை வேட்ப மாந்தர்
குறித்தபூஞ் சினைவ ளைத்துக் கொடுப்பரான் மலர்கள் கொய்ய.

வரைமிசை மயில்க ளன்ன மாதரைப் புயத்தி னேந்தி
விரைமலர் கொய்யக் கொம்பை வளைத்தவர் வியப்ப நல்கித்
தரையவர் நகைகா ணாது சரித்திடுந் தலைவர் சில்லோர்
புரையற விதனை நோக்கி யப்புறம் புகுவர் சில்லோர். (ருரு)

சங்கையில் கோங்கு கும்பத் தனங்களுக் கொவ்வா தென்றும்
பங்கய நீலந் தேர்ந்து பார்த்துட னருகிற் சார்ந்து
மங்கைநின் முகமுகங் கண்ணு மிணையென வந்த வென்று
செங்கையாற்பறித்தேதண்டஞ்செய்யெனக்கையிற்பெய்வார்.

தென்றலார் புளினந் தோறுந் தேமாவி னீழ றோறு
மன்றலார் வாசம் வீசு மாதவிப் பந்தர் தோறு
மொன்றிய நேச மோங்க மைந்தரொண் டொடியார் சென்று
வென்றிவே ளிரதி யென்ன வேட்கைக ணுகர்வர் சில்லோர்.

பத்திரன் சென்று சேரன் பண்டார நிதியொன் றின்றிச்
சித்தமுண் மகிழ்ந்து கொள்ளை யிட்டுடன் சேறல் போலும்
வைத்தநந் தளவ னத்துண் மலரெலா மாதர் மைந்தர்
கைத்திறந் தெரியக் கொய்தார் கடிமல ரொன்று மின்றி. ()

வேறு.

போதுகள் கொய்நலம் புசித்த வேதுவான்
மாதரு மைந்தரு மனத்தி னுள்ளுறை
யோதிய வூடல்க ளொருங்கி னேகவே
யாதரந் திகழ்புன லாடச் செல்லுவார். (ருக)

வேறு.

பங்கய வாவி தோறும் பரவுநீ ராறு தோறுஞ்
செங்கயல் குதித்துப் பாயுஞ் சிகரியஞ் சுனைக டோறு
மங்கைய ரோடும் வால வமைந்தரு மகிழ்ந்து சென்று
வெங்கயம் பிடிக ளென்ன வியந்துநீர் குடைந்தா ரன்றே. ()

தாமரை நீலஞ் சங்கஞ் சைவல மற்று முள்ள
வேமமா ரவய வத்துக் கிணையென விருத்தல் கண்டு
யாமமா ரிளைஞர் சார்பாய் மாதரா ரொருங்கு கூடி
நாமெலா நலிவு செய்வோ மெனமலர் வாவி நண்ண. (சுக)

தேகத்தை நீத்து விட்ட சித்துக டிகழ்மெய்ஞ் ஞான
யோகத்தைச் சார்ந்து தோய்ந்தே யுடலுயிர் குளிர்தல் போலு
மேகத்தை யிகழுங் கூந்த லார்புனல் விளையாட் டாய
போகத்தை யுற்றெல் லோரும் புனலிடைப் புகுந்தின் புற்றார்.

நலந்தரு நீரி னெய்தி நகையுட னாழ்ந்தெ ழுந்து
கலந்துகுப் புற்று வீழ்ந்து கைகளா னீந்து வோரு
மலர்ந்துவாண் முகமுங் கண்ணுங் கொங்கையும் வனச நீலஞ்
சலந்தவிர் கோக மென்னச் சார்தர நீந்து வோரும். (சுஙு)

கையிணை கோவை யிட்டுக் கடிமென்னீ ராடு வோருந்
தையலார் கிறப்பச் சூழ்ந்து தாவிமுன் னீந்து வோரு
மெய்யுறு சபதங் கூறி வியன்பெற நீந்து வோருந்
துய்யசெங் கரத்தான் மாறி மாறிநீர் சொரிந்து ளோரும். ()

கேவலத் தாழ்ந்து தேசார் சகலத்திற் கெழுமு வார்போற்
பூவலர் புனலி னாழ்ந்து பொருக்கென மிதந்து ளோரு
மேவிய பவத்தாழ் வோரை யெடுக்குமெய்ஞ் ஞானம் போல
வாவியு ளாழ்மின் னாரை யெடுத்திடு மைந்தர் சில்லோர். ()

காய்ந்தடர் புலன்க ளைலுங் காமத்தீச் சுடவாற் றாது[ண்கள்
தோய்ந்துதோய்க் தருளின் மூழ்குந் தொன்மையர் போலும்பூ

வேய்ந்தமென் முலையார் சீத விமலமார் புனலி னூடு
பாய்ந்துபாய்ந் தாடி யின்பம் பருகுவர் கருதிப் பல்லோர்.

யானென தென்னுஞ் செந்தீ யிடருறச் சுடுதற் கஞ்சித்
தானென றொன்று வண்ண மருளினுட் சார்வார் போலு
மூனுயிர் வெதுப்புங் கோடைக் குதகத்தி னுள்ள ழுந்தி
நீனிறக் கூந்தன் மாதர் நெடும்போது தாழ்ப்பர் சில்லோர். ()

தூசுக ளுடுத்துச் சோதி துலங்குபொற் பணிகள் பூட்டி
வாசமென் மலர்கள் சூடி மலர்நறுஞ் சாந்த மப்பித்
தேசுடை யாடி நோக்கிச் சேயிழை மாதர் மைந்தர்
நேசமோ டுளம கிழ்ந்து மதுவுண லினைத னேர்ந்தார். (௬௮)

ஓதிம நிரைகள் போலு மொளிர்மயி லணிகள் போலும்
போதுமஞ் சுகங்கள் போலும் பூமலி கொம்பர் போலு
மேதமி லளிகள் யானைக் கன்றுக ளேறு போலு
மாதர்கண் மைந்தர் பாங்கோ டிருந்தனர் மகிழ்ந்து பந்தி. ()

ஒள்ளிய பொன்னி னானு முயரொளி வெள்ளி யானுந்
தெள்ளிய பளிங்கி னானுஞ் செய்துயர் கலத்திற் றேக்கக்
கள்ளியல் கூந்தற் சேடி மார்மதுப் பெயக்க ரத்தா
லள்ளிவாய் வைப்பார் மொய்க்கு மளிபலவோச்சித் துய்ப்பார்.

குடமதுக் கலங்க டோறுங் கூர்வாள்போற் றுரை யோட
விடமதுத் திவலை மீது மொய்யளி விரைவி னோச்சி
மடவியர் மைந்தர் நேசம் வழங்கிய வுரைக ளாடித்
திடமுள மனமுஞ் சோரத் தெண்மதுப் பருகா நின்றார். (௭௧)

மதுவருந் தியவோர் மங்கை மற்றொரு மான்கலத்திற்
புதுமது வொருபெண் வாக்குந் தாரைவா ளென்று பூவா
யதுலகின் கொங்கை நேரா வமைதலால் வள்ள மின்று
சிதைவுற வாளாற் போழ்தி யோவெனச் சிரித்து நக்காள். ()

மொய்க்குறு மலர்த்தே னுண்டு திரியளி மொய்யை மின்னார்
கைக்குற வோச்ச மீண்டு மதுக்குடங் கடிதின் மொய்த்தல்
பொய்க்குரு பலபேர் வார்த்தை புசித்துளந் தெவிட்டா மாணர்
சற்குரு வொருவற் கண்டாற் றள்ளினும் போகார் போலும்.

அருந்திய மின்னாள் கள்ளி னணிகொடன் கொங்கை நீழ
லிருந்திய கோகப் புட்க ளிணையெனத் தேறிக் கையால்

வருந்தியுங் கவர்ந்து பற்ற வந்திடா தயதால் கண்டோர்
முருந்திள நகையாள் சால்க் கைகொட்டி முழுங்க நக்காள். ()

மையலோ டுண்ட மின்னு ளெஞ்சிய மதுவுட டோன்று
மையயில் கூந்தல் வேணி யணிமுக மதனை நோக்கிப்
பையா வடுத்துப் பற்றும் பனிமதி படுமென் றஞ்சிக்
கையினல் விலக்க நீங்க லின்மையாற் கருத்த ழிந்தாள். (எரு)

மயலுற வுண்டு மிஞ்சும் வள்ளத்தின் மதுவுட் டோன்றுங்
கயல்விழி யிணையை மெய்யே கயலிணை யென்று கையா
லயலுறு வண்ணம் பற்ற வசப்படா தாடல் கண்டு
செயலொரு வள்ளங் கொண்டுமெது வள்ளஞ்சேமஞ்செய்தாள்.

கருதிய மதுவையுண்ட காரிகை மதுவுட் டோன்று
மருதிளங் கொம்பர் மேய கிளிகிழன் மயங்கி நோக்கி
யிருகையா லரித்துப் பார்த்துங் கைவச மின்றி யேய்ய
பொருவறு கிளியின் வஞ்ச மென்னெனப் புகன்று நக்காள்.

நீநறு மதுவை யுண்ட சேயிழை சேனுர் கொம்பின்
வானர மதுநி றைத்த வள்ளத்தி னேக்கி யேதன்
வேனெடுங் கண்கள் வாள்போற் றோன்றிடவெட்டுவோமென்
றேனெடுங் கைய ளாவி யெடுத்துளே யோச்சி யெய்த்தாள்.

மைந்தனு மாதும் வேறோர் வள்ளத்தின் மதுவை யுண்டு
தந்தம துரிய நீழன் மதுவினுட் சாரக் கண்டு
சிந்தையா வேற்றோர்க் கூடி நீயுண்டாய் நீயுண் டாயென்
றந்தர மடைந்து சால விருவரு மைய முற்றார். (எகூ)

மைந்தரு மடமின் னரு மவ்வவர் வாஞ்சை யாற்றாற்
புந்தியுண் மகிழ்ச்சியோடு முண்டாட்டு வளம்பு சித்துத்
தந்தமை மறந்து வேட்கை தரும்விளை யாடல் செய்தே
கந்தவார் கூந்தன் மின்னார் காளையர் களித்துச் சார. (அ0)

மாநிலம் புரக்கும் தேவ மித்திர மன்ன னங்கே
நாணமார் குழலா ரோடிங் நலமெலாம் புசித்துப் பின்னர்ப்
பாணலா ரோடை சூழும் புதுவையம் பதியைச் சார்ந்தே
யீனமி லன்பு பொங்க வுமைவயித் தீசர்ப் போற்றி. (அக)

மறையவ ரன்பு நீரின் மற்றுளோர் வறுமை யெய்துங்
குறையற வெறுப்ப வேட்ட நிதிக்குவை கொடுத்து மேன்மை

நிறையரு ளுருவ ளோரை நிரந்தரச் செல்வ ராக்கிப்
பொறையுடைச் சிந்தை மன்னன் சந்நிதி முன்பு போந்து. ()

வேறு.

மெய்த்தாயாஞ் சிவகாமி யம்மையுடன் வேட்டவர்மேற்
பித்தாய வயித்தியப்பன் பிரசமல ரடிபோற்றிச்
சத்தாய வருள்பெற்று விடைகொண்டு தாழ்ந்தீன்ற
வத்தாயைப் பிரிந்தகலு மருங்குழவி யெனவகன்று. (௮௯)

வேறு.

பதியுள மறையோர் தொண்டர் மற்றுமப் பதியு ளோரை
மதியுறத் தொழுது போற்றி வணங்கியுண் மகிழ்ச்சி யோடும்
விதிமுறை மரபிற் றேவ மித்திரன் விடைகொண் டேகிப்
புதியமென் மலர்ப்பூஞ் சோலைப் பாடிலி புரத்திற் புக்கான்.

கடலெனுஞ் சேனை யோடு கதிர்மணித் தேரி லேறி
யடல்கெழு திண்டோட் டேவ மித்திர னணைதல் கண்டே
யுடலுறு புளக மோங்கப் பாடிலி புரத்தி லுள்ளோ
ரிடர்கெட வேந்தை நோக்கி யவனுடன் மகிழ்ந்தி ருந்தார். ()

வெண்குட்டந்தீர்த்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௦௦௦௪.

## வெண்குட்டந்தீர்த்த அத்தியாயச் சுருக்க வசனம்.

பாசதரன் மோக்ஷமடைந்த கதையைச் சொன்னோம், இனித் தேவமித்திரன் வெண்குட்டந்தீர்த்த கதையினைச் சொல்லுவோமென்று சவுனகாதிமுனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்:—தாமிரபருணி நதியும் வைகைநதியுந் தாய்போல வளஞ்சுரப்பதூஉந் தமிழுந் தென்றலு மணக்கும் பொதிகைமலையுமுடைய பாண்டிநாட்டிலே வீதிதோறுஞ் சோலைகள் சூழப்பெற்ற பாடிலிநகரத்திலே அந்த நாட்டையாளுந் தேவமித்திரனென்னும் அரசன் சதுரங்கசேனையுடையவனும் பகைவர்களை யோட்டெடுக்கும்படி தூரத்துவம் வீரத்தைப்பெற்றுக் குடிகளைத் தாய்போலு மிரக்ஷிக்குங் கருணையுள்ளவன். அன்னியர்பொருள் மனையாதிகளை அருவருப்பவன். இச்சிறப்புவாய்ந்த அவ்வரசன் வயிற்றிலே யூழ்வினை வசத்தால் வெண்குட்டந் தோன்றியது. அதனாலே மிக நாணமடைந்து தன் புத்திருக்குங் காலத்திலே என்றும் பதினாறுவயதுபெற்ற மார்க்கண்

டமுனிவர், அவனிடத்திலே வந்து சேர்ந்தனர். உடனே தேவமி த்திரன் எழுந்து அவரை வணங்கி அருக்கிய பாத்தியமாதியுபசாரங் கள் செய்து "தேவரீரின்கெழுந்தருளும் பெரும்பாக்கியம்பெற்றேன். அடியேன் செய்யும்பணிவிடை யென்ன" என்று வினவலும், மார் க்கண்டமுனிவர் மனங் களிகூர்ந்து "அரசனே! நீதிதவறாது நீ யரசபு ரிவதா லெங்களுக்கியாதொரு குறையுமில்லை. உனக்கு ஆசிகூறவந் தோம்" என்றனர்.

அரசனந்த வார்த்தையைக்கேட்டுச் "சுவாமி! அடியேன் செய் தநிவினைப் பயனாலோ மற்றெதனாலோ? என்னுடைய வயிற்றில் வெ ண்குட்ட வியாதிவந்து வருத்துகின்றது. இதை யொழித்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தான். முனிவரது கேட்டு "அரசனே! நீ முந்திய எட்டாவது சனனத்திலே தாமரைத்தடாகக் கரையிலே வெள்ளிய வஸ்திரங் கவர்ந்து சலத்திலே போட்டுவிட்ட தோஷத்தா லுனக்கு வெண்குட்டவியாதி சம்பவித்தது. இவ்வியாதி சிவார்ச் சனையினாலே நீங்கவேண்டும். ஆதலால் தலம் தீர்த்த மூர்த்தியிற் சிற ந்த புதுவைத்தலத்திலே சென்று சிவலிங்கப்பெருமானையும் உமா தேவியாரையும் பணிந்து வேத வித்துக்களாகிய பன்னிரண்டு பிரா மணரை யழைத்துச் சிவபிரானாக மனத்துள்ளே நினைந்து பூசித்தா லிந்த வியாதி யொழியும்" என்று திருவருள்செய்து தமதிருப்பிடத் துக்குச் சென்றனர். அம்முனிவரிடம் அரசன் விடைபெற்றுச் சதுரங்க சேனைசூழ மனைவியர்களோடும் பொன்மணி யாடை யாப ரணங்களும் வேண்டியமட்டு மெடுத்துக்கொண்டு புறப்பட்டுப் புது வைத்தலத்தைச் சென்று சேர்ந்து அட்டாங்க பஞ்சாங்க நமஸ்கா ரஞ்செய்து ஏமதீர்த்தம் பிரமதீர்த்தங்களுண்மூழ்கி யெழுந்து சந்தி வந்தனைகளாற்றிச் சிவகாமியம்மையையும் வயித்தியநாதரையுஞ் சோ டசோபசாரத்தாற் பூசித்து நேசித்துக் கண்குளிரத் தரிசித்துத் தோ த்திரஞ்செய்து திருவருள்பெற்றுப் பின்னர் பன்னிரண்டு பிராமண ரையழைத்து மார்க்கண்டமுனிவர் கூறியபடி பூசித்துச் சந்தனந் தாம்பூலம் ஆடையாபரணந் திரவிய முதலியவைகளைக் கொடுத்துத் திருப்திசெய்து வெள்ளை வஸ்திரதானமுங்கொடுத்து நீங்களே யெ னக்குச் சிவபிரானென்று உபசாரவார்த்தை சொல்லி யனுப்பிவிட்டு வயித்தீசர் சந்நிதானத்துக்கு வந்தான்.

அங்கேவருதலும் அரசனைப்பற்றியிருந்த வெண்குட்ட வியாதி நீங்கிவிட்டது. உடனே அரசன் குற்றந்தீர்ந்த சூரியனைப்போலப்

பிரதாசித்து நின்று பன்முறை வணங்கி யெழுந்து ஆனந்தக் கண்ணீர் சோர உடல் முழுவது முரோமஞ்சிலிர்ப்பத் தோத்திரஞ்செய்து நின்னுளிருந்து மகா மேருவுக்குச் சமானமாகப் பொன்மயமாகிய ஒரு இரதஞ்செய்வித்துத் தைமாதப் பௌர்ணமியிலே கூடிய பூசநக்ஷத்திரத்தில் திருவிழாச் சிறப்பு நடாத்தித் தெரிசித்துப் பின்னர் திருவாதிரைதோறும் நடராசப் பெருமானுக்கு அபிடேகம் அலங்காராதி புரிவித்து வணங்கி வயித்தியநாதர் கோயிலிலே பலபல திருப்பணிகளுமியற்றிப் புதுவைப்பதிக்குக் கன்னிமூலையிலே காதவழிதூரத்திலுள்ள அளகாபுரிப் பூஞ்சோலையானது சீர்திருத்தஞ் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறதென்று சொல்லக்கேட்டு முன்போலப் பற்பல விருக்ஷங்களும் வாசனைமிகுந்த புட்பச் செடிகளும் உண்டாக்கும்படி செய்வித்து மகிழ்ந்திருந்தனன். அப்போது வசந்தகாலம் வந்ததனாலே தேவமித்திரன் மனைவி மைந்தர்களாகிய பரிசனர்களுடனே புதுவையைவிட்டு நீங்கி அளகாபுரிப் பூஞ்சோலைக்குச் சென்று பூக்கொய்தல் புனல் விளையாடல் மதுவுண்ணல் முதலியவற்றாலே ஆனந்தபரவசனாகி யிருந்து மீண்டு புதுவைப் பதியையடைந்து அப்பதியிலுள்ளவர்கள் வேண்டியவைகளெல்லாங் குறைவறக்கொடுத்து வயித்தியநாதர் சிவகாமியம்மையை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தாயைப்பிரிந்த கன்றுபோல நீங்கி யிரதத்திலேறித் தனது பாடிலிபுரத்துக்கு நகரத்திலுள்ளாரெல்லாமெதிர்கண்டு வணங்கவந்து சேர்ந்து மகிழ்ச்சியுற்றிருந்தனன்.

---

பத்தாவது

# அகத்தியர் பூசித்த அத்தியாயம்.

சடைவறு மதியம் பொதியும்வாண் முகமோ சலசமை விழிகளோ குவளை, யடைவுறு கூந்தல் சைவலங் கண்ட மணிதிகழ் சங்கமின் னிடைநைக், திடைவுறு கொங்கை சக்கரவாக மெழிற்கரங் கால்கள்செங் கமல, நடையன மென்னநயமொழி நவிலு முமையொடு நம்பனைப் பணிவாம். (க)

வேறு.

நட்ட மாடிய புதுவைவாழ் நம்பனைப் போற்றி
யிட்ட மார்தரு தேவமித் திரனகட் டிடையார்

குட்ட நோய்தவிர்த் தருளிய துரைத்தனங் குறிய
சிட்ட மாதவ னகத்தியன் பணியுரை செய்வாம். (௨)

## வேறு.

ஆதியிலேனோர்நானான்முகக்கடவு ளவனுலகத்தின்வீற்றிருப்ப
நீதிசேர் முனிவ ரிருடியர் கோடி நிகழ்சுரர் முப்பதின் மூவ
ரோதிய சுருதி மிருதிகள் பலவு முபநிட தப்புரா ணங்கள்
பூதிசேர் நதிகள் மலைகட றத்தம் புணர்வடி வோடுவந் திருப்ப.

ஆயிரங் கிரணஞ் செறிதரு மிரவி யவிரொளி யனையமெ
ய்ஞ் ஞானத், தூயவன் வாம தேவனவ் விடத்திற் றோன்றி
வந் தயன்றனை வணங்க, மேயநல் லிருக்கை யாசன நல்கி வி
ருப்பொடு முகமனன் கியம்ப, வாயவ னுள்ள மகிழ்ச்சியோ டி
ருப்ப வனைவருங் களிப்புறுங் காலை. (௪)

## வேறு.

அந்தர வெளியை யெல்லாம் படர்ந்துபின் னடர்ந் தெழுந்த
விந்த்ம தடக்கி யாபோ சனமென வேலை யுண்டு
நந்தவி னுமையாண் மன்ற லுளுய ரவனி தாழச்
சந்தன கிரியின் வைகுந் தவமுனி யாங்குச் சார்ந்தான். (௫)

அங்கவன் வணங்க வேறோ ராசன மமைத்திட் டன்போ
டிங்கித மலரோன் கூற விலைகளு ரதன்முன் கண்டு
தங்கிய வாம தேவுன் றன்னுடன் கும்ப யோனி
பங்கய விணையோ டென்று பகர்ந்திட வுணர்ந்து மேலோன்.

கும்பத்தி லுதித்த வென்றன் குறையகற் றென்று வேத
சம்பத்தன் முன்னெ ழுந்து குறுமுனி சாற்றப் போதன்
கம்பத்தன் செயலைக் கண்டுங் கருணைசெய் கடவு ளன்பர்
நம்பத்தன் பதியின் மேன்மைப் பதிநல நவில லுற்றான். (௭)

மெய்த்தவ முனிவ கேண்மோ வினவிய புராணந் தன்னு
ளுத்தம பிரம கைவர்த் தம்மென வொருபு ராணஞ்
சுத்தமா மதனு ளுண்மை சொலுஞ்சிவ விபவ கண்ட
நித்திய முறைக்கு முத்தி நிகழ்பதி புதுவை யென்றே. (௮)

## வேறு.

முன்னைநா ளண்ணலார் முடிகண் டேனெனச்
சொன்னவோர் தீங்கினாற் சிருட்டி சோர்வுற

வின்னநற் பதிகலை மீசன் கூறினு
னன்னதிற் பூசனை யாற்றி யன்புற்றேன். (கூ)

### வேறு.

ஆதர வோடு நீசென் றப்பதி யதனின் வைகி
நாதனைக் கருணை கூரு நம்பனைப் பூசை செய்தாற்
சேதன மன்றி நின்ற கும்பத்திற் செனித்த வுன்றன்
றீதகன் றரிய மேன்மைத் திறமநு பவமா மென்றான். (கo)

செப்பிய வுரையைக் கேட்டுக் குறுமுனி சிந்தை கூர்ந்தே
யப்பதி மகத்து வத்தை யன்புட னறைதி யென்ன
வொப்பினு ரதனுங் கேட்ப வவையுளோ ரெவரு முய்ய
மெய்ப்பது மாச னத்தோன் மேன்மைக ளனைத்துங் கூறி. ()

நன்னெறிப் புதுவை மேய வயித்திய நாத னென்று
மன்னையன் புடைய வண்ணல் குற்றங்க ளறியா நேசன்
சொன்னவா றேகி நீயும் வழிபட வருள்சு ரந்து
புன்னெறி யிகழ்வ கற்றிப் போதமு மருளு மென்றான். (கஉ)

நான்முக னிவ்வா றோத வகத்திய னயந்து போற்றித்
தான்முக மன்கள் கூறி விடைகொடு சரிகொண் டேகி
நூன்முக மறையோர் போற்றுங் கூடலை நோக்கிச் சென்று
பான்முக மொழியாள் பாக சுந்தரன் பதம்ப ணிந்து. (கங)

ஐயனே யென்னை நீங்கா வப்பனே யழிவி லாத
மெய்யனே யமரர் போற்றும் வேந்தனே வடிகொள் சூலக்
கையனே கால காலா கயற்கணி பாக மேவி
துய்யனே யெனையாள் சோம சுந்தரா போற்றி யென்று. (கச)

பரிவொடு மகிமை சேர்பொற் றாமரைத் தடம்ப டிந்து
புரிவுட னபிடே காதிப் பொருள்களைப் பலவு மீட்டித்
துரிசற வாம சோம சுந்தரன் கயற்க ணாளை
யரியநான் மறைக ளாற்று லருச்சனை புரிந்து சொல்வான். ()

கட்டுண்ட பாச நீக்குங் கண்ணுத னினக்கு நித்த
மிட்டுண்டு பகர்ந்து நேச மிசைந்திடும் வந்திக் காளாய்ப்
பிட்டுண்டு முயலும் வேலை பிரம்பினு லடித்து மாறன்
றட்டுண்டு நிற்பக் காத்த சங்கரா போற்றி போற்றி. (கசு)

பத்தியாப் பாடும் பாண பத்திரன் றனக்கா ளாகித்
தத்திய முடியின் மீது விறகமை தொல்லோய் போற்றி
சித்திசே ராடன் மாணப் பற்பல செய்து கல்வி
னத்திநீங் கரும்ப ருந்த வளித்தவா போற்றி யென்றான். (௧௭)

அடியவர்க் கெளிய வண்ண லசரீரி வாக்காற் கூறும்
பொடியணி புனிதர் போற்றும் புதுவையு ளுறைதல் யாமே
மடிமையி னீயாங் கெய்திப் பூசனை மகிழ்பு ரிந்தாற்
கொடியவின் குறைத விர்ந்து மனங்களி கூரு மென்றான். ()

அத்தனு மிவ்வா றோத வகத்திய னன்பு கூர்ந்து
வித்தக னருளைப் பெற்றுக் கூடலை விட்டு நீங்கிச்
சத்தமார் மறைக ளோதும் புதுவையைச் சார்ந்து நீங்கா
நித்திய மகிமை யேய வளங்களை நேரே கண்டு. (௧௯)

தரையுறப் பணிந்து தாழ்ந்து தாணுவே யென்றெ ழுந்து
திரைபொரு ஞான தீர்த்தச் சிவகங்கை தன்னுண் மூழ்கி
விரைமலர்த் தடத்துட் செங்கைக் கரகநீர் விரையப் பெய்தே
யிரைதிரை வாவி நாம மகத்திய தீர்த்த மென்றான். (௨௦)

அகல்சிவ கங்கை யோரத் தியானை மா முகனைப் போற்றிச்
சிகரமார் கோபு ரத்தைச் செங்கையாற் றொழுது சென்று
மகிமைசேர் வான மோங்கு மணிமதில் வலங்க ளாற்றிப்
புகழ்பெறு கோயில் வாயில் புகுந்துளம் வியந்து போந்து. ()

சார்புறு புதுவை யீசன் சந்நிதி முன்னர்ச் சென்று
சீர்பெறத் தாழ்ந்தெ ழுந்து சிந்தையு ளன்பு பொங்க
வேர்பெறு பூச னைக்கு முனிவரர் பொருள்க ளேந்த
கார்பெறு மபிடே காதி யருச்சனை நயந்து செய்து. (௨௨)

சதுமறைப் பொருள்க ளாய சகத்திர நாமங் கூறிப்
புதுமது வுறைமந் தாரப் பூமலர் கொண்டு போற்றி
யிதயமா ரின்ப மோங்க விருவிழி யருவி சோர
விதிருடல் புளக மோங்க வின்னன விளம்ப லுற்றான். (௨௩)

ஆரண னாகி யண்டம் படைத்தரு ளமலா போற்றி
நாரண னாகி யென்றும் புரந்தரு ளம்பா போற்றி
வாரணத் துரியோ னாகித் துடைத்தருள் வரதா போற்றி
காரணங் காரி யங்கள் கற்பனை கடந்தாய் போற்றி. (௨௪)

இன்னண முறையி னுய தோத்திரம் பலவி யற்றி
நன்னல மருளும் போத வயித்திய நாதன் பாதங்
கன்னிகை யசல மீன்ற சிவகாம வல்லி பாதஞ்
சென்னியிற் சூடி யேத்தித் திருவருள் பெற்றுப் போந்து.(உ௫)

வேறு.

பன்ன சாலையொன் றமலமாப் பாங்குறப் பணித்தே
யின்ன வின்றிய விமலச மாதியு ளிருந்து
மன்னு நற்சிவ கங்கைவாழ் பிள்ளையை மனத்து
ளுன்னி வைத்தடி பணிந்துமை யீசனை யுவந்து. (உ௬)

நிலைபெ றத்திரு வஞ்செழுத் தன்புற நினைந்து
மலைவ கன்றிட விதிப்படி மாறியுச் சரிக்க
வலைவ கற்றிய வுரையுணர் வற்றமெய்ஞ் ஞானத்
தொலைவ தின்றபே ரொளியினி னிலைபெறத் தோய்ந்து.(உ௭)

வேறு.

மும்மல மனுகா வண்ண மூவாண்டு தவம்பு ரிந்து
செம்மலை மபுதலை யீசன் சேவடி தினமும் போற்றிப்
பொய்ம்மலை வகன்று தூய புந்தியுஞ் சுத்த மோங்கத்
*தன்னையு மறந்து நீங்காச் சமாதியின் முனியி ருந்தான்.(உ௮)

அகத்தியர் பூசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪0உ௧.

அகத்தியர் பூசித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதியோர் கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்:—முன்னொருகாலத்திலே பிரமதேவனானவன் முப்பத்துமுக்கோடி தேவர்களும், முனிவர்களும், ருஷிகளும், வேதங்களும், உபநிடதங்களும், புராணங்க ளாதிகளுஞ்சூழச் சத்திய உலகத்திலே வீற்றிருக்கும்போது வாமதேவமுனிவர் அவ்விடத்திலே வந்து பிரமதேவனை வணங்கப், பிரமதேவன் அம்முனிவருக்கு ஒரு ஆசனங்கொடுத்திருக்கும்படி சொல்லி மகிழ்ந்திருந்தனன். அதன்மேல் விந்தமலையை யடக்கியவருஞ் சமுத்திர சலமுழுவதும் ஆபோசனஞ் செய்தவருமாகிய, அகத்தியமுனிவர் வந்து தொழுதிருப்ப அவருக்குமொரு ஆசனங்கொடுத்திருக்கும்படி பிரமதேவ னுபசரித்ததை நாரதமுனிவர்

* தன்னை - இவனெவனுகை, இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க.

கண்டு "பிரமதேவரே! வாமதேவரைப்போலக் கும்பத்திலே பிறந்த அகத்தியமுனிவரை யுபசரித்தீரே இவர் அவ்வாமதேவ முனிவருக்குச் சமானரோ" என்று வினவலும் அதைக்கேட்ட அகத்திய முனிவர் தமது குறையை நினைத்து எழுந்து நின்று கும்பத்திலே பிறந்த என்னுடைய இழிவை மாற்றவேண்டுமென்று பிரமதேவனைப் பார்த்துச் சொல்லினர்.

பிரமதேவன் முனிவரை நோக்கிப் பதினெண்புராணங்களுள் ஒன்றாகிய பிரமகைவர்த்த புராணத்திற் சிவவைபவ கண்டத்திலே முத்திதரும் க்ஷேத்திரமென்று சொல்லப்பட்ட புதுவைத்தலத்திலே போய்க் கருணாநிதியாகி ஆங்கெழுந்தருளி யிருக்குஞ் சிவலிங்கப் பெருமானைப் பூசைசெய்தால் அசேதனமாகிய கும்பத்திலே பிறந்த நினது இழிவு நீங்கி மான்மிய முடையலாமென்று கூறுதலும், அகத்தியமுனிகர் மீளவு மந்தத் தலமகத்துவம் பலவற்றையும் பிரமதேவனிடங் கேட்டறிந்து விடைபெற்று மதுரை நகரத்தைச்சேர்ந்து சோமசுந்தரக் கடவுளைப்பணிந்து பொற்றாமரையிலே ஸ்நானஞ்செய்து நித்தியகன்மமுடித்துச் சொக்கலிங்கமூர்த்தியை யபிடேகாதிகளா லருச்சனைசெய்து வேதமந்திரங்களாலே துதித்து நிற்கும்போது சிவபிரான் அசரீரிவாக்கினாலே "புதுவையை யடைந்து நம்மைப் பூசிப்பாயாகில் உன்னுடைய குறைதவிர்ந்துவிடும்" என்று அருளிச்செய்தனர். அதுகேட்ட அகத்தியமுனிவர் அன்புமிகுந்து திருவருள் பெற்று மதுராநகரத்தை நீங்கிப் புதுவையைச்சென்று சேர்ந்து அந்நகரத்திலுள்ள வளங்களைப்பார்த்துக் களித்து வணங்கி ஞானதீர்த்தமாகிய சிவகங்கையிலே படிந்து எழுந்து தம்முடைய கமண்டலத்திலுள்ள தீர்த்தத்தைச் சிவகங்கையிலே பெய்து அதற்கு அகத்திய தீர்த்தமென்று ஒரு பெயரையுங்கொடுத்து அதன்மேற் சிவகங்கை விநாயகமூர்த்தியைப்பணிந்து கோபுரதரிசனஞ்செய்து திருமதிலை வலம்வந்து கோயில் வாயிலினுட்புகுந்து சந்நிதியிலே கீழேவிழுந்து நமஸ்காரஞ்செய்தெழுந்து சிவலிங்கப்பெருமானை யபிடேகமலங்காரஞ்செய்து ஆயிரநாமங்கூறிப் பலவாறு தோத்திரஞ்செய்து பின்னர்ச் சிவகாமியம்மையையு மங்ஙனம் பூசித்துத் திருவருள்பெற்று வெளிவந்து பன்னசாலை யொன்றுசெய்து அதிலேவிமலமாகிய நிட்டையிலே யிருந்து பஞ்சாக்கரஞ்செபித்து மனவாக்குக்கதீதமாகிய சுயம்பிரகாச சோதியை உள்ளே தரிசித்து மூன்றுவருடந் தவஞ்செய்திருந்தனர்.

பதிஞெராவது

# அகத்தியர் மேன்மைபெற்ற அத்தியாயம்,

பூதமோ ரைந்திற் ருென்றும் புகல்பரி ணும மாகி
நாதமார் பூத மீரு நவின்றதத் துவங்க ளாகிப்
பேதமா யபேத மாகிப் பேதாபே தங்க ளாகி
நீதமா யவைக்கு வேரும் புதுவையு ணிமலா போற்றி. (க)

வேறு.

சூத னன்புட னிவ்வணஞ் சொலமுனி வரர்கள்
போத மிக்புறக் கேட்டுளம் வியந்துபின் புகல்வார்
சீத வெண்பிறை சூடியை யருச்சனை செய்த
மாத வன்பெறு மேன்மையை வழுத்தென வழுத்தும். (உ)

மஞ்ச ழுத்திய மாடநீள் புதுவையுண் மன்னிப்
பஞ்ச ழுத்திய வடியுமை வயித்தியப் பனையு
ெஞ்ச ழுத்திவா முகத்திய முனிவர னேச
வஞ்செ ழுத்தியல் புணர்ந்துரைத் தகத்துற வமைத்து. (௩)

பதித்த வஞ்செழுத் தாணியை யுயிர்ப்பல கையின்மேற்
கதித்த சிந்தையான் மதித்திடக் கருவிக ளறவே
யுதித்தெழுஞ் தொளிர் விளக்கெ விருளொழிந் துளக்கண்
விதித்த பேரொளித் தரிசன முற்றதின் மேவி. (ச)

வேறு.

தெருளுயி ராலுடற் செய்கை போலுமெய்
யருளது வாலுயிர்ச் செயல்க ளாமென
மருளக லருள்பிரி வின்றி மன்னுத
லிருளற வுயிரினு ளெய்த நோக்கியே. (ரு)

பேசிய வோர்கணம் பிரித லின்றியே
யாசக லுயிரினு ளமைத லுண்மையா
மாசறு காட்சியாக் கண்டு வாழ்வரு
டேசுகொள் பேரொளித் தெரிச னத்தினுள். (சா)

பரவையு ளமிழ்ந்திய பாண்ட மென்னவே
விரவிய வொளியுறு வெளியு ளெய்தியே
யிரவொடு பகலறு மின்ப வான்பொருள்
கரவொடு சிந்தையைக் கவர நின்றனன். (எ)

## வேறு.

அண்ணலார் பாத நீங்கா வகத்திய முனிவ னிவ்வா
றெண்ணமார் தவத்தின் மூவாண் டிருந்துயரியோகஞ்செய்தா
னண்ணலார் புரங்க ளட்ட சிவகாமி நாதன் கண்டு
திண்ணமா ஞான மேனித் தெக்கிணா மூர்த்த மாகி. (அ)

கரும்புறு சுவையும் வாசக் கடிமலர் நாற்றம் போலும்
விரும்புறு மருளு மின்பும் விரவிய தேக மேய்ந்து
மிரும்பெருந் தவங்க ளாற்று மகத்திய னெதிரே தோன்றப்
பெரும்பய னறிய னுற்ற பெற்றிபோற் கண்டு பேணி. (கூ)

நிலனுறப் பணிந்து தாழ்ந்து நெடும்போதின் பின்னெ ழுந்து
நலமுற விழியா னோக்கி நசையுளத் தன்பு பொங்கத்
தலைமிசைச் செங்கை யேறத் தாரையாய் விழிநீ ரோட
மலர்முகங் களிப்பி னெய்த வுடன்மயிர்ப் புளகம் வாய்ப்ப. ()

அளவிலா னந்த மெய்த வறிவழிந் தவச முற்றுக்
களவிலாப் புனித நெஞ்ச னிரண்டறுங் காட்சி யாலே
யுளமகிழ் வோடும் வாழ்த்த வுணர்வுத வாமை யாய
வளமலி சுத்தா தீத மருவிடப் புசித்துப் பின்னர். (கக)

நிலைபெறு துரிய மெய்த நினைவுகை தரவு வந்து
மலைமகள் பாக நீத்து வந்தெழுந் தருளு நேயத்
தலைவனை யுயிரை நீங்காத் தத்துவா தீதன் றன்னை
யிலையுள திரண்டற் றோனை யின்னன வியம்ப லுற்றான். (கஉ)

ஊனென தாக வெண்ணு முணர்வினி யேனை யாண்டே
யானென தகற்றி யின்ப வின்னரு ளளித்தாய் போற்றி
வானெனு மாதி பஞ்ச பூதிக மன்னி நீங்கா
நானென றனினு மேவி நிறைந்தரு ளைப்பா போற்றி (கங)

வித்தினு ளுதித்துத் தோன்றி விளையுமங் குரத்தைப் போலுஞ்
சித்தினு ளுதித்துத் தோன்றுஞ் சச்சிதா னந்தத் தேசா

மத்தினிற் சுழலு நெஞ்சைக் கவர்ந்தொளிர் மாட்சித் தாய
சத்தினில் விரவச் சேர்த்த தற்பரா போற்றி போற்றி. (௧௬)

எண்ணிலாச் சனனந் தோறு மொருக்கா லு மெய்தாக் காட்சி
யண்ணுவித் தருநா ளுக வாக்கினை மலத்தைப் போக்கிக்
கண்ணொளி யொளியைக் கூடுங் கருத்தெனக் கலந்த தன்மை
யுண்மையுந் தந்த காட்சி யொளியையு முரைக்கற் பாற்றோ.

அருத்திசே ரன்பி னோடு முரைத்திடு மகத்தி யன்சொல்
கருத்தனு மகிழ்ந்து கேட்டுக் கூறுவான் கருணை யோடுந்
திருத்தமாந் தவத்தின் மேய குறுமுனி செப்பக் கேண்மோ
வருத்தமார் நினது செய்கைத் தவங்களை மகிழ்ந்தோ மென்று,

அருகுற விருத்திப் பாத முடிமிசை யமைத்து நெஞ்சுட்
டுருகுற விழியா னோக்கிச் செங்கையாற் பரிசித் தன்பு
பெருகரு ளொளியாப் பாவித் தின்புறப் பேசிச் சிந்தை
யுருகரு ணூல்க ளோதிச் சிவஞான யோக நல்கி. (௧௭)

குறுமுனி வரனை நோக்கித் தக்கிண மூர்த்தி கூறும்
*பிறுதிவி முதலா நாத மீறாகப் பேசு கின்ற
மறுவறு கருவிப் பேருந் தொழிலுடன் வடிவு நெஞ்சுட்
சறுவமு முணர்ந்து காண்ட றத்துவ ரூப மாமால். (௧௮)

மூவகை யாகி யுள்ளாங் கருவிகண் முப்பத் தாறு
மாவலாப் புகல்பு றம்பா மறுபது கருவி யாவுந்
தூவகை யிரண்டாக் கூறுங் கருவிக டொண்ணூற் றாறுங்
காவலா ரனுப வத்திற் பொய்யெனல் காட்சி யாமே. (௧௯)

சொல்லிய கருவிப் பேருந் தொழிலையு முணர்ந் துணர்ந்து
பல்லியல் பாய பேதக் கருவிகள் பளிங்கி ஞய
கல்லினிற் றோன்றும வண்ணம் போலுயிர் கருவி யாவும்
புல்லுத லன்றி வேறு மெனல்புக றெரிச னந்தான். (௨௦)

உரைதரு கருவிச் செய்கை யிவையிவை யெனவு ணர்த்திப்
புரையற வுயிரி னுள்ளே யுயிர்க்குயி ராய்ப்பொ ருந்தி
நிரைபெறு பிண்ட மண்ட மெங்கணு நிறைந்து நின்று
வரைவிரு ளகற்று ஞான முயிர்ப்பெரு வடிவந் தானே. (௨௧)

---

* பிறுதிவி - எதுகைநோக்கிவந்த பிருதிவியின்றிரிபு.

மறைப்பனு காத வண்ண மருளினி லிசைந்து மன்னச்
சிறப்பொளி பெருகு ஞானச் செய்கையே யாவு மென்று
நிறத்தொளி காட்டக் காணும் விழியென நினைந்தான் மாவுந்
திறச்செய லகன்று நிற்ற லுயிர்த்தெரி சனமென் றோதும். ()

இலங்கிய வொளிசேர் ஞான மெங்கணு நிறைந்து நிற்க
விலங்குத லின்றி வேறோர் கருவிகண் மேவி யுள்ளங்
கலங்குத லின்றி யான்மாக் கருவியின் பற்று விட்டு
நலம்பெற வருளா யெய்த னல்லுயிர்ச் சுத்தி யாமே. (௨௩)

நீக்கமின் ஞானந் தன்னு ளதுவிழி யாக நின்று
போக்கொடு வரவு நீக்கிப் புகன்றிடுங் கருவிச் செய்கை
தாக்குத லின்றி யான்மாத் தலைச்சுமை யிறக்கி யின்ப
மாக்குதல் போல்வா னெய்த லதுசிவ ரூப மாமே. (௨௪)

எறிந்திடு கல்லாற் பாசி யேகினீ ரெய்தல் போலும்
பறைந்திடும் பஞ்ச பூதப் பரப்படை பலவே தங்கண்
மறைந்திடப் பையப் பைய விளையுமா சிவத்தைக் கண்டு
சிறந்திடு மின்ப மெய்தல் சிவதரி சனமா மன்றே. (௨௫)

தோன்றியுந் தோன்றா தாகித் தொல்லுல கதனு ளாழ்ந்தே
யேன்றபே ரொளியா யோங்கி யெங்கணு நிறைந்த கண்டல்
போன்றபேரொளியைமூன்றும் வெளியெனப்புகல்வர்நெஞ்சு
ளூன்றுபே ரின்ப வானை யுறல்சிவ யோக மாமே. (௨௬)

விரவமா வாசை யன்று விதுவொரு கலையுந் தேசா
ரிரவியு ளொடுங்கு கின்ற வியல்பெனச் சிவத்து ளான்மா
பரவியார் கனவு தன்னிற் கனவுறு பான்மைத் தாகிப்
பொருவில்சு காதீ தந்தான் புகல்சிவ போக மாமே. (௨௭)

இத்தச காரி யங்கண் முன்னரு மியம்பி னோம்யா
மத்திற மேன்மை யாவு மடைந்தநீ யாத லாலே
முத்திற மலந்தே கத்தான் முன்னுறு முணர்வு நீங்குஞ்
சுத்தனே யுண்மை யீதாற் சஞ்சலந் துரந்தி டாயே. (௨௮)

ஐந்தொழில் புரிவ தாய சிருட்டியோ டருளின் செய்கை
முந்துபல் லுயிர்கள் பந்த முத்தியி னடையு மாறு
நந்தவி லன்பி னோடு முன்னரே நவின்றோ நின்பாற்
சிந்தையு ளுவந்து ணர்ந்து தெளிந்துளந் தேறு கென்று. (௨௯)

கடத்தினி லுதித்த கிந்தை கழிந்தது மேன்மை தந்தேம்
படத்தா வணையோன் வேத லுணர்ந்திடாப் பண்பு பெற்ற
திடத்தொளிர் சிந்தை யன்பா செல்கென விடைகொ டுத்தே
யிடத்துமை நீத்து வந்தோ னிலிங்கத்துட் கரந்தா னன்றே.

முக்கணன் றனு மேன்மை யகத்திய முனிவன் வந்த
தெக்கிணு மூர்த்தி பாதஞ் சென்னியி னுறவ ணங்கி
நக்கனெம் புதுவை மேய சிவகாமி நாதன் றன்னைத்
தக்கபே ரருளா ரன்னை சிவகாமி சரணம் போற்றி. (ஙக)

பெருக்கிய வன்பினேடும் பன்முறை தாழ்ந்து பேணிச்
சுருக்கமில் விடைகொண் டெய்ந்து கோயிலை வலமாச் சூழ்ந்து
திருக்கிளர் திருமுன் னெய்திச் செங்கைகள் கூப்பி நீங்கித்
தருக்கொடு மகத்தி யன்றன் பொதியமா மலையைச் சார்ந்தான்.

அகத்தியர் மேன்மைபெற்ற அத்தியாயம்
முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கoகூக.

அகத்தியமுனிவர் மேன்மைபெற்ற அத்தியாயச் சுருக்கவசனம்.

அகத்தியமுனிவர் பூசித்த கதையைச் சொல்லக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் அகத்தியமுனிவர் மேன்மைபெற்ற கதையினை யருளிச்செய்ய வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:—புதுவைத்தலத்திலே மேற்கூறியபடி அகத்தியமுனிவர் கிட்டைகூடியிருந்து சமுத்திரத்தினுள்ளமுந்திய ஒரு பாத்திரத்தைப்போலத் திருவருளுள்ளே யமிழ்ந்தியிருந்துஞ் சிவகாமியம்மை சமேதராகிய வயித்தியநாதர் தக்ஷிணமூர்த்தியாகி அம்முனிவரெதிரே யெழுந்தருளினர். அதுகண்டு அகத்தியமுனிவர் நிலத்திலே தாழ்ந்து பணிந்து அன்புமேலிடச் சிரசிலே கைகுவித்து உள்ளங்குளிர வுரோமஞ்சிலிர்ப்ப அறிவழிந்து பரவசராய் நின்று "சுவாமீ! அறிவில்லாத அடியேனை யாட்கொண்டு யான் எனதென்பனவற்றைப்போக்கி இன்னருள் புரிந்தீர். உம்முடைய பெருமையை யாவராலே சொல்லமுடியும்" என்று கண்ணு மனமுங்களிகூர்ந்தனர். தக்ஷிணமூர்த்தி அம்முனிவரது அன்பைக்கண்டு மகிழ்ந்து அவரைப்பக்கத்திலிருத்தி யவரது தலையிலே தமது திருவடித் தாமரையைச் சூட்டி ஆணவமலமகலத் திருக்கண்ணு''ல பார்த்துச்

செங்கையினாலே பரிசித்துச் சிவமாக்கிச் சிவஞானசாஸ்திரத்தை யுபதேசிக்கத் தொடங்கித் தத்துவபேதங்களையுங் கருவி பேதங் களையும் அவைகளின் செயல்களையும் ஞானசொரூப நிலையையும் ஞானத்தாலெய்தும் பிரயோசனத்தையும் விரிவாகக்காட்டி இவை களை முன்னரும் உனக்கு உபதேசித்திருக்கின்றோம். ஆதலாலினித் துன்பத்தையொழித்து விடுக" என்று சிருட்டியாதி நிலைமைகளையுந் தெளிவித்துக் கும்பத்திலே பிறந்த சிந்தனை யொழிந்துவிட்டது. உனக்கு மேன்மை தந்துவிட்டோம். பிரம விஷ்ணுக்களா லறியப் படாத பேரன்புடையாய்" என்று விடை கொடுத்துவிட்டுச் சிவலி ங்கத்திலேபோய் மறைந்திருந்தனர். இங்ஙனந் தக்ஷிணாமூர்த்தியாய் வந்து உபதேசித்த வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையும் பத் தியுடனே தரிசித்துத் தாழ்ந்து பணிந்து பிரதக்ஷிணம்வந்து விடை பெற்று அகத்தியமுனிவர் பொதிகைமலையிலே போயிருந்தனர்.

பன்னிரண்டாவது

# படிக்காசுவைத்த அத்தியாயம்.

ஓருமு ணோர்ந்து தோன்றி யுளமிக வியந்து கண்டு
நேருமு னோர்ந்து நீடி நிலைமையா நிறைந்து தன்னைச்
சாருமுன் சார்ந்து சார்ந்தோர் சார்புவிட் டகன்றப் பாலாய்ப்
பேருமுன் பேருந் தன்மைப் புதுவையம் பெருமான் போற்றி.

வெற்பட னிலத்த டக்கி விரிகடல் சுவற வுண்ட
வற்புதத் தவத்தின் மிக்க வகத்தியர் மேன்மை பெற்ற
சொற்பெருங் காதை சொன்னோந் தொண்டுசெய் மறையோ [னுய்யப்
பொற்படிக்காசுவைத்த மகிமையைப்புகலலுற்றாம்.

அந்தணர் மறையி னார்ப்புந் திருமுறை யன்ப ரார்ப்பு
முந்துநன்மணங்கள்செய்வோர் முழக்குமின்னியங்களார்ப்பு
நந்தலில் புதுவை யீசன் கோயினன் முழவி னார்ப்பு
முந்தியார் கலியி னோசை யடங்கிட முழங்கு மன்றே. (௩)

புரிந்திடும் பாக சாலைப் புகையுமி யாக சாலை
பரிந்திடும் புகையு மாதர் குழலகிற் புகையும் பண்பா
விரிந்திடு மாடகூட நிரைகளும் விரைமென் றண்பூச்
சொரிந்திடுஞ் சோலை யாவும் வெளியறத் துதையு மன்றே. ()

அப்பதி யதனுண் மேய வந்தண ரனைத்து ளோரு
மொப்பிலா மறைக ளாதி யாகம முணர்ந்து தேர்ந்தோர்
செப்பிய மகங்க ளியாவு மானுது செயுந்தி றத்தோர்
மெய்ப்பரி வோடு மீச னருச்சனை மேன்மை பெற்றோர். (௫)

வேறு.

தூயநல் லொழுக்கமுந் துகளில் சுற்றமு
நேயமும் பத்தியு நெஞ்சு ணன்மையு
மேயநல் லறிதியர்ப் புரக்கு மேன்மையு
மாயநற் குணமிவை யனைத்து முள்ளவர். (௬)

இந்தவா றியற்றிய வியல்பி னெய்திய
வந்தண ரெண்ணில ரவரிற் சந்தத
நந்தலில் வயித்திய நாதன் சேவடி
சிந்தையு ளன்பொடும் பூசை செய்துளோர். (எ)

பற்பல ராலயம் பரிவி னெய்தியே
யற்பகல் பிரிவிலா தாறு காலமு
முற்பகர் மறைவழி மொழியிற் பூசனை
தற்பர னின்புறப் புரியுந் தன்மையார். (அ)

துதிதரு நித்திய பூசைத் தொன்மையுந்
திதியொடு வாரநாட் சிறப்பு மேன்மையு
மதிகுளிர் மாதமோ டாண்டின் வண்மையும்
விதியுளி புரிதிரு விழாவின் றன்மையும். (கூ)

வேறு

குறைவற வழுவி லாத கொள்கையாச் சிறப்பி னேய
முறைவழி யெவரும் வந்து தொழுதுள முடிவி லின்பம்
பெறவருள் விளங்கும் பேறு பெற்றுயிர் வாழ்க வென்று
மிறைவன் கருணை கூர விடையறு தியற்று நாளில். (க0)

வேறு.

இக்கிர மங்களா லுயிர்க ளின்புற
வுக்கிர மின்றிய கோள்க ளொன்பதில்
வக்கிரஞ் சிறிதுகோ ளடைந்து மாறவே
யக்கிர மந்தவி ரவனி யின்கணே. (கக)

ஒருதுளி யாயினு மூதவி டாமுகில்
கருவறும் படிநெடுங் கால நீங்கவே
பொருவறு முழவர்கள் வினையும் போயதால்
விரவுபைங் கூழ்ச்செயல் விளம்ப வேண்டுமோ. (௧௨)

வளமலி முகில்களும் வறந்து நீங்கிட
விளைவறத் திருவற மெலிவில் யாவரு
முளரெவ ரோவவ ரிலரை யொத்திடத்
தளர்வுறு வெம்பசித் துயரைச் சார்ந்தனர். (௧௩)

வேறு.

புடவி யெங்கணும் வறுமையை யடைந்திடர் பொருந்திக்
கடவுள் வெங்கதிர் வெயி லுறக் கரிந்தபைங் கூழ்போல்
வடவை வெவ்வழற் பசியினா லுயிரெலா மங்கத்
திடவ முங்களுந் தவங்களு மியாவருந் தீர்ந்தார். (௧௪)

வேறு.

மாதருங் கொழுநரும் வாஞ்சை யற்றன
ரந்தா மற்றனர் மைந்த ரன்னைமார்
நீதியி னெறிகளு மன்ன னீங்கினன்
வேதமும் யாகமும் விதியும் போயவே. (௧௫)

இரவல ராயினா ரீகு வோரெலாம்
விரவலர் கொழுநரை மின்ன ரூரெலாம்
பரவிய வயனறி தொழில்கள் பாறின
வுரைபெறு முருத்திரர் தொழிலு யர்ந்தது. (௧௬)

இன்னவா றுலகெலா மிடரு ளெய்தவே
மன்னுயிர் படுந்துயர் விளம்ப வல்லதோ
வன்னதாற் புதுவையு ளந்த ணாளரும்
பன்னியவறுமையுட் பரிவ டைந்தனர். (௧௭)

நேசமும் பத்தியு நிறையு மந்தண
ரீசனை யருச்சனை யியற்று வோர்பல
ராசிலா ரவரிலோர் நாக நம்பியார்
மாசுறு கொடுங்கலி வருத்த நைந்தனர். (௧௮)

வேறு.

உருகிய மனைவி மைந்த ருணவின்றி யுடன்மெ லிந்து
சருகென வுலரத் தாமு மன்னதாத் தளர்வ டைந்து

கருகிய வங்க மாகி கடையறக் கால்க ளோய்ந்தும்
பெருகிய வன்போ டீச னருச்சனை பேணிச் செய்வார். (கக)

சிலங்கொள் பத்தி யோடும் புதுவைவாழ் சிவனை நித்தங்
காலங்க டோறு நேரே கைப்படு திரவி யத்தாற்
கோலங்கொ ளபிடே காதி நிவேதனங் குறைத லின்றித்
தாலங்க ளுய்யும் வண்ணந் தப்பாது புரிய லுற்றார்.   (உ0)

அருந்துதல் கிடைத்த லோர்கா ளருந்துத லின்மை யோர்நா
டிருந்திய மனைவி மைந்தர்க் காண்டொறுஞ் சிந்தை நைந்து
வருந்தியும் புதுவை யீசன் பூசனை வழுவா தன்பிற்
புரிந்திட லன்றி முன்னர் வறுமையைப் புகலா ரன்றே. (உக)

மணிமிடற் றண்ணல் பூசை வழுவிலா தாற்ற வோர்நாட்
பணிவிடை செயற்காற் றீது பரிசனர் மடிமை யெய்தத்
துணிவுடை மனைவி மைந்தர் தாமுமொண் சுத்த ராகி
யணிதிக ழன்பி னோடு மாலயம் விரைவி னெய்தி.   (உஉ)

தண்டில மாதி யாய கொணர்ந்துமுன் சமைய லாற்றி
மண்டிய வபிடே காதி திரவிய மருங்க மைத்துப்
பண்டுபோன் மனைவி மைந்தர் பரிவுட னேவ லாற்றக்
கொண்டபூ சகரு மாட்ட மஞ்சனக் குடமெ டுத்து.   (உ௩)

இனிமையா ரேம தீர்த்தங் கரையினின் றெடுத்துக் கையாற்
கனிதரு மன்பி னோடு முடிமிசைக் கடிதின் வைத்துக் [னார்ப்
குனிவொடு கொணரும் போதிற் புதுவையெங் கோமான் முன்
புனிதனூன் மார்பர் சோர்ந்து குடத்தினைப் போட்டுவீழ்ந்தார்.

செயலறு தளர்வி னெய்துத் திருமுன்னர் வீழ்ந்தோர் தம்மைக்
கயல்விழி மனைவி யாரு மைந்தரும் பதறிக் கண்டு
முயல்வுறு சீத நீரான் முகத்தினிற் றெளித்து வீசி
மயலறப் புரிந்து தூக்கி வைத்தன ரினைப்பு மாற்றி.   (உ௫)

அளிதரு பத்தி மேய வந்தண ரயர்ச்சி நீங்கித்
தெளிதர வெழுந்து மீண்டும் பூசனைச் செயல்கள் யாவுங்
களிதரு மனத்தி னோடுங் கவலின்றி முடித்துப் பேணி
யொளிதரு கேச மோங்கத் திருமுன்ன ருவந்து நிற்ப. (உ௬)

அரியய னறியா வண்ண லசரீரி வார்த்தை யாகப்
புரியுநூன் மார்பா வுன்றன் பூசனைக் குளம கிழ்ந்தேம்

பரிவுறேறினமுமோர்பொற் படிக்காசுவைப்போங்கொண்டே
யுரியரற் பூசை யாற்றி யுய்யென வுரைத்தா னன்றே. (உஎ)

## வேறு.

தீர்த்தனுந் திருவுள முவந்து செப்பிய
வார்த்தையைக் கேட்டுள மகிழ்ந்து பூசகர்
போர்த்திட வுடலுறு புளக மோங்கிடப்
பார்த்தனர் விரைந்துபொற் படியின் மீதிலே. (உஅ)

திண்மையா மாற்றுயர் செம்பொற் காசொன்று
வண்மைசேர் படிமிசை வைத்தி ருத்தல்கண்
டுண்மையா வஞ்சலி யுவந்து செய்தெடுத்
தண்மைசே ரண்ணலா ரருளை வாழ்த்தியே. (உகூ)

உச்சிசேர் கதிரென வொளியி லங்கிய
வச்சிர மணிகுயில் வணிகர் மாளிகை
நிச்சய மளவில நீதி வீதியார்
நொச்சியூர் செலவுள நோக்கி யெய்தினர். (௩௦)

அந்தவூ ரடைந்துயர் வணிக ராவண
முந்துற மயிலனும் வணிகன் முன்னுற்று
னந்தவில் காசவன் கரத்தி னல்கினர்
சிந்தையுள் வியந்தவன் செங்கை வாங்கியே. (௩க)

தூக்கினி னிறுத்தன னுரைத்துச் சோதனை
நோக்கினன் மெய்ம்மைபோ னுவன்று பொன்விலை
யாக்கினன் பணப்பதி னாற ளித்தனன்
போக்கின னுண்மையென் றவரும் போந்தனர். (௩உ)

## வேறு.

அருச்சனை பியற்ற வேண்டுந் திரவிய மமைத்துக் கொண்டு
விருத்தியார் புதுவை யெய்தி விமலனைச் சோட சத்தாற்
றிருத்தமாக் காலந் தோறுந் தினந்தினம் வழிபா டாற்றித்
தரித்திர மகல மைந்தர் மனைவியர் மகிழ்வு சார்ந்தார். (௩௩)

ஈசனை யருச்சித் தேத்தி யித்திற மகலா நின்ற
பூசுரர் மனைவி மைந்தர் புகலருங் கலியை நீங்கித்
தேசுற லுலகோர் கண்டு படிக்காசு வைத்த றோர்ந்து
மாசக லுளத்தி னோர்க ளீசனை வழுத்தல் செய்தார். (௩௪)

புலிபுகழ் நாக நம்பி யாரெனும் புகழின் மிக்கோ
ரலிரொளி மாட நீடும் புதுவைவா ழமல னித்தந்
தவிருத லின்றிச் செம்பொற் படிக்காசு தரவும் பெற்று
நவமுறு பூசை யாற்றி நலிவற வாழ்ந்தி ருந்தார். (௬௫)

## படிக்காசுவைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௦௬௬.

### படிக்காசுவைத்த அத்தியாயச்சுருக்க வசனம்.

அகத்தியமுனிவர் மேன்மைபெற்ற கதையைச் சொன்னோம். இனிப் படிக்காசுவைத்த கதையினைச் சொல்லுவோமென்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினர்:— வேதவோசையுந் தேவார திருவாசகங்களாதிய தமிழ்வேதவோசையும் ஆலயத்தின் வாத்தியவோசையுஞ் சமுத்திரவோசையினை யடங்கச்செய்யுமான்மியமு மின்னும் பலவளமுநிறைந்துள்ள புதுவைத்தலத்திலே சிவபக்தியு நல்லொழுக்கமு மதிதியரை யுபசரிக்குநற்குணமுமுள்ள பிராமணர் பலருள்ளார். அன்றியும் வயித்தியநாதேசுரரை யாறுகாலமும் சிவாகமவிதிப்படி பூசைசெய்யும் ஆதிசைவப் பிராமணருஞ் சிலருள்ளார். அவருள்ளே நித்திய நைமித்திய காமிய பூசை தவறாது ஆன்மாக்களுய்யும்பொருட்டுப் பரார்த்தமாகிய சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கு நாக நம்பியாரொருவர் மிகுந்த பத்தியையுடையவர். இவரது காலத்திலே நவக்கிரகங்களு நிலைதமொறி நடக்கவே மழை யொருதுளியேனும்பெய்யாமல் விளைவற்றுப் பசித்துயரைய டைந்து உலகமெங்கும் வறுமைமேலிடத் தானந்தவமெல்லாங் குன்ற லடைந்தன. அம்மட்டோ? புருஷர்களும் பெண்களுங் காமத்தைமறந்தனர். அரசனும் நீதிதவறினன். யாகம் வேதமில்லாமற்போயின. கொடுப்போரெல்லாரும் வாங்குவோராயினர். பிரமனும் விஷ்ணுவுந் தொழில்களை இழந்தனர். உருத்திரரது தொழிலேயிருந்தது. இவ்வனங்கொடிய க்ஷாமகாலத்திலே மேற்கூறிய நாக நம்பியார் தமது மனைவி மக்களுடன் பசியால்வாடித் தளர்வடைந்துஞ் சிவபிரான் பூசைப்பணியிடையிற் சிறிதுங்குறையாது ஆறுகாலமுந் தமது கையிலுள்ள திரவியத்தாற் பூசை செய்துவந்தனர். அப்படிச்செய்துவரவரக் கைப்பொருளெல்லாங் குறைந்து உணவுக்கிடமின்றி மனைவி மக்கள் வருந்துவதைக் கண்டு தாமும் வருந்தியும் பூசைவழுவாதுசெ

ய்து பிறருக்குத் தமது வருத்தத்தைக்காட்டாது பசிப் பிணியைப் பொறுத்து வந்தனர். ஒருநாட் பூசைக்கு நைவேத்திய முதலிய வைகளை மனைவிமக்களா லமைக்கும்படி சொல்லிவிட்டு ஏம தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து திருமஞ்சனமெடுத்துவரும்போது சமக்க வலியில்லாமற் சிவலிங்கப்பெருமான்முன்னர்க் குடத்தினைப்போட்டு வீழ்ந்தனர்.

அதனை அந்த நம்பியார் மனைவியாரு மைந்தருங்கண்டு பதறிவந்து சலத்தைக்கொண்டு முகத்திலே தெளித்துத் தூக்கிவைத்து இளைப்பாற்றினர். பின்னர் நம்பியார் திருமஞ்சனங்கொண்டுவந்து அபிடேகம்பண்ணியலங்காரஞ்செய்து வழக்கப்படி வயித்தியநாதரைப்பூசித்துவணங்கி மகிழ்ந்துநின்றனர். அப்பூசனையையுவந்து அசரீரிவாக்காகவயித்தியநாதர் "அன்பனே! துன்பமடையாதே. நினக்கோறுமொரு செம்பொற்காசு படியிலேவைப்போம். அதைக்கொண்டுபோய் உன்னுடைய வறுமையைப்போக்கி நம்மைப் பூசனைசெய்து வருவாயாக" என்று கட்டளையிட்டனர். அதுகேட்டு நம்பியார் திருவருளைவியந்துவந்து படியிலே பொற்காசு இருக்கக்கண்டு வணங்கி யெடுத்துக்கொண்டு வெளியேவந்து கொச்சியூரென்னும் கிராமத்துக்கு அத்தக்காசினைக்கொண்டுபோய் மயிலனென்னும் பெயரையுடைய வணிகனிடங்கொடுத்து விலைப்படுத்தினர். அவ்வணிகனும் உரை நிறை பார்த்துப் பதினுறுபணம் பொற்காசுக்கு விலையாகக்கொடுத்தனுப்பினன். அதை உண்மை விலையென்று நம்பி நம்பியாரும் வாங்கிக்கொண்டுவந்து முன்போலவே சிவபிரானருச்சனைக்கு வேண்டும் பூசாதிரவியங்களெல்லாம் ஈட்டிச் சோடசோபசாரத்தாற் பூசித்துத் தமது வறுமையைப்போக்கி விளங்குவதையும் தினந்தோறும் வயித்தியநாதர் படிக்காசு வைப்பதையும் உலகத்துள்ளோர்கண்டு திருவருளை வியந்து தோத்திரஞ்செய்தனர். நாக நம்பியாரும் அவ்வாறே களிகூர்ந்திருந்தனர்.

பதின்மூன்றாவது

# காசுவாசி

# வாங்கிக்கொடுத்த அத்தியாயம்.

---

தந்தையாய்ப் புதல்வ ராகிச் சாற்றிய பேத மாகி
நந்தலில் குரவன் சீட னவொடு கனவு மாகிப்
பந்தமாய் முத்தி யாகிப் பகர்விதை முளையு மாகி
யிந்தவா றிசைந்து வேறும் புதுவைவா ழிறைவா போற்றி.(க)

வேறு.

மாசில் விப்பிரன் சிவன்படிக் காசுவைத் ததனை
யேசி ஞெச்சியூர் வணிகன்பா லீயவவ் வணிக
னாசி லுள்ளதை யுதவிடா னவனிடை யமலன்
காசு வாசியை வாங்கியே யருள்கதை யுரைப்பாம். (உ)

வேறு.

பூசகர் மெலிவு நோக்கிப் புதுவையம் பதியுண் மேய
வீசனா ருளுங் காசை யெடுத்தய ஞெச்சி யூரிற்
பேசிய வணிகற் கீய வவன்றரு பணத்தைப் பெற்று
நேசமார் பூசை செய்து மகிழ்வுற நிகழு நாளில். (ங)

வேறு.

மைந்தரு மனைவியு மனத்து ளன்பொடு
சந்ததம் பணிவிடை தகுதி யாற்றவே
முந்தனைப் பூசனை முறையிற் செய்தவர்
சிந்தையின் புறச்சில நாள்கள் சென்றபின். (ச)

வேறு.

கருணையங் கடவுள் பூசை நம்பியார் கனவி னெய்திப்
பொருணயங் காசு நாய்கன் குறைவிலைப் பொருளை யீந்தா
னிருணனி நீங்கக் கோயில் வாய்தலி னெய்து நாமு
நெருணயத் தோடும் வந்து தரவருள் செய்து மென்றார்.(ரு)

கனவிடை யிறைவர் வந்து கழறிய கருணை கண்டு
நனவுற வெழுந்து பூசை யந்தணர் நனிவி யந்து
மனமகி ழுவகை பொங்க வள்ளலார் கிருபை போற்றித்
தினகர னுதிக்கு முன்னர்க் கோயிலின் வாய்தல் சேர்ந்தார்.

வேறு.

அந்த நால்வகை யெழுவகைத் தோற்ற மாய
வுந்து பேதக வுருவெலா மெடுத்தசை யொருவர்
சிந்தை யன்பொடு வணிகராய்த் திருவுரு வெடுத்து
வந்த னர்திருக் கோயிலின் வாய்தலின் மகிழ்ந்து. (எ)

செவியி லிட்டபன் னவமணிப் பணியுஞ் சேரப்
புவிப கர்ந்திடு கண்டிகை மார்பிடைப் புரள
வவிரொ ளிப்பணி மோதிரம் விரல்களி னலங்க
விவர்தல் சென்னிமேற் செம்பொனாற் பாகையு மிலங்க.

தரித்த சோமனு மிருகணைக் கால்வரை தயங்க
விரித்த திண்புயத் துத்தரீ யத்திரள் விரியப்
பரித்த நீற்றொடு சந்தனப் பொட்டொளி பரப்ப
வரித்த பாதத்தி னவமணிப் பாதுகை மன்ன. (கூ)

வேறு.

குடையொடு விசிறி கையிற் கொடுசில சிறுவர் சாரத்
தடையறு தார்பூ லாதிச் சுருள்சிலர் சார்ந்து நல்க
விடைதவச் சூர னுக்கன் றளவிலா வண்ட மீந்த
விடையவன் காசு வாசி வாங்கிட வெளியில் வந்தார். (க0)

வந்துமுன் வணிக வேடத் தெழுந்தருள் வரதர் தம்மை
யந்தமி லன்பு பொங்க வடியிணை வணங்கிப் போற்றிச்
சிந்தைமெய் மகிழ்ந்து நாக நம்பியார் பின்னே செல்ல
முந்துநான் மறைநட் டெட்டா வணிகருமுன் னர்ச்சென் றார்.

பச்சிம திசையின் மேய புதுவையம் பதியை நீங்கி
கொச்சியூர்க் கேகிச் செல்வ நுவலொணு வாவ ணத்திற்
பொச்சமார் வணிகர் தோன்ற வெழுந்தெதிர் பொருந்திநாய்க
ருச்சிமேற் செங்கை கூப்பி யிருக்கையு முதவி நின்றார். (கஉ)

வணிகர்தம் வேடங் கொண்ட விறையவர் மனம கிழ்ந்தே
யணிதிக ழாச னத்தி லிருந்தன ரனைத்து ளோரும்
பணிவுற விருந்தார் நித்தம் படிக்காசு கொண்டு செய்பொன்
றணிவுற நல்கு நாய்க னங்கணோர் சாரி ருந்தான். (கங)

அவனிடை முன்போ னம்பி யார்படிக் காசு நல்க
வுவனதைக் கொண்டு முன்போ லுதவிய பொருளை நோக்கி

நவமுறு வணிகர் காசை வாங்கியந் நாய்கர் முன்பு
தவறிலார் நிறுத்து ரைத்துக் காட்டினர் சபையோர் கண்டு.

விலையறை வாசி கூடப் பெறுவனை விளம்ப லோடுந்
தலைகவிழ்ந் திருந்தான் முன்னை மயிலனுஞ் சாற்ற லின்றி
பலைவுற வணிகன் றன்னை யவையுளோர் சினந்து வைதா
ரலைவுறு வணிக வேடத் தமலரு மன்ன காலை. (௧௫)

பணிவிடை புரியு நூலோர் பரிவையு நோக்கி வஞ்ச
வணிகனு லோப மேய வாட்டமு நோக்கி யின்னே
ணணிபெறுங் காசு வாசி யெளிதினி லன்பர்க் கீயான்
றுணிபவன் வஞ்சம் போலுஞ் செயலொரு சூட்சி செய்வார்.

தஞ்செய லெவையுஞ் செய்து தாமல வுயிரே யென்னுந்
தென்செய லுடையார் நீங்கா ருயிரையுந் தேடச் செய்வார்
மன்செயல் வஞ்சங் கள்ள மாலயற் கறியொ ணாதா
லென்சொலவுணர்ந்தமேலோரிவையெலாங்கருணையென்பர்.

நசையறு மோடுங் கல்லு நவமணித் திரள்க ளாக
விசைவுற வணைந்த பையொன் றெடுத்துமுன்னெவருங்காண
நிசமுற வைத்துச் சோதி நிகழ்மணித் திரளைப் பெய்தார்
திசைதொறும் விளங்க வாய்ந்த கருந்துகி னடுவட் சேர. ()

வேறு.

ஒன்பது கோள்களு மொருங்கு கூடிய
தென்பது யானநன் மணிகள் யாவையு
மன்பொடு செம்மணி யாதி யாகவே
பொன்படு முறையொடு பொருந்த வைத்தனர். (௧௯)

வைத்தநன் மணிகளை வணிகர் கண்டுநோ
மித்தகு மணிகளை யெங்குங் கண்டிலேஞ்
சுத்தநன் மணிவிலை சொல்லு கென்றலு
மத்தரு நீவிரே யாய்ந்து கூறுமின். (௨௦)

வேறு.

எனமறை பகரும் வாயா லின்புற வியப்பக் கேட்டுக்
கனநிதி வணிகர் யாருங் கருத்தினு ளுவகை யெய்தி
யனகராம் வணிகர் தம்மை யஞ்சலி புரிந்து போற்றி
யினமணி விலைக ணீரே யியம்புதி ரெனவி யம்ப. (௨௧)

கூறிய வணிகர் மாற்றங் கேட்டயர் வள்ளல் கூறும்
வீறுடை மணிகள் யாவும் விலையிலா மணிக ளன்றோ
ஊறிய வன்பால் யாமு முமக்கெளி தாக வீவோந்
தேறிய விலையீ தென்று கொளும்வகை நிதியெண் செப்ப. ()

வணிகர்கள் பலருங் கேட்டு மணிகொள விரைதல் கண்டே
யணிபடிக் காசு கொண்ட வஞ்சக மயில னுங்கே
திணிமணி யவையும் யானே கொள்வனென் றுறுதி செப்பக்
கணிதமில் கருணை வள்ள லன்றெனக் கருத்தி சைந்தார். ()

இல்லிடை மயிலன் சென்றே யிருநிதி கொணர்ந்து நல்க
வல்லமர் கண்டத் தெந்தை யருச்சகர் பாலீ யென்னச்
சொல்லிய நிதியை நாய்கன் மறையவர் பாற்சொ ரிந்தான்
வில்லுமிழ் மணிகள் யாவும் வணிகன்பால் விமல ரீந்தார்.

மற்றுள வணிகர் யாரும் விடைகொடு மனையிற் போந்தார்
கற்றைவார் சடைம றைத்த கருணைசேர் வணிகர் காளை
யற்றைநா ளெவருங் காணப் புதுவைமா நகர டைந்து
குற்றமி லடியார் போற்ற வுயர்திருக் கோயில் புக்கார். (௨௫)

வஞ்சமா மணிப கர்ந்து வணிகன்பாற் பொருளை வாங்கி
வஞ்சமின் மறையோர் தம்பாற் பூசனை வளனுக் கீந்தார்
வஞ்சர்நெஞ் சணுகா வீசர் வணிகனை யாள வைத்த
வஞ்சமெய்க் கருணை யன்றி வேறொரு வஞ்ச மின்றே. (௨௬)

மறையவர் நிதியை வாங்கி யுளமிக மகிழ்ந்து பூசை
குறைவறமுயன்றிருந்தார் வணிகனுண்மணியைக்கொண்டு
பிறிதுள கவலை நீங்கி யூதியம் பெற்றோ மென்றே
நிறைமகிழ் வோடி ருந்தா னற்றைநா ளிரவு நீங்க. (௨௭)

மற்றைநா ளுதயந் தன்னின் மணியெலாம் பொதிந்த பையை
யுற்றெடுத் துவந்து நோக்கித் துகிலிடை யொழுகப் பெய்தா
னெற்றென வுரைக்கே னேடுங் கல்லுமா யிருத்தல் கண்டான்
பற்றிலா மயில னெஞ்சம் பதறினன் கதறிச் சோர்ந்து, (௨௮)

திகைத்தனன் முன்ன ரீட்டு மடிப்பையுந் தேடிக் காணு
னகைத்தனன் முடிப்ப சைத்து நவிலரு மாய மென்று
முகைத்தன மனையா ளோடு மொழிந்தனன் றுயருண் மூழ்கி
யுகைத்தனன் வணிகர்பாற்சென் றறைந்தன னவருங்கண்டார்.

என்னையற் புதமீ தென்ன வேவருந் துயர மெய்தி
யுன்னிய வுள்ளந் தேறி வணிகரு முரைப்ப தானார்
பொன்னெடுங் காசு கொண்டு விலைப்பொருள் குறைத்துநல்கு
மின்னலாற் புதுவை யீச ரிவ்வி[illegible] வஞ்சஞ் செய்தார். (௩௦)

நங்குல வணிகர் போலு நாதனே யிங்கு நண்ணித்
தங்கிய வாவ ணத்திற் சார்ந்தெழுந் தருளி நல்குஞ்
செங்கன கத்தி னெய்ந்து திகழ்படிக் காசை வாங்கி
யங்கையா லுரைத்துத் தூக்கு மமையத்து முணர்ந்திலேமால்

வேறு.

காசு வாசியை நல்கென முன்னவன் கழற
மாசு லோபத்தால் வாசியும் வழங்கினே மிலையாற்
றேசு லாவிய வற்புத நவமணித் திரளைத்
தூசி டைப்பெய்து சொற்றிடுஞ் சோரமு முண்டேம். ()

இன்ன தன்மைக ளியாவையு முணர்ந்திடி வின்று
முன்ன வன்றிரு வருளெனத் தோற்றின முன்ன
ரன்ன வாறுளத் தறிகிலே மன்புகள் புரியேம்
பன்னி யாவதெ னினியளப் பில்பிழை பட்டேம். (௩௩)

வாச வன்பணி நாதனே வணிகராய் நண்ணிப்
பேசு தன்மையுஞ் செய்கையு மற்புதம் பெருக்க
வீச னென்றுளத் தன்புசெய் திடவறி வின்றாய்
மோச முற்றன மனைவரு மூடராய் முற்றும். (௩௪)

வள்ள லார்வழக் குடன்படிக் காசினுள் வாசி
யுள்ள தீகென வுரைத்திட நல்கிடா தொழிந்த
கள்ள மாருமித் தீவினை யகன்றிடக் கடிதி
னெள்ள லில்பணிக் குதவுவோ நம்பொரு ளவையும்.

வேறு.

என்றுளத் துணர்ந்து வஞ்ச மயிலனை யிகழ்ந்து நோக்கிக்
குன்றுநின் வஞ்சத் தாலுன் னிதியெலாங் குறைந் தெக்காலு
மொன்றுதீ வினையு முற்றாய் வேறினி யுரைப்ப தென்னே
சென்றினிப் புதுவை நாதன் சேவடி தொழுவோ மென்று. ()

அறனுடை வணிகர் யாரு மொருங்குடன் சார வன்னோன்
றிறமகன் றவல மேய சிந்தையு மெலிந்து வாடி

மறையவர் தொழுது போற்றும் புதுவைமா நகருள் வந்தே
யிறைவயித் தீசர் பாத மூமையம்மை யடியி றைஞ்சி. (௩எ)

பங்கயற் கரியாய் போற்றி பரிவுளோர்க் கெளியாய் போற்றி
சங்கையில் பிழைபொ றுக்குந் தயாவுடைத் தந்தை போற்றி
துங்கமால் விடையாய் போற்றி துணிமதிச் சடையாய் போற்றி
மங்கையோர் பங்கா போற்றி வயித்திய லிங்கா போற்றி.(௩அ)

அறியாமையுடையோமென்று மன்பிலோமிழைத்ததீங்கைக்
குறியாது காத்தி ரங்கிக் கொடுமையார் வஞ்ச மேய
சிறியோர்கள் புரிந்த குற்றம் பொறுப்பதே சிறந்த வன்பு
பிறியாத கருணை மேய பெம்மானே யென்று போற்றி. (௩கூ)

அனகனு தருளைப் பெற்றே யநச்சக நிடத்திற் சென்று
புனைமல ரடியிற் றாழ்ந்து நெஞ்சுடன் மூகம்பு லர்ந்து
கனகவ லைக்கு ளாழ்ந்து வணிகர்கள் கழற லுற்றார்
நினைதொறுந் துயர நல்குங் குற்றங்க ணிகழ்த்தி னோமால். ()

ஐயநின் காசை வாங்கி வஞ்சக மாற்று நாய்கள்
கையுறு பொருளை யெல்லா மொன்றறக் கடிதி னீந்து
மெய்யெனமணியைக்கொண்டுவியந்துடன் மனையில்வைத்தாம்
மையவி லோடுங் கல்லு மாயின மற்றை நாளில். (சுக)

அன்னது வன்றி யும்பின் மடிப்பையு மகன்று போய
தின்னது புதுவை யீசர் திருவிளை யாட லென்றே
யுன்னினே மன்றி வேறின் றெனவுளத் துறுதி யுற்றோம்
பன்னருங் குற்ற மெவ்வா றொழிந்திடு மெனப்ப கர்ந்து.(சுஉ)

அற்பராம் வணிகர் மீண்டு மந்தண ரடியில் வீழ்ந்து
சொற்பதங் கடந்த தூயோன் வணிகரா யெம்முன் றோன்ற
முற்பெருந் தவங்கள் செய்தோ மெனவெதிர் மொழிந்துநின்று
தற்பரன் புதுவை மேய தம்பிரா னெமக்கு நீரே. (சுஙு)

வேறு.

என்று கூறியிப் பிழைபொறுத் தருண்மென வியம்பிக்
கன்று சிந்தையிம் மயிலனைக் காமினென் றுரைப்ப
வொன்று மன்பொடு தம்பியர் வணிகரோ டுரைப்பார்
நன்று பொன்கவர் வோர்கதி நரகமே யன்றோ. (சுசு)

அன்றி நான்மறை கூறிய பாதக மைந்து
ளொன்று பொன்கவர் வன்றியு முயர்சிவ பூசைக்
கென்று தென்புது வைப்பதி யீசனு ரெம்பா
னின்ற வன்பொடு மருள்படிக் கதுசென நின்பால். (சரு)

கூறிய மாற்றங் கேட்டுங் குறித்திடாய் கொடுமை செய்யத்
தேறிய விதய மேய வஞ்சகச் சிவத்து ரோகி
யூறிய ஞானத் தால்வீ டுற்றோராங் குறைதல் போலு
மேறுத விலைநீ யென்று மெரியுறு நரக நீத்தே. (சுசூ)

பூசனை புரிந்தோர் செல்வம் புசித்துளோர் புவியி லென்று
மீசனைப் பணியா தாரே வறுமையெய் துநர்க ளென்று
நீசரு மறிவ ரந்த வநுபவ நீதான் கண்டுங்
கூசுத லின்றிச் செய்தா யிரண்டொற் கொடுவி லங்கே. (சுஎ)

இம்மையிற் புரிந்த பாவ மறுமையு ளெய்து மென்று
செம்மைபோற் காவு செய்தா யதுவன்றிச் சிவத்து ரோக
மம்மையி னளவு மீசன் பொறுத்திடா தருந்தச் செய்வான்
மெய்ம்மையா விம்மை யுள்ளே திருவுமா யுளும்விட் டேகும்.

நிந்தையி லன்போ டிட்ட பச்சிலை நீரு நோக்கி
யந்தகன் சிதைய நூலோற் காயுளை வளரச் செய்தான்
முந்தநெய் யெலிய ருந்த மூண்டெரி சுடரைப் பார்த்து
நந்தவி லுலக மூன்று நல்கின னெவர்க்கு நாதன். (சுகூ)

சிற்பரன் பணியோ ரற்ப வணுவேனுஞ் செய்து ளோர்க்குச்
சொற்பயில் செல்வ நல்கி யின்னருள் சுரந்து காக்கு
மற்பமாச் சிவத்து ரோக மணுவள வேனு மாற்றி
லுற்பவ மின்றி மீளா நரகிடை யுறையச் செய்வன். (௫0)

இத்திற மூலகோர் கேட்பப் பறையடித் திடுதல் போலும்
பத்திர மறைகள் கூறு மூலையுணும் பால ரேனு
மத்திற மறிவரந்தோ மானிட வாக்கை கொண்டு
சித்தமு ணரா தேடா வென்செய்தாய் தீய நாய்கா. (௫க)

என்னநான் மறைவல் லோரு மித்திறம் வெகுண்டு கூறப்
பொன்னெடுங் காவு செய்த வணிகனும் புகல்வ தின்றித்
தன்னுள முடைன டுங்கித் தளர்வுற மயங்கிச் சாம்பி
யின்னலு ளாழ்ந்தன் னேர்த மடிமிசை யிறைஞ்சி வீழ்ந்து. ()

நெடும்போது தாழ்ந்து பின்ன ரந்தணர் நேசம் பெற்றுச்
சுடும்பாத கஞ்சேர் நெஞ்சன் சொற்றடு மாறச் சார்ந்து
கொடும்பாவம் புரிந்து தீய குற்றமே யடைந்தே னப்பாற்
படும்பாடு முணரே னென்னைக் காத்தலே பரமு மக்கே. (௫௩)

ஆதலா லடியேன் றாதை மூதாதை யன்பி னீட்டு
நீதமார் நிதியத் தோடு நிகழுட லாவி மூன்றும்
பேதக மின்றி யீவேன் பெரும்பிழை பொறுத்துப் பேணித்
தீதுறு நரக மெய்தாத் திறமருண் மெனப்ப ணிந்தான். (௫௪)

அங்குள வணிகர் யாரும் வந்தவ ரனைத்து ளோரும்
பங்கமின் மறைவ லாளர் பதத்திடை வீழ்ந்து போற்றி
யெங்களை யாள வேண்டி யிப்பிழை பொறுத்து நல்குந்
துங்கநீ ணிதியங் கைக்கொண் டவனையும் புரக்க தூயீர். (௫௫)

அனைத்துளோ ரிவ்வா றோத வணிகனை யன்பா னோக்கி
நினைத்துரை யுண்மை கண்டு நெஞ்சினுட் கருணை கூர்ந்து
வினைத்துணை வணிகற் கூவித் திருநீறு வியந்து நல்க
மனத்துய ரகலப் பொன்னூர் மடிப்பையும் வீழ்ந்த தன்றே.

கண்டன ரதிச யித்தார் சிவன்பெருங் கருணை போற்றிக்
கொண்டனர் புகழைக் கூறி மடிப்பையைக் கொண்டிருந்தார்
விண்டன ரந்த ணாளர் வணிகனை விரும்பி நோக்கி
யண்டனைப் பணிந்து நீடு நிதிபெலா மரன்ப ணிக்கு. (௫௭)

கொடுத்துநீ பதியுள் வைகிக் குழகனை நெடுநாட் போற்றில்
விடுத்திடும் வினைக ளென்று விதியுளி யுரைக்க நாய்க
னடுத்தன ரருகு சார வந்தணர் மொழியு மாற்று
லெடுத்துபர் பொருளை யெல்லா மீந்திட வரவ ழைத்து. ()

அண்ணலா ருருச்ச ஞாதிக் கருமறை யவாதம பக்க
லெண்ணிலா வன்போ டீந்தான் மற்றுளோ ரெய்தி வேட்ப
நண்ணிய வுளத்தா றீந்து வறுமைசேர் நலிவு நீக்கிப்
புண்ணியப் புனித மேய சிவகங்கைப் புனலுண் மூழ்கி. (௫௯)

சந்நிதி முன்பு சென்று தாழ்ந்துதாழ்ந் தெழுந்து ளத்திற்
பின்னிய வன்பி னோடுஞ் சிவகங்கைப் பிள்ளை யார்தாள்
சென்னியி னுறவ ணங்கிக் கோபுரந் தெரிசித் தேத்தி
யன்னையி னன்பு மேய வுமையுட னரனைப் போற்றி. (௬௦)

**வேறு.**

திருவலகு திருமெழுக்குத் திருவிளக்குத் திருமாலை
மருவுபணி புரிவோர்க்கு மனமகிழ நிதியுதவிப்
பொருவரிய பரிவட்டம் பூடணமா திகளாய
வருமைபெறு பணியாய்ந்து நிதிகள்சிறி தலைக்கருளி. (௬௧)

**வேறு.**

தேடிய பொருள்க ளுள்ள வவையெலாஞ் சிவன்ப ணிக்கே
நீடிய வன்பி னோடு நிலைபெற வருளி நாய்க
னாடிய காலந் தோறு நசையுறத் தெரிசித் தேத்திக்
கூடிய வாறுண் டிவ்வா றகற்றிடா விரதங் கொண்டு. (௬௨)

வண்மைசேர் புதுவை மேய வயித்தியநாதர் பாத
மண்மையா நீங்கா தேயு மனைசிவ காமி பாத
முண்மையா வுவந்து போற்றி வினையெலா மொழிந்து பின்னுந்
திண்மைசேர்செல்வமுண் போற்றினைத்திடப்பதியிற்சேர்ந்தான்.

**வேறு.**

அண்ண லார்படிக் காசுவைத் தருளத னாலு
நண்ணு காசினுள் வாசியை யருணலத் தானுங்
கண்ணு தற்குறு பெயர்படிக் காசரென் றுலகி
லெண்ண யார்வமா யுரைப்பர்மா முனிவர ரென்றும். ()

**வேறு.**

நிருமல னபிடே காதி நிவேதனஞ் சிறப்பி னெய்தித்
திருவுளங் குளிர்த லாடுஞ் செகமெலாங் குளிரக் கூடுங்
கருமுகி னிகரமெய்திக் கடன்மலை புடவி யெங்குந்
திரள்படச் சொரிந்து பொங்கிக் காலமுஞ் செழித்த தன்றே.

ஏரியுங் குளனு மோடை யெங்கணும் பெருகி நன்னீர்
சீரிய செந்நெல் கன்னன் மற்றுள வளங்கள் சேர்ந்து
நீரியல் கதலி பூகந் தெங்குட னிகழுஞ் சோலை
வேரியந் துடவை யெங்கும் வியன்பெற மேன்மை மல்க. ()

அவனியு ளிலம்பா டெங்கு மகன்றிட வுயிர்க ளியாவு
முவமையில் களிப்பி னெய்திப் பல்கிய வுவப்பி னோடுஞ்
சிவனுறை பதிக ளியாவும் பூசனைச் சிறப்பு வாய்ந்த
நவமிகும் வழிபா டாற்றி யருச்சகர் நலத்தின் வாழ்ந்தார். ()

**காசுவாசி வாங்கிக்கொடுத்த அத்தியாயம்**
**முற்றிற்று.**

ஆகத்திரு விருத்தம் ௧௧௬௫.

## காசுவாசிவாங்கிக்கொடுத்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சிவபெருமான் தம்மைப்பூசித்த அருச்சகருக்குப் படிக்காசளித்த சரிதஞ்சொன்னோம். இனி, அந்தக்காசினை விலைக்குக்கொண்டு வணிகன் மோசஞ்செய்த வாசிப்பொருளைவாங்கி யருச்சகருக்குச் சிவபிரான் கொடுத்தருளிய சரிதங்கூறுவோமென்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லுவாராயினர்:— மேற்கூறிய படி அருச்சகர் படிக்காசினாலே வறுமையையகற்றிச் சிவகாமியம்மை சமேதராகிய சிவபிரானைப் பூசித்துவருநாளில் சிலநாட்சென்ற பின்னர் கிருபாசமுத்திரமாகிய அவ்வெம்பெருமான் அருச்சகர்சொப்பனத்திலெழுந்தருளி "நாம் உனக்குக்கொடுக்கும் படிக்காசு விலையுயர்ந்தது. அதற்குச் சரியானவிலைகொடாமல் கொச்சியூர்ச்செட்டியுன்னை யேமாற்றிவருகிறான். நாளைக்காலையிலே கோயில்வாயிலுக்கு நீவந்துசேருக. நாமுங்கூடவேவந்து சரியான விலைப்படிபணம்வாங்கிக்கொடுக்கிறோம்" என்றருளிச்செய்து மறைந்தனர். அவரது ஆஞ்ஞையின்படியே மனமகிழ்ந்து மறுநாட்காலையில் அருச்சகர் கோயில்வாயிலுக்குவந்து காத்திருந்தனர். அது தெரிந்து நால்வகைத்தோற்றமு மெழுவகைப்பிறப்புமாகிய வடிவமெல்லாங்கலந்துநிற்கும் சிவபிரான் வணிகவேடங்கொண்டு கோயிலைவிட்டு வெளியேபுறப்பட்டுவந்தார். அவரை யருச்சகர் தரிசித்து அவரது ஆஞ்ஞையின்படி பின்னேநடப்ப வணிகராகிய சிவபிரான் கீழ்த்திசையிலுள்ள கொச்சியூரை, நோக்கிச்சென்று உள்புகுந்து வணிகர் வீதியிலே நடந்தனராய் அங்குள்ள தனிகராகிய வணிகர்கள் கண்டு உபசரித்து ஆசனங்கொடுக்க அதிலே வீற்றிருந்தனர். அந்த வணிகர் கூட்டத்திலே படிக்காசுவாங்கித் தினந்தோறும் விலைகுறைத்துக் கொடுத்துவந்த வணிகனுமொருபக்கம் வந்திருந்தான். அப்படியிருக்கும்போது நம்பியார் வழக்கப்படி படிக்காசையெடுத்து அவன் கையிலேகொடுத்தனர். வணிகனுமந்தக்காசை வாங்கிமுன்போலப் பதினாறுபணத்தை யெடுத்துக்கொடுத்தான். பொய்வணிகராய் வந்திருக்குஞ் சிவபிரான் அதுகண்டு மனம்பொறாதவராய் அந்தப்படிக் காசைக் கையிலேவாங்கி மற்றைய வணிகர்களுக்கு முன்னே யுரைத்து நிறுத்துக்காட்டி "விலைமதியும்" என்றருளிச்செய்தனர். அவர்களதைவாங்கிப்பார்த்து இருபத்துநாலுபணம் பெறுமென்றனர்.

அதுகேட்ட மயிலனென்னும் வணிகன் தான் தினந்தோறுஞ் செய்துவந்த களவு வெளிப்பட்டதேயென்று தலைகவிழ்ந்து வாய் பே

சாதிருந்தான். அதைப் புதிதாய்வந்த வணிகர்பார்த்து இவன் முழு மோசக்காரன், இலேசிலே பணங்கொடுக்கமாட்டான் இவனுடைய வஞ்சகம்போல நாமுமொரு வஞ்சகஞ் செய்யவேண்டுமென்று திருவுளங்கொண்டு ஓடுகளையுங் கற்களையும் நவமணிகளாக ஒரு பையினுள்ளேவரும்படி செய்து பையையவிழ்த்துக் கரியவஸ்திரத்திலே நவக்கிரகங்களைப்போலப் பிரகாசிக்கும்படி சொரிந்து ஆங்குள்ள வணிகர்களை நோக்கினர். அவர்கள் அம்மணிகளைக்கண்டு வியந்து இத்தன்மையுடைய மணிகளை யெங்கும் நாங்கள் கண்டதில்லை. விலை கூறுமென்றனர். வேதங்களை யருளிச்செய்த திருவாக்கால் அவ்வணிகரும் அவர்கள் வாங்கிக்கொள்ளத்தக்க விலையொன்றைக்கூறினர். அப்போது நம்பி யாருக்கு மோசஞ்செய்துவந்த மயிலனென்னும் வணிகன் நானே முழுவதும் வாங்கிக் கொள்ளுகிறேனென்று வீட்டுக்குப் போய்த் தன்னிடத்திருந்த திரவியமெல்லா மெடுத்துக்கொண்டுவந்து உடையவரது ஆஞ்ஞையின்படி நம்பியார் கையிலே கொடுத்துவிட்டு எல்லா மணிகளையும் பெற்றுக்கொண்டு போயினன். பின்னர் நம்பியாருடனே வணிகராகிய வயித்தியநாதர் தமது கோயில் வந்தெழுந்தருளி யிருந்தனர்.

மறுநாட் காலையிலே மயிலன் விலைக்குவாங்கிய மணிகளைப் பொதிந்து வைத்திருந்த பையை யவிழ்த்துப்பார்க்க அவைகள் ஓடுங் கல்லுமாயிருந்தன. உடனே முன்னிருந்த மடிப்பையுங் காணாமற் போகக்கண்டு தன் மனைவியுடனே மனம்பதறித் திடுக்கிட்டு இதென்ன மோசமென்றழுது எல்லா வணிகரிடத்திலு முறையிட்டுச் சொன்னான். அவர்களும் வந்துபார்த்து இதென்ன அற்புதமென்று துன்பமுற்று ஆலோசித்து இவ்விதம் வஞ்சகஞ் செய்தவர் நம்பியாருக்காக வயித்தியநாதேசுரரேயென்று தெளிந்து மயிலனைநோக்கித் "தினந்தோறு நீ நம்பியார் பொருளை யபகரித்ததனாலுனக்கு இந்தத் தீங்கு சம்பவித்தது. நமக்குநேரே எம்பெருமான் நம்மவரைப்போல வேடங்கொண்டு வந்திருந்ததை யறியாமற் போனோமே நாங்கள் சொன்னபடி கேளாமற் போனீரே" என்று மயிலனைக் கோபித்து இனி யிந்தக்குற்றந்தீர்வதற்கு நம்முடைய பொருளெல்லாந் திருப்பணிக்குக் கொடுத்துவிடல் வேண்டுமென்று வணிகரெல்லாரும் புதுவையை நோக்கிவர, மயிலனுங்கூடவேவந்து வயித்தியநாதரை வணங்கித் தாழ்ந்தெழுந்து தோத்திரஞ்செய்து அவரது கருணையைப்பெற்று அருச்சகரிடஞ் சென்றனன். வணிகர்யாவரும் அருச்சகரைப்

பணிந்து நடந்த செய்திகளையெல்லாஞ் சொல்லிச் "சுவாமீ! உம்முடைய மகிமையை யறியாமற்போனோம், உம்முடைய பொருட்டாலன்றோ, புதுவைநாயகரெங்களிடமெழுந்தருளத் தரிசிக்கப்பெற்றோம். எங்களுக்குப் புதுவைநாயகர் நீரேயாதலால் உமக்கு வஞ்சஞ்செய்த மயிலனைக் காக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதுகேட்டு நம்பியார் மயிலனைநோக்கி "அடாமூடா! பொன் களவுசெய்தவர் நரகத்தை விட்டொருநாளு நீங்கார் புதுவைநாயகரருளிச்செய்த படிக்காசென்று சொல்லியுந் திருட்டுச்செய்த சிவத்துரோகி! யென்னபாதகஞ் செய்துவிட்டாய்" என்று இகழ்ந்தனர். மற்றைப்பிராமணர்களும் அங்ஙனமே யிகழ்ந்தனர். மயிலன் நடுநடுங்கிக் கதறி யருச்சகர் பாதத்திலே வீழ்ந்து "சுவாமீ" அடியேன் மூதாதையீட்டிய பொருள்முதல் கையிலுள்ள திரவியமெல்லாம் உடனுயிருடனே கொடுத்துவிடுகிறேன் அடியேனை நரகத்தில் விழாதவண்ணந் தடுத்தாட்கொள்ளவேண்டும்" என்று விண்ணப்பித்தான். மற்றை வணிகர்களும் அப்படியே பிரார்த்தித்தனர். அருச்சகர் மனமிரங்கிக் கருணைகூர்ந்து மயிலனையழைத்துத் திருநீறளித்தனர். அப்போது முன் காணாமற்போன மயிலனது பொன் மடிப்பை எதிரேவந்து விழுந்தது.

அது பார்த்தவரெல்லாரு மதிசயித்துச் சிவபிரான் றிருவருளை வியந்து போற்றி அவரது புகழைப்பேசினர். மயிலனுந் தன்னுடைய வீட்டிலுள்ள பொருளையெல்லாம் வரவழைத்துப் பொன்மடிப்பையுடன் அருச்சகரிடந் திருப்பணி முதலியவற்றிற்குக் கொடுத்து அந்தத் தலத்திலிருந்து கேட்டவர்களுடைய வறுமையெல்லாந் தொலையத் தானமுங்கொடுத்துச் சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணி வயித்தியநாதர் சிவகாமியம்மையை விதிப்படி தரிசனஞ்செய்து திருவலகுப் பணிவிடைசெய்து ஆறுவருடம் புதுவையிலேவசித்துத் திருவருளாலே முன்போலப் பெருஞ் செல்வமடைந்து கொச்சியூர் போய்ச் சேர்ந்திருந்தான்.

அருச்சகருக்குப் படிக்காசு கொடுத்தருளியதனால் வயித்தியநாதேசுரருக்குப் படிக்காசரென்று அன்றுமுதலொரு திருநாமம் முனிவரர் கூறுவாராயினர். அதன்மேல் ஆலயத்திலே பூசை நைவேத்திய முதலியவைகள் சிறப்பாக நடந்துவந்ததனாலே தேசமெங்கும் மழைபொழிந்து பஞ்சநீங்கி எல்லா ஆன்மாக்களு மகிழ்ச்சியுற்றி

ருந்தனர். அருச்சகரும் வறுமைக்கடலை நீந்திப் பெருஞ்செல்வச் சிறப்புடன் வாழ்ந்திருந்தனர்.

பதினான்காவது

# சந்திரன்

# சயநோய்தீர்த்த அத்தியாயம்.

பிறவியெம் பிணியைத் தீர்க்கும் பேரருண் மருந்து நல்குந்
திறமுறு காரணத்தாற் றிகழ்வயித் தியநா தப்பே
ரறவனும் புதுவை மேய வள்ளலை யடைந்தே யன்புள்
ளுறவுறப் பணிந்து போற்றி யுறுதுய ரொழித்து வாழ்வாம். ()

மந்திர வனச மேய மறையவ னெடிய மாய
னிந்திர னமரர் போற்றும் புதுவையி லீசர் பாத
மந்திர வன்பி னோடு மருச்சனைத் தவம்பு ரிந்து
சந்திரன் சயநோய் தீர்ந்த காதையைச் சாற்ற லுற்றாம். (௨)

இத்திரி புவனத் துள்ளோ ரேவரு முய்யு மாறு
முத்திரி புரங்க ளட்ட வொருவனைப் பணியு மன்ப
னத்திரி முனிவ னன்னோன் மனையவ ளன்பி னீன்ற
புத்திரி வடிவு வாய்ந்த வநசூயை புகலு நாமம். (௩)

அன்னவன் றவத்தின் மிக்கோ னான்மறை யங்க மாறு
நன்னயப் புராணம் யாவு நவையற வாய்ந்து வேதஞ்
சொன்னவா றுணர்ந்து மூன்று தொழிலுடை மூவர் தம்முண்
முன்னவ னியாரே யென்னச் சஞ்சல முளத்தின் மொய்ப்ப.

நிச்சய மறிய வேண்டு மென்பதோர் நினைவு தோன்றப்
பொச்சமி றவங்க ளாற்றி யன்னதோர் பொருளைக் கண்டே
யச்சயப் பொருளி னாலே யனுமதி யெய்தி யென்றும்
விச்சையுந் தவமு மேய புகல்வரைப் பெறுதல் வேண்டும். ()

என்றுளத் தாய்ந்து தேறி யத்திரி யிருந்த வத்தோ
னன்றுடைக் கற்பின் மிக்க வநசூயை நண்ணிச் சார

வொன்றுமாச் சிரம நீங்கிப் போந்தன னும்பர் மேய
குன்றுகள் பலக டந்தோர் குலாசலத் திடைய டைந்தான். ()

வேறு.

வெங்கயம் படிய வாளை மீனொடும் வெருண்டு தாவிச்
செங்கயல் குதித்துச் சூதத் தொண்கனி சிதறி மீளும்
பங்கயா கரங்கள் விண்மேற் படர்தருக் குழுக்கள் சூழுஞ்
சங்கையில் பரப்பு வைகு முத்துங்க சயிலத் தும்பர். (எ)

ஏறினன் மலையி னுச்சி யெய்ந்துயர் சிகர நாப்ப
ணூறிய வுறுதி யோடு மோர்பத மூன்றி யோர்கான்
மாறிய விடையிற் சேர்த்தி நின்றுள மறுகா வண்ணங்
கூறிய பொறிபு லாதி கொடியகா மாதி நீத்து. (அ)

வேறு.

வலிய வேகப் பிராணநல் வாயுவை
யிலகு மந்திரத் தேர்பெறக் கூட்டியே
குலவி ரேசக பூரக கும்பகத்
தலகி லாகிய மத்துட னுற்றியே. (கூ)

வேறு.

எண்ணிரண் டங்கு லங்கள் ளவிரேச கங்க ளாற்றிப்
புண்ணிய மருவு முப்பத் திரண்டுபூ ரகங்கள் போத
நண்ணறு பத்து நாலு கும்பக நடுவ டக்கிப்
பண்ணுபி ராணு யாம மிவ்வணம் பழகி யப்பால். (கo)

கும்பகந் தன்னுள் வாயு முழுவதுங் கொண்ட டங்க
வும்பரு மறியொ ணாத குண்டலி யனன்மே லோங்கித்
தம்பெரு மகிமை கூறி லரவென மூலஞ் சார்ந்து
வெம்பிய விறகிற் றீப்போன் மூலத்தே மேவு மென்றும். (கக)

வேறு.

யோகியர் குண்டலி யென்ப ரோர்சிவ
போகிய ரருளெனப் புகல்வர் மேம்படு
தாகிய ரன்பெனச் சாற்று கிற்பராற்
பாகிய ருணர்வரிப் பான்மை முற்றுமே. (கஉ)

பெத்தமுத் திகட்கிலை பிறங்கு காரணம்
வைத்தபந் தாதியின் மூல மன்னிடு

முத்தியிற் சாக்கிர மூன்றி லெய்திடுஞ்
சத்திய மிவைசிவ ஞானத் தன்மையே. (கா)

ஆதலா லத்திரி யருந்த வத்தினன்
மாதவ மியற்றிய வண்மை கூறுகேங்
கோதகல் குண்டலி கும்ப கத்தினன்
மீதுற வளர்ந்துயர் வெளியிற் பட்டதே. (கச)

வேறு.

இடையிங் கலையின் வழிபடைத்து வாயு மூலந் தனிலிருத்தித்
தடையி லாவக் குண்டலியை யெழுப்பி யசைவி றம்பமெனச்
சுடருஞ் சுழினை நாடியுள்ளே சென்று சுழினைச் சார்பாய
வடையு முறையா ருதாரங் கடந்தப் பாலா மகண்டமுற்று.()

விந்துவெளிகள்பலகடந்து விளங்குந்தசநாதமுந்தொலைத்துச்
சிந்தை மகிழ்ந்தா யிரமிதழ்சே ரருண பீடச் செங்கமலந்
தந்த தேனைப் பருகியப்பாற் றுண்டிப் பிரம ரந்திரத்தைப்
பந்த மறவே துறந்துபின்பு துவாத சாந்தப் பதங்கடந்து. ()

வேறு.

கோடையும் பனியுங் காற்றுங் கூறுமற் றெவற்றி னும்
வாடுத லின்றி வாயு வசனமாத் தேவ மான
நீடிய வாண்டு நூறித் தன்மைசேர் தவத்து ணின்றான்
கோடிய ரசல மீதி லத்திரி முனிவர் கோவும். (கள)

அனசூயை மருங்கு நீங்கா தன்புட னேவ லாற்ற
மனசாதி வாயு வோட பானமு மருவ நேசக்
கனதேச யோகச் செந்தீ விண்ணெலாங் கலந்து பொங்கி
முனமேவு கால கூட விடமென மூடுகித் தாவ. (கஅ)

இடரடைந் தமரர் சென்று கயிலையி லபய மென்ன
வுடையவள் பாக வள்ள றிருவுள மிரங்கி யோங்கிச்
சுடரும்வெள் விடையின் மீதி லுமையவ ளோடுந் தோன்றத்
தடைபடா தயனு மாலும் பறவைக ளூர்ந்து சார்ந்தார். (கக)

இந்திர னாதி யாய வெண்டிசை யோரும் வந்தார்
சந்திர னுடுக்க ளோடு சூரியர் தாமும் வந்தார்
கந்திரு வாதி மற்றக் கணங்களுங் கடிதின் வந்தா
ரந்தமி றவத்தின் மேய வத்திரி முனிவன் முன்னர். (உ0)

மாலயன் முதலாம் வானோர் மற்றுளோர் சூழ்ந்திறைஞ்சக்
காலனைக் காய்ந்த முக்கட் கடவுளுங் கருணை கூர்ந்து
சாலவே தவங்கள் செய்த வத்திரித் தவனை நோக்கிச்
சீலமார் முனிவ வுன்றன் றவத்தினுக் கன்பு செய்வோம்.(உக)

வேறு.

முன்னுளோ ரித்தவ முயலக் கண்டிலேம்
பின்னுளோ ரியாவரே பேணி யாற்றுவார்
மன்னுளத் தனைவரு மகிழ்ந்து வந்தன
நின்னுளம் வேட்டவை நிகழ்த்தி நல்குவோம். (உஉ)

வேறு.

மித்திரர் கோடி போன்ற விமலனு ரிவ்வா றோத
வத்திரி முனிவ னுற்று மருந்தவ நீங்கி யுச்சிச்
சித்திர பானு மானுந் தேசொடு மெழுந்து தாழ்ந்து
பத்திமேன் மேலு மோங்கப் பரமனை வழுத்த லுற்றான்.(உரு)

நித்திய நிருவி கார நிரஞ்சன நிமலா போற்றி
சத்திய ஞான மோன சச்சிதா னந்தா போற்றி
முத்திய பேத மெல்லா மூர்த்தயாய் நின்றாய் போற்றி
புத்திமேன் முத்தி யீயு மகண்டபூ ரணனே போற்றி. (உச)

வேறு.

படைப்பதும் படைத்தவை பாது காப்பதுந்
துடைப்பது முத்தொழி றோயு மூவரு
முடைப்பெருங் கடவுளரெவரென் றோர்ந்துளஞ்
சடைப்பது தவிர்ந்தன னின்று தற்பரா. (உ௫)

தேவரு நரகருந் திசையு ளோர்களு
மூவரு முனிவருந் தவரு மோனருந்
தாவரு மிடைசர மசரத் தன்மையும்
யாவரு நீயென விதயந் தேறினேன். (உசா)

சத்திய மிருத்திகை சிலையிற் றுருவி
னுத்தம தாம்பிர வுலோக மற்றினு
நித்திய முறைந்தரு ளைய நல்குவை
சித்தினி லிசைவது செப்ப வேண்டுமோ. (உஎ)

வேறு.

எவ்வெவ ரெவ்வா றாய தெய்வமா வெண்ணிப் போற்றி
லவ்வவர்க் கவ்வா றாய தெய்வமா வருள்வை நீயே
செவ்வைசேர் தெய்வ நீயே யன்றியோர் தெய்வ முண்டோ
கௌவையி லயனு மாலும் பிறவுநீ காத்தி யென்று. (௨அ)

முகுந்தனை யயனைப் போற்றி முறையுடன் வழிபா டாற்றி
மிகுந்துளக் களிப்பி னோங்கி யத்திரி முனிவன் வேண்டுஞ்
செகந்தனி லெவரும் போற்றும் புத்திர செல்வ நல்கி
யகந்திகழ் முத்தி தேக வந்தத்தி னருளு கென்ன. (௨கூ)

சங்கரக் கடவுள் கூறு மாலய னருகு சார
மங்கல முனிவ னேநின் மொழியெலாம் வாய்மை நன்று
பங்கமில் புதல்வர்ப் பேறும் பரிவுட னளித்தோ மின்னுந்
துங்கவார் முத்தி பின்னர்ச் சோர்விலா தடைவை யென்று.

முனிவரர் பன்னி யோடு மேகென மொழிய வன்னோ
னனிமலர் செங்கை கூப்பி விடைகொடு நடந்தா னுதன்
கனிமொழி யுமையா ளோடுங் கயிலையை யடைந்தான் மற்றோ
ரினியவன் போடு தத்த மிருக்கையு ளெய்திச் சார்ந்தார். ()

அத்திரி மனைவி யோடு மாச்சிர மத்துட் சென்று
பொய்த்திறி வகன்ற நேசம் பொருந்தியின் போங்க வாழ்நா
ளத்தனு ரருளி னாலே யநசூயை பெற்றா ளென்றுஞ்
சுத்தமெய்த் தவங்கண் மேய துருவாச முனிவன் றன்னை. ()

முறையுடன் முன்னுண் மீண்டு முரகான் வரங்கள் பெற்றுப்
பொறையுடை யருந்த வத்துத் தத்தனைப் பயந்தாள் பூவை
மறைபகர் நான்மு கத்தோன் வரத்தினுன் மீண்டு மாது
தறையெலாம் புகழும் வாம சந்திரற் பெற்றா ளன்றே. (௩௩)

உலகெலாந் துதிக்கு மேன்மைத் துருவாசர் குணமு ரைக்கிற்
கலைபயின் மதியஞ் சூடுங் கடவுளே கருதி லொப்பாந்
தொலைவறு தவத்தின் மேய தத்தனுர் மகிமை சொல்லி
லலைகட னடுவு ளாகத் தணைதுயின் மாய னுமால். (௩௪)

மலரயன் வரத்தில் வந்த சந்திரன் வாய்மை சொல்கோ
முலகினி லெவரே யன்னோன் வடிவினுக் குவமை கூற

வலகின்மன் பதைக ளுள்ளங் கண்கவ ர்முகு வாய்ந்தோன்[வர்.
றெலைவிலாவெழிலைப்பெற்றோர்க் கவனையேயிணையாச்சொல்

### வேறு.

அமரர்குரு விடையெய்தி யருங்கலையெ லாமுணர்ந்தான்
சமரமுக விசைமதன னுயிர்த்துணைவன் சந்திரனெண்
குமரனுடை யெளவனமுங் கோமளமுங் கண்ணுற்றே
யமர்தருநல் வதுவைசெய வெண்ணமுற்று னத்திரியும். ()

### வேறு.

தக்க னைம்பது பெண்களைப் பயந்தனன் றகைசேர்
மூக்க ணர்க்குமை யம்மையை யளித்தனன் மூன்னர்
*தெக்க னன்பதின் மூன்றுபெண் செய்தனன் வதுவை
மிக்க காசிப ரிருவரை வரித்தனர் விதியால். (௩௭)

### வேறு.

எழுமுனிவ ரெழுபேரை முறையின்மணந் தெய்தினர்
பழுதகலு மிருபதுட னெழுவருடப் பாவைமார்
தொழுதகைய சந்திரனைச் சொலவுணர்ந்து கண்ணுற்று
முழுதுமவ ரன்னவனை முன்னவனு வரித்திருந்தார். (௩௮)

### வேறு.

அத்திரி புதல்வ னுய வம்புலி யரிவை மார்த
மெய்த்தகு வனப்புஞ் சீல மேன்மையு முளத்து ணர்ந்து
சித்தம திசைந்து மீன்றல் செயவுளம் வேட்டி ருந்தா
னித்தகு கருமந் தக்க னத்திரி யிதயத் தோர்ந்தார். (௩௯)

இருவருங் கலந்து பேசி யிணங்கினர் வானோர் போற்றுங்
குருவர வழைத்து வாய்ந்த குசலமார் முகூர்த்தம் வைத்துப்
பெருமகிழ் வுடனே மாட மாளிகை பிறங்கச் செய்தார்
திருமகள் பதியு மாதி பிரமனுந் தேவர் கோவும். (௪0)

### வேறு

கின்னரர் சித்தர்கந் திருவர் கேசரர்
பன்னகர் சாரணர் பகர்விச் சாதரர்
மன்னிய விருடியர் முனிவர் மற்றுளோர்
பனனிய ரொடுமெணப் பந்தர் சார்ந்தனர். (௪௧)

---

* தெக்கணன் - யமன்.

வேறு.

சார்ந்தமார் முனிவர் வேட்ட வக்கினி சான்று யங்க
ணேந்திளங் கொங்கை மாத ரிருபதோ டெழுவர் தம்மைக்
காந்தளஞ் செங்கை பற்றச் சந்திரன் கைக்கொடுத்து
வாய்ந்தநீர் தாரை வார்த்தான் மந்திர முரைத்துத் தக்கன்.

மங்கல வதுவைச் செய்கை குறைவற முடித்து வந்தோர்
பங்கமி லாசி கூறி யவ்வவர் பதியிற் சென்று
ரங்கவர் போய பின்னர்த் தக்கனு மவனில் லாளு
மங்கைய ருளங்க ளிப்ப வரிசைகள் யாவு நல்கி. (சங)

மருகனை யினிதி னோக்கித் தக்கனு மகிழ்ந்து கூறு.
மிருபதி னெழுமின் னுரை யீந்தன னின்பா லென்று
மொருமைமசே ருளங்க ளிப்ப வுவர்தமை யொன்று வுள்ளங்
கருதிநீ கூடி வாழ்தி யென்றுரை கழறிப் பின்னர். (சச)

வேறு.

அத்திரி முனிக்கு மில்லா ளநசூயை தனக்கு மன்பு
வைத்தக மகிழும் வார்த்தை பலபல வழங்கி யீன்ற
புத்திரி மாரைச் செல்ல விடுத்தன னவரும் போந்தார்
சித்தமு ளுவகை பொங்க வாச்சிர மத்திற் சேர்ந்தார். (சடு)

தந்தைதாய் பாதம் போற்றிச் சந்திர னேவ லாற்றப்
பைந்தொடி மடவா ரன்னோர் மொழிவழி பணிகள் செய்ய
விந்தவா றடைந்து நெஞ்சங் களித்திட முனியி ருந்தான்
முந்தைநாட் டக்கன் கூறு மொழிகளை யுணர்ந்து மாலோன்.

தாரகை மின்னோர் தம்பா னடுவுறத் தயவு வைத்தே
யோரம தின்றி நித்த மொவ்வொரு மின்னா ளில்லின்
வாரம துடனே வைகிக் கலந்துள மகிழ்ந்தி ருந்தா
னூரமின் முலையா ரிவ்வா றன்புடன் வாழு நாளில். (சஎ)

மாந்தரிற் கற்றோ ரென்ன மறைகளிற் சாம மென்னப்
பூந்தளிர்ச் சோலை சூழும் பொருப்பினின் மேரு வென்ன
வாய்ந்தசீ ருடமின்னாரின் மஞ்சென விருண்டு தாழ்ந்த
கூந்தலு ரோணி யென்னுங் கொடியிடை சிறந்தா ளன்றே. ()

வேறு.

பங்கய வதனமு நயனப் பார்வையுங்
கொங்கையுங் குழைகளுங் கூந்தற் கோலமுஞ்

செங்கையு மெளியசிற் றிடைநுண் செவ்வியுஞ்
சங்கையின் மடவன நடையுஞ் சாயலும். (௪௯)

**வேறு.**

நாணமடம் பயம்பயிர்ப்பு நீங்காத நன்னிலையு
மாணமொடு பத்திமையு மல்லறரு நல்கூர்ந்தோர்
நீணிதியங் காண்டலெனக் கொழுநனவாய் நெஞ்சுவந்து
பேணுபெருஞ் செவ்வியளாஞ்ரோணியெனும்பெண்ணமுதம்.

**வேறு.**

அன்னவ ளெழிலு மன்புஞ் சந்திர னகத்து மன்னி
மின்னவ ளில்லிற் சென்றான் முறைவழி விதிம றந்து
பின்னருஞ் சின்னாள் வைகி யரிதினிற் பிரிந்து நீங்காத்
தன்னக மாங்கே தேக மற்றவர் மனையிற் சார்வான். (௫௧)

விரும்பினர் போன்றே நெஞ்சுள் வெறுப்பொடு சேர்ந்துதம்பா
விரும்பய னல்கா வாறு மிதயம்வே றான வாறும் [யென்னே
குரும்பைமென் முலையார்கொண்கன்கொள்கையாய்ந்தென்னே
யரும்பிள நகையுரோணி நங்கைமீ தன்பு வைத்தான். (௫௨)

என்றுளந் தேறி யின்னு முணர்வமென் றிடைந்தி ருந்தார்
மன்றலங் குழலு ரோணி வனப்பெனுங் கடலு ளாழ்ந்து
சென்றது பகலி ராவென் றறிதருஞ் செயலு மின்றி
யொன்றுயி ருடலும் போலு மிருவரு மின்ப முற்றார். (௫௩)

மற்றவர் மனைகட் கேகா னேகினு மற்ற மாதர்
பொற்றொடி யாள்போற் றோன்றுதவள்பெரும்போகத்தாலே
யுற்றதோரமெய்யைத்தோய்ந்தேயுறைந்துயிர்புசிக்கும்போதிற்
சொற்றிடு மற்றை நான்குஞ் சுகமொன்றுந் தோயா வன்றே.

**வேறு.**

அணிபெறு மரிவைய ரன்பு ளாரெனின்
மணியொடு மந்திர மருந்து வேண்டுமோ
திணிசிலை யுளத்தருஞ் சேர்வர் நீங்கிலார்
பணிவிடைக் கருள்பசு பதியைப் போலுமே. (௫௫)

**வேறு.**

ஆதலா லணியு ரோணி யாரமென் கொங்கைப் போக
மீதலான் மற்று ளோரை வெறுத்துளம் விருப்ப மற்று

னீதெலா முணர்ந்து வாடி யிருபதோ டாறு பேரு
மோதலாத் துயருண் மூழ்கி யின்னன வுரைக்க லுற்றார். ()

மேம்படு நமது தாதை விளம்பிய மொழிகள் யாவுஞ்
சாம்பரிற் பெய்த நெய்போன் மறுத்தனன் றலைவ னந்தோ
காம்புறழ் தோளு ரோணி கருத்திலன் பிலளாய்ப் பன்னா
ளும்பசித் திருக்கத் தானுண் பாவியாய்ப் பிறந்தா னம்மூள்.

பற்பல விவ்வா றோதித் திகழுடுப் பாவை மார்க
ளற்புத வடிவின் மேய வம்புலி பிரிவா ற்றாது
செப்பினுற் றாதி னுலவ் விருவருந் திருந்த ராக
வெய்ப்புட னயர்ந்து சோர்ந்து தந்தைபா லேக லுற்றார். ()

கலைசோர வளைகள் சோரக் கதிர்மணிப் பூண்கள் சோர
நிலைசோர் நெறியுஞ் சோர நினைவழிந் துள்ளஞ் சோர
வலைசேரு மானி னம்போன் மயங்கியே வண்மை சோர
வுலைசேரு மெழுகு போலுள் ளுடைந்தக முருகிச் சென்று. ()

நக்கனார் மருக ரென்ன நகையுறு மகந்தை மேய
தக்கனாந் தந்தை தாளிற் றாழ்ந்தனர் தாழ்த லோடு
மிக்கதா வசனங் கூறி யெடுத்தனன் மடிமேல் வைத்துப்
புக்கா ரியரை நோக்கி யிருகணீர் துடைத்துப் புல்லி. (கூ0)

உச்சியை மோந்து கையால் வெரிநுற வருடி நீவி
ரிச்சடை வெய்த லென்னே வியம்புதி ரெனவி னவக்
கச்சணி கொங்கை மின்ன ரனைவருங் கண்ணீர் வாரப்
பொச்சமி லயர்வி னோடு மொருவர்போற் புகல லுற்றார். ()

கருதிநன் னிதியந் தேடிக் கடலிடைக் கவிழ்த்தல் போலு
மரிதினி லெம்மை யீன்றே யம்புலிக் கன்போ டீந்து
பெரிதெமை வாழ வைத்த பெருந்துயர் பேசிற் பல்கும்
பரிவுரோ கணிபால் வைத்துத் துரத்தினு னெம்மைப்பாராய்.

இரவொடு பகலு ரோணி யில்லிடை யிருத்த லன்றி
யருவிழி குளிர நோக்கத் தெருவிடை யதனும் வாரா
னுரிமையா வுடன் பிறந்த வுரோணியு முடன்பா டானுள்
விரிதிரை யுலகி லியாம்பெண் பிறந்திடும் விதியீ தையா. ()

தயவேது மின்றி யிவ்வா றிமையவர் சாற்றக் கேட்டு
வயமேய சிற்றத் தக்கன் மருகனென் றோரா னெஞ்சு
ணயமேய கோப மல்க வுலகுயிர் நடுந டுங்கக்
கயரோக முற்றே யாலோன் றேய்ந்திடக் கடவ தென்றான்.

கோபத்தி னுளங்கொ தித்துக் கொலையன்ன தக்க னீந்த
சாபத்தைக் கேட்டோர் வந்து சந்திரற் குணர்த்த வன்னோன்
றீபத்தை யொழியி ருட்போற் சிந்தையுண் மயங்கி யிந்த
வாபத்தை யேவர் தீர்ப்பா ரென்றுள மயரும் வேலை. (௬௫)

வேறு.

திரிவித கரணமுஞ் சித்தி யாயுளோ
ரெரிபடு சிந்தையி னிட்ட சாபந்தா
னரிபிர மாதிக டடுக்க லாகுமோ
பரிவிலச் சாபமம் புலியைப் பாய்ந்ததே. (௬௬)

வேறு.

அடைந்திடு சாப மெய்த வாருயி ரோடு மங்க
முடைந்தற மெலிந்து நாள்க டொறுமூட னுயர்ந்த மோக
மடந்தைய ராசை கொண்டோர் மதமென நிலையுண் மன்னித்
திடந்தரு மறிவு ளோர்கண் மலமெனத் தேய்ந்த தன்றே. ()

கயரோக மிவ்வா றெய்திக் கருத்தழிந் திடைந்தே யாலோ
னயனுறை யுலகத் தோடு மரியுறை யுலக மற்றும்
பயனுறு மும்ப ரிம்பர் நாகமும் பரிந்து சென்று
தயவோடு மஞ்ச லென்பார் யாங்கணுங் கண்டிலாதே. (௬அ)

அடுத்தவர்க் கருளு மாதி யண்ணலார் கயிலை யெய்திப்
படுத்துட ரூழ்ந்தெ ழுந்து பங்கயச் செங்கை கூப்பிக்
கடுத்திகழ் கண்டா முக்கட் கடவுளே கருணை தேவே
தொடுத்தது தக்கன் சாபத் துயருளாழ்ந் துனையடைந்தேன்.

தக்கனீள் கோபச் சாபம் வடவைபோற் றகிப்ப தங்கம்
நக்கனே காவா விட்டா லுய்யுமா றில்லை நாதா
முக்கணு வபய மட்ட மூர்த்தியே யபய மந்தோ
செக்கரஞ் சடையா யின்னே புரந்தருள் செய்தி யென்றான்.

இந்திர னிமையோர் போற்று முமையொரு பாகத் தீசர்
சந்திர னுற்ற நோவுந் தளர்வையு மிரங்கி நோக்கி

யிந்துவே தென்றி சைக்கட் புதுவையென் றிருப்ப தோரு
ரந்தமா நகரி லென்று மகங்குளிர்ந் தினிதி ருப்பேம். (எக)

வேறு.

முன்னை நாளருந் தவத்துரு வாசமா முனிவன்
மன்னு நான்முக னகத்தியன் மற்றுளோர் பலரு
மன்ன மாநக ரடைந்தெமை யருச்சனை புரிந்து
நன்ன யந்தரு மேன்மைகள் பெற்றனர் நாடி. (எஉ)

அத்த லத்திடைச் சென்றுநீ யருச்சனை புரிந்தாற்
சித்த மெய்த்துயர் சேர்க்ஷய நோயெலாந் தீரும்
பத்தி யுத்தம வேயென விடைகொடு பணிந்து
நித்த னத்தன்வாழ் புதுவையை நெஞ்சுற நினைந்து. (எங)

வேறு.

திருக்கயி லாய நீங்கிக் கேதாரந் திருக்கா ளத்தி
மருக்கமழ் சோலைக் காஞ்சி திருவண்ணா மலைபொன் மன்றங்
குருக்கிளர் விருத்த நாம மலைவளங் குலவா னைக்கா
வருத்தமின் முனிவர் போற்றுஞ் சிரகிரி திருவை யாறு. (எச)

தேவர்வாழ் கும்ப கோணந் திருவிடை மருதா ரன்ப
ராயடு துறைமா யூரம் புள்வேளூ ரயல்சீ காழி
பாவலர் திருவெண் காடு பகர்மறைத் திருவா ரூருங்
கோவுறை புகழ்நான் மாடக் கூடலுந் தொழுது போற்றி. ()

வேறு.

குமுத நண்பனுந் தென்புது வைப்பதி குறுகி
யமுத வெண்டிரை யெறிநதி புனைசடை யமலன்
கமல பொற்பத முமையவள் பதயுக கஞ்ச
மிமையி லாவிரு விழிகளுங் குளிர்தர விறைஞ்சி. (எசு)

வேறு.

பத்திமேன் மேலு மோங்க வருச்சனை வழிபா டாற்றி
நித்தமு மூன்று கால நெறியுடன் றொழுது வாழ்த்தி
வைத்தளி மூரலும் வாச மந்தார மலர்கள் சாத்தி
மெய்த்தகு நாம மோதி யின்னன விளம்ப லுற்றான். (எஎ)

தீராத பவநோய் தீர்க்குந் திருவருட் கடலே போற்றி
யோராத பலிகள் கொண்டே யுறுசெல்வ மளிப்பாய் போற்றி

யாராத பேரானந்த மடியவர்க் கருள்வாய் போற்றி
பேராதெம் முளத்தி னின்றபுதுவையெம்பெம்மான்போற்றி.

உரையுணர் விறந்தப் பாலா மொளியினு ளொளியே போற்றி
தரையுயிர்ப் பிழைக ணீக்குந் தயாவுடைத் தந்தாய் போற்றி
கரையறு கருணை வெள்ளக் கண்ணுடைக் கடவுள் போற்றி
புரையறவடியா ரேத்தும் புதுவைநா யகனே போற்றி. (எகூ)

இவ்வணந் தொழுது போற்றி யெந்தையே யென்னோய்நீக்கிப்
பொய்வணந் தவிர்ந்த வன்பு புரிதியென் றிரந்து நிற்பக்
கைவண மழுவார் முக்கட் கடவுளுங் கருணை கூர்ந்து
மெய்வணத் திமய மீன்ற வுமையொடு விடைமேற் றோன்ற.()

தேவதுந் துபிக ளார்ப்பத் தேவர்பூ மாரி தூர்ப்ப
யாவலோ டரம்பை மாதர் பாடலோ டாடல் வாய்ப்பப்
பூவல ரயனு மாலும் புகழ்ந்திரு மருங்குஞ் சார
நாவலர் வாணி மாது திருமக ளயர்ந்து வாழ்த்த. (அக)

வேறு.

தும்புரு நாரத ரிசைசொ ரிந்திட
நம்பனுஞ் சந்திரன் வதன நண்ணியே
நுன்பெருந் துயர்க்கய கோய கற்றினோங்
கம்பநீ யொழியெனக் கருணை செய்துபின். (அஉ)

மாமனுந் தக்கனை வரவு ளஞ்செயத்
தாமத மின்றியே தக்க னெய்தியே
யேமமார் பொன்னடி யிறைஞ்சி நின்றிடக்
காமனைக் காய்ந்தவெங் கடவுள் கூறுமால். (அங)

வேறு.

மகளிரை மணந்து வேட்ட மருகனுக் குளங்க ளிப்பப்
புகழ்பெரு வரிசை நல்க லின்றிநீ பொருவில் சாப
மிகழ்வுற நல்க னன்றோ விந்துபா லன்பு நீங்காத்
தகவுசெய் யென்று கூறத் தக்கனுந் தயவு சார்ந்தான். (அச)

அம்புலி நீகே ளின்னை யடைந்திடு மரிவை மார்க
ளைம்புத லுடையோர் தம்பா னடுவெனுப் புரத்தி யென்று
மும்பரின் மற்று ளோரி லுயர்வடி வுற்ற நீயால்
வம்பட ரிடையூ றுன்பால் வருமவை வாரா வண்ணம். (அரு)

விளப்பிய விரண்டு பக்கத் தொடுக்கமும் விருத்தி யுஞ்சேர்
துளங்குத லின்றி யென்று மிவ்வணஞ் சுடர்வா யன்றி
வளங்கெழு மயனுக் கெட்டா நம்முடி யினிது வைகுங்
களங்கமின் மேன்மை தந்தோ மினியுளக் கவலை நீத்தி. (௮௬)

எனத்திரு வாய்ம லர்ந்தே யிறைவனு ல்பத்து ளெய்த
வனத்தனு மாலு மற்றோர் விடைகொடு சென்று ரங்கண்
மனத்துய ரொழிந்து சோம னிடையறு மகிழ்ச்சி யெய்தி
முனத்தனு ரருளும் வண்ண முயன்றினி திருந்தான் முற்றும்.

## சந்திரன் கயநோய்தீர்த்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௨௫௦.

### சந்திரன் கயநோய்தீர்த்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதி முனிவர்களைநோக்கிச் சந்திரன் க்ஷயநோய்தீர்த்த சரித்திரத்தைச் சொல்லுவோமென்று சூதமுனிவர் சொல்வாராயினர்:—திரிபுர சங்கார கருத்தராகிய சிவபிரானையே தியானிக்குமன்புற்ற அத்திரிமுனிவர் திரிமூர்த்திகளுக்குள்ளே முதன்மை பெற்றவர் சிவபிரானே யென்றறிந்து அவரது வரத்தினாலே புதல்வரைப் பெறுதல் வேண்டுமென்று நினைத்துத் தன்மனைவி யநசூயை யென்பவளுடனே யுன்னதமான வொரு மலையினுச்சியிலே யேறியிருந்து பின்னர் ஒருகாலையூன்றி யொருகாலை யிடையிலே வைத்துநின்று காமாதி பகைகளைத்துறந்து பிராணவாயுவையொடுக்கி இரேசக கும்பகங்கள் செய்து சுழுமுனை நாடிவழியேசென்று ஆறுதாரமுங்கடந்து ஆயிரவிதழ்த்தாமரையிலே விளங்குஞ்சோதியைத் தரிசித்துப் பிரயரந்திரத்தைத்தள்ளித் துவாதசாந்தப் பதமுங்கடந்துநின்று வெயிற்காலத்து மழைக்காலத்தும் வாடுதலின்றி அநசூயை சிசுருடை செய்ய வாயுவையே யாகாரமாகக்கொண்டு தேவவருடத்தில் நூறு வருடந் தவஞ்செய்தனர். அவரது யோகாக்கினி ஆகாயமுழுவதுங் கலந்து ஆலகாலவிடம்போலக் கொதித்துத் தாவுதலும், தேவர்களத் தவருத்தஞ் சகியாமற் கயிலாயத்திலேசென்று சிவபெருமான் றிருமுன்னர் அபயங்கூறி முறையிட்டனர்.

அதுகேட்டுத் திருவுளமிரங்கிச் சிவபெருமான் உமாதேவியாருடனே இடபாரூடராய் அத்திரிமுனிவர் முன்பு எழுந்தருளினர். பிரமனும் விஷ்ணுவும் அவரவர் வாகனங்களிலேறிப் பக்கத்திலே வரவும் எல்லாத்தேவர்களும்வந்து கூடினார்கள். சிவபிரான் அம்முனிவரைநோக்கி "முனிவனே! உன்னுடையதவத்தை மகிழ்ந்தனம் நீ விரும்பியவரத்தைக் கொடுப்போம்" என்றருளிச்செய்தனர். முனிவர் தவம்விட்டெழுந்து தாழ்ந்து கும்பிட்டுத் தோத்திரஞ்செய்து "சுவாமீ! நீரே யிந்தச்சகத்தி லெல்லாமாயினவரென்றும் தெய்வமென்றும் அவரவர் விரும்பியவண்ணமருள்பவரென்றும் மனந்தெளிந்தேன்" என்றுசொல்லி அதன்மேல் பிரமன், விஷ்ணுவையு மவரவருக்குரிய முறைப்படி வணங்கிப் பின்னர் சிவபிரானைநோக்கி "அடியேனுக்குப் புத்திரபாக்கியம் இம்மையிலேயருளி மறுமையிலே மோக்ஷமருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சிவபிரான் கருணைகூர்ந்து கேட்டவரந் தந்தோமென்றருளிச்செய்து தமது கயிலாசமலைக்கெழுந்தருளினர். பிரம விஷ்ணுக்களும் புத்திரப்பேறு தந்தோமென்று சொல்லித் தமதிருப்பிடத்துக்குப்போயினர். அத்திரி முனிவருந் தவத்தைமுடித்துத் தன்மனைவி யநசூயையுடன் தமதிருப்பிடத்துக்குச் சென்று காமவின்பத்தை யனுபவித்திருந்தனர். சிலநாட் சென்றபின் அநசூயை சிவபிரான்திருவருளால் துருவாசமுனிவரைப் பெற்றனள். அதன்மேல் விஷ்ணு கருணையால் தத்தவென்பவனைப்பெற்றாள். பின்பு பிரமனுடைய வரத்தால் சந்திரனைப்பெற்றாள். இம்மூன்று பிள்ளைகளுள்ளும் சந்திரனது சரித்திரத்தைச்சொல்லுவோம். நாளுக்குநாள் கண்டவர் கண்கவரும் அழகிலே சிறந்துவளர்ந்து தேவகுருவாகிய வியாழபகவானிடத்திலே சருவ சாஸ்திரங்களையுங்கற்று விவாகஞ்செய்யும் யௌவனபருவத்தையடைந்தான். இங்ஙனமிருக்குங்காலத்திலே தக்கன் ஐம்பது பெண்களைப்பெற்றுத் திரிநேத்திரதாரியாகிய சிவபிரானுக்கு உமாதேவியாரைக் கொடுத்தான். யமனுக்குப் பதின்மூன்று பெண்களையும் காசிபமுனிவருக்கு இரண்டுபெண்களையும் சத்தருஷிகளுக்கு ஏழுபெண்களையுங்கொடுத்தனன். மற்றை இருபத்தேழு பெண்களுஞ் சந்திரனுடைய அழகையுங் குணத்தையுங் கேள்விப்பட்டும் பார்த்து மவனையே நாயகனாக வரிக்க நினைத்திருந்தனர். சந்திரனு மவ்வாறே அப்பெண்களினழகையும் யௌவனத்தையுங் கேள்வியுற்று அவர்களைப் பத்தினிகளாக்க நினைத்திருந்தனன். இவை

## சந்திரன்க்ஷயநோய்தீர்த்த அத்தியாயம். ௨௩௩

களை அத்திரிமுனிவருந் தக்கனுந்தெரிந்து அவர்களெண்ணம் நிறைவேறுமாறு விவாகமுடிப்பித்துத் தக்கன் சந்திரனிடத்தில் இருபத்தேழுபெண்களையுங்கொடுத்து இவர்களைச் சமமாக வேற்றுமைகருதாது மகிழும்படி யநுபவித்து வரக்கடவாயென்று உபசாரஞ்சொல்லியனுப்பினான். சந்திரன் தனதுபிதா ஆச்சிரமத்திலே அப்பெண்களை யழைத்துக்கொண்டுவந்து அவர்களோடு காமகலத்தை யநுபவித்து வாழ்ந்திருந்தனன்.

இங்ஙனம் வாழ்ந்திருக்குங் காலத்திலே அந்தப்பெண்களுக்குள்ளே அதிகச் சௌந்தரியமுள்ள உரோகணி யென்பவளிடத்திலே யதிகப்பிரீதிவைத்து மற்றைப்பெண்களைப் பராமுகஞ்செய்துபலநாளுங் காமநுகர்வதாயினான், அப்பெண்கள் இருபத்தாறுபேரும் நெடுநாளதுகண்டு சகியாமல் மனம்வாடி நொந்து பிதாவாகிய தக்கனிடத்திலேவந்து சொல்லியழுது கவலைப்பட்டார்கள். தக்கன் அவர்களைக் கண்ணீர்துடைத்துச் சந்திரனுடைய வாரபக்ஷத்தைத் தீரவிசாரித்து அவனை மருகனென்றுநினையாது க்ஷயரோகமடையக்கடவனென்று சபித்தனன். அதுகேட்டவர் சிலர் சந்திரனுக்குவந்து சொல்லுதலும், அவன் நடுநடுங்கி மயங்கிப் பயப்பட நாளுக்குநாள் சரீரஞ் சிறிதுசிறிதாகக் குறைவடைந்து தளர்ந்து அஞ்சலென்றுசொல்வாருமின்றிக் கயிலாசமலையை வந்தடைந்து பரமேசுரனுடைய பாதாரவிந்தத்திலே தாழ்ந்தெழுந்து தனக்குவந்த துன்பத்தைத் தீர்த்தருளவேண்டுஞ் சுவாமீ! யென்று வணங்கித் தோத்திரஞ்செய்து நின்றான். உடனே கருணாநிதியாகிய சிவபிரான் சந்திரனுடலந்தேய்ந்தொளிமழுங்கி யிருப்பதைக் கடைக்கணித்துச் "சந்திரனே! தென்றிசையிலே புதுவையென்றொரு தலமிருக்கிறது. பூருவத்திலே துருவாசன், அகத்தியன் முதலியோர்களாலே பூசிக்கப்பட்டது. அங்கேசென்று நம்மை நீ பூசிப்பாயாகில் இந்தக்ஷயரோகம் உன்னைவிட்டுநீங்குமென்று விடைகொடுத்தருளினர். அவ்விடைபெற்றுச் சந்திரன் அநேக சிவஸ்தலங்களை யிடையிடையே வணங்கிப் புதுவைவந்தடைந்து வயித்தியநாதலிங்கத்தைத் திரிகாலமுமுறைப்படி மந்தார மலர்கள்சாத்தி யருச்சனைசெய்து தோத்திரஞ்செய்து அடியேனுடைய வியாதியைத் தீர்த்தருளுகென்று யாசித்துநிற்ப, அங்கே சிவபிரான் கருணைகூர்ந்து இடபாரூடரா யெழுந்தருளித் தரிசனந்தந்து "சந்திரனே! யுன்னுடைய நோயைநீக்கினோ மினிவருந்தாதே" என்றருளித் தக்கனை வரவழைத்துச் சந்திரன் உனக்கு மருமகனாதலி

னவனிடத்தி லன்புசெய்யென்று கட்டளையிட்டுச் "சந்திரனே யினி நீயெல்லாப் பெண்களையும் பேதமில்லாமற் கலந்து வாழ்வாய் உன்னுடைய சரீர மிரண்டுபக்ஷத்தினு மொடுக்கமும் விருத்தியும் நீங்காது மாறிமாறிவரும். இதுவன்றியும் பிரமனு மறியப்படாத நம்முடைய சிரத்தின்மேலு முன்னை வைத்துக்கொள்ளு மேன்மையுந் தந்தனம்" என்றருளிச்செய்து சிவலிங்கத்துள்ளே மறைந்தெழுந்தருளி யிருந்தனர், சந்திரன் மீண்டு மனமகிழ்ச்சியுடனே திருவருளின்படி சுகித்திருந்தனன்.

பதினைந்தாவது

# ஆறுமுகமான அத்தியாயம்

ஏம தீர்த்த மெழும்புது வைப்பதிக்
காம தீர்த்த னெனச்சிவ காமிதன்
வாம தீர்த்தனுய் வைகும் வயித்திய
நாம தீர்த்தனை நாளும் வணங்குவாம். (௧)

வேறு.

வள்ளலா ரடியைப் போற்றி மதிகயந் தீர்ந்து யர்ந்த
தெள்ளிய மேன்மை சொன்னேஞ்சிவனருச்சனைக்குவைத்த
வொள்ளிய பாலைத் தாகித் தந்தண னுண்ட தீங்கா
லெள்ளுமா றுகத்தை யுற்ற காதையை யியம்ப லுற்றும். (௨)

விண்ணடர் சாக சாயை மிடைந்துமே லோங்கி நீண்ட
கண்ணகன் வெளியை முற்று மொழிவறக் கவர்த லாலே
புண்ணிய வொளிசேர் ஞானப் பூரண னந்தம் போலு
நண்ணிராப் பகலின் றுய நைமிசா ரணிய மாதோ. (௩)

இத்தன்மை யிடைய றுத விவ்வன நீத்து முன்னுண்
மெய்த்தகு மால யங்க டொழுவுளம் விருப்ப மெய்திச்
சுத்தமென் பரத்து வாச ருனிசில முனிவர் சூழ
நித்தியன் முடியி னின்று நிலத்திழி கங்கை சார்ந்து. (௪)

வேறு.

கங்கையி னுடியக் கணத்தி னெஞ்சினுட்
பொங்கிய மும்மலத் துயர்கள் பொன்றிடத்
தங்கிய வருள்விசு வேசர் தாளிணை
யங்கயல் பொருவி சாலாட்சி யட்புயம். (௫)

தொழுதனன் விழியிமைப் பற்ற தொன்மையும்
பழுதகல் சிந்தையுண் மலர்ச்சிப் பான்மையு
முழுதுடற் புளகமு மூடொ ணுவிழி
யழுதுறு நீரும்வந் தடையப் பெற்றனன். (௬)

வேறு.

இன்னபே ரின்ப முற்றுப் புகழ்சில வியப்பித் தாழ்ந்து
பன்னகா பரண னுள்ளத் தனுமதிப் பரிவு பெற்றுச்
சென்னிமேற் செங்கை கூப்பி விடைகொடு திருக்கே தார
மன்னிய வரதன் பாத மனத்துற வணங்கி மீண்டு. (எ)

தெக்கிண கயிலை யென்னச் செப்புகா ளத்தி யெய்தி
முக்கணன் ஞானக் கோதை முளரியந் தாள்வ ணங்கிச்
சொற்கணத் தவர்கள் சூழச் சுருதிசேர் காஞ்சி யெய்தி
யக்கணத் தாசை பொங்கத் திருவேகம் பரையும் போற்றி. ()

மாலய னகந்தை மாற வழன்மலை யாய்வ ளர்ந்து
மேலுற வோங்கி நின்ற வியனரு ணச லத்தைச்
சாலவன் போடுந் தாழ்ந்து தனிமுத லருளைப் பெற்றுச்
சீலமா தவர்கள் சூழுந் திருமுது குன்றம் போற்றி. (௯)

தில்லைமா வனங்கள் சூழுஞ் சிதம்பர மன்ற மேவி
யல்லிநேர் மலர்மென் கூந்தற் சிவகாமி யம்மை காண
வெல்லையி லுயிர்க ளின்ப மெய்திட நடன நல்க
வல்லவன் பாதம் போற்றிக் கருணைவண் புகழை யேத்தி. ()

வேறு

கள்ளிருக்குங் கடிக்கூந்தற் றையலு யகியொருபாற் கலந்து வைத்த, வள்ளிருக்குங் கூருகிரா ளுசிறுனி யாலரக்கன் வன்மை நீங்கி, யுள்ளிருக்கு முறுதிகெடுத் துயிரகல்சம் பாதிதுணை யுயர்ச டாயுப், புள்ளிருக்கு வேளூரில் வயித்தியநா தரைப்பணிந்து புகழ்ந்து போற்றி. (௧௧)

**வேறு.**

பேயூரத் தேரென்னும் பிரபஞ்ச வேதமறத்
தாயூர விடையிருந்து மூலையருந்துந் தனையரென
மீயூரம் மலர்ப்பாதம் விருப்பினர்க்கே யருள்புரியு
மாயூரத் துறைகருணை வள்ளலா ரடிபோற்றி. (கஉ)

**வேறு.**

அருவிடை யம்மை பாகா வலங்குசெம் பவளத்தேகா
பொருவிடை யுகந்த மேகா காவெனப் புகழ்ந்து ளோரைக்
கருவிடை யணுகா வண்ணங் காத்தருள் புரிதல் செய்யுந்
திருவிடை மருதூ ரண்ண றிருவடி மலர்கள் போற்றி. (கங)

**வேறு.**

நீரூரும் வாவிகளும் நிழலூரும விளைபழன நிரையு மேய
காரூருஞ் சோலைகளும் விமலகம லாலயமுங் கடிசேர் மன்றற்
சீரூரு மாளிகையார் தேரூரும் வீதிகளுந் திகழுஞ் செய்ய
வாரூருந்தொழுதுபணிந் தாரூருமண்ணன்மலரடிகள்போற்றி.

**வேறு.**

கும்பகோ ணத்தி லெய்திக் குரைகடல் விடத்தை யுண்ட
நம்பனை வணங்கி யேத்தி நவிறிரு வையா றெய்திச்
செம்பவ ளாச லபபோற் றிகழ்திரு மேனி யண்ண
லப்புயப் பதங்கள் போற்றிப் பிறபதி யனைத்துந் தாழ்ந்து ()

தலஞ்சிரா மலையுண் மேய தாயுமா னவனைப் போற்றிச்
சிலந்தியை முடிசூட் டானைக் காவுறை சிவனை யேத்தி
நலந்திகழ் வைகை சூழுங் கூடலை நண்ணித் தாழ்ந்து
சலந்திகழ் புனித மார்பொற் றாமரைத் தடம்ப டிந்து. (கசா)

அங்கயற் கண்ணி யோடு மாலவா யானைக் கண்டு
பங்கயப் பாதம் போற்றி யருச்சனை பரிவி னாற்றிச்
செங்கையாற்றொழுதுசிந்தை நெகிழ்ந்தருட்செல்வமோங்கிப்
பொங்கிய வன்பு சேரத் தோத்திரம் பலபு கன்றான். (கஎ)

இவ்வாறு புகன்று தாழ்ந்து முதல்வனின் னருளைப் பெற்றுச்
செவ்வாறு கதியை நல்குந் திருப்பூவ ணத்தைப் போற்றி
யவ்வானத் தளவு மோங்கும் பரங்குன்ற மடைந்து கண்டு
கைவாயால் வழிபா டாற்றித் திருச்சுழி கசிந்து போற்றி. ()

மறையொரு நாலுங் கூறும் புதுவைமா நகருள் வந்து
பொறைதரு மகிமை நோக்கி யுடன்மயிர்ப் புளக மோங்க
முறையுடன் ருழ்ந்தெ ழுந்து சிவகங்கைத் தடத்துண் மூழ்கித்
துறையினிற் சந்தி யாதி யனுட்டானத் தொழில்பு ரிந்து. ()

செயத்தொழில் புரியா நின்ற சந்நிதி யெதிரே சென்று
வயித்திய நாத ரோடு சிவகாம வல்லி பாத
முயிர்த்துணை யெனவே தேறி நெஞ்சினு ளுவந்து தாழ்ந்து
சயித்திய வபிடே காதி யருச்சனைத் தகைமை பூண்டான். ()

வேறு.

எண்ணெ யாதியா லைந்துமற் றீட்டியங் கிருத்தி
வெண்ணெய் சேர்திரு நிவேதனம் வியத்தக வமைத்துக்
கண்ணை யுள்ளத்தைக் கவர்கடி மாலைகள் கட்டி
மண்ணை யுண்டவன் றேடிய மலர்ப்பதம் வழுத்தி. (உக)

வேறு.

அன்புறு பரத்து வாச முனியருந் தவர்க ளோடு
மின்புற வண்ணல் பக்கத் திருந்தருச் சனைகள் செய்வான்
முன்புறவெண்ணெய்க்காப்பு முறையின்மஞ்சனங்களாட்டிப்
பின்புவண்பசுவின்பாலைக்கொணாகெனப்பணிக்கேட்டோர்.

கறந்தவான் பாலி ருந்த கலசத்தை யெடுத்துப் பார்க்கச்
சிறந்தபாற் கலசத் தோர்நுண் டிவலையும் பசையு மற்று
வெறுங்கல சந்தா னாக மெய்ந்நடு நடுங்க வன்னோ
ரிறந்தவிப் பழிக்கு ளானோ ரெவரெனத் திகைத்துச் சென்று.

பரிசனர் பாலைக் காணு மெனமுனி பதறிக் கேட்டு
விரிசடை யண்ணற் காட்டி வியந்திட வைத்த பாலை
யுருசியி னுண்டோன் யாவ னவன்பசு முகமு றற்குக்
கரிசகல் புதுவை நாதா வருளெனக் கனன்று சொன்னான். ()

புஞ்சமா ரேவ லாளர் தம்முளோர் புரிமுந் நூலோன்
பஞ்சுறு செந்தீப் போலும் பசித்துயர் வருத்தச் சோர்ந்து
வஞ்சக மாக மற்றோர் காணுறு வகையான் பாலை
நஞ்செனவெண்ணுதுண்டான்பின்வரு நவையையோரான்.

அன்னவ னக்க ணத்தே யாமுக மாகி நின்றான்
முன்னவன் பூசை நேசங் குறைவற முனிபு ரிந்து

சென்னிமேற் செங்கை கூப்பி யிருவிழி செறிநீர் பாய
நன்னய மறைகள் போற்று நாதனை வழுத்த லுற்றான். (உசு)

வேறு.

கயல்விழி யுமைசிவ காமி வல்லியை
யயலக லொருபுறத் தமைத்துப் பல்லுயிர்
மயலற விருந்தருள் வயித்தி யப்பனே
செயலற வெனையுமா டேவ தேவனே. (உஎ)

வேறு.

சடையணிமந்தா கினியுட னிந்தா தரிநீதா
வடையரவிந்தா சனவழு குந்தா மாரநாதா
விடையையுகந்தாள் விரவொளி நந்தா விரிஞான
நடையருளொந்தாய் புதுவை யுறைந்தாய் நனிபோற்றி. (உஅ)

வானே வளியே வனியே வனமே மண்ணேயென்
னூனே யுயிரே யுறவே யுணர்வே யொளியேசொன்
றேனே தானே யெனவே நின்றாய் நசைநீங்குந்
தேனே புதுவைச் சிவனே திருவே செல்வமே. (உகூ)

கடலே மலையே காரே மதியே கதிரேபொன்
மடலே மடலார் மணமே மணமார் மதுவேபல்
லுடலே யுயிரே வெளியே யளியே யொளியேயு
மடலார் புதுவைப் பதிவா ழமலா வருள்போற்றி. (௩0)

வேறு.

இத்தன்மை பரத்து வாச முனிவரா னேத்தி நின்று
மெய்த்தன்மை யின்பமெய்தி மெய்ம்மயிர்ப் புளக மோங்கச்
சுத்தமார் சோதி யாய சுயம்பிர காசத் தேசா
ருத்தம விலிங்க மூர்த்தி யின்னருளுதயப் பெற்று. (௩க)

பன்னசா லையினு ளெய்திச் சமாதியுட் பரிந்தி ருப்ப
முன்னவன் மஞ்ச னப்பா லருந்தியா முகத்தை யுற்ற
துன்னெறிச் சிவத்து ரோக விப்பிரன் பரத்து வாசன்
முன்னுறச் சென்று தாழ்ந்தே யிரந்தின்ன மொழியலுற்றான்.

அடியனே னறிவி லாமற் புரிந்திடு மபரா தத்தைப்
பொடியணி பரத்து வாச முனிவர பொறுத்தி யான்செய்

கொடுமைக ளகலும் வண்ணங் கூறுதி யெனவி ரப்ப
படிபுகழ் பரத்து வாசன் சினத்தொன் றும் பகர்ந்தி டாமல்.

நாயகற் காட்ட வைத்த வான்பாலை நசைபி னுண்ட
தீயவற் காண நீதே செப்புரை யாட நீதென்
றுயவன் முகத்தை நோக்கா தருந்தவன் முனிவ ரோடு
நேயமோ டிசைந்து நீங்காச் சிவனடி நினைந்தி ருந்தான். ()

## ஆறுமுகமான அத்தியாயம் முற்றிற்று.

### ஆகத்திருவிருத்தம் ௬௨௮௪.

---

### ஆறுமுகமான அத்தியாயச் சுருக்கவசனம்.

அடியார்கள் இச்சித்தவரங்களைக் கொடுக்கும் வள்ளலாகிய வயித்தியநாதேசுரரை வணங்கிச் சந்திரன் க்ஷயநோய்தீர்ந்த சரிதஞ்சொன்னோம். இனி, சிவபூசைக்கு வைத்தபாலைத் தாகத்துக்குப் புசித்த பிராமணன் பசுமுகம்பெற்ற சரிதத்தைச் சொல்லுவோமென்று நைமிசாரணிய வாசிகளாகிய முனிவருக்குச் சூதமுனிவர் சொல்வாராயினர்:—நைமிசாரணியத்தை விட்டுச்சென்று பரத்துவாச முனிவர் சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்துவர நினைந்து காசிக்ஷேத்திரத்தையடைந்து கங்காநதியிலே ஸ்நானஞ்செய்து விசுவேசரையும் விசாலாட்சியம்மையையுந் தரிசித்து மீண்டு கேதாரமுதலிய பற்பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று நான்குவேதங்களு மெடுத்துச்சொல் லும் புதுவைத்தலத்திலேவந்து சிவகங்கையிலே தீர்த்தமாடி நித்திய கன்மானுட்டானமுடித்து வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையாரையும் பூசை செய்யத்தொடங்கிப் பூசைக்குவேண்டு முபகரணப் பொருள்கள் யாவுஞ்சேர்த்துத் தொகுத்துவைத்துக்கொண்டு எண்ணெய்க்காப்புமுதலிய அபிடேகங்கள்செய்து பசுவின்பாலை யெடுத்துவரும்படி சொன்னார். அதைக்கேட்டவர் போய்ப் பாற்கலசத்தைத் தேடி யதிலேயொரு துளிபாலு மில்லாதிருந்ததைக்கண்டு இந்தப் பாலைக்குடித்துப் பழியேற்றுக்கொண்டவர் யாவரோ? என்று மெய்ந்நடுங்கித் திகைத்துப் பரத்துவாச முனிவரிடஞ்சென்று தெரிவித்தனர். அவர் பூசை முட்டுப்பாடுற்ற வருத்தத்தால் சிவ திரவியத்தைக்கவர்ந்த இந்தப்பாவி யெவனோ! அவன் பசுமுகம்பெற வயித்தியநாத ரருள்புரிவரெனச் சபித்தனர்.

அப்பாலைப் பசியினுலெலித்துத் தமது பணிவிடைகள் செய்பவரிலொரு பிராமணன் குடித்துவிட்டதனுலே யவன் அந்தக்ஷணமே பசுமுகம்பெற்று நின்ருன். இவன் இங்ஙனமாக முனிவர் பூசைக்கு யாதொரு குறைவுமில்லாமல் வேறொருவனையாற் பால் வரவழைத்த பிஷேகஞ்செய்து, மற்றைக்கிரியைகளுஞ் செய்துமுடித்து வணங்கித் தோத்திரஞ்செய்து புளகாங்கிதங்கொண்டு சுயம்பிரகாச சோதிமயமாகிய சிவலிங்கப்பெருமான் திருவருள்பெற்றுப் பன்னசாலையடைந்து நிட்டை கூடியிருந்தனர். பசுமுகம்பெற்ற சிவத்துரோகப் பிராமணன் முனிவர் முன்சென்று வணங்கி "அறிவில்லாம லடியேன்செய்த அபசாரத்தைப் பொறுத்தருளுக" என்று பிரார்த்தித்தனன். முனிவர் சிவத்துரோகஞ்செய்த தீயபாவிமுகத்தைப் பார்ப்பதும் அவனேடு பேசுவதும் தீமையென்று நினைந்து அங்குள்ள முனிவரோடு அன்பு இசைந்து சிவ சிந்தனையிலிருந்தனர்.

பதினுருவது

# ஆமுகந்தீர்த்த அத்தியாயம்.

முதலுடை னறிவு செய்கை முழுவது நினவே யென்று
மதிபெற வுணரா நின்ற வண்மையை நோக்கி யன்போ
டிதமரு ளருளை யீந்தே யின்பமே விடவு நல்கும
புதுவையு ளெந்தை பாதம் வினையறப் போற்றல் செய்வாம்.

தவத்துயர் பரத்து வாசன் புதுவையைச் சார்ந்து செய்யும்
பவத்துய ரொழிக்கும் பூசைப் பாலெலாம் பருகும் பூசைச்
சிவத்துரோ கிக்கு வந்த தீவினை சொன்னே மன்னே
னவத்துறு மாமு கந்தீர்த் தருள்கதை யுரைக்க லுற்ரும். ()

தேமுக மலர்ப்பூஞ் சோலைத் திரள்பழ னங்கள் சூழும்
பாமுகச் சுருதி போற்றும் புதுவையம் பதியைச் சேர்ந்து
வேமுகஞ் சிந்தை யோடு வேற்றுரு வடைந்து நைந்தே
யாமுக முற்ற நூலோ னல்லலுற் றவணி ருந்தான். (௩)

பதியுளோர் காணுந் தோறும் பழித்துரை பகர்வர் சில்லோர்
மதியிலா னித்து ரோக மெவ்வண மாற்று மென்பார்
கதியிவன் றனக்கு மீளா நரகமே காணு மென்பார்
புதியவன் வாயி லீய முருக்குநீர் புகட்டு மென்பார். (௪)

வழியெதி ருறவே கண்டோர் மற்றொரு வழியாற் செல்வர்
விழியெதிர் கண்டோ ரஞ்சி விழித்திடா தகன்று போவர்
மொழிபல விகழ்விற் கூறி யூரவர் முனிய வேகாப்
பழிபடு சிவத்து ரோகம் பலித்தது பனவ னுக்கே. (௫)

திங்களோ ராறவ் வூரி லிவ்வகை திரிந்தவ் வூரோர்
தங்களைக் காணுந் தோறு நீசர்போற் றூரச் சார்ந்து
மங்கிய மதியு மற்றுப் பித்தர்போன் மயங்கிச் சோர்ந்தா
னிங்கரன் றிரவி யத்தைக் கவர்ந்தவர்க் கிதுவோ துன்பம். ( )

இத்துய ராறு திங்க ளநுபவித் தியம்பொ னாத
மெய்த்துய ராற்றூறுக மெலிந்துமப் பதியை நீங்கா
னித்தனுங் கருணை கூர நெடும்பதி யுள்ளோர் கண்டு
சித்தம திரங்கி யோர்நாட் டீவினை யோனைக் கூவி. (௭)

அண்ணலுக் கமைத்த பாலைப் பசியினா லெடுத்த ருந்தி
பெண்ணிலாத் துயர டைந்து பசுமுக மெய்தப் பெற்றாய்
வெண்ணிலா வேணி யானே யிப்பிழை பொறுத்தல்வேண்டுங்
கண்ணிலாக் கொடிய தீயோய் கூறுதல் கருதிக் கேண்மோ.

கதிரவ னுதிக்கு முன்ன முயர்சிவ கங்கை மூழ்கி
மதியொடு சந்தியாதி வந்தனைத் தொழின்மு டித்து
நதிமதி பொதியும் வேணி வயித்திய நாத ரோடு
துதிசிவ காமி யம்மை மலர்ப்பதந் தொழுது போற்றி. (௯)

மன்னிய பிரகா ரத்தை நூற்றெட்டு வலமுஞ் செய்து
துன்னிய வலகு மிட்டுத் தூய்த்திரு மெழுங்கு மாற்றிப்
பன்னிய பள்ளித் தாமம் விளக்கிடும் பணியுஞ் செய்து
சென்னியஞ் சனமான் பாலோ டைந்தனு தினமு மாட்டி. ( )

திருவமு தூட்டித் தூப தீபமுந் திகழக் காட்டிச்
சுருதிசொன் மனுக்க ளோதி யருச்சனை சோட சத்தாற்
பரிவினாற் பதுநா ளாமோர் மண்டலம் பண்பிற் செய்தாற்
கருணையங் கடவு ளுள்ள மிரங்குநிற் காக்கு மென்றார். (௧௧)

புகலரும் பதியி னுள்ள புனிதமா மறையோ ராதி
சகலரு மிரங்கிக் கூறும் வாசகந் தாழ்ந்து கேட்டே
யிகல்பெருங் கடலு ளாழ்ந்தே யுயர்கரை யேற்ற மில்லோன்
சுகமுறுந் தோணி பெற்றா லெனமனத் துளக்க மற்று. (௧௨)

விப்பிரன் புலரு முன்னஞ் சிவகங்கை வியநீ ராடித்
திப்பிய சந்தி தானஞ் சேர்ந்துதாழ்ந் தெழுந்து நூலோர்
செப்பிய வாற்று னேயந் திகழ்சிவ காமி யம்மை
யப்பனைத் தொழுது நித்த மிடையறு தன்பு செய்தான். ()

ஆலயத் துள்ள மேன்மைப் பணியெலா மடைவி னுற்றிக்
கோலமா ரருச்ச னதி குறைவற முடித்து நீங்காச்
சீலமா வாறு காலந் தினந்தொறுந் தெரிசித் தேத்திக்
காலனைக் காய்ந்தோன் றெண்டு கருத்துறப் புரிய லுற்றான்.

இரவொடு பகலோ வாது நாற்பது நாளிவ் வண்ணங்
கரவகல் சிந்தை யோடும் பணிபுரிந் திடுதல் கண்டு
தரவருட் கருணை வள்ளல் விப்பிரன் றளர்வு தீர்த்தா
னரவகல் கதிரோ னென்ன விளங்கின னந்த ஞான்று. (கரு)

தேகத்தி னுற்ற நோவுஞ் சிந்தையுண் மிடைந்த துன்புஞ்
சோகத்தைப் புரிந்த வாவின் முகமுமுன் றுறந்து நீங்க
யோகத்தை நேரே பெற்றோர்க் குயர்சிவ போக மெய்தும்
பாகத்தை யொப்பா மின்பப் பரவையு ளாழ்ந்து நூலோன்.

இரங்குத றன்மை யாய புதுவையு ளீசன் றன்னைத்
திரம்பெறத் தாழ்ந்தெ ழுந்து சென்னியிற் செங்கை கூப்பி
யரந்தைக ளகன்று சிந்தை யமலமெய் யன்பு பொங்கி
நிரந்தரம் விழிநீர் பாய வின்னன நிகழ்த்த லுற்றான். (கஎ)

சங்கரா வீசா நேசா நாணுவே போற்றி போற்றி
கங்கரா காள கண்டா கண்ணுதற் கடவுள் போற்றி
செங்*கரா திங்கள் சென்னி திகழ்விலோ சனனே போற்றி
பொங்கரா வணிந்தோய் போற்றி புதுவைநாயகனேபோற்றி.

சிந்தையு ணேசமின்றித் தீயனேன் புரிந்த தீமை
தந்தையிற் பொறுத்துக் காத்துத் தனியருள் புரிந்த நாதா
வெந்தையே யினிநின் பாத மெக்காலு மறவா வண்ணம்
பந்தம தகல நல்க வேண்டுமென் றடிப ணிந்து. (கக)

உமைசிவ காமி யம்மை யுபயபொற் பாதம் போற்றிக்
கமைபெறு விடைகொண் டேகிக் கருணைசேர் பரத்து வாச
விமலமா முனிபாற் சென்று வீழ்ந்துதாழ்ந் தெழுந்துபோற்ற
வமலநற் றவத்தோ னீசன் கருணையற் புதம்வி யந்து. (௨0)

* கரம் - ஒளி.

அந்தணன் றன்னை நோக்கி யருந்தவ னினிது கூறு
முந்தநீ புரிந்த தீங்கு நினைதொறு மொழிய வொண்ணு
வெந்துயர் நல்கு மன்ன கொடுமையைப் புதுவை மேய
வெந்தையே தவிர்த்த லன்றி யெவரகற் றிடவல் லாரே. ()

ஆதலா னாலோய் கேண்மோ வரன்றிர வியத்தைக் காணி
னீதமில் விருப்ப முன்ற னெஞ்சினு நினையல் பஞ்ச
பாதகம் போலு மன்று மற்றது பகரும் போதிற்
றீதணு வளவா னாலுஞ் செய்திடில் வினைகள் சேரும். (உஉ)

இத்திற முறுதி செய்தே யீசனை யடியார் தம்மைப்
பத்தியாக் கண்டு போற்றிப் பண்பறிந் தேவ லாற்றிற்
சித்தமா சகன்று நீங்கு மின்பமுஞ் சேரும் பின்பு
முத்தியு மடையு மென்று தவமுனி மொழிந்தெ ழுந்து. ()

மறைபகர் புதுவை வாழு முமையுடன் வரதன் பாத
நிறைதரு மன்பாற் போற்றி விடைகொடப் பதியை நீங்கி
முறையுடன் முனிவர் சூழப் பரிசனர் முன்பு செல்லத்
திறனுடையன்பின்மற்றைத்தலங்களைத்தொழவுஞ்சென்றான்.

ஆமுகந்தீர்த்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் க௩0அ.

## ஆமுகந்தீர்த்த அத்தியாயச் சுருக்கவசனம்.

தவத்தாலுயர்ந்த பரத்துவாசமுனிவர் சிவபூசைக்கு வைத்திருந்த பாலை யெடுத்துக்குடித்த சிவத்துரோகி பசுமுகம்பெற்ற கதையைச்சொன்னோம். இனி அந்தச் சிவத்துரோகம் நீங்கப்பெற்ற கதையைச் சொல்வோமென்று சூதமுனிவர் சொல்வாராயினர்:—கேளுங்கள் சௌனகாதிருஷிகளே! சிவத்துரோகியாகிய பிராமணன் வேற்றுருவம்பெற்றுப் புதுவைத்தலத்திலே துன்பமுற்று மனம் நைந்திருந்தான். அவனை அப்பதியிலுள்ளோர் காணுந்தோறும் பழித்து நிந்தனைசொல்லுவார் சிலர். இந்தப் புத்தியீனன் இந்தப் பாதகத்தையெவ்வாறு மாற்றுவனென்பார் சிலர். இவனுக்கு மீளாநரகமே கதியென்பார் சிலர். இவனை வழியிலே யெதிரே கண்டால் வேறொரு வழியாகச்செல்லுவார் சிலர். இந்தவிதம் பழிப்புக்காளாகி யந்த வூரவர்களைக் காணுந்தோறு நீசரைப்போலவே தூரத்திலே யகன்று மதிமய

க்கித்திரிவான். சிவத்துரோகிகளுக்கு வருந்துன்ப மிவ்வளவோ? அது சொல்லமுடியாது. இங்ஙனம் ஆறுமாதங் கழிந்தவுடன் அத்தலத்திலுள்ளோர் மனமிரங்கி யொருநா ளந்தப்பாதகனைப்பார்த்துக் "கொடியபாதகனே! நீயிந்தச் சிவத்துரோகம் நீங்கப்பெற்றுப் பண்டைய வடிவம் பெறவேண்டுமானால் சூரியோதயத்துக்கு முன்னெழுந்து சிவகங்கையிலே தீர்த்தமாடிச் சந்தியாதிகடன்முடித்து வயித்தியநாதரையுஞ் சிவகாமி யம்மையாரையுந் தொழுது நூற்றெட்டுப் பிரதக்ஷிணம் வந்து திருவலகு திருமெழுக்குத் திருப்பள்ளித் தாமந் திருவிளக்கிடுதலாகிய பணிவிடைகள் செய்து வயித்தியநாதரைப் பஞ்சகௌவியத்தா லபிடேகமுஞ் சோடசவுபசாரத்தாற் பூசையுஞ் செய்வித்து ஒரு மண்டலம் விரதங்காப்பாய்" என்று சொல்லினர். அந்தவார்த்தையைத் துன்பக்கடலைக் கரையேற்றுந் தோணியாகக் கைக்கொண்டு ஒரு மண்டலமும் விதிமுறைதவறாது விரதங்காத்து முடித்தனன்.

அப்பூசனைக்குக் கிருபாநிதியாகிய வயித்தியநாதர் மனமகிழ்ந்து அவனுடைய துன்பத்தைமாற்றிப் பழைய வடிவுபெறும்படி யனுக்கிரகஞ் செய்தனர். உடனே சிவத்துரோகியாகிய பிராமணன் முகமாறி யிரவகன்ற சூரியனைப்போலப் பிரகாசித்து வயித்தியநாதரை வணங்கிப் பேரானந்தமுற்றுச் "சுவாமீ! உம்முடைய திருவடியை மறவாத வரந்தரவேண்டும்" என்று கேட்டு விடைபெற்றுக்கொண்டு பரத்துவாச முனிவரிடஞ்சென்று அவரை வணங்கி யெதிரே நின்றான். அம்முனிவ ரிவனைப்பார்த்து வயித்தியநாதர் திருவருளை மிகவியந்து "இனிச் சிவதிரவியங் கவரும் நினைப்பை மறந்துவிடுக" என்று நற்போதனை செய்துவிட்டு வயித்தியநாதரையும் சிவகாமியம்மையாரையும் வணங்கி மற்றைத் தலங்களைத் தரிசிக்கச் சென்றனர்.

---

பதின்மூன்றாவது

# மிளகுபயறான அத்தியாயம்.

---

நீடுபல் காலந் தோறு மருச்சனை நியமம் பூண்டு
தேடுவோ ரலந்து நிற்பச் சிறுமையும் வெறுப்பு நீங்காப்
பீடுறு சிந்தை யேனை யற்புதம் பெருக வாண்ட
மாடுறு புதுவை மேய வயித்திய நாதா போற்றி. (க)

தவமுயர் பரத்து வாச முனிபரி சனரி லோர்று
லவனரற் காட்ட வைத்த வான்பாலைக் கரந்த ருந்திக்
கவலையா முகத்தை யுற்று நீங்கிய காதை சூதன்
சிவமுயல் சவுன காதி முனிவர்க்குத் தெரித்த பின்னர். (உ)

அக்கதை யனைத்துங் கேட்டுச் சவுனக ரகத்து ளன்பு
நெக்குநெக் குருககத் தோடு புதுவையு ணிமலர்ப் போற்றிப்
பொக்கமா வணிகர் கூற மிளகெலாம் பயறாய்ப் போன
மிக்கவற் புதத்தைக் கூறு யெனமுனி விளம்ப லுற்றான். ()

வேறு.

பாடல மணங்கமழ் பாவை பங்கின
னுடல்க ளறுபத்து நாலு மாற்றினோன்
கூடலில் வணிகர்கள் கொண்டு விற்குநர்
வீடலா வாணிக மென்று மேன்மையார். (ச)

வேறு.

சேமமார் தெருவிற் சென்று சேயிழை யாரை யாளக்
காமனார் போலு மீசன் காவலை யணிந்து மன்பார்
மாமனார் போலும் வந்து வழக்குரை செயவும் பெற்ற
நாமமார் மரபு ளோரந் நகருள்வாழ் வணிகர் மாதோ. (௫)

இனதன மாதர் மைந்த ரிருங்கிளை மல்க நீங்காக்
கனதன நிதியம் பொங்க வாணிகங் கருதிச் செய்து
தனதனைப் போலு நாய்கர் யாவருஞ் செல்வஞ் சார்ந்து
மனதன வரத நேச மதுரைநா யகன்பால் வைத்தோர். (சு)

மலையுள சரக்கு நீடு மாநகர் வனச் சரக்கு
மலையுள சரக்குங் கொண்டு கட்டியா தாயந் துய்ப்போர்
நிலைபெறு மலையா ளத்திற் சரக்குக ணெடிது கொள்ளத்
தொலைவிலா வனையார் போந்தார் கூடன்மா நகர்து றந்து. ()

கணக்கிலா வொருத்தல் சாரக் கந்துகங் களிலே யூர்ந்து
தணக்கம லாக ரங்க டருவன நகர் கடந்து
குணக்கொடு குடக்கினுள்ள பொருள்வினைக் கூர்ந்து ணர்ந்து
வணக்கமார் தெங்கு பூக வனமலை யாளமுற்றார். (அ)

அந்தமின் மலைநா டாய வப்பெருந் தன்மை கேண்மின்
னிந்திரன் வெகுண்டு முன்னாட் சிறையரிந் திடவு மஞ்சிச்

சந்தமென் மலைகள் சென்று சேரமான் சரண டைந்து
சிந்தையு ளச்சந் தீர்ந்து திறல்போற் சேர நிற்கும். (௯)

பொருளொடு முடைய வெல்லாம் பொன்றிடுந்துயருற்றாலுந்
தெருட்ரு துறக்க மிம்பர்ச் சேரினு மாங்குள் ளோர்க
ளருளுநல் லறமும் வாய்மை யறைதலு முடைய ரன்றி
மருளும்வன் மறமும் பொய்யு முலோபமு மருவா ரன்றே. ()

வேறு.

ஆத லாலுரை யம்மலை நாட்டிடை
மாதந் தோறுநும் மாரிபொ ழிந்திடு
மீதி லாலொப் பிகந்தவ ரேவரும்
போத வாழ்வர் புரந்தர னென்னவே. (௧௧)

வேறு.

கரசரா ணுதி யங்கத் துவர்நிறங் கடிநீ றென்றே
பரசுமே காவி தன்னைப் பணிந்தன னூரான் மன்ன
னரசனிவ் வன்ப னுகி லந்தநாட் டுள்ளோ ரன்பை
யுரைசெய வேண்டு மோமெய் யன்பினி லொப்பி லாதோர்.

தெய்வமுண் டென்று நம்புஞ் சிந்தனைத் திறம்பெற் றோர்க்கு
மெய்வகை வினைக ளுண்டு மிகுபிறப் பிறப்பு முண்டு
வைவக துறக்க முண்டு நடுக்குறு நரக முண்டு
சைவநன் னெறியு முண்டு சார்ந்திடில் வீடு முண்டு. (௧௩)

இத்திற மந்த நாட்டோர்க் கியல்புற விசையு மென்று
மத்திற மாந்தர் வாழு மந்நா டடைந்து நாய்கர்
மெய்த்திறத் தவ்வூர் நாய்கர் மனையிடை விருப்பிற் சென்று
பொய்த்திற மகன்ற நேச மொழிபுகன் றளவ ளாவி. (௧௪)

பாகொடு மிளகு வேண்டுஞ் சரக்குகள் விலைப கர்ந்தே
யீகையி னிதிய மீந்து சரக்கெலா மிசைந்து கொண்டே
யோகையி னெண்ணி லாத பொதிகளி னுறவுட் பெய்து
வேகமார் பொதியெ டுத்து விட்டனர் விடைகண் மீது. (௧௫)

இரும்பினிற் றகடு காறைத் தெழின்மருப் பிணைகட் கேய்ந்த
விரும்புபொற் றளைப்பூண் பூட்டி வெங்கல மணிக ளோசை
யரும்பநீள் கழுத்திற் கட்டி யலங்கரித் தளவி லாத
பெரும்பொதிபொறுத்தூர்நீங்கி யெருதுகள்பெயர்ந்தவன்றே.

மணிகளி னோசை யேகு மழவிடைச் செருமலோசை
யணிபத விரும்பு கல்வி னதாரணை யடிபேரோசை
திணிபுய வணிக மாக்கள் சென்றிடத் தெளிக்கு மோசை
மணியெறி தாங்க வேலை யொலிகெட மாற்று மன்றே. (௧௭)

இருவினை யிட்ட தேக மின்னுயிர் பொறுத்தல் போலுந்
திருமறு மார்ப வேறு சிவன்றிண்டோ டாங்கல் போலும்
பருவரை நிரைசு மந்து படர்கவிக் குலங்கள் போலு
மருவுயர் பொதிகள் கொண்டு நடந்தன மணிப்பல வேறு. ()

ஆறுகள் வனங்கண் மீறு மணிநகர் பலக டந்தே
யூறுக ளின்றி நாய்கர் பொதியொடு மொருத்த லூர்ந்து
வீறுகள் பகர்ந்து நெஞ்சுட் களிப்பொடும் விரவி னார்கைம்
மாறுகள் கருதா வீசன் புதுவையை வந்த டைந்தார். (௧௯)

எய்திய வணிகர் கூடிப் பொதிகளை யிறக்கித் தள்ளி
யுப்பெரும் பொதிகள் யாவு முப்பர்மலை யெனவ டுக்கி
மெய்திகழ் மேன்மை மேய சிவகங்கை வியனீர் மூழ்கி
மைதிகழ் கண்டத் தெந்தை வயித்திய நாதற் போற்றி. (௨௦)

உமைசிவ காமி யம்மை யுயர்ந்தபொன் னடிக ளேத்திக்
கமையுறு மன்பி னோடு விடைகொடு கருதி வந்து
சமையல்க ளாற்றி நாய்கர் சடிதியி னருந்தி வைக
வமைவுற வழைத்தார் கோவி லாயத்தா ரங்க ணெய்தி. (௨௧)

கூவிய மாந்த ரோடு வணிகருங் கூடச் சென்று
சேவுயர் கொடியார் கோவில் விசாரணைத் திறத்து ளோர்கள்
மேவிய வருச்ச ரோதி யந்தணர் வியந்து கூடி
யேவல்செய் கோயில் வாயி லெய்தியஞ் சலிபு ரிந்தார். (௨௨)

வந்துநேர் நின்ற மேன்மை வணிகரை யனைத்து ளோரும்
புந்தியுண் மகிழ்ந்து கொண்ட பொதிமிள காத லாலே
யெந்தையார் கோவிற் குள்ள *மகமையு மீந்து பின்னுஞ்
சந்தமென் மிளகு பூசைக் கறிக்குதல் கெனவுஞ் சாற்ற. ()

கூறிய மொழிகள் வந்த வணிகர்கள் கூடிக் கேட்டுத்
தேறிய சிந்தை மேய சிவனிடத் தன்ப ராயு

---

*இக்காலத்து மகமையென வழங்குவது=முற்காலத்துச் சுங்க மென்பதுவே.

மூறிய வன்பு நீங்கி யுலோபமே லோங்க நேசம்
பாறியே மிளகி தன்று பயறென வேப கர்ந்தார். (உ௫)

என்றசொல் வாய்மை யாக வெண்ணியவ் வணிக ரீயு
மொன்றிய பொருளைக் கொண்டு விடுத்தன ரொருங்கு நாய்கர்
வென்றிசேர் பதியி னன்று தங்கியப் பதிவிட் டேகிச்
சென்றுசென் றுறபத் தோடுங் கூடன்மா நகரைச் சேர்ந்தார்.

வேறு.

பொதிகளும் வணிகரும் புரத்தி னண்ணிட
மதிபெறு நகரின்முன் வதிந்த வாணிகர்
நிதிகொடு வந்தனர் நேர்ந்து மெய்விலை
மதிமிள கருள்விரென் றுரைப்ப வந்துளோர். (உ௬)

விரைவுடன் பொதிகளை யிறக்கி வீங்கிய
நிரைபெறு கட்டுக ணெகிழ்த்த விழ்த்திடச்
சொரிமிள குழுந்ததாக் கண்டு சோர்வுடன்
பரிபொதி மற்றுள தவிழ்த்துப் பார்த்தனர். (உ௭)

பார்த்துடன் முற்றவும் பயறென் றேமுகம்
வேர்த்தனர் மயங்கினர் வெருண்டு நின்றுளஞ்
சோர்த்தனர் கூடலிற் சுந்த ரேசநீ
சேர்த்தநின் கருணையின் செய்கை யோவென்பார் ()

வேறு

மயங்கிய வணிகர் கூடி வரிபொதி மிளகி யாவும்
வயம்பட நீடு மாடப் பயறதா மாய மென்னே
சயம்பெறு மலைநாட் டுள்ளோர் சம்பிர தாய மாகப்
பயன்படு பொருளை வாங்கி மிளகெனப் பயறீந் தாரோ. ()

அன்னவா றன்று கேண்மின் னந்நாட் டுள்ளோர் யாருஞ்
சொன்னநன் மொழிமா றுத தூயவ ராத லாலே
யின்னதோர் வஞ்சஞ் செய்யா ரிதுவழித் தங்க றன்னிற்
றுன்னிய துயிறல் கண்டி யாவரோ சோர்வு செய்தார். ()

அங்கது நிசமே யென்னி லொன்றிரண் டன்றே கூறச்
சங்கையில் பொதிக ளன்றே சடிதியிற் சொரிந்து கொண்டு
பங்கமில் பல்லோர் கூடிப் பயறுபெய் திட்டத காதா
லிங்கிது வன்றிவ் வூரி னெய்திய சோர்வு மன்று. (௩௧)

ஈகையில் லாத பாவி யீட்டிய நிதியைக் கூட்டி
யோகையாற் புதைக்க மாறிக் கரியுமி யாய தேபோற்
சோகமே புரியுந் தீயெம் நிதியெலாஞ் சொரிந்து கொண்ட
பாகநன் மிளகி யாவும் பயறதாய் முடிந்த தன்றே. (௩௨)

வணிகர்கள் பலருங் கூடி யிவ்வாறு மதிம யங்கிக்
கணிதமி லைய மாக நினைந்தவா கழறி யுள்ள
மணிநிதி யிழந்தோ மந்தோ விவ்வினை வந்த தென்று
தணிவிலாத் துயர மெய்திச் சங்கையுற் றயரும் வேலை. (௩௩)

செப்பிய வணிகர் தம்முண் முதியனோர் செட்டி யாய்ந்தோ
னெய்ப்பிடத் துதவு மீச னிணையடிக் கன்பு பூண்டோ
னொப்பக றுயரு ளாழ்ந்த வணிகரை யுற்று நோக்கிப்
பற்பல மொழிகள் வேண்டாம் விளைந்தன பகரக் கேண்மின்.

மலைநாடு விட்டு நீங்கி மலைநகர் சிலக டந்து
தலைமைசேர் புதுவை யூரிற் றங்கினே மன்றி ராவி
லலைவக லீசன் கோவின் மகமையார்க் கஞ்சி யாமு
நிலைபெறு மிளகை மாடப் பயறென நிகழ்த்தி னோமால். ()

ஈசனார் பூசைக் கேயு மிளகையு மீந்தோ மில்லை
நீசமார் பொய்யு ரைத்தே மன்னதா னிதியு மேகி
யாசறு பழியுஞ் சால வந்ததீ தைய மின்றும்
வாசக மிதுவே வாய்மை யாமென வணிகர் னொந்தார். (௩௬)

அறிவழிந் தயர்ந்த வன்னோ ரனைவரு முள்ளந் தேறிப்
பிறிதொரு மாற்ற மென்னே பொய்யுரைப் பிழையே யீது
செறிவுறு மிளகை யெல்லாம் பயறெனச் செய்த தெய்வங்
குறியுறப் பயற்றை யின்ன மிளகாக்கிக் கொடுக்கு மென்று: ()

உறுதியை யுளத்தி ருத்திக் கூடலி லுறையு மீசன்
செறிதரு திருமுன் சென்று தீவினை யோர்கள் கூறு
மிறுதியில் பிழைசேர் பொய்யைத் திருவுள மிரங்கி யின்னே
பொறுவென வுரைத்துப் போற்றி வாணிகர் புகழ்ந்து நிற்ப. ()

நாயகன் கருணை கூர்ந்து விசும்பிடை நவில்வா னீவிர்
மேயவப் புதுவை யெய்தி யன்புடன் வியந்து போற்ற
நேயமோ டருள்வோ மென்ன நிருமலன் பாதம் போற்றிச்
சேயதென் புதுவைக் கேகச் சிந்தையு ளுவந்தி ருந்தார். (௩௯)

மிளகு பயறுன அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௧௩௯.

## மிளகுபயறான அத்தியாயச் சுருக்க வசனம்.

மேற்கூறிய கதையனைத்துஞ் சௌனகாதி முனிவர்கள் கேட்டு மனத்துள்ளே யன்புமேலிட நெக்குருகி வயித்தியநாதரை யங்கிருந்தபடியே வணங்கிச் சூதமுனிவரைநோக்கி மிளகுபயறாகிய சரிதஞ் சொல்லியருள வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்:—அறுபத்துநாலு திருவிளையாடல்கள் செய்த சோமசுந்தரக் கடவுள் வீற்றிருக்கப்பெற்ற மதுராநகரத்திலே அக்கடவுளிடத்திலே பத்தியுள்ளவராய்க் குபேரனைப்போலுஞ் சம்பத்தைப்பெற்று அந்நகர வாசிகளாயிருக்கும் வணிகர்கள் மலைபடுதிரவியம், கடல்படுதிரவியம், நாடுபடுதிரவியம் ஆகிய சரக்குகளைவாங்கி வைத்திருந்து விலைகுறைந்த காலத்தில் விற்று இலாபமநுபவிப்பவர். அவர்கள் மதுராநகரத்தைவிட்டுச் சரக்குகள் வாங்கும்பொருட்டு மலையாளத்தைநாடிக் குதிரைகளிலேறிக்கொண்டு அநேக பொதிமாடுகளுடன் வந்துசேர்ந்தார்கள். அந்த மலையாளத்திலுள்ளவர்கள் என்ன கஷ்டம்வந்தாலும் அருள் அறம் வாய்மைமுதலிய நற்செய்கை தவறாதவர்களாதலால் மாதமூன்றுமழை யங்கேதவறாது பெய்யும். அந்நகரத்தில் மழையில் உவர் சுமந்துகொண்டுவந்த வண்ணானுடைய சரீரத்திலுவர்நீர் பாய்ந்து வெண்ணிறமாகித் தோன்றலும் அதை அரசன்கண்டு இவர் விபூதி தரித்த சிவனடியாரென்று வணங்குவனென்றால் மற்றுள்ளோர் சிவநேசத்தைச் சொல்லவேண்டுமோ? அது நிற்க. மேற்கூறிய வணிகர்கள் விலை விசாரித்து இலாபங் கிடைப்பனவாகப் பாக்கு மிளகு முதலிய சரக்குகளை வாங்கிப் பொதிமாடுகளிலேற்றி நடப்பித்துக் கொண்டு நதிகள் காடுகள் மலைகள் ஊர்கள் பலவற்றையுங்கடந்து புதுவைத்தலத்திலே வந்து பொதிகளையிறக்கி மலைகள்போலடுக்கி வைத்துவிட்டுச் சிவகங்கையிலே தீர்த்தமாடி வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையாரையும் பணிந்து துதித்து விடைபெற்றுவந்து அன்னஞ் சமையல்செய்து போசனம்பண்ணியிருக்குஞ் சமயத்திலே வயித்தியநாதர் கோயிற் பஞ்சாயத்தாராலே யழைக்கப்பட்டு அவர்கள முன்னேவந்து வணிகரெல்லாரு நின்றார்கள். அவர்களைநோக்கிப் பஞ்சாயத்தார் "நீங்கள் மிளகுப் பொதிகொண்டு வந்திருந்தால் கோவிலுக்குச் சுங்கப்பொருள் கொடுக்கவேண்டும். அது கொடுப்பதுடன் சுவாமி நைவேத்தியத்துக்கு மிளகுங் கொடுக்கவேண்டும்" என்று கேட்டார்கள். வணிகர்கள் நாங்கள் மிளகுகொண்டு வரவில்லை உழுந்துகொண்டு வந்திருக்கிறோமென்று தங்கள் தீவினைவசத்

தால் முழுப்பொய் சொன்னார்கள். பஞ்சாயத்தார் அதை மெய்யென்றுநம்பி இவர்களை விட்டுவிடும்படி சொல்லினர், உடனே யெல்லாரும் பயத்தோடு பொதிமாடுகளை விரைவாக ஓட்டிக்கொண்டு மதுராநகர்வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள வாணிகர்கள் மிளகு வந்துவிட்டதென்று விசாரித்துவந்து விலைகேட்டு வாங்குதற்கு முயன்றனர்.

அப்போது பொய்கூறிவந்த வணிகர் மிளகுப்பொதிகளைக் கட்டறுத்துக் கீழேசொரிய முழுவதும் உழுந்தாயிருந்ததைக்கண்டு முகம்வேர்த்து மயங்கிப் பயந்து சுந்தரேசா! உனது திருவருளா? மிளகு முழுவதும் பயறாகிய மாயமென்னே? மலையாளத்தார் வஞ்சமாக மிளகென்று உழுந்தைக் கொடுத்தனரோ? அல்லது வழித்தங்கலிலே திருடர் மிளகை யெடுத்துக்கொண்டு உழுந்தைப்போட்டு மூட்டை கட்டிவிட்டனரோ? அங்ஙனஞ் செய்தற்கு மூட்டையொன்றிரண்டன்றேயென்று மதிகலங்கிச் சந்தேகித்து நிற்கும்போது, அவருள்ளேயொரு கிழவணிகன் சொல்லுவான்:—புதுவை நகரத்தார் கேட்ட மகமைக்குப்பயந்து உழுந்தென்று பொய்கூறினோம்; அன்றியும் வயித்தியநாதர் நைவேதனத்துக்கு மிளகுங் கொடுத்தோமில்லை. ஆதலால் நமது திரவியமெல்லாம் நாசமாகும் பொருட்டுப் புதுவையீசரே யிங்ஙனஞ்செய்தவர். பழியும் பாவங்களு மிகவந்தனவென்று சொன்னான். எல்லா வணிகருங்கேட்டுச் சந்தேகந்தெளிந்து மிளகைப் பயறாக்கிய தெய்வம் பயற்றை மிளகாக்கிக் கொடுக்குமென்று மதுரைச் சோமசுந்தரக்கடவுள் சந்நிதானமடைந்து சுவாமீ! "உம்மிடம் பொய்கூறிவந்த பிழைபொறுத்துக் காக்கவேண்டும்" என்று துதித்துநிற்ப அக்கடவுள் அசரீரிவாக்காக நீவிர் புதுவையைச்சேர்ந்து நம்மைப் பூசனைசெய்தா லங்கே யருள்செய்வோமென்று கூறினர். அதுகேட்டு வணங்கிப் புதுவைக்குப் போதற்கு வணிகரெல்லாருஞ் சிந்தித்திருந்தனர்.

பதினெட்டாவது

## பயறு மிளகான அத்தியாயம்.

மன்றுசேர் புதுவை மேய வயித்திய நாதா நீதா
வென்றுவா யாரக் கூற வின்றணித் தாம்பு னிற்றுக்
கன்றுமுன் கூவ வந்த வாவெனக் கருணை யோடு
மொன்றுசிந்தையுள்வந்தெய்தும் புதுவையுத்தமனேபோற்றி.

கொண்டான் மிளகி யாவும் பயறெனக் குழகன் காட்டக்
கண்டமென் வணிகர் காதை யுரைத்தனங் கடிதிற் சென்று
புண்டரீ கத்த டஞ்சூழ் புதுவையை யெய்தி நீல
கண்டனைப் போற்றி யன்னோ ரருள்பெறுங் கதையு ரைப்பாம்.

**வேறு.**

வாம கந்தர னங்கயற் கணிமண வாளன்
சோம சுந்தர னின்னருள் சுரந்திடப் பெற்று
க்ஷேம மோடியர் வணிகர்தென் கூடலை நீங்கித்
தேம லர்ப்பொழில் சூழ்புது வாபுரி சேர்ந்தார். (௫)

**வேறு.**

கோபுரங் கண்டுமுன் றொழுது கொண்டனர்
ஈபுர மகிமையை மகிழ்ந்து கண்டனர்
தாபத மகல்சிவ கங்கை சார்ந்துடன்
சோபன மருளுமந் நீரிற் றோய்ந்தனர். (௬)

கங்கைவி நாயகன் கமலம் போற்றினர்
தங்கிய சந்நிதித் திருமுன் றாழ்ந்தனர்
செங்கையாற் றொழுதனர் தேவி தன்னொடு
மங்கையோர் பங்கனை வழுத்தி யப்பனை. (௭)

இதயமோ டிருவிழி குளிர வேத்தியே
துதிபெறு மஞ்சனந் தூசி வேதன
மதிகமார் சோடசத் தாற்ற வேண்டுவ
நிதிபல வருளியுண் ணேச மல்கவே. (௮)

ஆலயத் தருச்சனை புரியு மந்தணர்
சீலமா ரப்பதி சேரும் விப்பிரர்
காலகா லனைத்தொழுங் காட்சி யன்பர்கள்
பாலுற வணங்கித்தம் பிழைப கர்ந்தனர். (௯)

தலமுறு தானிகர் சகலர் கேட்டுள
நலனருள் கோயிலின் வாய்த னண்ணியே
பலனுறு மிளகெலாம் பயறு செய்தவ
னிலவணி யண்ணலா மெனநி கழ்த்தியே. (௧0)

அற்புத மடைந்தனர் மகிழ்வி னார்த்தனர்
பொற்பகல் வாணிகர் புகன்ற பொய்மையாற்

சிற்பர னிவ்வணஞ் செய்த தென்றனர்
சற்பிலா வணிகரைக் கனன்றி கழ்ந்தனர். (௯)

பூசுர ரடியவர் புரத்தி லுள்ளவர்
பேசிய மொழிகளைப் பேணி வாணிகர்
கூசிய வுளத்தொடுந் தாழ்ந்து கொண்டெம
தாசகல் வகையெமக் கருளு வீரென. (௧0)

வேறு.

சிவதிர வியத்தி ஞசை செய்துநுஞ் சிந்தை யார
வவமுறு பொய்யு ரைத்தி ராதலால் வணிகர் கேண்மின்
னவமுறு விதியி முந்து நற்றிரு மாய்ந்து பின்னர்ப்
பவமுறு நரக நல்கும் பான்மையிப் பொய்மை யாமால். (௧௧)

சாற்றுதல் கேண்மி னின்னுஞ் சகத்தினி லுயிர்க ளெண்ணு
தாற்றிய குற்ற மெல்லா மனதார வன்பு செய்து
போற்றிடிற் புதுவை யீசன் போக்குவ னீவி ரஞ்ச
லேற்றவிப் பதியு ளன்பிற் பத்துநா ளிசைந்து வைகி. (௧௨)

அல்லொடு பகலு நீங்கா தமலனைத் தொழுது போற்றி
யொல்லுமா றன்பி னோடு முயர்பணி புரிந்து நித்த
மெல்லியல் விளக்கு நெய்யா லிரைஞ்ஞூற் றிரட்டி யேற்றிச்
சொல்லிய வன்பி னேவல் புரிந்திட விரங்குந் தூயோன். ()

அவ்வுரை கேட்டு நாய்க ரன்பொடு மனத்துட் கொண்டு
வெவ்வினைத் துயர்க டீரச் சிவகங்கை வியனீ ராடிச்
செவ்வனே ரன்பி னேய சிவகாமி யம்மை யோடு
பௌவமார் காள முண்ட வயித்தியப் பனையும் போற்றி. ()

வேறு.

ஆறுகா லங்களு மன்பி னற்பணிந்
தீறக வெய்விளக் களவி லேற்றியே
தேறிய சிந்தையாற் பணிகள் செய்தனர்
கூறிய மொழிவழிக் கொள்கை மன்னவே. (௧௫)

பத்தியாச் சொன்னநாள் பத்து மின்னண
நித்தியஞ் சந்நிதி நீங்கி டாவகை
புத்தியு ளன்பொடுந் தொழுது போற்றியே
சித்திசேர் புகழுரை செப்ப லுற்றனர். (௧௬)

வேறு.

தெரியமா துலனைப் தோன்றி வழக்குரை செய்தாய்போற்றி
கரியபூங் குழன்மின் னார்க்குக் கரவளே யணிந்தாய் போற்றி
யரிதினில் வன்னி கூப மிலிங்கம தழைத்தாய் போற்றி
யுரியவெம் மீசா போற்றி கருணையுத் தமனே போற்றி. (௧௭)

அறியாமை யாலே செய்த பிழைபொறுத் தருளித் தீங்கைக்
குறியாது கருணை செய்து நேசமுங் கொடுத்து நின்னைப்
பிறியாத வன்பு நல்கிப் பயறெலா மிளகாப் பேணிப்
பொறியேயும் வண்ண மெம்மைப் புரந்தரு ளென்று போற்றி.

வேண்டுகோ ளியம்பி யன்னோர் துயிலுறும் வேளை யெம்மை
யாண்டவ னவர்க ளுவி னிடையெழுந் தருளி யன்பா
லீண்டுநும் பயறு முன்போன் மிளகாகு மென்னக் கூறி
நீண்டகை யாரத் தந்தார் நேசமார் திருவெண் ணீறு. (௧௯)

துயிலுறு கனவி லண்ண லல்கிய தூவெண் ணீறு
மயலுறு துயில கன்று கரத்தினின் மன்னக் கண்டு
செயலினைப் புகழ்ந்து போற்றித் திருநீற்றைச் சேமஞ் செய்து
நயமுறக் கூடி மீண்டு மாலய நண்ணி னார்கள். (உ०)

சந்நிதி யடைந்து போற்றித் தாயினு மன்பா மீச
னின்னருள் பெற்றுத் தாழ்ந்தே யுமையவ ளிருதாள்போற்றிச்
சென்னியிற் செங்கை கூப்பி விடைகொடு சிறந்து போந்து
மன்னுமவ் வூரா ரன்பா லனுமதி வழங்கப் பெற்று. (உக)

சுருதியார் புதுவை நீங்கிச் சொல்லுதற் கரிய கூடல்
கருதிபாங் கெய்தி யீச னல்கிய கடிவெண் ணீற்றை
யருகலில் பொதிக டோறு மரனடி நினைந்த ணிந்தார்
பெருகிய பயறு முன்போன் மிளகெனப் பிறங்கிற் றன்றே.

வேறு.

நோக்கினர் வணிகரு நுவலொ ணுமகிழ்
தாக்கின ருளத்தினிற் றளர்வு முற்றவும்
போக்கின ரீசனார் புகழை யேதுதித்
தாக்கினர் மிளகெலா மரனுக் கென்னவே. (உ௩)

வணிகர்க ளவ்வண மனது தேறியே
யணிமிள கனைத்தையும் விலைக ளாக்கியே

திளிதி பொதிகிழி செய்து கொண்டுயர்
மணிமதிட் புதுவையுள் வந்த டைந்தனர். (உ௪)

அடைந்தரன் சேவடி யன்பிற் போற்றுபு
மடந்திகழ் மண்டபம் வாவி சோலைக
ளிடம்பெற வியற்றுதற் கெண்ணி னீணிதி
நிடந்தா வருளினர் சிந்தை கூரவே. (உ௫)

மற்றுள நிதியத்தை மீண்டும் வண்பணிக்
குற்றவ ரிடத்தினி லுதவி யன்புட
னற்றமி லுமையொடு மண்ணல் சேவடி
பற்றுறப் பணிந்தருள் பரிவி னெய்தியே. (உ௬)

வேறு.

நரிபரி யாக்கு மீசர் கூடலை நண்ணிச் சார்ந்து
புரிவுறு மன்பினோடும் வாணிகம் பொருந்தச் செய்து
பரிவுறு செல்வ முன்னர்ப் பண்பினும் பொங்கி யோங்க
வுரியதங் கிளைஞ ரோடு முவந்துவாழ்ந் திருந்தா ரன்றே.(உ௭

## பயறு மிளகான அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௩௭௪.

### பயறு மிளகான அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதி முனிவர்களைப்பார்த்துச் சூதமுனிவர் மிளகு உழுந்தாயின கதையைச்சொன்னோம். இனி யுழுந்துமிளகாயின கதையைச்சொல்லுவோமென்று சொல்லத்தொடங்கினர்:—மேற்கூறியபடி மதுராநகரத்தைவிட்டு வணிகர்கள் புதுவைக்குவந்துசேர்ந்து கோபுர தரிசனஞ்செய்து சிவகங்கையிலே படிந்து சிவகங்கை விநாயகரைத் தரிசித்து வயித்தியப்பரையுஞ் சிவகாமியம்மையாரையுங் கும்பிட்டுக் கண்குளிரத் தரிசித்துச் சோடசோபசாரத்தாற் பூசை செய்விக்கவேண்டிய திரவியங்களைக்கொடுத்துச் சிவனடியார்கள் மற்றைப் பிராமணர்கள் பாற்சென்று தாங்கள் பொய்சொல்லிப் போயினபின் மிளகு பயறாயின வரலாறனைத்தையுஞ் சொல்லினர். ஆங்குள்ளா ரெல்லாருங்கேட்டு அதிசயித்து இத்திருவிளையாடல் செய்தவர் வயித்திய

நாதரே[illegible]று களிகூர்ந்து அவ்வணிகரைப் பொய்கூறினதற்காக் இகழ்ந்[illegible]னர். அவ்விகழ்ச்சி வார்த்தையைக்கேட்டு வணிகரெல்லாரும் சரணமுற்று இப்பிழை நீங்கும்படி பிராயச்சித்தஞ் சொல்லுமென்று வினவினர்.

அதுகேட்ட பெரியோர்கள் சிவதிரவியத்தைக் கவருமாறு பொய்சொன்னவர்கள் செல்வமெல்லாங்கெட்டு நரகத்தையு மடைவார்கள். ஆயினும் உலகிலுள்ள ஆன்மாக்க ளறியாமற்செய்த குற்றங்களை மனதாரப்பத்திசெய்து வணங்கினாற் புதுவைநாயகர் பொறுத்தருளுவர். ஆதலால் நீவிர் பயப்படவேண்டாம். இத்தலத்திலே பத்துநாளிருந்து இரவும்பகலும் சுவாமியையும் அம்மையையு மன்புடன் வணங்கித்துதித்து ஆயிரம் நெய்விளக்கேற்றிப் பணிவிடை செய்வீராகில் வைத்தியநாதர் திருவருள் புரிவரென்று கூறுதலும், வணிகர்களவ்வாறே பத்துநாளுஞ் சிவ கைங்கரியஞ்செய்து தங்களுடைய வேண்டுகோளைச் சொல்லி நித்திரைசெய்தனர். அவர் சொப்பனத்திலே சிவசுவாமியம்மைபாக ரெழுந்தருளிப் பயறு முன்போல் மிளகாகுமென்று திருவெண்ணீற்றைக் கைநிறையக் கொடுத்துவிட்டுச் சென்றனர். வணிகர்கள் நித்திரைவிட்டெழுந்து எம்பிரானருளிய விபூதி தங்கள்கையி லிருப்பதைக்கண்டு மகிழ்ந்து அவ்விபூதியைச் சேமித்து வைத்துக்கொண்டு சந்நிதி முன்புவந்து அவ்வெம்பிரானைத் தொழுது விடைபெற்று மீண்டு மதுரைக்குவந்து உழுந்துப் பொதிகளிலெல்லாம் தங்கள் கையிற்சேமித்து வைத்திருந்த விபூதியைப் போட்டுப் புதுவைநாயகர் திருவடியை நினைந்தார்கள். உடனே யுழுந்துப் பொதிகளெல்லா மிளகுப் பொதிகளாயின. அதுகண்டு வணிகரெல்லாரும் அளவற்ற மகிழ்ச்சியடைந்து மிளகுப்பொதிக ளெல்லாவற்றையும் விலைப்படுத்தி அந்தத் திரவியத்தை முடிப்புச்செய்து இது புதுவைநாயகர் தந்தருளினதென்று வியந்து அவரது கோயிலுக்குவந்து வணங்கி மண்டபந் தடாகஞ் சோலை வைப்பதற்குந் திருப்பணிகள் செய்பவரிடங் கொடுத்துவிட்டு மதுரா நகரதனுக்குவந்து வாணிகஞ்செய்து முன்னைப்பார்க்கிலு மதிக வூதியமடைந்து சுற்றத்தாருடன் வாழ்ந்திருந்தனர்.

பத்தொன்பதாவது

# மட்குடம் பொற்குடமான

# அத்தியாயம்.

---

பனனரும் கொடிய குற்றம் பாலகர் புரிதல் கண்டு
மன்னையர் பொறுத்துப் பேணி மூலயுண வருத்தல் போலு
மன்னிய வுயிர்க ளாற்றுந் தீங்கெலா மகற்றி மாயா
வின்னருள் புரிந்து காக்கும புதுவையு ளிறைவா போற்றி. (௧)

பார்புகழ் வணிகர் பொய்யான் மிளகினைப் பயறு செய்து
சீர்பெறு பயறு மீண்டு மிளகாக்குஞ் செய்கை சொன்னோ
மேர்பெறு மட்குடத்துக் கினியபொற் குடமன் றீந்து
பேர்பெறு மகிமை முன்னோ ருரைவழி பேச லுற்றாம். (௨)

படிபுகழ் புதுவை நூலோர் பகர்மறை முழுது மாய்ந்தோர்
மிடியற விரும்பி முத்தீ வினைபுரி மேன்மை யாளர்
நெடிதுவை திகமும் பேத வுலகமுந் தழுவு நீரார்
துடியிடை மனைவி யோடு மில்லறத் தொன்மை பூண்டோர்.

சாதிநல் லொழுக்க மேன்மை சதுமறை யுணர்த லியாக
மோதிய விவைக ளியாவு முடையவந் தணர்க ளேனு
மாதியு மீறு மின்றா மரனடிக் கன்பி லாதார்
நீதியி னீச ரென்றே சுருதிக ளிகழ்த்து மன்றே. (௪)

பழிபுரி தொழில ரேனும் பகர்கொலை வினைஞ ரேனு
மிழிகுலத் தவர்க ளேனு மியையொருங் குடைய ரேனும்
விழிமொழி நடைக ளற்றோர் வெறுக்கையின் மிடிய ரேனு
மழிவிலீ சன்பா லன்பு பெறுவரே லடிக ளாவார். (௫)

எனமறை பகர்த லாலே யப்பதி யிசைந்த நூலோ
ரனைவரும் வேத வேள்வி யாளரா மரனுக் கென்று
மனமுரை காய மூன்று மழங்கிய வண்மை பெற்றோ
ரனுதின முமையோ டீச னருச்சனை யன்பு பூண்டோர். (௬)

சொல்லிய வந்த ணாளர் தம்மிலோர் தூய நல்லோன்
நல்லறி வுடைய னித்த மாலய நண்ணி நாக

வல்லியோர் பாக மேய வயித்திய நாதர்க் காட்ட
வெல்லேம தீர்த்தங் கொடுத்தரு ளேவ னீரார். (எ)

நாடொறு மடிமை யின்றி யந்தணன் றீர்த்த நல்கத்
தேடிய கருணை யீசர் திருவுளச் செயலின் பாங்கா
நீடிய வறுமை யெய்தி மெலிந்தனன் மெலிந்து நேசம்
பாடிய லேம தீர்த்த மெடுத்தருள் பணிபி னிற்ப. (அ)

வேறு.

மனைவியு மைந்தரும் பசியின் வாடியே
யனையுவர் முகமன மயர்ந்து நோக்கலு
மினையவன் செய்வதொன் றின்றி யீசனை
யுனையுள நம்பினே னென்ன வோதினன். (௯)

வேறு.

இயம்பிய மறையோ னோர்நா ளிசையுமட் குடமெ டுத்துக்
கயம்படு ஹேமம தீர்த்தக் கரையுற நின்று தாம்பிற்
பயம்படக் குடக்தைப் பூட்டி வாவியுட் படிய விட்டு
நயம்பட நீரை மொண்டு மொள்ளென நசையிற் றாக்க. (௧௦)

வழுவறு தாம்பி னோடு கைவழி வருகு டந்தா
னெழுதல்போய் வீழ்ந்து கூபத்தாழ்ந்ததையெடுக்கவெண்ணி
முழுவது நீரின் மூழ்கு முன்னர்நீ ரிடைக்கு தித்தான்
பழுதகன் மறையோ னன்மை யெவ்வணம் பகர்தன் மாதே.

குதித்துநீர் நடுவு ளெங்குங் குடத்தினை விரைந்து கையாற்
பதித்திடப் பிடித்தெ டுத்துப் பரிவுடன் கரையி லேற
வுதித்தெழு மிரவி போல மட்குட முயநம் பொன்னால்
விதித்திடுங் குடமாச் செய்து புதுவைவாழ் விமல ரீந்தார். ()

இத்தகு புதுமை யாவு மாலயத் திருந்து ளோர்கண்
மெய்த்தகை யந்த ணாளர் தொண்டர்கள் வியந்து கேட்டே
யுத்தம வூரி லுள்ளோ ரியாவரு மொருங்கு கூடி
யத்தனைத் தொழுது போற்றி யாலயத் துள்ளே சென்று. ()

கண்டனர் பொற்கு டத்தைக் கருதுமூர் றாலோ னன்பை
விண்டனர் தொழுதா ருள்ளம் வியந்தனர் மகிழ்வி ன்ழ்ந்து
கொண்டனர் வயித்தி யப்பன் கொடுத்தருள் கருணைத்தேனை
யுண்டனர் திருமுன் னுக வுபர்ந்தபொற் குடத்தை வைத்தார்.

ஆயதோர் காலை தன்னி லகிலரும் வியந்து கேட்ப
நாயக னருளி னாலே யசரீரி வாக்கு நாளு
மேயமெய் யன்பு மேலோய் பொற்குட நினக்கே யீந்தோந்
தீயநின் வறுமை நீக்கிப் பணிவிடை செய்தி யென்ன. (௧௫)

அருளிய மாற்றங் கேட்டுச் சிந்தையு ளன்பு பொங்கித்
தெருளுமந் தணனை நோக்கி யஞ்சலி செய்தெல் லோரு
மருளறு மீச னுள்ளக் கருணையு மன்னோ னன்பு
மருளறப் புகழ்ந்து வாழ்த்திச் சென்றனர் மனையின் மற்றோர்.

புனிதனா ரருளி னாலே பொற்குடம் பெற்ற தூயோன்
மனிதர்க ளறிய வீசன் வழங்கிய தன்மை யாலே
யனகனவ் வருளை யாய்ந்து மறுத்திட வச்ச முற்றுங்
கனகமென் குடத்தை யேந்திக் கண்ணுத லருளைப் போற்றி.

மனையிடைக் கொடுபோய்த் தக்க வாற்றினால் வறுமை நீக்கிப்
புனையிழை மனைவி யோடு மைந்தரும் பொருந்தி வாழ்ந்து
நினையுள வமைய மேனுஞ் சேவடி மறவா வண்ண
மனுதின மேவ லாற்றி யன்புபெற் றின்ப மார்ந்தான். (௧௮)

மட்குடம்பொற்குடமான அத்தியாயம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௧௯௨.

## மட்குடம் பொற்குடமான அத்தியாயச் சுருக்கவசனம்.

நைமிசாரணிய வாசிகளாகிய முனிவரைநோக்கிச் சூதமுனிவர் பயறு மிளகாகிய சரித்திரத்தைச் சொன்னோம். இனி மட்குடம் பொற்குடமாகிய சரித்திரத்தைச் சொல்லுவோமென்று சொல்லுவார்:— புதுவைத்தலத்திலேயுள்ள பிராமணர் அனைவரும் காருகபத்தியமுதலிய மூன்றக்கினியும் வளர்ப்பவர். யாகாதிகருமங்கள் செய்பவர். மனவாக்குக்காய மூன்றும் சிவபிரானுடைய திருவடிக்கே செலுத்துபவர். அவருள்ளே பரிசுத்தமுடைய ஒருவர் தினந்தோறும் வயித்தியநாதருக்குஞ் சிவகாமியம்மையாருக்கும் அபிடேகத்துக்கு எமதீர்த்தத்திலே போய்த் திருமஞ்சனங் கொண்டுவந்து கொடுக்கும் பணிவிடையிலே தலைநின்றார். இங்ஙனம் நிகழுநாளிலே வறுமை மேலிட்டு மெலிந்து மனைமக்களாதியருடன் பசியால்வருந்தி வயித்தியநாதரே! உம்மையே நம்பினேனென்று திருமஞ்சனங் கொண்டு

வா மதீர்த்தக் கரையிலே நின்று திருமஞ்சனக்குடத்தைக் கயிற்றி லே பூட்டிவிட்டுத் தீர்த்தமொண்டு மேலே யெடுக்கும்போது கயிறு அறுந்து குடங் கிணற்றினுள்ளே வீழ்ந்தது. அக்குடம் ஆழ்ந்து போகுமுன்னரே அதை யெடுக்கும்பொருட்டுப் பிராமணர் கீழே குதித்தனர். அவருடைய அன்பை யென்னென்று சொல்லுவது, அக்கணம் அன்பர்குதித்துக் குடத்தை யெங்குங் கையாற்றடவித் தேடியெடுத்துக் கரையேறும்போது தாம் கொண்டுபோன மண்குட மில்லாமற் பொன்குடமாக வயித்தியநாதர் திருவருளால் இருந்தது. இப்படிப்பட்ட புதுமையை யாலயத்திலிருந்த பிராமணர்களுஞ் சிவ னடியார்களும் ஏனையோர்களும் பார்த்துங்கேட்டும் விம்மிதமடை ந்து ஒன்றுகத்திரண்டு வயித்தியநாதேசுவரரை வணங்கி அவருடைய திருவருட் பிரபாவத்தைத் துதித்துநிற்ப,அப்போது எல்லாருங் கேட் கும்படி யசரீரிவாக்காகப் புதுவைநாயகர் திருவருளால் அன்பரை நோக்கி "இப்பொற்குடத்தை யுனக்கே கொடுத்தருளினேம். இக்குட த்தைக்கொண்டுபோ யுன்னுடைய தரித்திரத்தைநீக்கி நமது பணிவி டைசெய்வாயாக" என்றருளினர். அதுகேட்டு,அன்பரைநோக்கி யாங் குள்ளாரெல்லாரு மஞ்சலிசெய்து அவர்தன்மையையு மவருக்குத் தி ருவருள்செய்த எம்பெருமானுடைய கருணையையும் புகழ்ந்து அவரவ ர்களிருப்பிடஞ்சென்றனர். அன்பர் அவ்வெம்பெருமானுடைய ஆஞ்ஞையை மறுத்தற்கஞ்சிப் பொற்குடத்தையெடுத்துத் தமது இ ருப்பிடத்திற்கொண்டுபோய்த் தமது வறுமைமுழுவதும் நீக்கி மனைவி மைந்தருடனே மகிழ்ச்சியடைந்து முன்போலச் சிவ பணிவிடை செய்து இன்புற்றிருந்தனர்.

இருபதாவது

# வாணன் தவமெடுத்த அத்தியாயம்.

தன்னையு முணர்ந்து தானுந் தலைவனை யுணர்ந்து நேச
மின்னையும் புவியும் பொன்னும் பொய்யென விட்டு நீங்கி
நின்னையுங் கண்டு கூடு நிமலவற் புதத்தை யெய்த
வென்னையு மாண்டு கொண்ட புதுவையு ளிறைவா போற்றி.

அடுத்திடும் வறிய நூலோ னண்ணலுக் காட்டத் தீர்த்த
மெடுத்தமட் குடத்தைச் செம்பொற் குடமென வீதல்சொன்
தொடுத்தபூ மலர்க வர்ந்து சூடிய வாணன் சென்னி [னேங்
வெடித்திடுங் காதை முன்னோர் மொழிவழி விளம்ப லுற்றாம்.

**வேறு.**

வடபு லத்துறு குறுநில மன்னரில வாணன்
றடவ ரைப்புய னுறையுமூர் தகுமணப் பாறை
யிடனு யர்ந்தெழு மிஞ்சிசூழ் நகரிடை யிசைவோன்
றிடனு றுந்திரி புரவரக் கரினும்வெந் தீயோன். (௩)

**வேறு.**

கொலையொடு களவுயர் கொடுமை யென்றுமே
நிலைபெறு முளத்தின னீத வாய்மைகள்
கலைபயில் வோர்சொலக் கருதிக் கேட்கிலா
னலைபயில் கடலென வடருந் தானையான். (௪)

நீதமு நெறிகளு மகன்ற நெஞ்சினன்
பாதக வினைமுக யாட மாப்பகர்
காதகன் பிறர்பொருள் கவருந் தன்மையே
சாதகம் பயிலுமச் சதிரைச் சார்ந்துளோன். (௫)

நந்தவி லந்தணர் குரவர் நற்றவர்
வெந்துய ருறவவர் பொருள்கள் வேட்டுளா
னிந்தவா றவனடை யென்னின் மற்றுளோர்க்
கந்தரம் புரிவதை யறைய வேண்டுமோ. (௬)

பரவிய வதரிடைப் பறித்துக் கொண்டுபல்
காவுகள் செயச்சொலிச் சிலரைக் கானிடை
நிஷாதகவர்க் திடச்சொலி நீச னிவ்வணம்
விரவிய பொருள்களை விருப்பி னீட்டினன். (௭)

**வேறு.**

மற்றுள வெளியர் பன்னாள் வளர்த்துள பொருளை யெங்கு
புற்றில்வாய் வைத்து றிஞ்சல் போலவும் புகலிக் கூடி
யற்றமில் வைத்த தேனைக் கவருமவ் வலையன் போலு
மற்றவன் கொள்வ னன்னோர் வயிறெறிந் துளமு நோவ. (௮)

முரணுடைச் சேனை யோடு முன்னுறச் சென்று மன்னர்த்
திரணம தாக வெண்ணித் திகைப்புற வளைந்து சூழ்ந்தே
யரணமுள் ளாக்கி யன்னு ரஞ்சிவந் தடைந்து தாழ
மரணம தியற்றி டாதே யவர்பொரு ளனைத்தும் வாங்கி. (கூ)

மற்றவ னிந்த வாற்று லளவிலாப் பொருள்கள் வெளவி
யுற்றனன் செருக்கி னேடு முலகினி லெதிர்வோ ரின்றி
யிற்றன ரிச்சை யாருப் விதிவிலக் கின்றிக் காமஞ்
சிற்றினச் சேர்க்கை நீங்காச் செயலுடைத் திறம டைந்து. ()

காமமீ தூர வாணன் கருத்தழிந் தவச முற்றுத்
தூமமார் செந்தீப் போன்ற பிறர்மனைத் துன்ப வின்பை
யேமமாப்புசித்துஞ்செம்பொன்விலைமின்னார்க்கீந்தும்பன்னுட்
சேமமாக் கவர்ந்தும் வாணன் றன்னூராந் தெவிட்டா னுகி. ()

திதிபெறு நகர்க டோறுஞ் சென்றிடக் கருதி வாணன்
பொதிநிறை நிதியம் பெய்து சேனைகள் பொருந்திச் சூழ
மதிவழி யுமைச்ச ரோடுஞ் சிற்றின மைந்தர் நண்ணப்
பதிதனை விட்டு நீங்கித் தென்றிசைப் பாதை கூடி. (கஉ)

நடந்தன னூர்க டோறுந் தங்கினன் சின்னுள் வைகி
வடந்திகழ் குடங்க ணேரு மடந்தையர் கொங்கைதோய்ந்தும்
படர்ந்தனன் வைகை யாற்றிற் பருமணித் தரங்க மோதி
யடர்ந்தெழுஞ் சோலை சூழு மாலவா யடைந்தா னன்றே. ()

அந்நகர் தனிலி ருந்தே யங்குள விலைமின் னூர்கள்
புன்னிலைப் போகந் துய்த்தா னுலயஞ் சென்று போற்றுன்
றென்னவன் கூட றன்னில் வேட்கையாச் சின்னுள் வைகி
நன்னகர் கடந்து தென்பா ணடந்தனன் கொலைக்கு நாதன்.

மகரிகை யெழுது கொங்கை மடவன நடைமின் னூர்சூழ்
சிகரியம் பொன்கு லாய தென்புது வைக்குள் வந்து
புகர்தவிர் சோலை வாவி வீதியிற் பொலிவு நோக்கி
நகரிடை யுளமகி ழ்ந்து வந்தன னவைசேர் வாணன். (கரு)

இருந்தனன் சேனை யோடு மெய்துமுன் னூரி னுள்ள
திருந்திழை விலைமின் னுரைக் கூவினன் சிறந்தன் னேரும்
வருந்திநுண் ணிடைநு டங்கக் கனதன மசைய வந்தார்
பெருந்தவர் தவரைக் காணும் பெற்றிபோற் பிரிய முற்றுன்.

வேறு.

கொங்கையும் வதனமும் விழியுங் கூந்தலுஞ்
செங்கையுந் தோள்களுந் திகழ்பொற் பூண்களும்
பங்கயப் பாதமு நடையும் பார்த்துளஞ்
சங்கையுற் றனண்மயல் சாரு மோகத்தால். (கஎ)

மேகமு மதியமும் விளங்கு மீனமும்
பூகமும் நாள்களாற் புணர்த்துங் கோவையுங்
கோகமுங் கொடியுமுட் கொண்டு நண்ணிய
மாகம திழிந்துமின் கொடிகள் வந்தவோ. (கஅ)

அன்றிமின் னொளி லமரர் வானிடை
யொன்றிய நாகர்தம் முலகிற் கண்டிலேன்
றுன்றுமிவ் வுலகினி லுள்ள தோகைமார்
வென்றிகண் டனனிவர் விளம்பின் மேன்மையார். ()

மொழிகளு மொழியுடன் முந்து மூரலும்
விழிகளும் விழிவழி விளங்கு பார்வையும்
பழிகளுங் கொடுமையும் பரிவி னாற்றுமோ
கழிபெருந் தவரினங் கண்டு முய்வரோ. (உ0)

வேறு.

இன்னணம் வியந்து வாணன் விலைமின்னார்க் கினியவார்த்தை
பன்னின னவரு கந்து துகளறு பாட லாட
னன்னலம் பெறவி யற்றி நடவயி நயமு மாற்றச்
சொன்னமும் பணியுந் தூசு மளவில தொகைக ணல்கி. (உக)

கலவையின் சாந்தம் வீசு மான்மத நறுங்கத் தூரி
பலமலர்ச் சுகந்த மற்றும் வேண்டுவ பரிவி னீந்தே
யலகினட் பாள ரியாரு மவ்வவர் வேட்ட மின்னார்
நலனுறத் தானு நல்லார் நகையுறு மின்பத் தாழ்ந்தான். (உஉ)

அல்லொடு பகலிவ் வண்ண மனுதின மிடைய றாது
வல்லிநுண் ணிடைமின் னார்க ளளவிலர் வந்து சூழப்
பல்லியல் சூது வீணை மதுரவாய்ப் பாட லாடல்
புல்லிய சரச வார்த்தை யிவைகளாற் போது போக்கி. (உங)

காட்டெறி நிலவு போலுங் கானல்பெய் மழையே போலு
நாட்டினிற் றீங்கி னீட்டு நவையுறு பொருளை யெல்லாங்

கோட்டிளங் கொங்கை யார்க்கே குலைகுலை யாக வீந்தே
யீட்டினன் மறுமை யோடு மிம்மையு மற்ற பாவம். (௨௪)

இரவினு பகலீ தென்று மெரிபசி துயிலீ தென்றும்
விரவல னுளய்வே றின்றி மின்னனார் வண்ண மானு
னுரையுணர்வகன்மெய்ஞ்ஞான வுள்ளொளி யுதித்தேயின்பந்
தாவதின் வசத்த ராய சத்துகள் போலு மாதோ. (௨௫)

செறிந்திட விவ்வா றன்னோன் புதுவையிற் சின்னாள் வைகி
யுறைந்திடு நாள்க டோறு நந்தன வனத்தி லுள்ள
நிறைந்திடு மலரைத் தன்பான் மனிதரை கொடிதி னேவிக்
குறைந்திடாவகைகயொன்றின்றிக்கொணர்கெனக்கொடியர்சென்று.

செங்கதி ருதிக்கு முன்னர்ச் செறியுநந் தனவ னங்க
ளெங்குள வங்கங் கேசென் றிசைந்துள மலரை யெல்லாஞ்
சிங்கையற் றெடுத்து வேண்டுந் தாமமா வணைந்து நல்க
மங்கையர்க் கீந்து தானும் புனைந்தனன் றீய வாணன். (௨௭)

எள்ளள வின்பு மின்றி யிவ்வண மியற்ற வாணன்
கள்ளவிழ் மலர்கள் கொய்யுங் கண்ணுத லன்பர் சென்று
தெள்ளுநந் தனங்க டோறுந் திரிந்துமோர் பூவுங் காணா
ருள்ளியிவ் வாணன் செய்கை யிதுவென வுணர்ந்து நைந்து.

மல்லிகை முல்லை பிச்சி யிருவாச்சி நந்தி மற்றுஞ்
சொல்லிய மலர்க ளொன்று மின்றியே துணிந்து கொய்து
புல்லிய புழுக்கூ டாய வுடலினிற் புனைதல் செய்தா
னெல்லையி லீசர் சென்னிக் கணிந்திடற் கிலாம லென்றும். ()

கடுத்திடு சிந்தை யன்பர் கருத்தழிந் தலரை நித்த
மெடுத்திடு மின்பும் பூவை யெழில்பெறு தொடைய லாகத்
தொடுத்திடு மின்புங் காலந் தொறுமீசர் சென்னி சூடக்
கொடுத்திடு மின்பு மற்றோங் கொடியதோர் வாணன் றன்னால்.

என்றுளம் வருந்தி யன்பர் வறிஞனுள் வினையி னெய்தும்
வென்றிசெய் பொருளைக் கள்வர் கவர்ந்துடன் விரைவி னேக
வொன்றுமின் றாக நோக்கி யுளமெரிந் தகற லொப்பச்
சென்றனர் மலர்க ளின்றி வெறுங்கூடை செங்கை பற்றி. ()

ஈசனார் கோயி லெய்தி யெந்தையார் சென்னி நோக்கி
வாசமென் றொடைய லின்றி வனப்பின்மை கண்டு சால

நேசமா சன்ப ரோடு மருச்சகர் கிளைவ ழிக்தே
யாசுறு சிக்தை வாணன் மருங்கணைக் தறைய லுற்றுர். ()

முன்னர்நீ யீசன் பாதத் தருச்சனை முயன்ற வாற்ருன்
மன்னிய செல்வ முற்று வளம்பெறு வாழ்வு பெற்ரு
யின்னுமவ் வாறி யற்றி யிருமையும் பெறுதி யின்றேற்
றுன்னிய வறுமை யெய்தி மறுமையி னரகக் துயத்தி. (௬௩)

அங்கது நிற்க வீசன் றிருமுடிக் கணியும் பூவைச்
சங்கையில் கொடுமை யோடு பரிசனர் தம்மை யேவிக்
கொங்கவிழ்மலரொன்றின்றிக் கொணர்கெனப்புனையலுற்று
யிங்கிதுவென்னேயென்னே யென்செய்தாயங்தேரீவேழாய்.

வேறு.

பன்னிய மலசல மிட்ட பாண்டமோ
துன்னிய மும்மலக் துறுபண் டாரமே
மன்னிய புழுநெளி கூடு மற்றுமே
யுன்னிடி லிருவினைப் பொதிய திவ்வுடல். (௬௫)

வேறு.

தோலவுட லவயவத்தைக் குறித்துப் பார்க்கிற் கூறவருவ
ருப்பாகுங் கொள்கை கேணீ, தோலெலும்பு நரம்புதசை மயி
ரென் றின்ன சோர்வுறுதுற் கந்தமிலவ துகளா மாசு, மேலு
மின்னும் விளம்புவனீ ருதிர மூளை மிருமச்சை, சுக்கிலமென்
றிவைசே ரில்லா, மேலவறி வுடையோர்க ளுணர்ந்து நீங்கி
யெக்காலு மொருபொருளா விதனைக கொள்ளார். (௬௬)

வேறு.

என்புதோல் போர்த்து நீடு நரம்பினு லிறுக்கி யீர்த்துப்
புன்புலா லுதிர மூளை மலசலம் பொருந்தித் தேக்கி
யொன்பது வாயி லூறு மலங்களை யொழுகு புக்கி
லின்பிதுவென்னக்கொள்வோன்புலையனுட்புலையனெண்ணில்.

ஐயுறு வாத பித்த மரசியல் புரியும் வீடு
மெய்யிதென்றெவ்வார்மேலோர் வெருள்வதேதன்மையாற்ரு
னையுநா லாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டு
மையலார் நோயு டம்பி லிரவலா வான்மா மன்னும். (௬௮)

இத்துணை யிழிவி னுய வுடலினை யினிதென் றெண்ணிப்
பொய்த்துணை மனைவி மைந்த ரோம்புதற் பொருட்டு நீங்கா
மெய்த்துணை யறத்தைநீக்கிக் கொடுமையேவிரும்பிச்செய்தே
யத்துணைக் கொடுமை சார்பா நரகிடை யாழ்வர் சில்லோர். ()

ஆனலால் வாண னேகே ளண்ணலார் கருணைத் தன்மை
யீனமி லன்பு செய்யி லமுதமா மின்ப மீவ
ரூனமார் கொடுமை செய்யில் விடமதா நரகத் துய்ப்பார்
நானவின் மொழிக டம்மை யுண்மையா நயந்து கோடி. (௪௰)

ஒருமல ரெடுத்துச் சாத்தி லதன்பய னுரைக்கொ ணாதா
லொருமலர் பறித்து முன்னு ளிறந்தன னுறையூர்ச் சோழ
னொருமல ரன்று நீயும் பன்மல ரொருங்கு கொய்தி
யொருமலர்க் கிறப்ப தென்னிற் பன்மலர்க் குறுதி யாதே. ()

எய்யாது நீமுன் செய்த விடரெலா மகல வேண்டிற்
பொய்யான வுடலை நம்பித் தீங்குகள் புரித னீங்கி
மெய்யான வெந்தை பாதம் விருப்புடன் பணிதி பூவைக்
கொய்யாது தவிர்தி யின்னுங் கொடுவினை யணுகா வண்ணம்.

## வேறு.

என்று பூசகர் தொண்டர்க ளியம்பிய மொழியை
யொன்று மன்புளோர் பொலிவகல் வாணனு முவந்து
நன்று சாலவு நும்மொழி நன்மையே பயக்குஞ்
சென்று நும்மலர் பறித்தில மியாமெனச் செப்பி. (௪௩.)

கூறு நம்பரி சனரன்று கொய்தது மலரை
வேறுளோரெவ ரோவறி யோமென விளம்பி
நாறு நந்தன வனத்திடை யெம்மவர் நண்ணி
ஊறு செய்குவ நீவிர்கள் செலுமென வுரைத்தான். (௪௪)

வாண னிவ்வணங் கூறலும் வாய்மையென் றெண்ணி
யேணி யோர்திருக் கோயிலு ளெய்தியாங் கிருந்தார்
பேணி யற்றைநாட் டிருமுடி மாலைபெய் குநர்கள்
கோணி சைந்துளஞ் செங்கழு நீர்மலர் கொய்து. (௪௫)

பீடு பெற்றிட வழிக்கொடு வருகின்ற பெற்றி
மாடு வாணனுங் கண்டுமுன் பதியுளோர் வசன

நீடு வாழை நன் மூலஞ்சேர் நெருப்பெனச் சிதையக்
கூடை யோடலர் பறித்தனன் மீளவக் கொடியோன். (௬௬)

வேறு.

பறித்திட வன்பர் தேகம் பதறிடப் பாரின் வீழ்ந்து
தறித்திடா யிவன்சி ரத்தைத் தாணுவே யென்னச் சூழ்ந்து
மறித்திட வெகுண்டு கூடி மற்கட்டு மாறு நோக்கிக்
குறித்தவம் மலரிற் பாதி கொடுத்தனன் கொலைசேர் நீசன்.

அவ்விடை நிகழ்ந்த தன்மை யாலயத் தன்பர் கண்டு
செவ்வையில் கருத்த ராகிச் சிந்தைக ளறவு நைந்து
கௌவையோ டனைத்து ளோருங் கடவுளர் திருமு னெய்தி
யெவ்வமார் கொடிய வாணன் றீமையை யியம்ப லுற்றார். ()

குலவுநந் தனத்தி னுள்ள மலர்களொன் றறக்கொ ணர்ந்து
தலைமிசைப் புனையா நின்று னீதியா யாங்கள் சாற்றுஞ்
சொலையொருசிறிதுங்கொள்ளான் கொடுமையேபுரியுந்தூர்த்தன்
சலமகல் வயித்தி யப்பா தாளிணைக் கபய மென்றார். (௬௯)

மற்றைநாண் முன்போ லன்பர் மலர்கொடு வருதல் கண்டு
பற்றியம் மலரிற் பாதி கொடுத்துள பாதிப் பூவைச்
செற்றமாக் கவர்ந்து வாணன் சென்னியிற் புனைத லோடு
மிற்றதக்கொடியோன்சென்னி பொடிப்பொடியெனத்தகர்ந்தே.

அன்னவன் சுற்றத் தாரும் பரிசன ரனைத்து ளோரு
மிக்கெடு மரவ மென்னே யெனச்சோர்ந்து வெருவி யோடக்
கொன்னமன் றூத ரெய்திக் கொடியனைக் கொடுபோய்த் தீய
பன்னெடுந் தண்டஞ் செய்து நரகிடைப் படுத்தி னரால். ()

உரைத்திடும் பதியினுள்ளோ ராலயத் துறைவோர் கண்டு
நிரைத்தபூங் கொன்றை வேணி நிருமல னருளைப் போற்றித்
தரைத்தல முறத்தாழ்ந் துள்ளத் தற்புத மச்சஞ் சார்ந்து
விரைத்தனி மலர்த்தாட் கேய வியன்பணி புரிந்தி ருந்தார். ()

வாணன் தலைவெடித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௪௪௪.

## வாணன் தலைவெடித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதி முனிவரைநோக்கி மட்குடம் பொற்குடமாகிய சரிதஞ்சொன்னோம். இனி வாணன் தலைவெடித்த சரிதஞ் சொல்லுவோம். என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:—புதுவைக்கு வடக்குத் திசையிலுள்ள மணப்பாறையென்னுமூரிலே வாணனென்னுஞ் சிற்றரசனொருவன் திரிபுரத்திலுள்ள அரக்கரைப் பார்க்கிலுங் கொடுமையுள்ளவன். கொலைகளவாதிய பாதகம்புரிபவன். சற்சனரிடத்திலே நீதிவாக்கியங் கேளாதவன், கடல்போலுஞ் சதுரங்க சேனையுள்ளவன். வழிப்பறி பறிக்கச்சொல்லியும் பசுநிரை கவரச்சொல்லியும் பொருளீட்டுபவன். பகையில்லாமலே வேற்றரசர் செல்வங்களைக் கொள்ளைக்கொள்பவன். அவனுடைய அகிருத்தியத்துக்கு அளவேயில்லை. இந்தவிதந் தனக் கெதிரில்லாமலிருந்து விதி விலக்கறியாது மனம்போனவழியே காமத்தையநுபவித்தும் விலையின்றுருக்குவேண்டிய திரவியங்களைக்கொடுத்தும் தன்னகரத்திலே காமந் தெவிட்டாதவனாய் மிகுந்த பொருள்களையெடுத்துக்கொண்டு அயலூர்கடோறுமலைந்து மதுரை நகரத்திலேவந்து சுந்தரேசப் பெருமானைவணங்காமல் அங்குள்ள விலைமாதரோடுகலந்து களித்துச் சின்னாட்சென்று புதுவைத்தலத்தைப் போயடைந்து சேனையுடனே அங்கிருந்து, ஆங்குள்ள விலைமாதரையெல்லாம் வரவழைத்துப் பார்த்து இம்மாதரைப்போல அழகுவாய்ந்த மாதரையெங்குங் கண்டிலேனென்று வியந்து அவர்களாடல்பாடல் சூது முதலியவற்றிலே பொழுதுபோக்கி அவர்களுடன் காமநுகர்ந்து காலம் போக்கிக்கொண்டிருந்தான். இவ்வாறு வாணன் புதுவையி லிருக்கும்போது ஆங்குள்ள நந்தனவனத்திலுள்ள சுகந்தமலர்களை யொன்றும் விடாமலெடுத்துக் கொண்டு வரும்படிசெய்து பரத்தையருக்குகொடுத்துத் தானும் அணிந்துகொள்வான். "

சிறிதாயினுஞ் சிவநேசமின்றி வாண னிவ்விதமே மலர்களையெல்லாந் திருடிக்கொண்டு போதலுஞ், சிவனடியார்கள் சென்று நந்தனவனந்தோறுஞ் சுகந்த புட்பமொன்றுங் கிடையாமல் மாலைகட்டிச் சாத்துதற்கு முட்டுப்பாடுற்று வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையுந் தரிசிக்குந்தோறும் அலங்காரப்பொலிவு குறைந்திருக்கக்கண்டு அருச்சகரோடு வாணன்செய்யுங் கொடுமையை விசாரித்து அவனிடஞ்சென்று சொல்லுவார்.—"வாணனே! பூருவ சன்ம

த்திலே சிவார்ச்சனை செய்ததனா லித்தகைய பெருஞ் செல்வம் பெற்றாய். இன்னமும் அது செய்தா லிம்மை மறுமைப் பயனடைவாய். அதுநிற்க: உன்னுடைய வேலைக்காரர்களை நந்தவனத்துக்குவிட்டுச் சிவபிரானுக்குச் சாத்துதற்கு ஒரு பூவுமில்லாமல் முழுது மெடுத்துக் கொண்டுவரும்படிசெய்கிறாயே யறிவில்லாதவனே! மலசலமடைத்து வைத்திருக்கிறபாண்டமாகிய புழுக்கள் நெளியும் இந்தச் சரீரத்தின் பொருட்டு இங்ஙனஞ் சிவத்துரோகஞ் செய்கிறாயே, ஒரு புட்பமெடுத்துச் சிவபிரான் றிருமுடியிலே சாத்தினால் அதன் பயனிவ்வளவென்று சொல்ல முடியாது. முன்னொருகாலத்திலே யொருபுட்பத்தை யெடுத்தன்றோ உறையூர்ச் சோழராசனிறந்தனன். நீயோ பல மலர்களைத் தினந்தோறுந் திருடுகிறாய். உனக்கென்ன கேடு வருமோ! தெரியாது. ஆயினும் போனதுபோக. இனியேனும் நந்தன வனங்களிலே பூவைக் களவுசெய்தலை விட்டுவிட்டுச் சிவபிரானிடத் தன்புசெய்வாயாக" என்று கூறினர். அதுகேட்டு வாணனு மப்படியேயாகுகவென்று அவர்களை யிதவசனஞ் சொல்லியனுப்பினான். மறுநாட்காலை சிவனடியார் வயித்தியநாதருக்குச் செங்கழுநீர் மலர்கொய்து கொண்டுவரும்போது வாணன் கண்டு அம்மலர்களைப் பறித்தனன். சிவனடியாரும் அவன் கையிலிருந்த மலர்களைப் பறிக்கக் கலகமதிகப்பட்டது. அப்போது வாணன் பாதி மலரைமட்டுங் கொடுத்துவிட்டுப் பாதி மலரைப் பறித்துக்கொண்டுபோய் விட்டான். அங்குநிகழ்ந்த செய்தியை யாலயத்திலுள்ளவ ரெல்லாருஞ் சிவனடியார் சொல்லக்கேட்டு மனம் வருந்தி நைந்து வயித்திய நாதர் திருமுன்னர்ச் சென்று வாணன் கொடுமைகளையெல்லாஞ் சொல்லி இந்தத் துன்பத்தை நீக்கி யருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அற்றைக்கு மறுநாட் காலையின் முதல் நாட்போலச் சிவனடியார் செங்கழுநீர் மலர் பறித்துக்கொண்டு வந்தனர். வாணனும் அம்மலரிற் பாதிமலரை வலிமையினாலே கவர்ந்து தன் தலையிலே சூடினான். உடனே வயித்தியநாதர் திருவருளால் அவன் றலைவெடித்து உடைந்துபோயிற்று. அவன் சுற்றத்தாரெல்லாரு மிதென்ன சப்தமென்று பயந்து ஓடினார்கள். யமதூதர்கள்வந்து வாணனைத் தண்டஞ்செய்து நரகத்திலே கொண்டுபோய்த் தள்ளினார்கள். புதுவைத்தலத்திலுள்ளார் யாரும் இவ்வற்புதத்தைக் கண்டு புதுவை நாயகரிடம் பேரன்பு வைத்துப் பணிசெய்து வாழ்ந்தனர்.

இருபத்தொன்றாவது

# தாதன்கண்பறித்த அத்தியாயம்.

பாருரைத்த பல்லுயிர்கண் மலமறைப்பா லறிவிழந்த பான்மை நோக்கி, யேருரைத்த பொற்பாத மெய்தும்வகை கருணைபுரிந் தெவ்வாற் றானு, மூருரைத்தான் பேருரைத்தா னெனுஞ்சிறிய வேதுவினா லொட்டி யாண்டு, சீருரைத்த போகல்குந் தென்புதுவை யீசரடி சிந்தை செய்வாம். (க)

**வேறு.**

மாதொரு பாகற் கேய்ந்த மலரெலாங் கவர்ந்து சூடுந்
தீதுறு வாணன் சென்னி வெடித்தது செப்பி னோமாற்
காதலா ரீசன் கோயில் காணொணா வகை மறைத்த
தாதனைக் கண்பறித்த காதையைச் சாற்ற லுற்றாம். (உ)

உரைத்தசென் புதுவை மாடே யுத்தர கிழக்க தாக
நிரைத்திடு மாட கூட மாளிகை நெருங்கும் வீதித்
தரைத்தொழி லாறும் வல்ல விப்பிரர் சார்ந்து வாழ்வர்
விரைக்கம லாக ரஞ்சூழ் மாலுறை வில்லி புத்தூர். (௩)

அந்தக ரிடையின் மேய வந்தணர் மற்று முள்ளோர்
பன்னகா பரணன் பாதப் பணிபுரி யன்பர் சில்லோர்
மன்னிய கருணை மேய மால்சம யத்தோர் சில்லோர்
பன்னிய விருவர் மீதும் பண்புடை யாளர் சில்லோர். (௪)

நீதகல் பதியி னுள்ளே திருமா லுக் கடிமை பூண்ட
நீதமி லாவோர் தாதன் சிவனையே நிந்தை செய்வோ
னுதரம் பெருகுந் தூய சிவனடி யவரைக் காணி
லேதமார் விழிகண் மூடி யருந்தலு மிசையா னன்று. (௫)

சிவனுமங் கேட்கக் கையாற் பொத்திய செவிக ளுள்ளா
னவமேகு நீறு காணி லக்கண மிமைக்குங் கண்ணான்
பவநாச னன்பர் தம்மை யிசழ்தலே பகரு நாவான்
றவமாத லீதே யன்றி வேறிலான் கொடிய தாதன். (௬)

தேறுமால் சமயத் துள்ளோர் சிவநிந்தை நரக மென்று
கூறிய மாற்ற மேது மனத்தினுட் கொள்ளா னென்று

மூறுமால் சமயத்துள்ள வண்மையு முணர்ந்து சாரான்
வேறிய லேது வின்றிச் சிவநிந்தை விளம்பும் வெய்யோன்.(எ)

அன்றியு மீசன் மீதிற் கேசவ னளவி னேச
மொன்றிய தன்மை யெல்லா முலகமு மறியும் வேதம்
வென்றிசொற் பிரமா ணங்க ளோடுமே தினிக்க ணையன்
றென்றுநித் தியமாக் கண்ட பிரமாண மெதுவுந் தேரான். (அ)

களித்திடு மூளத்தி னோர்க்குக் காரணங் காட்ட வினீர்
குளித்திடு வோனைத் தீசேர் கொள்ளியாற் றுருவித் தேடி
வெளிப்படுத் துதல்போ லாகும் விளம்பிய நீதத் தாலே
தெளித்திடப் படானு ளத்திற் றீமையே சூழுந் தாதன். (கூ)

தூயனைப் புதுவை மேய சுந்தர வின்ப மேனி
நாயனைத் தொழுது போற்று நாயன்மார் பலருங் கூடி
மாயனைப் பணிவோன் போன்று நிந்தையே வழங்குந் தாதத்
தீயனைக் காணிற் றீதே சேருமென் றெண்ணஞ் செய்து.(க0)

சங்கரன் புதுவை யீசன் சந்நிதிக் கேகித் தாழ்ந்து
மங்கையோர் பாகம் வைத்த வயித்திய நாதர் பாதஞ்
செங்கையாற்றொழுதுபோற்றிச் சினகரமறைத்துச்செல்லும்
பங்கமார் தாதன் கண்ணைப் பறித்திட வேண்டு மென்றார். ()

அத்திறம் புரிகு வோமென் றெழுந்தச ரீரி வாக்கு
நித்தனு ரருள வாங்கே நெடிதுவந் திருந்தா ரன்பர்
மத்தமார் தாத னோர்நாட் சினகர மறையும் வண்ணங்
கைத்தலங் குடையைப் பற்றிக் கடிதினிற் செல்லுங் காலை. ()

சந்நிதி வழிச்செ லாது மேற்றிசை சாரச் செல்போ
தந்நிலை யமையந் தன்னு ளண்ணலா ரருளி னாலே
கன்னிலை நெஞ்சத் தன்னோன் கண்டிட லுயிர்ந டுங்கப்
பன்னுமோர் கரடி வந்து தாதன்கண் பறித்த தன்றே. (கங)

பெருத்திடுங் கரடி கண்ணைப் பிடுங்கவு நடுங்கித் தாதன்
கருத்துமுன் னிழந்தான் றீங்கார் கண்ணுமின் றிழந்தான் றேகம்
வருத்தம தடைந்து நீங்கும் விழிவழி குருதி சோரத்
திருத்தமா ரீசர் நிந்தைத் தீச்சுடத் தரையின் வீழ்ந்தான். ()

அன்னது கண்டோர் கூறக் கேட்டுளோ ரவ்வூ ருள்ளோர்
சொன்னநான் மறைவ லார்க டொண்டர்கண் மற்றுளோர்கள்

பின்னைய ஞூரி லுள்ளோ ரியாவரும் பெயர்ந்து கூடி
யின்னலார் தாதன் வன்க ணிழந்துவீழ்ந் தரற்றல் கண்டார்.

கண்டனர் கரடி வந்து கண்ணிணைப் பறித்த வாறு
மிண்டிசை தாதன் கண்போய் மேதினி கிடக்கு மாறும்
பண்டரு மறையி னோருந் தொண்டரும் பார்த்துப் பாவிக்
குண்டின நரகத் தாழ்த லன்றியே யுய்வ துண்டோ. (கசு)

என்றுரைக் குநர்கள் சில்லோர் மற்றுளோ ரிவனுக் கென்னே
கொன்றைவே ணியனார் கோயில்கா ணுணுக் கொடிய தீங்கு
மன்றியுஞ் சிவனை நிந்தை யனுதின மறையுந் தீங்கு
மொன்றுமுற் பிறப்பிற் செய்த வூழ்வினைத் திங்கா மன்றே. ()

கையன லேந்தி யாடும் வயித்தியக் கடவு ளின்றே
யையமில் வைய கத்துள்ளனை வரு மறியும் வண்ணம்,
பையர வணையோ னாதி பரசம யத்து ளோர்க
ளுய்யுமா றிந்த வாட றிருவுளஞ் செய்தா ரென்பர். (கஅ)

நிகழ்ந்தன பலருங் கண்டோ மாதலா னீணி லத்திற்
புகழ்ந்தவர் போகம் வீடு பொருந்தலு மீசன் றன்னை
யிகழ்ந்தவ னிடரு ளாழ்ந்து நரகத்து ளெய்து மாறு
மகந்தனி லுணர்ந்துதேர்ந்தோ மென்றுரைத்தகல்வர்சில்லோர்.

நீணிலத் தேவ ரேனு நெற்றியி னீறிட் டோரைப்
பேணிமுன் றொழுத னன்று பிறர்தமை யிகழ்த றீது
காணுமி னென்று வந்தோ ரனைவருங் கருத்துத் தேறிச்
சேணுயர் புதுவை யீசன் றிருவடி தொழுது சென்றார். (உ0)

## தாதன் கண்பறித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கசகூச.

---

### தாதன் கண்பறித்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்துப் பரமேசுரனுக்கு அமைத்தமலர்களை யெடுத்துச் சூடிக்கொண்ட வாணன்றலை வெடித்த சரிதஞ்சொன்னோம். இனி தாதன்கண்பறித்த சரிதஞ் சொல்லுவோமென்று சொல்லுவார்:—புதுவைத் தலத்திற்கு வடகிழக்காக இருக்கும் வில்லிபுத்தூரென்னு நகரத்திலேயுள்ளார் சிலர் சை

வசமயத்தைச்சார்ந்தவர்கள். சிலர் வைணவசமயத்தைச் சார்ந்தவர்கள். சிலர் அவ்விரண்டையுங்கைக்கொண்டவர்கள். இவருள் ஒரு தாதன் வைணவசமயத்தையடைந்து எந்நேரமுஞ் சிவநிந்தைசெய்துகொண்டிருப்பான். சிவனடியாரைக்கண்டாற் கண்ணைமூடிக்கொள்வான். அன்றைக்குப் போசனமுஞ்செய்யமாட்டான். சிவநாமஞ்சொல்லக்கேட்டா லிரண்டுகாதுகளையும் பொத்திக்கொள்ளுவான். இவைகளே தவவிரதமாகக்கொண்டிருப்பவன். சிவநிந்தைசெய்பவர் நரகத்தையடைவாரென்று சொன்னாலு மங்கீகரிக்கமாட்டான். விஷ்ணு சிவபிரானிடத்திலே யன்புவைத்திருப்பதுகாட்டிப் பிரமாணத்தோடுகண்டாலு நம்பமாட்டான். புதுவை வயித்தியநாதர் ஆலயத்துக்கு முன்னர்ச்செல்லில் தன் கையிலிருக்கிற குடையினாலே தன்னை மறைத்துக்கொண்டு அப்புறம்போவான்.

இவைகளெல்லாங்கண்டிருந்த சிவனடியார்கள் இந்தத் தாதனாகிய பாவியைக்கண்டாலுந் தீதென்றுநினைத்து வயித்தியநாதர்முன்புவந்துநின்று வணங்கி அவன் கண்ணைப்பறித்தெறியவேண்டுமென்று பிரார்த்தித்தனர். வயித்தியநாதரும் அசரீரிவாக்காக அங்ஙனஞ்செய்வோமென்று கட்டளையிட்டருளினர். அடியார்களெல்லாரு மதுகேட்டு மனமகிழ்ந்து சென்றனர். பின்னொருதினத்திலே மேற்கூறியதாதன், ஆலயத்துக்கு மேல்பக்கமாகப்போம்போது ஆலயத்தைப்பார்ப்பதற்குக் கண்கூசிக்குடையினாலே மறைத்துச்சென்றான். அப்போது வயித்தியநாதர் திருவருளாலொரு கரடிவந்து தாதன்மனம்பதைபதைக்கும்படி அவன் கண்களைப்பிடுங்கி யோடிச்சென்றது. தாதனும் அறிவுகெட்டதுடன் கண்களுங்கெட்டுக் கண்பறித்த குழியிலேநின்று மிரத்தஞ்சோரச் சிவநிந்தையாகிய அக்கினி சுடத் தரையிலேவிழுந்தான். இவைகளைக்கண்ட சிவனடியார்கள் ஏனையோர்கள் அவ்வூரிலுள்ளவர்களெல்லாருங்கூடினர். இந்தப்பாவியாகிய தாதனுக்கு இனி நரகம் தப்பாதுகிடைக்குமென்று சிலர்சொன்னார். சிலர் சிவாலயத்தைக்காணாத கொடியதீங்குஞ் சிவநிந்தையு மிவனுக்குஊழ்வினைவசத்தாலெய்தினவென்பார். இந்தத்திருவிளையாடலெல்லாருமுய்யுமாறு வயித்தியநாதர் செய்தனரென்று சிலர்சொல்லுவார். சிவநிந்தைசெய்பவர்படும்பாடு இன்றுகண்டோமென்று சொன்னார் சிலர். எவராயினும் விபூதிதரித்தவரைக்காணி லவரைப்பூசிக்கவேண்டும். தூஷிக்கக்கூடாதென்று மனந்தெளிந்து புதுவைநாயகர் திருவடியைத்தொழுது எல்லாருமவரவரிருக்கைக்குச்சென்றனர்.

இருபத்திரண்டாவது

# வணிகன் பொன்மடிப்பை வந்த அத்தியாயம்.

---

நண்ணிய கமல பாத நணவுரை செயல்க ளாலே
கண்ணிய மலர்க ளிட்டுக் கருத்துற வழிபா டாற்ற
வெண்ணிய விரந்த வெல்லா மீந்திரு வினையு நீக்கும்
புண்ணியப் புதுவை மேய புனிதனைப் போற்றல் செய்வாம். (௧)

போதனைப் புதுவை மேய புனிதனை யிகழ்ந்த தீய
தாதனைக் கண்ப றித்த தகைமையைச் சாற்றி னோமால்
வேதனைச் சூலை யுற்ற நகிலனை யாள வேண்டிச்
சோதனை மடிப்பை போக்கி நல்கிய காதை சொல்வாம். (௨)

கண்கவர் மணப்பி னீடு கடிமனை மாட மெங்கும்
பண்பக ரளிகள் மொய்க்கும் பங்கயா கரங்க ளெங்குஞ்
செண்பக தருவுஞ் சூதந் தெங்கொடு பூக மோங்கி
விண்பக வுயருஞ் சோலை மாலுறை வில்லி புத்தூர். (௩)

அந்நகர் வதியு மேன்மை யளப்பிலா வணிக ரென்று
மன்னிய செல்வம் பெற்றுத் தனதனைப் போலும் வாழ்வார்
துன்னிய வணிகர் தம்முட் டலைமையாந் தொன்மை யுள்ளா
னன்னய முதவு சொல்லா னகிலனு நாம முள்ளான். (௪)

நிதிபல வளித்து நேர்ந்து நீணிலச் சரக்கி யாவும்
விதிபெறக் கொண்டு கட்டி வளம்பட விலைசேர் செய்பொன்
றுதிபெறத் தேடி யீட்டி யூதியஞ் சுரந்து மல்க
மதிபல பொருள்க ளொன்றுங் குறைவற வளரு நாளில். (௫)

முற்பவம் புரிந்த தீங்கா லவனுடன் முழுது நோவ
விற்பொலியயில்கொள்வேலாற் குடைந்தெனவெருவியன்றே
னெற்பக றுயிலு மின்றி யிடருழந் தாற்ற வெங்குஞ்
சொற்பல வாவ யிற்றிற் சூலைநோய் தோன்றிற் றன்றே. (௬)

புரையறு சந்து தோறும் பொருத்துக டோறு மாறு
நிரைபெற வீக்கந் தோன்றித் தெறித்திட நினைவ ழிந்து

தரையுறக் கிடத்த லின்றி யிருந்திடுந் தன்மை யின்றி
யுரைபகர் செயலு மின்றி நடையின்றி யொடுங்க லுற்றான். ()

இப்பெருந் துயரு ளாழ்ந்து நகிலனு மிளைத்தல் கண்டே
யொப்பகன் மனைவி மைந்தர் தத்தமை யுற்ற நோய்போல்
மெய்ப்பர வசத்த ராகி யழுதுள மிகமெ லிந்தார்
தப்பிலாச் சுற்றத் தாருஞ் சார்ந்தவன் றளர்வு கண்டார். (அ)

அருத்தியின் வந்த சுற்ற மனைவருந் துயரு ளெய்தி
மருத்துவ நூல்க ளாய்ந்த வயித்தியர் தம்மைக் கூவி
யுருத்தெழு முதாச் சூலைத் துயரொலா முரைக்கக் கேட்டுத்
திருத்தநூல் வழியா ராய்ந்து வயித்தியர் மருந்துசெய்வார்.()

அடைவுடன் மருந்து செய்ய வருமிதி வெறுப்ப வீந்து
கடையுறு சரக்கு மீண்டுங் காட்டுமூ லிகைக ளோடுந்
தடையற மலையின் மேய தருவளர் பட்டை யாதி
மிடைதரக் கொணர்ந்து பாகமேன்மையா மருந்து செய்தார்.

ஐவகை யெண்ணெய் கூட்டுந் தயிலமோ டடு*கி டாய
மெய்வகைச் சூரணங்கள் விளம்பிலே கியங்கண் மற்றுங்
கைவகைத் திறங்க டோன்ற வயித்தியர் கருதிச் செய்தே
யுய்வகை நோயு ளானுக் கூட்டுவர் முறைமை யோடும். (கக)

வேறு.

ஓதுமிர சாயண மிலேகிய முவந்த்
தாதுபொடி சூரண மருத்தியுடல் சாரப்
பாதமொடு சென்னிவரை யெண்ணெய்பரி சித்து
வேதுகள் வெதுப்பியுடன் மீதுறவும் விட்டார். (கஉ)

நித்தியமு முப்பொடு புளிப்பிவை நிறுத்திப்
பத்திய விதத்தமுது பாகமொ டருந்திச்
சித்திதரு மென்றுள மருந்துபல தின்றான்
புத்தியில வாவில்வினை போயொழிக வென்றே. (கங)

வேறு.

இந்த விதத்தான் மருந்தருந்தி யெய்த்தா னன்றி யிடர்புரிய
வந்த வினையு மருந்தருந்த நெய்யால் வளரு மாகுதிபோல்

---

* கிடாயம் - கஷாயம்.

முந்த னுயர்பூ சனையில்வினை செல்வம் போலுமூண்டெழுந்து
நந்த லிணைய வவ்வணிக னுடலை நோயு நலித்ததால். (கச)

வேறு.

எண்ணிலா நிதியம் வந்த வயித்தியர்க் கெல்லா மீந்து
மண்ணிடைப் பூண்டி னோடு கடையுள மருந்தொன் றின்றி
நண்ணிய பாகஞ் செய்து கொடுத்துநோய் நலிவ தின்றிக்
கண்ணிய வயித்தி யோருஞ் சடைந்துகை விட்டா ரன்றே ()

வஞ்சகஞ் சொல்லு மேவற் குணமறும் வகையுஞ் செய்தார்
விஞ்சைகள் பலவுந் தெய்வ குறையற வேண்டிச் செய்தார்
பஞ்சபா தகங்க ணீங்கக் கருமவி யாகஞ் செய்தார்
தஞ்சநற் சிவிகையேற்றித் தலந்தீர்த்த மாடச் செய்தார். (கசு)

மணியொடு மந்தி ரங்க ளவுடதந் தெய்வ மற்று
மணிபெறச் செய்து மன்னோன் வயிற்றிடை யடுத்த சூலை
பணியரு ணிலையி லோர்க்கு முதியவர் பகருஞ் சொல்லாற்
பிணிபடு யாச நீங்காப் பெற்றிபோற் பெருகிற் றன்றே. (கஎ)

பிறிதொரு செயலு மின்றி யெய்த்தனர் பேணுஞ் சுற்ற
மறிவுடை மனைவி சால வயர்ந்துளத் தெண்ண லுற்று
ளுறியிடை வெண்ணெய் வைக வூருணெய்க் கலைவார் போலு
மிறைவயித் தீசர்ப் போற்று தென்செய்தோ மின்று காறும்.

முன்னருங் குழவி யின்றிச் சிவகங்கை தன்னுண் மூழ்கிப்
பின்னரு முமையா ளோடும் வயித்தீசர் பாதம் போற்றி
நன்னயத் திறங்கண் மேய புதல்வரை நல்கப் பெற்றோ
மின்னும்மன் புடனே போற்றி லிச்சூலை தவிர்ந்தி டாதோ. ()

என்றவ ளுள்ளந் தேறிக் கணவனோ டீது ரைத்து
மன்றலார் புதுவை யீசர் வளர்பெருங் கருணை நேச
யொன்றிய வன்பு செய்து பணியநோ யொழியு மென்றுங்
குன்றிடாமடிப்பைசெய்பொற் குவையொடுமீவோமென்றாள்.

அவ்வுரை வணிகன் கேட்டென் னுருயிர்த் துணைவி நீகேள்
வெவ்விடம் போல கட்டின் மெலிவுசெய் சூலை வெந்நோ
யெவ்விதத் தானு நீங்கித் தீர்ந்திடி லீசர்க் கன்பாக் [ற்றன்.
கொவ்வைவாய்நீயேடைபயுட் பொருளெலாங்கொடுத்தியென்

## பொன்மடிப்பை வந்த அத்தியாயம். ௨௫௭

அம்மொழி யுண்மை யாக்கொண் டாயிழை யன்பி னோடுஞ்
செம்மைசேர் புதுவை சேர்ந்து சிவகங்கைச் செழுநீ ராடி
யம்மையோ டப்ப ராய வயித்தீச ரமலை பாதங்
கொம்மைவெம் முலையாள் வீழ்ந்து கும்பிடல்புரிந்துபோற்றி.

புல்லிய வபிடே காதி பூசனைப் பொருளு நல்கி
வில்லமென் றொடையன் மாலை வியன்பெற வினிது சாத்தி
நல்லநெய் விளக்குப் பட்டப் பகலென நசையி னேற்றி
மல்லல்சேர் வணிக மாது சந்நிதா னத்தின் வந்து. (௨௩)

கதியினி நீயே யென்னை யாள்சிவ காமித் தாயே
மதியணி வயித்தி யப்பா மலரடி நம்பி னேனெனி
பதியெனுங் கணவற் குற்ற பாரநோய் பாறச் செய்தி
நிதியொடு முழும டிப்பை நின்பணிக் கருள்வா மென்றே. ()

வேண்டுகோ ளிரந்து வேண்டி விளம்புநாற் பதுநா ளாய
நீண்டவோர் மண்ட லந்தா னித்திய மின்ன வாறு
பூண்டபே ரன்பி னோடு காலங்கண் மூன்றும் போற்றிக்
காண்டகு நீறு மஞ்சட் காப்புந்தன் கணவற் கீந்து. (௨௫)

சிந்தையு ளன்பு பொங்கத் தினந்தொறும் வணிகன் றேவி
யந்தமில் பத்தி யோடுந் தொழுதிட வவன்றன் சூலை
வெந்தழ லிடுபஞ் சென்ன மெலிந்தறத் தீர்ந்து நீங்கச்
சந்தத மூளங்கு ளிர்ந்தவ் வணிகனு மின்பஞ் சார்ந்தான். ()

கண்டனள் வணிகன் றேவி கருத்தினு ளடங்கா வின்பங்
கொண்டனள் கணவ னோடு கூறினள் கருணை நேசத்
தண்டாநா யகனு ரிந்நோ யகற்றின ரச்சோ வென்று
விண்டனள் விமலர்க் கின்னே மடிப்பைநல் கெனவி யந்து.()

கேட்டுளம் வியத்த லின்றி வணிகனுங் கேளான் போன்றே
யீட்டியநிதிப்பை நல்கத் தாழ்த்தன னீவோ மென்னக்
கோட்டிள முலையாள் காந்தன் குறிப்புணர்ந் தந்தோ வின்றே
மாட்டுள பொருணல் காயேல் வந்துறு மீட்டுஞ் சூலை. (௨௮)

ஈசனுர்க் கிதய மார வீகுவோ மென்று கூறி
நேசமில் கொடிய நோயை நீக்குதல் கண்டு மீண்டு
மாசுலோ பத்தா லிவ்வா றுரைத்தனை மதிம யங்கி
நீசரு மின்ன தன்மை நிகழ்த்திடார் நினைவி லாதோய்.(௨௯)

என்றசொல்வணிகன்கேட்டும்பொருளாசை யிடும்பையெய்திக்
கொன்றைவேணியனை யீரன்று கொண்டருள் புரிந்து தீரா
வென்றிசேர் சூலை தீர்த்த மேன்மையு மனையாள் செய்த
நன்றியு மறந்து வாளா விருந்தனன் மதியி னாய்கன். (௩௦)

பதியுளக் குறிப்ப றிந்து மீளவும் பகர வஞ்சி
மதியணி வயித்தி யப்பா வளர்சிவ காமித் தாயே
நிதியமீ யாவு லோப நெஞ்சனுக் கின்னுஞ் சூலை
யதுமீள வாரா வண்ண மருளென வணங்கி ருந்தாள். (௩௧)

வஞ்சமே புரியு நீசர் வறுமையும் பிணியு மெய்த
நெஞ்சகத் துணர்ந்து மீள வன்னதே நெடிது செய்வார்
பஞ்சபா தகம்பு ரிந்தோர் படுந்துயர் கண்டு மீண்டு
மஞ்சுதலின்றி மூட ரன்னதே புரிவ ரந்தோ. (௩௨)

கள்வரைச் சிரம ரிந்து கழுவிடை யேற்றக் கண்டுங்
கொள்வது மனத்து ளின்றி மீளவுங் களவு கொள்வா
ரெள்ளலார் கொலைகள் செய்வோ ரிம்மையேகொலைகளெய்த
லுள்ளலார் மீள வன்ன துளக்களிப் போடுஞ் செய்வார். ()

இத்தன்மை யுலகி லென்று மியல்பதாஞ் செய்கை யன்றோ
பித்தனும் வணிகன் முன்செய் தீங்குள பெருநோய் நீத்த
வத்தனை யருண்ம றந்தா னண்ணலா ரருளா லில்லின்
வைத்துயர் நிதிய மிட்ட மடிப்பையுந் தேடிக் காணான். (௩௪)

முழுவதுஞ் செம்பொ னிட்ட பைமுழு மோச மெய்த
வழுதன னரற்றிக் கையான் முகம்வயி றலைத்துச் சால
விழுந்துபேய் யெரிபோ லுள்ள மெரிந்தன னிருகண் ணாலு
மொழுகுகண் ணீருளாழ்ந்தான் றிருவுளச்செயலென்றோரான்.

அன்பனிவ் வாறு சால வரந்தையுள் ளடைந்து நெஞ்சந்
துன்புற நோக்கி யில்லா டானுமத் துயருண் மூழ்கித்
தென்புது வைக்கு நாதன் றிருவுளச் செயலா மீது
முன்புரை செய்தேன் சற்றுங் கேட்டிலாய் மோக முற்றாய்.

இனியேனு மன்பி னோடு மீசனார் பாதம் போற்றி
நனிமேய பத்தி செய்து நல்கிடு மடிப்பை யென்னக்
கனிபோலு மொழியாள் சொல்லக் கருத்திலன் பற்ற நாய்கன்
புனிதன்மீ தன்பி லாத பொய்யனு ளாத லாலே. (௩௭)

செம்மையா நீயு ரைத்த வார்த்தையுஞ் சிந்தை கொள்ளே
னன்மையில் சூலை மீள வருமென நடுங்கு முள்ள
மம்மையோ டப்ப ராய வயித்தீச ரம்பு யத்தாள்
கொம்மைமென் முலையாய்நீயே போற்றிசெய்குறையிரங்கே.()

கொடியவெஞ் சூலை மீண்டும் பெருந்துயர் கொள்ளா தின்னு
மடியவர்க் கெளிய வீச னிதியமு மருளும் வண்ண
படிமையி லன்பி னோடும் வணங்குதி யிரங்கி லென்றுங்
குடிவழி யடிமை செய்து நிதியெலாங் கொடுப்போ மென்ன.

காந்தன துரையைக் கேட்டுக் கருத்தினு ணம்ப மாட்டா
தேந்திள முலையாள் கூறு மென்னுரை மொழியும் பொய்யாப்
போந்ததா மிரண்டு பேரும் போதுவோஞ் சென்று போற்றச்
சாந்தமார் புதுவை யீசர் தந்தருள் புரிவ ரென்ன. (௪0)

வணிகனு மதற்கி சைந்து மனைவியு மருங்கு சார
வணிதிகழ் புதுவை யெய்திச் சிவகங்கை யதனு ளாடித்
தணிபெறு சிந்தை யோடுஞ் சந்நிதா னத்துட் டாழ்ந்து
டணியணி யமல னோடு முமையவள் பதம்ப ணிந்து. (௪௧)

சீர்பெறு மருச்ச னுதி செயுந்திர வியங்க ளீந்து
பார்பெறு பள்ளித் தாமம் விளக்குயர் பணிக ளாற்றி
யேர்பெறுமன்பிற்பல்காற்றாழ்ந்துதாழ்ந்தெழுந்துகொன்றைத்
தார்பெறு சடையார் பாத நாடொறுஞ் சார்ந்து போற்றி. ()

நெஞ்சகத் தறிவி லாத நெறியிலேன் புரிந்த குற்ற
மஞ்சலென் றருளி யின்னே பொறுத்தரு ளன்பி லாத
வஞ்சகர் தீமை நீக்கி யாள்வதுன் மகிமை யன்றோ
கஞ்சனு மயனுந் தேடுங் கதிர்முடி யடியு ளோனே. (௪௩)

உலகினு ளுயிர்கள் செய்த குற்றநீ யுணரி லெந்தா
யலகிலா வுயிர்க ளெவ்வா றுய்யுநீ யருளா யீட்டு
மிலகுமெந் நிதியை யின்றே யீந்தரு ளீந்த போதே
திலகவா ணுதலி பங்கா திருப்பணிக் கீவோ மென்று. (௪௪)

இந்தவா றிரந்து வேண்டி யிருவருந் தொழுது நிற்ப
வெந்தநீ றணிந்த மேனி வேதிய ரொருவர் வந்து
சிந்தையு ணினைந்த வெல்லாந் திருவுள மிரங்கு மென்று
தந்தனர் நீறும் பூவும் வாங்கினர் தலைமேற் கொண்டார்.(௪௫)

மெய்ப்பொரு டிருமுன் னின்று நல்கிய மேன்மை கண்டு
கைப்பொருள் வந்த தென்னக் கருத்தினு ளுவகை பொங்கப்
பைப்பொருடருவோமென்று விடைகொடுபணிந்துசென்றார்
பொய்ப்பெ[illegible]ணீத்தோர் வாழும் புதுவைமா நகரை நீங்கி.

வில்லிபுத் தூரிற் சென்று மெல்லியல் கணவ னோடு
மில்லிடைப் புகுந்து முன்வைத் திருந்தவவ் விடத்தி னெய்தி
வல்லியோர் பாக மேய வயித்தீசர் பாதம் போற்றித் [தார்.
தொல்லைப்பொன்மடிப்பைகண்டு தொழுதுளமகிழ்ந்தெடுத்

சிட்டர்வாழ் புதுவை யீசர் திருவுள மிரங்கி யீந்தார்
கெட்டவிப் பொருளை யென்று கேள்வனு மனைவி தானு
மட்டிலா மகிழ்ச்சி பொங்க மற்றுள சுற்றத் தாரு
நட்டமீர் கமல பாதன் புகழையே நவின்றி ருந்தார். (சுஅ)

கெண்டையங் கண்ணி காதற் கேள்வனை யினிதி னோக்கிக்
கண்டனை கருணை வள்ளல் கருணையை யினித்தா ழாது [னைப்
கொண்டபொன்மடிப்பையோடு கொடுத்திடாயாலுக்கென்
பண்டுபோல்வணிகன்செம்பொற்பைமுடிப்பவிழ்த்துப்பார்த்து.

செந்தழற் பொறிகள் போலுந் திரவியஞ் சேரக் கண்டு
முந்தநா ளீந்தேன் போலு மீட்டிய முதலை யெல்லா
மெந்தவா றீசற் கீவோ மீந்திடி லெவ்வா றுய்வோ
மிந்தநற் பொருளா லன்றோ வில்லற மோம்பல் வேண்டும். ()

நலனரு ணிதிய மின்றி நல்குர வடைந்த தென்னிற்
குலனுயர் கல்வி ஞானங் குறைந்துல கிகழ்ந்து கூறும்
பலனருள் கல்வி ஞானம் பகர்குலம் பண்பின் றேனு
மலகிலா நிதியுண் டென்னி லவைபெலா முடைய னவன்.()

முனிவரர் வேந்த ரேனும் பொருளெனின் முயல்வ ரன்றோ
கனிமொழி யுமையாள் பங்க னெப்பிலாக் கருணை வள்ள
லினியவிப் பொருளீந் தாலோ வின்னருள் புரியு மென்று
நனியுலோ பத்தா லிவ்வா றென்றையு முளத்தி னண்ணான்.

பச்சிலை நீரா லாற்று மருச்சனைப் பான்மை நோக்கி
மெச்சிய கருணை வள்ளல் வேண்டிய விபவ நல்கு
நிச்சய மீது மோரா னீனிதி விமலர்க் கீதல்
பொச்சமி லொன்று கோடி யாமெனும் பொலிவு மோரான்.

தொலைவறு துயரை நல்குஞ் சூலையைத் தவிர்த்த லோரா
னிலவணி சடையெம் மண்ணற் கீபொருணிவின் மற்றைச்
செலவுபோ லெண்ணிப் பேதை வணிகனுஞ் சிந்தை தேறிக்
குலவிய முழுது நல்கான் சிலபொருள் கொடுத்து விட்டான்.

அன்னவ னுலோபத் தாலே யறிவழிந் தளித்த பொன்னை
மின்னிடை மனைவி தானு மறுத்திடில் வெகுள்வா னென்று
தன்னுள மிகவும் வாடித் தன்கையில் வாங்கி யீசன்
பொன்னடிப் பணிக்கு நல்கி மனையிடைப் போந்தி ருந்தாள்.

முன்னவன் புதுவை மேய முழுப்பெருங் கருணை நாதன்
றன்னுளத் தன்பை யெவ்வா றுரைப்பது சாற்றக் கேண்மின்
சொன்னவா றீபா நாயக னரகிடைத் தோயா வண்ண
மன்னவன் றுயில்க னுவி லங்கெழுந் தருளி யண்ணல். (௫௬)

இறந்திடுந் துயர நல்க வெய்துமின் சூலை யாமே
துறந்திட மடிப்பை நீயே சொன்னவா றீயும் வண்ண
மறந்திட றருமோ செய்த நன்றிகொல் வணிகா செம்பொன்
குறைந்திட நல்க லேடா முழுவதுங் கொடுத்தி டாது. (௫௭)

நம்பொருள் வணிகா நம்பா னவையற நல்கா யென்னி
லெம்பெருஞ் சூலத் தாலே யிடர்புரிந் திடுவோ மென்றே
யும்பரு மயனு மாலு மறியொணா ருரைத்துச் சென்றார்
வெம்பின னடுங்கி வாய்விட் டலறினன் வெருவி யன்னோன்.

துயில்விழித் தயர்ச்சி நீங்கிச் சொப்பனக் காட்சி யெல்லா
மயிலனை யவட்குக் கூற வன்னவண் மனமுந் தேறி
வெயின் மணிப் புதுவை யீசர் திருவிளை யாட்டீ தென்றே
யயலுள சுற்றத் தார்க்கு முரைத்தன ளன்பு பொங்க. (௫௯)

விருப்புடன் மடிப்பை யுள்ள நிதியமும் விளங்கு மாடத்
திருப்புள பொன்னுங் கொண்டு புதுவையு ளெய்தி வேண்டுந்
திருப்பணி பிறவுஞ் செய்யுந் திறமுடை யவர்பா லீந்து
மருப்பொதி குழலெம் மன்னை வயித்தீசர் பதம்ப ணிந்து. ()

பாலகர் தீங்கு செய்யி லன்னையர் முனிந்து பண்பாச்
சாலவும் புத்தி கூறித் தயவுடன் வளர்ப்ப தேபோ
லேலவே யறிவி லாத வேழையேன் பிழைபொ றுத்துக்
காலனைக் காய்ந்த காலா நம்பினேன் காத்தி யென்றும். ()

என்னறி யாமை நீக்கி யிடையறா வன்பு நல்கிப்
பொன்னடி மறவா தேத்தும் போதமு மருளி நேச
மன்னுநின் னடியார்க் கேவல் புரிந்திடு மதியு மீந்தே
யின்னுமென் பிழையை நீக்கி யெக்காலும் புரப்பா யென்றும்.

மனைவியுந் தானு மண்ண லுமையவன் மலர்த்தாள் போற்றி
நினைவினு ளன்பு பொங்க வீசனார் நேசம் பெற்றுக்
கனவிடை வந்த காட்சிக் கருணையே நினைந்து நெஞ்சம்
புனைதரு மின்பமோங்க விடைகொடு போந்தா ரன்றே. (சுங)

வேறு.

அற்றை நாண்முத லுமைசிவ காமியம் மனையுங்
கற்றை யஞ்சடைக் கண்ணுதல் வயித்தியப் பனையு
நற்ற வம்பெற நாடொறுந் தொழுமுபர் நலமும்
பெற்று நீணிதி பண்டையிற் பெருகிடப் பெற்றார். (சுச)

வேறு.

வணிகனு மனைவி யோடு மைந்தருஞ் சுற்றத் தாருந்
தணிவில்சீர்ச் செல்வ மோங்கத் தாழ்வின்றி வாழ்ந்து நித்தம்
பணிவிடை புரிந்தே யீசன் பதமலர் போற்றி யீற்றி
லணிதிகழ் பாத நீழ லடையுமன் படைந்திருந்தார். (சுரு)

## வணிகன் பொன்மடிப்பை வந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கருஉக.

### வணிகன் பொன்மடிப்பை வந்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளைநோக்கித் தாதன் கண்பறித்த சரிதஞ்சொன்னோம். இனி வணிகன்பொன்மடிப்பைவந்த சரிதஞ்சொல்லுவோமென்று சொல்லுவார்:— திருபால் வாசஞ்செய்யு மேற்கூறிய வில்லிபுத்தூரில் அளவிறந்த செல்வவளமுள்ள வணிகர்குலத்திலே நகிலனென்பவன் உலகத்திலுள்ள பலசரக்குகளையுங் கொள்ளற்குரியகாலத்திலே கொண்டும் விற்றற்குரிய காலத்திலே விற்றும் பொருளீட்டி வருநாளிலே ஊழ்வினைவசத்தால் வேலாயுதத்தாற் குடைந்ததுபோல அவன் வயிற்றிலே சூலைநோய்வந்து வருத்தப்படுத்துதலும் நினைவழிந்து, கிடத்தலு மிருத்தலும் நடத்த

னுமின்றிச் சரீரமொடுங்கி யிளைத்துவிட்டனன். அவன் மனைவி மைந்தர் அதுகண்டு அழுதுநொந்து சுற்றத்தாருடனே மிகக்கவலையடைந்தனராய் வயித்தியரை வரவழைத்துப் பெருந்திரவியங்கொடுத்துக் கடைச்சரக்கு காட்டுமூலிகை மரங்களிலுள்ள பட்டையாதிகளால் தயிலம் கஷாயம் சூரணம் இரசாயனம் இலேகிய முதலிய மருந்துகள் செய்வித்துப் பிரயோகித்தார்கள். சூலைநோய் நெய்யால் வளரும் ஓமம்போல நாளுக்குநாள் அபிவிருத்தியாயிற்று. வயித்தியருங் கைவிட்டனர். கரும யாகமுதலிய சாந்தியுந் தீர்த்தயாத்திரையுஞ் செய்வித்தனர். ஒன்றிலுஞ் சூலைநோய் தீராமல் நகிலன் பெருந்துன்பமடைவதை அவன் மனைவி பார்த்துக் கவலைப்பட்டு நகிலனோடு சொல்லுவாள். உறியிலே வெண்ணெயிருக்க வெளிச்சென்று நெய்க்கலைவார்போலப் புதுவை யீசரிருக்க அவரைவிட்டு வேறுவழியா யலைந்துவிட்டோமே நமக்குப் பிள்ளையில்லாமற் சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து புதுவையீசரையும் சிவகாமியம்மையாரையும் பிரார்த்தித்துக்கேட்கப் புத்திர பாக்கியங்கொடுக்கப் பெற்றோம். இன்னும்போய் அவரைப் பணிந்தாலிந்தச் சூலைநோய் தீர்ந்துவிடும். அப்படித் தீர்ந்துவிட்டால் புதுவை நாயகருக்குநமது பொற்குவை நிரம்பிய மடிப்பையைக்கொடுத்து விடுவோமென்று சொல்லி நாயகன்சம்மதம்பெற்றுப் புதுவைசென்று சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து வயித்தியப்பரையுஞ் சிவகாமியம்மையையும் பணிந்து துதித்து அபிடேகாதி சோடசோபசாரத்தாற் பூசைசெய்வித்து என்னுடைய நாயகன் சூலைநோயை நீங்களே போக்கியருளவேண்டும் வேறுகதியில்லை யப்படியருளிச்செய்தால் உங்கள் திருப்பணிக்கு எங்களுடைய பொன்முடிப்பையைக் கொடுத்துவிடுகிறோமென்று பிரார்த்தித்து நாற்பதுநாள் தினந்தோறும் விபூதியும் மஞ்சட்காப்புந் தன்கணவனுக்குக்கொண்டுபோய்க் கொடுத்துவர அவனுஞ் சூலைநோய்தீர்ந்து சரீரங்குளிர்ச்சியடைய இன்பமுற்றிருந்தனன்.

இங்ஙனம் நகிலன் சுகம்பெற்றிருப்பதை யவன்மனைவிகண்டு மகிழ்ச்சியடைந்து புதுவைநாயகர் திருவருளாலே சுகமடைந்தீர், அவருக்கு நாம் வாக்குச்சொல்லியபடி பொன்முடிப்பையைக் கொடுத்துவிடுமென்றனள். அதைக்கேட்டுங் கேளாதவன்போல நகிலன் பொன்முடிப்பையைக்கொடுக்க மனமில்லாதிருந்தான். அவன்கருத்தையறிந்து மனைவி அவனைநோக்கி நீகொடாவிட்டால் திரும்பவும் வயிற்றுநோய்வந்துவிடும், நீசரும் இப்படி மறுக்கமாட்டார், அறிவில்லாத

வனே! என்று சினந்துபேசினள். அதையுங்கேட்டுக்கொண்டு நகில ன் மௌனஞ்சாதித்திருந்தான். மனைவி குலைநோய் திரும்பிவருமோ? வென்றுபயந்து அதுவராதவிதம் புதுவைநாயகரைத் தியானஞ்செய் துகொண்டிருந்தாள். இவளிங்ஙனமிருப்ப, நன்றியறிதலில்லாத மூ டனாகிய நகிலன் சிவநேசத்தை மறந்தனனாதலாலே புதுவைநாயகர் அவன் வைத்திருந்த பொன்முடிப்பையையவன் கண்ணுக்குத்தோ ற்றாது மறைத்துவிட்டனர். அந்தப்பையை நகிலன் தேடிப்பார்த்துக் காணாமலழுது வயிற்றிலேயடித்துக்கொண்டு துன்பக்கடலுளாழ்ந்த னன். அதையவன் மனைவிகண்டு இந்தமாயஞ்செய்தவர் புதுவை நாயகரைத் தவிரவேறொருவரில்லை. என்வார்த்தையைக் கேளாது வருத்தமுற்றீர். இனியேனும் அவருடைய பாதத்தைவணங்கிப்பத்தி செய்வீராகில் பொன்முடிப்பை கிடைக்கும்படி அவர்திருவருள்செ ய்வாரென்றனள்.

நகிலன் அதுகேட்டு நான்பொய்யனாதலாலே யிதோடு போ காமற் குலைநோயும் வருமோ? என்று பயப்படுகிறேன். நீயே சென்று பிரார்த்தனைசெய்யக்கடவாய். பொன்முடிப்பை கிடைத் ததானாற் புதுவைநாயகருக்குக் கொடுத்துவிட்டு அவருக்கு வழிவழி யடிமையாவோமென்றனன்; அதற்கு மனைவிசம்மதியாமல் அவனை யுமுடன்படுத்திக்கொண்டு இருவரும்போய்ப் புதுவை நாயகரைப் பிரார்த்தனைசெய்து பூசித்துத்துதித்து நின்றார்கள். அப்போது, ஒரு பிராமணர்வந்து விபூதியும் புட்பமுங்கொடுத்தனர். அவைகளை யுண்மைப்பொருளென்று நம்பிவாங்கி யினிப்பொன்மடிப்பைகிடை க்குமென்றுவீட்டுக்குவந்து சேமித்துவைத்திருந்த இடத்திலேபார்த் துப் பொன்முடிப்பையைக் கண்டெடுத்துச் சுற்றத்தாருடனே யெ ண்ணில்லாத மகிழ்ச்சியுற்றுப் புதுவைநாயகரைப் புகழ்ந்து வியந்தி ருந்தனர். அதன்மேல் நகிலனைப்பார்த்து மனைவியவித்திய நாதரது கருணையைத் தெரிந்தீரன்றோ? இனியேனும் பொன்முடிப்பையை அவருக்குக்கொடுத்துவிடல் வேண்டுமென்றுகூறினள். வணிகனதற் குச் சம்மதியாமல் பொருளாலன்றோ சகலகாரியமும் நடக்கவேண் டும்? முழுவதுங் கொடுத்துவிட்டு நாமென்னசெய்வோமென்று சிறி து பாகத்தைமட்டு மனைவிகையிலேகொடுத்துத் திருப்பணிக் குப யோகப்படுத்தச் சொன்னான். அது அவளுக்குச் சம்மதமில்லாதிருந் தும் மூடனாகிய நாயகன்வார்த்தையை மறுத்தால் நம்மைத்துன்பஞ் செய்வானேயென்று அப்பொருளைவாங்கிப் புதுவைநாயகர் பணிவி

டைக்குக்கொடுத்துவிட்டு வீட்டில்வந்திருந்தனள். புதுவைநாயகர் கருணைத்திறத்தை யென்னென்று புகலுவது? அன்றிரவு கனவிலே யெழுந்தருளி "மரிக்கும்படியாகிய துன்பத்தைச்செய்யுங் குலநோயை யாமே நீக்கியருள, நன்றியறிதலில்லா மூடனாகிய வணிகா! சொன்னபடி திரவியங்கொடாமல் குறையக்கொடுத்தனை முழுவதுங்கொடாயாகில் எமது பெரிய சூலத்தாலே குத்தியுன்னைத் துன்பஞ்செய்வோம்"என்றனர். வணிகன் பதறித்திடுக்கிட்டெழுந்து கனுத்திறத்தை மனைவிக்கும் ஏனையோர்க்குஞ் சொல்லி வீட்டிலுள்ள பொருளெல்லா மெடுத்துக்கொண்டுபோய்ப் புதுவை நாயகர் திருப்பணிக்குக்கொடுத்து "அடியேனுடைய பிழைகளைப்பொறுத்தருள வேண்டும்"என்று பணிந்து துதித்து இடையறு அன்புசெலுத்தி "உம்முடைய திருவடிக் கேவல்செய்யும் அறிவையருளவேண்டும்" என்று தன்மனைவியோடு பிரார்த்தித்து விடைபெற்று மீண்டுசென்றனன். அன்றுமுதல் வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையுந் தினந்தோறுந்தொழுது முன்னைப்பார்க்கிலும் பெருஞ்செல்வமடைந்து அந்தத்திலே சிவபதம்பெறும்படி யவ்விருவரும் வாழ்ந்தனர்.

இருபத்துமூன்றாவது

# பாவைமாருக்குத் திரவியங்கொடுத்த அத்தியாயம்.

சரியையே முதலாம் வேதஞ் சாற்றிய பாத நான்கும்
புரிதவ ரிரந்து வேண்டிப் பொன்னடிக் கலந்து நிற்பத்
தெரிதரு பான்மை யற்ற சிறியனே னுளத்தி லின்பம்
விரிதர வெளிதி னல்கும் புதுவையுள் விமலா போற்றி. (க)

காதரக் கடின நெஞ்ச வணிகனைக் கருணை செய்தே
யாதரத் தண்ணல்செம்பொன்மடிச்சிறை யளித்தல்சொன்னோம்
பூதரக் கொங்கை வார்த்தை பூவைநேர் பாவை மார்க்கு [ம்
மாதர நிதிய மீந்த காதையை வழுத்தல் செய்வாம். (உ)

தெக்கிண தேயந் தன்னுட் டாம்பிர பன்னித் தீர
முக்கண னொப்பா மேன்மை யகத்திய முனிவன் பாதஞ்

சொற்கண மேனு மென்றும் பிரிவறு தொன்மை பெற்ற
பொற்கிரி யனைய தன்மைப் பொதியமா மலையின் சாரல். (௩)

அடிபெறு மடியா ருள்ளஞ் சுவறிடா வன்பு போலப்
படிபுகழ் பொருநை யென்றும் வற்றாத பான்மை பெற்றே
முடிவகல் செந்நெல் முப்பூ விளையுமம் முறைமை சார்ந்து
குடியிடை நகரு மூருங் கூறுதற் களப்பி லாவால். (௪)

இன்னநன் னதிநீர் பாயு மெழில்பெறு மிருமருங்கு
முன்னவ னால யங்கள் கணக்கில பொழிதற் கெட்டா
செந்நெலுங் கரும்பும் வாழை சேம்பொடு கருணை மற்று
மன்னிய விளைநி லத்திற் குலைகளாய் மல்கு மன்றே. (௫)

நாதனா லயங்க டோறு நடநவில் பாடன் மன்னும்
வேதியர் மனைக டோறும் வேதமு மகமு மல்கு
மேதமின் மடங்க டோறுந் திருமுறை யிசைகள் பல்குங்
கோதகல் கழகந் தோறுஞ் செந்தமிழ் குலவு மாதோ. (௬)

தாம்பிர பன்னி தீரத் தகைமைசால் வளமும் போற்றுங்
காம்புறழ் தோளி பங்க னுறைகயி லாயம போலுந்
தேம்பழச் சோலை சூழுந் திருநெல்வே லியின்சி றப்பு
நாம்பல காலுஞ் சொன்னோ நவின்றிட முடியா தென்றே. (௭)

சொல்லிய தீர வாசத் தொன்னகர் குடியி ருந்தோர்
கல்வியன் முயலுங் கொங்கைக் கணிகையர்குலத்தில்வந்தோ
ரொல்லுயி ருடலை யென்ன விருவரோர் வயிற்று தித்தோர்
வல்லிநுண் ணிடையார் கூறு மாரவே ளிரதி போல்வார். (௮)

மதிமுகத் தகலம் பற்றா இருவிழி வடிவே லுக்குத்
துதிநிகழ் மார்ப டங்கா துணைமலை முலைக ளுக்குப்
புதியதே னமுத மிட்டுப் பொதிந்தசெம் பவளச் செவ்வாய்க்
கதியன நடைகள் கற்குங் கவினடைக் கணிகை மாதர். (௯)

பஞ்சலக் கணமு மாய்ந்தோர் செந்தமிழ் பாட வல்லோ
ரஞ்சமென் னடைய ரம்பை யயர்வுற வாட வல்லோர்
செஞ்செவே மதன்கா முற்றுச் சேர்தரத் தேட வல்லோர்
நெஞ்சுவந் துலகர் போற்றும் பெரும்புகழ் நீட வல்லோர். ()

வேறு.

நவின்றிடு மியலிசை நாட கத்திற
மூவர்துயர் கவிஞரும் புகழு முண்மையார்
சிவன்சர ணத்தினை யன்பு செய்துளார்
தவந்தரு பயனெனும் தன்மை சார்ந்துளார். (கக)

நிலந்தனில் விளங்கிய நிமலர் வாழ்சிவ
தலங்களை யன்புடன் றாழ்ந்து போற்றியே
பலன்றரு பயன்பெறப் பாவை மாருள
மலர்ந்தவ ணீங்கியப் பால ணைந்தனர். (கஉ)

வேறு.

தென்றிசைத் தலங்கள் யாவு மன்புடன் சென்று போற்றி
நன்றிசேர் திருக்குற் றாலம் பாவநா சத்தை நண்ணி
மின்றிகழ் சடையார் பாதம் விழியுளம விரவப் போற்றி
மன்றலார் மாட மோங்குந் திருப்புடை மருதூர் வாழ்த்தி. ()

வேறு.

எள்ளி னாயக வரக்கனுஞ் சூரன்மா விடரைப்
புள்ளி னாயக னாதியோர் வந்தெதிர் புகல
வெள்ளி நாயக மால்வரை விமலனு ரளித்த
வள்ளி நாயகன் சீரலை வாயினை வணங்கி. (கச)

வேறு.

வரராசைப் பதிப ணிந்து கரிவலம் வந்த நல்லூர்ப்
பரராசர் புரங்க ளட்ட பால்வண்ணர் பாதம் போற்றி
நரராசைப் பாலர் தேவர் நான்முக னெடுமோன் ஞானத்
திரராசைநீத்தோர்போற்றுந்தென்புதுவையினைச்சேர்ந்தார்.()

வேறு.

அந்தணர்வாழ் மாளிகையு மன்பருறை திருமடமுந்
தந்தமது பணிபுரிவோர் சாருமனைத் தருதிகளும்
பந்தமறப் பதிவாசம் பரிந்துறுவோ ரயன்மனையு
நிந்தையின்மற் றுள்ளோர்க ணெடுஞ்செல்வ நிலையமுமே. ()

தெங்கினொடு பூகநிரைத் திரள்சூழுஞ் சோலைகளு
மங்குலவு விலங்குகளும் பறவைகளு மகத்துறவு
தங்குகுயில் கிளிசுருதி திருமுறைகள் சாற்றுதலும்
பங்கயஞ்சேர் சிவகங்கை பான்மைசெறி மேன்மைகளும். ()

திருமதிளுங் கோபுரமுந் திகழ்மணிமண் டபநிரையு
மருளருளு மாலயமு மாடல்பா டலினார்ப்பு
மிருவிழிகள் களிகூர நோக்கியின்னு ரிருவோரும்
பெருவிருப்பிற் ருழ்ந்துதாழ்ந் தெழுந்தீசர் புகழ்பேணி. (கஅ)

வேறு.

திலகவா ணுதலி பங்கன் சேர்தரு மால யங்க
ளலகில பணிந்தோ மிந்த வற்புதங் கண்டோ மில்லைத்
தலனிடை வந்து சாரு மக்கணந் தனிலே நெஞ்சிற்
பலகவ லைகளு நீங்கி யின்பமே பதிந்த தென்று. (கக)

நெஞ்சக முவந்து கூறிப் பாவைமார் நேச மோங்கப்
பஞ்சபா தகங்க ணீக்குஞ் சிவகங்கைத் தடம்ப டிந்து
வஞ்சக வினைக ளேக மனம்பரி சுத்த மாகத்
தஞ்சவி னீறு சாத்தித் துகில்பணி கவினப் பூட்டி. (உ0)

வள்ளையார் குழையுஞ் சோதி வதனமுங் கண்டோ ருள்ளங்
கொள்ளையார் விழியுந் தாங்குங் கொம்பனார் குலவு கங்கைப்
பிள்ளையார் பாதம் போற்றிப் பேருல குயிர்க டோறு
மெள்ளையாரெண்ணெயென்னவிசைந்தருளிறைமுன்னெய்தி.

இன்னபோ தின்ப மெய்த விருவருந் தாழ்ந்தெ ழுந்து
முன்னவன் கருணை நோக்க மகத்துவ நலமொ ழிந்தே
யன்னையா யுலக மீன்ற வருட்சிவ காமி யம்மை
நன்னல மருளும் போத வயித்திய நாதர் தம்மை. (உஉ)

கண்ணொடு கருத்து மொன்றக் கண்டுசெங் கரங்கள் கூப்பி
யெண்ணுடனுயிரு மொன்ற விருவிழி யருவி பாயத்
தண்ணொடு மின்ப முள்ளந் தாக்கவத் தைய லார்கள்
பண்ணொடு வீணை ராகந் திருச்செவி பருகச் செய்வார். (உங)

வேறு.

அதுவோ விதுவோ வெனச்சுட்டி யறியு மறிவுக் கப்பாலாய்
மதுவோ கரும்போ வெனவிரதம் வழங்கா னந்தவடிவுமையே
யிதுவோ கயிலை சிவலோக மிதுவே யெனப்பல் லுயிரேத்தப்
புதுவா புரியிற் சிவகாமி யம்மை யெனநீ பொருந்தலென்னே.

பல்லா யிரமாங் கோடிபண்டப் பரப்பு முழுதும் பயந்தளிக்க
வல்லாயனைத்துமின்னிடையே தோன்றநிறைந்துவளருமையே

பொல்லாவுளமுமறியாமைபொருந்துஞ்சிறுமைபொருந்திசையு
மெல்லா மறிந்த சிவகாமி யம்மே யெம்மு ளிருந்ததென்னே.

அரிய வயனோ டைவரையு மான்ம கோடி யனைத்தினையுந்
தெரிய வின்று வளர்த்தெடுத்த தேவி சிவகா மித்தாயே
யுரிய சுருதி பகர்கிளியே குயிலே யெழுதா வோவியமே
பெரிய விமய மலைமகளாய்ப் பிறந்த கருணை பேசாயே. (௨௬)

ஊனே யுயிரே யுயிருளுறை யொளியே யுணர்வே யுயர்கருணை
மானே மயிலே வயித்திசர் மகிழும் வால கோகிலமே
தேனே கனியே தெள்ளமுதேதெசிறியேஞ்சிறுமைதீர்த்தெனைநீ
தானே யாள்வாய் சிவகாமித் தாயே சரணஞ் சரணுனக்கே. ()

தினமு நினையு மடியார்கள் சிந்தை யெனும்பஞ் சரஞ்சேரு
மனமே பாத பஞ்சரத்தே யடைய வருளெம் மகவனைத்தை
மனமே வாக்கே யுடலேநின் மலர்த்தாட் கேவல் செயுமடியா
ரினமே கூட வினியவரு ளீவாய் சிவகா மித்தாயே. (௨அ)

சொன்னவா கீதங் கூறித் துகளில்யா ழிசையி னோற்றிக்
கன்னலும் பாகுந் தேனுங் கலந்ததீஞ் சுவைபோற் காத
வின்னிசை சிவகா மித்தா யிருசெவி குளிரப் பெய்து
மன்னிய புதுவை யீசர் மலரடி வழுத்த லுற்றார். (௨௯)

புறமு மகமும் பூரணமா யுயிர்க டோறும் பொருந்தி யென்று
முறவும் பகையு மறநின்ற வுயர்தென் புதுவை யுடையானே
யுறவும் பகையு மறநின்ற கருணை யுடையோ னெனினீயே
பிறவுங் கொடியார் புரமூன்று மெரித்த கருணை யியம்பாயே.

சிறக்கு முலகிற் பல்லுயிரோர் செயலு மின்றி நின்செயலாற்
பிறக்கு மிறக்கு மிருவினையும் புரியு மெனவே பேசுமறை
பிறக்கு மிறக்கு நின்செயலால் வினையும் புரியு மெனப்பேசிற்
றுறக்க நரகம் வந்தவகை சொல்லா யெல்லாம் வல்லானே. ()

மந்தா கினியு மந்தார மலரும் புனையு மாதேவா
சொந்தாமரையாளுறைபுதுவைத் தேவதேவாசெப்புதல்கேண்
மந்தா கினியு மந்தார மலரு முடியின் மன்னவுநீ
யந்தோகுடங்கைநீரிலைக்குமலந்தேபெரும்பேறருள்வதென்னே.

அடியார்க் குன்னைக் கொடுத்தருளி யடியார்தம்மைநீகொண்டு
முடியா வின்ப மவர்க்கருளி யவரா லுனக்கோர் பயனிலையா

முடியா வின்ப மவர்க்கருளி யவரா லுனக்கோர் முயலின்றே
லடியார்க்குன்னைக்கொடுத்தருளவன்பாத்தேடுமெருளுரையாய்.

கமலா சனனு நெடியோனுங் காணுப் புதுவை நகரிலுறை
யமலா வபயா வநகாவெம் மாதி யடியா ருளம்பிரியா
விமலா விகிர்தா வெமதுவினை வேரோ டறவும் பறித்தருளி
நிமலா கருணை புரிந்தருள்வா யெனவிவ் வாறு நினைந்தேத்தி.

செய்யா னுறையுந் தென்புதுவைச் சிவகாமித்தாய்பங்கிலுறை
யையா வரசே யன்புபுரி யடியார்க் கினிய வாரமுதே
மெய்யா வெமது வினைகளற மெய்ப்பா தத்தே யன்பருளி
யெய்யா தின்னுங் காத்தருளி யிலம்பா டகற்றி யின்புதவாய்.

வேறு.

எண்ணமுற விவ்வாறு வினையிசை யின்னமுத
மண்ணுலகும் விண்ணுலகு மற்றிடமும் வாகினிபோ
னண்ணியவர் செவியூடு பள்ளமுறு நன்னீர்போ
லுண்ணெகிழ்ந்து மனத்தினுட்பே ரின்பொங்கப் பாய்ந்ததால்.

வேறு.

வசைக்குல மெனினு மோவா விழிதொழின் மாந்த ரேனு
நசைக்குய ரின்ப ராகி நாவார நவிலும் பாட
லிசைக்குள முருகி யாடு மீசனு ராத லாலே
திசைக்குளோர் போற்று மின்னார் தீஞ்சுவைப் பாடல் கேட்டு.

திருவுள முவந்து பூசை செய்தரு ணம்பி யார்போ
லிருவருக் கெட்டா வண்ண லாரெழுந் தருளி நீறு
மருவளர் குழன்மின் னார்க்கு மகிழ்வுடன் வழங்கி நீவி
ரிருவரும் வம்மி னென்று கூவிமுன் னேகிச் செல்ல. (௩௮)

நேசமோ டிருவர் தேடுந் திருவடி நிலத்திற் றோயப்
பூசுரர் குழாங்கள் வாழுந் திருமதிட் புறத்து மேய
தேசுடை வீதி யூடு பாவையார் தொடர்ந்து செல்ல
வாசமார் மனையிற் புக்கார் மனையுள மனைவி தானும். (௩௯)

தனைவேட்ட கொழுநர் போலுஞ் சார்தலா லண்ணே றென்றே
மனம்வியந் தெதிரே வந்து குழையொடும் வணங்கி நிற்பப்
புனைமலர்ச் சடைம றைத்த நம்பியார் புகல்வர் மின்னே
யினையவிப் பாவை மார்க டெக்கிணைத் திருந்து வந்தார். (௪௦)

உமைசிவ காமி பாத முயர்வயித் தீசர் பாத
மமைவுறப் போற்றி யன்போ டங்கையில் வீணை தாங்கிக்
கமைவுறப் பாட லுற்று ரங்கலங் கழறப் பாற்று
விமையமா தோடு நங்க ளீசனே கேட்க வேண்டும். (சுக)

பகர்ந்தவின் னிசையா லீசர் திருவுளப் பாங்குங் கண்டோஞ்
செகம்புகழ் பாவை மார்நஞ் சிறுவியர் போலு மெண்ணி
யகந்தனி லன்பு வைத்தே யூட்டுபா லடிசி லென்று
முகந்திகழ் மூரா ரென்ற மொழிந்துடன் புறத்திற் போந்தார்.

கோயிலுட் புகுந்தா ரிப்பாற் பசியபூங் கொம்பன் னாரை
வாயுப சாரங் கூறி மனத்தினு மன்பு பொங்கத்
தாயினு மார்வத் தோடு நம்பியார் தலைவி கூவிப்
பாயச வன்ன மிட்டாள் பாவைமார் பரிவி னுடு. (சுரு)

பனுவலாப் துணர்ந்த மின்னார் மனையிலோர் பாங்கி ருக்க
மனையுள நம்பியாரும் வந்தன ரவரை நோக்கிப்
புனையிழை யாரே நீவி ரெங்குற்றீர் புகலு மென்ன
வினையமோர்ந் திடுத லின்றி மின்னனார் விளம்ப லுற்றார். ()

ஆலயத் துள்ளே பூதி யளித்தன வாதி யாக
மாலையங் குழலார் கூற மனைவியா ரங்க ணெய்தி
யேலநீர் மனையின் முன்வந் தியம்பின வென்னே பொய்யோ
சாலயன் மனையு ளோரு மறிவாநீர் சாற்ற லன்றே. (சுரு)

அன்புடை மனைவி யோடு பாவைமா ரயலு ளோரும்
வன்பெரு மொழியாக் கூறும் வாய்மை யைக்கேட்டிதெல்லாந்
தென்புது வேசர் நேசத் திருவிளை யாட்டா மென்றே
யின்புற நம்பி யாரு மயங்கல ரிதயந் தேறி. (சுசு)

மாலயற் கரிய வீச ரெமைப்போலும் வடிவு கொண்டு
கோலமார் மடவார் காணக் குறியவெங் குடிசை யெய்தல்
சாலவெம் மனையா ளோடு மயலுளோர் தாமுங் கண்டா
ரேலநா மன்னோர் போலுந் தவஞ்செய்தோ மிலையேயென்று.

பாவைமார் தவங்க ளென்னே வன்னவர் பரிவு மென்னே
கோவைசேர் வீணை பாடற் குயிலிசை நயங்க ளென்னே
வாவலான் மனைவி செய்த தவமென்னே வன்னோர் போலுந்
தேவனைக் கண்டோ மில்லை யறிவிலேஞ் செய்த தீங்கால் ()

இவ்வண்ணம் வருந்திக் கூற வெல்லோரு மொருங்கு கூடி
மைவண்ண மலியுங் கண்டர் வயித்தீசர் பாதம் போற்றி
மெய்வண்ணக்கருணைபல்கால் விளம்பியுட்களிப்பினெய்திச்
செய்வண்ண மேய வேவற் செயல்புரிந் திருந்தா ரன்றே. ()

பத்திசேர் நம்பி யாரும் பரிவுள மனையை நோக்கி
நித்தியம் பாவை மார்க்கு நேசமோ டன்ன மூட்டென்
றுத்தர முரைத்தி ருந்தார் பாவைமா ருளத்தன் போங்க
வத்தனார் கருணை போற்றி யதிசய மடைந்து சார்வார். (௫0)

நாடொறும் பாவை மார்க ளலமருள் வீணை யேந்திப்
பாடலி னேழுதை யீச ருமைசெவி பருகச் செய்து
நீடிய வன்பி னோடு மிருக்குநா ளொடிது செல்ல
வாடையா பரணம் வேணடி யநகனை யிரந்து வேட்ட னர் க)

அடியவர் வேட்ட வெல்லா மருளுமைந் தருவா மண்ணல்
குடிமுழு தோய்பு மவ்வூர்க் கோன்றுயில் கனவி னெய்தி
யடிமையிவ் விசைகள் பாடு நம்மட வார்க்குச் செல்வ
முடிவில வருளி மாட முயன்றரு ளெனமொ ழிந்து. (௫உ)

மடவார்க ளுறைத லாலே மடவார்வ ளாக மென்று
திடமேவு புதுவை நாமஞ் செப்புக வென்று கூறி
நடராச லிங்கர் மின்னார் கனவிலத் திறந வின்றே
யிடமாடத் தெருவிற் கன்னி மூலையோர் மனையி லெய்தில். ()

அப்பனே யடியின் வேட்ட வளப்பிலா நிதிய மன்னு
மொப்புட னெடுத்து வந்து நினைந்தவா றொழுகு மென்று
செப்பின னாலயத்துட் சென்றன ரவ்வூர் மன்ன
னெய்ப்ப கறுயில கன்று கனவுளத் தெண்ணி யோர்ந்து. ()

புதுமையீ தென்ன சொல்லேகம் புதுவையு ளீசர் நம்பா
விதயமார் கருணை யென்றே யிருகணீ ரருவி சோர
மதிபெரு கன்பு பொங்க வள்ளலைத் தொழுது போற்றிக்
கதுமெனப் பாவை மார்க்கு மாளிகை கட்டு வித்து. (௫௫)

பொற்புறு மனைக்கு வேண்டும் பொருளெலா மமைத்து நல்கி
யற்புதப் பாடன் மேய மின்னுரை யன்பாற் கூவித்
தற்பர னருளைக் கூறி மனையிடைச் சாரு மென்னச்
செப்பின னேர்பா லீசன் கருணையைப் புகழ்ந்து சென்றான்.

பாவைமார் கனவி லண்ணல் பகர்ந்தருள் கிருபை யோர்ந்து
காவலன் மொழிந்த வண்ணங் கடிமனை புகுந்தார் நாத
னேவலார் பனையின் மாடே யிருந்தி யிருத்தல் கண்டே
யாவலாக்கவர்ந்துகொண்டார் வயித்தீசரடியைப்போற்றி. ()

இல்லிடைக் கொணர்ந்து நோக்கி யிருவரு முளம்பூ ரித்துப்
பல்வகைப் பணிக ளாடை வேண்டுவ பலவு மீட்டி
நல்குர வடைந்தோர் வேட்ட நிதியமு நல்கி யானுச்
செல்வமு மடைந்து பாடற் பணிவிடை செய்திருந்தார். ()

அப்பதி யுள்ள மின்னு ரயற்பதி யுறையு மாதர்
பற்பல ரொருங்கு கூடிப் பாவைமார் பணிக ளாற்றி
யற்பகல் சூழ்ந்து நீங்கா தமலனைப் போற்ற மன்னன்
விற்பொலி புதுவை நாம மடவார்வ ளாக மென்றான். (௫௯)

## பாவைமாருக்குத்
## திரவியங்கொடுத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௫௮.

பாவைமாருக்குத் திரவியங்கொடுத்த அத்தியாயச் சுருக்க வசனம்.

சௌனகாதி முனிவரைநோக்கி வணிகன் பொன்முடிப்பை வந்த சரிதஞ்சொன்னோம். இனி, கணிகையரிருவருக்குத் திரவியங் கொடுத்தருளிய சரிதஞ் சொல்வோமென்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்:— தெக்ஷிண தேசத்திலே பொதியமலைச் சாரலிலே தாம்பிரபருணி நதிக்கரையிலே யொரு பழைமையான நகரத்திலே கணிகையர் குலத்திலேபிறந்த இரண்டுபெண்கள் இரதிபோலும் அழகுவாய்ந்தவர். ஆடல்பாடலிலும்வல்லவர். இயலிசை நாடகந்தெரிந்த வித்துவான்களும் புகழத்தக்கவர். சிவபத்தி மிகுந்துள்ளவர். சிவஸ்தலயாத்திரை செய்யத்தொடங்கி அவ்விருவரும் திருக்குற்றாலம் பாவநாசந் திருப்புடைமருதூர் திருச்செந்தூர் சங்கரனார்கோவில் கரிவலம்வந்தநல்லூர் சென்று வணங்கிப் புதுவைத்தலத்தைவந்து சேர்ந்தனராய் அங்குள்ள எல்லா வளங்களையுநோக்கிக் கோபுரதரிசனஞ்செய்து இந்தத் தலத்தைவந்து சேர்ந்தவுடனே மனக்கவலையெல்லாம் நீங்கின. மனமகிழ்ச்சியே யுண்டாகின்றது. இப்படி யொரு தலத்தினு மில்லையென்று விம்மிதமடைந்து சிவகங்கையிலே தீர்

த்தமாடி விபூதி ருத்திராக்ஷந்தரித்துச் சிவகங்கை விநாயகரைத் தரிசித்துக் கோயிலுக்குள்ளே சென்று வயித்தியநாதரையுஞ் சிவகாமியம்மையையுங் கண்குளிரக்கண்டு விழுந்து பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து ஆனந்தக்கண்ணீர்பொழியப் பரவசமடைந்து வீணையைக் கையிலெடுத்து வைத்துப்பாடிச் சுவாமி அம்மை திருச்செவிகளுக்கு அவ்விருவருடைய புகழாகிய அமுதத்தை வார்த்தனர். பின்னர் எங்களுடைய தீவினைகளைப்போக்கி யிரக்ஷித்து வறுமையைக்கெடுத்து இன்பம் அருளவேண்டுமென்று பிரார்த்தித்துநின்றனர். அவ்விரண்டு கணிகையருடைய பாடலையு மன்பையுங்கண்டு திருவுளமகிழ்ந்து வயித்தியநாதேசர் அவரது அருச்சகரைப்போல முன்னே யெழுந்தருளிவந்துநின்று விபூதியளித்து நீவிரிருவரும் வாருமென் றழைத்துக்கொண்டு முன்னேசென்று திருமதிலுக்கு வெளிப்புறமுள்ள அருச்சகர் கிருகத்துக்குவந்தனர். அருச்சகர் மனைவியும் அவரைத் தமது நாயகரென் றெதிரேவந்து வணங்கிநிற்ப, அவளைநோக்கிச் சுவாமியாகிய அருச்சகர் சொல்லுவார்.—"இப்பெண்களிருவரும் தெக்ஷிண தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள். இவ்விருவரும் எம்பிரானுடைய சந்நிதானத்தில்வீணையெடுத்து இசைப்பாட்டுப்பாடிவணங்கினர். இவரது பாடலினயத்தை அவ்வெம்பெருமானே யறியவேண்டும். நாமெல்லாஞ் சொல்லுந் தரமுடையேமல்லேம். இவரை நமது பிள்ளைகளைப்போலநினைத்துப் பாலுமன்னமுங் கொடுத்துவருக" என்று சொல்லி முகமகிழ்ச்சியுடனே புறத்திற்சென்று கோயிலுட் புகுந்தனர்.

அருச்சகர் மனைவியும் அப்பெண்களுக்குப் பாயாசஅன்னங்கொடுத்து உபசரித்தனள். அதனை யுண்டுமகிழ்ந்து அவ்விருவரும் ஒருபுறமிருந்தனர். அதன்மேல் அருச்சகர் வந்துபார்த்துப் "பெண்களே! நீவிரெங்குற்றீர்" என்று வினவினர். அதுகேட்டு ஆலயத்திலே விபூதிகொடுத்தருளியதுமுதல் நிகழ்ந்ததைத் தெரிவிக்க அருச்சகர் மனைவி வெளியேவந்து இவையெல்லாங்கேட்டு நீர் சற்றுநேரத்துக்கு முன்வந்து சொன்னதெல்லா மறந்து பேசுகிறீரே நீர் சொன்னவை அயலகத்துக்காரரு மறிவரே யென்றுகூற, இவை யனைத்தையுங்கேட்டு நமது புதுவையீசர் திருவிளையாட்டென்று மனந்தெளிந்து பிரமவிஷ்ணுக்களா லறியப்படாத நம்பெருமான் நம்மைப்போலும் வடிவங்கொண்டு நமது சிறுகுடிசைதேடி நமதுமனைவியு மயலாருங்காண எழுந்தருளினர். அவரைத் தரிசிக்கும் பெருந்தவஞ் செய்திலோமே யிந்தப்பெண்கள் என்னதவஞ் செய்தார்களோ? இவ

ர்கள் பாடலினது நயம் யாதோ? வென்று மனம்வருந்தி விம்மிதமுற் றுத் தமது மனைவியைநோக்கித் "தினந்தோறும் இப்பெண்களுக்கு அன்னங்கொடுத்து வருக" என்று சொல்லித் தமது பணிவிடை யிலே முயன்றிருந்தனர்.

இங்ஙனம் அப்பெண்களிருவரும் அருச்சகர் கிருகத்தில் நாடோ றுமன்னம் புசித்துக்கொண்டு வயித்தியநாதர் சந்நிதானத்திலே வீணா கானஞ்செய்து வருவார். ஒருதினம் ஆடையாபரணம் வேண்டிப் புதுவைநாயகரிடத்திலே பிரார்த்தித்தனர். அவர் அடியவர் கேட்ட வையெல்லாம் அருளிச்செய்பவ ராதலாலே புதுவைநகரத்தரசன் சொப்பனத்திலெழுந்தருளி "நமது சந்நிதியிலே வீணைபாடும் பெண் களுக்குவேண்டிய ஆடையாபரணங்கொடுத்து அவரிருத்தற்குக் கிரு கமுங் கட்டிக்கொடுப்பாய். இந்தத்தலம் அம்படவார்வசிக்கு மிடமாத லால் மடவார்வளாகமெனப் பெயர்பெறும்" என்று சொல்லியருளிக் கணிகையர் கனவிலு மெழுந்தருளி யிவைபனைத்துங்கூறிக் "கன்னி மூலையிலிருக்கிற மாடவீதியிலொரு பனையடியில் வேண்டிய திரவி யமிருப்பதால் அவைகளையு மெடுத்துக்கொண்டுவந்து இஷ்டப்படிய நுபவியும்" என்று சொல்லிவிட்டுத் தமதாலயத்துட்சென்றனர். பின் னர் அரசனுங் காலையிலெழுந்து புதுவைநாயகர் கட்டளையிட்டருளி யபடி கணிகையருக்கு வீடு கட்டிக்கொடுத்து வேண்டிய பணிகள்மு தலிய செல்வமுங்கொடுத்துச் சென்றனன். அப்பெண்க ளிருவரும் புதுவீட்டினிற் குடிபுகுந்து மேற்கூறிய பனைமரத்தடியிலுஞ்சென் று வேண்டிய திரவியங்களெடுத்துக் கொண்டுவந்து மனமகிழ்ச்சி யுற்று வீணாகானப் பணிவிடை வயித்தியநாதருக்குச்செய்து வாழ் ந்தனர். அன்றுமுதல் அரசன் புதுவைத்தலத்திற்கு மடவார்வளாக மென்று நாமகரணஞ்சூட்டினன்.

இருபத்துநான்காவது

## வலையனுக்குக் கண்கொடுத்த அத்தியாயம்.

தஞ்சமு முறவுஞ் சார்பு நீயெனச் சார்வோ ருள்ளக்
கஞ்சமு முறைந்து நீங்காக் கவலையுங் காமக் கூற்றும்

வஞ்சமு மழுக்கா றுஞ்சேர் பொய்களு மருவுந் தீயே
னெஞ்சமு முவந்தே யாண்ட புதுவையு ணிமலா போற்றி.()

செந்தமிழ்ப் பொருளை யாற்றின் றீரவா சத்தின் மேய்
பைந்தொடிப் பாவை மார்க்கு நிதியருள் பண்பு ரைத்தோ
மந்தணு வொளியி லுந்து புதுவையை யடைந்து போற்ற
வந்தோர் வலைய னீள்கண் கொடுத்திடும் வகையு ரைப்பாம்.

வேறு.

புதுவைநகர்க் குடதிசைப்பாற் புவிபுகழும் வளமுளது
முதுமறைசொல் லரியபொருண் முழுதுணர்ந்த முனிவரருட்
பதுமமல ரயன்புகழு மிருடியரும் பலகாலுஞ்
சதுரடைந்து நீங்காது தவமுயலுந் தருமகிரி. (ங)

அம்மலையி லுள்ளாராந் தவமுயலு மருந்தவருண்
மம்மரகன் மண்டூக விருடியவன் வளர்பெயராற்
செம்மைதரு மண்டூக நதியொன்று சிறந்தாடுங்
கொம்மைமுலை யார்காயக் குடிநதியொன் றுளவாமால் (சு)

மண்டூக நதிமீண்டுஞ் சிலம்பாறும் வளர்நர்ம
நண்டூரும் பழனநிறை நாடெல்லாம் புரந்தருளுங்
கண்டூறு தேனுண்டு களியளிசூழ் காவுகுத்த
தண்டாது பொதிந்தெழில்சேர் தருமகிரிச் சாரலின்வாய். (ரு)

வில்லூரோன் றுளதுமுது வலையர்குடி விளங்கிருக்கை
செல்லூரும் பல்குடிசைக் குறிஞ்சிகளுஞ் செறிந்தோங்கும்
பல்லூனு மையனமும் பரந்துணங்கு முன்றிற்றொறு
நல்லூனுண் வலையர்சிறார் விளையாட னனிபுரிவார். (சு)

வேறு.

வலையர்த முன்றி றோறும் வனைந்திடு ஞமலிக் கூட்டஞ்
சிலையுட னுவஞ் சேரும் வார்வலைச் செறிவி னீட்டந்
தொலைவில கரியு மானுங் கடமையின் பார்வை துன்னும்
பலவிதக் குறும்பு ளாதி பறவையின் பார்வை மன்னும். (எ)

வலைச்சிறார் வனங்க ளோடு மலைமிசைச் சென்று சென்று
புலிச்சிறு குருளை யோடும் போதகக் கன்று மற்றுங்
கொலைச்செய லன்றிப் பற்றிக் கொணர்ந்தாடல் புரிவ ரன்றிக்
கலைப்பிணைக் கன்றி னோடு சிறுமியர் கருத்து வப்பார். (அ)

இரவொடு பகலு மோவா தெங்களும் வலையர்கூடி
விரவிய பறவை யோடு விலங்குக ளொழுப்பு மார்ப்பும்
பரவியன் னைவைக ளோடிப் படர்பொழு தாற்று மார்ப்புங்
குரவையுந் துடியுங் கொம்புங் குரைகட லொலியை மாற்றும்.

ஆறலைத் துண்பர் சில்லோ ரயற்புலன் கவர்ந்து கொண்டு
வேறொரு குறைக ளின்றி விருப்பற வுண்பர் சில்லோர்
தேறலிற் பல்லூன் ருேய்த்துத் தின்றுசெக் குலக்கை போலு
மாறடு கைகான் மேய வலையர்மைம் மலைகள் போல்வார்.(கO)

குத்துவெட் டெறிகொ லென்று கூறிய வார்த்தை யன்றி
மெத்தென வுடைய சொற்கள் கனவினும் விளம்வா ரன்றே
யுய்த்ததோர் பழனச் செங்கெ லறுத்துணு ழுழவர் போலச்
சித்தமா வனவி லங்கே செகுத்துணுந் திறத்தின் மிக்கார். ()

அச்சமுங் கருணை மேய விரக்கமு மகத்து ளற்ருேர்
நிச்சலு முகத்திற் கோப நீங்கிடா நிலைமை பெற்ருே
ரெச்சமி லிரண்டு கண்ணு மெரிப்பொரி சிதற வேய்ந்தோ
ரிச்செயல் வலைஞர்க் கெல்லா நாதனுந் தெக்கனென்போன். ()

வேறு.

குரக்கினி லனுமனிற் குணமு ளான்கொலை
யரக்கரில் வீடண னறிவ னுதல்போ
லிரக்கமில் வலைஞரிற் றெக்க னென்பவ
னுரக்கருத் தோனுயிர்க் கிரக்க முற்றுளோன். (கரு)

வேறு.

கல்லாத மூட னேனுங் கற்றுளங் கசியு மன்பு
நல்லார்பா னேச மன்னோர் மொழிகளை நம்புந் தூய
னில்லாளு மனைய தன்மை யுடையளா யிசைந்து வாழ்நாட்
பொல்லாத வூழாற் றெக்க னெண்விழி புதைந்த தன்றே. ()

கண்மணி பாவை யோடு மறைந்திடக் கருத்த ழிந்து
விண்மணிப் பகலு மோவா தள்ளிருண் மிடைந்து தோன்ற
வொண்மணி யறிவுங் கெட்டா னுத்தம வலைஞன் கொண்ட
பெண்மணி யூன்று கோலாக் கைதர நடந்து போவான்.(கஎ)

இரவிது பகலீ தென்று மிதுமேடு பள்ள மென்றுந்
தெரிதர லின்றி யுள்ளந் திகைத்தனன் றெரிந்தோர் கூடி

யுரியகண் மருந்து செய்து பச்சிலை யுள்ள சாறு
மரிதினிற் பிழிந்து மொன்றுங் குணமிலா தயருங் காலை. (கஅ)

முற்பிறப் பதனு ளன்னோன் செய்தவ முதிர்ச்சி யாலே
விற்பொலி மணிகொண் மாடப் புதுவையுள் விமலர் பாதத்
தற்புதத் தொண்ட ராங்கே யபிடேகச் செந்தேன் கொள்ள
மற்பொலிதிண்டோள்வில்லூர் வலைமகன்மருங்குசார்ந்தார்.

அடியவர் வரவு கூறத் தெக்கனன் புடனெ ழுந்து
முடிமிசைக் கரங்கள் கூப்பி முன்னுற விருக்கை நல்கி
யிடிபடு தினைமாச் செந்தே னருந்திட வீந்து போற்றிக்
கொடியனேன் விழிம றைந்த குறைதவிர்த் தருளு மென்றான்.

என்றவன் கூற வன்னோ னெய்திய விடருந் துன்ப
மொன்றிய தளர்வு நோக்கிச் சாலவு முளமி ரங்கி
வென்றிசேர் தெக்கனே கேளியாவரே வினையை வென்றோர்
நன்றிகள் புரிந்த நீயு நவையிலோ னாத லாலே. (கக)

திருவுள மிரங்கு மென்று திருநீறு கைக்கொ டுத்துப்
பொருவறு புதுவை யெய்திப் புனிதனைப் பணிந்து போற்றி
யிருவிழி கொடுத்துக் காக்கு மென்றன ரிசைந்து தெக்கன்
கருவறு திருவெண் ணீறு கரங்களைக் குவித்து வாங்கி. (உ0)

நெஞ்சகத் தன்பி னோடு நெற்றியி னணிந்து நாதா
வஞ்சலென் றருள்வாயென்னக் கண்ணினு மணிந்துகொண்டு
தஞ்சமா நீரே தெய்வ மென்றவ ரடியிற் றாழ்ந்து
வஞ்சக மற்ற தெக்கன் மஞ்சனத் திரவி யங்கள். (உக)

விருப்பொடு செந்தேன் சாந்த மகிற்குற டெளு மீந்து
பொருப்புள வேல மாதி புனைதிர வியங்க ளுல்வாய்
மருப்புகள் பீலித் தோகை மற்றுள பிறவு மீசர்
திருப்பணிக் கேய்ந்த வெல்லாஞ் சிந்தையு ளுவந்து நல்கி. ()

மீண்டவ ரடியிற் றாழ்ந்து விளம்புவா னடிக ளோநீ
ராண்டவன் றிருமுன் னெய்தி வேண்டுகொளறைந்துவேண்டி
மூண்டெழு படல நீக்கி விழியொளி முழுது மெய்த
மாண்டகு மன்பு செய்வீர் பின்னரியான் வருவே னென்று.

அஞ்சலி கூப்ப வன்பர் விடைகொடுத் தனர்முன் சென்றா
ரெஞ்சலில் செந்தே னுதி யெடுக்குந ருருகு சார

மஞ்சுறை மாட வீதிப் புதுவைமா நகரில் வந்து
பஞ்சடிப் பாவை பங்கர் வயித்தீசர் பாதம் போற்றி. (உச)

தேறிய சிந்தை யன்ப ரருச்சனைச் செயன்மு டித்துக்
கூறிய வில்லூர் மேய வலைமகன் குறையி ரந்து
நீறணி பவள மேனி நிருமலா வயித்தி யப்பா
வாறணி சடையாய் நின்பா லன்புடை வலைஞ னுமால். (உரு)

அன்னவன் விழிக ணல்கி யாண்டரு ளென்னப் போற்றி
முன்னவ னருளைப் பெற்று வதிந்தனர் முதிர்ந்த வன்பர் [ற
சொன்னவாவில்லூர்த்தெக்கன்புதுவையைத்தொழுதுபோற்
வுன்னியோர்கலையந்தன்னி லொருபடிதேனுங்கொண்டு.(உசா)

ஒருவன்முன் பாதை காட்டிச் செல்லப்பின்றான்கோ லூன்றி
யிருவிழி யொளிசற் றின்றி யெங்கணு மிருண்டு தோன்றப்
பருவர லடைந்த தெக்கன் றெய்வமே கண்பா ரென்றே
யருள்வழி காட்டச் செல்லு மாருயிர் போன டந்தான். (உஎ)

மிகுத்திடு விலங்கி னோடும் பறவைகள் வேட்டை யாடிச்
செகுத்திடுந் தொழில னேனுஞ் சிவனேசர் கூறுஞ்சொல்லைப்
பகுத்திட வின்றி நம்பி யீசனைப் பகருந் தோறு
முகுத்திடுங் கண்ணீரோடுங் கோலூன்றியொதுங்கலுற்றான்.

ஆனபே ரருளான் முன்ன ரூழினு லன்பு பொங்க
வானநா யகனை யோவா வாயாரக் கூறிக் கூறிக்
கானமுந் தூறு மாறுங் கடந்துமுன் செல்வோன் செல்ல
ஞானநா யகனார் வாழும் புதுவைமா நகரை நண்ண., (உகூ)

புதுவையை யடைந்தோமென்று புகன்றிடுமுன்னரன்னோன்
கதுமென வீழ்ந்து தாழ்ந்து மீளவுங் காத லங்கந்
துதைபொடியடையத்தேகம் வழியெலாந்தொலையத்தாழ்ந்து
மதிபெறப் போற்றிப் பையப் புதுவைமா நகருள் வந்தான். ()

வேறு.

வந்தவன் கோபுர மதிலோ டாலய
மெந்தையே கண்டிட விருக ணின்றென
மைந்தன னுளம்விழி நல்கு வாயெனக்
கந்தமென் மலர்ச்சிவ கங்கை மூழ்கினன். (ஙக)

தோய்ந்தெழும் போதலர் தூவு மாரனைக்
காய்ந்தவ னோர்விழி கருணை செய்தனன்
வாய்ந்தவோர் விழிதர மனமகிழ்ந்தன
னேய்ந்திரு விழிகளு மீதல் போலவே. (௩௨)

வேறு.

ஊன்று கோலைவிட் டெழிந்தன னுளத்திலன் போங்கத்
தோன்று கோபுரந் திருமதி ளாலயந் தொழுதான்
சான்ற சந்நிதித் திருமுன்னர்ச் சார்ந்தெதிர் நின்றே
யேன்ற வன்பர்பா லொருபடி தேனையு மீந்தான். (௩௩)

வள்ளலார்க் காட்டச் செந்தேன் வழங்குவோ னுதலர்லே
வெள்ளமார் சடையா னன்பர் விரைந்துட னொருங்கு கூடி
யுள்ளமகிழ் ருவகை யோடும் வலைமகன் கரவு வந்தே
யெள்ளலி லவனைக் கண்ணுற் றொருவிழி யீதல் கேட்டு. ()

மற்றுமோர் விழியு நல்கும் வயித்தீச னென்று ரைத்துப்
பற்றுட னவனைக் கூவித் திருமுன்னர்ப் பணியச் செய்து
நற்றவர் நீறு வில்ல நல்கினர் நவையி லன்ப
ரற்றைநா ணிசியு மந்தோ சிவநிசி யாய தன்றே. (௩௫)

நாதனார் கோயி லன்று கயிலாயம் போலு நண்ணி
வாதரம் பெருக வன்பர் சந்நிதி தொறும ணைந்து
காதலாற் பெற்ற தாமோர் கண்ணினுற் றுழவே செய்தே
யேதமில் சாம நாலு மிவ்வணந் தொழுதி யென்றார். (௩௬)

அடியவர் கூறும் வண்ண மன்றிராத் துயிலு றாதே
முடிமிசைக் கரங்கள் கூப்பிச் சாமமூன் றும்ப ணிந்து
விடிவுறு காலஞ் சாமம விமலனார் திருமுன் னின்று
படிபுகழ் வலைய னன்பா லின்னன பகர லுற்றான். (௩௭)

ஏடியர் விசையன் கையாற் பேணிய பன்றிக் காக
வேடுவ னாக வந்து வில்லடி யுண்டாய் போற்றி
*காடிடை வேட்டஞ் செய்து கண்ணப்பர் மென்ற வூனைத்
தேடிய வமுதம் போலுந் திருவமு தகந்தாய் போற்றி. (௩௮)

என்புட னரவு வேய்ந்த வீசனே பரனே போற்றி
மின்பொலி மருப்பு வேழத் தீருரி விமலா போற்றி

* காடிடை - எதுகைநோக்க-டகரவொற்றிரட்டாதுநின்றது.

யன்பொடு காட்டிற் பேயோ டாடுதல் புரிந்தாய் போற்றி
யென்பெருந் தீங்கு தீர்த்தே யென்னையு மாள்வாய் போற்றி.

இத்தன்மை பலவுங் கூறி யிறைஞ்சின னேத நீங்கிச்
சித்தமுள் ளன்பு பொங்கத் தேகமும் புளக மோங்கக்
கைத்தல முடியி னேறக் கண்ணினீ ரருவி சோர
வத்தனை யின்னு மோர்க ணளித்தரு ளென்று நின்றான். ()

அவ்வயி னுலாஞ் சாமத் தருச்சனைப் பணிகண் முற்றிச்
செவ்வையே யீசன் றோன்றத் திகழ்பெருந் தீப மேந்தக்
கௌவையார் வலையன் மீதி னந்திகைப் பிரம்பாற் றாக்கி
யுய்வகை சிவனைக் கண்டு பணியென வுரைத்த லோடும். ()

பிடித்தரு ணந்தி செங்கைப் பிரம்புகொண் டோச்சும் போதி
லடித்தலைக் வாங்கு முன்ன ரங்கண ரருளி னாலே
பொடித்திடப் புளக மற்றை யொளிவிழி பொருந்தல் கண்டு
நடித்தன னுவகை வெள்ளத் தாழ்ந்தனன் வலையர் நாதன்.

வலையன திரண்டு கண்ணுங் கொடுத்தருள் வண்ண நோக்கி
நிலையயி லந்த ணாளர் தொண்டர்க ணீணி லத்தோர்
தலைமைசேர் புதுவை யீசர் தயாநிறை புகழைப் போற்றி
யுலைவற வுளத்தி னம்பும் வலையனைப் புகழ்ந்து நோக்கி. (௪௩)

அருமறைப் புதுவை யீசர் கருணையை யளக்கொ ணாதான்
மருவிய வன்பு மேய மனத்தவ ரதிச யிப்ப
விருவிழி கொடுத்தார் நீமுன் னைத்தவஞ் செய்தி யேயோ.
பருவர லொழிந்தாய் வேண்டும பணிபுரி பதிக்கே கென்றார்

அனைவரு மிவ்வா றோதத் தெக்கனு மகம கிழ்ந்து
நினைவுற வுமையா ளோடு மீசரை நெறியாற் போற்றி
யுனைமற வாத நேச முதவென வுரைத்து வேண்டி
யனையுநீ யப்ப னீயென் றூர்வமோ டடியிற் றாழ்ந்து. (௪௫)

எழுந்திரு செங்கை கூப்பி யிருகணீ ரருவி சோரத்
தொழுந்தொறு மன்பு பொங்க விடைகொடு தூய நேச
மழுந்துபொற் பதியி னுள்ளோ ரடிமிசை யார்வ மோடும்
விழுந்துதாழ்ந்தெழுந்துபோற்றிவலையனும்வில்லூர்சேர்ந்தான்.

அடைந்திட வூரி லுள்ளோ ரனைவரு மொருங்கு கூடி
மிடைந்திரு விழியை நோக்கி விமலனைப் புகழ்ந்தி ருந்தார்

திடந்திகழ் தெக்க னண்ணன் மஞ்சனத் திரவி யங்கண
மடந்தயி ரன்பி னல்கி வளம்பெறு செல்வ மோங்க. (சஎ)

மாதமா தங்க டோறும் புதுவையில் வந்து வைகி
நாதனை யுமையா ளோடு நகையுடன் வணங்கிப் போற்றி
யேதமி றன்னூ ரெய்தி யில்லவள் புதல்வ ரோடு
மாதரம் பெருக வாழ்ந்தா னரனடி படியு மன்பால். (சஅ)

வலையனுக்குக்

கண்கொடுத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௬௬௧.

—⁂—

வலையனுக்குக் கண்கொடுத்த அத்தியாயச்சுருக்க வசனம்.

சூதமுனிவர் நைமிசாரணிய முனிவரைநோக்கிக் கணிகையரு க்குத் திரவியங்கொடுத்த சரிதஞ்சொன்னோம். இனி வலையனுக்குக் கண்கொடுத்த சரிதத்தைச் சொல்லுவோமென்று கூறுவார்:—புது வைநகரத்துக்கு மேற்றிசையிலே உயர்ந்தமுனிவர்கள் வசிக்குந் சரு மகிரியென்னு மலைச்சாரலில் மண்வேகநதியுங் காயக்குடி நதியுமுள் ளன. இந்நதி வளக்கனையுடைய அம்மலைப்பக்கத்திலே வில்லூரெ ன்றொரு சிற்றூருள்ளது. அவ்வூரிலுள்ள வலையர்கள் வேட்டஞ் செ ய்வதிலேயும் வழிப்பறிபறிப்பதிலேயு மின்னுங் கொடுந்தொழிலெல்வ ற்றிலேயு மிகச்சிறந்தவர். பயம்,கருணை,இரக்கம்,சோபம் சிறிதும் நீங் காதவர். இத்தகைய வலையர்களுக்கெல்லாந் தலைமையாயுள்ள தெக் கனென்பவன் குரங்குகளுக்குள்ளே அனுமனைப்போலவும் இராக்ஷ தருக்குள்ளே விபூஷணனைப்போலவும் நற்குண நற்செய்கையுடைய வன். அவன் மனையாளும் அத்தன்மையுடையவள். இவ்விருவரு மன் புடன் காலங்கழித்து வருநாளிலே யொருநாள் வினைவசத்தால் தெக்கனுடைய கண்க ளொளிமழுங்கிக் குருடாயின. உடனே மன ங்கலங்கி யறிவுங்கெட்டுத் தன்மனைவி கையினையே யூன்றுகோலாகப் பற்றிக்கொண்டு இரவுபகலென்றும் மேடுபள்ளமென்றும் பேதந் தெரியாமற்சென்று தெக்கன் திரிந்து சுற்றத்தாராலே பச்சிலைமுத லிய மருந்துகள் கொண்டுவந்து கண்ணுக்கு வயித்தியஞ்செய்துந் தீராமல் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தனன்.

## வலையனுக்குக்கண்கொடுத்த அத்தியாயம். ௨௱௮௩

அந்தச்சமயத்திலே தெக்கனுடைய நல்வினைவசத்தால் புதுவையிலுள்ள சிவனடியார்கள் சிவபிரானது அபிடேகத்துக்காகத் தேன் வாங்கும்பொருட்டு அங்கேவந்துசேர்ந்தனர். அவரது வரவைத் தெக்கன் கேள்விப்பட்டு எழுந்துசென்று வணங்கி யாசனங்கொடுத்துத் தினைமாவுஞ் செவ்விய மதுரமுள்ள தேனும் அவருண்ணும்படி கொடுத்து உபசரித்து "அடியேனுடைய கண்கள் ஒளிபெறும்படி யருளவேண்டும்" என்று வணங்கினன். அவரதுகேட்டு மனமிரங்கி விபூதிகொடுத்துப் "புதுவைநாயகரை வந்து வணங்குவாயாகி லுனக்குக் கண்கொடுத்தருளுவர்" என்று கூறினர். உடனே தெக்கன் விபூதியையணிந்து வயித்தியநாதரே! நீரே தஞ்சமென்று தியானித்து அவருக்கு அபிடேகத்துக்காகச் சந்தனக்கட்டைகளும், அகிற்கட்டைகளும், கஸ்தூரியுங், குங்குமமும், எலமுதலிய வாசனைச் சரக்குகளுந், தேனும் அச்சிவனடியாரிடம் கொடுத்து "அடியேனுக்குக் கண்கொடுத்தருளும்படி புதுவைநாயகரை நீங்கள் பிரார்த்தனை செய்யவேண்டும்" என்றுசொல்லி யனுப்பினன். அடியார்களு மவன்வேண்டுகோளின் படியேவந்து பிரார்த்தித்திருந்தனர்.

அதன்மேல் புதுவைநாயகரைத் தரிசிக்கும்பொருட்டுத் தெக்கன் ஒருபடிதேனை யெடுத்துக்கொண்டு சிவநாமங்களையே யுச்சரித்துப் புதுவைத்தலத்தை வந்து சேர்ந்தான். வழிகாட்டி முன்சென்றவர் புதுவைவந்து சேர்ந்தோமென்று சொல்லுமுன்னரே கீழேவிழுந்து தாழ்ந்தெழுந்து தெக்கன் வணங்கிச் "சுவாமீ! உம்முடைய கோபுரந் திருமதில் முதலியவற்றைத் தரிசிக்குங் கண்களில்லேனென்னசெய்வேன் திருவுளமிரங்கி யருளவேண்டும்" என்று பிரார்த்தித்துச் சிவகங்கையிலே மூழ்கியெழுந்தான்; எழுந்தவுடனே வயித்தியநாதர் திருவருளால் ஒருகண் பிரகாசமாகத் தெரிந்தது. உடனே தெக்கன் இரண்டு கண்களும் பெற்றவன்போலவே யுவகையுற்று ஊன்றுகோலை விட்டெறிந்து சந்நிதிக்கெதிரேவந்து தரிசித்துநின்று தான் கொண்டுவந்த தேனைச் சுவாமிக்கு அபிஷேகஞ்செய்யக் கொடுத்தனன். ஆங்குள்ள சிவனடியார்கள் அவையனைத்துங்கண்டு எம்பிரான் திருவருளை வியந்து தெக்கனையழைத்து வணங்கச்செய்து விபூதி வில்வங்கொடுத்து இன்னுமோர் கண்ணுங் கிடைக்குமென்று சொல்லி "இன்றையத்தினஞ் சிவராத்திரியாதலாலே நான்குசாமமுந் தரிசனஞ்செய்து விழித்துக்கொண்டிருப்பாயாக" என்று சொன்னார்கள்.

தெக்கனும் அடியார்கள்சொற்படியே மூன்றுசாமமுந்தரிசனஞ் செய்துகொண்டிருந்து காலாஞ்சாமத்திலே யென்பு நெக்குருகச் சரீரமுழுதும் புளகம்பொடிப்பக் கைகளைக்குவித்துப் பலவாறு தோத்திரஞ்செய்து நின்றான். அப்போது நான்காவதுசாமம் பூசைமுடிவிலே சுவாமி வெளியே யெழுந்தருளிவர நந்திதேவர் தெக்கனைப் பிரம்பாலடித்து வயித்தியநாதரைத் தரிசனஞ்செய்யென்று சொல்லுதலும், திருவருளாலே மற்றை யொருகண்ணும் பிரகாசமாகத் தெரிந்தது. தெக்கன் பரவசனும் ஆனந்தக்கூத்தாடிக் கண்கள் களிகூரத் தரிசித்துநின்றான். அதுகண்ட அடியார்கள் ஏனையோர்கள் வயித்தியநாதர் திருவருளைப்புகழ்ந்து தெக்கனைநோக்கிப் "பூருவத்திலென்னதவஞ் செய்தாயோ? நீயிந்தப் பேறுபெற்றாய். இனியுன் பதிக்குச்செல்லக் கடவாய்" என்றனர். அவரது உத்தரவின்படி புதுவைநாயகரை மீட்டும் வணங்கி "உம்முடைய திருவடியை மறவாத அன்பருள வேண்டும்" என்று விடைகொண்டு சிவனடியார் முதலானோரையும் பணிந்து மீண்டு தன்னுடைய வில்லூர்வந்து சேர்ந்திருந்து மாதந்தோறும் புதுவைநாயகருக்குத் திருமஞ்சனத் திரவியங்கள் கொண்டுவந்து கொடுத்து வணங்கிச்சென்று சிவநேசமறவாது வாழ்ந்திருந்தனன்.

இருபத்தைந்தாவது

# பிரகச்சேனன்

# முத்திபெற்ற அத்தியாயம்.

உள்ளன போத மின்றி யில்லன வுதிப்ப தின்றி
யெள்ளருங் கருவி யாவு மிருந்தமுற் படியி ருப்பத்
தெள்ளொளி பெருக வென்றன் சிந்தையை யுருக்கி யாண்ட
வள்ளலைப் புதுவை மேய வரதனை வணக்கஞ் செய்வாம். (க)

வேறு.

தருமகிரிச் சாரலின்வாய்த் தகைமைபெறு வில்லூரில்.
விரவுமன்பார் வலையனுக்கு விழிகொடுத்த கதையுரைத்தோ.
மாபுரவிக் கதையனைத்தும் பிரகச்சே னன்கேட்டுப்
பரனடிநீ ழலிற்சார்ந்த பரிவுவிரி வாப்பகர்வாம். (உ)

### வேறு.

திரைகடல் சூழ்ந்த பாரி லளப்பில சிறப்பு வாய்ந்து
நிரைபெறு யாட மோங்கி நிலைறவளம் பெருகு மூதூர்
புரையறு துவரை மேல்பாற் பொருவறு மேன்மை யெய்து
முரைபுக ழரசர் வைகு மங்கல நகர மோரூர். (௩)

அந்நகர் தொன்று தொட்டு முறைமையி னாளும் வேந்தன்
மன்னவர் பரசும் பாதன் வசுதேவன் மரபில் வந்தோன்
கொன்னணி வேலா னீத யாதவர் குலத்தோ னாமம்
பின்னமில் பிரகச்சேன னென்பவன் பிறங்கற் றோளான்.

தீரமு தார வாரங் குடியுறு சிந்தை நேச
னாமென் முலையார் மார னனைத்திக ழழகு வாய்ந்தோன்
சூரமும் வீரப் பாடுந் துணிவுநீங் காத தொல்லோன்
கோரமுமறமுஞ்செய்யுங்கொடியரைக்குறைக்குங்கோமான்.

இனியவிக் குணங்க ளுள்ள விறைமகன் புடவி யெங்கு
மனுமுறை வழிம றாது புரந்தருள் வாய்மை யானுஞ்
சினமுறு மடைய லாரைச் செற்றவர் செல்வத் தானுந்
தனதனு நிதியிற் றாழுந் தனக்குவை சாரப் பெற்றான். (௬

ஒன்றினுங் குறைத வின்றி யுளமிக மகிழ்ச்சி யெய்தித்
துன்றிய புலன்க ளாற்ற லனைத்துள போகந் துய்த்து
வென்றிசே ரிளமை யெல்லா மின்னனார் பாலே யீந்து
நன்றிசேர் கால மெல்லாம் வீணிலே நாசஞ் செய்தான். (௭)

தெள்ளிய வாலை கன்னல் சேர்தர நெருக்கி மென்சா
றுள்ளன கவர்ந்து கொண்டு கோதெலா மொழித்தல் போலும்
விள்ளரு மிளமை யாவு மின்னனார் கொள்ளை கொண்டு
தள்ளிய மூப்பு வந்து மன்னனைச் சார்ந்த தன்றே. (௮)

கண்குழி விழுந்து தேசார் தந்தமுங் கட்டு விட்டே
யொண்கெழு சோதி நீங்கி நரைதிரை யொருங்கி னெய்தி
யெண்களு மறைந்து சோர்வி னெய்ப்புட னிளைப்பு மல்கிப்
பெண்களும் வெறுத்த மூப்பாம் பெரும்பிணியரும்பிற்றன்றே.

### வேறு

'இன்பமா ரிளமையி னெய்ந்த வின்னுயிர்
துன்பமார் மூப்புறத் துய்த்தல் கூறிடின்

மன்பெருஞ் செல்வங்க ணீங்கி மாந்தர்க
ளன்பகல் வறுமையை யடைதன் மானுமே. (௧0)

இத்தகு மூப்புவந் தெய்த மன்னவன்
மெய்த்தளர் வுற்றுள மெலிந்த யர்ந்துநன்
கித்தனை காலமும் வீணி லேகின
சுத்தமென் பரகதித் தொன்மை யாற்றிலேன். (௧௧)

காயமு மநித்தியங் கனவு செல்வமே
தூயபெண் சுதரிவை விணைத்தொ டர்ச்சிரிய
யேயகல் லறங்களை யியற்றி லேனிட
ராயது காலமு மடுத்த தென்செய்கேன். (௧௨)

வேறு.

பானுவீ மதியு மற்ற பகலுட னிரவு போலு
நானமென் கொங்கை யற்ற நாரியர் வனப்புப் போலு
மூனமி னயன மில்லா வுறுப்புடை மாந்தர் போலு
மீனமி லறங்கள் செய்யா தேகின கால மெல்லாம். (௧௩)

தலனொடு தீர்த்த மூர்த்தி யிவைகளைச் சார்ந்து போற்றே
னலரமை வுறவே யின்று தளருமூப் படைந்து நைந்தேன்
கலரடை நரகத் தாழுங் கதியலால் வேறு காணே
னலமுறு மார்க்கங் கூறு முரியரு நாத்தி யாமால். (௧௪)

என்றுளத் தவல மோடு நடுக்கமுந் துயரு மெய்தி
வென்றிவே லரசன் வைகுங் காலைநல் வினைப்போ கத்தாற்
றுன்றுதா ரலகைக ளோடுந் தோன்றிய சோம னென்ன
நன்றுடை முனிவர் சூழ நாரத ரங்கு நண்ண. (௧௫)

மன்னவ னகிழ்ந்தெ ழுந்து பத்தியா மன்பு மன்னச்
சென்னிமேற் செங்கை கூப்பி யாசனஞ் சிறப்பி னல்கிப்
பன்னிய பாத்தி யாதி யருக்கியம் பண்பி னீந்து
நன்னய மொழிகள் கூறிக் *குசலமு நவிலப் பெற்று. (௧௬)

அருந்தவ முனிவ னல்கு மனுமதி யாற்றல் வேந்த
னிருந்தன னிருந்த வேந்தோ டன்புடன் முனியி யம்புந்
திருந்திய முகம்பு லர்ந்து சிந்தையு மெலிவு முற்றி
பெருந்துயர் யாது நின்பா லுரையெனப் பிரகச் சேனன். ()

* குசலம் - க்ஷேமம் விசாரித்தல்.

பின்னரு மெழுந்து தாழ்ந்து விருப்புளம் பெருகி நின்று
முன்னரென் றுதை யோடு முதாதை புரித வங்க
ணன்னெறி யதனு லெந்தை நனுகிடப் பெற்றேன் முன்னை
யின்னலு மொழிந்தே னைய வினியொரு குறையு மின்றே. ()

தரணியுள் வாடும் பைங்கூழ் சலதரம் பெற்ற தென்ன
விரணிய மிகநல் கூர்ந்தோ னெய்திய வின்ப மென்ன
வரணுடைக் குழவி யோங்கு மன்னையை யுற்ற தென்ன
முரணுடைத் துயர்க ணீங்க முனிவர நின்னைக் கண்டேன்.

ஆதலா லெளியே னின்பா லறைந்திடு மாற்ற மொன்று
மாதயா வுடனே கேட்டு மனத்துயர் மாற்ற வேண்டும்
யாதெனிற் றமியேன் றேக மெடுத்துட னின்று காறு
நீதமின் மாதர் போக நிறைகட லதனு ளாழ்ந்தேன், (உ௦

உய்யுமா றுகக் கூறு முறுதிசே ரறமு மற்றேன்
பையர வணிந்தோ னும மாயினும் பரிவிற் கூறி
மெய்யடி யார்க ணீறு மந்திரம் விரும்பிப் போற்றேன்
சைவநன் னெறியோர் வைகுந் தலத்தினுஞ் சார்ந்த தின்றே.

அன்றியு மிளமை நீங்கி வியுமூப் படைந்தேன் சாலச்
சென்றுயர் தீர்த்த மூர்த்தி போற்றிடுஞ் செயலு மற்றேன்
பொன்றியான் கொடிய தீய நரகிடைப் பொருந்தா முன்னர்
நன்றிசேர் கருணை செய்து நற்றவ புரத்தி யென்றான். (உஉ)

தளர்வொடு பிரகச் சேனன் சாற்றிய மாற்றங் கேட்டே
யுளமிக விரங்கி நோக்கி நாரத முனியு ரைக்கும்
வளமிகு செங்கோல் வேந்தே நின்னுரை வாய்மை நன்று
கிளர்பெருங் கவலை நீங்கிக் கேளியா னுரைத்து மென்று. ()

வேறு.

இரவிடை வேண்டும் பொருள்களைப் பகலி னீட்டுத லுத்தம மாரி, விரவுகார் காலம் வேண்டுவ யாவுங் கோடையின் விளைத்திட வேண்டிற், சிரமமூப் பிடையுள் வேண்டிய பொருளை யிளமையிற் சேர்த்திட வேண்டும், பரகதி வேண்டி லிம்மையே தவங்கள் பரிவுடன் முயன்றிட வேண்டும். (உ௩)

அன்னதா லாக்கை பிரிந்திடுங் காலத் தருந்தியோடீட்
டிய பொருள்கள், பின்னுற வருவ தின்றுதான் மனைசேய் பிற
ங்கிய சுற்றநட் பாளர், துன்னெறி யீமத் தளவுமே வந்து மீள்
வர்பின் றொடர்ந்துநீங் காது, செந்நெறி வருதல் புண்ணிய
பாவ மிரண்டுமே யெனமறை செப்பும். (உரு)

வேறு.

அவ்வுரை யுண்மை யாக்கொண் டறிவுளோ ரிடைய றாது
செவ்வவே ரறங்க ளாற்றி நற்கதி சேர்வ ரன்றே
யிவ்வகை யாது மொன்று மியற்றிடா திருந்தா யந்தோ
வுய்வகை யூயலா வண்ண மூப்புவந் துனைய டைந்த. (உசு)

ஆனதா லினிமே லுள்ள சஞ்சல மனைத்து நீங்கி
ஞானநா யகனம் மீசன் பாததா மரையை நம்பி
யூனமி லுறுதி செய்தி யுய்வகை யுளது சொல்கேந்
தானமும் வருத்த மேய தவங்களு மியற்ற வேண்டாம். (உஎ)

மற்றியா தென்று கேட்டி லுரைக்குது மன்ன கேண்மோ
கற்றவ முறுநீ கேட்க முன்னர்நா னவிலுங் காதை
பெற்றவ ருலகி லேவர் கேட்கினும் பேறு நல்கு
முற்றவர் முத்தி யெய்து முயர்சிவ தலமொன் றுண்டு. (உஅ)

முதுமறை போற்று மற்றைத் தலத்தினி லீது மொன்றுப்
பொதுமையாக் கோடலன்றீ துண்மையாப் புகறல் வேண்டு
மிதுமதிக் கொள்கை யானே யியம்புத லன்று மேனாட்
சதுமுகன் முனிவர் பானு சந்திர னுணர்வ ரன்றே. (உகூ)

செப்புமப் பதியெங் கென்னிற் றெக்கிண பூமி தன்னி
லொப்பக திருநெல் வேலி யுயர்கூட லிரண்டி னுப்பண்
மெய்ப்பதி புதுவை யென்று மடவார்வ ளாக மென்று
மெய்ப்பவர்க் கருளு மீச னிரும்பதி பலபே ரின்னும். (௩0)

வேறு.

என்று கூறிய நாரத முனிவனை யிறைஞ்சி
வென்றி வேலுடை யரசனும் விருப்புடன் விளம்பு
நன்றி சேர்தரு மத்தல நாமநீ நவில
வொன்று மன்புளத் தோங்கிடப் பெற்றன னுவந்தே.

வேறு.

இத்தன்மை நிகழ்த லானீ யியம்பிய மொழிக ளியாவுஞ்
சத்திய முண்மை வேறு சஞ்சல மனைத்துந் தீர்ந்தே
னத்தஞ் ஞிறந்து தீய நரகிடை யாளா வண்ணஞ்
சுத்தவத் தலத்தின் மேன்மை சொற்றிட வேண்டு மென்றான்.

முனிவரன் வேந்த னன்பு பொழிகளை வியந்து கேட்டு
நனிபெருங் கருணை யோடு புதுவைமா நகரின் மேன்மைப்
புனிதமார் கதைகண் மேய புராணத்தின் வரலா றுள்ளங்
கனிதர வுரைத்தா மென்று முன்னமே கழறி னால். (௫௫)

வேறு.

என்று சூதனுஞ் சவுனக முனிவருக் கியம்பத்
துன்று சௌனகர் கேட்டுளத் தன்பொடுஞ் சொல்வார்
வென்றி நாரதர் விளம்புமிக் காதையை வேட்டீ
மின்ற யங்குவேன் மன்னவன் செய்கைபின் விளம்பாய்.

வேறு.

இறைவனே யென்னச் சூத னியம்புவா னந்த மன்னன்
பொறையுளீர் கருணை யீசர் புகழ்ப்பெருந் தோணி நல்க
வறையுமத் தோணி பற்றி யருட்கரை யேறி யுய்ந்தேன்
மறைபுகழ் வெண்ணீ றுதி மகிமையை வழுத்த வேண்டும்

வேறு.

என்றுபிர கச்சேன னியம்புமொழி யுணர்ந்துமுனி
நன்றவனன் பென்மகிழ்ந்து நவையகல நவிலலுற்றான்
வென்றியரு ணீறுதி மான்மியங்கள் விளம்புவமோ
சென்றுதிரி மனந்திருத்தித் திடமெய்தி நீகேண்மோ. • (௫௬)

வேறு.

தேனுகு கொன்றை சூடி சென்னிவாழ் நதியைக் கண்டு
தானுமம முடியை வேட்டோ தாணியு ளகத்த நீக்கி
யீனமில் சுத்த மெய்த வேண்டியோ வெம்பி ராட்டி
யானுரு வெடுத்தாள் வேத மமரர்க ளங்க மாக. (௫௭)

அடிமுதற் சென்னி யீறு மவயவ மனைத்துங் கூறிற்
படிபுகழ் சுரர்க ளோடுஞ் சுருதிக ளனவே பல்கு
முடிவுறப் பசுவின் மேன்மை மொழிந்திட முடியா வின்ன
வடிவுறு மதன்பாற் றோன்றும் வ[illegible]ருள் விமல மைந்தும். ()

ஒளியிரு ரொத்த லென்ன வுலகுள மாசு நீக்கு
மளியுடை யமல னீடு முடிமிசை யானு தாட்டுந்
தெளிதரு மாவி னைந்தின் மான்மியஞ் செப்பற் பாற்றே
களிதரு ஞானம் போலுஞ் சுத்தமாங் கருதி லென்றும்.(ஙக)

ஐந்தினு ளொன்ற தாய வரியகோ மயத்தை யேந்திச்
சந்திரன் றிகழ்தல் போலும் விதிமுறை சமைத்துப் பாங்கா
லெந்தநீ றருமை கூறில் விடலையி னுண்மை யாமாற்
சந்ததந் தரிக்கி லென்றுந் தீவினை சாரா தன்றே. (ச0)

காண்டொறும் பிறவி வித்தாங் காரண மாயை யேகுந்
தீண்டிடி ளைவை யின்றுந் தீவினை யனைத்துந் தீரும்
பூண்டிடி லென்று நீங்காப் பொருவிலா னவம்விட் டோடும்
மேவுடிய வேட்கை நல்கும் விமலனுர் திருவெண் ணீறே. ()

ஒள்ளிய வுருத்தி ராக்க மகிமையை யுரைக்க லுற்றுந்
தெள்ளிய புலன்க ளைந்தி னயனமே சிறந்த தன்றே
வள்ளலாம் விழிகண் மூன்றிற் றேன்றிய வண்மை யாலே
பொள்ளிய லுருத்தி ராக்க மிறைவடி வென்று ரைப்பர். ()

வேறு

பரிச வேதியாற் செம்புயர் பசும்பொனும் படிபோல்
விரியு மம்மணி புனைந்திடி னுடலுயிர் விமலம்
புரியு முண்மையி தையமின் றுயிர்களைப் புரக்குந்
திருவெ ழுத்தெனு மஞ்செழுத் தியலுரை செய்வாம்.

வேறு.

ஆயிர கோடி யாய வண்ணலார் நாமந் தன்னுட்
பாயிரம் போலு முண்மை யஞ்செழுத் திருளைப் பாற்றிக்
காயிர வியைப்போன் ஞானங் கருத்தினி லிருத்தல் செய்யு
நாயக னுமங் கூற வழைத்தல்போ லுளத்தி னண்ணும். (

திருவரு ளியாதோ வென்று திகைப்புடன்றேடல்வேண்டாம்
பொருவறு மஞ்செ ழுத்தே திருவருள் புந்தி செய்க
கருவறு மஞ்செ ழுத்தைக் கருத்துறக் கூறுந் தோறு
மொருவரு முணரா ஞான முளத்திடை யுவந்து மன்னும். ()

அணிசரா சரங்க ளியாவு மீசனுர்க் கடிமை யென்றுந்
துணிபெரு மறைக ளே[illegible]ந் தொல்லுயிர் புரிதல் யாவும்

பணிவிடை யாமெ வர்க்கு மீதுளம் பதியா தாகுந்
தனிவிலவ் வுயிர்க டம்முட் சிவசம யத்தோர் தக்கோர். (சுகூ)

புலையர்க ளேனுந் துன்பம் பொருபிணி யாள ரேனுங்
கொலைபுரி கொடிய ரேனுங் கூறுதற் கரிய வீசர்
நிலையருடிருவெண் ணீறு சாத்திய நேசம் பெற்றுன்
மலைவற வமல னென்றே யன்புடன் வணங்க வேண்டும். ()

வரவொடு போக்கு டைத்தாம் பிறவிநோய் மாற்ற வந்த
குரவரை யிறைவ னென்றே யுளத்தினிற் கோடல் வேண்டும்
விரவிய குருவை யீச னெனக்கொளார் விடிவின் மூல
விருளிடைக் கிடப்ப ரன்றி யருளொளி யெய்தா ரன்றே. ()

ஆலயத் தன்பி னேடு மெழுந்தரு ளமலன் றன்னைச்
சாலவு முளத்தி னம்பிச் சஞ்சல மனைத்து நீங்கி
மாலயற் கரிய ஞான வான்பொரு ளீதே யென்றே
யேனுமா றன்பு செய்தாற் றிருவுள மிரங்கு மென்றும். (சகூ)

கயல்விழி பங்கன் பாதந் திரிவித கரணத் தாலே
முயல்வுறன் மறப்பு றாது நினைந்திடன் மொழித லன்பார்
செயல்புரிந் திடுத லாலே திருவருள் விளங்கு மன்றி
மயலறு முயற்சி லாத மடிமையோர்க் கெய்தி டாதே. (ருo)

மெய்யென நம்பி னோர்க்கு மெய்ம்மையாய் வேட்ட வீயும்
பொய்யெனவெண்ணினோர்க்குவிறகினுணெருப்புப்போலாஞ்
செய்யெனச் செய்யுஞ் செய்கைத் திறமருட் செய்கை யன்றி
மையலா லருளு மென்னு மடிமையோர்க் கொன்றும் வாயா.

வேறு.

அன்ன தன்மையாற் கருணையி னலயத் தடைந்து
முன்ன வன்றனை யொல்லுமா றன்பொடு முயன்றுற்
பின்ன மற்றிடு முயிர்த்துணை யாயருள் பெருக்கி
நன்ன லந்தரு முயல்வதே யாவர்க்கு நன்மை. (ருஉ)

வேறு.

விளம்பிய தன்மை யாவு முளத்திடை வியந்தி ருத்தி
வளந்திகழ் திருவெண் ணீறு வண்மைசே ருருத்தி ராக்கந்
துளங்கலி லஞ்செ ழுத்துந் துகளறு குருவி லிங்கங்
களங்கமில் சங்க மத்தி னுண்மையுங் காத லாற்றே. (ருங)

சத்திய வசன மாகுந் தருபுது வைப்பு ராணம்
பத்தியா மன்பு பொங்கப் பரிவுட னருச்சித் தேத்தித்
துத்தியம் புரிதி யுன்றன் றொல்லைவெந் துயர்க ணீங்கி.
நித்தியா னந்தன் பாத நீழலிற் சார்வை யென்று. (ருச)

வேறு.

வரீசம் வைத்திய ஞாதன் கூறிய மறையின்
சார வத்தமாம் புதுவைமான் மியமுமச் சார்புந்
தீர முற்றுள * மாபல சேனனுங் கேட்டே
யீர மெய்த்தமா னதத்தினு ளுவகையோ டெழுந்து.()

நேச மேலிடப் பேரொளி விளங்கிட நீங்கிப்
பாசங் கீழுறும் பான்மைபோ னிலனுறப் பணிந்து
தாச னுய்ந்தன னெனப்பல பலமுறை தாழ்ந்து
நாச மின்றிய நாரத முனியுட னவில்வான். (ருசு)

மத்த னேனுய்யு மறிவிலே னுசையுண் மயங்கும்
பித்த னேனையு மூவரொ டொருபொருளெனப் பேணி
முத்த னும்படி புதுவைமான் மியமெலா முறையோ
டத்த னீதிரு வாய் மலர்ந் தருளிய வதனால். (ருஎ)

வேறு.

கற்பொதி திண்மை நீங்கிக் கசிந்துள முருகப் பெற்றேன்
சிற்பர நிலையை யுற்றேன் சிந்தையு ளவல மற்றேன்
பொற்பரு ணினக்கு மென்னாற் புரிந்திடுங் கைம்மா றுண்டோ
வற்புத மாண்ட தன்மைக் கெக்கா லு மடிமை யானே. (ருஅ)

இன்னவா முகமன் கூறு மிறைவனுக் கியலு மன்பா
னன்னய மொழிகள் கூறி மங்கல வாசி நல்கி
முன்னவன் பாதம் போற்று நாரத முனிவன் சென்றான்
சொன்னவா றரசன் பண்டைத் துயரெலாந் துறந்து வந்து.

வேறு.

நித்தியம் புதுவைமான் மியத்தை நேசமாம்
பத்தியும் பெருகிடப் பரிவிற் போற்றியே
சித்தமின் புறப்படித் தின்பஞ் சேர்தர
வத்தர்பொற் பதமடைந் தரசன் வாழ்ந்தனன். (கூ0)

---

* மாபலசே[redacted] - பிரகச்சேனன்.

வேறு.

என்று சூதனுஞ் சௌனக முனிவருக் கியம்ப
வொன்று சிந்தைய ரனைவரு முளங்களிந் துருக
வென்றி சேர்தவச் சூதனைத் துதிபல விளம்பித்
துன்று மன்புளம் பொங்கிட வின்னனசொல்வார். (௬௧)

வேறு.

புதுவையை யடைய முக்கட் புனிதனை யருச்சித் தேத்த
விதியிலா வெமக்கன் போடும் புதுவைமான் மியம்வி ளம்பி
மதிநலம் வலிய வந்து தந்தருண் மகிமை கூறிற்
றுதிபெறு கொம்பிற் செந்தேன் பந்துவாய்சொரிந் தொக்கும்.

ஆகலான் முன்னு ரைத்த வருங்கதை யவைபோ லன்றிக்
காதையைக் கேட்குந் தோறுங் கருத்தினு ளுவகை பொங்கி
மீதெழுமன்பு மன்னு மாற்றினு லிந்த மேன்மை
நீதமா ருளத்தி னீங்கா நிட்டையா யெமக்கு நேரும். (௬௩)

இருந்தவ நிதியம் பெற்ற சவுனக ரிவ்வா றோத
மருந்தினு மினிய காதை வழங்கிய சூதன் கேட்டுப்
பெருந்திற மருவு மேன்மைப் புதுவைவாழ் பெருமான் பாதந்
திருந்திய வுளத்தி ருத்தி மீளவுஞ் செப்ப லுற்றான். (௬௪)

வேறு.

காரமுத்து மணிமாடப் புதுவையின் சீர்புகழ் கணித மின்றாஞ், சீரழுத்து மக்கதையுட் செய்யுளொன்று பாதியரைச் சீரொன் றின்றி, யோரெழுத்தா யினுமுரைக்கி லுற்ற பெரும் பாவமெலா மொடுங்கும் பாரில், வேரழுத்தும் புகழ் பெறுவர் வறுமைபிணி யகன்றுசெல்வ மேவி வாழ்வார். (௬௫)

காதலுயர் விளையாடற் புதுவைமான் மியமின்னு நவில லுற்று, மாதரவாற் பயில்வோர்க ளன்புடையோ ரேவலினு லருத்தத் தானும், போதமுற வெழுதினேர் வாசித்தோர் கேட்டோர்கள் புரிந்த பாவம், பேதமுறுங் கல்விசெல்வம் பெருகவளர் பாக்கியமும் பேணி வாழ்வார். (௬௬)

வேறு.

என்று சூத னியம்பு மொழிகளை
நன்று சௌனகர் கேட்டுள...ன்கூற

வென்றி சேரிக் கதையை விளம்புத
லொன்று மின்ப மெனவுளந் தேறியே. (கூஎ)

**வேறு.**

வேதனை நாளு நல்கி வையமேல் விளக்குந் தேக
வாதனை தவிர ஞான நிலையினுண் மன்னி நின்ற
போதனைக் கடவுள் காதை யனுதினம் புகலா னந்த
சூதனைத் தொழுது போற்றி முனிவரர் சுபத்தி ருற்றார்.

அந்தண ரன்பர் வாழி யருமறை முறைமை வாழி
செந்தமிழ்ப் புதுவை வாழி சிவன்சிவ காமி வாழி
சந்தவெண் ணீறு வாழி சிவசம யாதி வாழி
நந்தலின் மன்னன் வாழி யவன்செங்கோ லூழும் வாழி.

## பிரகச்சேனன்
## முத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று.

**ஆகத் திருவிருத்தம் கஎ0ரு**

---

### பிரகச்சேனன் முத்திபெற்ற அத்தியாயச் சுருக்க வசனம்.

சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதி முனிவரைநோக்கி "வலையனுக்குக் கண்கொடுத்த சரிதஞ்சொன்னோம். இனிப் பிரகச்சேனன் மோக்ஷமடைந்த சரிதத்தைச் சொல்லுவோம்" என்று சொல்லத்தொடங்கினர்:—துவரை நகரத்துக்கு மேற்பக்கத்திலுள்ள * மங்கலநகரத்திலே யாதவர்குலத்திலே யரசரெல்லாரும் வணங்கும் வாசுதேவன் மரபிலேயுதித்த பிரகச்சேனனென்னும் அரசன் செல்வம், கல்வி; இளமை, தீரம், உதாரம், வென்றி, அழகு முதலியவற்றாலே மேம்பட்டு மனுமுறை நீதிப்படி யரசுசெய்து வருநாளிலே யொன்றினுங் குறைவில்லாத செல்வச்செருக்கா லிளமையெல்லாம் பெண்களுக்கே கொடுத்துப் பெரும்போகந்துய்த்து வீண்காலம் பலகழித்து விருத்த பருவத்தையடைந்து கண்குழிந்து பற்கள் கட்டுவிட்டு நரைதிரையெய்தி யிளைத்து மிகவும் வியாதியடைந்து தளர்ந்து இவ்வளவுகாலமும் வீணாகப் போக்கிவிட்டேன், மரணமுஞ் சமீபித்தது. இனி யென்செய்வேன்· மூர்த்தி தலந்தீர்த்தங்களைச்சென்று வணங்கிலேன்[illegible]னி நரகத்திலே போயழுந்துவதன்

றி வேறுகதிகாணேன். இனியாவது நன்மார்க்கத்தைப் போதிப்பாரொருவரு மில்லையேயென்று விசாரப்பட்டுக் கொண்டிருந்தனன்.

இவ்வாறு பிரகச்சேனன் துன்புற்றிருக்குங்காலத்திலே அவனுடைய நல்வினைவசத்தால் அநேகமுனிவர் அங்கே யெழுந்தருளினர். அரசனவரை வந்தனைசெய்து ஆசனங்கொடுத்து அருக்கியமாதிகளாலுபசரித்து அவரது ஆஞ்ஞையினாலே யிருந்தனன். அவனை நோக்கி "அம்முனிவர் முகம்புலர்ந்து மனமும் வாடியிருக்கின்றதென்னகாரணம்" என்று வினவினர். பிரகச்சேனன் பின்னரும் தாழ்ந்துவணங்கி "என்னுடையதாதை மூதாதைசெய்த தவப்பிரயோசனத்தாற் சுவாமிகளிங்கெழுந்தருளப் பெற்றேன். இனியொருகுறையுமில்லை. யிதுகாறு மடியேனொரு நல்வினையுஞ் செய்தறியேன். பெண்கள் காமமயக்கிலேயழுந்திக் காலமெல்லாம் போக்கிவிட்டேன். இனி விரைவிலே மரணம் வருமுன்னர் நரகத்தை யடையாவண்ண மிரக்ஷித்தருளுக" என்று கூறினான். அதுகேட்டு டாழ்முனிவர் மனமிரங்கிப் பரகதி வேண்டுமானு லிம்மையிலே யதற்குரிய தவஞ் செய்யவேண்டாம். முன்னொரு காலத்திலே "உனக்குநாம் சொல்லியகதைகளில் எவர்கேட்டாலு முத்தியையளிக்கும் உயர்ந்த சிவஸ்தலமொன்றுண்டு. அத்தலம் தெக்ஷிண பூமியிலே திருநெல்வேலிக்கும் மதுரைக்கும் நடுவிடத்தில் புதுவையென்றும் மடவார்வளாகமென்றும் சொல்லப்படும் நாமமும் இன்னுஞ் சிலநாமமும் பெற்றுள்ளது" என்று கூறுதலும், அரசன் முனிவரை வணங்கித் தேவரீர் அந்தத் தலத்தின்பெயரை யருளிச்செய்தவுடனே யடியேனுள்ளத்தி லன்பு நிகழாநின்றது. ஆதலா லத்தலத்தின் மான்மியத்தை யருளிச்செய்ய வேண்டுமென்றனன். நாரதமுனிவர் "அதுமுன்னரே உனக்குச் சொல்லிவிட்டோம்" என்று சொல்லி நிறுத்தினரென்று சௌனகாதிமுனிவருக்குச் சூதமுனிவர் சொல்லிமுடித்தார். அதுகேட்டுச் சூதமுனிவரை வணங்கிப் பிரகச்சேனன் பின்பு செய்ததை யருளிச் செய்கவென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்:—

பிரகச்சேனன் நாரதமுனிவரை மீண்டும் வணங்கிச் "சுவாமீ! புதுவைநாயகர் திருவருளைத் துணையாகப்பற்றிப் பிழைத்தேன். இனி விபூதி யுருத்திராக்கமாதியவற்றின் மான்மியங்களை யருளிச்செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தனன். நாரதமுனிவர் அவனது மெய்யன்பைவியந்து கூறுவார்:—"சிவபிரானுடைய திருமுடியிலே கங்காநதியைப்போல அபிடேகம் ப[illegible]தற்காகப் பஞ்சகௌவிய

த்தையுந் தரும்பொருட்டுப் பார்வதியம்மை தேவர்களெல்லாருந் தன்க்கங்கமாகப் பசுவுருவ மெடுத்தனள். அத்தகைய பசுவர்க்கத்தின் மேன்மையை யாவராலே சொல்லமுடியும். உலகத்திலுள்ள அசுத்தமெல்லாம் பஞ்சகௌவியத்தாலே பரிசுத்தமாகும். அவ்வகைத்தினுளொன்றாகிய கோமயத்தையெடுத்து விதிப்படிசெய்த விபூதியைத் தரித்தால் தீவினையனைத்து நீங்கும். இனி யுருத்திராக்க மான்மியத்தைச் சொல்லுகிறோம். உருத்திரனுடைய திருக்கண்களினின்றுந் தோன்றியதனால் உருத்திராக்கமெனப் பேர்பெறும். அம்மணிகளைத் தரித்தால் உடலுமுயிரும் பரிசவேதிகையினாலே யிரும்பு பொன்னாற்போலப் பரிசுத்தமடையும்.

இனிப்பஞ்சாக்கரத்தின் மான்மியங் கூறுகிறோம். சிவபிரானுடைய அனந்த நாமங்களுக்குள்ளே சிறந்த நாமமாய் விளங்கிய ஐந்தெழுத்தும் ஞானத்தைக் கருத்தினி லிருத்திவைக்கும். திருவருள் வேறேயென்று சிந்திக்கவேண்டாம். பஞ்சாக்ஷரமே சிவபிரானுடைய திருவருள். சிவபிரானுடைய சிவசமயத்தைச் சார்ந்தவரே தக்கவர்கள். விபூதிதரித்தவர் யாவராயினு மவரை வணங்கல்வேண்டும். விபூதி ருத்திராக்ஷந்தரித்த சற்குருவைச் சிவபிரானென்றே கொள்ளல்வேண்டும். அப்படிக் கொள்ளாவிடில் ஆணவமலத்திற் கிடப்பரன்றிச் சிவனருளைப் பெறமாட்டார்கள். ஆலயத்திலே யெழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெருமானை யுண்டென்று நம்பினவர்க்கு அங்கேயிருந்து அவர் திருவருள்புரிவர். ஆதலால் விபூதி யுருத்திராக்கம் பஞ்சாக்ஷரங் குருலிங்க சங்கமங்களை யுண்மையாக நம்பிச் சத்தியவசனமாகிய புதுவை மான்மியத்தை யன்புட னருச்சனைசெய்து துதித்து வருவாயாகில் உன்னுடைய பழவினைத் துயரமெல்லா நீங்கி மோக்ஷத்தை யடைவாய்'' என்று நாரதமுனிவர் கூறினர். அது கேட்ட பிரகச்சேனன் நாரதமுனிவரை வணங்கி யடியே னுய்ந்தே னுய்ந்தேனென்று பலமுறை தாழ்ந்தெழுந்து நின்று உபசாரவார்த்தைகள் பலவுஞ்சொல்ல, முனிவரும் ஆசிர்வதித்து அவரிருப்பிடஞ் சென்றனர். பிரகச்சேனனு மன்றுமுதல் புதுவைப்புராணத்தைப் பூசித்துத் தினந்தோறும்படித்துச் சிவபிரானுடைய திருவடியடைந்து பேரானந்தம்பெற்று வாழ்ந்தனனென்று சூதமுனிவ ரருளிச்செய்தனர். சௌனகாதிமுனிவர்கள் அவரை வணங்கிச் "சுவாமீ! நீர் கலியி லெழுந்தருளிவந்து புதுவைமான்மியத்தை யெங்களுக்குபதேசித்தருளியது முட[illegible]யிலே பூங்கொம்பு தேன்சொரிந்த

துபோதும். இதன்முன்னர் எத்தனையோகதை யெங்களுக்கருளிச் செய்திருக்கின்றீர். இந்தக் கதைகேட்குந்தோறு முள்ளன்பு அதிகப் படுதலாவிது அடியேங்கள் இருதயத்தைவிட்டு நீங்காதிருக்கும்" என்றுகூறினர். அதுகேட்டுச் சூதமுனிவர் பின்னுங்கூறுவார்:—வயித்தியநாதருடைய மான்மியத்துக் கெல்லையில்லையாது. அந்தமான்மியச் செய்யுளிலொரு அக்ஷரத்தைச் சொன்னாலும் பெரும்பாவமெல்லா நீங்கும், வறுமை வியாதியடையா. செல்வங்கிடைக்கும். இந்த மான்மியத்தை யன்புடையா ரேவரினுமாவது பொருளாசையாலாவது எழுதினோர், வாசித்தோர், கேட்டோர்கள் செய்த பாவமெல்லாம் பறந்துவிடும். கல்வி செல்வம்பெற்றுப் பாக்கியு மடைவார்கள் என்று சூதமுனிவர் சொல்லக்கேட்டுச் சௌனகாதிமுனிவ ரெல்லாரும் அம்முனிவரைப் பணிந்து பெரு மகிழ்ச்சியுற்றிருந்தனர்.

அந்தணர், அடியார், வேதம், புதுவைத்தலம், வயித்தியநாதர், சிவகாமியம்மை, விபூதி, சிவசமயம், அரசன், அரசன்செங்கோல் இவைகள் நீடூழி வாழ்ந்திருக்கவேண்டும்.

# காயக்குடி நதிமான்மியம்.

மாயக் குடிவாழ்க் கையைநீத்து மாதுபாகன் மலர்ப்பதத்தி
னேயக் குடியா யுறைதவத்தோர் நிலவும்புதுவைநீணகர்ப்பாற்
றோயக் குடியா யெக்காலுஞ் சுவறு வளங்கள் சொரிநதிக்குக்
காயக் குடியா றெனுநாமம் வந்த வாறு கழறலுற்றும். (க)

மூத்தூர்கன்னல்செந்நெலவை முதிர்ந்துவிளைந்துவானோங்கு
நத்தூர் பழனக் காடுநிறை நவையின் மறையோர் வைகுபதி
புத்தூ ரடுத்த புனல்வேலி யென்ன விரண்டு பொருவிலூர்
சித்தூர்புதுவைமாநகர்க்குத் தென்சாரொருகாவதமுளதால்.

செப்பு மூரி னுளனொருவ னுலாம் வருணச் செய்கையுளான்
றப்பி லிலிங்கந் தரித்த சிவ சமயஞ் சார்ந்த தகைமையினன்
கற்பின் மனையா ளவ்வாறே கருத்தி லன்பு புரிமுறையா
லொப்பி லறங்கண் முன்புரியா த[illegible] நல்கூர்ந் தொழுகுவார்,

சுருதிப் பொருளா யுளவீசர் பூசைத் தொழும்பு சோர்விலார்
கருதித் தினமு மையமெடுத் துண்டு காலங் கடத்துநா
ளரிதிற் றகைசேர் மனையாளு மாகந் தளருங் கருப்பமுற்றுப்
பரிவிற் றிங்க ளொன் பானு நிறைந்து பத்தாந் திங்கள்வர. ()

இன்ன மாது தளர்வெய்திப் போதுகால மெய்தும்வகை
பன்னு குன்றை யூர்வைகு மன்னை யுணரப் பகர்ந்துவிட்டா
ளன்னை வரவு தினநோக்கி யவடன் வரவு தாழ்ப்பமின்றுண்
மன்னு கணவ னனுமதியாற் றுயூர்க் கேக வழிக்கொள்வாள்.

சேயை யீன்று தாயுய்தல் செகத்தின் மீண்டு புனர்சென்ன
மாய தன்மைத் துயரன்றோ வதனு லகத்து ளன்பாய
நேயத் துணையி லாமையினாற் கணவ னூரை நீங்கியன்று
டாயைத்தேடிப்புறம்போந்துநடந்தாள்பையத்தளர்நடையால்.

நீரஞ் சுமந்த முகிற்குழலுந் தனமுஞ் சுமந்து நேரிழையார்
கோரஞ் சுமந்து வழிநடத்த லரிதாங் குறைவில் கருப்பநிறை
பாரஞ்சுமந்துசெல்வதுவுமெளிதோ தாய்மேற் பரிவென்னும்
வாரஞ் சுமந்து சேறலனறி யவளோ நடக்கும்வலியுடையாள்.

வேறு.

இவ்வா றேகி வழிமருங்கிற் றருவி னீழ லிருந்திருந்து, செவ்வாய் புலர்ந்து முகம்புலர்ந்து சிந்தை புலர்ந்து மிகத்தி கைத்தே, யெவ்வா றினியாம் வழிச்சேற லென்றென் றெண் ணி யொருவாற்றா, லேலவாய் களிக்கு மின்புதவு மளகை நக ரைக் கடந்தனளால். (அ)

வேறு.

குடங்கொண்டு கவிழ்த்த தென்னக் குளிர்மதி முகத்து வேர்வு
வடங்கொண்டகொங்கைமீது முடலெலாம்வார்ந்துசோரத்
திடங்கொண்ட மதியு மேகுஞ் செயலையு மிழந்தோர் சோலை
யிடங்கண்டு நிழலிற் பைய விருந்துடன் படுத்தா ளெய்த்தாள்.

வேறு.

அந்த வேலை யாயிழையா ளாக முழுது மணிவயிறு
நொந்து வருந்தித் துயரெய்தச் சேயும் பிறவி நோக்கிடவுஞ்
சிந்தைகலங்கிநெட்டுயிர்த்துச்செக்கைகொடுக்குந்துணையுமின்றி
நைந்து விழிக ணீர்சொரி[illegible]வாற்று ளாகி நலிவுற்று. (க0)

மங்கை சிவனே சிவனேயென் றழுது மிகவாய் விட்டரற்றச்
சங்கைபற்ற பல்லுயிர்க்குந் தாதை தாயாந் தலைவனு
ரெங்கும் விழியுஞ் செவிகளுமாய் நிறைந்த விறைவர்தரியாதே
யங்குப் பயந்த வனைபோலு மஞ்ச லஞ்ச லெனவ லடைந்தார்.

### வேறு.

கற்றைபஞ் சடையும் பிறையுட னரவுங் கங்கையுந் தும்பையுங் கனல்சேர், நெற்றிவாள் விழியு நீலகந் தரமு மழைத்தரு மணசமே லோங்கப், பெற்றதாப் போலும் வடிவெடுத் தன்பு பெருகிட வத்துயர் தயமை, யுற்றதா யிரங்கி யருகில்வந் திருந்தார் கண்டன ளனைமுக முவந்து. (௧௨)

### வேறு.

நரைதிரை யுடலுஞ் சால வழிநடை நலிவி னெய்ப்பும்
நிரைதரு கொங்கை தாழ்ந்து சரிந்துநீ ளுதரந் தாங்கு
முரைதரு மூப்பி னுய தளர்வொடு வெயாவு மோடப்
புரையக லன்புங் கண்டு போற்றின ளனையைப் பூவை. (௧௩)

காணுமுன் றுயர நீங்கக் கசிவுறு மொழிகள் கூறி
வாணுதல் வருத்த மின்றி மகப்பெறு வித்துச் சேயை
யாணென மகிழ்ச்சி யெய்தி யரிவைநீர் வேட்கை யுற்றே
வேணுமென் றிரப்ப மெய்த்தா யாயருள் விமல மூர்த்தி. ()

### வேறு.

மலர்ப்பத விரலின் வள்ளுகிர் நுதியாற் றரைமிசை வகிர்வுறக் கீற, நிலத்தலம் பகுந்து பாதல மட்டு மாழ்ந்துயர் நீண்மலை யாகி, யலைத்தலைக் கரைசே ரலைகடல் காறு மணிபிரவாகமா யெழுந்து, சொலத்தகுந் தாமோ தமதுயா முடிமேற் கங்கைபோற் றோன்றிய நீத்தம். (௧௫)

### வேறு.

இந்தநீர் நினக்குக் காயங் குடியென வனையி யம்ப
வந்தநீ ரெடுத்து முக்காற் குடித்தன ளயர்ச்சி யற்றாள்
வந்தநீர் மகிமை கண்டாள் பருகுநீர் மருந்தாக் கண்டா
ளைந்தவெந் துயர்க ணீங்கி யுடலுறு நயமுங் கண்டாள். ()

அதிசய மடைந்தே யின்ன ளன்னையோ வன்றோ வென்ன
மதிமிக மயங்கி யைய முற்றிவண் மாதா வென்னிற்

துதிசெய வின்ன மேன்மை செய்வளோ சொல்லில் யாதே
திதிசெய வந்த மூக்கட் டெய்வமா மென்றுந் தோராள். (கஎ)

இன்னவா றுளத்தி லெண்ணிக் குழவியைக் கரத்தி லேந்தி
யன்னையென் றளவ ளாவி யகமகிழ்ந் திருக்கு மெல்லை
மின்னைமுன் பெற்றதாயும் வேண்டிய பொருளுங் கொண்டே
யங்கிலை யதரிற் சோலை நீழலி னருகு சார்ந்தாள். (கஅ)

வந்தனை யன்னை யோடு புதல்வியு மயங்கி நோக்க
விந்துசே கரனு மன்னை மறைந்துபின் னெவரும் போற்றச்
சுந்தர விடையின் மீது தோன்றினை டோகை யோடு
மந்தரத் தமரர் சால வலர்மழை பொழிந்தா ரன்றே. (கக)

மதலையும் பயந்த மாது மன்னையும் வணங்கிப் போற்றத்
துதிமிகு முளகை வாழு மறையவர் தொண்டர் யாரும்,
புதுமைக ளடைந்து சாலக் கருணையைப் புகழ்ந்து தாழ்ந்தே
யிதயமா ரன்பு பொங்கத் தொழுதிவை யியம்ப லுற்றார். ()

மூந்திய வுலகை யெல்லா முறையுட னின்று காக்குந்
தநதைதாய் நீயே யென்று சதுமறை யுரைக்குந் தன்மை
யந்தமி லுலக மெங்கு மறிந்திட வனையாய் வந்திப்
பைந்தொடி புரந்த வன்பை யென்னெனப் பகர்வோ மைய.

அரிவைமுன் புரித வத்தா லன்புடை யனைபோல் வந்து
கரியவ னுமியட் பாத கமல த்தாற் கண்ட தீர்த்தம்
பெரியகங் கையினு மேன்மைப் பேறெலா நலகும் வண்ண
மூரியவர்க் குரிய வன்பா வுதவென வேண்ட லோடும் (உஉ)

மின்னவிர் சடையெம் மண்ணன் மகப்பெறு மின்னை நோக்கி
யுன்னிநீ செயுந்த வத்தா லுற்றிடத் துதவி செய்தோ
மின்னுடை நீர்வேட் கைக்கு வந்தநீ ணதியிப் பாரின்
மன்னிய நாமங் காயக் குடியாறு வழுத்த லாமே. (உஙு)

வேறு.

விருப்பினுட னியாமுவந்து மகப்பெறுவித் திடவரலாற்
கருப்பநதி யெனப்புவியோர் கழறுவதா மிதனுமம்
பொருப்பினதி களின்மேலாம் புனிதநதி யிடைத்தோய்ந்தோ
ரிருப்பர்புரி பயநீங்கிப் பரகதியு மெய்துவரே. (உச)

என்றுவயித் தீசாருள் புரிந்தெழுலு மாங்கெய்துங்
குன்றையூ ரன்னையொடு குழவிபெறு குழன்மொழியாள்
வென்றிவிடைப் பாகனருள் பெற்றுமேம் பாடுபெற்றுத்
தன்றுணைவ னார்க்கேகிப் பெருஞ்செல்வஞ் சார்ந்திருந்தாள்.

வேறு.

கருப்ப நதிசேர் வுறுதீர வாசஞ் செய்தோர் கவலையறுங்
கருப்ப நதியைக் கண்டோர்க்கும் பரிசித்தோர்க்குங்கரிசறுமால்
கருப்பநதியிற் படிந்தோர்கள் வறுமை பிணிகள் கடிதேகுங்
கருப்ப நதிநீருட்கொண்டோர்செல்வம்பெறுவர்கதியடைவார்.

## காயக்குடிநதிமான்மியம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௧௭௩௩.

—

### காயக்குடி நதிமான்மியச் சுருக்க வசனம்.

இனி, பொய்யாகிய இல்வாழ்க்கையை நீங்கி உமாமகேசர் திருவடி நீழலிலே குடியிருக்குந் தவசிகள் பிரகாசிக்கும் புதுவை நகரத்துக்குத் தென்பக்கத்திலிருக்கிற கெடாதவளம் நிறைந்த நதிக்குக் காயக்குடியாறு என்னும் பெயர்வந்த காரணத்தைச் சொல்லுவாம்:— புதுவைநகரத்துக்குத் தென்பாகத்திலே காதவழித்தூரத்துக் கப்பால் கரும்புஞ் செந்நெலும் விளையும் வயல்களாற் சூழப்பட்ட புத்தூர் புனல்வேலி என்னும் இரண்டு நகரங்களுள்ளன. அவைகளுள் வேதப்பிராமணர்கள் வசிக்கும் புனல்வேலியில் சூத்திர குலத்திலே இலிங்கதாரணஞ்செய்து சிவசமயஞ் சார்ந்தவனா னொருவனிருந்தனன்; அவன்மனைவி அவனைப்போலவே சிவபத்திமுதலிய நற்குணமுள்ளவள். அவ்விருவரும் வறுமையினாலே வருத்தப்பட்டுப் பிச்சையெடுத்துண்டு காட்கழித்தாலுஞ் சிவநேசமறவாது பூசனைசெய்து வருவாராயினர்.

இங்ஙனம் நிகழுநாளிலே இலிங்கதாரணியினுடைய மனைவி கருப்பவதியாயிருந்து ஒன்பதாவதுமாதம் நீங்கியவுடனே புத்திரப் பேறுகாலத்துக்குரிய சின்னங்கள் தோன்றுதலும், குன்றைநகரத்தில் வசிக்கும் தன்னுடைய தாய்க்குத் தந்நிலைமையைத் தெரிவித்து

அவள் வருவாளென் றெதிர்பார்த்திருந்தனள். பின்னர் அவள் வருவதற்குத் தாமதப்பட்டதனால் தனது நாயகனநுமதிப்படி தன் தாயிருக்குங் குன்றையூரை நோக்கிப் புறப்பட்டு மிருதுவாகநடந்து நிழல்கண்ட இடமெல்லாமிருந்து மிகத் தளர்ச்சியோடு அளகாபுரியைக்கடந்து அதன்பக்கமேயுள்ள ஒரு சோலையிலே நடைதளரமெலிந்துவந்து படுத்திருந்தனள். அதன்மேல் வயிறநொந்து புத்திரப்பேறுண்டாகும் உபத்திரவ மதிகப்படலும், கருப்பவதி அது சகிக்கமுடியாமல் சிவனே! சிவனே! யென்று அழத்தொடங்கினள். சருவான்மாக்களுக்குந் தாய்தந்தையாயிருக்கிற புதுவைநாயகர் அதுகேட்டுச் சகித்திருப்பரோ? திரண்டசடையையுஞ் சந்திரனையும் சர்ப்ப முதலியனவைகளையு மறைத்துக் கருப்பவதியின் தாயைப்போல் உருவங்கொண்டு அவள் பக்கத்திலே வந்திருந்தனர்.

நரைதிரை மூப்பினாலும் வழிநடையினாலும் இளைத்ததுபோல வாட்டமுற்றுத் தன்பக்கத்தில் வந்திருந்த வயித்தியநாதரைத் தன்னுடைய தாயென்று நினைத்துக் கருப்பவதி மனமகிழ்ந்து வணங்கி யுபசரித்திருக்கும்போது, தாயாகிய வயித்தியநாதர் யாதொருவருத்தமுமில்லாமல் புத்திரனைப் பெறும்படி செய்வித்து மகளுக்கு வேண்டிய சீராரோக்கியமெல்லாஞ் செய்யும்போது மகள் தாகத்துக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டனள். உடனே தாயாகிய வயித்தியநாதர் தமது திருவடி விரல் நுதியால் தரையைக்கீற அத்தரைபிளந்து பாதாளமட்டும் ஆழ்ந்து மேலெழுந்து கங்காநதிபோல வெள்ளம் புறப்பட்டு வந்தது. அவ்வெள்ளநீரை இந்தநீர் உனக்குக் காயம் குடியென்று மகளைநோக்கிக் கூறினர்.

அவ்வாறே மகளும் மூன்றுதரம் அந்நீரை யள்ளிக்குடித்துச் சோர்வுநீங்கி இது பிரசவமருந்தாமென்று மகிழ்ந்தனளேயன்றி நம்முடைய மாதாவாகில் இவ்வரிய அற்புதஞ்செய்ய வல்லளோ? இவள் புதுவைநாயகரேயென்று தெரிந்தாளில்லை. இங்ஙனஞ் சந்தோஷித்துப் பிள்ளையைக் கையிலேதாங்கிக் கொண்டுநிற்குஞ் சமயத்திலே *குன்றூரிலிருந்த பெற்றதாயானவள் பிரசவத்துக்குவேண்டிய மருந்துகளெல்லாவற்றையு மெடுத்துக்கொண்டுவந்து சேர்ந்தனள்.

அவளைக் கண்டவுடனே முன்வந்திருந்த தாயாகிய வயித்தியநாதர் இடபாரூடராய்ச் சிவகாமியம்மையுடன் ஆகாயத்திலெழுந்த

*குன்றூர் - இக்காலத்திற் குன்னூரெனவழங்குகின்றது.

குளிக் காட்சியளித்தனர். ஆங்குள்ளா ரெல்லாருங் கண் களிகூர்ந்து தரிசித்துப் பேரானந்தமுற்றுப் பற்பல தோத்திரஞ்சொல்லி நின்றனராய்ச் "சுவாமீ! இந்தத் தீர்த்தம் உம்முடைய திருவடியிலேயின்றுந் தோன்றினமையாலே கங்காநதியைப்பார்க்கினு மிது மேன்மை தரும்படி யருள்புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதுகேட்டுப் புதுவைநாயகர் பிள்ளையைக் கையிலேதாங்கி நிற்கின்ற பெண்ணைப்பார்த்து "உன்னுடைய தவத்தினாலே யுனக்கு இந்த வுதவிசெய்தோம். உன்னுடைய தாகந் தீரும்பொருட்டு வரவழைத்த இது காயம் குடியென்று நாங்கூறியதனாலே இந்நதி காயக்குடியாறெனப் பெயர்பெறும்; உன்னுடைய கருப்பம் வெளிப்படுங்காரணத்தால் வந்ததனாலே கருப்பநதியென்று மொரு பெயர்பெறும். இந்நதியின் மூழ்கினோர் எல்லாப் பயமுநீங்கிப் பரகதியும் அடைவார்." என்று கட்டளையிட்டு மறைந்து சென்றனர். குழந்தையைப்பெற்ற தாயானவள் தன்னைப்பெற்ற தாயுடனே திருவருள்பெற்று மீண்டு சென்று தன்கணவனோடு மகிழ்ந்து பெருஞ்செல்வம்பெற்று வாழ்ந்திருந்தனள். கருப்பநதிக்கரையிலே வசித்தோர்கள் கவலை நீங்குவார்கள். அந்நதியைக் கண்டவருந் தொட்டவருங் குற்றத்தைப்போக்குவார்கள். அந்நதியிலே ஸ்நானம் பண்ணினவர்கள் தரித்திரத்தையும் வியாதியையும் அடையமாட்டார்கள். அந்நதிநீரை யுண்டவர்கள் ஐசுவரியமடைந்து பின்னர் மோக்ஷத்தையும் அடைவார்கள்.

மடவார் வளாகமென்னும்

## புதுவைத் தலபுராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 17 | 36 | லதிக் | ... லதிக |
| 24 | 3 | * அசியுடை | ... அசியுடை |
| ஷை | 5 | வசியர் | ... * வசியர் [முன்னஞ் |
| 32 | 21, 31 | ஞெ்சய | ... ஙெ்கய, பார்கேட்டு, ருன் |
| 43 | 6 | மாகும் | ... மாகு |
| 47 | 34 | வணஙகு, காளு | ... வணங்கு, நாளு |
| 80 | 26 | முனிகள் | ... முனியும் |
| 101 | ஷை | டணங்க | ... டங்க |
| 103 | 31 | நோக்கி | ... நோக்கிக் |
| 110 | 17 | ங்கவை | ... வங்கவை |
| 131 | 15 | வர்ர | ... வ,ார |
| 132 | 14 | டேவா | ... தேவா |
| 137 | 16 | வேதவல்லி | ... வேதவதி |
| 153 | 34 | தொடங்கி | ... தொடங்கி |
| 161 | 13 | மைந்தா | ... மைந்தர் |
| 166 | 2 | தயதர் | ... தயர்த |
| 169 | 27 | கொரங்கை | ... கொங்கை |
| 183 | 10 | தியும | ... தியும் |
| 188 | 19 | யவன் | ... யவர் |
| 192 | 26 | பெருக | ... பெருக் |
| 199 | 1 | சயகோய் | ... கயகோய், இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க |
| 204 | 22 | தித்த | ... சித்த |
| 217 | 19 | கொண | ... கொணர் |
| 220 | ஷை | கல்கும | ... கல்கும் |
| 231 | 5 | ராக | ... ராக |
| 238 | 3 | னீரார் | ... னீரான் |
| 241 | 11 | குறந்தி | ... குறைந்தி |
| 248 | 12, 26 | கொள்ளைக், ருக்கு | ... கொள்ளை, ருக்குக் |
| 257 | 18 | தொறும் | ... தொறும் |
| 262 | 23 | கததி | ... சத்தி |
| 272 | 13 | வேணடி | ... வேண்டி |
| 282 | ஷை | கொடுக்த | ... கொடுத்த |
| 287 | 25 | மென்று | ... மொன்று |
| 295 | 29 | வென்றுகேட் | ... வென்று அம்முனிவர் கேட் |
| 299 | 10 | தமமை | ... தம்மை |
| 300 | 17 | தகதை | ... தந்தை |